மெய்ஞான யோகம்



சாமி (எ)
மாம். ச. சுந்தரராஜ் M.A., M.R.S.S., D.C.L., D.C.P.

தமிழாக்கம்
கு. பூபாலன், B.E.,

சர்வக்ஞரால் அருளப்பட்ட

ஜெயின பூகோளம்

(மூவுலக அமைப்பு)

ஹிந்தி மூலம்

திருமதி. உஜ்வலா ஷா M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்

து. பூபாலன் B.E.,

வெளியீடு

ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம்

5/82, 4வது தெரு, எஸ். ஆர். பி. காலனி

சென்னை 600082

முதல் பதிப்பு: 2023 250 பிரதிகள்

அச்சிட்டோர்:
ஸ்ரீ பாலாஜி ஆஃப்செட்,
சென்னை 600082.

விலை: சுவாத்யாயம்



லோகாகாசம்

1


ஈஷத் ப்ராக்பார்
8 யோஜனை
15-16
13-14
11-12
9-10
7-8
5-6
3-4
1-2
84, 97, 023 விமானங்கள்
திரஸ நாளி
(தர்மா)
1 இரத்தினப் பிரபா 13 படலம்
30 லட்சம்
(வன்சா)
2 சக்ர பிரபா 11 படலம்
25 லட்சம்
(மேஹா)
3 வாலுகா பிரபா 9 படலம்
15 லட்சம்
(அஞ்சனா)
4 பங்க பிரபா 7 படலம்
10 லட்சம்
(அரிஷ்டா)
5 தூம பிரபா 5 படலம்
3 லட்சம்
(மகவி)
6 தம பிரபா 3 படலம்
99995
(மாகவி)
7 மஹா மஹாதம பிரபா 1 படலம்
5
நிகோதம்
நரகம் 49 படலங்கள் – 84 லட்சம் பிலங்கள்
பூமியின் பருமன் – யோஜனையில்
180000
16000
84000
80000
1 ரஜ்ஜு
13/7 ரஜ்ஜு
32000
19/7 ரஜ்ஜு
28000
25/7 ரஜ்ஜு
24000
31/7 ரஜ்ஜு
20000
37/7 ரஜ்ஜு
16000
43/7 ரஜ்ஜு
8000
7 ரஜ்ஜு

வாதவலையம்


சித்திசிலா
5 4 3
அனுத்தரம்
2
அனுதிசை
9 கிரைவேயகம்
சுத்த ஆகாசம்
15-16
சுத்த ஆகாசம்
13-14
சுத்த ஆகாசம்
11-12
ஜலபவனாதார்
9-10
ஜலபவனாதார்
7-8
ஜலபவனாதார்
5-6
ஜலபவனாதார்
3-4
பவனாதார்
1-2
ஜலாதார்
1575வில் தனுவாத வலையம்
1 கோஸ் கனவாத வலையம்
2 கோஸ் கனோததி வாதவலையம்
சித்தசிலை
7 5 4
5 4 3
7 5 4
நிகோதம்
20000 கனோததிவாத வலையம்
20000 கனவாத வலையம்
20000 தனுவாத வலையம்

திர்யக்லோகம்



அசங்க்யாத தீப சமுத்திரங்கள் - 25 கோடா கோட உத்தார பல்யம்

இரண்டரை தீபம்

5 மேரு சம்பந்த 30 போகபூமிகள்

5 மேரு சம்பந்த 15 கர்மபூமிகள்

5 விதேகம் x 32

5 பரதம்

5 ஐராவதம்



வித்யுன்மாலி மேரு

அசல மேரு

சுதர்சன மேரு

விஜய மேரு

மந்தர மேரு

ஜம்பூ தீபம்


மலைகள் (குளங்கள்)
க்ஷேத்திரங்கள் (நதிகள்)
சிகரி மலை (புன்டரீகம்)
ஐராவதம் (ரக்தா – ரக்கோதா)
ருக்மி மலை (மஹாபுன்டரீகம்)
ஹைரண்யவதம் (சுவர்ண கூலா –ரூப்யகூலா)
ரம்யக் (நாரி – நரகான்தா)
நீலமலை (கேஸரீ)
ஜம்பு விருஷம்
உத்தர குரு
வக்ஷார மலை
கிழக்கு விதேகம்,
உத்தரகுரு (சீதா)
கஜ
தந்தமலை
பூதாரண்யம்
(தேவாரண்யம்)
பத்ரஸாலவனம்
சால்மலி விருஷம்
தேவ குரு
மேற்கு விதேகம், தேவகுரு
(கீதோதா)
நிஷத மலை(திகிஞ்சம்)
ஹரி (ஹரித் – ஹரிகான்தா)
மஹா ஹிமவான் மலை (மஹாபத்மம்)
ஹைமவதம் (ரோஹித் – ரோஹிதா ஸ்யா)
ஹிமவான் மலை (பத்மம்)
பரதம் (கங்கா – சிந்து)
லவண சமுத்திரம்

பரத க்ஷேதிரம்


ஹிமவான் மலை
பத்மசரேவர்
மிலேச்ச கண்டம்
மிலேச்ச கண்டம்
மிலேச்ச கண்டம்
விரஷபகிரி
சிந்து
விஜயார்த்த மலை
கங்கா
மிலேச்ச கண்டம்
மிலேச்ச கண்டம்
ஆர்ய கண்டம்
லவண சமுத்திரம்

லவண சமுத்திர பாதாள அமைப்பு



லவண சமுத்திர பாதாள அமைப்பு



பாதாளம் – யோஜனையில்

பாதாளம்	உயரம்	நடுவில் அகலம்	முக பகுதி	சுவர் பருமன்
பெரிய பாதாளம்	100000	100000	10000	500
நடுத்தர பாதாளம்	10000	10000	1000	50
சிறிய பாதாளம்	1000	1000	100	5



பெரிய பாதாளம்

நடுத்தர பாதாளம்

சிறிய பாதாளம்

பெரிய பாதாளம்	–	4
நடுத்தர பாதாளம்	–	4
சிறிய பாதாளம்	–	1000
மொத்தம்	–	1008

குமானுட தீபங்கள்


ஹஸ்தகர்ண
மார்ஜார்முக
சுக்ரகர்ண
மார்ஜாரமுக
ண்சுக்ரகர்ண
தாதகி கண்டம்
கஜமுக
கோகர்ண
சர்துலமுக
குகமுக
அபாஷக
வராஹமுக
பந்தர்முக
ஜம்பு தீபம்
ப்ருகார்முக
ஸ்ருகாலமுக
பசுமுக
வியாக்ரமுக
மகரமுக
ஹ்விகமுக
அசுரமுக
வத்ஸ்யமுக
விருகமுக
சிகமார்முக
கர்ண ப்ராவரண
உஷ்ட்ரகர்ண
வாங்கவிகா
ஸ்வான்முக
அஸ்வமுக
ண்சுக்ரகர்ண
மார்ஜாரமுக
அஸ்வகர்ண
மார்ஜாரமுக
சுகரகர்ண

சுமேரு மலை

4 யோஜனை
40 யோஜனை
சூலிகா
12 யோஜனை


பாண்டுகவனம்
36000
சௌமனஸவனம்
62500
நந்தனவனம்
500
பத்ரசாலவனம்
1000
வேர் பகுதி


பாண்டுகவனம்
ரக்தகம்பலா
(கிழக்கு விதேகம்)
பாண்டுகசிலா
(பரதம்)
குபேர
பாண்டுக
பலன்
வருண
ஹாரித்ர
பவன்
லோஹித
பவன்
சோம
ஆஞ்ஜன
பலன்
யம
ரக்தசிலா
(ஹைராவதம்)
பாண்டுகம்பலா
(மேற்கு விதேகம்)


பாண்டுகசிலா
(பாலதீர்த்தங்கரரின் ஜென்மாபி ஷேக ஸ்தானம்)
சிம்மாசனம்
பத்ராசனம்
(ஈசான் இந்திரன்)
பத்ராசனம்
(சௌதர்ம இந்திரன்)

நந்தீஸ்வர தீபம்

7வது தீபம்
7வது சமுத்திரம்
163840000


ததிமுக மலை
ரதிகர மலை
ஆம்ரவனம்
சம்பகவனம்
வனம்
அசோகவனம்
ஸப்தபர்ணவனம்


10000
1 000
10000
ததிமுகம்
1000
250
1000
ரதிகரம்


அஞ்சனகிரி
84000 யோஜனை
அடிப்பகுதி 1000 யோஜனை
84000 யோஜனை

கிழக்கு விதேகம்

12.1



12.2

மேற்கு விதேகம்

நீல மலை



நிஷத மலை

முதல் நரக முதல் படலம்



● இந்திரகம் ● ஸ்ரேணிபத்தம் ∴ ப்ரகீர்ணகம்

7- ஆம் நரகம்

ஸீமந்தக இந்திரகம் - 45 லட்சம் யோஜனை விஸ்தீரனம்

ஸ்ரேணிபந்தபிலம் - அசங்யாத யோஜனை விஸ்தீரணம்

திசைகளில் - 49, விதிதைகளில் - 48

பிரகீர்ணங்கள் - சங்க்யாத அசங்க்யாத யோஜனை விஸ்திரணம்

முதல் நரக 13 படலங்களின் 30 லட்சம் பிலங்கள்

இந்திரகம்	13
ஸ்ரேணிபத்தம் +	4420
பிரகீரணகம் +	2995567
மொத்தம்	30,00,000

வைமானிக தேவர்களின் விமானங்கள்

அனுத்தர விமானம்



சர்வார்த்த சித்தி இந்திரகம் - 1 லட்சம் யோஜனை

	படலம்	விமானங்களின் எண்ணிக்கை
அனுத்தரம்	1	5
அனுதிசை	1	9
மேல்கிரை வேயகம்	3	99
நடுகிரைவேயன்	3	107
கீழ்கரைவேயன்	3	111
ஆனதம் முதலான 4 ஜோடி	6	700
சதாரஜோடி	1	6000
சுக்ர ஜோடி	1	40000
லாந்தவ ஜோடி	2	50000
பிரம்ம ஜோடி	4	400000
சானத்குமார மாஹேந்திர ஜோடி	7	1200000 + 800000
சௌதர்ம ஈசான ஜோடி	31	3200000 + 2800000
மொத்தம்	63	8497023



சௌதர்ம விமானம் முதல் படலம்
ருது இந்திரகம் 45 லட்சம் யோஜனை

ஸ்ரேணி பத்தம் – திசைகளில் 62 – 62
ஒவ்வொரு படலத்திலும் 1 – 1 குறைந்து
கொண்டே போகும்

பொருளடக்கம்

வண்ணப் படங்கள் 1-19
மூல நூலாசிரியரின் முகவுரை - டாக்டர். உஜ்வலா ஷா 21
மூலநூல் பதிப்பாளரின் முகவுரை - பண்டிட். தினேஷ்பாய் ஷா 23
நூல் அறிமுகம் - முனைவர்.உமாபதி சாஸ்திரியார் 25
முன்னுரை - பத்மராஜ் ராமசாமி, மன்னார்குடி 29
மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளரின் முகவுரை- து. பூபாலன் 32

1. மூவுலகம் - பொது வர்ணனை 35
2. எட்டு பூமிகள், மூன்று வாதவலையங்கள் 52
3. கீழுலகம் - நரக லோகம் 65
4. நரக கதியில் வருவதும், போவதும் 84
5. சலாகாபுருஷர்கள் 102
6. கீழுலக தேவர்கள் - பவனவாசிகள் 121
7. கீழுலக தேவர்கள் - வியந்தரர்கள் 133
8. மேல் உலகம்-சுவர்க்க விமானங்கள் 145
9. வைமானிக இந்திரன் 160
10. தேவ பிறவியில் கதி, ஆகதி, மத்யலோகம் 174
11. நடு உலகம்: தீப-சமுத்திரங்கள் 187
12. ஜம்பூ தீபம் 194
13. பரத க்ஷேத்திரம் 206
14. போக பூமி, விதேக க்ஷேத்திரம் 213
15. வித்யாதரர்கள், குபோகபூமி 224
16. லவணசமுத்திர பாதாளங்கள் 236
17. ஜோதிஷி விமானங்கள் 247
18. பஞ்சமேரு 260
19. நந்தீஸ்வர தீபம் 268
20. இயற்கை ஜினாலயங்கள் 276

சாஸ்திரதானம் அளித்தவர்கள் பட்டியல் 291

மூல நூலாசிரியரின் முகவுரை

சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு நான் தேவலாலி என்னும் இடத்தில் ஜெயின் பூகோளம் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தினேன். அப்பொழுது அனைவரின் உள்ளங்களிளும் ஒரு ஐயம் இருந்தது. நாம் ஆன்மாவைத்தானே அறிய வேண்டும், ஆன்ம நலன் தானே நமது தேவை. உலக அமைப்பு பற்றிய பூகோளத்தை அறிவதால் நமக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? என்று எண்ணினர். ஆனால் ஆன்மாவின் இயல்பே பார்த்தலும் அறிதலும் என்பதை நாம் எப்போதும் மறந்துவிடக்கூடாது.

சர்வக்ஞர் தன் கேவல ஞானத்தின் மூலம் அகில உலகத்தையும் அறிந்து, அதைப்பற்றி எடுத்துரைக்கிறார். இவற்றை பற்றி நாம் ஆகமங்களின் வாயிலாக அறிகிறோம். இந்த ஆகமங்கள் நான்கு அநுயோகங்கள் வடிவில் நமக்கு கிடைத்திருக்கின்றன.

கரணாநுயோகத்தில் வினை முதலானவை சம்பந்தமான ஆழமான மற்றும் விரிவான கருத்துக்கள் கிடைக்கப் பெறுகின்றன. மூவுலகத்தின் அமைப்பு, அங்கு வசிக்கும் உயிர்கள் முதலானவற்றை பற்றிய ஞானமும் நமக்கு அதிலிருந்து கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் பற்றி முனிவர்களும் சிந்தனை செய்கின்றனர் இதை சம்ஸ்தானவிசய தர்மத் தியானம் என்றும் கூறுகிறோம்.12 பாஃவனைகளில் லோக பாஃவனை பற்றியே விளக்கமே மிக விரிவாக நூல்களில் வரணனை செய்யப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

மேலே கூறியபடி அந்த கருத்தரங்கின் 20 மணி நேரம் பிரவசனங்களின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு, ஒரு கருத்துகூட விடாமல் ஹிந்தி மொழியில் பண்டிட். ஜித்தேந்திர ராட்டி என்ற பவ்யர் எழுதிக் கொடுத்தார். கருத்தரங்கிற்காக நான் கைப்பட உருவாக்கிய படங்களை இத்துடன் இணைத்து வாலறிவனால் எடுத்துரைக்கப்பட்ட ஜெயின பூகோளம் என்ற இந்நூலை 2018-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளோம். இந்நூலை பலர் ஆர்வத்துடன் படித்தனர், அதனால் இந்த புத்தகம் மேலும் தேவைப்பட்டது. அதனால் இந்தி மொழியில் இதுவரை நான்கு பதிப்புகள் வெளியாகி இருக்கின்றன. குஜராத்தி மொழியிலும் இரண்டு பதிப்புகள் வெளியாகி இருக்கின்றன. கன்னட மொழியிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் சென்ற ஆண்டு வெளியிடப்படுள்ளது. இப்பொழுது தமிழ் மொழியிலும் திரு.பூபாலன் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடுகிறார் என்பதை அறியும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. திரு.பூபாலன் அவர்களுடைய விடாமுயற்சி மற்றும் ஆகம சேவையில் ஈடுபாடு காரணத்தினால் அவர் என்னுடைய மற்ற நான்கு புத்தகங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு இருக்கிறார். இப்பொழுது ஜெயின பூகோளம் எனும் இந்த

நூலையும் தமிழில் மொழி பெயர்த்து தானே வெளியிடவும் செய்கிறார். அவருக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் அது தகும். திரு.து.பூபாலன் அவர்கள் கடந்த பல வருடங்களாக தன் வாழ்க்கையை ஜினவாணியின் பிரபாவனைக்காக சமர்ப்பித்து இருக்கிறார். தமிழ் மொழியில் அவர் வெளியிட்டிருக்கும் பல நூல்கள் போற்றத்தக்கவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பிரவசனங்களில் எடுத்துக் கூறப்படும் விஷயங்களை ஒரு சொல் விடாமல் புத்தக வடிவில் வெளியிடும் வரிசையில் 2022-ஆம் வருடத்தில் கூட பண்டிட். தினேஷ் ஜி அவர்கள் ஜெயின சித்தாந்தம் என்ற நூலை சார்ந்து 60 மணி நேரம் பிரவசனம் செய்ததை 'ஜெயின சித்தாந்தம்' என்ற 1075 பக்கங்கள் ஒரு நூலாக அச்சிடப்பட்டு வெளியிட்டு இருக்கிறோம் மற்றும் என்னால் பஞ்ச பராவர்த்தனை என்ற விஷயத்தை சார்ந்து 34 மணி நேரம் செய்த பிரவசனங்களை 725 பக்கங்கள் கொண்ட பஞ்ச பராவர்த்தனை என்ற நூலாக வெளியிட்டு இருக்கிறோம்.

ஜெயின தத்துவ ஞானம் பெறுதல் ஒரு அர்ப்புதமான விஷயமாகும். தத்துவ ஆகமத்தை யார் அறிகிறாரோ அவர் அதில் மிகுந்த ஈடுபாடு கொள்கிறார், தானும் ஆகமத்தில் கூறப்பட்ட விஷயங்களை அறிந்து, சகதர்மிகளும் அதன் பயனை அடையவேண்டும் என்ற நோக்கில் அவர்களும் ஜினவாணியின் பிரபாவனையை தொடர்ந்து செய்கின்றனர். திரு பூபாலன் அவர்களால் செய்யப்படும் ஆகம பிரபாவனை நெடுங்காலம் தொடரட்டும் என்று வாழ்த்துகிறேன்.

டாக்டர். உஜ்வலா ஷா. 6-12-2022
சயான் மேற்கு, மும்பை.

மூலநூல் பதிப்பாளரின் முகஉரை

நான் இன்று வரை என் துணைவியார் திருமதி.உஜ்வாலா ஷா அவர்களுடன் இணைந்து இருபது புத்தகங்களுக்கு அச்சுப்பழை திருத்தம் மற்றும் மொழியாக்கம் செய்திருக்கிறேன். 15 புத்தகங்களை இந்தி அல்லது குஜராத்தியிலிருந்து மராத்தி மொழியில் மொழி பெயர்த்திருக்கிறேன். நான்கு மொழிகளில் மேலே கூறப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் என் துணைவியார் உடன் இணைந்து நான் வெளியிட்டு இருக்கிறேன்.

ஆனால் ஜெயின தத்துவ பரிச்சயம், கரணாநுயோக பரிச்சயம், காரண காரிய இரகசியம், பஞ்சலப்தி மற்றும் ஐந்தாவதாக ஜெயின பூகோளம் எனும் ஐந்து நூல்களையும் திரு.து.பூபாலன் அவர்களே முயற்சி செய்து தமிழில் மொழி பெயர்த்து, பிழை நீக்கி வெளியிட்டு இருக்கிறார். அச்சிட்டதை அனைவரிடமும் கொண்டு சேர்த்தல் ஆகிய செயலையும் அவரே திறம்பட செய்திருக்கிறார். இதில் அவர் தன்னுடைய உடல் உழைப்பு, பணம் அனைத்தையும் செலவிட்டு இருக்கிறார்.

அவருடைய நிமித்தத்தால் ஜினவாணியெனும் கங்கை தென்னிந்தியாவில் ஆன்ம வளத்தை ஏற்ப்படுத்தி கொண்டிருக்கிறது என்பதை அறியும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்நூல் ஹிந்தி மொழியில் எழுதப்பட்ட பிறகு குஜராத்தி மற்றும் கன்னட மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தமிழ் மொழியிலும் வெளியிடப்படுகிறது.

டாக்டர். உஜ்வலா ஷா அவர்களின் சிறப்பு என்ன வென்றால், அவர் ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் எளிமையாகவும், ஆர்வத்தை தூண்டும் விதத்திலும் எடுத்துரைக்கிறார். ஜெயின சித்தாந்தங்களின் அடிப்படை கருத்துகளில் இருந்து சிகரம் போன்ற உன்னதமான கருத்துக்களையும் அவர் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வல்லவராவார்.

இந்நூலைப் படித்த நூற்றுக்கணக்கான மக்கள் இதை படித்த பிறகு என்னிடம் கூறியது யாதெனில் நாங்கள் இந்நூலை ஒருமுறை அல்ல, பலமுறை படித்திருக்கிறோம். ஒவ்வொரு முறையும் படிக்கும் பொழுது முக்கியமான கருத்துக்களை கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம் கடைசியில் முழு புத்தகமுமே கோடிட்ட நிலையில் ஆகிவிடுகிறது என்று தங்களது அனுபவங்களை பகிர்ந்தனர்.

கரணாநுயோகத்தில் நிமித்த அடிப்படையில் கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை நன்கு புரிந்து கொள்வதால்

திரவியாநுயோகத்தில் உள்ள கோட்பாடுகளை சுலபமாகப் புரிந்து கொள்ளவும், அவைகளை உறுதி படுத்தவும் பயனுடையதாக இருக்கின்றன.

இப்பொழுது மேலே கூறப்பட்டுள்ள அனைத்து புத்தகங்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் மக்களும் பயனடைகின்றனர். இந்த உன்னத செயல் திரு. து.பூபாலன் அவர்களுடைய முயற்சியால் மட்டும் நிகழ்ந்துள்ளது. இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும், அங்குள்ள மக்கள் படித்துப் பயன் பெறப்பட வேண்டும் என்று இருந்தது; ஆதலால் திரு.து.பூபாலன் போன்ற நிமித்தங்கள் தானாக கிடைக்கப்பெற்றன. அவரால்தான் இப்படிப்பட்ட உன்னதமான ஜினவாணியின் பிரபாவனை தமிழ் தெரிந்தவர்களிடமும் நிகழ்கிறது.

நம் நாட்டில்/வெளிநாட்டில் வசிக்கும் அனைத்து தமிழ் மக்களும் எதிர்கால சந்ததியினரும் அவருக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர் ஜினவாணியின் பிரபாவனையை என்றென்றும் செய்ய/தொடர வேண்டும் என்றுகூறி அவருக்கு நல்வாழ்த்துககளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிட். தினேஷ்பாய் ஷா 6-12-2022

57 / 9, நிர்மலா நிவாஸ்,
சயன்-கிழக்கு,
மும்பய் - 400022
போன்: 022 24073581

website: www.jainsiddhant.org

அணிந்துரை

ஜெயின பூகோளம்

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்"
-தொல்காப்பியம்

முற்றும் உணர்ந்த பற்றற்ற முனைவனால் உரைக்கப்பட்டு தொடக்கமில் காலம் தொட்டு முடிவிலா காலம் வரை விளக்கப்படும் தத்துவத்தில் காணப்படும் விஞ்ஞானமே ஜெயின பூகோளம் ஆகும். ஆச்சாரியர் அறிஞர்கள் பலரால் சூத்திர வடிவிலும் காதை வடிவிலும் பின்பு உரைகளுடனும் படைக்கப்பட்ட ஷட்கண்டாகமம், தத்துவார்த்த சூத்திரம், திரிலோகசாரம், கோமட்டசாரம், சம்யக்ஞான சந்திரிகா போன்ற பல சாத்திரங்கள் ஜெயின கோட்பாடின்படி உலக அமைப்பினையும் அதில் ஏற்படும் கால மாற்ற நிகழ்வுகளையும் அதனால் ஏற்படும் உயிர்களின் நிலைகளையும் எடுத்து கூறுகின்றன.

முடிவு இடை அகலமாய் அதம் ஒன்று ஏழ் முழவு
இடையின் ஐங்கயிறு அகன்று எழுநீளமாய்
அடியின் ஏழு அகன்று நீண்டு உயரம் ஈரேழுமாய்
வடிவுடை உலகம் மூவாதம் சூழ்ந்ததே. (1215)

என்று மேருமந்தர புராணம் சமவசரண சருக்கத்தில் 1215 ஆவது பாடலில் தொடங்கி மூவுலக வருணனையை மிகவும் விரிவாக நற்றமிழில் எடுத்துக் கூறுகிறது.

உலகின் கிடக்கையும் ஊழி நிலையும்
மலைவு இன்றி உரைப்பது நூல்.(59)

மேலே உள்ள அருங்கலச்செப்பு 59-ஆவது குறட்பா கரணாநுயோகத்தைப் பற்றி அடையாளம் காட்டுகிறது.

நான்கு அநுயோகங்களில் கரணாநுயோகத்தின் பொருள் பொதுவாக சாமானிய அறநூல் வாசிப்பாளர்களுக்கு கடினமாக இருக்கும் என்பதால் பலர் இப்படிப்பட்ட நூல்களை எடுத்துக் கொள்வதில்லை. இருப்பினும் புத்திக் கூர்மை உடைய ஆர்வலர்கள் இப்படிப்பட்ட நுட்பமான கருத்துகள் புதைந்து கிடக்கும் இந்த நூல்களை ஓதுவார்கள். அவ்வாறு செய்வது அவசியமுமாகும். பண்டிதர் டோடர்மல்ஜி அவர்கள் கரணாநுயோக நூல்கள் ஓதுவதை ஊக்குவிக்கிறார். புத்திக் கூர்மை உடையவர்கள் பற்றிலா சாத்திரங்களில் பற்று கொள்ளாவிட்டால்,

உலகியல் பற்றுக்களை வளர்க்கும் பல சாத்திரங்களில் பற்று கொள்வர். அதனால் தீவினைக் கட்டு ஏற்படும். மாறாக கடினமாக இருப்பினும் இப்பேர்ப்பட்ட நூல்களை வாசிப்பதால்- அறிந்து கொள்வதால் நல்வினை பயனும் கிட்டும், ஞானத் தெளிவும் பிறக்கும், நல் நல்நம்பிக்கைக்கு அடித்தளம் அமைப்பதற்கு தேவையான கூர்மையான அறிவும் (ஆகமங்களில் இதை ப்ரக்யா ச்சைனி/பேத விஞ்ஞானம் என்றும் சொல்வார்கள்) கூடவே பெரும் பலனாக கிடைக்கும்.

டாக்டர் உஜ்வலா ஷா அவர்கள் நீண்ட காலமாக கரணாநுயோக தரவுகளை- கருத்துகளை எல்லாம் மிகவும் எளிதாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் சொற்பொழிவாற்றி வருகிறார். பல தொடர் உரைகளை எல்லாம் நூல்களாகவும் ஆக்கியிருக்கிறார். வட இந்தியாவில் அவருடைய இந்த நூல்கள் பலருக்கும் மிகவும் பிடிக்கும். மக்கள் அவர் நூல்களை வாசிப்பதற்கும் அவர் உரையை கேட்பதற்கும் மிகவும் ஆவலாக இருப்பர். திருமதி ஷா அவர்கள் உலகெங்கும் இருந்தும் ஆர்வலர்கள் கடிதம் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு கேட்டால் அவர்களுடைய சந்தேகங்களை சிரமம் பாராமல் தீர்த்து வைக்கும் பண்பாளர். அவருடைய கணவரும் ஜிநவாணியின் இந்த பணியில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

தற்பொழுது தங்கள் கைகளில் பெருமையுடன் பூத்திருக்கும் இந்த நூல் ஜெயின பூகோளம் சமணக் கோட்பாட்டின்படி உலக வர்ணனையை மிகவும் சரளமாகவும், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையிலும் சித்திரங்களுடனும் வரை கலைகளுடனும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலினை நீண்ட சுவாத்தியாயமும் தத்துவத்தில் தளராத ஆர்வமும் கொண்டிருக்கும் பொறிஞர் து.பூபாலன் அவர்கள் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிடுகிறார். இந்தியாவில் இருந்தாலும் அயல் நாட்டிற்கு சென்றிருந்தாலும் அவர் ஜிநவாணி என்னும் கங்கையை தம் கைப்பையிலேயே வைத்திருப்பார் போலும்! எங்கும் அந்த வாணி- கங்கையின் தூய நீரைப் பருகாமல் இருப்பதில்லை. அதைப் பருகி தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்பதிலும் சுயநலமில்லாமல் செயல்படுபவர்.

அவர் டாக்டர் உஜ்வலா ஷா அவர்களின் சமண தத்துவ அறிமுகம் (ஜெயின் தத்துவ பரிச்சயம்), காரணகாரிய இரகசியம், கரணாநுயோக அறிமுகம் (கரணாநுயோக பரிச்சயம்), மற்றும் பஞ்சலப்தி ஆகிய ஜெயின தத்துவ அடிப்படை சம்பந்தமான ஹிந்தி நூல்களை ஆர்வத்தோடு ஓதி அதை தமிழில் மொழிமாற்றம் செய்து பிறமொழி நூல்களை ஓதமுடியாத தமிழ் அறிந்த பவ்வியர்கள் பயனடையும் வகையில் வெளியிட்டிருப்பதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். ஆகையால் தொடர்ந்து அவர் மொழிபெயர்ப்புகளில் அயராது ஈடுபட்டு அரிய நூல்களைத் நமக்கு தந்துகொண்டே இருக்கிறார். நிறுவனப் பணியில் இருந்து தான் ஓய்வு பெற்றாரே தவிர அறப்பணியில் அவர் மேலும் தீவிரமாக பணியாற்றி வருகிறார்.

ஜெயின பூகோளம் நூல் அவருடைய தொடர் உழைப்பிற்கு ஒரு மகுடமாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நூல் பல்வேறு ஆகம நூல்களை அடிப்படையாகக் கொண்டு, மூவுலக பொது வர்ணனை, மூவுலக தனித்தனி வர்ணனை, அப்பகுதிகளில் வசிக்கும் உயிர்கள், அவற்றினுடைய நிலைகள், அங்கு செல்வதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்குமான விதிமுறைகள், அங்கு காணப்படும் சூழ்நிலைகள், அங்கு செல்வதற்கும் திரும்பி வருவதற்குமான வினைகளின் நிலைகள் போன்ற பல முக்கிய தரவுகள் தரப்பட்டிருக்கின்றன.

ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் வரைகலைகள், படங்கள் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை நாம் மேலும் சரியாகப் புரிந்து கொள்ளவும் நெடுநாள் அவற்றை நினைவில் வைத்துக் கொள்ளவும் உதவி புரிகின்றன. மிகவும் நேர்த்தியாக ஆதாரங்களுடன் இந்த பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன.

நீண்ட நாட்களாக தொடரக்கூடிய ஒரு விவாதத்திற்கும் இங்கு பதில் கிடைத்திருக்கிறது. சித்த சிலை "உத்தான சத்ரவத்" என்று உள்ள சமஸ்கிருத சொற்றொடருக்கு மழை நீர் மேல் படாமல் நாம் குடை பிடிக்கும் வகையில் சித்த சிலை இருக்கிறதா அல்லது கிண்ணம் போன்று வைக்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகத்திற்கு தெளிவு பிறந்திருக்கிறது. அதனுடைய விளிம்புகளின் தடிமன், நடுப்பகுதியின் தடிமன், அதனுடைய நிறம் ஆகியவற்றோடு அது இருக்கும் அமைப்பும் கிண்ணம் போன்று இருக்கிறது என்று தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஏனென்றால் அவ்வாறு இல்லாமல் அனைத்து சித்தர்களின் தலைப்பகுதியும் லோகாகாயத்தின் உச்சியை தொடுமாறு இருக்க முடியாது. மழைக்குப் பிடிக்கப்படும் குடை போல் சித்த சிலை இருந்தால் சித்தர்களின் சிரசுப் பகுதி அதற்குள் அடங்கிப் போகும் அல்லது மேல் பாகத்தில் இருந்தால் சிலைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கும். இதற்கு சரியான தெளிவு இங்கு இருக்கிறது.

பிறகொரு பதிப்பு வரும்பொழுது இந்த நூலில் வரும் முக்கிய கலைச் சொற்கள் எந்தெந்த பக்கத்தில் கிடைக்கும் என்பதைக் குறிப்பிட்டு காட்டி வெளியிட்டால் ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பேருதவியாக இருக்கும். இது மிகவும் சிரமமான பணி என்றாலும் கூட மறு பதிப்பின் போது இதைச் செய்வது உகந்ததாக இருக்கும் என்பது என் தாழ்மையான கருத்து.

ஆர்வலர்கள் இந்த நூலினைத் தொடர்ந்து ஸ்வாத்தியாயம் செய்ய வேண்டும். தான் செய்வதோடு அல்லாமல் மற்றவர்களிடம் இது பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் வேண்டும். அப்பொழுதுதான் நூலும் நூற்பொருளும் என்றும் நிலைத்திருக்கும். ஒரு முறை இப்படிப்பட்ட நூல்களை ஆழ்ந்து படித்து விட்டால் மறுபடியும் மறுபடியும் அதில் மூழ்கி முத்தெடுக்கத் தோன்றும்.

மொழிபெயர்ப்பாளர் திரு. பூபாலன் ஐயா அவர்கள் இந்த நூலுக்கு பொருத்தமான ஓர் அணிந்தரையை வழங்குமாறு கூறியிருந்தார்கள். அதற்காக அவர் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு கூட நான் நீண்ட அவகாசம் எடுத்துக் கொண்டதை அவர் பொருட்படுத்தவில்லை. அந்த வகையில் அவருடைய ஸ்வாத்தியாயம் பாவனைகளை சமதா நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்று தோன்றுகிறது. அவர் மேலும் பல நூல்களைப் படைத்து தமிழ் சமணர்களின் அற ஆர்வத்திற்கு விருந்து படைத்துக் கொண்டிருப்பார்கள் என்ற அறநோக்கு உலோப உணர்வோடு ஜிநவாணியின் சரண் புகுகிறேன்.

ஜைனம் ஜயது சாசனம்!

டாக்டர் ப.உமாபதி ஜெயின்,
முதுகலை இந்தி ஆசிரியர்,
கேந்திரிய வித்யாலயா, DGQA,
பழவந்தாங்கல்,
சென்னை -600061

5-2-2023

முன்னுரை

சொர்க்கம், நரகம் உண்மையிலேயே இருக்கிறதா? என்ற ஒரு கேள்வி.... மனதில் எழும்பாத மனிதர்களே உலகில் இல்லை எனலாம். அதற்கான பதிலை வேடிக்கையாக ஒரு கதை விளக்குகிறது. ஒரு படைத்தளபதி, ஒரு ஞானகுருவைத் தேடி வந்தான்.

"குருவே, சொர்க்கம், நரகம் என்பதெல்லாம் உண்மையிலேயே இருக்கிறதா?" என்று வினவினான். அவனுக்கு சுருங்கச் சொல்லி விளங்க வைக்க முடிவு செய்தார் அக்குரு.

"தளபதி என்கிறாய்? பார்த்தால் கசாப்பு கடைக்காரன் போல் தோற்றமளிக்கிறாய்?" என்று சொல்லிக்கொண்டே, குரு வாய்விட்டுச் சிரித்தார். தளபதி உடனே ஆவேசமாகி, தன் வாளை உயர்த்தினான். "உன்னை வெட்டிக் கூறு போடவா?'' என்றான். "உனக்கு இப்போது நரகத்தின் கதவுகள் திறந்துவிட்டன!" என்றார். தளபதி தன்னிலை அறிந்து உடன் சினம் தணிந்தான். அத்தோடு பணிந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டான். "இப்போது உனக்கான சொர்க்கத்தின் நுழைவாயில் தெரிகிறது..." என்றார் குருநாதர் புன்சிரிப்புடன்.

நம் மனதில் எது நிரம்பி இருக்கிறதோ, அதுதான் நமக்கான சொர்க்கத்தையும் நரகத்தையும் தீர்மானிக்கிறது. கோபம், பொறாமை, எரிச்சல், பதற்றம், ஆத்திரம், சந்தேகம், பயம் இவற்றால் ஆளப்படும்போது, நரகம் செல்ல நாம் தயாராகிறோம். அன்பு, ஆனந்தம், பரவசம் இவற்றை அனுபவிக்கையில் சொர்க்கத்தில் வாழத் தகுதி பெறுகிறோம்.

இரண்டையுமே நாம்தான் முடிவு செய்கிறோம். எது வேண்டுமென்று நாம்தான் அனுக்ஷணமும் தீர்மானிக்கிறோம். விழிப்புணர்வுடன் இருந்தால், சொர்க்கத்திற்கான வழியை தேர்வு செய்வோம். விழிப்புணர்வு அற்ற நிலையில், வெளிச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, நம்மிடம் இருந்து அனிச்சையாக எதிர்ச் செயல் வெளிப்படுகிறது. அதுவே நம்மை கீழான நரகத்திற்கு தள்ள முயல்கிறது.

தளபதிக்குக் கோபமூட்டியபோது, அவனுடைய ஆத்திரம் நரகத்துக்கு வழிகாட்டியது. தன்னிலை உணர்ந்து மன்னிப்பு கேட்டபோது, சொர்க்கத்தின் கதவு திறக்கப்பட்டது! இப்படித்தான் நாம் சூழ்நிலையைக் கையாளும் போதெல்லாம் நமக்கான சொர்க்க/நரக வாயில்கள் வரவேற்கின்றன.

இதைத்தான் எல்லா சமயங்களும் தம்தம் பிரதேசத்திற்கு ஏற்றவகையில் தெரிவிக்கிறது. அதையே சமணசமயம் சுவர்க்க நரகம் மட்டுமல்ல இரண்டுமில்லா அமைதிப் பிரதேசத்திற்குச் செல்லும் வழியையும் வலுவாகக் காட்டுகிறது.

நாம் சொர்க்கம் செல்ல விழிப்புடன் செயலாற்றி அங்கு சென்று பிறந்தாலும், அங்கிருந்து ஒருநாள் ஆயுள் முடிந்து மீண்டும் இங்குதான் வரவேண்டியுள்ளது. அப்போது விழிப்புடன் செயல்பட மீண்டும் பிரயத்தனங்களை கடைபிடிக்க வேண்டியுள்ளது. கொஞ்சம் தூங்கிவிட்டால் நரகத்துன்பம் தான் இங்கும், மறுபிறவியிலும் நமக்கு, என்பதை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதனால் இரண்டிலிருந்தும் விடுதலை பெறும் ஒரு அமைதிப் பிரதேசத்திற்கு சென்று விட்டால் நாம் இந்த சொர்க்க, நரக சுழற்சியிலிருந்து விடுபட்டு விடுவோம் என்றளவில் அதற்கான வாழ்வியல் முறையை நமக்கு நன்கு எடுத்துரைப்பதில் சமணம் முன் நிற்கிறது. அவ்வழியே விழிப்புடன் செயலாற்றும் போது சொர்க்கத்திற்கான அல்லது நரகத்திற்கான எந்த ஒரு அம்சமும் நம்முடன் பிணைக்கப்படுவதில்லை. அந்த அமைதிப் பிரதேசத்தில் சென்றுறைவதற்கான விடுதலைவிழுக்காடுகளை இயற்கையின் அருளால் மட்டுமே நம்முள் சேர்த்திட முடியும்.

ஆம், சமணம் தொடர்புடைவர் மாட்டு தெரிவிக்கும் அன்பை மட்டுமே வெளிப்படுத்தினால் சொர்க்கத்திற்கான விழுக்காடுகளையும், அல்லாது எதிர்மறையாய் சுயநலனாய் தம்மாட்டு என கையாளும் போது நரகத்திற்கான அம்சங்களையும் நம்முடன்(ஆன்மனுடன்) இயற்கை அவ்வப்போது சேர்த்துக் கொண்டே வருகிறது என்பதை வலுவான ஆதாரத்துடன் தெரிவிக்கிறது. இரண்டுமல்லாத நடுநிலை உணர்வுடன், வாழும் சூழலில் உள்ள அனைத்துயிர்கள் மாட்டும் நாம் காட்டும் கருணை மற்றும் இரக்க உணர்வை இயற்கையின் அருளாக கருதி இறப்பிற்கு பின் திரிலோகத்தின் உச்சநிலை பூமியான, இன்ப, துன்ப சூழலற்ற விடுதலைப் பிரதேசத்திற்கான, ஜடப்பொருளாலான உடலற்ற தூயஉயிராகச் செல்ல அனுமதிச்சீட்டை வழங்கி அனுப்பி வைக்கிறது. ஜடப்பொருள் சேர்க்கையே இன்ப, துன்ப அனுபவங்களை இதுநாள்வரை அளித்து வந்தது. இப்போது தூய்மையான ஆன்மப்பொருள் மட்டுமே விடுதலைபெற்ற நிலையில் அங்கு உறைந்துள்ளது. அதுவே ஒரு உயிரின் பெரும்பேறாய் முக்தியெனக் கூறுகிறது சமணம்.

சரி, முக்தி பெறும் விவேக உணர்வுடன் வாழவில்லை என்றால்? பதிலாய் கீழ், மேல், நடு என மூன்று லோகத்தில் வாழும் 84 லட்சம் ஜீவராசிகளில் ஒன்றாய் பிறந்திட நேரிடும் என்பதனை; திரிலோக வர்ணனையும், அங்காங்கே வாழும் ஜீவராசிகளின் வடிவங்கள், அடிப்படை வாழ்விடங்கள் பற்றிய விபரங்களையும்; அனைவருக்கும் உபதேசிக்கும் அருகதை பெற்ற அரஹந்தர்கள் மற்றும் அவர்கள் வழியில் வந்த ஆச்சார்யர்கள், யதிகள் விவரமாக அந்தந்த காலக்கட்டத்தில் தெரிவித்துள்ளனர். அவை ஆகம வடிவமும், பல படிவமும் பெற்று நம்மிடையே உலவுகிறது. அதில் திரிலோகசாரம் என்ற சுவடியின் துணைகொண்டு ஹிந்தி மொழி நூல் வழியே டாக்டர். உஜ்வாலா ஷா அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

அந்த நூலின் வரிகளை செம்மையாய் தமிழ் மொழியாக்கம் செய்து, நமக்கு மிகத்தெளிவாக பவ்யர் திருவாளர். பூபாலன் துரைசாமி அவர்கள் தற்போது ஜைன பூகோளம் என்ற தலைப்பில் இருபது அத்தியாயங்கள் அடங்கிய நூலாக வழங்கியுள்ளார்கள் என்பது சிறப்பான ஒன்றாகும்.

மேலும் இதற்கு முன் அவரால் வெளியிடப்பட்ட சமண அறப்பண்பாடு, குறட்பாவடிவில் சமயசாரம், வாழும்கலை போன்ற நூல்கள் மட்டுமில்லாமல் முற்றிலும் சமண தத்துவங்கள் அடங்கிய சமண தத்துவ அறிமுகம், காரண காரிய ரகசியம், கரணானுயோக அறிமுகம், பஞ்சலப்தி, சமண சித்தாந்த நுழைவாயில் போன்ற நூல்களில் எவர்க்கும் எழும் ஐயங்களை தெளியவைப்பது போல் இந்த ஜைன பூகோளத்திலும் அளித்திருப்பது போற்றுதற்குரியது.

இந்த நூலினை முதன்மையாய் படித்து முன்னுரை வழங்க வாய்ப்பு நல்கிய திருவாளர் பூபாலன் துரைசாமி அவர்களுக்கும், அவரது பெருமுயற்சியில் உருவான நூலிற்கு பொருளுதவி வழங்கிய மெய்யன்பர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தலைமுறையில் சமணம் மீண்டும் தொடக்கநிலை வளர்ச்சிக்கு உயர்ந்திட, மேலும் இது போன்ற பல தத்துவ நூல்களை இந்நூலாசிரியர் வெளியிட வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க ஜினவறம்! வளர்க சமணம்!!

அன்பன்
பத்மராஜ் ராமசாமி. 28-12-2022

என் உரை

நம: ஸ்ரீவர்த்தமானாய நிர்தூத கலிலாத்மனே |
சாலோகானாம் த்ரிலோகானாம் யத்வித்யா தர்பணாயதே ||

கேவலஞானத்தில் அலோகாகாசத்துடன் சேர்ந்த மூவுகமும் பிரதிபலிக்கிறது. அதாவது சர்வக்ஞ பகவான் மூவுலகத்தையும் அலோகத்தையும் நேரடியாகயும் தெளிவாகவும் அறிகிறார். அவருடைய வாணியின்படி கணதரர்கள் ஆகமங்களைப் படைத்துள்ளனர். ஆச்சார்யர்களின் பரம்பரையினால் இந்த விஷயங்கள் தொடர்ந்து அந்தந்த கால மக்களுக்குக் செவிவழி கிடைத்து வந்தன, காலப்போக்கில் இவைகள் நூல்வடிவம் பெற்றன.

அந்த ஆகமங்களின் பரம்பரையில் ஆச்சார்யஸ்ரீ 108.நேமிசந்திர சித்தாந்த சக்கரவர்த்தி திரிலோகசாரம் எனும் நூலை எழுதினார். அந்த நூலின் சமஸ்கிருத வர்ணனையின் ஆதாரத்தில் பண்டிட்.தோடர்மல்ஜி அவர்கள் அந்த நூலின் வர்ணனையை டுன்டாரி மொழியில் எழுதினார். 105.விசுத்தமதி மாதாஜீயும் இந்த நூலுக்கு ஒரு வர்ணனை எழுதியிருக்கிறார். கார்த்திகேயஸ்வாமி மூலம் கார்த்திகேயானுபிரேக்ஷா என்ற நூலின் லோகபாவணா அதிகாரத்தில் மூவுலகம் பற்றிய விரிவான வர்ணனை வருக்கிறது. ஆகமப்பிரமாணம் கொண்ட சய்யம்பிரகாஷ் என்ற ஆச்சார்யஸ்ரீ 108.சூர்யசாகரால் எழுதப்பட்டு டெல்லியிலிருந்து வெளியிடப்பட்ட நான்கு பாகங்கள் கொண்ட நூல்களிலும் மூவுலக வர்ணனை இருக்கிறது. தத்துவார்த்தஸூத்திம் மற்றும் அதற்கு எழுதப்பட்ட பல விளக்கவுரைகளிலும் மூவுலகம் பற்றிய வர்ணனை வருகிறது.

இந்த பல நூல்களின் ஆதாரங்களை வைத்து டக்டர். உஜ்வலா ஷா அவர்களால் எழுதப்பட்டு, அவருடைய கணவர் பண்டிட். தினேஷ்பாய் ஷா அவர்களால் 2018-ல் ஹிந்தி, மராட்டி, குஜராத்தி மொழிகளில் வெளியிடப்பட்டதே இந்த சர்வக்ஞரால் அருளப்பட்ட “ஜெயின் பூகோளம்” என்ற நூலாகும். அதிஷ்டவசமாக நான் இந்த நூலை ஸ்வாத்யாயம் செய்யவும், இது சம்பந்தமான டக்டர். உஜ்வலா ஷா அவர்களின் பிரவசனங்ளை இணையதளம் வாயிலாகக் கேட்கும் பாக்கியமும் பெற்றேன். அதனால் உலக அமைப்பு பற்றி எனக்கு இருந்த பல சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றேன்.

நான் பெற்ற ஆனந்த அனுபவத்தை சக தமிழ் சமணர்களும், குறிப்பாக இளம் தலைமுறையினரும் பெறவேண்டும் என்ற நோக்கில் இந்த அருமையான நூலை எளிய தமிழ்நடையில், எல்லோரும் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பு செய்தேன்.

மொழிபெயர்ப்பு முடிவடைந்ததும், பண்டிட். தினேஷ்பாய் ஷா மற்றும் டாக்டர். உஜ்வலா ஷா அவர்களை தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு இந்த விஷயத்தை தெரிவித்து, இந்த நூலுக்கு முகவுரைகளை எழுதி அனுப்பும்படி வேண்டினேன். இதைக் கேட்ட அவர்கள் சந்தோஷம் அடைந்ததோடு அல்லாமல், தமிழ் சொந்தங்களுக்கு இந்த நூலின் அவசியத்தையும், அதன் இன்றியமையாமையையும் எடுத்துக் கூறும் வகையில் அழகான முகவுரைகளை எழுதி அனுப்பினார்கள். அவர்கள் இருவருக்கும் என் பணிவு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். உஜ்வலா ஷா அவர்கள் எழுதிய பல தத்துவ சம்பந்தமான அறிமுக நூல்களில் இதுவும் ஒன்றாகும். சமண தத்துவ அறிமுகம், காரண காரிய இரகசியம் ஆகிய இரண்டு நூல்களை 2019-திலும், கரணானுயோக அறிமுகம் மற்றும் பஞ்சலப்தி என்ற நூல்களையும் 2020-திலும் மொழிபெயர்த்து வெளியிட்டேன். பிறகு 2021-ல் சமச சித்தாந்த நுழைவாயில் என்ற கேள்வி-பதில் வடிவ நூலையும் வெளியிட்டேன். இப்போது இந்த நூல் 2023-ல் வெளியிடப்படுகிறது.

மற்ற நூல்களை அச்சிட்டு வெளியிடும் செலவில் பங்கேற்கும் வகையில் சாஸ்திரதானம் அளித்து உதவியது போலவே, இந்த நூல் வெளிவரவும் பவ்விய நண்பர்கள் சாஸ்திரதானம் அளித்திருக்கிறார்கள் என்பது, அவர்களுக்கு மார்கப்பிரபாவனையில் இருக்கும் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது. சாஸ்திரதானமளித்த அனைவரையும் முழுமனதுடன் பாராட்டுவதோடல்லாமல், அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலின் மொழிபெயர்ப்பில் எனக்குப் பேருதவியாக இருந்த திரு.ஜம்புகுமார் சாஸ்திரியார், முனைவர். உபாபதி சாஸ்திரியார் மற்றும் திரு.ஜெயராஜ் சாஸ்திரியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலில் அச்சுப்பிழை எதுவும் இல்லாதவகையில் பிழை திருத்தம் செய்வதில் உதவி நூலுக்கு முன்னுரையும் எழுதி அனுப்பிய திருவாளர் மன்னார்குடி பத்மராஜ் இராமசாமி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மொழிபெயர்ப்பில் உதவியதோடல்லாமல், குறுகிய காலஅவகாசத்தில் அருமையான ஒரு நூலுக்கு அணிந்துரை வழங்கிய முனைவர்.உபாபதி சாஸ்திரியார் அவர்களுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதும்போல இந்த நூலையும் அருமையாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்டுத்தந்த நண்பர் ஸ்ரீ பாலாஜி ஆப்செட் நிறுவனராகிய

திரு.சுப்பையா அவர்களுக்கும் என் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலின் மொழிபெயர்ப்பு முழுக்க முழுக்க டாக்டர் உஜ்வலா ஷா அவர்களின் கருத்துக்களும், மொழிநடையும் அப்படியே இருக்குமளவுக்கு மிகுந்த கவனத்துடன் செய்திருக்கிறேன். இந்த நூலில் பவ்யர்கள் ஏதாவது தவறு கண்டால் எனக்குத் தெரியப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், திருத்தி வாசித்துக் கொள்ளவும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பெருமுயற்சியின் காரணமாக வெளிவந்துள்ள இந்த நூலை தமிழ்ச் சமணர்கள் ஆர்வத்தோடு ஸ்வாத்யாயம் செய்து ஆன்ம நலம் அடைய வேண்டும் என்ற பாவனையுடன்,

துபூபாலன் 6-2-2023
சென்னை

நம: சித்தேப்ய: நம: சித்தேப்ய:, நம: சித்தேப்ய: |
|| சுத்தாத்மனே நம: ||

கடவுள் வாழ்த்து

த்ரிபுவனஸார அபாரகுண, ஞாயக நாயகசந்த |
த்ரிபுவன ஹிதகாரீ நமோ, ஸ்ரீ அரஹந்த மஹந்த ||

தீனபுவன கே முகுடமணி, குண அனந்தமய சுத்த |
நமோ சித்த பரமாதமா, வீதராக அவிருத்த ||

தீனபுவன திதி ஜானீகே, ஆப ஆபமய ஹோய |
பரதே பஃயே விரக்த அதி, நமோ மஹாமுனி ஸோய ||

தீனபுவன மந்திர விஷை, அர்த்த பிரகாஸன ஹார |
ஜைன வசன தீபக நமோ, ஞானகரன குணதார ||

தீனபுவன மஹி ஜெ லசை, சைத்ய சைத்யக்ரஹஸார |
தே சப வந்தோ பாஃவஜுத, ஸுபஃகாரன ஸுககார ||

ஐஸே மங்கலரூப ஸப, தினகே பந்தே பாம்ய |
அப கிசு ரசனா கஹத ஹோ, நாநாவிதி ஸுகதாய ||

1. மூவுலகம் - பொது வர்ணனை

சர்வக்ஞ பகவானின் வாணியின்படி பன்னிரண்டு அங்கங்கள் எழுதப்பட்டன, மேலும் அந்த ஆகமங்களின் பரம்பரையில் ஆச்சார்யஸ்ரீ நேமிசந்திர சித்தாந்த சக்கரவர்த்தி திரிலோகசாரம் எனும் நூலை எழுதினார். அந்த நூலின் சமஸ்கிருத வர்ணனையை ஆதாரமாகக்கொண்டு பண்டிட். தோடர்மல்ஜி அவர்கள் டுன்டாரி மொழியில் அந்த நூலின் வர்ணனையை எழுதினார். 1928-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூலின் ஒரு பிரதி எங்களுக்கு [திரு.தினேஷ்பாய்ஷா மற்றும் திருமதி.உஜ்வலாஷா அவர்களுக்கு] காரஞ்ஜாவிலிருந்து, திருமதி.பிரக்ஞா பஹன் டோங்காவ்கர் மூலம் கிடைத்தது. இரண்டாவதாக விசுத்தமதி மாதாஜீயும் இந்த நூலுக்கு த்ரிலோகஸார் என்ற ஒரு வர்ணனை எழுதியிருக்கிறார். கார்த்திகேயஸ்வாமி மூலம் கார்த்திகேயானுபிரேக்ஷா என்ற நூலின் லோகபாஃவணா அதிகாரத்தில் மூவுலகம் பற்றிய விரிவான வர்ணனை இருக்கிறது. ஆகமப்பிரமாணம் கொண்ட சய்யம்பிரகாஷ் என்ற ஆச்சார்யஸ்ரீ சூர்யசாகரால் எழுதப்பட்டு

டெல்லியிலிருந்து வெளியிடப்பட்ட நான்கு பாகங்கள் கொண்ட நூல்களிலும் மூவுலக வர்ணனை இருக்கிறது. தத்துவார்த்தஸூத்திம் மற்றும் அதற்கு எழுதப்பட்ட பல விளக்கவுரைகளிலும் மூவுலகம் பற்றிய வர்ணனை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த பல நூல்களின் ஆதாரங்களை வைத்து இந்த விருக்ஷத்தின்-மூவுலகத்தின்-மூன்று புவனங்களின் வடிவம் பற்றி நாம் இங்கு பார்க்க இருக்கிறோம்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் மூன்று புவனங்களிலும் உள்ள இயற்கை ஜினாலயங்களில் உள்ள ஜின பிரதிமைகளுக்கும், ஜினாலயங்களுக்கும் உணர்வு பூர்வமாக நமஸ்காரம் செய்து, நாம் இந்த விஸ்வத்தின்-மூவுலக அமைப்பின் வடிவத்தை பார்க்கப் போகிறோம். மூவுலகத்தின் உண்மையான வடிவத்தை தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அலோகாகாசத்துடன் முழு உலகத்தையும் நேரடியாக அறிந்துகொள்ளக்கூடிய சர்வக்ஞ பகவான் என்ன கூறினாரோ, அதையே தெரிந்துகொள்ள வேண்டும்; ஏனெனில் அதுவே பரம சத்தியமாகும், பிரமாணமாகும்.

இரத்தினகிரன்ட ஸ்ராவகாசாரம் என்ற நூலில் ஸ்வாமி சமந்தபத்திரர் எழுதுகிறார்:-

நம: ஸ்ரீவர்த்தமானாய நிர்தூத கலிலாத்மனே |
சாலோகானாம் த்ரிலோகானாம் யத்வித்யா தர்பணாயதே ||

கேவலஞானத்தில் அலோகாகாசத்துடன் சேர்ந்த மூவுகமும் பிரதிபலிக்கிறது அதாவது சர்வக்ஞ பகவான் இந்த மூவுலகத்தையும் மற்றும் அதைவிட அனந்த மடங்கு பெரிய அலோகாகாசத்தையும் பிரத்யக்ஷமாகவும் [நேரடியாக வேறு எதன் சகாயமுமின்றியும்] தெளிவாகவும் அறிகிறார். அவருடைய வாணியின்படி கணதரர்கள் 12 அங்கங்கள் மற்றும் 14 பிரகீரணங்கள் (அங்கபாஹ்யங்கள்) படைத்துள்ளனர். சத்ய மாஹாவிரதத்தை ஏற்றுள்ள ஆச்சார்யர்களின் பரம்பரையினால் இந்த விஷயங்கள் தொடர்ந்து அந்தந்த கால மக்களுக்குக் கிடைத்து வந்தன, காலப்போக்கில் இவைகள் நூல்வடிவம் பெற்றன. இந்த ஜினாகமங்களின் ஆதாரத்தில்தான் நாம் இப்போது இந்த மூவுலகம் என்பது எது? அது எங்கிருக்கிறது? அதில் எப்படிப்பட்ட உயிர்கள் வாழ்கின்றன? நாம் எங்கு வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்? சித்த பகவான் எங்கு வீற்றிருக்கிறார்? அரஹந்தர்கள் எங்கு இருக்கிறார்கள்? நாம் அனாதி காலமாக எங்கெங்கு பிறந்து இறந்து இப்போது எங்கே வந்திருக்கிறோம்? எங்கெங்கெல்லாம் சுற்றித் திரிந்து இப்போது எங்கு வந்திருக்கிறோம்? என்று பார்க்க இருக்கிறோம்.

யாராவது, அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவிற்கோ, காஷ்மீரத்துக்கோ சுற்றுலா போகவேண்டுமென்றால், அங்கு போவதற்கு முன்பே அவர் அந்த

இடத்தைப் பற்றி தெரிந்து கொள்கிறார், அங்கு சென்று வந்த பிறகு, அங்கு தான் சென்றிருந்தபோது எடுத்தப் புகைப்படங்களை-போட்டோக்களை பார்த்து அந்த அனுபவங்களை நினைவு கொள்கிறார்-மனதில் கொண்டுவந்து சந்தோஷப்படுகிறார். நாம் கூட எங்கெங்கெல்லாம் சென்று சுற்றுப்பயணம் மேற்கொண்டு வந்திருக்கிறோம் என்று பார்க்கலாம், வாருங்கள்!

நாம் பள்ளியில் உலக அமைப்பு பற்றி-பூகோளப் பாடத்தில் படித்திருக்கிறோம், ஆனால் லௌகீக உலகம் பற்றி விஞ்ஞானிகள் சொல்லியிருப்பதை நாம் இப்போது பார்க்கவிருக்கும் ஜெயின பூகோளத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம், ஏனெனில் நாம் எல்லாம் அல்ப ஞானிகள்-குறைந்த அறிவு கொண்டவர்கள், க்ஷயோபசம ஞானிகள், அறிவு-மறைப்பு வினையின் உதயமுடையவர்கள். விஞ்ஞானிகள் நம்மைப் போன்றவர்களைவிட கொஞ்சம் அதிகமாக விஷயங்களை தேடிப்பார்த்து எடுத்துச் சொல்கின்றனர். அவைகளையே சரியானது என்று நம்பி, அதுவே சரியான பூகோளக் கல்வி என்று நம்பிக்கொண்டு, நாம் சர்வக்ஞரால்-முழுதுணர் ஞானியால் சொல்லப்பட்ட ஜெயின பூகோளத்தை சரியானதா-தவறானதா என்று நிர்ணயம்-முடிவு செய்யப் பார்க்கிறோம். விஞ்ஞானிகள் என்று யாரை கூறுகிறோம் தெரியுமா? யார் மேலும் தேடுவதை நிறுத்துவதில்லையோ, யாருடைய தேடுதல் எப்போதும் முழுமை அடைவதில்லையோ, யாரெல்லாம் எப்போதும் ஏதாவது புதுமைகளைத் தேடிக்கொண்டே இருக்கிறார்களோ, எவர்கள் எதையும் புதிதாக செய்வதில்லையோ, அவர்களையே விஞ்ஞானிகள் என்று நாம் கூறுகிறோம். அவர்கள் மற்ற பொது மக்களைவிட சில விஷயங்களை கொஞ்சம் அதிகம் தெரிந்தவர்களாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் சர்வக்ஞரைப்போல எல்லாம் அறிந்தவர்கள் அல்ல, எவ்வளவு தெரிந்திருக்கிறார்களோ அதுவும், பல கருவிகளின் துணைகொண்டு-பிறபொருளின் சகாயத்துடனேதான் அறிகின்றனர், நேரடியாக சர்வக்ஞ பகவானை போல முழுவதையும் அறிந்தவர்கள் அல்ல!

எல்லாவற்றையும் அறிந்தவரை அதாவது மூவுலகம், மற்றும் அதற்கு வெளியில் இருக்கும் அலோகத்திலும் உள்ள எல்லாத் திரவியங்களையும், அவைகளின் முக்கால எல்லா அவஸ்தைகளையும்-பர்யாயங்களையும் தன் ஞானம் மூலம் பிரத்யக்ஷமாகவும் (வேறு எதன் சகாயமின்றியும்), தெளிவாகவும் (எந்த விதமான சந்தேகமுமின்றியும்) ஒரே சமயத்தில் தெரிந்து கொள்பவரை சர்வக்ஞர் என்று கூறுகிறோம். அவருடைய ஞானத்தால் அறியப்பட முடியாத வஸ்து என்று எதுவும் இந்த உலகத்தில் இல்லை; ஆகையால் சர்வக்ஞர் கூறியபடியான மூவுலகம் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இது பரம சத்தியமாகும்-முழு உண்மையாகும், இதை நம் லௌகீக அறிவின் ஆதாரத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. சர்வக்ஞரின் ஸ்வரூபமும் மற்றும் சர்வக்ஞர் இருப்பதை உறுதிப் படுத்துவதும் இப்போது

நம்முடைய விஷயமில்லை. இந்த விஷயத்தை நாம் முன்னரே "காரண காரிய இரகசியம்" என்ற நூலில் விரிவாக சர்ச்சை செய்து தெரிந்து வைத்திருக்கிறோம். சர்வக்ஞ பகவானுக்கு வெறுமனே பூஜை செய்தல், அஷ்டவித திரவியங்களைக் கொண்டு அர்ச்சனை செய்தல், அவரைப்பற்றி பக்திப்பாடல்களைப் பாடுதல் எல்லாம் அவர்மேல் உண்மையான சிரத்தை-நம்பிக்கை கொண்டதாக ஆகாது, ஆனால் அவருடைய வாணிக்கு-அவர் திவ்யத்தொனியில் எடுத்துக்கூறிய விஷயங்களில் சிரத்தை-நம்பிக்கை கொள்வதே அவருக்கு செய்யும் உண்மையான பூஜையும், அர்ச்சனையும், பக்தியுமாகும்.

திரிலோகசாரம் முதலான நூல்களைப் பார்க்கும்போது கூர்மையான கணித அறிவும், கணிதம் மூலம் எடுத்துச் சொல்லப்படும் விஷயங்களை புரிந்து கொள்ளும் சாமர்த்தியமும் இல்லாமல், இந்த மூவுலக அமைப்பை தெரிந்து கொள்வது மிகவும் கடினமானது என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் கணிதங்களை அதிகமாகக் கொண்டுவராமல் உங்களுக்கு மூவுலக அமைப்பை புரியும்படி எடுத்துக் கூறுகிறேன் என்று நான் உங்கள் அனைவருக்கும் உறுதியளிக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் நான் நானாகவே இருந்து (அதாவது நான் கணித ஆசிரியராக மாறாமல்) உங்களுக்குப் புரிய வைக்கிறேன். யாருக்கு கணிதத்தில் அவ்வளவாக ருசி இல்லையோ அல்லது யாருக்கு கணிதம் அவ்வளவாகப் புரியாதோ, அவர்கள் அந்த குறைபாடால், இப்படிப்பட்ட நூல்களை படிக்காமலே விட்டு விடுகின்றனர். ஆனால் நாம் இங்கு மிகக்குறைந்த கணிதத்துடன் அதிமஹத்துவமான விஷயங்களை காணவிருக்கிறோம், அதிநுட்பமான கணிதங்களை இங்கு சர்ச்சை செய்யப்போவதில்லை.

நம்மில் பலர் திரவியானுயோகத்தை நன்கு தெரிந்தவர்களாக இருக்கிறோம், நியமமாக திரவியானுயோக கிரந்தங்களை வாசிப்பவர்களாகவும் இருக்கிறோம். இந்த பூகோளத்தை தெரிந்து கொள்வதால் நம் ஆத்மாவுக்கு அப்படி என்ன நல்லது நடக்கப் போகிறது? என்ற கேள்வியும் அப்படிப்பட்டவர்கள் மனதில் எழவே செய்கிறது, பலர் என்னிடம் அதைப்பற்றி கேட்டும் இருக்கிறார்கள். நாம் திரிகால த்ருவ பகவான் ஆத்மாவாவோம். இந்த திரிகால த்ருவ ஆத்மாவை அறிவதால் நமக்கு முக்தி கிடைக்கிறது என நாம் அறிந்திருக்கிறோம். நாம் அவசியம் ஆத்மாவைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும், மற்றவைகளைத் தெரிந்து கொள்வதால் என்ன பலன்? என்று பலர் நினைக்கின்றனர்.

ஆத்மா எல்லாவற்றையும் அறியும் திரவியமாகும். அது யாரை/எதை தெரிந்து கொள்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? ஆத்மா தன்னையும்-ஸ்வதிரவியத்தையும் மற்ற பிற பொருள்களையும்-பிற திரவியங்களையும் கூட தெரிந்து கொள்கிறது; தன்னிடத்தையும்-ஸ்வக்ஷேத்திரத்தையும், பிற

பொருள்களின் இடங்களையும்-பிறக்ஷேத்திரங்களையும் கூட தெரிந்து கொள்கிறது; தன்காலத்தையும்-ஸ்வகாலத்தையும், பிறகாலத்தையும் கூட தெரிந்து கொள்கிறது; தன் இயல்பையும்-ஸ்வபாஃவத்தையும், பிற பாஃவங்களையும் கூட தெரிந்து கொள்கிறது. அதற்கு எல்லாவற்றையும் அறியும் தன்மை இருக்கிறது என்றால் எல்லாவற்றையும் சரியாக அறியும் இயல்பு இருக்கிறதா, அல்லது தவறாக அறியும் இயல்பு இருக்கிறதா, அல்லது எதையும் தெரிந்து கொள்ளாத இயல்பு இருக்கிறதா? என்பதைப்பற்றி உறுதி செய்வது அவசியமாகும்.

மூவுலகத்தின் இருப்பு பற்றி-அஸ்தித்துவம் பற்றி, அதன் அமைப்புப் பற்றி உங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லையா என்ன? சொர்க்கம்-நரகம் எல்லாம் பொய்யாகும், கற்பனையாகும், உலகில் உள்ள மக்களை பாபம் செய்வதிலிருந்து விடுவித்து புண்ணியம் செய்வதில் ஈடுபடச் செய்யவே ஆச்சார்யர்கள் இப்படிப்பட்ட நூல்களை எழுதி இருக்கிறார்கள். உங்களுக்கு எந்த மரணமடைந்த நபரிடமிருந்தாவது, அவர்கள் சென்றதாகச் சொல்லப்படும் சொர்க்கத்திலிருந்தோ, நரகத்திலிருந்தோ ஏதாவது கடிதமோ அல்லது தொலைபேசி மூலமோ தகவலோ அல்லது வேறு எந்த விதத்திலாவது ஏதாவது இதுவரை கிடைத்திருக்கிறதா என்ன? என்று பலர் சொல்லவே செய்கின்றனர்.

யாருக்கு ஆஸ்திக்யம்-நம்பிக்கை இல்லையோ, சந்தேகமின்மை அங்கம் இல்லையோ, அவர்கள் எப்படி நன்னம்பிக்கை கொண்டவராக-சம்யக்திருஷ்டியாக இருக்க முடியும்?

பண்டிட். தோடர்மல்ஜி கூட திரிலோகசாரம் பற்றிய வர்ணனையின் முன்னுரையில் இவ்வாறு எழுதியிருக்கிறார்- “பூகோள ஞானத்தால் நமக்கு நல்லது எப்படி நடக்கும்? இதில் நிச்சய தர்மமோ அல்லது வியவஹார தர்மமோ சொல்லப்படவில்லை, மேலும் நல்லது என்னவோ தர்மத்தை சாதனை செய்வதால்தான் உண்டாகும். இந்த பூகோள நூலில் இடங்களின்-க்ஷேத்திரங்களின் அளவுகள், அந்த ஸ்தானங்களின் வடிவம், நரகர் முதலான உயிர்களின் ஆயுள், உடலமைப்பு ஆகியவைகள் பற்றியே எடுத்துச்சொல்லப் படுகின்றன; அவைகளால் நமக்கு தர்மசாதனை எவ்வாறு ஏற்பட முடியும்?” என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அதற்கு பதில்-

முக்திக்கு காரணம் சம்யக்தர்சன-ஞான-சாரித்திர தர்மமாகும். இங்கு சம்யக்த்துவம் முதன்மை தர்மமாகும். சந்தேகங்கள் விலகிய பின்னரே சம்யக்த்துவம் பெறப்படுகிறது. உலக அமைப்பு பற்றி பிறமதவாதிகளிடம் பல குழப்பமான கற்பனைகள் காணப்படுகின்றன. ஜினதர்மத்தில் சொல்லப்பட்ட மிகச்சரியான உலக அமைப்பு பற்றி தெரிந்து கொள்வதால் ஆஸ்ரவ-பந்தங்களின் பலன் நரகம், சொர்க்கம் என்று சொல்லி அவைகளின் சிறப்பை

அறிய வைக்கின்றனர், ஆஸ்ரவ-பந்தங்கள் இல்லை என்றால் சம்வரை-நிர்ஜரை நிகழ்கின்றது என்று சொல்லி அதன் பலன் மோக்ஷம்-முக்தி என்று அறிய வைக்கின்றனர். அப்படி முக்தி அடைந்த சித்தர்கள் இருக்கும் ஸ்தானங்களின்-இடங்களின் சிறப்புகளை அறிவதால் தத்துவங்களில் சந்தேகங்கள் இல்லாமல் போகின்றன, நம்பிக்கையிலும் அதிக திடத்தன்மையைப் பெறுகிறோம்.

இரண்டாவதாக சம்யக்ஞானம் தர்மமாகும். இந்த சாஸ்திரத்தை பயிற்சி செய்வதால் மூடநம்பிக்கை, கஷாயம், ஹிம்சை முதலான பாபச் செயல்கள் அதிகமாகாமல், குறைந்து போகின்றன. ஆகையால் இதன் பயிற்சி உங்கள் சம்யக்ஞான வடிவமேயாகும்.

மூன்றாவதாக சம்யக்சாரித்திரம் தர்மமாகும், அது சராக சாரித்திரம், வீதராக சாரித்திரம் என இரண்டு பிரிவாகும். அசுப செயல்களிலிருந்து விடுபட்டு சுபச்செயல்களில் ஈடுபாடு உண்டான பிறகு சராக சாரித்திரம் நிகழ்கிறது. இந்த சாஸ்திர ஸ்வாத்தியாயத்திலிருந்து யாராவது அசுப செயலின் பலன் நரகம் முதலான இடத்திற்கு செல்லுதல் என்றும் மற்றும் சுபச்செயலின் பலன் சொர்க்கம் முதலான இடத்திற்கு செல்லுதல் என்று தெரிந்து கொள்ளுவாரானால், பாபச்செயல்களை விட்டு புண்ணியச் செயல்களில் ஈடுபடுவார் அல்லவா! பிறகு இராக-த்வேஷங்களை(விருப்பு வெறுப்புகளை) உண்டாக்கும் சிந்தனை விலகும்போது வீதராக சாரித்திரம் உண்டாகிறது. மூவுல அமைப்பைப் பற்றி சிந்தனை செய்வதால் இந்த பிறவி சம்பந்தமான சில பிரயோஜனம் உறுதியாகாது என்றால் பிறகு இந்த நூலை ஸ்வாத்யாயம் செய்வதால் ஏன் இராக-த்வேஷங்கள்தான் உற்பத்தியாகும் என்ற எண்ணம் கொள்கிறீர்கள்? எனவே இந்த நூலை ஸ்வாத்யாயம் செய்வதால் தானாகவே (சகஜமாகவே) வீதராக பாஃவமே உண்டாகிறது.

இந்த சாஸ்திரத்தைப் படிப்பதால் இப்படிப்பட்ட பல விருப்பங்கள் உண்டாகும்போது வீதராகத்தன்மை எப்படி இருக்க முடியம்? என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில்-வீதராகத்தன்மை வேரூன்றும்போது விருப்பங்கள் தானாகவே போய்விடும். ஞானத்தின் ஸ்வரூபம் விகல்பத்துடன் கூடியதாகும். ஏதாவது அறியப்படும் பொருளை (ஞேய வஸ்துவை) அறிவு அறியவே செய்யும், ஆகையால் அறியப்படும் பொருளின் ஞானவடிவ அறியும் செயலால் வீதராகம் இல்லாமல் போவதில்லை, எதனால் விருப்பு-வெறுப்பு உண்டாகிறதோ அப்படிப்பட்ட விருப்பங்களால்தான் வீதராகம் இல்லாமல் போகிறது.

இந்த சாஸ்திரத்தின் பயிற்சி பிரயோஜனமானது என்று அறிந்து இதை படித்தல், வாசித்தல், அறிதல், கேட்டல் முதலான பயிற்சிகளில் ஈடுபட தயாராக இருங்கள்! அப்படி இருப்பதே செய்யத் தகுதியான செயலாகும். இந்த சாஸ்திரத்தை எடுத்துச் சொல்பவரும் கேட்பவரும் எப்படி இருக்க

வேண்டுமென்று பண்டிட். தோடர்மல்ஜி மேலும் கூறுகிறார். முதன்முதலில் ஜினபகவானின் வசனத்தில் அவர்கள் நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டும். அதில் நம்பிக்கை இல்லாதவர்களால் பிரத்யக்ஷம் மற்றும் அனுமானம் மூலம் கண்ணுக்குத் தெரியாத-புரிந்துகொள்ள முடியாத மூவுலக அமைப்பை அவர்களால் எவ்வாறு உண்மையாக அறியமுடியும்? அதனால் அவர்களுக்கு தர்மபுத்தி இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தர்மபுத்தி இல்லையென்றால், இதில் வேறு உடல் சம்பந்தமான பிரயோஜனம் எதுவும் இல்லையாகையால், ஏன் இதை படிக்கப் போகிறார்கள்? ஒருவேளை தன்னை பூகோளத்தில் அறிஞராகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இதை படிப்பார்களானால், கஷாய உணர்வால் விளைவு மோசமாகத்தான் இருக்கும். கணித அறிவு இல்லையென்றால் இந்த நூலில் கூறப்படுவதின் பொருளை ஈர்க்க முடியாது. இதில் கூறப்படுவதை உறுதி செய்து தத்துவ ஞானத்தை பெற முயற்சி எடுப்பவராக இருக்கவேண்டுமே ஒழிய, இதைப்பற்றி கொஞ்சம் தெரிந்துகொண்டு காரசாரமாக வாதவிவாதம் செய்யவேண்டும் என்ற அபிப்ராயம் இல்லாதவராக இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால் இந்த நூலை பயிற்சி செய்வதின் பலன் உபயோகத்தை தூய்மை செய்வதற்காகவே செய்கிறார் என்றால் அதுவும் கைகூடாது. க்ஷமா-மன்னிக்கும் உணர்வு, மகிழ்ச்சி, நீதியின்படி நடக்கும் உள்ளுணர்வு ஆகியவை இருப்பது அவசியம், அப்படி இல்லையென்றால் அவர்கள் பாராட்டப்பட மாட்டார்கள்.

தோடர்மல்ஜி மேலும் எழுதுகிறார் - “இது ஜினதர்மத்தின் ஆகமமாகும், ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்டதாகும், ஆகையால் இது பிரமாணமாகும். இதை உறுதி செய்ய வேறு பிரமாணம் எதுவும் தேவையில்லை. இதில் நம்பிக்கை கொண்டு இதை பயிற்சி செய்வதின் மூலம் தத்துவ நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்! இராகம் முதலியவைகளை குறைத்துக் கொள்ளுங்கள்! மோக்ஷமார்க்கத்தைப் பெறுங்கள்! முக்தி அடையுங்கள்!!”

தர்மதியானத்தின் நான்கு பிரிவுகளில் சமஸ்தானவிஷய தர்ம தயானத்தில்கூட மூவுலக அமைப்பு பற்றிய-லோகஸ்வரூபத்தைப் பற்றிய சிந்தனையே செய்யப்படுகிறது. கார்த்திகேயானுப்பிரேக்ஷை என்ற நூலில் பன்னிரண்டு பாவனைகள் அதாவது துவாதசானுப்பிரேக்ஷை பற்றிய வர்ணனை வருகிறது. அதில் லோகபாவனை பற்றி சிந்தனையை முக்கியமாக முனிராஜர்களும், ஸ்ராவக ஸராவகிகளும், சம்யக்திருஷ்டிகளும் செய்கின்றனர். இதைப்பற்றிய சிந்தனை வைராக்கியத்தை-பற்றின்மையை-துறவு உணர்வை உற்பத்தி செய்வதாகும், ஆனந்தத்தை உற்பத்தி செய்வதாகும். சஹடாலாவிலும் ‘வைராக்ய உபாவன் மாயி சின்தை அனுபிரேக்ஷா பாஃயி’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூவுலக ஸ்வரூபத்தின் சிந்தனை பயனற்றது என்றால் முனிராஜர்கள் இந்த

சிந்தனையை மீண்டும் மீண்டும் ஏன் செய்யப்போகிறார்கள்? அவர்களுக்கு நேரம் போகாமல்தான் இவ்வளவு பெரிய கிரந்தத்தை எழுதினார்களா என்ன?

விகல்பங்கள் என்ற பெயரால் நாம் இதை புரிந்துகொள்ள விரும்பாதவர்களாக இருக்கிறோம். மக்கள் யாரிடம் பயப்படுகிறார்கள்? விகல்பங்களில்-சாஸ்திர விகல்பங்களிலிருந்தா? வீடு-வீட்டிலிருப்பவர்கள் பற்றிய விகல்பங்களிலிருந்து இல்லை அல்லவா! கணிதத்திற்கு பயந்து, கரணானுயோக பயிற்சியை விகல்பங்கள் என்று சொல்லி இதை ஸ்வாத்யாயம் செய்வதை தவிர்த்து விடுகின்றனர். இது அவர்கள் அபிப்பிராயத்தில் கொண்டுள்ள தவறாகும். நாம் ஜடமாக-அசேதனமாக ஆகிவிடுவோமானால் விகல்பங்கள் நம்மை விட்டு அகன்று விடும். நாம் விகல்பங்கள் என்ற பெயரால் ஜடமாக விரும்புகிறோம். நமக்கு எப்படிப்பட்ட ஞானம் வேண்டும்? தெரியப்படும் பொருள்கள் தெரியாமலிருக்கும் ஞானமா? எதிரில் உள்ள பொருள்களின் பிரதிபிம்பங்களை பிரதிபலிக்காத ஒரு நிலைக்கண்ணாடியை உங்களால் எனக்கு கொண்டுவந்து கொடுக்க முடியுமா? ஐய்யஹோ! அப்படிப்பட்ட பொருளை நிலைக்கண்ணாடி என்றுகூட சொல்லமாட்டோம். நிலைக்கண்ணாடியின் இயல்பு எதிரில் உள்ள எல்லா வஸ்துக்களையும் பிரதிபலிப்பதுதானே, அதேபோல ஞானத்தின் இயல்பும் அறிதலேயாகும், அது எல்லா ஞேயப்பொருள்களை அறிந்து கொண்டுதான் இருக்கும்.

ஞேயப்பொருள்களை அறிந்து கொள்வதால்தான் ஞானம் என்பது இருப்பதே நமக்கு தெரியவருகிறது. ஞானிகளுக்கு என்னவோ எல்லா இடங்களிலும் ஞானமே தெரிகிறது, ஏனென்றால் அறியப்படும் பொருள்களை அறியும் வடிவ ஞானத்தின் செயலே அங்கு நிகழ்கிறது. எந்த பொருளை அறிந்தாலும், ஜடப்பொருளை அறிந்தாலும், சாஸ்திரத்தை அறிந்தாலும், அரஹந்தரை அறிந்தாலும், அறிவதால் என்னவோ ஆத்மாவே அனுபவத்திற்கு வருகிறது. பிற அறியப்படும் பொருள்களை அறிவதால் வீதராகம் இல்லாமல் போவதில்லை; ஆனால் எங்கு விருப்பு-வெறுப்பு (இராக-த்வேஷம்) உண்டாகிறதோ அப்படிப்பட்ட விகல்பங்களால்தான் வீதராகம் இல்லாமல் போகிறது, நமக்கு தீங்கு உண்டாகிறது.

லோகானுப்பிரேக்ஷையில் வெறும் பூகோளம் பற்றி-பூமி அமைப்பு பற்றிய வர்ணனை மட்டுமே இல்லை. அங்கு உயிர்களின் பிரிவுகள், அவைகளின் எண்ணிக்கை, அவைகளின் வாழிடங்கள், எப்படிப்பட்ட வாழ்க்கையை அவ்வுயிர்கள் வாழ்கின்றன, எந்தெந்த உயிர்கள் எங்கெங்கு சென்ற பிறக்கின்றன, இறந்த பிறகு யார் எங்கே செல்கின்றனர், யார் நிர்வாணமடைய முடியும் முதலான பல விஷயங்கள் வருகின்றன. நாம் அவைகளை வரிசையாக பார்க்கவிருக்கிறோம். முதன்முதலில் இந்த உலகம் எங்கே இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். திரிலோகசாரம் காதை 3-ல் இவ்வாறு இருக்கிறது:-

ஸவ்வாகாஸமணத்தம் தஸ்ஸ ய பஹுமஜ்ஜதேஸபாகம்ஹி |
லோகோஸம்கபதேஸோ ஜகஸெடிகணப்பமாணோ ஹு ||

கார்திகேயானுப்பிரேக்ஷாகாதை 115-ல் சொல்லப்பட்டிருக்கிறது:-

ஸவ்வாகாஸமணத்தம் தஸ்ஸ ய பஹுமஜ்ஜஸம்டிஓ லோஓ |
ஸோ கேண வி ணேய கஓ, ண ய திரிஓ ஹரிஹராதிஹிம் ||

முழு ஆகாசம் அனந்த பிரதேசியாகும், அதன் மத்தியில்-நட்டநடுவில் உலகம் இருக்கிறது. இந்த உலகம் அசங்க்யாத பிரதேசங்கள் கொண்ட கன வடிவமாகும். அதாவது நீளம், அகலம், உயரம் கொண்ட கனவடிவமாகும் (three dimensional shape). இதன் அளவு ஜகத்ஸ்ரேணியின் கனஅளவாகும்- இதைப்பற்றி நாம் பின்னர் சர்ச்சை செய்யவிருக்கிறோம்.

லோகோ அகிட்டிமோ கலு அணாயிணிஹணோ சஹாவணிவ்வத்தோ |
ஜீவாஜீவேஹிம் புஃடோ ஸவ்வாகாஸவயவோ நிச்சோ ||

ஜின தர்மத்தை எடுத்துச் சொல்லும்போதே, அதன் மூலமாகவே பிற தர்மங்களின்-மற்ற மதத்தினரின் மாயையான-கற்பனையான நம்பிக்கைகளை கண்டிப்பது-தவறானவை என்று எடுத்துக் கூறுவது ஜின ஆச்சார்யர்களின் சிறப்பாகும். உலகம் இருக்கிறது என்று சொல்லும்போதே அதன் இருப்பு- அதன் அஸ்தித்துவம் உறுதியாகிறது மற்றும் சூன்யவாதம் ஒரு பிரமையாகும், வேறு எதுவும் இல்லை என்ற சூன்யவாத மதக்கொள்கை இங்கு நிராகரிக்கப்படுகிறது. உலகம் அக்கிரித்ரிம், யாராலும் செய்யப்பட்டதல்ல என்று சொல்லும் போதே, ஈஸ்வரனால் உலகம் படைக்கப்பட்டது என்ற கர்த்தாவாதக் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. இந்த உலகத்தை யாரும் பத்திரமாக வைத்திருக்கவில்லை என்று சொல்லும்போதே, இந்த உலகத்தை விசேஷ நாகப்பாம்பு (சேஷநாகம்) தன் தலையில் தாங்குகிறது என்ற கற்பனையானக் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. இந்த உலகம் அனாதிநிதன்-நித்தியம் என்று சொல்லும்போதே இந்த உலக அமைப்பை அழிப்பவர் இருக்கிறர் என்ற நம்பிக்கை கொண்டவரின் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. இந்த உலகம் உயிர் மற்றும் உயிரல்லாதன திரவியங்களால் நிரம்பி இருக்கிறது என்று சொல்லும் போதே ஆறு வகையான எல்லா திரவியங்களும் இருப்பது உறுதி செய்யப்படுகிறது, இந்த உலகம் மாயமயமானது என்று எண்ணுபவர்களின் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. லோகாகாசம் முழு ஆகாசத்தின் ஒரு சிறிய பகுதியே என்று சொல்லும்போதே அலோகாகாசம் இருப்பது உறுதியாகிறது. நித்யமானது-சாஸ்வதமானது என்று சொல்லும்போதே க்ஷணிகவாதக் கொள்கை நிராகரிக்கப்படுகிறது. ஆகாசத்தின் எவ்வளவு பிரதேசத்தில் தர்மத்திரவியம், அதர்மத்திரவியம் பரவி இருக்கிறதோ அங்கே உயிர்,

புத்கலம் மற்றும் காலாணுக்கள் காணப்படுகின்றன; அந்த ஆகாச க்ஷேத்திரத்தின் பகுதியே உலகம் என்று சொல்லப்படுகிறது, எனென்றால் இங்குதான் ஆறு திரவியங்களும் காணப்படுகின்றன-இருக்கின்றன.

லோகாகாசத்தின் சித்திரத்தை நாம் காகிதத்தில் பார்ப்பதுபோல அது சமானமாக, flat-ஆக இல்லை. நாம் அதில் ஆசீர்வாதம் கொடுப்பதுபோல ஒரு கை இருப்பதையும், அதன்கீழ் "பரஸ்பரோபக்ரஹோ ஜீவானாம்" என்று எழுதி இருப்பதையும் பார்க்கிறோம். அப்படித்தான் லோகாகாசம் இருக்கிறதா என்ன?

லோகம் கனவடிவமாகும், முப்பரிமாணமாகும்-Three dimensional ஆகும். கிழக்கு-மேற்கு, வடக்கு-தேற்கு, மேல்-கீழ் என எல்லாப் பக்கமும் விரிந்த கனப்பரிமாணமாகும். அதன் உயரம் 14 ரஜ்ஜு, தெற்குப் பக்கம் எல்லா இடத்திலும் 7 ரஜ்ஜு, கிழக்கு-மேற்கில் அதன் அளவு கூடுதலும் குறைவாகவும் இருக்கிறது. கீழ் அகலம் 7 ரஜ்ஜு, மேலே 7 ரஜ்ஜு உயரம் சென்றதும் மத்தியில் 1 ரஜ்ஜு, மேலும் மேலே 3½ ரஜ்ஜு உயரம் சென்றதும் அகலம் 5 ரஜ்ஜு, மறுபடி மேலே 3½ ரஜ்ஜு உயரம் சென்றதும் உச்சியில் 1 ரஜ்ஜு என இருக்கிறது.

கிழக்கு-மேற்கில் இந்த நான்கு இடங்களின் அளவுகளின் சாராசரி-average (7+1+5+1)/4 =14/4 = 7/2 ரஜ்ஜு. இந்த முப்பரிமாணத்தின் அதாவது நீள, அகல, உயரத்தின் கனஅளவு கண்டுபிடித்தால் நமக்கு லோகாகாசத்தின் கனஅளவு கிடைக்கும். அதாவது 14X(7/2)X7 ரஜ்ஜு, அதாவது 7 ரஜ்ஜு X 7 ரஜ்ஜு X 7 ரஜ்ஜு = 343 கஃனரஜ்ஜு. 7 ரஜ்ஜுவை ஜகத்ஸ்ரேணி என்றும் லோகத்தை ஜகத்கஃன் என்றும் சொல்கின்றனர்.

உங்களுக்கு ரஜ்ஜு என்ற அளவை (measuring unit) எவ்வளவு நீளம் கொண்டது என்பது ஒரு கேள்வியாக இருக்கிறதா? ஒரு ரஜ்ஜு அசங்க்யாத யோஜனைகள் கொண்டதாகும். ஒரு யோஜனை என்பது பொதுவாக 4 கோச அளவாகும். ஆனால் இங்கு லோகத்தின் அளவு மஹாயோஜனையில் கணக்கிடப்படுவதால் அது பொதுயோஜனையை விட 500 மடங்கு பெரியதாகும், அதாவது 2000 கோசம் ஆகும், அதாவது நமக்கு புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் சுமார் 4,545.45 மைல்கள் கொண்டது ஒரு மஹாயோஜனை யாகும்.

இந்த காலத்தில் இராக்கெட்டுகள் விடப்படுகிண்றனவே அவைகளின் வேகம் அல்லது சூரியன் இருக்கும் தூரம் ஆகியவை ஒளிக்கற்றையின் வேகத்தை வைத்து கணக்கிடப்படுகிறது. எப்படியென்றால் ஒளிக்கற்றை எட்டு நிமிடங்களில் செல்லும் தூரத்தில் நாம் இருக்கும் பூமியிலிருந்து சூரியன் இருக்கிறது என்று சொல்லுவதுபோல என அறியவும். ஆனால் திரிலோகசாரத்தில் சூரியன் இருக்கும் தூரம் 800 யோஜனை என்று

சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ரஜ்ஜு ஜகத்ஸ்ரேணின் ஏழில் ஒரு பாகம் ஆகும் ஏனென்றால் 7 ரஜ்ஜுவை ஒரு ஜகத்ஸ்ரேணி என்று சொல்லுகின்றனர். யாருக்கு கணிதத்தில் ருசி இருக்கிறதோ அவர்களுக்காக இதன் அளவுகள் எப்படி இருக்கிறது என்று ஆகமங்களில் விவரிக்கப் பட்டிருக்கிறதோ அவ்வாறே கீழே கொடுத்திருக்கிறேன். இதை கவனமாக வாசித்துப் புரிந்து கொள்ள முயலுங்கள்!

அத்தாபல்யத்தின் அர்த்தச்சேத்தை அசங்க்யாதத்தின் ஒருபாக முறை கனாங்குலத்தை எழுதி அவைகளை பெருக்கினால் வருவது ஜகத்ஸ்ரேணியின் அளவாகும். ஏதாவது ஒரு எண்ணிக்கையை எத்தனைமுறை இரண்டால் வகுக்க முடியுமோ அதை அந்த எண்ணிக்கையின் 'அர்த்தச்சேத்' என்று சொல்கின்றனர். உதாரணமாக 16 என்ற எண்ணின் அர்தச்சேத் 4 ஆகும். [அதாவது 16-ஐ நான்கு முறை 2-ஆல் வகுக்க முடியும். இங்கு 'அங்கசந்துருஷ்டி' என்றால் புரிந்து கொள்ளக் கடினமான கணிதத்தை, நாம் சுலபமாக புரிந்து கொள்ள, நாமே ஒரு எண்ணை கற்பனை செய்துகொண்டு அதை வைத்து கணக்கிட்டு விளக்கும்முறை என்று புரிந்து கொள்ள வேண்டும்] நாம் பல்யத்தை 16 என்று கற்பனை செய்து கொண்டால் அதை அர்தச்சேத் முறை அதாவது 4 தடவை பல்யத்தை எழுதி, அவைகளை பெருக்கினால் வரும் தொகை சூச்யாங்குலம் அதாவது அங்குலம் என்ற 'அளவை' வருகிறது. 16X16X16X16=65,536 வருகிறது, இதை 'பண்ணட்டி' என்று சொல்கின்றனர். அங்குலத்தின் முப்பரிணாமத்தை கனாங்குலம் என்கிறோம். அதனால் பண்ணட்டி-யின் கனத்தை-முப்பரிமானத்தை கனாங்குலம் என்று சொல்கின்றனர். பல்யத்தின்(16-ன்) அர்த்தச்சேத்தை அசங்க்யாதத்தில் ஒரு பாகம் என்று சொல்கின்றனர். இத்தனை தடவை கனபண்ணட்டியை எழுதி அவைகளை பெருக்கினால் கனபண்ணட்டி x கனபண்ணட்டி வரும். நாம் பல்யத்தை 16 என்று எடுத்துக் கொண்டால் அப்போது அது ஜகத்ஸ்ரேணியின் அளவாகிறது. யதார்த்தத்தில் பல்யம் மத்யம அசங்க்யாதாஅசங்க்யாதத்தின் ஒரு பிரிவாகும். ஜகத்ஸ்ரேணி என்றால் 7 ரஜ்ஜு, இதை 7-ஆல் வகுக்க 1 ரஜ்ஜுவின் அளவு வருகிறது. உண்மையில் இது எவ்வளவு மிகப்பெரிய அளவை-unit of measurement என்பதை சிந்தனை செய்து பாருங்கள். உண்மையில்

பல்யம் x பல்யம் x .... (பல்யத்தை அர்த்தசேத் முறை எழுதி பெருக்கினால் வருவது) = ஒரு சூச்சாங்குலம்.
சூச்சாங்குலம் x சூச்சாங்குலம் x சூச்சாங்குலம் = ஒரு கனாங்குலம்.
கனாங்குலம் x கனாங்குலம் x கனாங்குலம்.... (பல்யத்தின் அர்த்தசேத்-ததின் அசங்க்யாதத்தில் ஒரு பாக தடவை பெருக்கினால் வருவது) = ஜகத்ஸ்ரேணி.
ஜகத்ஸ்ரேணி / 7 =1 ரஜ்ஜு.

இந்த உலகம் ஊர்த்தவலோகம், மத்யலோகம் அதோலோகம் என மூன்று பாகங்களாக இருக்கிறது, இதை நாம் மூவுலகம்-திரிபுவனம்-திரிலோகம் என்ற பெயரால் தெரிந்து வைத்திருக்கிறோம். கிழக்கு-மேற்கில் எங்கு மத்தியில் 1 ரஜ்ஜு விஸ்தீரணம் இருக்கிறதோ அங்கிருந்து கீழே 7 ரஜ்ஜு அதோலோகமாகும், மேலே 7 ரஜ்ஜு ஊர்த்தவலோகமாகும். இடையில் கிழக்கு-மேற்காக 1 ரஜ்ஜுவும், தெற்கு-வடக்காக 7 ரஜ்ஜுவும் மத்யலோகமாகும். இதன் உயரம் 1,00,040 யோஜனையாகும், அதாவது சுதர்சனமேருவின் உயர அளவாகும்-பூமிக்கு அடியில் 1,000 யோஜனையும், மேலே 99,000 யோஜனையும் அதற்கும்மேலே 40 யோஜனை சூலிகா(சிகரம்)வுமாக சுதர்சனமேரு பர்வதம் (மலை) அமைந்திருக்கிறது.

மேருமலையின் உச்சியிலிருந்து மேலே 99,040 யோஜனை குறைந்த 7 ரஜ்ஜு உயரம் கொண்டது ஊர்த்தவ லோகமாகும், மற்றும் 1,000 யோஜனை குறைந்த 7 ரஜ்ஜு கீழே ஆழம் கொண்டது அதோலோகமாகும். 343 கனரஜ்ஜு பிரமாணம் கொண்ட லோகாகாசத்தின் அசங்க்யாத பிரதேசங்களை லோகபிரமாண அசங்க்யாயதம் என்று சொல்கின்றனர். அசங்க்யாதம் கூட அசங்க்யாத விதமாக இருக்கிறது. ஆவளி, பல்யம், அங்குலம், ஜகத்ஸ்ரேணி முதலியவைகள் எல்லாம் அசங்க்யாதத்தின் பிரிவுகளே யாகும். எப்படி லக்ஷாதிபதிக்கு லட்சக் கணக்கான பிரிவுகள் இருக்கிறதோ அதுபோல என அறியவும். ஒரு லட்ச ரூபாய் யாரிடம் இருக்கிறதோ அவர் லட்சாதிபதி என்று சொல்லப்படுகிறார், இப்போது அவர் ஒவ்வொரு பைசாவாக அதிகப்படுத்திக் கொண்டே போனாலும் அவரை லட்சாதிபதி என்றே சொல்கிறோம். 99 லக்ஷம், 99 ஆயிரம், தொன்நூற்று 99 ரூபாய் 99 பைசா வரை உள்ள எல்லோரும் லட்சாதிபதிகளே! இவர்கள் எல்லாம் லட்சாதிபதி என்றே சொல்லப்படுகிறார்கள் அல்லவா, அதுபோலவே அசங்க்யாத அசங்க்யாதங்களில் ஒன்றே லோகப்பிரமாண அசங்க்யாதம் என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு உயிர்பொருள்(ஜீவத்திரவியம்) கூட அசங்க்யாத பிரதேசங்கள் கொண்டதாக இருக்கிறது. எவ்வளவு அசங்க்யாதம்? ஒரு லோகபிரமாண அசங்க்யாத பிரதேசம் கொண்டதாக இருக்கிறது. ஒவ்வொரு உயிரின் பிரதேசமும் லோகபிரமாண அசங்க்யாத பிரதேசமாக இருக்கிறது, அப்படிப்பட்ட அனந்த உயிர்கள் இந்த ஒரே லோகாகாசத்தில் இருக்கின்றன. இந்த எல்லா உயிர்களும் சுருங்கி-விரியும் (சங்க்கோச-விஸ்தார) சக்தி கொண்டவைகளாக இருக்கும் காரணத்தாலும் மேலும் ஏகக்ஷேத்ராவஹாகன அளவு (அதுஅது அதனதன் இட அளவிலேயே) பரவி இருக்கும் காரணத்தாலும், அனந்த உயிர்கள் இந்த ஒரு உலகத்திலேயே இருக்கின்றன.

இந்த உலக அளவான 343 கனரஜ்ஜு முழுவதும் பரவி இருக்கும் உயிர் ஏதாவது இருக்கிறதா என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? ஆம்!

கேவலி சமுத்காதம் செய்யும் சமயத்தில் லோகப்பிரமாண சமுத்காத அவஸ்தையில் இந்த உலகளவு பரவி முழுவதுமாக விரிந்திருக்கும் நிலை எப்போது நிகழ்கிறதோ அப்போது அந்த உயிரின் எல்லா பிரதேசமும் முழு உலகத்திலும் விரிந்து பரவிவிடுகிறது-343 கனரஜ்ஜு அளவாகி விடுகிறது.

உயிரைத்தவிர இந்த உலகில் வேறு ஏதாவது இருக்கிறதா? அனந்தானந்த புத்கலங்கள் கூட இருக்கின்றன. எத்தனை உயிர்கள் இருக்கின்றனவோ அதைப்போல அனந்த மடங்கு புத்கல திரவியம் இந்த உலகில் இருக்கின்றன, ஆனால் உலகுக்கு வெளியில் இல்லை. புத்கல பரமாணுக்கள் அனந்தமாகும், இரண்டு பரமாணுக்களின் எண்ணிக்கை அனந்தமாகும், மூன்று பரமாணுக்களின் எண்ணிக்கை அனந்தமாகும், இவ்வாறு முறையாக பெருகிக்கொண்டே சங்க்யாத, அசங்க்யாத, அனந்த பரமாணுக்களின் ஸ்கந்தம்(பல பரமாணுக்கள் அடங்கிய ஒரே பிண்டம் ஸ்கந்தம் எனப்படுகிறது) உலகத்தில் அனந்தானந்த அளவில் காணப்படுகின்றன. லோகாகாசத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் இப்படிப்பட்ட அனந்த ஸ்கந்தங்கள் ஏகக்ஷேத்ராவஹாக வடிவில் இருக்கின்றன. முழு உலகளவு வடிவமுடைய, முழு உலகத்திலும்-லோகாகாசத்திலும் பரவியுள்ள, அனந்தானந்த பரமாணுக்கள் கொண்ட மஹாஸ்கந்தம் என்ற பெயர்கொண்ட ஒரு ஸ்கந்தமும் இருக்கிறது. இந்த மஹாஸ்கந்தத்திலேயே எல்லா உயிர்களும் இருக்கின்றன-எல்லா பரமாணுக்களும், எல்லா ஸ்கந்தங்களும் கூட இருக்கின்றன. ஆறு திரவியங்களும் ஒன்று மற்றொன்றுக்கு இடம் கொடுப்பவைகளாக இருக்கின்றன, ஆனாலும்கூட ஒவ்வொரு திரவியமும் அதனதன் இருப்பில்-சத்தாவில் இருக்கின்றன.

இந்த லோகாகாச அளவே கொண்ட ஒரு முழுமையான தர்மத்திரவியமும், ஒரு அதர்மத்திரவியமும் இருக்கிறது. லோகாகாச பிரதேசம் என்னவோ இருக்கிறது, அதற்கு வெளியே எல்லா திசைகளிலும் அந்தானந்தப் பிரதேச அளவு விரிந்து கிடக்கும் ஆகாசம் இருக்கிறது. அந்தப் பகுதியை நாம் அலோகாகாசம் என்று சொல்கிறோம். அங்கு வேறு எந்த திரவியமும் காணப்படவில்லை. லோகாகாசத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு-ஒரு காலதிரவியம் நிலைகொண்டுள்ளது-பதிந்துள்ளது, ஒரு பிரதேசமே உடைய அசங்க்யாத கால திரவியங்கள் இருக்கின்றன. உலகத்தின் பிரதேசம் எவ்வளவோ அவ்வளவு காலதிரவிங்கள் இருக்கின்றன. ஆகையால் கால திரவியங்களின் எண்ணிக்கை லோக அளவு-லோகப்பிரமாண அசங்க்யாதமாகும்.

இந்த உலகத்தின் வடிவம் மாற்றமடையக்கூடியதா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அனாதி காலமாக உலகத்தின் வடிவம் எப்படி இருந்ததோ அப்படியேதான் இப்போதும் இருக்கிறது. அப்படியென்றால் உலகத்தில் எந்த மாற்றமும் நிகழ்வதிலையா? என்ற சந்தேகம்

வருகிறதல்லவா. மாற்றங்கள் நிகழ்கின்றன! ஏனென்றால் ஆறு திரவியங்களின் சமூகத்தால் இந்த உலகம் அமைந்திருக்கிறது. எவ்வாறு திரவியங்கள் நித்யமோ அவ்வாறே உலகமும் நித்யமாகும், அதேபோல எவ்வாறு திரவியங்கள் பரிணமிக்கின்றனவோ, அதேபோல உலகமும் பரிணமிக்கிறது. அதாவது உலகம் என்று சொன்னதுமே ஆறு திரவியங்கள் என்று புரிந்து கொள்ளவேண்டும். இருந்தபோதிலும், இங்கு நாம் பூகோள வடிவ அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து சர்ச்சை செய்யவிருக்கிறோம்.

உலகம் ஊர்த்தவலோகம்-மேல்உலகம், மத்யலோகம்-நடுஉலகம், அதோலோகம்-கீழ்உலகம் என மூன்று பிரிவுகளாக இருக்கிறது. நீங்கள் 'திரஸநாளி' என்ற சொல்லை கேட்டிருப்பீர்கள். இதை திரஸநாடி என்றும் சொல்கின்றனர். திரஸநாளி என்றால் என்ன? எங்கு திரஸ உயிர்கள் இருக்கின்றனவோ அதாவது எங்கு திரஸ உயிர்கள் வாழ்கின்றனவோ அந்த பகுதி உலகமே திரஸநாளி யாகும். அனந்த உயிர்கள் உலகம் முழுவதிலும் இருக்கின்றன, ஆனால் திரஸ உயிர்கள் அதாவது 2, 3, 4, மற்றும் மனமுடைய/ மனமில்லாத 5 இந்திரியங்களை-புலன்களைப் பெற்றிருக்கின்ற உயிர்கள் எங்கு காணப்படுகின்றனவோ அந்த பகுதியை மட்டும் திரஸநாளி என்று சொல்கின்றனர். திரஸம் என்றால் என்ன? அசைவு மற்றும் இடம் பெயரும் (ஹலன்-சலன்) உயிர்களைத்தான் திரஸ உயிர்கள் என்று சொல்கிறார்களா? இல்லை, திரஸநாமகர்ம உதயம் எந்த உயிர்களிடம் காணப்படுகிறதோ அந்த உயிர்களை திரஸ உயிர்கள் என்று சொல்கின்றனர்.

ஸ்தாவரங்கள்-நிலைஉயிர்கள் அதாவது ஐந்து வகையான ஏகேந்திரிய உயிர்கள்-ஒரு புலன் கொண்ட உயிர்கள் அதாவது மண்உடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி மற்றும் வனஸ்பதியுடலி-தாவர உடலி ஆகியவற்றை ஸ்தாவர உயிர்கள்(ஸ்தாவர நாமகர்ம உதயம் கொண்ட உயிர்கள்) என்பர். இவைகள் எல்லாம் ஒரு பொறி-ஒரு இந்திரியம்-ஒரு புலன் மட்டுமே உடையன. நிலை உயிர்கள் அதாவது ஏகேந்திரிய உயிர்கள் முழு உலகின் 343 கனரஜ்ஜுவிலும் இருக்கின்றன-ஒரு பிரதேசம் கூட விடாமல் எல்லா இடத்திலும் நிரம்பியுள்ளன, ஆனால் திரஸ உயிர்கள் திரஸநாளியில் மட்டுமே இருக்கின்றன. இப்போது திரஸநாளி எங்குள்ளது மற்றும் எந்த வடிவில் இருக்கிறது என்று பார்க்கலாம்.

திரஸநாளி 14 ரஜ்ஜு உயரமுடையது, லோகாகாசத்தின் மத்தியில்-நட்டநடுவில், மேல்பாகத்திலிருந்து கீழ்பாகம்வரை 14 ரஜ்ஜு அளவு கொண்டதாக இருக்கிறது. லோகாகாசத்தின் மேலிருந்து பார்க்கும்போது மத்தியில்-நடுவில் கிழக்கு-மேற்காக ஒரு ரஜ்ஜு அளவும், வடக்கு-தெற்காக ஒரு ரஜ்ஜு அளவும் நான்கு பக்கங்கள் கொண்ட சதுர வடிவில் இருக்கிறது. இதில்தான் திரஸ உயிர்கள் அதாவது இரண்டு இந்திரியம் முதலான உயிர்கள் வாழ்கின்றன. இங்கு ஒரு இந்திரிய உயிர்களும் வாழ்கின்றன. ஒரு இந்திரிய

உயிர்கள் என்னவோ முழு உலகத்திலும் வாழ்கின்றன, உலகத்தில் அதனுடைய இராஜ்யமே நடக்கிறது.

தேவர்கள் எங்கு வாழ்கிறார்கள்? என்ற கேள்வி நமக்கு எழுகிறது. மேல் உலகில் வாழ்கிறார்கள் என்றுதான் நாம் எண்ணுகிறோம். என்ன, அவர்கள் மேல் உலகத்தில் மட்டுமா வாழ்கிறார்கள்? தேவர்கள் மேல்உலகம், நடுஉலகம், கீழ்உலகம் மூன்றிலுமே வாழ்கிறார்கள். கீழ்உலகில் பவனவாசி மற்றும் வியந்தரர்கள் வாழ்கின்றனர். நடுஉலகில் தீப சமுத்திரங்களில் சில வியந்தரர்களின் வசிக்குமிடமும் இருக்கின்றன. ஜோதிஷ்க தேவர்கள் வாழும் விமானங்கள்கூட நடுஉலகில்தான் இருக்கின்றன. மேல்உலகில் வைமானிக தேவர்கள் வசிக்கும் விமானங்கள் இருக்கின்றன. ஆகையால் தேவர்கள் மூவுலகிலுமே வசிக்கின்றனர்.

நாரகிகள் எங்கே வாழ்கிறார்கள்? நாரகிகள் கீழ்உலகில் வாழ்கிறார்கள். திரியஞ்ச(விலங்குகதி) உயிர்கள் முழு உலகத்திலும் வசிக்கின்றன, ஏனெனில் ஒருபொறி உயிர்கள் எல்லாம் திரியஞ்ச உயிர்களிலேயே அடங்கும். இருப்பினும் விகலேந்திரிய திரியஞ்ச உயிர்கள் எங்கு வசிக்கின்றன? என்ற கேள்வி நமக்கு உடன் எழவே செய்கிறது. அவைகள் எல்லாம் நடு உலகின் கர்ம பூமிகளில் மட்டுமே வசிக்கின்றன, நடு உலகில் எல்லா இடங்களிலும் அவ்வுயிர்கள் வசிப்பதில்லை. இரண்டரை தீபங்களில் கர்மபூமிகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் விகலேந்திரியங்கள் வசிக்கின்றன. மேலும் கடைசி சுயம்புரமண சமுத்திரத்திலும், சுயம்புரமண தீபத்தின் பரபாகம் என்று சொல்லபடுகிற மூலைப்பகுதிகளிலும் கூட விகலேந்திரியங்கள் வசிக்கின்றன. இவைகளைப்பற்றிய முழுமையான சர்ச்சையை நாம் பின்னர் செய்யவிருக்கிறோம். இப்போது நாம் இருக்குமிடம் எங்கே இருக்கிறது? என்று பார்க்கலாம். மனிதர்கள் இரண்டரை தீபத்தில் வாழ்கின்றனர். அது 45,00,000 யோஜனை விஸ்தீரணமுடைய வட்டவடிவம் கொண்டதாகும்-இது நடுஉலகின் நட்டநடு பகுதியில் இருக்கிறது.

நான்கு கதிகளின் நோக்கில் பார்க்கும்போது மனிதர்கள் வாழுமிடமே மிகவும் சிறியதாக இருக்கிறது. மனிதர்களுக்கு எல்லாம் குறைந்ததாகவே-அல்பமானதாகவே இருக்கின்றன. மனிதர்களின் எண்ணிக்கை, அவர்களின் ஆயுள், அவர்கள் வாழுமிடம், தொடர்ந்து மனிதப்பிறவி கிடைக்கும் காலம் ஆகியவைகள் எல்லாம் மிகவும் அல்பமானதாகவே இருக்கின்றன. மனிதப் பிறவி கிடைக்க வேண்டும் என்ற பாஃவம்-உணர்வு வருதல்கூட மிகவும் துர்லபமாக-கிடைப்தற்கரியதாகவே இருக்கிறது. மனிதப் பிறவி திரவிய, க்ஷேத்திர, கால, பாஃவ நோக்கில் மிகமிக அரிய ஒன்றாக இருக்கிறது என்று பண்டிட். தோடரமல்ஜீ கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட மிகவும் அரிதான மனிதப்பிறவி கிடைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

ஹே நண்பரே! நாம் இப்போதே மனிதர்கள் தான்!! இதற்காக நாம் எதுவும் செய்ய வேண்டியதில்லை, அப்படிப்பட்ட கிடைப்பதற்கு மிகவும் அரிய மனிதப்பிறவி நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது, அதை நாம் எல்லாவற்றையும்விட அதிகமாக நல்ல உபயோகம் செய்யவேண்டும்- அதிலிருந்து அதிக லாபம் பெற நல்முயற்சி மேற்கொள்ள வேண்டும். சாஸ்திரப் பயிற்சியின் முக்கியத்துவம் என்னவோ இங்குதான் இருக்கிறது.

பாருங்கள்! இனி மேலே நாம் அவசர்ப்பிணி, உத்சர்ப்பிணி (இறங்குகாலம், ஏறுகாலம்) பற்றி பேசவிருக்கிறோம். அசங்க்யாத அவசர்ப்பிணி, உத்சர்ப்பிணி காலங்கள் கழிந்தபிறகு ஒரு ஹுன்டாவசர்ப்பிணி காலம் வருகிறது, அது மிகவும் மோசமான காலமாகும், அதிலும் இப்போது நாம் வாழ்வது அப்படிப்பட்ட மோசமான ஹுன்டாவசர்ப்பிணி காலத்தின் ஐந்தாம் பகுதி-பஞ்சம காலமாகும். அப்படிப்பட்ட மோசமான காலத்தில் நமக்கு எல்லாவற்றைக்காட்டிலும் மிகவும் உயர்ந்த ஜினவாணி-மோக்ஷதர்மத்தை கற்பிக்கவல்ல சாஸ்திரங்கள் நமக்கு கிடைத்திருப்பதால் நாமெல்லாம் மிகவும் மஹாபாக்கியம் பெற்றவர்களே ஆவோம்! இந்த நிலையில் ஜினவாணியின் மூலம் லாபமடைந்தால்தான் உண்மையில் நாம் மிகவும் மஹாபாக்கியம் பெற்றவர்கள் என்று சொல்ல முடியும்! ஜினவாணியை பயிற்சி செய்வதின்மூலம் நமக்கு நல்லது செய்து கொண்டால்தான், நம்முடைய இந்த மனிதப்பிறவி உண்மையில் வெற்றி பெற்றதாக அமையும்.

இப்போது என்னுடைய கேள்வி என்னவென்றால் எப்படி இரண்டரை தீபத்திற்கு வெளியே எந்த மனிதரும் போகமுடியாதோ அதேபோலவே திரஸநாளிக்கு வெளியே எந்த திரஸ உயிராவது போகமுடியுமா அல்லது முடியாதா? என்பதேயாகும். ஆம், “கேவலி பகவான் சமுத்காதம் செய்கிறார், அப்போது அவருடைய ஆத்மப்பிரதேசம் முழு லோகாகாசத்திலும் பரவுகிறது” என்று நீங்கள் சொல்லலாம். அவ்வாறு சொல்வது மிகவும் சரியானதே. இவரைத்தவிர வேறு எந்த திரஸ உயிராவது வெளியில் செல்கிறதா?

திரஸநாளிக்கு வெளியில் மாரணாந்திக சமுத்காதம் செய்யும் திரஸ உயிரின் பிரதேசம் கூடச் செல்கிறது. மரணத்தை எதிர்கொள்ளும் எந்த திரஸ உயிர் மரணமடைந்து திரஸநாளிக்கு வெளியில் ஏகேந்திரிய பிறவியில் பிறக்க இருக்கிறதோ, அதனுடைய ஆத்மப் பிரதேசம் மூலசரீரத்தை விடாமல் பிறக்க இருக்கும் இடம்வரை அந்தர்முகூர்த்த காலம் பரவயிருக்கும்போது அதற்கு திரஸ ஆயுள் உதயத்திலிருக்கிறது. ஆகையால் திரஸநாளிக்கு வெளியேயும் திரஸ உயிர் காணப்படுகிறது என்று சொல்லமுடியும்.

இப்போது திரஸநாளிக்கு வெளியில் ஏகேந்திரிய உயிர் மரணமடைந்து திரச பிறவி எடுக்கும்முன்வரை - எதுவரை அது விக்ரக கதியில் திரஸநாளிக்கு வெளியில் இருந்தாலும் அதை திரஸ உயிர் என்றே சொல்கின்றனர்

ஏனென்றால் விக்ரகதியின் முதல் சமயத்திலேயே அதனுடைய திரஸ ஆயுளின் உதயம் துவங்கி விடுகிறது.

14 ரஜ்ஜு அளவு லோகத்தின் மத்தியில் திரஸநாளியின் சிகரத்தில்-உச்சியில், 45 லட்சம் யோஜனை விட்டம் கொண்ட சித்தசிலை இருக்கிறது. அங்கு சித்த பகவான்கள் எழுந்தருளி இருக்கின்றனர். அது எவ்வளவு உயரமும் அகலமும் கொண்டது, சித்த பகவான்கள் எதுவரை இருக்கின்றனர், சித்தசிலைக்கு உள்ளேயும், வெளியேயும் உயிர்கள் வாழ்கின்றனவா, இல்லையா என்பது பற்றி பின்னர் நாம் விவாதிக்கலாம்.

இவ்வாறு நாம் உலகின் மூன்று பாகங்களான மேல்உலகம், நடுஉலகம், கீழ்உலகம் மற்றும் திரஸநாளி என்று எதைச் சொல்கின்றனர் என்பது பற்றி பார்த்தோம். இப்போது நாம் விதேக க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள முதல் தீர்த்தங்கரரை வந்தனை செய்யலாம். அவருக்கு ஜெயம் உண்டாகட்டும் என்று சொல்லி முதல் அதிகாரத்தை முடிக்கலாம்.

சொல்லுங்கள், ஸ்ரீ சீமந்தர பகவானுக்கு ஜேய் !

2. எட்டு பூமிகள், மூன்று வாதவலையங்கள்

இந்த நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலில் மூன்று புவனங்களுக்கும் முகுடமணி என்று சொல்லப்பட்டது. இங்கு முகுடமணி என்று யாரை சொல்லப்பட்டது? சித்தர்களை அவ்வாறு சொல்லப்பட்டது. சித்தர்களை ஏன் அவ்வாறு சொல்லப்பட்டது? சித்த பகவான் மூவுலகுக்கும் தலைவன் ஆதலால் உலகின் மிக உயர்ந்த பகுதியில் அவர் அமர்ந்திருக்கிறார், அதனால் அவ்வாறு சொல்லப்பட்டது.

உலகத்தை நாம் புரிந்து கொள்வதற்காக கீழ் உலகம், நடு உலகம் மற்றும் மேல் உலகம் [அதோலோகம், மத்யலோகம் மற்றும் ஊர்த்தவலோகம்] என லோகாகாசம் மூன்று பகுதிகளாகப் பிரித்து சொல்லப்பட்டுள்ளது. ஆகாச திரவியம் இரண்டு பகுதிகளாக - இரண்டு துண்டுகளாக இல்லை, துண்டாகாத ஒரே முழுமையான ஆகாசமாகவே இருக்கிறது. நாம் புரிந்து கொள்வதற்காக மட்டுமே எங்கு வெறும் ஆகாசம் மட்டுமே காணப்படுகிறதோ அதை அலோகாகாசம் என்றும், ஆகாசத்தின் எவ்வளவு பகுதியில் மற்ற ஐந்து திரவியங்களும் காணப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஆகாசப் பகுதியின் மத்தியில், அதன் அனந்தத்தின் ஒரு பகுதியை, லோகாகாசம் என்றும் இரண்டு பகுதிகளாக சொல்லப்படுகிறது. அதேபோலவே, உலகமும் மூன்று துண்டுகளாக இல்லை, துண்டு பண்ண முடியாத ஒரே உலகமாகவே இருக்கிறது. உலகம் என்று சொன்னதும் அங்கு ஆறு திரவியங்களும் சேர்ந்து விடுகின்றன, ஆனால் லோகாகாசம் என்னவோ ஆகாச திரவியத்தின் பகுதியே யாகும். இங்கு நாம் உலகத்தைப் பற்றி சர்ச்சை செய்துகொண்டு இருக்கிறோம்.

முதல் பாடத்தில் நாம் என்ன படித்தோமோ அதிலிருந்து சில கேள்விகள் வந்திருக்கின்றன. அதில் ஒரு கேள்வி, உலகத்தின் மத்தியில் - center-ல் எட்டு பிரதேசங்கள் இருக்கின்றன என்று ஏன் சொல்லப்பட்டது? அதைப்பற்றி கொஞ்சம் விளக்கம் அளிக்கவும் என்று கேட்டுள்ளனர்.

உலகத்தைப் பாருங்கள், லோகாகாசம் ஆகாச திரவியத்தின் மத்தியில் இருக்கிறது. எது ஆகாசத் திரவியத்தின் மத்தியப்பகுதியோ, அதுவே லோகாகாசத்தின் மத்தியப்பகுதியுமாகும். ஆனால் இந்த மத்தியப்பகுதி ஒரே புள்ளியாக-ஒரே பிரதேசமாக இல்லை. எதாவது இரட்டைப்படை எண்ணுக்கு மத்தியம் ஒரு எண்ணாக இருப்பதில்லை, முழு எண்ணிக்கையில் சொல்ல வேண்டுமென்றால் இரண்டு எண்கள் மத்தியில் வரும். என் ஒரு கையில் ஐந்து விரல்கள் உள்ளன, இவைகளில் மத்தியில் எந்த விரல் இருக்கிறது என்று கேட்டால், நடு விரல் என்று சொல்வீர்கள். இப்போது இரண்டு கைகளையும் சேர்த்து, இவைகள் என் பத்து விரல்கள், இதில் நடுவில் இருக்கும் விரல் எது?

என்று கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்? இந்த இரண்டு கைகளின் கட்டை விரல்கள் நடுவில் இருப்பதாக சொல்வீர்கள், ஏனெனில் இப்போது விரல்களின் எண்ணிக்கை இரட்டை படையாக உள்ளது. காகிதத்தின் மேல்பரப்பில் நடுப்பகுதியை கண்டுபிடிக்க வேண்டுமென்றால் இரண்டு இரண்டு பக்கங்களிலிருந்தும் உள்நோக்கி வர நான்கு புள்ளிகள் நடுவில் இருக்கும். அதேபோல ஒரு கனசதுரத்தின் மத்திய பகுதி மூன்று ஜோடி பக்கங்களிலிருந்தும் உள்நோக்கி வருவோமானால் எட்டு புள்ளிகள் மத்தியில் இருக்கும்.

உலகம் கனபரிமாணமாகையால் - Three dimensional ஆகையால்- மூன்று ஜோடி பக்கங்கள் கொண்டதாகையால் அதன் மூன்று ஜோடிகளும் இரட்டைப்படையாக உள்ளன. உயரம் 14 ரஜ்ஜு வாகும். 7 ரஜ்ஜுவில் 7 என்ற எண்ணைப் பார்க்காதீர்கள் ஏனெனில் அது ஒரு ஜகத்ஸ்ரேணி யாகும், அதில்கூட இரண்டு கடைசி புள்ளிகள் உள்ளதால் அதுகூட இரட்டைப்படையாகும்-வர்க்க வடிவமாகும், வர்க்ப்பிரிவுகள் எல்லாம் இரட்டைப்படை எண்களாகவே இருக்கும். அதனால் உலகத்தை மேல் பக்கம், கீழ்பக்கம் பக்கவாட்டில் உள்ள பக்கங்கள் என பார்க்கும்போது இரண்டு-இரண்டு-இரண்டாக இருப்பதால் 2X2X2=8 பிரதேசங்கள் உலகத்தின் மத்தியப் பகுதியாக இருக்கிறது.

இந்த மத்திய பகுதி சுமேரு மலையின் அடிப்பகுதியில் காணப்படுகின்றன. திரஸநாளியின் நடுவில் அல்லது மத்திய லோகத்தின் ஜம்பூ தீபத்தின் மத்தியில் சுமேருமலை 1 லட்சம் 40 யோஜனை உயரம் கொண்டதாக இருக்கிறது. இதில் 1,000 யோஜனை பூமியில் அடித்தளமாக இருக்கிறது, அந்த அடித்தளத்தின் மத்தியப்பகுதியே உலகின் மத்தியப் பகுதியுமாகும். கேவலி சமுத்காத சமயத்தில் அந்த உயிரின் மத்திய பிரதேசமும்கூட உலகின் இந்த மத்திய பிரதேசத்துடன் சமமாக வந்துவிடுகிறது. அந்த கேவலி இரண்டரை தீபத்தில் எந்த பகுதியில் இருந்தாலும், பரதக்ஷேத்திரத்தில் சிகர்ஜீயில் இருந்தாலும், அல்லது விதேகக்ஷேத்திரத்திலோ அல்லது ஐராவத க்ஷேத்திரத்திலோ இருந்தாலும், அல்லது இரண்டரை தீபத்தில் எங்கிருந்து கேவலி சமுத்காதம் செய்தாலும் முழு உலகத்திலும் அதன் ஆத்ம பிரதேசம் விரிவடைகிறது. லோகாகாசத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்த உயிரின் ஒவ்வொரு பிரதேசமும் நிலைகொண்டு விடுகிறது. இந்த காரணத்தால் அந்த உயிரின் மத்திய பகுதியும், உலகின் மத்திய பகுதியிலேயே வந்தாக வேண்டியுள்ளது. இதுவே நீங்கள் கேட்ட கேள்விக்கு பதிலாகும்.

சாஸ்திரங்களில் எண்ணிக்கையே எடுத்துச் சொல்ல இவ்வாறு பல சொற்கள் உள்ளன, அவைகளை உபமாமான்-அளவைகள்-அளவீடுகள் என்று சொல்கின்றனர். எதை ஆதாரமாகக்கொண்டு அளவு செய்யப்படுகிறதோ அதையே “அளவை” என்று சொல்கின்றனர். உதாரணமாக ஆவலி, பல்யம்,

சாகர், அங்குல், கனாங்குல், ஜகத்ஸ்ரேணி, ஜகத்பிரதர், ஜகத்கன் எல்லாம் சாஸ்திரங்களில் காணப்படும் அளவைகளாகும். பல்யம் என்பது என்ன? பள்ளம்-குழியை உதாரணமாகக் கொண்டு அசங்க்கியாதம் என்ற எண்ணிக்கையை புரிய வைக்கின்றனர். ஒரு யோஜனை விட்டம்-அகலம் மற்றும் ஒரு யோஜனை உயரம் அதாவது ஆழம் கொண்ட தொட்டி-பள்ளம்-குழி ஒன்றை கற்பனை செய்யவும். அதில் உத்தம போகபூமியில் பிறந்த ஏழு நாட்களுக்குள் ஆன ஆட்டுக்குட்டியின் மேலும் துண்டு பண்ண முடியாத முடிநுனிகளால் அழுத்தமாக நிரப்பவும். இங்கு பரத க்ஷேத்திரத்தின் ஆட்டுக்குட்டியின் முடிநுனிகளால் அல்ல ஏனெனில், உத்தம போகபூமி ஆட்டுக்குட்டியின் முடிநுனியைப்போல 512 மடங்கு பெரியதாக பரத க்ஷேத்திரத்தின் ஆட்டுக்குட்டியின் முடிநுனிகள் இருக்கின்றன. ஒவ்வொரு 100 வருடங்களுக்கு பிறகு ஒவ்வொரு முடிநுனித் துண்டாக எடுக்கவும். அந்த குழி காலியாக எத்தனை சமயங்கள் ஆனதோ அதை ஒரு வியவஹார பல்யம் என்று சொல்கின்றனர். அதை அசங்க்யாத கோடி வருடங்களின் சமயங்களால் பெருக்கினால் வரும் எண்ணிக்கையை உத்தாரபல்யம் என்று சொல்கின்றனர். உத்தாரபல்யத்தால் தீப சமுத்திரங்களின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. உத்தாரபல்யத்தை அசங்க்யாத கோடி வருடங்களின் சமயங்களால் பெருக்கினால் வரும் எண்ணிக்கையை அத்தாபல்யம் என்று சொல்கின்றனர். அத்தாபல்யத்தால் கர்மங்களின் ஸ்திதி, தேவ, நாரகிகளின் ஆயுள் முதலியவை கணக்கிடப் படுகின்றன. அப்படிப்பட்ட10 கோடாகோடி அத்தாபல்யத்தை ஒரு அத்தாசாகர் என்று சொல்கின்றனர். அந்த 10 கோடாகோடி சாஹரை ஒரு அவசர்ப்பிணி மற்றும் அந்த அளவே ஒரு உத்சர்ப்பிணி என்றும் இரண்டும் சேர்ந்த காலத்தை கல்பகாலம் என்று சொல்கின்றனர். ஒரு கல்பகாலம் 20 கோடாகோடி சாஹர் காலமாகும்.

முழு உலகத்தின் இட அளவு-கனஅளவு எவ்வளவு என்பதை நாம் பார்த்தோம். மூன்று பக்கங்களின் நீளத்தை பெருக்குவதால் அது வருகிறது. நாம் யாரிடமாவது உங்களுடைய வீடு எவ்வளவு பெரியது என்று கேட்டால், அவர் squre-foot-ல் இத்தனை சதுர அடிகள் என்று சொல்லுவார். இங்கு நீளம், அகலம் ஆகிய இரண்டு பக்கள்களைப் பெருக்கி வீட்டின் அளவு சொல்லப் படுகிறது. இங்கு உயரத்தையும் கூட பெருக்கி கன அளவைக்கூட கொண்டு சொல்லப்படுகிறது.

இப்போது நாம் உலகின் மூன்று பாகங்களின் பக்க அளவுகளை பெருக்கி அவைகளின் கனஅளவு எவ்வளவு என்று பார்க்கலாம். மேல்உலகத்தின் உயரம் 7 ரஜ்ஜு, வடக்கு தெற்காக அகலம் 7 ரஜ்ஜு. ஆனால் கிழக்கு மேற்காக அகலம் சமமாக இல்லை. கீழே பகுதியின் அளவு 1 ரஜ்ஜுவாகவும், மேலே செல்லச்செல்ல அகலம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து 3.5 ரஜ்ஜு அளவு உயரம் சென்றதும் அங்கு அகலம் 5 ரஜ்ஜுவாகவும், பிறகு மேலே செல்லச்செல்ல அகலம் குறைந்து கொண்டேபோக கடைசியில் 1

ரஜ்ஜுவாகவும் இருக்கிறது. இதன் சராசரி அகலம் (5+1=6; 6/2=3) 3 ரஜ்ஜு வாகும். ஆக மேல் உலகின் நீள, அகல, உயரம் 7, 3(சராசரி), 7 ரஜ்ஜுவாக இருக்கின்றன. இந்த மூன்று பக்கங்களைப் பெருக்க 7X3X7=147 கனரஜ்ஜுவாக இருக்கிறது.

இதை நாம் வேறு விதமாகவும் கணக்கிடலாம். மேல் உலகின் பகுதியை மேலிருந்து கீழாகவும், மத்தியில் கிழக்கு மேற்காகவும் கோடு போட்டு நான்கு சம பகுதிகளாக பிரிக்கவும். எதிர் எதிர் பகுதிகளை திருப்பி மற்ற இரண்டு பகுதிகளுடன் சேர்க்க ஒரு கனசெவ்வக வடிவம் வரும். அதன் உயரம் 7 ரஜ்ஜு. அகலம் 2½+½ =3 ரஜ்ஜு. முன் இருந்து பின் 7 ரஜ்ஜு. இந்த மூன்று அளவுகளையும் பெருக்க 7 X 3 X 7=147 கனரஜ்ஜு வாகும்.

இப்போது கீழ்உலகத்தின் கனஅளவை கணக்கிடலாம். கீழே 7 ரஜ்ஜு, மேலே 1 ரஜ்ஜு. இதன் சராசரி (7+1=8; 8/2=4) 4 ரஜ்ஜு. உயரம் 7 ரஜ்ஜு. இந்த மூன்று பக்கங்களைப் பெருக்க 7X4X7=196 கனரஜ்ஜுவாக இருக்கிறது. முழுஉலகத்தின் கனளவு 147+196=343 கனரஜ்ஜு வாகும். மத்ய லோகத்தின் கனஅளவு 1 ரஜ்ஜு X 7 ரஜ்ஜு X 100,040 யோஜனை யாகும். மேருமலையின் அடி பாகத்திலிருந்து சிகரம்வரை அதன் உயரம் 1,00,040 யோஜனை யாகும். இதையே திர்யக் உலகம் என்றும் சொல்கின்றனர். இந்த பகுதி மேல் உலகத்தின் கீழ் பகுதியில் அடங்கிவிடுகிறது.

இப்போது நாம் முதல் படத்தைப் பார்த்து அதன் ஆதாரத்தில் உலகில் உள்ள எட்டு பூமிகளைப் பார்க்கலாம். ஏழு பூமிகள் கீழ் உலகத்திலும் ஒரு பூமி மேல் உலகத்திலும் இருக்கிறது. பூமி என்று சொன்னதுமே நம் மனதில் லௌகீக பூகோளம் பற்றி நாம் பள்ளியில் படித்தபோது கற்ற பந்து வடிவ கோளமே நினைவுக்கு வருகிறது.

ஜெயின் பூகோளத்தில் முதல் பூமி என்று எதைச் சொல்கின்றனர் என்பதைப் பற்றி இப்போது பார்க்கலாம்? எது லோகாகாசத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை அதாவது ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்தின் கடைசிவரை பரவியிருக்கிறதோ அது பூமி யாகும். கிழக்கிலிருந்து மேற்குவரை மற்றும் தெற்கிலிருந்து வடக்குவரை வாதவலையங்கள் போக லோகாகாசத்தின் கடைசிவரை பரவி இருக்கும் கிடைமட்ட சதுரப் பகுதியை பூமி என்று சொல்கின்றனர். நாம் இந்த பூமியின் மேல்பகுதியில் தான் வசிக்கிறோம். நாம் வசிக்கும் பகுதி கிழக்கு மேற்கில் 1 ரஜ்ஜு அகலமும், வடக்கு தெற்கில்(பக்க வாட்டில்) 7 ரஜ்ஜு நீளமும் கொண்டதாகவும் லோகாகாசத்தின் எல்லா முனைகளையும் தொட்டுக்கொண்டும் இருக்கிறது. இதன் தடிமன் பகுதியில் பவனவாசி மற்றும் வியந்தர தேவர்கள் வசிக்கின்றனர். முதல் நரகத்தின் பிலங்கள்கூட இதன் கீழ் தடிமன் பகுதியில் காணப்படுகின்றன.

இதுபோலவே ஒவ்வொரு ரஜ்ஜு இடைவெளியில் ஏழு பூமிகள் கீழ் உலகத்தில் இருக்கின்றன. மற்றும் ஈஷத் பிராக்பார் எனப்படும் எட்டாவது பூமி மேல் உலகில் அமைந்துள்ளது. இந்த எட்டாவது பூமியின் மத்தியில் சித்தசிலை இருக்கிறது. சித்தசிலை இந்த எட்டாவது பூமியின் ஒரு பகுதியாகும். இந்த சித்தசிலை 45,00,000 யோஜனை கொண்ட மனுஷ்ய ஷேத்திரத்தின் அளவு மிகச் சிறிய பகுதியாகும்.

படம்1-ஐ பார்க்கவும். அதில் கிழக்கு-மேற்காக அகலம் முதல் பூமியிலிருந்து கீழ்பூமிகள் பக்கம் செல்லச்செல்ல அதிகரித்துக் கொண்டே போகிறது. பக்க வாட்டில் பார்க்கும்போது எல்லா இடத்திலும் 7 ரஜ்ஜு அளவு சமமாவே இருக்கிறது. ஆனால் பூமிகளின் பருமன் கிரமமாக கீழே செல்லச்செல்ல குறைந்து கொண்டே போகிறது. அந்த பூமிகளின் பெயருடன் அதன் பருமன் இவ்வாறு இருக்கிறது.

1. இரத்தினப்பிரபா பூமி - 1,80,000 யோஜனை
2. சக்ராப்பிரபா பூமி - 32,000 யோஜனை
3. வாலுகாப்பிரபா பூமி - 28,000 யோஜனை
4. பங்கப்பிரபா பூமி - 24,000 யோஜனை
5. தூமப்பிரபா பூமி - 20,000 யோஜனை
6. தமபிரபா பூமி - 16,000 யோஜனை
7. மஹாதமப்பிரபா பூமி - 8,000 யோஜனை
8. ஈஷத்பிராக்பார் பூமி - 8 யோஜனை

எட்டாவது ஈஷத்பிராக்பார் பூமி ஊர்த்வலோகத்தில் உலகின் உச்சியில் இருக்கிறது. இதன் பருமன் 8 யோஜனை யாகும். கிழக்கு-மேற்காக 1 ரஜ்ஜு. பக்கவாட்டில் 7 ரஜ்ஜு நீளம் கொண்டதாக இருக்கிறது. இதன் மத்தியில் சித்தசிலை 8 யோஜனை தடிமன் கொண்டதாக இருக்கிறது. 45,00,000 யோஜனை விட்டம் கொண்டதாக இருக்கிறது, முனைப்பகுதி ஈயின் இறக்கைபோல மெல்லியதாக ஆகிவிடுகிறது. நாம் அதை பிறைநிலா போல இருக்கிறது என்று சொல்கிறோம். கொஞ்சம் யோசியுங்கள், 1 யோஜனையை 1 மில்லிமீட்டர் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது 45,00,000 யோஜனை 45,00,000 மில்லிமீட்டர் ஆக இருக்கும். அதாவது 4.5 கிலோமீட்டர் விஸ்தீரணம் கொண்டதாக இருக்கும். அதன் வளைவு பந்துவடிவில் இருந்தபோதிலும் கிட்டத்தட்ட ஒரு கோடுபோல கீழே காட்டியது போல இருக்கும்.

இந்த சித்தசிலையில் எத்தனை சித்தர்கள் காணப்படுகின்றனர்? அவர்கள் எங்கிருக்கிறார்கள்? இதற்கு பதில் சித்தசிலையில் எந்த சித்தரும் காணப்படுவதில்லை. சித்தசிலை என்பது பூமியின் அமைப்பாகும். சித்தசிலைக்கு மேல் மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. சித்த பகவான்கள் கடைசி வாதவலையத்தில் காணப்படுகின்றனர். சித்தசிலைக்கு செல்லவேண்டுமென்று விரும்பினால் மண்ணுடலி உயிராகத்தான் பிறக்க வேண்டும். அங்கு ஐந்துவகை ஒருபொறி உயிர்களே வாழ்கின்றன. அதுபோல நாம் அங்கு பலமுறை சென்று திரும்பியவர்களாக இருக்கிறோம். சித்தசிலையின் நிறம் திரிலோகசாரத்தில் 557 மற்றும் 558 ஆவது காதைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இது வெள்ளை நிறத்தில் இருக்கிறது. இதன் மேல்தளம் சமமாக இருக்கிறது, இதன் கீழ்பக்கம் குடைபோல கீழ்பக்கம் வளைந்து, கிண்ணம் போல இருக்கிறது. இதன் மேலும்கீழும் உள்ள வாதவலையங்களைப்பற்றி நாம் பின்னர் பார்க்கலாம்.

அதோலோகத்தை நோக்கும்போது ஒரு ரஜ்ஜுவில் தொடங்கி கீழே 7 ரஜ்ஜுவரை அதன் அகலம் கிரமமாக அதிகரித்துக் கொண்டே போகிறது. இதில் ஒவ்வொரு ரஜ்ஜு இடைவெளியில் ஏழு பூமிகள் உள்ளன. முதல் பூமியிலிருந்து ஒரு ரஜ்ஜு கீழே சென்றதும் இரண்டாவது பூமி இருக்கிறது, இரண்டு ரஜ்ஜு கீழே சென்றதும் மூன்றாவது பூமி இருக்கிறது, இதேபோல ஆறு ரஜ்ஜு கீழே சென்றதும் ஏழாவது பூமி இருக்கிறது. எல்லா பூமிகளும் பக்கவாட்டில் 7 ரஜ்ஜு நீளம் கொண்டுள்ளது. கிழக்கு மேற்காக அதன் அகலம் அதிகமாகிக்கொண்டே போகிறது. முதல் பூமியின் அகலம் 1 ரஜ்ஜு வாகும். கீழ்உலகத்தின் கீழ்பகுதி 7 ரஜ்ஜு வாகவும் மேல்பகுதி 1 ரஜ்ஜுவாகவும் இருக்கிறது. அதாவது அது ஆறு ரஜ்ஜு அதிகமாகும். அதாவது ஒவ்வொரு ரஜ்ஜு கீழே செல்லச்செல்ல ஒவ்வொரு பூமியும் 6/7 ரஜ்ஜு என்ற விகிதத்தில் அதிகரித்துக்கொண்டே போக, ஏழாவது பூமி (6/7)7=6 ரஜ்ஜு அளவாக இருக்கிறது. பூமிகள்கூட ஒவ்வொரு ரஜ்ஜுவில் அதாவது ஒவ்வொரு பூமியும் 6/7 ரஜ்ஜு அதிகரித்து 7 பூமிகள் 6 ரஜ்ஜு வரை இருக்கின்றன.

ஒவ்வொரு பூமியும் எவ்வளவு கீழே இருக்கிறது மற்றும் கிழக்கு மேற்காக அதன் அகலம் எவ்வளவு என்பதை கீழே கொடுத்துள்ளவாறு புரிந்து கொள்ளலாம்.

முதல் பூமியின் அகலம் 1 ரஜ்ஜு.
இரண்டாவது பூமி 1 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 13/7 ரஜ்ஜு அதாவது 1 + 6/7 ரஜ்ஜு.
மூன்றாவது பூமி 2 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 19/7 ரஜ்ஜு அதாவது 2 + 5/7 ரஜ்ஜு.

நான்காவது பூமி 3 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 25/7 ரஜ்ஜு அதாவது 3 + 4/7 ரஜ்ஜு.
ஐந்தாவது பூமி 4 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 31/7 ரஜ்ஜு அதாவது 4 + 3/7 ரஜ்ஜு.
ஆறாவது பூமி 5 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 37/7 ரஜ்ஜு அதாவது 5 + 2/7 ரஜ்ஜு.
ஏழாவது பூமி 6 ரஜ்ஜு கீழே இருக்கிறது, அதன் அகலம் 43/7 ரஜ்ஜு அதாவது 6 + 1/7 ரஜ்ஜு.

முதல் படத்தை நீங்கள் பாருங்கள். ஒவ்வொரு முறையும் நாம் 6/7 கூட்டி அதன் அளவை எவ்வளவு என்று கண்டுபிடித்தோம். இவ்வாறு கிழக்கு மேற்காக அகலம் கூடிக்கொண்டே போகிறது. ஆனால் அதன் பருமன் குறைந்துகொண்டே போகிறது. மேல்பூமி அதிக பருமன் கொண்டதாக இருக்கிறது. கீழே போகப்போக மெலிந்துகொண்டே போகிறது. அதன் பருமனை நாம் முன்னரே பார்த்தோம். இப்போது அதை நாம் படத்தில் கூட பார்க்கிறோம். இந்த பூமிகளின் பெயர்களை முன்னர் பார்த்தோம், இதற்கு வேறு பெயர்களும் உள்ளன. அப்பெயர்களாவன-1.தர்ம, 2.வன்ஷ, 3.மேக, 4.அஞ்சனா, 5.அரிஷ்ட, 6.மகவி, 7.மாகவி.

இப்போது முதல் பூமியில் என்ன இருக்கிறது என்று பார்க்கலாம். இந்த பூமியின் மேல்தான் நாம் வாழ்கிறோம். அசங்க்யாத தீப சமுத்திரங்கள்கூட இந்த பூமியின் மேல் இருக்கின்றன. நாம் முதல் பூமியின் பருமன் 1,80,000 யோஜனை என்று பார்த்தோம். இது மூன்று பாகங்களாக இருக்கின்றன. 1.முதல் கரபாகம் 16,000 யோஜனை பருமன் கொண்டது. 2.இடையில் இருப்பது பங்கபாகம், இது 84,000 யோஜனை பருமன் கொண்டது. 3.கீழே இருப்பது அப்பஹுளபாகமாகும், இது 80,000 யோஜனை பருமன் கொண்டது.

இதுபோல ஏழு பூமிகள் கீழேயும், எட்டாவது ஈஷத்பிராக்பார் பூமி உலகத்தின் உச்சியில் ஒரு ரஜ்ஜு நீளம், ஏழு ரஜ்ஜு அகலம், எட்டு யோஜனை பருமனும் கொண்டதாக உள்ளது. இதன் மத்தியில் 45,00,000 யோஜனை அளவு சித்தசிலை உள்ளது.

இதுவரை நாம் இந்த பூமிகள் பற்றி கொஞ்சம் தெரிந்து கொண்டோம். எங்கு அதோலோகம் மற்றும் நரகங்கள் பற்றி வர்ணனை வருகிறதோ அங்கு அவைகளைப்பற்றி விரிவாக சர்ச்சை செய்யலாம்.

முழு உலகத்திற்கும் மற்றும் லோகாகாசத்திற்கும் எது ஆதாரமாக இருக்கிறது? ஆதாரமில்லாமல் வஸ்துக்கள் இருக்க முடியுமா? ஆதாரம் அவசியமா, அவசியமில்லையா? என்ற கேள்விகள் எழக்கூடும். கேளுங்கள்!

உலகில் உள்ள ஒவ்வொரு வஸ்துவும் அதனதன் ஆதாரத்திலேயே இருக்கிறது ஆனால் வியவஹாரத்தில், உபசாரமாக பிறவற்றை நோக்கில் கொண்டு வஸ்து ஏதோ ஒன்றின் ஆதாரத்தில் இருக்கிறது என்று சொல்கிறோம். இவ்வாறு சொல்வது உலகவழக்காகும்-வியவஹாரத்தால் சொல்வதாகும். வஸ்து தன்னாலேயே-தன் ஆதாரத்தாலேயே இருக்கின்றன என்பது நிச்சயமாகும், உண்மையாகும்.

இந்த எல்லா பூமிகளும் மற்றும் லோகாகாசமும் கூட எந்த ஒரு ஆதாரமும் இல்லாமலேயே இருக்கின்றன. லோகாகாசம் எல்லா பக்கமும் வாதவலையங்களால் மூடப்பட்டிருக்கிறது-காற்றின் வலையங்களால் அலங்கரிக்கப் பட்டிருப்பதுபோல காணப்படுகிறது. லோகாகாசத்தின் வடிவம் அனாதி காலமாகவே இதேபோலவே இருக்கிறது. முழு உலகத்திலும் பரவியுள்ள ஒரு மஹாஸ்கந்தமாக இந்த உலகம் காணப்படுகிது. லோகாகாசத்தின் அளவு இந்த மஹாஸ்கந்தமான எட்டு பூமிகள் மற்றும் இவைகளுக்கு இடையில் காணப்படும் சூக்ஷ்ம மண்ணுடலிகளின் உடல் ஆகியவைகள் கலந்த ஒரு அகண்ட ஸ்கந்தமாகும். இதில் எட்டு பூமிகள் என்னவோ காணமுடிகிறது, அது பருமனாக-ஸ்தூலமாக இருக்கிறது, ஆனால் அதன் இடையில் உள்ள சூக்ஷ்ம மண்ணுடலிகளின் உடலியான நுண்ணிய பூமிகள் நம்மால் பார்க்க முடிவதில்லை. இதன் பொருள் நாம் அந்த பூமியில் வாழ்கிறோம், செல்கிறோம் என்பதாகும்.

உலகம் முழுவதையும் அதாவது உலகின் எல்லா பக்கமும், அதாவது பத்து திசைகளிலும் மூடியுள்ளதுபோல மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. சுற்றி இருப்பதால் ‘வலையம்’ என்றும் வாயுவால் ஆனதால் ‘வாத’ என்றும் இரண்டையும் சேர்த்து வாதவலையம் என்று சொல்கின்றனர். உலகின் கீழ்தளம் 7X7 ரஜ்ஜு வாகும். அங்கு 20,000-20,000-20,000 யோஜனை அளவு கொண்ட மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. அதுபோலவே கீழே 1 ரஜ்ஜு அளவு பக்கவாட்டில் கூட 20-20 ஆயிரம் யோஜனை அளவு மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. கனோததிவாதவலையம் உள்பக்கம் இருக்கிறது, கனவாதவலையம் இடையிலும், தனுவாதவலையம் வெளிப்பக்கமும் இருக்கிறது.

ஏழாவது பூமிக்கு அருகில் கீழ்பகுதியின் எல்லா பக்கமும் சூழ்ந்துள்ள இந்த வாதவலையங்களின் அகலம் கிரமமாக 7, 5, 4 யோஜனையாக குறைந்து மொத்தம் 16 யோஜனை அளவாக ஆகிவிடுகின்றன. நடு உலகுக்கு அருகில் பக்கத்தில் சூழ்ந்துள்ள வாதவலையங்களின் அகலம் 5, 4, 3 யோஜனையாக குறைந்து போகின்றன. பிறகு மேலே போகப்போக பிரம்ம சுவர்க்கத்தின் பக்கத்தில் இந்த வாதவலையங்களின் அகலம் 7, 5, 4 யோஜனையாக அதிகரித்துப் போகின்றன. இதற்கும் மேல் செல்லச்செல்ல முறையாக குறைந்து உலகின் உச்சி பகுதியில் இவை 5, 4, 3 யோஜனை அளவாக

ஆகின்றன. உலக உச்சியின் எட்டாவது பூமிக்கு மேல் இதன் அகலம் கனோததிவாதவலையம் 2 கோசமாகவும், கனவாதவலையம் 1 கோசமாகவும் , தனுவாதவலையம் 1575 வில்(தனுஷ்) அதாவது ஒரு கோசத்தில் 425 வில் குறைந்த அளவு தனுவாதவலையமும் இருக்கின்றன.

எட்டு பூமிகளின் கீழ் பகுதியில் ஒவ்வொன்றிலும் 20,000-20,000 யோஜனை அளவு கொண்ட வாதவலையங்கள் இருக்கின்றன. ஆனால் எட்டாவது பூமியின் மேல் பகுதியிலும்கூட மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. இந்த வாதவலைங்களின் அமைப்பை படம் 2-ல் நீங்கள் பார்க்கலாம். இங்கு பூமிகள் கருப்பு நிறத்திலும் வாதவலையங்கள் நீலம், மஞ்சள், சிகப்பு நிறத்திலும் காட்டப்பட்டுள்ளன. பூமிக்கு கீழ் முதலில் கனோததி வாதவலையமும், அதற்கு கீழே கனவாதவலையமும், அதற்கும் கீழே தனுவாதவலையமும் இருக்கிறது. இதற்கும் மற்றும் இதற்கு கீழும் உள்ள பூமிக்கும் இடையில் அசங்க்யாத யோஜனை அளவு இடைவெளி காணப்படுகிறது.

லோகாகாசத்தின் அடிப்பகுதியில் 7 ரஜ்ஜு X 7 ரஜ்ஜு X 60,000 யோஜனை கனஅளவு கொண்ட வாதவலையம் இருக்கிறது. இந்த வாதவலையங்களில் எல்லா பூமிகளின் பளுவை-எடையை தாங்கக்கூடிய சக்தி இருக்கிறது. எல்லா பூமிகளும் ஆடாமல் அசையாமல் எங்கே இருக்கின்றனவோ அங்கேயே இருக்கின்றன. முழு லோகாகாசத்தின் பளுவையும், பூமிகளின் பளுவையும் இந்த வாதவலையங்களே தாங்குகின்றன. முதல் பூமியில் முதல் நரகமும், இரண்டாவது பூமியில் இரண்டாவது நரகமும், இதேபோல 6 ரஜ்ஜு அளவு கீழ் உலகில் உள்ள ஏழு பூமிகளில் எழு நரகங்களும் உள்ளன. அதற்கு கீழே ஒரு ரஜ்ஜு அளவு நிகோதம் இருக்கிறது, இந்த நிகோதத்தை களகளபூமி என்று சொல்கின்றனர். இங்கே நிகோத உயிர்கள் நெருக்கமாக அடைத்து வைத்ததுபோல நிரம்பி இருக்கின்றன. இந்த ஒரு ரஜ்ஜு அளவு இடத்தின் பக்கங்களில்கூட அதாவது நான்கு பக்கமும் 20,000-20,000 அதாவது 60,000 யோஜனை அளவு வாதவலையங்களால் சூழப்பட்டுள்ளன.

எட்டாவது பூமிக்கு மேல் 2 கோச பருமன் கொண்ட கனோததி வாதவலையமும், அதற்குமேல் 1 கோச பருமன் கொண்ட கனவாதவலையமும், கடைசியில் 1,575 வில் அளவு கொண்ட தனுவாதவலையமும் இருப்பதை நான் முன்னரே சொல்லியுள்ளேன். இந்த எல்லா அளவைகளும் மஹாதனுஷ், மஹாகோஸ் மற்றும் மஹாயோஜனை முதலான அளவைகளால் அளக்கப்பட்டதாகும். பொதுவாக ஒரு யோஜனை 4 கோசம் கொண்டதாகும், மஹாயோஜனை என்பது 2,000 கோசம் கொண்டதாகும். 2,000 வில் ஒரு கோசமாகும். இங்கு 1,575 வில் என்று சொல்லப்பட்டது மஹாவில்-மஹாதனுஷ் அளவையில் சொல்லப்பட்டதாகும். இது பொதுவான தனுஷைவிட 500 மடங்காகும். அதனால் தனு வாதவலையம் 1575X500 =

7,87,500 தனுஷ் ஆகும். இங்கு சித்தபகவான் உச்சியில் அமர்ந்திருக்கிறார்-நிலைகொண்டு இருக்கிறார். எல்லா சித்தர்களின் ஆத்மபிரதேசமும் மேலே ஒரே நிலையில் level-ல் உள்ளன, ஆனால் அவர்களின் உயரம், பருமன் மற்றும் நின்றநிலை-கட்ஹாசன், உட்கார்ந்தநிலை-பத்மாசன் முதலான வடிவங்கள் வெவ்வேறாக இருக்கின்றன. சிலர் கிழக்கு முகமாகவும் சிலர் வடக்கு முகமாகவும் இருக்கின்றனர். சித்தர்களில் அதிகபட்ச உயரம் 525 தனுஷ் ஆகும். இது பொதுதனுஷ்-சிறியதனுஷ் அளவாகும். மனிதர்களின் உயரம் சிறிய தனுஷில் தான் அளக்கப்படுகிறது, மஹாதனுஷில் அல்ல.

தனுவாதவலையத்தின் பருமனை 1,500 பகுதிகளாகப் பிரித்தோமானால் அதில் ஒரு துண்டு அளவில் சித்தர்களின் அதிகபட்ச அளவு இருக்கிறது என்று அறியவும், 7,87,500/1500 = 525 வில். மேலும் அந்த பருமனை 9 லக்ஷம் பகுதிகளாக பிரித்தோமானால் அதில் ஒரு துண்டு அளவில் சித்தர்களின் குறைந்தபட்ச அளவு இருக்கிறது என்று அறியவும், 7,87,500/9,00,000 = 7/8 அளவு அதாவது எட்டில் ஏழு வில் அளவு அதவது 3.5 முழ அளவாகும்.

தனுஷ்-வில், முழம், அங்குலம் முதலியவைகள் என்ன? என்ற கேள்வி உங்களுக்கு வரலாம். அசங்க்யாத பரமாணுக்களை ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக ஒரே நேர்கோட்டில் உள்ள ஸ்கந்தத்தின் அளவை 'அவசன்னாசன்னை' என்பர். அதை எட்டு-எட்டால் பெருக்கிக்கொண்டே போனால் சன்னாசன்னை, திருடரேணு, திரஸரேணு, ரதரேணு, உத்தம போகபூமி மனித முடியின் பருமன், மத்திம போகபூமி மனித முடியின் பருமன், ஜகன்ய போகபூமி மனித முடியின் பருமன், கர்மபூமி மனித முடியின் பருமன், லீக், சர்சோ, யவ, மற்றும் அங்குலம் முதலான 12 நீட்டல் அளவைகள் வரும். இந்த அங்குலத்தை உத்தேச அங்குலம் என்பர்.

இந்த அங்குலத்தின் மூலம் நாரகி, மனிதர், தேவர் ஆகியவர்களின் உடலின் உயரமும், தேவர்களின் நகரம், ஆலயங்கள் முதலியவைகளின் அளவுகளும் கணக்கிடப் படுகின்றன. உத்தேச அங்குலத்தை 500-ஆல் பெருக்க பிரமாணாங்குலம் வரும். பிரமான அங்குலம் பரதக்ஷேத்திரத்தின் அவசர்ப்பிணி கால முதல் சக்கரவர்த்தியின் ஆள்காட்டி விரலின் பருமன் அளவாகும். இந்த அங்குலத்தின் மூலம் தீபம், சமுத்திரம், மலை, நதி முதலியவைகளின் அளவுகள் கணக்கிடப் படுகின்றன. பரதம், ஐராவதம் முதலிய பூமியில் கால மாற்றங்கள் நிகழ்கின்றன. அங்கு அந்தந்த காலத்தில் வாழும் மனிதரின் ஆள்காட்டி விரலின் பருமனை அந்தந்த கால அங்குலமாக எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த அங்குலம் ஆத்மாங்குலம் எனப்படுகிறது. இதன்மூலம் மனிதர்களால் கட்டப்படும் ஆலயங்கள், நகரங்கள், குடை, கலசம் முதலியவைகளின் அளவுகள் கணக்கிடப் படுகின்றன.

6 அங்குலம் 1 பாதம், 2 பாதம் 1 ஜாண், 2 ஜாண் 1 முழம், 2 முழம் 1 கஜம், 2 கஜம் 1 தனுஷ்-வில், 2000 வில் 1 கோசம், 4 கோசம் 1யோஜனை ஆகும். இவை எல்லாம் உத்தேச அங்குலத்தை ஆதாரமாக வைத்து கணக்கிடப் படுகின்றன. இவைகளை பொதுவான அளவைகள் என்பர். இதை 500-ஆல் பெருக்க வரும் அளவுகளை மாஹா அளவைகள் என்பர்.

ஆத்மாங்குலத்தின் அளவு அவரவர்களின் உயரத்திலிருந்து வருவதாகும், அந்த விகிதத்தில், proportion-ல் அளவைகள் கணக்கிடப் படுவதாகும். ஆதிநாத தீர்த்தங்கரரின் உயரம் 500 வில் மஹாவீரரின் உயரம் 7 முழம் (1 வில் மற்றும் 3 முழம்), சர்வார்த்தசித்தி தேவர்களின் உயரம் 1 முழமாகும், அதன்படி அவருடைய உயரம் அவருடைய ஆத்மாங்குல அளவை கொண்டு கணக்கிடப்படும். குழந்தைகளின், மற்றும் வாலிபர்களின் ஆத்மாங்குலம் வெவ்வேறாக இருக்கும்.

இப்போது வாதவலையங்களைப் பற்றி நாம் தெரிந்து கொண்டதால் கேவலி சமுத்காதம் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம். மூல சரீரத்தை விடாமல் ஆத்மப் பிரதேசம் வெளியில் விரிதல் சமுத்காதம் என்று சொல்லப்படுகிறது. 13-ஆம் குணஸ்தானத்தின் கடைசி அந்தர் முகூர்தத்தில் ஆயுள் கர்மத்தின் ஸ்திதியைவிட மற்ற மூன்று அகாதி கர்மங்களின் ஸ்திதி அதிகமாக இருந்தால் இவைகள் எல்லாம் ஒரே ஸ்திதி அளவு கொண்டதாகச் செய்ய கேவலி சமுத்காதம் நிகழ்கிறது. இந்த சமுத்காதத்தின் முதல் சமயத்தில் கேவலியின் ஆத்ம பிரதேசம் லோகாகாசத்தின் மேலிருந்து கீழ்வரை வாதவலையப்பகுதியை மட்டும் விட்டுவிட்டு - கீழே 60,000 யோஜனை மற்றும் மேலே 3 கோசம் 1575 வில் வாதவலயப்பகுதியை மட்டும் விட்டுவிட்டு கொஞ்சம் குறைந்த14 ரஜ்ஜு உயரமுடைய உடலளவு தன்டாகார்- ஒரு கொம்புபோல மேலும் கீழும் பரவுகிறது, இதை தன்ட சமுத்காதம் என்று சொல்கின்றனர். இரண்டாவது கபாட சமுத்காத சமயத்தில் அதன் பருமன் என்னவோ உடலளவு இருக்கிறது, ஆனால் முழு லோகாகாசத்தின் கடைசிவரை பக்க வாட்டில் வாதவறலையப்பகுதியை மட்டும் விட்டுவிட்டு மற்ற பகுதிகளில் பரவுகிறது, கிழக்குப் பக்கம் முகம் இருக்குமானால் வடக்கு தெற்காக பரவுகிறது, வடக்குப்பக்கம் முகம் இருக்குமானால் கிழக்குமேற்காக பரவுகிறது. மூன்றாவது சமயத்தில் முன்னரும் பின்னரும் வாதவலையப் பகுதியை மட்டும் விட்டுவிட்டு உலகத்தின் கடைசிவரை பரவுகிறது, இதை பிரதர சமுத்காதம் என்று சொல்கின்றனர். நான்காவது சமயத்தில் வாதவலையப் பகுதிகளும் சேர்ந்த உலகம் முழுவதும் லோகாகாசத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் பரவுகிறது, இதை லோகபூரண சமுத்காதம் என்று சொல்கின்றனர். ஐந்தாவது சமயத்தில் பிறகு பிரதர, ஆறாவது சமயத்தில் கபாட, ஏழாவது சமயத்தில் தன்ட மற்றும் எட்டாவது சமயத்தில் மூல சரீர அளவாக ஆகிவிடுகிறது. எல்லா கேவலிகளுக்கும் இது நிகழ வேண்டும் என்ற அவசியமில்லை.

கனோததி வாதவலையம் பசுவின் மூத்திர நிறத்தில் இருக்கிறது. கன வாதவலையம் மூங்கில் நிறத்தில் இருக்கிறது. தனுவாதவலையம் அனேக நிறங்கள் கொண்டதாக இருக்கிறது. முழு உலகமும் வதவலையங்களின் ஆதாரத்தில் இருக்கிறது. சாஸ்திரங்களில் கனோததி வாதவலையம் கன வாதவலையத்தின் ஆதாரத்திலும், கன வாதவலையம் தனு வாதவலையத்தின் ஆதாரத்திலும் மற்றும் தனு வாதவலையம் ஆகாசத்தின் ஆதாரத்திலும் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டுள்ள நோக்கில் மட்டுமே சொல்லப்பட்டதாகும். ஒவ்வொரு வஸ்துவிலும் அதிகரணம் என்ற குணம் இருப்பதால், எல்லாம் அதனதன் ஆதாரத்திலேயே இருக்கின்றது என்பதே உண்மையான வஸ்துவின் ஸ்திதியாக - ஸ்வரூபமாக இருக்கிறது. சித்தர்களைப் பற்றி சொல்லும்போதுகூட சித்தர்கள் சித்தக்ஷேத்திரத்தில் இருக்கிறார்கள் என்று சொல்கிறோம், உயிர் மோக்ஷமடைந்தது என்று சொல்கிறோம் ஆனால் மோக்ஷம் என்ற பெயர் எந்த இடத்துக்கும் இல்லை, அது உயிரின் அவஸ்தை-உணர்வு நிலை-[பர்யாயம்] மாகும். நாம் எல்லோரும் இந்த நிலையை-அவஸ்தையைத்தான் அடைய வேண்டும். இவ்வாறாக நாம் வாதவலையங்களைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொண்டோம்.

பாடம் 1-ல் திரஸநாளி லோகாகாசத்தின் கீழ்பகுதிவரைச் செல்லாமல் கொஞ்சம் மேலேயே நின்றுவிடக் காரணமென்ன? என்ற கேள்வி உங்களில் யாருக்காவது எழக்கூடும். இதற்கு பதில் திரஸநாளியின் உயரம் 14 ரஜ்ஜு தான். நாம் உலகத்தை இரண்டாவது படத்தில் காட்டியுள்ளபடி முன்பக்கமாக பார்க்கும்போது, மேலிருந்து கீழ்வரை திரஸநாளி இருக்கிறது. இங்கு வடக்குதெற்காக 7 ரஜ்ஜுவுக்கு இடையில் 1 ரஜ்ஜு X 1 ரஜ்ஜு அளவு திரஸநாளி மேலிருந்து உலகின் அடிபாகம்வரை பரவி இருப்பதை நம்மால் பார்க்க முடியும். நீங்கள் முதல் படத்தில் பார்ப்பது உலகத்தின் அடிபாகம் தான். அந்த படம் உலகின் முப்பரிமாண வடிவை காட்ட வரையபட்டிருப்பதால் அப்படி உங்களுக்குத் தெரிகிறது.

பல்யம், ரஜ்ஜு முதலான பெரிய-பெரிய அளவைகளை கற்பனை செய்து பார்ப்பது சிலருக்கு கடினமாக இருக்கலாம், அதை எப்படி உறுதி படுத்துவது என்ற சந்தேகம் வரலாம். இதைப்பற்றி உங்களுக்கு நான் விரிவாக சொல்லியிருக்கிறேன். இவைகள் எல்லாம் சர்வக்ஞ பகவானால் நேரடியாக அவருடைய கேவலஞானத்தின் மூலம் பார்த்து சொல்லப் பட்டதாகும். நாம் எல்லாம் அல்ப ஞானிகள், ஆகையால் அவருடைய திவ்யத்தொனியில் கூறியபடி எழுதப்பட்ட ஆகமங்களைப் படித்தோ அல்லது கேட்டோதான் தெரிந்து கொள்ள முடியும். ஜினாகமம் பிரமாணமாகும்-நம்பத் தகுந்ததாகும். நாம் அவைகளை நம் அல்ப ஞானத்தால் உறுதி செய்ய முடியாது. யாராவது சமுத்திரத்தில் உள்ள தண்ணீரை கிண்ணத்தால் அளக்க முடியுமா? என்பதை

யோசித்துப் பாருங்கள். இதை தெரிந்து கொள்வதால் சர்வக்ஞரின் கேவலஞான மஹத்துவத்தை நம்மால் அனுமானிக்க முடியும்.

நமக்கு எந்த விஷயங்கள் தெரியாதோ அவைகள் இல்லவேயில்லை, சர்வக்ஞர் என்று யாரும் இல்லை என்றெல்லாம் சொல்லுதல் கிணற்றுத் தவளைக்கு சமமாகும். அந்தக்கதை என்னவோ உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். கிணற்று தவளை ஒன்று ஒருசமயம் கிணற்றுக்கு வெளியே வந்து வெகு தூரம் சென்று கடற்கரையை அடைகிறது. விசாலமான சமுத்திரத்தின் தண்ணீரைப் பார்த்து ஆச்சரியமடைகிறது. பிறகு அது தான் முன்னர் இருந்த கிணற்றிற்கு வந்து சமுதிரத்தைப் பற்றி மற்ற தவளைகளுக்கு சொல்கிறது, ஆனால் மற்ற தவளைகள் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை. நாம்கூட அதேபோல ஆகமங்களை அமைதியுடன் கேட்டு அதில் கூறியுள்ள விஷயங்களை நம்ப வேண்டும், கிணற்று தவளைகள் போல நம்பிக்கை கொள்ளாமல் இருக்கக்கூடாது. இப்போது பார்க்கும் கைபேசி, லேப்டாப்-மடிகணிணி(LapTop) முதலியவைகளை 50-60 வருடங்களுக்கு முன்பு நான் கற்பனை செய்து பார்தோமா?!

இங்கு நாம் ஜெயின பூகோளத்தை பற்றி முழு வடிவத்தைப் பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனுடைய கணிதம்-கணக்குகள் மிக சூக்ஷமமாக சொல்லப் பட்டிருக்கின்றன. இங்கு நாம் பந்து போன்ற கோள வடிவங்கள், நாற்கோண வடிவங்கள், முக்கோண வடிவங்கள், அவைகளின் பரப்பு, கனஅளவு முதலியவைகளை கணக்கிடுகிறோம். தற்கால விஞ்ஞானப்படி இவைகள் கணக்கிட்டால் வேறு முடிவுகள்-பதில்கள் வரும், ஆனால் உண்மையில்அப்படி இல்லை. ஜெயின் பூகோள கணிதத்தையும், அதன் வழிமுறைகளையும் பார்க்கும்போது நவீன கணிதம் அதற்கு கொஞ்சம்கூட ஈடுகொடுக்க முடியாது என்பதை நம்மால் பார்க்க முடியும். மேலும் விரிவாக அறிய விரும்புவோர் மூல சாஸ்திரங்களை, ஆகமங்களை படித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

விதேக க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள இரண்டாவது தீர்த்தங்கரர் ஸ்ரீ யுகமந்திர பகவானுக்கு ஜேய்! சொல்லுங்கள்.

3. கீழுலகம் - நரக லோகம்

திரிலோகசாரம் என்ற நூலின் ஆதாரத்தில் மூவுலகங்களின் அமைப்பு பற்றி நாம் இங்கு தெரிந்து கொள்ளப் போகிறோம். முன் இரண்டு பாடங்களில் நாம் மேல், நடு மற்றும் கீழ் உலக அமைப்பு பற்றி கொஞ்சம் தெரிந்து கொண்டோம். சிலர் இதை புரிந்து கொள்வது கொஞ்சம் கடினமாக இருப்பதாக உணர்கிறோம், அதனால் நீங்கள் எங்களை நேராக சித்தசிலையில் கொண்டு சேருங்களேன் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் உங்களை நரகத்திற்கு கொண்டு செல்வது சுலபமாக இருப்பதாலும், மேலும் நாம் அங்கு பலமுறை சென்று சுற்றி வந்திருப்பதாலும், முதலில் நரகத்தைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வது சுலபமாக இருக்கும் என்பதால் அதைப்பற்றி இப்போது பார்க்கலாம். நாம் மூன்று உலகத்தையுமே தெரிந்து கொள்ள வேண்டியதுதான், ஆனால் நாம் எங்கெல்லாம் இதுவரை சென்று வந்திருக்கிறோம் என்பதை தெரிந்து கொண்டு பிறகு நம் நிலையான வீடாக இருந்த போதிலும் இதுவரை போகாத அந்த சித்தசிலையைப் பற்றி பின்னர் பார்க்கலாம். நாம் இதுவரை சென்றுவந்த இடங்கள் எப்படிப்பட்டவை என்று நினைவு படுத்திப் பார்க்கலாம்.

ஆகாச திரவியம் அனந்த-அனந்த-அனந்த-அனந்த பிரதேசி என்று நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். அனந்தம் என்றால் எத்தனை அனந்தம்? நாம் “சமண தத்துவ அறிமுகம்” என்ற புத்தகத்தில் படித்திருக்கிறோம். உயிர் அனந்தமாகும், அதைப்போல அனந்த மடங்கு புத்கல திரவியமாகும், அதைப்போல அனந்த மடங்கு முக்காலத்தின் சமயமாகும், அதைப்போல அனந்த மடங்கு ஆகாசதிரவியத்தின் பிரதேசமாகும், மற்றும் அதைப்போல அனந்த மடங்கு ஒவ்வொரு திரவியத்தின்-ஜீவ திரவியத்தின்-புத்கல திரவியத்தின்-மற்ற பிற எல்லாத் திரவியத்தின் குணங்களாகும்.

இந்த அனந்தப்பிரதேசி ஆகாசத்திரவியத்தின் மத்தியில் ஆகாச திரவியத்தின் அனந்தத்தில் ஒரு பாக அளவு கொண்ட க்ஷேத்திரத்தில், மற்ற ஐந்து திரவியங்களும் இருக்கின்றனவோ, அந்த அளவு அசங்க்யாத எண்ணிக்கை கொண்ட பிரதேசத்தை லோகாகாசம் என்று சொல்கின்றனர். லோகாகாசத்தில் உயிர், புத்கலம், தர்மம், அதர்மம், காலம் ஆகிய திரவியங்கள் இருக்கின்றன, ஆகாச திரவியம் என்னவோ ஸ்வயம் அங்கிருக்கும் பிரதேசமாகவே இருக்கிறது. இந்த ஆறு திரவியங்களின் சமூகத்தை உலகம் என்று சொல்கின்றனர். இந்த உலகத்திற்கு வெளியே இருக்கும் அனந்த பிரதேசி ஆகாச திரவியத்தை-மற்ற எந்த ஒரு திரவியமும் காணப்படாத அந்த காலியாக இருக்கும் ஆகாசப் பகுதியை அலோகாகாசம் என்று சொல்கின்றனர்.

3. கீழுலகம் - நரக லோகம்

லோகாகாசத்தில் நம்மால் பார்க்கக்கூடிய ரூபிதிரவியம் அதாவது புத்கல திரவியம் என்னவோ ஒன்றுதான், ஆனால் பகவான் என்னவோ எல்லா அதாவது ஆறு திரவியங்களையும் பார்க்கவும் அறியவும் செய்கிறார். இந்த உலக அமைப்பு எப்படி இருக்கிறது என்பதை பகவானின் வாணியில் கூறியுள்ளபடி நாம் அறிந்து கொள்கிறோம். இது பிரமாணமாகும், இதை வேறு பிரமாணம் மூலம் உறுதிசெய்ய வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் ஊரில் சூரியன் உதிப்பதை எந்த டார்ச்லைட்-எந்த விளக்கைக் கொண்டு தெரிந்து கொள்கிறீர்கள்? என்று எனக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். எது எல்லாவற்றையும் பிரகாசித்துக் காட்டுகிறதோ அப்படிப்பட்ட பிரகாசமான சூரியனை பார்க்க வேறு ஒரு பிரகாசமான தீபத்திற்கு என்ன அவசியம் இருக்கிறது?

இந்த உலகம் அசங்க்யாத பிரதேசங்கள் கொண்டது. மேலிருந்து கீழ்வரை அதன் உயரம் 14 ரஜ்ஜு, வடக்கு தெற்காக அகலம் 7 ரஜ்ஜு, கிழக்கு மேற்காக அகலம் கீழே 7 ரஜ்ஜு, நடு உலகத்திற்கு அருகில் 1 ரஜ்ஜு, அதற்கு மேல் 3.5 ரஜ்ஜு மேலே செல்ல பிரம்ம சொர்க்கத்துக்கு அருகில் 5 ரஜ்ஜு, மற்றும் உச்சியில் 1 ரஜ்ஜு வாகும்.

இந்த லோகாகாசம் பத்து பக்கங்களிலும் வாதவலையங்களால் மூடப்பட்டிருக்கிறது. இந்த வாதவலையம் கீழே 20,000-20,000-20,000 யோஜனை பருமன் கொண்டது. ஏழாவது பூமிக்கு பக்கவாட்டில் 7, 5, 4 யோஜனையாகவும், நடு உலகத்திற்கு பக்கவாட்டில் கொஞ்சம் குறைந்து 5, 4, 3 யோஜனையாகவும், பிறகு மேலே கொஞ்சம் பெருகியும் பிறகு மீண்டும் குறைந்து கொண்டும் போகிறது. எட்டு பூமிகள் ஒவ்வொன்றின் கீழேயும் கூட 20,000 யோஜனை பருமன்கொண்ட மூன்று-மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன. உலக உச்சியில் 1 ரஜ்ஜு X 7ரஜ்ஜு நீள அகலம் கொண்ட எட்டாவது பூமியின் மேலேயும் வாதவலையங்கள் இருக்கின்றன. முதலில் 2 கோசம் பருமன் கொண்ட கனோததி வாதவலையமும், ஒரு கோசம் பருமன் கொண்ட கனவாதவலையமும், மற்றும் 1575 தனுஷ் பருமன் கொண்ட தனுவாதவலையமும் இருக்கின்றன. 2,000 தனுஷ் கொண்டது ஒரு கோசமாகும். இவைகள் எல்லாம் மஹாதனுஷ், மஹாகோசம், மஹாயோஜனை அளவைகளாகும். 525 தனுஷ் அளவு சித்த பகவானின் உயர்ந்தபட்ச அளவாகும், இந்த தனுஷ் சாமான்ய அதாவது சிறிய தனுஷ் அளவை யாகும், மஹாதனுஷ் அல்ல. எல்லா சித்த பகவான்களும் தனுவாதவலையத்தின் மேல்பாகத்தில்தான் நிலைகொண்டுள்ளனர்.

பிறகு சித்தசிலை என்று எதை சொல்கின்றனர்? ஏன் சொல்கின்றனர்? எந்த பூமியின் மேல் சித்த உயிர்கள் இல்லையோ, மற்றும் அதன் இடையிலும் இல்லையோ பிறகு அந்த பூமியை ஏன் சித்தசிலை என்று சொல்லுகின்றனர்? என்ற கேள்வி எழுகிறது. பாருங்கள், சித்தசிலா 45,00,000 யோஜனை

விஸ்தீரணம்-விட்டம் கொண்டது. இவ்வளவு 45,00,000 யோஜனை விஸ்தீரணம்-விட்டம் கொண்ட வேறு எது இருக்கிறது என்று தெரியுமா? ஆம், மனிதர்கள் வாழும் இரண்டரை தீபம் கூட இந்த அளவு விஸ்தீரணம் கொண்டதே-மனித உயிர்கள் இரண்டரை தீபத்தில் மட்டுமே வாழ்கின்றனர்.

நான்குகதி உயிர்களில் எந்தகதி உயிர்கள் சித்தபதவி பெறுகின்றன? நரக, விலங்கு, தேவ கதி உயிர்கள் அந்த கதியிலிருந்து மோக்ஷம் செல்ல முடியுமா? தேவர்களுக்கு என்னவோ சித்தசிலை மிக அருகில் இருக்கிறது, பிறகு அவர்கள் அங்கிருந்தே மோக்ஷம் செல்ல முடியுமா? சர்வார்த்தசித்தி பெயர்கொண்ட தேவர்களின் விமானத்திலிருந்து சித்தசிலை வெரும் 12 யோஜனை அளவே மேலே இருக்கிறது. அவர்களுக்கு அவ்வளவு அருகாமையில் சித்தசிலை இருந்தபோதிலும் கூட அவர்களும் அங்கு போகமுடியாது. சர்வார்த்தசித்திக்கும் சித்தசிலாவிற்கும் இடைவெளி ஒரு முடி அளவுதான் இடைவெளி என்று சில நூல்களில் கூறப்பட்டுள்ளது, சிலர் அப்படி சொல்லவும் செய்கின்றனர். ஆனால் அதில் கொஞ்சம்கூட உண்மை இல்லை. மேரு மலையின் உச்சியிலிருந்து ஒரு முடி அளவு இடைவெளியிலேயே முதல் சொர்க்கம் இருக்கிறது என்பது என்னவோ உண்மைதான். முதல் சொர்க்கத்தின் முதல் படலம் சுமேரு மலையின் சூளிகையிலிருந்து ஒரு முடி இடைவெளிதான் இருக்கிறது என்று சொல்வது சரியே, ஆனால் சர்வார்த்தசித்தியிலிருந்து சித்தசிலை 12 யோஜனை அளவு என்பதுதான் சரி, ஒரு முடி இடைவெளி என்பது தவறாகும்.

மனிதகதி உயிர்கள் தவிர வேறு எந்தகதி உயிர்களும் மோக்ஷம் செல்ல முடியாது, முனியாகவும்கூட ஆகமுடியாது. விலங்கு உயிர்கள் ஐந்தாம் குணஸ்தானம்வரை போகமுடியும், தேவ மற்றும் நரக உயிர்கள் நான்காம் குணஸ்தானம்வரை மட்டுமே போகமுடியும். மனித உயிர்கள் 14-ஆம் குணஸ்தானம்வரை சென்று பிறகு பகவானாக ஆகமுடியும். மனித உலகம் 45,00,000 யோஜனை விஸ்தீரணம் கொண்டது, அதில் எங்கிருந்து வேண்டுமானாலும் மனிதர்கள் மோக்ஷம் செல்ல முடியும்.

போகபூமியில் இருந்து யாரும் சித்தநிலையை அடைவதில்லை, அங்கு முனிவர்கள் கூட இல்லை, அங்குள்ள உயிர்கள் நான்காம் குணஸ்தானம்வரை மட்டுமே போகமுடியும், மேலும் அங்குள்ள எல்லா உயிர்களும் இறந்து தேவகதிக்கே செல்கின்றன. பிறகு 45,00,000 யோஜனை விஸ்தீரணம் கொண்ட மனித உலகத்தின் எந்த பகுதியிலிருந்தும் எந்த மனித உயிரும் மோக்ஷம் செல்லமுடியும் என்பது எப்படி சாத்தியம்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

அதற்கு பதில் - தியானத்தில் இருக்கும் முனிவரை, முன் பஃவ பகைவர் யாராவது தேவகதியில் இருப்பவர், பழைய விரோதம் காரணமாக மனித

லோகத்தின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் தூக்கிச்சென்று போட்டு விடலாம். சமுத்திரத்தில், மலைகளில், போகபூமியில் எங்கு வேண்டுமானாலும் தூக்கிச்சென்று போட்டு விடலாம். அவ்வாறு போடப்பட்ட அந்த இடத்திலிருந்தே முனிவர் க்ஷபகஸ்ரேணி ஏறி அரஹந்தநிலை அடைந்து, உடனே சித்தநிலையை அடைய முடியும். வீசி எறியப்பட்ட அந்த ஆகாச பிரதேசத்திலிருந்தே அவர்கள் சித்தராகி, மேலே சென்று சித்தநிலையில் அனந்தகாலம் வரை இருக்க முடியும். அந்த உயிர்களின் நோக்கில் 45,00,000 யோஜனை விஸ்தீரணம் கொண்ட மனித உலகத்தின் எந்த பகுதியிலிருந்தும் எந்த மனித உயிரும் மோக்ஷம் செல்லமுடியும் என்பது இப்படித்தான் சாத்தியமாகிறது. இதனால் மனித உலகத்தின் எந்த பகுதியிலிருந்துதான் உயிர்கள் மோக்ஷம் செல்லவில்லை! எல்லா பகுதியிலிருந்தும் உயிர்கள் மோக்ஷம் சென்றிருக்கின்றன.

பிறகு நாம் ஏன் தீர்த்த க்ஷேத்திரங்களுக்கும், சித்த க்ஷேத்திரங்களுக்கும் சென்று வந்தனை செய்கிறோம்? அங்கு ஏன் செல்கிறோம்? ஏனென்றால் அங்கு செல்லும்போது நமக்கு இங்கிருந்துதான் அந்த மஹாபுருஷர்கள் சித்த நிலையை அடைந்தனர் என்று சித்தர்களைப் பற்றிய சிறப்பான நினைவு வருகிறது. ஆனால் இரண்டரை தீபத்தில் மோக்ஷம் செல்லாத இடம் என்று எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. பிறப்பால் கர்ம பூமியில் நாலாம் காலத்தில் பிறந்த உயிர்களே மோக்ஷம் செல்கின்றனர். இவ்வாறு 45,00,000 யோஜனை விஸ்தீரணம் கொண்ட வட்டவடிவ மனித உலகமும், அதே அளவு கொண்ட-விஸ்தீரணம் கொண்ட வட்டவடிவ சித்தசிலையும் இருக்கிறது, அதற்கு மேலே உள்ள வாதவலையத்தில் சித்த உயிர்கள் நிலைகொண்டுள்ளன, எனவே அதை சித்தசிலை என்று சொல்லுகின்றனர்.

சித்தசிலை என்பதோ பிருத்விகாயிக அமைப்பாகும், மண்ணால் ஆன அமைப்பாகும். கல்லாலான தாகும், பாறையால் ஆனதாகும். அதை தவல், வெள்ளை, ஸ்வேத என்றாலும் பளிங்கு அல்லது ஸ்படிகம் என்றாலும் அவை எல்லாம் கல் வகையே ஆகும். நமக்கு சித்தசிலைவின்மேல் மஹத்துவம் வருகிறது. ஆனால் அங்கு ஐந்துவகை ஸ்தாவர உயிர்கள், சூக்ஷ்ம உயிர்கள்கூட வாழ்கின்றன. அங்கு பிறக்கும் உயிர்கள் மண்ணுடலி அல்லது பிற காயிக ஸ்தாவர உயிராகவே இருக்கும். அனந்த சித்த பகவான்கள் தனுவாத வலையத்தில் நிலைகொண்டுள்ளனர், இங்கு அனேக ஆத்ம பிரதேசங்கள் இருக்கின்றன, அங்கு அந்த பிரதேசத்தில் ஐந்து விதமான ஸ்தாவர உயிர்களும் இருக்கின்றன.

இப்போது என்னுடைய கேள்வி அந்த உயிர்கள் பாக்யவான்களா? சித்தரின் அனந்த சுகத்தில் இந்த உயிர்களுக்கு கொஞ்சமாவது சுகம் கிடைக்குமா? அங்கிருக்கும் பரமாணுக்களில் அதிர்வு காரணமாக இந்த உயிர்களுக்கு சீக்கிரமாக மோக்ஷம் கிடைக்க வழி இருக்குமா? என்பதுதான்.

ஒவ்வொரு உயிரும் அதனதன் பிரதேசத்தில், சுய சுதந்திரத்துடன், ஸ்வசதுஷ்டயத்தில் அதாவது அதனதன் திரவ்ய, க்ஷேத்ர, கால, பாவத்தில் இருக்கிறது. ஒரே க்ஷேத்திரத்தில் இருந்தாலும்கூட ஒரு திரவியம் மற்றொரு திரவியத்திற்கு கொஞ்சம்கூட எதுவும் செய்ய முடியாது, எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது, எந்த உதவியோ அல்லது ஏதாவது மோசடியோ செய்ய முடியாது. சித்தக்ஷேத்திரத்தில் இருக்கும் அனந்த சித்தர்கள் சுகத்தை அனுபவிக்கின்றனர், ஆனால் அதே க்ஷேத்திரத்தில் இருக்கும் ஸ்தாவர உயிர்கள் அனந்த துக்கத்தை அனுபவிக்கின்றன.

என்னிடம் இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது - நாம் இப்போது அரஹந்தர்களின் அருகில் செல்ல முடியாது, ஆனால் அரஹந்தர்கள் நம்மை சந்திக்க நாமிருக்கும் இடத்திற்கு வரமுடியுமா அல்லது முடியாதா?

பதில் - ஆம், அவர்கள் நாம் இருக்கும் இடத்திற்கு வரமுடியும். கேவலி சமுத்காதம் நிகழ்த்தும்போது, முழு லோகாகாசத்திலும் அவர்களுடைய ஆத்ம பிரதேசம் பரவுகிறது என்றுநாம் தெரிந்திருக்கிறோம். நாம் எங்கு இருக்கிறோமோ அங்குகூட அவர்களுடைய ஆத்ம பிரதேசம் பரவுகிறது. ஒரே சமயத்தில் அதிகபட்சம் நாற்பது உயிர்கள் கேவலி சமுத்காதம் செய்ய முடியும்; ஆனால் அவர்கள் வருவதால் நமக்கு கொஞ்சம்கூட எந்த பாதிப்பும், எந்த கொடுக்கல்-வாங்கலும் நிகழ்வதில்லை. நாம் நம்முடைய இராக-த்வேஷத்தின் பரபரப்பில் இருக்கிறோம், அதனால் துக்கமடைகிறோம். அவருடைய மற்றும் நம்முடைய ஆத்மப்பிரதேசம் ஒரே க்ஷேத்திரத்தில் வருவதால் எந்த வேறுபாடும் நிகழ்வதில்லை.

உங்கள் கேள்விக்கு பதில் சொல்வதற்கே இந்த எல்லா சர்ச்சைகளும் செய்தோம். நாம் இப்போது கீழ்உலக வர்ணனையை பார்க்கலாம். நாம் கீழ் உலகத்தில் இருக்கும் ஏழு பூமிகளின் பெயர்கள், விஸ்தீரணம் மற்றும் பருமன் ஆகிய விபரங்களை முன்னரே பார்த்தோம். இங்கு நாம் பூமிகள் என்று சொல்கிறோம், நரகம் என்று சொல்லவில்லை. இந்த எல்லா பூமிகளும் லோகாகாசத்தின் ஒருபக்க எல்லையிலிருந்து அடுத்தபக்க எல்லைவரையிலும் அதாவது லோகாகாசத்தை சுற்றியுள்ள வாதவலையங்கள் வரையிலும் பரவியுள்ளன. அவைகளில் வாழும் பாஃதர மண்ணுடலிகளின் விஷயம் வேறாகும். இங்கு நாம் அந்த பூமிகளுக்குள் என்ன-என்ன இருக்கிறது? அவைகளின் அமைப்பு எப்படி இருக்கிறது? முதலிய விஷயங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

முதல் பூமியின் பெயர் இரத்தினப்பிரபா பூமி யாகும். படம் 1-ல் இந்த எல்லா பூமிகளின் பெயர்கள், பருமன், அகலம், நரக படலங்கள், மற்றும் நரகர்கள் வாழும் வளைகள், அந்த வளை-குழிகளின் எண்ணிக்கை மற்றும்

இந்த பூமிகளின் வேறு பெயர்கள் முதலான விபரங்களை காணலாம். இந்த முதல் பூமியின் பருமன் 1,80,000 யோஜனை யாகும். இது மூன்று பகுதிகளாக இருக்கிறது. இதன் முதல் பகுதி அதாவது மேல்பாகத்தின் பெயர் 'கரபாகம்' ஆகும். அது, 16,000 யோஜனை பருமன் கொண்டது. 'பங்கபாகம்' என பெயர் கொண்ட இரண்டாம் பாகம் 84,000 யோஜனை பருமன் கொண்டது. 'அப்பஹுளம்' என்ற பெயர் கொண்ட மூன்றாவது பாகம் 80,000 யோஜனை பருமன் கொண்டது. முதலாவது கர பாகத்தில் 16 பூமிகள் உள்ளன. ஒவ்வொரு பூமியும் 1,000-1,000 யோஜனை பருமன் கொண்டதாகும். இது உலகின் கடைசிவரை பரவி இருக்கிறது, மற்றும் இவைகளுக்கு இடையில் எந்த இடைவெளியும் இல்லை. மேலிருந்து கீழாக இந்த பூமிகளை 1.சக்ர, 2.வஜ்ர, 3.வைடூர்ய, 4.லோஹிதா, 5.காம்சாரகல்ப, 6.கோமேத, 7.பிரவாலா,8.ஜோதிரஸ, 9.அஞ்சன, 10.அஞ்சனமூலிகா, 11.அங்கா, 12.ஸ்படிகா, 13.சந்தனா, 14.சர்வர்த்தகா, 15.பகுளா, 16.ஷைலா என்ற பெயரால் சொல்கின்றனர்.

கர மற்றும் பங்க பாகங்களில் பவனங்கள் காணப்படுகின்றன. இந்த பவனங்களில் பவனவாசி மற்றும் வியந்தர தேவர்கள் வாழ்கின்றனர். அசுர குமார தேவர்களைத் தவிற மற்ற ஒன்பது வித பவனவாசி தேவர்கள் மேலே உள்ள கர பாகத்தில் வசிக்கின்றனர், அங்கு வியந்தர தேவர்களின் பவனங்களும் இருக்கின்றன. நடுவில் உள்ள பங்க பாகத்தில் அசுரகுமார ஜாதி பவனவாசி மற்றும் ராக்ஷச ஜாதி வியந்தர தேவர்களும் வசிக்கின்றனர். பவனவாசி மற்றும் வியந்தர தேவர்களைப் பற்றி பின்னர் நாம் சர்ச்சை செய்யவிருக்கிறோம்.

நாம் அதோலோகத்தில் உள்ள அக்ருத்திம சைத்யாலயங்களுக்கு பூஜையும், நமஸ்காரமும் செய்கிறோமே அவை பவனவாசி தேவர்களின் பவனங்களில் உள்ளன. அந்த பவனங்கள் எங்கே இருக்கின்றன ? என்பதைப் பார்க்கலாம்.

மத்ய லோகத்தில் 1 ரஜ்ஜு X 1 ரஜ்ஜு அளவு உள்ள திரஸநாளியில் அசங்க்யாத தீபங்களும் சமுத்திரங்களும் உள்ளன. இவைகளில் மத்தியில் உள்ள இரண்டரை தீபங்கள் மற்றும் அவைகளுக்கு இடையில் உள்ள இரண்டு சமுத்திரங்களை தவிர அதாவது மனித உலகத்தை தவிர அவைகளுக்கு வெளியே அசங்க்யாத தீப சமுத்திரங்கள் உள்ளனவே அவைகளுக்கு கீழே பவனங்கள் இருக்கின்றன. மனித உலகத்திற்கு கீழே பவனங்கள் எதுவும் இல்லை.

முதல் பூமியின் கீழ்பாகமான 80,000 யோஜனை பருமன் கொண்ட அப்பஹுள பாகத்தில் முதல் நரகத்தின் படலங்கள் உள்ளன. படலம் என்றால் அடுக்குகள் அதாவது நம் வீடுகளில் உள்ள மாடிகளைப் போல உள்ள அமைப்புகளாகும். ஆனால் நரக படலங்களின் எண்ணிக்கை மேலிருந்து

துவங்கி கீழே செல்கிறது. இவைகளில் நரகர்கள் வாழும் பள்ளங்கள்-குழிகள் அல்லது எலிவளைகள் போன்ற அமைப்புகள் உள்ளன. பூமியின் உள் பகுதியில் பவனவாசிகளின் பவனங்களும், நரகரின் வளைகளும் இருப்பதை கவனியுங்கள். அப்படிப் பார்க்கப்போனால் இரண்டுமே பூமிக்குள் இருக்கின்றன, வெளியில் எந்த தொடர்பும் காணமுடிவதில்லை, படிகள் இல்லை, ஜன்னல்களும் இல்லை. பவனங்களுக்கும் பிலங்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு சமானத்தன்மை இருந்தபோதிலும்; பவனவாசிகள் வாழுமிடத்தை பவனம் என்றும், நரகர்கள் வாழுமிடத்தை பிலங்கள் என்றும் ஏன் சொல்லப்படுகின்றன. இந்த பிரிவு உணர்வு ஏன்? நீங்கள் வாழ்ந்தால் அது பவனம், நாங்கள் வாழ்ந்தால் அது குடிசையா? இப்படிப்பட்ட வஞ்சகமான பிரிவு உணர்வு ஏன்?

நாரகிகள் பாபிகளாவர், பாபத்தின் காரணத்தால் அவர்கள் வலைகள் அமைப்பு போன்ற பிலங்களில் வாழ வேண்டியிருக்கிறது. எங்கு பூமி, சூழ்நிலை, குகைகள், மரங்கள், நதிகள் மற்றும் அவர்களின் உடல்களுக்கு துன்பம் தரக்கூடிய சாதனங்கள் காணப்படுகின்றனவோ அவைகளை பிலங்கள் என்று சொல்கின்றனர். எலிகளின் வாழுமிடங்களை வளைகள் என்றுதான் சொல்கிறோம், வீடு என்று சொல்வதில்லை அல்லவா, அதுபோலத்தான் என அறியவும்.

இந்த 80,000 யோஜனை பருமன் கொண்ட அப்பஹுள பாகத்தில் முதல் நரகம் இருக்கிறது. இதில் அனேக படலங்கள் உள்ளன. ஒன்றின் கீழ் ஒன்றாக ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது முதலான படலங்கள் உள்ளன, ஒவ்வொரு படலத்திலும் லட்சக்கணக்கான பிலங்கள் உள்ளன. இந்த 80,000 யோஜனை பருமன் கொண்ட இடத்தில் மேலும் கீழும் 1,000 யோஜனைகள் போக மிச்ச இடத்தில் முதல் நரகத்தின் 13 படலங்கள் உள்ளன. இது முதல் நரகம் சம்பந்தமானது மட்டுமே. இரண்டு படலங்களுக்கு இடையில் பூமி இருக்கிறது. ஒவ்வொரு நரகத்திலும் சங்யாத-அசங்யாத யோஜனை அளவு கொண்ட பிலங்கள் உள்ளன. இந்த 13 படலங்களில் 30 லட்சம் பிலங்கள் முதல் நரகத்தில் உள்ளன. இங்குதான் நரக உயிர்களின் எண்ணிக்கை கூட மற்ற நரகங்களைவிட அதிகமாகும். ஏழாம் நரகத்திலிருந்து வரிசையாக இரண்டாம் நரகம்வரை உள்ள நாரகிகளின் எண்ணிக்கை அசங்க்யாத மடங்கு-அசங்க்யாத மடங்காக உயர்ந்து கொண்டே போகின்றன. ஒவ்வொரு நரகத்திலும் அசங்க்யாத நரகர்கள் வாழ்கின்றனர். இவைகளின் கூட்டுத்தொகையைவிட அசங்க்யாத மடங்கு கொண்ட நரகர்கள் முதல் நரகத்தில் மட்டுமே வாழ்கின்றனர்.

இங்கு கூட ஒவ்வொரு நரகத்திலும் அசங்க்யாத சம்யக்திருஷ்டிகள் உள்ளனர். க்ஷாயிக சம்யக்திருஷ்டி மனிதர்கள் நரக கதி செல்ல நேர்ந்தால் மரணமடைந்து சம்யக்த்துவத்துடன் முதல் நரகத்திற்கு மட்டுமே சென்று

பிறக்கின்றனர். ஆனால் பிறர் மித்யாத்துவத்துடன் சென்று அங்கு பிறந்து பிறகு சம்யக்த்துவத்தை பெறுகின்றனர். அங்கு இவ்வளவு அனுகூலமற்ற சூழ்நிலையிலும் கூட சம்யக்த்துவம் பெற முடிகிறது. சம்யக்த்துவம் பெறுதல் என்பது மனிதகதி உயிர்கள் மட்டும்தான் என்பதில்லை, நான்கு கதி உயிர்களும் சம்யக்த்துவத்தைப் பெற முடியும்.

நாம்-மனிதர்கள் என்னவோ முதலில் நம் சூழ்நிலையையும் மற்ற சௌகர்யங்களையும் பெறுவதற்கு முதலிடம் தருகிறோம். சுவாத்யாயம் செய்தல் என்பது மட்டும் வயதான பிறகு முதுமை காலத்தில் செய்லாம் என்று நினைக்கிறோம், தள்ளிப் போடுகிறோம். நமக்கு இப்போது சம்பாதிக்க வேண்டிய வயது, பிறகு ஓய்வு பெற்றதும் அவசியம் சுவாத்யாயம் செய்யலாம் என்று தள்ளிப் போடுகிறோம். அதாவது எனக்கு இப்போது சம்பாதிக்க வேண்டிய வயது, பிறகு ஓய்வு பெற்றதும் கல்யாணம் செய்து கொள்வேன் என்று சொல்லும், ஒரு இளைஞரைக்கூட இதுவரை நாம் சந்தித்ததே இல்லை. ஆனால் அவர்கள் சம்பாதிக்கவும் செய்கின்றனர், கல்யாணமும் செய்து கொள்கின்றனர், குழந்தைகளைக்கூட பெற்றுக் கொள்கின்றனர், அவர்களை நல்ல முறையில் வளர்க்கவும் செய்கின்றனர். இதுபோன்ற விஷயங்களை முதுமை வந்த பிறகு செய்யலாம் என்று தள்ளிப் போடுவதில்லை; ஆனால் சுவாத்யாயம் செய்வதை மட்டும் ஏதாவது சாக்கு சொல்லி அதை தள்ளிப் போடவும், செய்யாமல் இருக்கவும் பல காரணங்களைச் சொல்கின்றனர்.

இப்போது 13 படலங்களிலும் உள்ள 30,00,000 பிலங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பார்க்கலாம். இதன் அமைப்பை படம் 13-ல் பாருங்கள். ஒவ்வொரு நரகத்தின் ஒவ்வொரு படலத்திலும் அனேக பிலங்கள் இருக்கின்றன. அவைகளில் மத்தியில் உள்ள பிலத்தை 'இந்திரக் பிலம்' என்று சொல்கின்றனர். ஒவ்வொரு படலத்திலும் அதனதன் ஒரு இந்திரக் பிலம் இருக்கிறது, அவைகளின் பெயர்கள் கூட வெவ்வேறாக இருக்கின்றன. சாஸ்திரங்களில் அந்த பெயர்கள் பிரசித்தமானவை. அவைகளைப் பற்றி இங்கே நாம் சர்ச்சை செய்யப்போவதில்லை, ஆனால் இந்திரகம், ஸ்ரேணிபந்தம், பிரகீரணம் என்று எதைச் சொல்கின்றனர் என்பதைப் பார்க்கலாம்.

எது நட்ட நடுவில் இருக்கிறதோ அதை இந்திரக் பிலம் என்று சொல்கின்றனர். படத்தில் இது கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது. அதற்கு கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு திசைகளிலும் ஆக்னேய, நைருத்ய, வாயவ்ய, ஈசான்ய முதலான குறுக்கு திசைகளிலும் வரிசையாக பிலங்கள் இருக்கின்றன. இவ்வாறு வரிசையாக உள்ள பிலங்களை ஸ்ரேணிபந்த பிலங்கள் என்று சொல்கின்றனர். ஸ்ரேணி என்றால் வரிசையாக நேர்கோட்டில் உள்ளவை என்று பொருள். குறுக்கு திசைகள் எவை என்பது உங்களுக்கு தெரியுமல்லவா? ஆக்னேய முதலியவை உங்களுக்குத்

தெரியாதா என்ன? இல்லையென்றால் சொல்கிறேன், கேளுங்கள்! தென்கிழக்கு திசையை ஆக்னேய மூலை என்று சொல்கின்றனர், அதை அக்னிமூலை என்றும் கூறுவர். தென்மேற்கு திசையை நைருத்ய மூலை என்று சொல்கின்றனர், அதை குபேரமூலை என்றும் கூறுவர். வடமேற்கு திசையை வாயவ்ய மூலை என்று சொல்கின்றனர், அதை வாயுமூலை என்றும் கூறுவர். வடகிழக்கு திசையை ஈசான்ய மூலை என்று சொல்கின்றனர். திசைகளைக்கூட வரிசைமுறைப் படிதான் சொல்லவேண்டும் அதாவது கிழக்கு திசையில் தொடங்கி தெற்கு, மேற்கு, வடக்கு என்றுதான் சொல்ல வேண்டும், அதாவது கிழக்கில் துவங்கி கடிகாரமுள் சுற்றும் திசைப்படி சுற்றி வரும் திசைகளை அதாவது clockwise-ஆக சொல்ல வேண்டும். இந்த எட்டு திசைகளுக்கும் இடையில் இங்குமங்குமாக பூக்கள் சிதறி இருப்பதுபோல பெரிதும், சிறிதும், கோளம், முக்கோணம், சதுரம் முதலான அனேக வடிவிலும் பிலங்கள் இருக்கின்றன, அவைகளை பிரகீர்ண பிலங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஒவ்வொரு படலத்தின் மத்தியிலும் ஒரு இந்தரக் பிலம் இருக்கிறது. எட்டு திசைகளிலும் ஸ்ரேணிபந்த பிலங்கள் உள்ளன, இடையில் இங்குமங்குமாக எல்லாம் பிரகீரணக பிலங்கள் பரவியுள்ளன. இங்கு நாம் முதல் நரகத்தின் முதல் படலம் பற்றி பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எப்போது இரண்டாவது, மூன்றாவது என்று சொல்லும்போது கீழே உள்ள படலங்களை ஒவ்வொன்றாக ஏண்ணுவார்கள். முதல் நரகத்தின் முதல் படலத்தில் கிழக்கு-தெற்கு-மேற்கு-வடக்கு திசைகளில் 49-49-49-49 ஸ்ரேணிபந்த பிலங்கள் உள்ளன. இங்கு இருக்கும் இந்தரக் பிலத்தின் பெயர் சீமந்தக் பிலம் அதாவது சீமந்தக் இந்திர படலமாகும். அது எவ்வளவு பெரியது என்று தெரியுமா? 45,00,000 யோஜனை விட்டமுடையதாகும்.

இதுவரை நாம் 45,00,000 யோஜனை விட்டமுடைய மனித லோகத்தையும் 45,00,000 யோஜனை விட்டமுடைய சித்த லோகத்தையும் தான் பார்த்திருக்கிறோம். இப்போது முதல் நரகத்தின் முதல் படலத்தில் உள்ள இந்தரக் பிலமும் கூட 45,00,000 யோஜனை விட்டமுடையதாக பார்க்கிறோம். நாம் சுவர்க்க லோகத்தைப் பற்றி சர்ச்சை செய்யும்போது முதல் சுவர்க்கத்தின் முதல் படலத்தில் உள்ள இந்தரக் விமானம் கூட 45,00,000 யோஜனை விட்டமுடையதாக பார்க்கவிருக்கிறோம். இந்திரக் பிலம் கீழே நரகத்தில் உள்ளது, இந்திரக் விமானம் மேலே சுவர்க்கத்தில் உள்ளது.

துவாதசாங்கத்தில் எங்கெங்கு சம க்ஷேத்திரங்கள், மற்றும் சம எண்ணிக்கைகள் கொண்டவை என்பது பற்றி சமவாயங்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்கு முதல் நரகம் பற்றி பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இங்கிருந்து கீழே செல்லச்செல்ல ஏழாம் நரகத்தில் உள்ள

இந்திரக் பிலம் வருகிறது, இங்கு அவதிஸ்தான் என்ற பெயர் கொண்ட 1,00,000 யோஜனை விட்டமுடைய ஒரே படலம்தான் இருக்கிறது. பாருங்கள்! மேலே உள்ள முதல் இந்திரக் பிலம் 45,00,000 யோஜனை விட்டமுடையதாகவும், அதாவது இரண்டரை தீப அளவு கொண்டதாகவும், கீழே ஏழாம் நரகத்தில் உள்ள இந்திரக் பிலம் 1,00,000 யோஜனை விட்டமுடையதாகவும், அதாவது ஜம்பூதீப அளவு கொண்டதாகவும் இருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு இந்திரக் பிலங்களின் விஸ்தீரணம் குறைந்து கொண்டே போவதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

இப்போது ஸ்ரேணிபந்த மற்றும் பிரகீரண பிலங்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம், வாருங்கள். முதல் நரகத்தின் முதல் படலத்தில் நான்கு திசைகளிலும் 49, 49, 49, 49 ஸ்ரேணிபந்த பிலங்களும் குறுக்கு திசைகளில் ஒன்று ஒன்று குறைந்த 48, 48, 48, 48 ஸ்ரேணிபந்த பிலங்களும் உள்ளன. முதல் நரகத்தின் இரண்டாவது படலத்தில் மத்தியில் ஒரு இந்திரக் பிலமும், நான்கு திசைகளிலும் 48, 48, 48, 48 ஸ்ரேணிபந்த பிலங்களும் குறுக்கு திசைகளில் ஒன்று ஒன்று குறைந்த 47, 47, 47, 47 ஸ்ரேணிபந்த பிலங்களும் உள்ளன. மூன்றாம், நான்காம் முதலான படலங்களில் பிலங்களின் எண்ணிக்கை இவ்வாறு குறைந்து கொண்டே போகிறது.

இப்போது படம் 1-ஐ பார்க்கவும். முதல் நரகத்தில் 13 படலங்களும், இரண்டாம் நரகத்தில் 11 படலங்களும், மூன்றாம் நரகத்தில் 9 படலங்களும், நான்காம் நரகத்தில் 7 படலங்களும், ஐந்தாம் நரகத்தில் 5 படலங்களும், ஆறாம் நரகத்தில் 3 படலங்களும், ஏழாம் நரகத்தில் ஒரே படலமும் உள்ளன. இவ்வாறு மொத்த படலங்களின் எண்ணிக்கை 49 ஆகிறது. ஒவ்வொரு படலத்திலும் ஒன்று-ஒன்று குறைந்து எவ்வளவு பிலங்கள் குறைந்தன? 48 முறை குறைந்தன, முதல் படலத்தில் 49, 49, 49, 49 ஸ்ரேணிபந்த பிலங்கங்கள் இருந்தன. இவைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக குறைந்து ஏழாம் நரகத்தின் ஒரே படலத்தில் 1, 1, 1, 1 ஸ்ரேணிபந்த பிலங்ககளே உள்ளன. குறுக்கு திசைகளில் 47, 47, 47, 47 ஸ்ரேணிபந்த பிலங்கள் இருந்தன, கடைசியில் இவைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக குறைந்து ஏழாம் நரகத்தின் ஒரே படலத்தில் ஒன்று கூட இல்லாமல் போய்விடுகிறது. இவ்வாறாக ஏழாம் நரகத்தில் ஒரு இந்திரக் பிலமும் நான்கு திசைகளில் ஒவ்வொரு பிலம் என மொத்தம் 5 பிலங்களே உள்ளன.

முதல் நரகத்தின் 13 படலங்களிலும் மொத்தம் 30,00,000 பிலங்கள் உள்ளன. இங்கு முதல் படலத்தில் நான்கு திசைகளிலும் 49, 49, 49, 49 ஸ்ரேணிபந்த பிலங்களும் குறுக்கு திசைகளில் 48, 48, 48, 48 ஸ்ரேணிபந்த பிலங்களும் இருந்தன, இவைகள் அடுத்தடுத்த படலங்களில் ஒவ்வொன்றாக குறைந்து அதாவது ஒவ்வொரு படலத்திலும் 8 ஸ்ரேணிபந்த பிலங்கள் குறைந்து 13 படலங்களிலும் மொத்தம் 4,420 ஸ்ரேணிபந்த பிலங்கள்

இருக்கின்றன. இவைகளுடன் ஒவ்வொரு இந்திரக் பிலங்களை கூட்ட மொத்தம் 4,433 பிலங்களாகின்றன. மொத்தத்தில் மிச்சம் இருப்பவை பிரகீரணக் பிலங்களாகும், அதாவது (30,00,000—4433=29,95,567) 29,95,567 பிரகீரணக் பிலங்கள் பூக்கள் தூவப்பட்து போல கணப்படுகின்றன.

முதல் நரகத்தின் இந்திரக் பிலம் 45,00,000 யோஜனை அதாவது சங்க்யாத யோஜனை விஸ்தீரணமுடையது. ஸ்ரேணிபந்த பிலங்கள் அசங்க்யாத யோஜனை விஸ்தீரணமுடையன. பிரகீரண பிலங்கள் ஐந்தில் ஒரு பகுதி சங்க்யாத யோஜனை விஸ்தீரணமும் ஐந்தில் நான்கு பகுதி அசங்க்யாத யோஜனை விஸ்தீரணமும் கொண்டதாக உள்ளன. ஸ்ரேணிபந்தங்கள் மற்றும் பிரகீரணங்களின் மொத்த எண்ணிக்கையை எப்படிக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது பற்றிய சூத்திரம் திரிலோகஸாரம் என்ற நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் ஆதாரத்தில் சீக்கிரமாக விடை கிடைக்கிறது, ஆனால் அதைப்பற்றி இங்கு சர்ச்சை செய்யப்போவதில்லை.

முதல் நரகத்தில் 13 படலங்களும், அவைகளில் மொத்தம் 30 லட்சம் பிலங்களும் உள்ளன. இரண்டாம் நரகத்தில் 11 படலங்களும், அவைகளில் மொத்தம் 25 லட்சம் பிலங்களும் உள்ளன. மூன்றாம் நரகத்தில் 9 படலங்களும், அவைகளில் மொத்தம் 15 லட்சம் பிலங்களும் உள்ளன. நான்காம் நரகத்தில் 7 படலங்களும், அவைகளில் மொத்தம் 10 லட்சம் பிலங்களும் உள்ளன. ஐந்தாம் நரகத்தில் 5 படலங்களும், அவைகளில் மொத்தம் 3 லட்சம் பிலங்களும் உள்ளன. ஆறாம் நரகத்தில் 3 படலங்களும், அவைகளில் மொத்தம் 99.995 பிலங்களும், அதாவது ஐந்து குறைந்த 1 லட்சம் பிலங்களும் உள்ளன. ஏழாம் நரகத்தில் ஒரே படலமும், அதில் மொத்தம் 5 பிலங்கள் மட்டுமே உள்ளன. இவைகள் எல்லாம் ஏழு நரகங்களிலும் உள்ள பிலங்களின் எண்ணிக்கைகளாகும்.

இரண்டாம் நரகத்தில் 2,684 ஸ்ரேணிபந்த பிலங்களும், 11 இந்திரக் பிலங்களும் உள்ளன. மூன்றாம் நரகத்தில் 2,476 ஸ்ரேணிபந்த பிலங்களும், 9 இந்திரக் பிலங்களும் உள்ளன. நான்காம் நரகத்தில் 700 ஸ்ரேணிபந்த பிலங்களும், 7 இந்திரக் பிலங்களும் உள்ளன. ஐந்தாம் நரகத்தில் 260 ஸ்ரேணிபந்த பிலங்களும், 5 இந்திரக் பிலங்களும் உள்ளன. ஆறாவது நரகத்தில் 30 ஸ்ரேணிபந்த பிலங்களும், 3 இந்திரக் பிலங்களும் உள்ளன. ஏழாம் நரகத்தில் 4 ஸ்ரேணிபந்த பிலங்களும், 1 இந்திரக் பிலமும் உள்ளன. மொத்த பிலங்களின் எண்ணிக்கையிலிருந்து இந்த பிலங்களின் எண்ணிக்கைகளை கழித்த பிறகு அதனதன் பிரகீரண பிலங்களின் எண்ணிக்கை வரும். இந்திரக் பிலங்களின் விட்டம்-விஸ்தீரணம் கீழே கிரமமாக குறைந்து கொண்டே போகிறது. மற்ற பிலங்களின் எண்ணிக்கை, விஸ்தீரணம் இரண்டுமே கீழே கிரமமாக குறைந்து கொண்டே போகின்றன.

ஆனால் மேல் நரக படலங்களில் வாழும் நரகர்களின் ஆயுள் குறைவாக உள்ளது, கீழே செல்லச்செல்ல ஆயுள் அதிகமாகிக் கொண்டே போகிறது. நரகத்தில் குறைந்த பட்ச ஆயுள் 10,000 வருடங்களாகும், அதிக பட்ச ஆயுள் 33 கடற்காலமாகும். நாரகிகளின் உயரம் மேல் நரகத்தில் குறைவாகவும், கீழே அதிகமாகவும் அதாவது முதல் நரகத்தின் முதல் படலத்தில் மூன்று முழமாக துவங்கி கீழே ஏழாம் நரகத்தில் 500 வில் உயரமாக அதிகமாகிக்கொண்டே போகிறது.

மேல் படலத்தின் அதிக பட்ச ஆயுளுடன் ஒரு சமயம் கூட்ட கீழ் படலத்தின் குறைந்த பட்ச ஆயுளாக இருக்கிறது. உடலின் உயரம் கூட ஒவ்வொரு படலத்திலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. முதல் நரகத்தின் முதல் படலத்தில் குறைந்த பட்ச ஆயுள் 10,000 வருடமாகவும் அதிக பட்ச ஆயுள் 90,000 வருடங்களாகவும் இருக்கிறது. இரண்டாவது படலத்தில் குறைந்த பட்ச ஆயுள் ஒரு சமயம் கூடிய 90,000 வருடமாகவும், அதிக பட்ச ஆயுள் 90,00,000 வருடங்களாகவும் இருக்கிறது. மூன்றாவது படலத்தில் அதிக பட்ச ஆயுள் அசங்க்யாத பூர்வ கோடியாகவும், அதற்கு அடுத்த படலத்தில் பத்தில் ஒரு பாக ⅒ கடலளவு வருடங்களாக ஏறிக்கொண்டே போக 13 ஆம் படலத்தில் அதிக பட்ச ஆயுள் ஒரு கடற்காலமாக இருக்கிறது. உயரம் கூட மூன்று முழத்தில் துவங்கி அதிகரித்துக் கொண்டே போய் 13-ஆம் படலத்தில் உயரம் 7 வில் 3 முழம் 6 அங்குலமாக ஆகிறது. மேலும் கீழ் நரக கடைசி படலத்தில் இரண்டு-இரண்டு மடங்காகிக் கொண்டே போகிறது. நாம் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் ஒவ்வொரு நரகத்தின் கடைசி படலத்தின் அதிக பட்ச உடலின் உயரத்தையும், ஆயுளையும் காணலாம்.

நரகத்தில் அதிக பட்ச உயரமும் ஆயுளும்		
முதல் பூமி	7 வில் 3 முழம் 6 அங்குலம்	1 கடற்காலம்
இரண்டாம் பூமி	15 வில் 2 முழம் 12 அங்குலம்	3 கடற்காலம்
மூன்றாம் பூமி	31 வில் 1 முழம்	7 கடற்காலம்
நான்காம் பூமி	62 வில் 2 முழம்	10 கடற்காலம்
ஐந்தாம் பூமி	125 வில்	15 கடற்காலம்
ஆறாம் பூமி	250 வில்	22 கடற்காலம்
ஏழாம் பூமி	500 வில்	33 கடற்காலம்

இங்கு நரகத்தைத்தான் பூமி என்று சொல்கின்றனர், ஆனால் நரகம் திரஸநாளியில்மட்டுமே இருக்கிறது. பூமிகள் எல்லாம் உலக கடைசி எல்லைவரை உள்ளன. பிலங்களின் குறுக்களவு அதிகமாகும் - சங்க்யாத அசங்க்யாத யோஜனை அளவாகும். பிலங்களின் உயரம் சங்க்யாத யோஜனை அளவாகும். ஏழு நரகங்களிலும் மொத்தம் 84 லட்சம் பிலங்கள் உள்ளன. இந்த நரக பிலங்கள் முக்கோணம், நாற்கோணம் முதலான பல வடிவங்களில் உள்ளன. அவைகளில் அனேக துக்கம் தரக்கூடிய பொருட்கள் நிறைந்து கிடக்கின்றன. அங்கு மிகவும் துர்நாற்றம் வீசுகிறது, எப்போதும் இருட்டாகவே இருக்கிறது. இந்த பிலங்களின் கூரையில் தேனீக்களின் தேன்கூடுகள் போன்ற இந்த நாரகிகளின் பிறக்கும் யோனிகள் தொங்குகின்றன. அவை ஒட்டகம் முதலான பிராணிகளின் முகம் போன்ற வடிவில் இருக்கின்றன. மேலே பாகத்தில் உள்ளிருந்து பார்க்கும்போது கம்பம் போன்றும் விரிந்தும் நூற்றுக்கணக்கான முகங்களுடன் காணப்படுகின்றன. இங்கு அந்தர் முகூர்த்த காலத்தில் நாரகிகளின் உடல்கள் அமைப்பு உண்டாகிறது மற்றும் கூர்மையான ஆயுதங்களால் வெட்டுபட்டு நரக உயிர்கள் அந்த உபபாத ஸ்தானங்களிலிருந்து நரக பூமியில் விழுந்து மேலே பந்து போன்று எழும்பி மீண்டும் அங்கேயே விழுகின்றன. முதல் நரகத்தில் 125/26=7+(13/16) யோஜனை உயரத்துக்கு எழும்பி கீழே விழுகின்றன. அடுத்தடுத்த நரகங்களில் இரண்டு-இரண்டு மடங்கு உயரத்திற்கு எழும்பி கீழே விழுகின்றன. ஏழாம் நரகத்தில் 500 யோஜனை உயரத்திற்கு எழும்பி கீழே விழுகின்றன, விழும்போது அவைகளின் உடல்கள் கூர்மையான ஆயுதங்களால் வெட்டுபட்டுக்கொண்டே விழுகின்றன.

அங்கு வசிக்கும் பழைய நாரகிகள் பயங்கர சப்தத்தை எழுப்பிக் கொண்டு அங்கு வந்து, புதிதாக வந்த நாரகி உயிர்களை கொல்ல முயல்கின்றனர், அவர்களின் காயங்கள் மீது உப்பு தண்ணீரை பீச்சுகின்றனர். இங்கு கல்லூரிகளில் முதல் வருடம் சேர்ந்த மாணவர்களை மேல்வகுப்பு மாணவர்கள் ரேகிங் (ragging) செய்வது போல செய்து துன்பம் தருகின்றனர். புதிய நாரகிகள் கூட அவதி ஞானம் மூலம் முன் பவ வைரிகளை தெரிந்து கொண்டு அவர்களுடன் பயங்கரமான கொலை முயற்சிகளை மேற்கொள்கின்றனர், தங்களைத் தாங்களேயும் அடித்துக் கொள்கின்றனர்.

நாரகிகள் அவர்களின் உடல்களை ஓநாய்கள், புலிகள், நாகப்பாம்புகள், தேள்கள், கழுகு, காகம் முதலான வடிவங்களையும் மற்றும் பயங்கர ஆயுதங்களாகவும், நெருப்பாகவும் விகுர்வினையால் எடுத்து ஒருவருக்கொருவர் துன்பப்படுத்திக் கொள்கின்றனர். நரகங்களில் மாபெரும் மலைகள், வலி கொடுக்கும் நூற்றுக்கணக்கான கொடிய ஆயுதங்கள் நிரம்பிய குகைகள், நெருப்பால் சூடாக்கப்பட்ட உலோக பொம்மைகள், ஆயுதங்களுக்கு சமமான கூர்மையான கத்தி போன்ற இலைகளுடன் கூடிய மித்யா சால்மலி விருக்ஷங்கள் கொண்ட காடு போன்ற பகுதிகள்

இருக்கின்றன. உப்பு தண்ணீர், துர்நாற்றம் வீசும் இரத்தம், சீழ் வடியும் புழுக்கள் கொண்ட வைதரணி நதி ஓடுகிறது. இங்கு இரண்டு இந்திரியம் முதலான உயிர்கள் இல்லை, நாரகிகளே இந்த வடிவில் தங்களை மாற்றிக்கொண்டு தங்களுக்கும் பிற நாரகிகளுக்கும் பெரும் துக்கத்தை கொடுத்துக்கொள்கின்றனர். இங்கு பயங்கரமான உஷ்ணம் நிலவுகிறது, அந்த பயத்தால் நதியில் குதிக்கின்றனர், அந்த நதி நீரால் அவர்களின் முழு அங்கமும் எரிச்சல் அடைகிறது. நிழலுக்காக காடுகளுக்குள் செல்கின்றனர். அப்போது கூர்மையான ஆயுதங்களுக்கு சமமான இலைகளால் அவர்களுடைய உடல்கள் துளைக்கப்படுகிறது. கொதிக்கும் நீர் நிறைந்த பானைகளில் அவர்களை போட்டு அரிசி சமைப்பது போல சமைத்து துன்பம் உண்டாக்குகின்றனர். பெரிய வானல்களில் கொதிக்கும் எண்ணெய்யில் போட்டு பொறிக்கின்றனர். இங்கு பூமியை தொட்டாலே ஆயிரக் கணக்காண கத்திகளால் ஒரேசமயத்தில் வெட்டினால் வரும் துன்ப உணர்வு பெறுகின்றனர். முதல் நரகத்திலிருந்து ஐந்தாம் நரகத்தின் ¾ பகுதிவரை அக்னியின் உஷ்ணத்தைவிட மிக அதிக உஷ்ணமாகவும், அதற்கு கீழே ஏழாம் நரகம்வரை அதிக குளிர்ச்சியான சூழ்நிலை இருக்கிறது.

நாரகிகளின் உடல் அனேக நோய்களின் துன்பங்களை அனுபவிக்கின்றன. பசி, தாகம், பயம் முதலியவற்றால் அதிக துன்பங்களை சகிக்க வேண்டியவர்களாக நாரகி உயிர்கள் இருக்கின்றன. அங்கு மிகவும் துர்நாற்றம் வீசும் மண்ணை உண்கின்றனர், ஆனால் பசி உணர்வு கொஞ்சம்கூட குறைவதேயில்லை. முதல் நரக முதல் படல மண்ணை மனித க்ஷேத்திரத்தில் கொண்டுவந்து ஒரு தேவன் போடுவானானால் போட்ட அந்த மண்ணின் துர்நாற்றம் தாங்க முடியாமல் அரை கோச அளவு வரை பரவி இருக்கும் எல்லா உயிர்களும் மரணமடைந்து விடும். உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? போபால் விஷவாயு விபத்தில் நிகழ்ந்த அனேக மரணங்களை நினைத்துப் பாருங்கள், உங்களுக்கு நம்பிக்கை வந்துவிடும்!

நாரகிகளின் உடல் துண்டு துண்டாக ஆனாலும்கூட, பாதரசம் போல பிறகு மீண்டும் கூடிக்கொள்ளும். இங்கு ஆயுள் பூர்த்தியாகும் முன்னர் மரணமடைய முடியாது. மனிதர்கள் கஷாயத்திற்கு ஆட்பட்டு, துக்கம் தாங்க முடியாமல் தற்செயலாக தற்கொலை செய்து கொள்கின்றனர், நரகத்தில் அத்தகைய எந்த வசதியும் இல்லை. தான் மரணமடைந்தால் துன்பத்திலிருந்து தப்பிக்கலாம் என்று மனிதர்கள் நினைக்கின்றனர், ஆனால் அப்படிப்பட்ட உணர்வுடன் மரணம் அடைபவர்கள், நரகங்களில் பிறந்து கடற்கால காலம்வரை அதைவிடப் பெரிய கஷ்டங்களையும், வேதனைகளையும் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை தற்கொலை செய்துகொள்பவர்கள் அறிந்திருக்கவில்லை. இவைகள் எல்லாம் க்ஷேத்ர சம்பந்தமான துக்கங்களாகும். அங்கு நிகழும் சங்க்லேச உணர்வால் ஆர்த்த-ரௌத்திர தியானங்களால் நிகழும் மன சம்பந்தமான துக்கங்களாகும். நோய்களால்

உண்டாகும் துக்கம் உடல சார்ந்த துக்கமாகும். அசுரகுமார ஜாதி பவனவாசி தேவர்கள் மூன்றாம் நரகம்வரை சென்று நரகர்களுக்குள் சண்டை மூட்டுகின்றனர். அவர்களுக்கு இடையில் நிகழ்ந்த பழைய பகையை நினைவு படுத்தி அவர்களுக்குள் அடிதடியை உண்டுபண்ணி வேடிக்கை பார்க்கின்றனர்.

அங்கு செல்லும் தேவர்களுக்கு நரக சூழ்நிலைகளால் நரக துன்பம் அவர்களும் படுகிறார்களா? என்ற சந்தேகம் வரலாம். இதற்கு சமாதானம் சொல்ல உங்களிடம் நான் ஒரு கேள்வியை எழுப்புகிறேன். நமக்கு உடன் இருப்பவைகளால் சுக-துக்கம் உண்டாகிறதா? மருத்துவமனையில் நோயாளிகள் துன்பப்படுகின்றனர், அதேசமயம் அங்கு வேலை செய்யும் மருத்துவர்களும் செவிலிகளும் (doctors and nurses) துன்பப்படுகிறார்களா என்ன? சிறைச்சாலைகளில் கைதிகள் துன்பமடைவதுபோல அங்கு வேலை செய்யும் காவல் அதிகாரிகள் துன்பப்படுகிறார்களா என்ன? நாம் துக்கப்படுவது நம்முடைய ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகளால்தான் அல்லவா! உடலே நான் என்ற ஏகத்துவபுத்தி கொண்டுள்ள காரணத்தால் உடனிருப்பவைகளால் சுகமோ துக்கமோ அடைவதாக நம்பும் மூடநம்பிக்கையின் பைத்தியக்காரத் தனமான மயக்க உணர்வால்தான் நாம் சுக-துக்க அனுபவத்தை பெறுகிறோம்.

ஒவ்வொரு நரகத்திலும் அசங்க்யாத நாரகிகள் சம்யக்திருஷ்டிகளாக இருக்கின்றனர். நரகத்தில் தீவிர வேதனையை அனுபவிக்கும் போதிலும், அனுகூலமற்ற சூழ்நிலையில் வாழும்போதிலும் கூட அசங்க்யாத உயிர்கள் சம்யக்த்துவத்தை பெறுகின்றனர். இங்கு நாம் நல்ல அனுகூலமான சூழ்நிலையில் இருந்த போதிலும், நம்மில் பெரும்பாலோனோர் உபதேசத்தை கேட்டும் கேட்காதவர்கள் போல நடந்து கொள்கிறோம், போகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற தீவிர ருசியினாலும், சொத்து சுகபோக வஸ்துக்களின்மேல் பேராசை கொள்வதாலும், நரக ஆயுளை கட்டிக்கொண்டு அங்கு சென்று பிறக்க வேண்டியுள்ள நிலைக்கு நம்மை நாமே ஆட்படுத்திக் கொள்கிறோம். ஆனால் நரகத்தில் அனுகூலமற்ற சூழ்நிலையில், துக்கத்தை அனுபவிக்கும் நிலையில் 'நான் யார்?' என்று தங்களைத்தாங்களே கேட்டுக் கொள்கின்றனர். தத்துவங்களில் நம்பிக்கை கொண்டு, தத்துவ சிந்தனை செய்து சம்யக்த்துவத்தை பெறுபவர்களாக இருக்கின்றனர். மேலே சொர்க்கத்தில் வசிக்கும் தேவர்கள்கூட கீழே மூன்றாம் நரகம்வரை செல்கின்றனர், ஆனால் அவர்கள் நாரகிகளுக்கு துன்பம் கொடுக்கச் செல்வதில்லை, தர்மோபதேசம் செய்யப் போகின்றனர். இப்போது தேவகதியில் உள்ள சீதை உயிர் நரக கதியில் உள்ள இராவணனுக்கு உபதேசம் கொடுக்க செல்கிறது என்று பிரதமானுயோகத்தில் படிக்கிறோம். ஆனால் நாமோ இங்கு இராவணனை திட்டுகிறோம் இராவண உருவ பொம்மைகளை செய்து எறிக்கிறோம்.

நரகத்தில் இவ்வளவு துக்கம் இருக்கும்போது ஏன் உயிர்கள் அங்கு சென்று பிறக்கின்றன? ஏன் அங்கு செல்லவேண்டியுள்ளது? பாப உணர்வு கொள்வதால்தான் அங்கு செல்ல வேண்டியுள்ளது, அதிதீவிர சிக்கலான உணர்வுகள் (சங்க்லேச பரிணாமம்) கொள்வதால் அங்கு சென்று பிறக்கின்றனர். தீவிர கஷாயமும், அதிகப்படியான குடும்ப செயல்களிலும் அதிகப்படியான பொருள்களை கையகப்படுத்துதல் முதலான செயல்களை செய்தோ அல்லது செய்ய நினைப்பதாலோ அங்கு சென்று பிறக்க வேண்டியுள்ளது. இங்கு உயிர்கள் பணம்-சொத்து சேர்க்க வேண்டும் என்ற பேராசையால் பாபச் செயல்களை செய்துகொண்டுள்ளன. இந்தச் செல்வங்களை அனுபவிக்கப் போகிறோமோ இல்லையோ என்பதுகூட பற்றி தெரிந்திருக்கவில்லை, ஆனால் அதனால் சம்பாதித்த பாபத்தின் விளைவுகளை அவசியம் அனுபவிக்கின்றனர். இங்கு சம்பாதிக்கும் பணம், சொத்து, வீடு, மாளிகை எல்லாவற்றையும் இங்கேயே விட்டுவிட்டு அடுத்த பிறவி எடுக்கச் செல்கின்றனர். உடன் எந்த பொருளையும் எடுத்துச்செல்ல முடிவதில்லை, ஆனால் அவைகளை ஈட்டச் செய்த பாபச்செயல்களின் காரணத்தால் கட்டிக்கொண்ட பாப கர்மங்களை அவசியம் உடன் கொண்டு செல்கின்றனர். ஆனால் அவர்கள் சொல்வது என்னவோ நான் என் மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக இரவும் பகலும் கடின உழைப்பை மேற்கொள்கிறேன் என்று கூறி தனக்கு பாபத்தை சேர்த்துக் கொள்கின்றனர். இங்கு சேர்த்த சொத்துக்களை அடுத்த பிறவிக்கு எடுத்துச்செல்ல முடியுமென்றால் இந்த லோபி உயிர் தன் மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக எவ்வளவு சொத்துக்களை இங்கே அவர்களுக்காக விட்டுச் செல்லும்? என்று கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! என்ன சொல்கிறீர்கள்? எதையும் ஒரு பைசா கூட விட்டுச் செல்லாது! என்றுதானே சொன்னீர்கள்?!

இப்போது எந்த உயிர் மரணமடைந்து எந்த நரகம்வரை சென்று பிறக்க முடியும் என்று பார்க்கலாம். மனமில்லாத ஐந்து இந்திரிய விலங்கு உயிர்கள் முதல் நரகம் வரை மட்டுமே சென்று பிறக்க முடியும் ஆனால் அதற்கு கீழ் நரகங்களுக்கு சென்று பிறக்க முடியாது. ஊர்வன விலங்குகள் அதாவது பல்லி முதலான விலங்கின உயிர்கள் இரண்டாம் நரகம்வரை சென்று பிறக்க முடியும். மனமில்லாத மனித உயிர்கள் கூட, மனமில்லாத ஐந்து இந்திரிய விலங்கு உயிர்கள் போல, முதல் நரகம் வரை மட்டுமே சென்றுதான் பிறக்க முடியுமா என்ன? என்ற கேள்வி சிலருக்கு எழலாம். அதற்கு பதில் மனித பிறவி பர்யாப்தமாகவோ அல்லது அபர்யாப்தமாகவோ இருந்தாலும் அது மனமுடைய ஐந்து இந்திரிய உயிரேயாகும்.

அதாவது உங்கள் சந்தேகம் சம்மூர்ச்சன லப்தி அபர்யாப்த்த மனித உயிர் நரகம் செல்லுமா? என்பதாக இருக்கிறது. லப்தி அபர்யாப்த்த உயிர் விலங்கோ அல்லது மனிதரோ, விலங்குகளில்கூட ஏகேந்திரியம் முதல் மனமுடைய ஐந்து இந்திரிய அபர்யாப்த உயிர்கள் வரை நகர கதியோ

தேவகதியோ அதாவது அங்கு செல்லக்கூடிய ஆயுளை கட்டிக்கொள்ள முடியாது, அதனால் அவைகள் அங்கு சென்று பிறக்க முடியாது. அவைகள் விலங்கு அல்லது மனிதகதிகள் சம்பந்தமான ஆயுளை மட்டுமே கட்டிக்கொள்ள முடியம், அதனால் அவைகள் எல்லாம் அந்த இரண்டு கதிகளில் ஏதாவது ஒன்றில் மட்டுமே சென்று பிறக்க முடியும். சம்மூர்ச்சன பஞ்சேந்திரிய பர்யாப்த உயிர் இறந்து நரகத்தில் சென்று பிறக்கமுடியும்.

மூன்றாம் நரகம்வரை பறவை முதலான உயிர்களும், நான்காம் நரகம்வரை சர்ப்பம்-பாம்பு முதலான உயிர்களும், ஐந்தாம் நரகம்வரை சிங்கம் முதலான உயிர்களும், ஆறாம் நரகம்வரை மனிதப் பிறவியில் இருக்கும் பெண்பிறவி உயிர்களும், ஏழாம் நரகம்வரை ஆண் மனிதப்பிறவி உயிர்களும் மற்றும் மீன்களும் இறந்து அங்கே சென்று பிறக்க முடியும். எந்த உயிருக்கு அதாவது எந்த மனித மற்றும் மீன் பிறவி உயிர்களுக்கு வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்பு இருக்கிறதோ அவைகள் மட்டுமே இறந்து ஏழாம் நரகம் வரையும் சென்று பிறவி எடுக்க முடியும். எவ்வாறு மோக்ஷம் செல்ல வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்பு கட்டாயமோ-நியமமோ அதுபோல ஏழாம் நரகம் செல்லவும் வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்புகூட அவசியமாகும்-நியமமாகும்.

தண்டுல மத்ஸயம் போன்ற மிகச்சிறிய மீன்கூட ஏழாம் நரகம் சென்று பிறப்பதாக நாம் ஆகமங்களில் படித்திருக்கிறோமே அவ்வளவு சிறிய உடல் கொண்ட அதற்கு எப்படி வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்பு இருக்க முடியும் என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். சிறிய உடலோ அல்லது பெரிய உடலோ வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்புக்கு காரணமில்லை. வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்பு விலங்கு உயிர்களில் சிறிய மீன்களுக்கும் கூட இருக்க முடியும், ஆனால் புலி, சிங்கம் முதலான கொடிய விலங்குகளுக்கு வஜ்ரவிரஷபநாராச சம்ஹனன உடலமைப்பு இருப்பதில்லை, அதனால் அவைகள் இறந்து ஏழாம் நரகம் செல்வதில்லை, ஐந்தாம் நரகம்வரை மட்டுமே சென்று பிறக்கின்றன.

ஏழாம் நரகத்தில் உள்ள நாரகி உயிர் இறந்து நியமமாக சிங்கம் முதலான கொடிய விலங்குகளாகவே பிறக்கின்றன. சிங்கம், புலி போன்ற உயிர் ஏழாம் நரகம் சென்று பிறக்கவேண்டி இருந்தால், அவை அடுத்து மீனாக பிறந்து பிறகு அங்கிருந்து தான் செல்ல வேண்டும். ஏழாம் நரக உயிர் இறந்து மீன் பிறவி எடுப்பதில்லை, ஏனெனில் மீன்கள் சம்மூர்ச்சன பிறப்புடையவை. எல்லா நாரகி உயிர்களும் இறந்து மனமுடைய பஞ்சேந்திரிய கர்பஜ மனித அல்லது விலங்கு கதி பிறவியில் மட்டுமே சென்று பிறவி எடுக்க முடியும், சம்மூர்ச்சன பிறவிகளில் சென்று பிறப்பதில்லை.

சக்கரவர்த்தி அந்த பதவியில் இருந்து போகங்களை அனுபவிக்கும் காலத்தில் மித்யாத்துவமடைந்து இறந்தால் அவர் நியமமாக ஏழாம் நரகம் சென்று பிறக்கிறார். சம்யக்திருஷ்டி முனிதீக்ஷை எடுப்பவர்களில் சிலர் சொர்க்கத்தில் பிறவி எடுக்கின்றனர், அல்லது அதே பவத்தில் மோக்ஷமடைகின்றனர். நாம் சற்றுமுன் தண்டுல மத்ஸயம் பற்றி பார்த்தோம். அவைகள் மஹாமத்ஸய உடலின் ஆதாரத்தில் வாழ்கின்றன. அங்கு வாழ்ந்து கொண்டு இருக்குபோது மஹாமத்ஸயம் வாயை திறந்து கொண்டு தூங்கும் சமயத்தில் பல கடல்வாழ் பிராணிகள் அதன் வாய் வழியாக உள்ளே சென்று பிறகு வெளியே சென்று விடுவதைப் பார்த்து, இந்த பெரிய முட்டாள் மீன் ஒன்றைக்கூட உண்ணவில்லை, ஆனால் அதுவே நானாக இருந்தால் என் வாயை லபக் என்று மூடி அவைகளை அப்படியே விழுங்கி எனக்கு உணவாக ஆக்கி இருப்பேன் என்று கொடிய சிந்தனை-ரௌத்ரத்தியானம் செய்கிறது, ஒரு உயிரைக்கூட கொல்லாத நிலையில், அந்த கொடிய எண்ணத்தால் மட்டுமே நரக ஆயுளை கட்டிக்கொண்டு, அந்த கதியில் பிறவி எடுக்க ஏழாம் நரகம்வரை சென்று பிறந்து துன்பப்படுகிறது. நாம்கூட என்ன செய்கிறோம்? பிறருடைய செல்வ செழிப்பைப் பார்த்து, வைபவங்களைப் பார்த்து எப்படிப்பட்ட ஆர்த்த, ரௌத்திர சிந்தனைகள் செய்கிறோம் என்று சிந்தியுங்கள். தொலைக்காட்சி பெட்டியில் நாடகங்கள் மற்றும் சினிமா பார்க்கும் போது, அந்த பாத்திரங்களாகவே நம்மை கற்பனை செய்துகொண்டு தேவையோ, பிரயோஜனமோ எதுவுமின்றி ஆர்த்த, ரௌத்திர சிந்தனைகள் செய்கிறோம். இந்த உணர்வுகளால் பாப கர்மங்களை கட்டிக் கொள்கிறோம். இதனுடைய பலனை நாமே அனுபவிக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற நரக கதிகளில் பிறந்து அதிக காலம் துன்பப்பட வேண்டியுள்ளது.

ஏழாம் நரக நாரகி உயிர்கூட அங்கு சம்யக்தரிசனத்தை பெறமுடியும். சில உயிர்கள் பிறந்து அந்தர்முகூர்த்தம் கழிந்ததும், சம்யக்த்துவத்தைப் பெற்று 33 கடறகாலம் வரை சம்யக்திருஷ்டியாகவே இருந்து, பிறகு மரணமடையும் சற்று முன்பு மித்யாத்துவமடைந்து, விலங்கு ஆயுளை கட்டிக்கொண்டு பிறகு மித்யாத்துவ நிலையில் இறந்து சிங்கம் போன்ற கொடிய விலங்கு கதியில் பிறவி எடுக்கின்றன. அவைகள் சாசாதன நிலையைக்கூட அடைவதில்லை. இதோடு மட்டுமல்ல, அது எந்த கொடிய விலங்காக பிறக்கிறதோ அங்கு பிறந்து அந்த பிறவியில் சம்யக்த்துவத்தைகூட பெறுவதில்லை.

கேள்வி: மஹாவீரின் உயிர் சிங்க பிறவியில்தான் சாரண ரித்திதாரிகளின் உபதேசத்தை கேட்டு சம்யக்த்துவத்தை பெற்றதாக படித்திருக்கிறோமே! அது எப்படி?

பதில்: சிங்கத்துக்கு சம்யக்த்துவம் கிடைக்காது என்று எப்போது கூறினேன்? ஏழாம் நரகத்தில் இறந்து சிங்கமாக பிறக்கும் கொடிய மிருகத்துக்குத்தான் அந்த பிறவில் சம்யக்த்துவம் கிடைப்தில்லை என்று கூறினேன். இது அந்த ஒரு குறிப்பிட்ட பிறவி நிலைக்கே பொருந்தும்.

நரகத்திலிருந்து வெளிவரும் உயிர் தொடர்ந்து எத்தனை முறை அங்கு சென்று பிறக்க முடியும் என்பதற்குக்கூட நியமங்கள் உள்ளன. அவைகளைப்பற்றி அடுத்த பாடத்தில் பார்க்கலாம். உங்களுக்கு ஏதாவது கேள்வி இருந்தால் எனக்கு தெரியப்படுத்துங்கள், அவைகளுக்கு தக்க இடத்தில் உங்களுக்கு புரியும்படி சொல்கிறேன்.

விதேக க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள் மூன்றாம் தீர்த்தங்கரர் ஸ்ரீ பாஹு பகவானுக்கு ஜெயம் உண்டாகட்டும் என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

நரக ஆயுள் பத்த காணங்கள்

குடும்ப சம்பந்த ஆரம்ப காரியங்களில் அதீத ஈடுபாடு கொள்ளல். தேவைக்கு அதிகமாக பொருள்களை-பரிகிரஹங்களை சேர்த்தல். பாஃவ ஹிம்சை முதலான கொடிய காரியங்களில் இடைவிடாமல் ஈடுபடும் போக்கு. பிறருக்கு உரிமையான சொத்தை/செல்வத்தை அபகரித்தல். இந்திரிய சுக விஷயங்களில் தீவிர மோஹம் கொள்ளல். மரண காலத்தில் கோபம் முதலான கஷாய உணர்வு கொள்ளல்.இவைகளால் உயிர் நரக ஆயுளை கட்டிக் கொள்கிறது. ஐந்து பாபங்களில் ஈடுபடுதல், ஏழு வியசனங்களில் மூழ்குதல், ஒழுக்கமின்மை மற்றும் விரதமின்மை, தர்ம காரிய பணத்தை சொந்த செலவு செய்தல் முதலியனகூட நரக ஆயுள் கட்டக் காரணமாகும். போதை பொருள், தோல், விஷப்பொருகள், ஆயுதங்கள் முதலான ஹிம்மை வஸ்துகளை வியாபாரம் செய்தல் கூட நரகம் செல்லாமல் இருக்க தவிர்கப் படவேண்டும்!

நரகத்தில் பிறப்பு இறப்பு இல்லாத அதிகபட்ச கால இடைவெளி

முதல் நரகத்தில் 3 நாடகள், இரண்டாம் நரகத்தில் 7 நாட்கள், மூன்றாம் நரகத்தில் 1 பட்சம், நான்காம் நரகத்தில் 1 மாதம், ஐந்தாம் நரகத்தில் 2 மாதங்கள், ஆறாம் நரகத்தில் 4 மாதங்கள்,மற்றும் ஏழாம் நரகத்தில் 6 மாதங்கள் ஆகிய நேர இடைவெளிகளில் நாரகி பிறப்போ அல்லது இறப்போ இல்லாமல் இருக்க முடியும். இந்த அதிகபட்ச இடைவெளிக்குப் பிறகு நியமமாக ஏதாவது உயிர் நரகத்தில் பிறக்கவோ இறக்கவோ செய்யும். நரக உயிர்களுக்கு கண் இமைக்கும் நேரம்கூட சுகம் கிடைப்பதில்லை. அவைகள் எப்போதுமே துக்கத்தில்தான் தங்கள் வாழ்நாட்களை கழிக்கின்றனர்.

தீர்த்தங்கர பிரக்ருதி சத்தாவில் இருக்கும் நாரகி உயிர்கள் மரணமடைய 6 மாதங்கள் மீதமிருக்கும்போது தேவகணங்கள் அந்த நாரகிகளுக்கு உபசர்கங்களிலிருந்து நிவாரணமளிக்கும் வகையில் பொன்மயமான கோட்டை அமைத்து அதில் இருக்கும்படி செய்கின்றனர். அதனால் அவர்களுக்கு நரக துக்கம் வராமல் இருக்கும்படி செய்கின்றனர். கர்ம உதயம் இல்லாத இந்த சமயத்திலேயே தீர்த்தங்கர பிரக்ருதியின் சத்தாவே அதன் புண்ணிய பலத்தை காட்டுகிறது. இது தீர்த்தங்கர பிரக்ருதியின் சிறப்பான அதிசயமாகும்!

4. நரக கதியில் வருவதும், போவதும்

மூவுல அமைப்பு பற்றி நாம் திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் அதாவது சர்வக்ஞ பகவானின் அறவுரையின் ஆதாரத்தில் தெரிந்து கொண்டு வருகிறோம். இவை யாருடைய கற்பனையிலும் உதித்ததல்ல, ஆனால் முழு உண்மையாகும். நான்கு கதி உயிர்களைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டே, உயிருக்கு மனித பர்யாயம் கிடைப்பது திரவ்ய, க்ஷேத்ர, கால, பாஃவத்தால் எவ்வளவு துர்லபமானது என்பது பற்றியும் சர்ச்சை செய்திருக்கிறோம்.

'மனிதபஃவம் மிகவும் துர்லபமானதுதான், மற்றும் மனிதர்களே மோக்ஷம் அடையும் புருஷார்த்தத்தை செய்கின்றனர், ஆனால் மோக்ஷம் என்பது எதிர்காலத்தில் கிடைப்பது, அதனால் நாம் இப்போது மனிதபஃவம் கிடைப்பதற்கான புருஷார்த்தத்தை செய்யலாம், பிறகு மோக்ஷம் செல்ல புருஷார்த்தத்தை செய்யலாம் அல்லவா?' என்று உங்களில் ஒருவர் கேட்டுள்ளீர்கள்.

புருஷார்த்தம் என்னவோ பஃவமே-பிறப்பே இல்லாமல் போவதற்கு செய்ய வேண்டியதாகும். ஒரு குறிப்பிட்ட பஃவத்துக்காக புருஷார்த்தம் செய்ய விரும்பினால் அது மூடநம்பிக்கையாகும், அது குபுருஷார்த்தமாகும்-கெட்ட புருஷார்த்தமாகும். ஒருவருடைய நம்பிக்கையில் ஒரு பஃவத்துக்குக்கூட விருப்பம் இருக்குமானால், அது மஹாவிதேகத்தில் மனிதப்பிறவி சம்பந்தமானதாக இருந்தாலும் கூட, அந்த ஒரு பஃவ விருப்பத்தால் அனந்த பஃவங்களில் பிறக்கும் விருப்பம் இருப்பது தான் தெரியவருகிறது. நாம் பஃவமே இல்லாமல் போவதற்குத்தான் புருஷார்த்தம் செய்ய வேண்டும். புருஷார்த்தம் செய்தல் என்றால் நம்முடைய உண்மையான வடிவை-ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதாகும். அது மிகவும் சுலபமான ஒன்றாகும். அய்யஹோ! இங்கு இப்போது மிகவும் துர்லபமான மனித பஃவம் கிடைத்திருக்கிறது, அதை என்னவோ இழக்க விரும்புகிறாய். மேலும் எது கிடைப்பது சாத்தியம் இல்லையோ அதன் பின்னால் ஓடவே விரும்புகிறாய்! எங்கு நம் விருப்பப்படி எதுவும் நடப்பதில்லையோ, அங்கு, அதற்கு முயற்சி செய்வதை புருஷார்த்தம் என்று நம்புகிறாய்; ஏனெனில் நாம் புருஷார்த்தம் என்பதையே இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளாமல், அதை தவறாக புரிந்து கொண்டிருக்கிறோம்.

மனித பஃவம் எடுப்பதற்கு முயற்சி மேற்கொள்வாயானால், கிடைத்த இந்த மனிதபஃவம் என்னவாகும்? நாம் இப்போதே மனிதபஃவத்தில் தானே இருக்கிறோம். கிடைத்த இந்த அரிய பஃவத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கவேண்டுமல்லவா! பலர் புருஷார்த்தம் என்பதைப்பற்றி சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தால், அவரவர்களின் கற்பனைகளுக்கு ஏற்ப வெவ்வேறு விபரீதமான செயல்களில், ஏதாவது ஒன்றைச் செய்வதை புருஷார்த்தமாக

நம்புகின்றனர், விபரீத வடிவில் பரிணமிப்பதை தர்மசாதனை வடிவமாக நினைக்கின்றனர். நாங்கள் அமெரிக்காவுக்கு செல்கிறோம், அங்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் மக்கள் சுவாத்யாயம் செய்தல் என்ற பெயரில் கூடுகின்றனர். அங்கு சாஸ்திரத்தின் சில பக்கங்களைப் படித்து விட்டு, பிறகு படித்த விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்கின்றனர். ஒவ்வொருவரும் அதுபற்றி அவருடைய எண்ணம், அவருடைய கற்பனையான புரிதல் எப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொல்கின்றனர். "நான் இப்படி நினைக்கிறேன், என்னுடைய நம்பிக்கை இப்படி இருக்கிறது" என்ற பிரசங்கங்கள் நிகழ்கின்றன. எங்கு இரண்டு, நான்கு மற்றும் அதற்கு மேலுமாகக் கூடுகின்றனரோ அங்கு அத்தனை கருத்து வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எல்லா ஞானிகளின் கருத்தும் எப்போதும் ஒன்றாகவே இருக்கிறது. நாம் சுவாத்யாயம் செய்யும்போது, பரமாகமத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ, ஆச்சார்யர்கள்-ஞானிகள் என்ன எடுத்துச்சொல்லிப் புரியவைக்க முயல்கிறார்களோ, அந்த நோக்கங்களைப் புரிந்துகொண்டு சரியான தத்துவ நிர்ணயம் செய்து நாம்தான் சுயமாகவே உறுதிபடுத்த வேண்டும். திரவியானுயோகத்துடன் இந்த கரணானுயோகம் முதலான மற்ற அனுயோகங்களையும் கூட படித்து சரியாக புரிந்துகொள்ள வேண்டும். திரவியானுயோகத்திற்கு பதிலாக மற்ற அனுயோகங்களை சுவாத்யாயம் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. எந்த அனுயோகத்தாலும் எந்த பயனும் இல்லை என்றும் சொல்லவில்லை, எல்லா அனுயோகங்களின் சாரமே வீதராகம் பற்றியதாகும். அந்த வீதராகத்தை அதிலிருந்து எப்படி எடுத்து - எந்த நோக்கத்தில் எடுத்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது நம் பொறுப்பாகும்.

இந்த உயிர்களின் எண்ணிக்கைகள் எவ்வளவு? அவைகள் எங்கெங்கே காணப்படுகின்றன? - இவைகளை தெரிந்து கொள்ளும்போது சம்சார பயம் - பிறவி சுழற்சி பற்றிய பயம் நமக்கு வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட சம்சார பயம் - பிறவி சுழற்சி பற்றிய பயம் வருவதுகூட நல்லதுதான்! பஞ்ச பரிவர்த்தனை வடிவ சம்சாரசுழற்சி வடிவத்தை அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். இதனால் நாம் அனாதி காலமாக எங்கெங்கெல்லாம் சென்று பிறந்து, காலத்தை கழித்திருக்கிறோம் என்பதை அறியலாம். நாம் பணத்தை சம்பாதிக்கிறோம், செலவு செய்கிறோம், அப்படி செய்து செய்தே பல வருடங்கள் ஓடிப்போய் விடுகிறது, பஃவம் முடியும் நேரத்திற்கு அருகில் வந்த பிறகுதான் நாம் இதுவரை என்ன செய்தோம்? எதைப் பெற்றோம்? என்ற சிந்தனை வருகிறது! அரிதாக கிடைத்த இந்த மனித பஃவத்தை சரியகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றால் - நம் உண்மையான வடிவை - நான் யார் என்பதை அடையாளம் காண பிரயத்தனப்பட-முயற்சி எடுக்கவில்லை என்றால் இந்த அரிய பஃவத்தை பெற்றது கூட பெறாமல் இருப்பதற்கு சமமாகும்.

புருஷார்த்தம் மோக்ஷம் அடைய செய்யப்படுவதாகும். நாம் வேண்டி விரும்பி இராக-த்வேஷத்தை சுபாசுப பரிணாமத்தை செய்யமுடியாது, நாம் அந்த விபாவ உணர்வுகளுக்கு தலைவன் இல்லை. இராக-த்வேஷத்தை என் விருப்பப்படி என்னால் செய்யமுடியும் என்ற எண்ணமே மூடநம்பிக்கையாகும். நீங்கள் இராக-த்வேஷத்தை குறைக்க முடியுமென்றால், அந்த இராக-த்வேஷத்தையே செய்யாமலிருங்களேன், முழு வீதராகத்தை அதாவது விருப்பு வெறுப்பு உணர்வையே கொள்ளாமல் இருங்களேன் என்று நான் சொல்கிறேன். இங்கு உயிர் பேதஞான காரிய புருஷார்த்தத்தை செய்யும்போது, நற்காட்சியை-சம்யக்தரிசனத்தை பெறுகிறது, அதனாலேயே மோக்ஷமார்க்கத்தில் முன்னேற்றமடைந்து, கேவலஞானத்தையும் பெறுகிறது. நான் ஞானம் மட்டுமே யாவேன், உடலிலிருந்தும் மற்றும் என்னில் எழும் இராக-த்வேஷத்திலிருந்தும் வேறாவேன் என்று அறிந்துகொண்டு, தன்னையே அறிந்து கொண்டிருத்தலான செயலே, நாம் செய்யவேண்டிய காரியமாகும். இது சரளமாகவும், சகஜமாகவும்-இயல்பாகவும்-தானாகவே எந்த கடின உழைப்பின்றியும் நிகழக்கூடியதாகும். ஆனால் நாம் விபரீத நம்பிக்கை கொண்டிருப்பதின் காரணத்தால் இந்த மர்மமே நமக்கு தெரியாமல் மறைந்து கிடக்கிறது, இந்த விஷயமே நம் சிந்தையில் வருவதில்லை.

45,00,000 யோஜனை விட்டம் கொண்ட சித்தசிலையில் அனந்த சித்த பகவான்கள் நிலைகொண்டு இருக்கின்றனர், ஏனெனில் ஒவ்வொரு ஆறு மாதம் எட்டு சமயத்தில், 608 உயிர்கள் மோக்ஷபதத்தைப் பெறுகின்றனர். இது அனாதி காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அனாதியிலிருந்து அப்படிப்பட்ட ஆறு மாதம் எட்டு சமயங்கள் அனந்தானந்த முறை நிகழ்ந்து விட்டன, இதுவரை அனந்தானந்த உயிர்கள் சித்த அவஸ்தையைப் பெற்று விட்டனர். எது அனந்தானந்த உயிர்களால் பெறப்பட்டதோ, அது நிச்சயமாக மிகவும் சுகமாகவும், அதிசுலபமாகவுமே அடையப்படக்கூடியதாக இருக்க வேண்டும் அல்லவா!

நிகழ்காலத்தில் அசங்க்யாத உயிர்கள் சம்யக்திருஷ்டிகளாக இருக்கின்றனர். அவர்களில் தேவர்கள் அசங்க்யாதமாகவும், நாரகிகள் அசங்க்யாதமாகவும், விலங்குகதி உயிர்கள் அசங்க்யாதமாகவும் இருக்கின்றன. மனித உயிர்கள் மட்டுமே கோடிக்கணக்கில் இருக்கின்றனர். இது நிகழ முடியாத காரியமாக இருக்குமானால், இவ்வளவு உயிர்கள் எப்படி சம்யக்த்துவத்தை பெற்றிருக்க முடிகிறது? ஆகையால் இந்த புருஷார்த்தம் செய்வதும் அதன் பலனான சம்யக்துவத்தைப் பெறுவதும் துர்லபமில்லை என்பது உறுதியாகிறது, ஆனால் அந்த புருஷார்த்தத்தை செய்வதில் ருசி உண்டாவதுதான் மிகவும் துர்லபமாக இருக்கிறது. இந்த மனித பஃவம் கிடைப்பது மிகவும் துர்லபம் என்பது நம் எண்ணத்தில் வருமானால், இந்த மோக்ஷமடையும் புருஷார்த்தத்தை செய்யவேண்டும் என்ற எண்ணம் நம் சிந்தனையில் கண்டிப்பாக வரவே செய்யும்.

4. நரக கதியில் வருவதும், போவதும்

நாம் இப்போது நரகம் பற்றி தெரிந்து கொண்டிருக்கிறோம். நரகத்திற்கு எப்படிப்பட்ட உயிர்கள் செல்கின்றன? அங்கிருந்து எந்தெந்த நாரகி உயிர்கள் எங்கெங்கு சென்று பிறக்கின்றன? எங்கு எத்தனை முறை பிறவி எடுக்கின்றன? என்பது சம்பந்தமான நியமங்கள் - விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகள்-நியமங்கள் யாராலும் வகுக்கப்பட்டதல்ல, இவைகள் சகஜமாக தானாகவே நிகழும் செயல்களாக இருக்கின்றன என்பதை அரஹந்த பகவான் தன் கேவலஞானத்தால் நேரடியாக அறிந்து, நமக்கு எடுத்துச்சொல்லி இருக்கிறார். "அப்படி ஏன்?" என்ற சந்தேகமோ, கேள்வியோ இங்கு எழுவதில்லை, அப்படி எழுந்தால் அது அர்த்தமற்றதாகும். 'தவளா' என்ற ஆகமத்தில், ஆச்சார்ய வீரசேனஸ்வாமி, சிஷ்யன் கேள்வி கேட்பது போல அவரே இப்படி ஒரு கேள்வியை எழுப்பி இருக்கிறார். அவரே அதற்கு பதில் சொல்லும்போது "அப்படிதான் வஸ்துவின் இயல்பு-ஸ்வபாவம்-தன்மை இருக்கிறது, உங்கள் கேள்விக்கு பதில் சொல்வதற்காக வஸ்து ஸ்வபாவம் கட்டுப்பட்டதாக இல்லை." என்று எழுதி இருக்கிறார். இப்போது நாம் நரகம் செல்லும் உயிர்கள் சம்பந்தமான சில சிறப்பு அம்சங்களைப் பற்றி பார்க்கலாம்.

எந்த உயிராவது சம்யக்த்துவத்துடன் நரகத்தில் சென்று பிறக்குமானால், அது முதல் நரகத்திற்கு மட்டுமே செல்லும், ஏனென்றால் எந்த உயிரும் சம்யக்த்துவத்துடன் இரண்டிலிருந்து ஏழாம் நரகம் வரை சென்று பிறக்க முடியாது. சம்யக்த்துவத்துடன் நரகம் செல்லும் உயிர் சம்யக்த்துவம் பெறும்முன் மித்யாத்துவ அவஸ்தையில், நரக ஆயுளை கட்டிக்கொண்ட பிறகு சம்யக்துவத்தைப் பெறமுடியும். சம்யக்த்துவ நிலையை அடைந்த மனித அல்லது விலங்கு கதியில் இருக்கும் உயிர்கள், ஆயுள் கர்மத்தை கட்டுமானால், நியமமாக தேவ ஆயுளையே கட்டிக் கொள்ளும்.

இங்கு நரக ஆயுள் பற்றி பேசுகிறோம், நரக கதி பற்றி இல்லை. ஒருமுறை அடுத்த பஃவ ஆயுள் கட்டிவிட்டால், பிறகு அதை வேறு ஆயுளாக மாற்ற முடியாது. உதாரணமாக, ஸ்ரேணிக அரசன் மித்யாத்துவ நிலையில், யசோதர முனிவர்மேல் இறந்த நாகப்பாம்பை போட்டபோது, ஏழாம் நரக 33 கடற்கால நரக ஆயுளை கட்டிக் கொண்டார். பிறகு அவர் சம்யக்தரிசனத்தை பெற்றார். க்ஷாயிக சம்யக்திருஷ்டியாகக்கூட ஆனார். தீர்த்தங்கர பிரக்ருதியைகூட கட்டிக்கொள்ளத் துவங்கினார். அப்போது அவருடைய நரக ஆயுளின் ஸ்திதி 33 கடற்கால நிலையிலிருந்து குறைந்து 84,000 வருடமாக ஆனதே ஒழிய வேறு ஆயுளாக மாற்றமடையவில்லை; அவர் நரகம் செல்வதிலிருந்து தப்பிக்க முடியவில்லை. அவர் இப்போது முதல் நரக நாரகியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த நிலையிலும் ஒவ்வொரு சமயமும் தீர்த்தங்கர பிரக்ருதியைக்கூட கட்டிக்கொண்டுதான் இருக்கிறார். அங்கு ஆயுளை பூர்த்தி

செய்தபிறகு, இங்கு நம் பரதக்ஷேத்திரத்தில், வரும் ஏறுகாலத்தில், “மஹாபத்மர்” என்னும் முதல் தீர்த்தங்கரராகப் பிறவி எடுக்கப் போகிறார்.

எந்த உயிராவது இரண்டாம் அல்லது மூன்றாம் நரக சம்பந்த ஆயுளை கட்டிக்கொண்டிருந்து பிறகு சம்யக்த்துவத்தை பெற்று தீர்த்தங்கர பிரக்ருதியைக்கூட கட்டிக்கொள்ள துவங்கியிருந்தாலும்; அந்த உயிர் சம்யக்த்துவத்துடன் இரண்டாம் அல்லது மூன்றாம் நரகம் சென்று பிறப்பதில்லை. இங்கு மரணமடைய ஒரு அந்தர்முகூர்த்த காலம் இருக்கும்போது, மித்தியாத்துவத்திற்கு வந்து மரணமடைந்து, பிறகு இரண்டாம் அல்லது மூன்றாம் நரக உயிராக மித்யாத்துவ அவஸ்தையில்தான் பிறவி எடுக்க வேண்டும். ஆனால் அங்கு பிறவி எடுத்து அந்தர்முகூர்த்த காலம் கழிந்ததும், மீண்டும் சம்யக்த்துவத்தை பெற்று, தீர்த்தங்கர பிரக்ருதியைக்கூட மீண்டும் கட்டிக்கொள்ள துவங்குவர். பிறகு அந்த நரக ஆயுள் முடிந்ததும் மரணமடைந்து கர்ம பூமியில் தீர்த்தங்கரப் பிறவி எடுப்பர். அப்போது இந்த உயிர்களின் சம்யக்த்துவம் விடுபடுவதில்லை, அங்கு அவர்கள் க்ஷயோபசமிக அதாவது வேதக சம்யக்திருஷ்டியாகவே இருந்து, அந்த நிலையிலேயே மரணித்து பிறகு இங்கு கர்மபூமியில் மனிதராகப் பிறந்த பிறகு, க்ஷாயிக சம்யக்திருஷ்டியாகி, பின்னர் தீர்த்தங்கர நிலையை பெறுவர்.

க்ஷாயிக சம்யக்திருஷ்டியின் சம்யக்துவம் விடுபடுவதில்லை. நரகத்திற்கு சம்யக்துவத்துடன் செல்லும் உயிர், நியமமாக க்ஷாயிக சம்யக்திருஷ்டியாகவே இருக்கவேண்டும். அல்லது க்ஷாயிக சம்யக்துவம் பெற துவங்கிய க்ருதக்கிருத்ய சம்யக்திருஷ்டியாக அதாவது இன்னும் அந்தர்முகூர்த்த காலத்தில் க்ஷாயிக சம்யக்திருஷ்டியாகும் நிலையில் மரணமடைந்து முதல் நரகத்தில் சென்று பிறந்து, க்ஷாயிக சம்யக்திருஷ்டியாக ஆகக்கூடிய உயிராக இருக்கவேண்டும். நரகப்பிறவியை விடுங்கள், யார் முதலில் விலங்கு ஆயுளை கட்டிக்கொண்டு பிறகு சம்யக்துவத்தை பெற்ற உயிராக இருந்தால், அந்த உயிர் சம்யக்துவத்துடன் போகபூமி விலங்காகத்தான் சென்று பிறக்கும். இதற்குக்கூட விதி-நியமம் இருக்கிறது. அது என்னவென்றால் அந்த உயிர் க்ஷாயிக சம்யக்திருஷ்டி உயிராக இருந்தால் மட்டுமே சம்யக்துவத்துடன் விலங்கு கதிக்கு சென்று பிறக்க முடியும்.

இப்போது நாம் வாழும் இந்த பரதக்ஷேத்திரத்தில் ஐந்தாம் காலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஐந்தாம் காலத்தில் யாரும் க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறமுடியாது. அதனால் சம்யக்துவத்துடன் போகபூமி விலங்காகக்கூட சென்று பிறக்க முடியாது. இந்த காலத்தில் மனிதர்கள்கூட சம்யக்துவத்துடன் இறந்து போகபூமி மனிதராகவும் பிறக்க முடியாது, ஏனெனில் அவர்கள்கூட இந்த காலத்தில் க்ஷாயிக சம்யக்திருஷ்டியாக ஆவதில்லை. அதனால் சம்யக்துவத்துடன் மரணிப்பது மற்றும் சம்யக்துவத்துடன் அடுத்த பிறவிக்கு செல்வது மனிதர்களுக்குக்கூட இந்த

ஐந்தாம் காலத்தில் சாத்தியமில்லை என்கிறபோது, நாம் விலங்குகள் பற்றி பேச என்ன இருக்கிறது?! ஆனால் இந்த காலத்திலும்கூட யார் வேண்டுமானாலும் வேதக(க்ஷயோபசமிக) சம்யக்துவத்துடன் மரணமடைந்து, தேவகதியில் அதுவும் வைமானிக தேவகதியில் சென்று மட்டுமே பிறக்க முடியும். யாராவது இந்த பஞ்சம காலத்தில் மரணமடைந்து போகபூமியில் அல்லது விதேகக்ஷேத்திர கர்மபூமியில் சென்று மனிதராகப் பிறக்க வேண்டுமென்று நினைத்தால், சிந்தியுங்கள்! இங்கு வேதக சம்யக்திருஷ்டியாக இருந்தாலும், மரணமடையும் முன் மித்யாதிருஷ்டியாகி மரணித்து, மித்யாத்துவத்துடன் சென்றுதான் அந்த தேசங்களில் மனித கதியில் பிறக்க முடியும். தேவ மற்றும் நரககதி சம்யக்திருஷ்டிகள் மட்டுமே மரணமடைந்து கர்ம பூமியில் நாலாம்கால நிலை உள்ள பூமி எங்கு இருக்கிறதோ அங்கு சென்று சம்யக்துவத்துடன் மனிதராகப் பிறக்கமுடியும். இந்த பரத க்ஷேத்திரத்தில் ஐந்தாம் காலத்தில் எந்த மனிதரும் சம்யக்துவத்துடன் பிறவி எடுக்க முடியாது!

க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறும் உயிர் கர்மபூமி மனிதராக இருக்க வேண்டியது அவசியமாகும். அது மட்டுமல்லாமல் யார் 4, 5, 6 அல்லது 7-வது குணஸ்தான வேதக சம்யக்திருஷ்டியோ, அவர்களே தீர்த்தங்கரர், கேவலி அல்லது சுருதகேவலிகளில் யாராவது ஒருவரின் பாதமூலத்தில் இருந்தால் மட்டுமே க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறும் செயலை துவங்க முடியும். அதனால் யார் முதலில் சம்யக்திருஷ்டியோ, அவர்களே க்ஷாயிக சம்யக்திருஷ்டியாக ஆகமுடியும். மித்யாத்துவ நிலையிலிருந்து யாரும் நேராக க்ஷாயிகசம்யக்துவத்தைப் பெறமுடியாது. உபசம சம்யக்துவத்திலிருந்து கூட எந்த உயிரும் நேராக க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறமுடியாது. நாலாம் காலத்தில் பிறந்த வேதகசம்யக்துவ சம்யக்திருஷ்டி மனிதர்களே தீர்த்தங்கரர், கேவலி அல்லது சுருதகேவலிகளில் பாதமூலத்தில் இருந்து க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறும்செயலை ஆரம்பிக்க முடியும் என்பது விதிமுறையாகும். க்ஷாயிக சம்யக்துவத்தைப் பெறுவது என்றால் அனந்தானுபந்தியின் நான்கு மற்றும் தர்சனமோஹனீயத்தின் மூன்று கர்ம பிரக்ருதிகளை சத்தாவில் இல்லாமல் செய்வது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் அனந்தானுபந்தி கர்ம பரமாணுக்கள் சாரித்திர மோஹனீயத்தின் மற்ற மூன்று நிலை பிரக்ருதிகளாக சங்கரணமித்து அழிவடைகின்றன, இதை அனந்தானுபந்தியை விசம்யோஜனம் செய்தல் என்பர். இது எனவோ நான்கு கதிகளிலும் நிகழமுடியும். ஆனால் மனிதர்களே தர்சனமோஹனீய பிரக்ருதிகளை அழித்து சத்தாவில் இல்லாமல் க்ஷபணம் செய்யமுடியும், அதாவது கிரமமாக மித்யாத்துவம், சம்யக்மித்யாத்துவம் இரண்டையும் சம்யக்துவ பிரக்ருதியாக மாற்றி அழிக்க முடியும். துவக்கத்திலிருந்து இந்தநிலை அடையும் வரையிலான இடைப்பட்ட காலத்தில் இந்த உயிர்

மரணமடைவதில்லை. இப்போது சம்யக்துவப் பிரக்ருதி மட்டுமே இந்த உயிர்களிடம் மிச்சமிருக்கிறது, அதைக்கூட அந்தர்முகூர்த்த காலத்தில் உதயமடையவைத்து அழிக்கப்படுகிறது. இந்த காலத்தில் அந்த உயிர் மரணமடையக்கூடும், அந்த உயிர் முன்னரே எந்தகதி சம்பந்தமான ஆயுளை கட்டியுள்ளதோ அங்கு சென்று அந்த கதியில், அதாவது நான்கு கதியில் எந்த கதியில் வேண்டுமானாலும் சென்று பிறக்க முடியும். இந்த நிலையை 'க்ருதக்ருத்ய வேதக சம்யக்திருஷ்டி' என்று சொல்கின்றனர். அங்கு சென்று சம்யக்பிரக்ருதிகளையும் அழிவடையச்செய்த அந்தர்முகூர்த்த காலத்தில் அந்த உயிர் க்ஷாயிக சம்யக்திருஷ்டியாக ஆகிவிடுகிறது.

இவ்வாறு தர்சனமோஹனீயத்தின் அழிவின்-க்ஷபணத்தின் துவக்கம் கர்மபூமி வேதக சம்யக்திருஷ்டி உயிரால் மட்டுமே செய்யமுடியும் என்பதைப் பார்க்கிறோம். மற்றகதி உயிர்கள், அதாவது அது போகபூமி மனித உயிராக இருந்தாலும்கூட அதன் துவக்கத்தை செய்யமுடியாது. ஆம், க்ருதக்ருத்ய வேதகராகவோ அல்லது க்ஷாயிகராக ஆன பிறகோ உயிர் நன்கு கதிகளில் எந்த கதிக்கு வேண்டுமானாலும் சென்று பிறக்க முடியும். முன்னர் எந்த ஆயுள் கட்டிக்கொண்டுள்ளதோ அங்கு செல்லும் அல்லது பிறகு ஆயுளை பந்திக்குமானால் தேவகதி ஆயுளை மட்டுமே கட்டிக்கொண்டு அங்கு சென்று பிறக்கும், மேலும் எந்த ஆயுளையும் கட்டிக்கொள்ளாமல் அதே பிறவியில் மோக்ஷ பதவியைக்கூட அடையவும் முடியும்.

தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்த துவக்கம்கூட கர்மபூமி மனிதருக்கு, தீர்த்தங்கரர் அல்லது கேவலியின் பாதமூலத்தால்தான் உண்டாகிறது. சம்யக்திருஷ்டிக்கே இந்த பந்தம் உண்டாகிறது. ஔபசமிக, வேதக அல்லது க்ஷாயிக மூவகை சம்யக்திருஷ்டிகளுமே, இந்த தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்த துவக்கத்தைச் செய்யமுடியும். ஒருமுறை தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்தம் துவங்கிவிட்டால், பிறகு அது எட்டாம் குணஸ்தானம் வரை தொடர்ந்து பந்தமாகிக் கொண்டேதான் இருக்கும். தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்தத்தை துவங்கிய அந்த மனித உயிர் தேவராகப் பிறக்கும், ஆனால் முன்னரே நரக ஆயுள் கட்டி இருந்தால் மூன்றாம் நரகம்வரை சென்று பிறக்கக்கூடும். ஆனால் போகபூமியில் மனதராகவோ, விலங்காகவோ பிறப்பதில்லை. தேவ அல்லது நரக பிறவி எடுத்தபிறகுகூட அங்குகூட தீர்த்தங்கரப் பிரக்ருதியை பந்தித்துக்கொண்டே இருப்பார்கள். பிறகு அங்கிருந்து மனித பிறவி எடுத்து கேலஞானத்தை பெற்று தீர்த்தங்கரப் பதவியை பெறுகின்றனர்.

மூன்றாம் நரக உயிர்களும் தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தம் செய்து கொண்டு அங்கிருந்து மனிதராகி தீர்த்தங்கரராக ஆகமுடியும் என்பதைப் பார்த்தோம். நான்காம் நரகத்திலிருந்து வந்து மனித பிறவி எடுக்கும் உயிர், தீர்த்தங்கரராக ஆக முடியாது, ஆனால் அதே பவத்தில் மோக்ஷம் செல்லமுடியும். ஐந்தாம் நரகத்திலிருந்து வந்து மனித பிறவி எடுக்கும் உயிர், நிர்கிரந்தமுனி

நிலைவரை செல்லமுடியும். ஆறாம் நரகத்திலிருந்து வந்து மனித பிறவி எடுக்கும் உயிர் முனிநிலை அடைய முடியாது, ஆனால் பிரதிமாதாரி நிலைவரை செல்ல முடியும். ஏழாம் நரகத்திலிருந்து வந்து பிறவி எடுக்கும் உயிர் 3, 4, மற்றும் ஐந்தாம் குணஸ்தானத்தைக்கூட பெறமுடியாது, சம்யக்துவத்தைக்கூட பெறமுடியாது, மித்யாத்துவ குணஸ்தானத்திலேயே தான் இருக்கும். ஏழாம் நரகத்திலிருந்து வந்து பிறவி எடுக்கும் உயிர் சிங்கம், புலி போன்ற கொடிய மனமுடைய கர்பஜ விலங்கு கதியில்தான் பிறக்கும். முதல் நரகத்திலிருந்து ஆறாம் நரக நாரகி உயிர், அங்கு மரணமடைந்து மனமுடைய பஞ்சேந்திரிய கர்பஜ விலங்காகவோ அல்லது பர்யாப்த மனித கதியிலோதான் பிறக்கும். சம்மூர்ச்சன பஞ்சேந்திரிய பிறவியில்கூட பிறப்பதில்லை.

தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்த துவக்கம் தீர்த்தங்கரர் அல்லது கேவலியின் பாதமூலத்தில்தான் உண்டாகிறது என்றால் வேறு பிறவி எடுக்கும் உயிர்கள் தீர்த்தங்கரருக்கு முன்னால் தான் மரணமடையுமா? என்ற கேள்வியை கேட்டிருக்கிறீர்கள்.

தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்த துவக்கம்கூட கர்மபூமி மனிதருக்கு, தீர்த்தங்கரர் அல்லது கேவலியின் அருகில் இருக்கும்போது - அதாவது அவர்களுடைய பாதமூலத்தில்தான் உண்டாகிறது. ஆனால் அது துவங்கிவிட்டால் தொடர்ந்து அந்த பந்தம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். பந்தம் நிகழ்ந்துகொண்ட இருக்க, தீர்த்தங்கரர் அல்லது கேவலியின் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தீர்த்தங்கரப் பிரக்ருதி கட்டிக்கொண்டு இருக்கும் உயிர், எங்கு மரணமடைந்தாலும் அந்த பிறவியிலும், அடுத்த பிறவியிலும் அதன் பந்தம் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். அந்த உயிர், தீர்த்தங்கரின் முன்னர்தான் மரணமடைய வேண்டும் என்ற நியமம் எதுவும் இல்லை. உதாரணமாக, கிருஷ்ணரின் மரணம் சங்லேச-துக்க பரிணாமத்தில் காட்டில் நிகழ்ந்தது, இறந்து மூன்றாம் நரகம் அடைந்தார். மரண சமயத்தில் மித்யாத்துவ நிலையை அடைந்து மரணமடைந்தார், நரகத்தில் சென்று பிறந்த அந்தர் முகூர்த்த காலத்தில் வேதக சம்யக்துவியாகி, தீர்த்தங்கரப் பிரக்ருதி பந்தத்தையும் மீண்டும் கட்டிக்கொள்ளத் துவங்கினார். இப்போது அப்படிப்பட்ட உயிர் மீண்டும் மித்யாத்துவ நிலையை அடைவதில்லை. எதுவரை மித்யாத்துவத்தில் இருக்கிறதோ, அந்த அந்தர் முகூர்த்த காலம்வரையில் மட்டுமே தீர்த்தங்கர பிரக்ருதியின் பந்தம் நின்று போகிறது, பிறகு வேதக சம்யக்துவம் பெற்றதும் தானாகவே அது கட்டத் துவங்கி விருகிறது. எந்த தீர்த்தங்கர பிரக்ருதி கட்டிக் கொள்ளும் உயிர், இரண்டாவது அல்லது மூன்றாவது நரகம் செல்கிறதோ அந்த உயிர்களுக்கு மட்டுமே இந்த நியமம் பொருந்தும்.

நரகத்திலிருந்து வெளிவரும் உயிர் என்னவாகும் என்பதையும், அது என்னவாக ஆகமுடியாது என்பதையும் நாம் இதுவரை பார்த்தோம். அங்கிருந்து வரும் உயிர் நாராயணனாக ஆகமுடியாது. நாராயணன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால், அதைப்பற்றி இப்போது சொல்கிறேன், கேளுங்கள்!

பாருங்கள்! சலாகாபுருஷர்கள் மொத்தம் 63 பேர், அதில் 24 பேர் தீர்த்தங்கரர்கள், 12 பேர் சக்கரவர்த்திகள், 9 பேர் நாராயணன்கள்-வாசுதேவர்கள், 9 பேர் பிரதி நாராயணன்கள்-பிரதி வாசுதேவர்கள், 9 பேர் பலபத்ரர்கள்-பலராமர்கள் ஆவர். இவர்கள் கர்மபூமியின் ஆரிய கண்டத்தில், ஏறு மற்றும் இறங்கு காலத்தின், நான்காம் காலத்தில்-துஷ்மாசுஷ்மா-தீநற்காலத்தில் பிறப்பார்கள். இவர்களில் நரகத்திலிருந்து வரும் உயிர்கள் சக்கரவர்த்தியாகவோ, நாராயணனாகவோ, பிரதி நாராயணனாகவோ, பலபத்ரராகவோ பிறப்பதில்லை, ஆனால் முதல் மூன்று நரக உயிராக இருந்தால் தீர்த்தங்கரராகப் பிறக்க முடியும்.

கரணானுயோகத்தில் இப்படிப்பட்ட பல நியமங்கள் நிறம்பியுள்ளன. ஒருமுறை நரகத்திலிருந்து வெளிவந்த உயிர், மீண்டும் நரகத்திற்கு அதிகபட்சம் எத்தனை முறை செல்லமுடியும்? என்று கேள்வியை உங்களில் ஒருவர் கேட்டுள்ளீர்கள். ஏனெனில் நாம் எங்காவது சென்று வந்தால், நமக்கு அந்த இடம் பிடித்திருந்தால் அங்கு மீண்டும மீண்டும் செல்ல விரும்புகிறோம், பிடிக்கவில்லை என்றால் அங்கு போகவே விரும்புவதில்லை. அதனால்தான் இந்த கேள்வியை கேட்டுள்ளீர்கள் என்று நினைக்கிறேன்!

மனமில்லாத பஞ்சேந்திரிய விலங்கு மரணமடைந்து முதல் நரகம் வரை செல்ல முடியும் ஆனால் அங்கிருந்து மீண்டும் மனமில்லாத விலங்கு உயிராகப் பிறக்கமுடியாது, மனமுடைய கர்பஜ ஐம்பொறி பிறவியில்தான் பிறக்கும். கர்பஜ என்றால் மாதா-பிதா நிமித்தத்தால் எடுக்கும் பிறவி என்று பொருள். உடனே எங்களுக்கு கர்பஜ மற்றும் சம்மூர்ச்சன பிறவிகள் பற்றி விளக்குங்கள் என்பது உங்கள் கேள்வியாக இருக்கிறது.

சம்மூர்ச்சனம் என்றால் மாதா-பிதா நிமித்தமில்லாமல், பிறக்கும் யோனியின் சூழ்நிலையில் இருந்தே உடலை செய்யும் பரமாணுக்களை ஈர்த்து அந்தர்முகூர்த்த காலத்தில், தனக்கு வேண்டிய உடலை, பிறக்கும் உயிரே செய்து கொள்ளும் பிறவியாகும். ஒரு பொறி முதல் நான்கு பொறி வரை பிறக்கும் எல்லா பிறவிகளும் சம்மூர்ச்சன பிறப்புக்களே யாகும். எல்லா லப்திஅபர்யாப்த விலங்கு மற்றும் மனித பிறவிகள்கூட சம்மூர்ச்சன பிறப்புக்களே யாகும். பர்யாப்த ஐம்பொறி மனமுடைய அல்லது மனமில்லாத விலங்கு கர்பஜமாகவோ அல்லது சம்மூர்ச்சனமாகவோ இருக்கமுடியும். மகர, மச்ச, மத்சயம் (குவளை, சிறிய, பெரிய மீன்கள்) முதலானவை சம்மூர்ச்சன

பிறவி எடுப்பவைகளாகும். சுயம்பூரமண சமுத்திரத்தில் அசங்க்யாத சம்மூர்ச்சன மாஹாமத்சய-மிகப்பெரிய மீன்வகை உயிர்கள் ஐந்தாம் குணஸ்தான உயிர்களாகக்கூட இருக்கின்றன. பிறந்த பிறகு ஒரு அந்தர்முகூர்த்த காலத்திலேயே அவைகள் சம்யக்துவத்தை பெற்றுவிடக்கூடியவைகளாக இருக்கின்றன.

நாம் மனமில்லா ஐம்பொறி உயிர்கள் பற்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்த உயிர்கள் இறந்து முதல் நரகம் சென்றன, அங்கிருந்து மனமுடைய ஐம்பொறியாக (மனித பிறவியிலோ, விலங்கு பிறவியிலோ) பிறந்தன, பிறகு மீண்டும் மனமில்லாத பிறவி எடுத்து மீண்டும் நரகம் செல்லமுடியும். இதேபோன்ற பிறவி சுழற்சியை அதிகபட்சம் எட்டுமுறை செய்யமுடியும். இது தொடர்ச்சியான மனமில்லா உயிர்கள் பற்றி இல்லை, ஏனெனில் இடையில் ஒரு மனமுள்ள பிறவியும் எடுக்க வேண்டியுள்ளது.

இரண்டாம் நரகம் வரை செல்லக்கூடிய எல்லா ஊர்வனவகை உயிர்கள் அதற்கு கீழே செல்வதில்லை. இரண்டாம் நரகத்திலிருந்து கிளம்பி மனமுடைய பிறவி எடுத்து மீண்டும் இரண்டாம் நரகத்திற்கு சென்று பிறக்கும் இதே போன்ற பிறவி சுழற்சியை ஏழுமுறை செய்ய முடியும்.

தேவகதியில் கீழ்முத்தேவ பிறவியிலும், சௌதர்ம, ஈசான கல்பவாசி தேவர்களும் இறந்து ஒருபொறி உயிராகப் பிறக்க முடியும், ஆனால் நரக உயிர்கள் இறந்து ஒருபொறி உயிர்களாகப் பிறப்பதில்லை, மனமுடைய ஐம்பொறி உயிர்களாகவே பிறவி எடுக்கும்.

கேள்வி: நரகத்தில் அப்படி என்னபுண்ணிய பந்தம் செய்து அவைகள் மனமுடைய ஐம்பொறி உயிர்களாகவே பிறவி எடுக்கின்றன?

பதில்: அடேடே! பாதர நிகோத உயிர்கள் இறந்து மனித பிறவி எடுத்து அதே பிறவியில் மோக்ஷம் செல்ல முடியுமென்றால், அவைகள் எப்படிப்பட்ட என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்? என்று சொல்லுங்கள் பார்க்கலாம்! அவைகள்கூட மனிதஆயுள், மனிதகதி, வஜ்ரவிரஷபநாராச சம்ஹனனம் முதலான கர்மங்களை கட்டிக்கொண்டே அவைகள் பிறக்க வேண்டுமல்லவா!! நாம் கிரியைகளில்தான் புண்ணியம் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு அந்த கிரியைகளை தேடுகிறோம்! நரகத்தில் அசுப லேஷ்யா இருக்கலாம், அதில் மந்த தன்மை வருமானால், விசுத்தி உண்டாகிறது, அதனால் புண்ணிய பந்தமும் நிகழ்கிறது. அங்கு அந்த கடுமையான சூழ்நிலையிலும் அந்த உயிர்கள் சம்யக்துவத்தைப் பெறுகின்றன என்றால், பர்யாப்த மனமுடைய ஐம்பொறி உயிர்கள் பற்றி என்ன சொல்லவேண்டி இருக்கிறது? அந்தந்த நரகத்தில் அதற்கு உகந்த லேக்ஷ்யைகள் இருக்கின்றன - முதல் நரகத்தில் காபோத லேஷ்யாவும், இடைபட்ட நரகங்களில் நீல லேஷ்யாவும், எல்லாவற்றிற்கும் கீழே கிருஷ்ண லேஷ்யாவும் இருக்கின்றன.

கேள்வி: நீங்கள் திரவ்யலேஷ்யா பற்றி சொல்கிறீர்களா அல்லது பாவ லேஷ்யா பற்றி சொல்கிறீர்களா?

பதில்: இங்கு பாவலேஷ்யா பற்றி பேசுகிறோம்-உயிரின் உணர்வு நிலைபற்றி-பரிணாமம் பற்றி பேசுகிறோம். எல்லா நாரகிகளின் திரவிய லேஷ்யாவும் அதாவது உடலின் நிறமும் கிருஷ்ண லேஷ்யாவாகவே இருக்கும், மிகவும் கருப்பாகவே இருக்கும். இந்த உயிர்கள் மூன்றாம் நரகத்திற்கு ஆறு முறையும், நான்காம் நரகத்திற்கு ஐந்து முறையும், ஐந்தாம் நரகத்திற்கு நான்கு முறையும், ஆறாம் நரகத்திற்கு மூன்று முறையும் செல்ல முடியும். ஏழாம் நரகத்திலிருந்து யாரும் மனிதப்பிறவி எடுக்க முடியாது, மனமுடைய பர்யாப்த கர்பஜ விலங்காகவே பிறக்க முடியும். பிறகு மீன் பிறவி எடுத்து ஏழாம் நரகம் இரண்டு முறை செல்ல முடியும்.

கேள்வி: Test tube babies - பரிசோதனை கூடத்தில் சோதனைக்குழாயில் உற்பத்தி யாகும் “க்ளோன்” களில் உயிர் இருக்கிறதா என்ன?

பதில்: இது நாம் இங்கு பார்த்துக் கொண்டிருக்கும் விஷயமில்லை, ஆனாலும் நீங்கள் கேள்வி கேட்டு விட்டதால் அதைப்பற்றியும் சொல்கிறேன். விஞ்ஞானிகள் உயிரை உற்பத்தி செய்தார்களா? அல்லது புத்கலத்தை உற்பத்தி செய்தார்களா? நீங்கள் என்ன சொல்வீர்கள் என்றால், அவர்களுடைய விருப்பப்படி என்ன வடிவம்-ஆகார் வேண்டுமோ? அந்த நிற உடலைச் செய்கிறார்கள் என்றுதானே சொல்வீர்கள். குறிப்பிட்ட நாமகர்ம உதயமுடைய உயிர் அங்கு வந்து பிறக்கிறது. உடலின் அமைப்பு என்னவோ உயிரின் பர்யாப்திகளால் அமைகிறது.

கேள்வி: Test tube babies - பரிசோதனை கூடத்தில் சோதனைக்குழாயில் உற்பத்தி யாகும் “க்ளோன்” களில் உயிர் கர்பஜமா அல்லது அது எப்படிப்பட்ட பிறப்பு? என்று சொல்லுங்கள்.

பதில்: அங்கு அனேக கர்ப்பம் தரிக்கக்கூடிய ஊக்கமூட்டப்பட்ட ‘கருமுட்டைகள்’-‘fertilized eggs’ செய்யப்படுகின்றன. ஸ்திரியின் கருமுட்டையும் (ஸ்திரி விதைமுட்டையையும்) புருஷரின் விந்தணுவையும் செயற்கையாக ஒன்று சேரும் விதமாக அனேக கர்ப்பங்களை சோதனைக்குழாயில் தயார் செய்கின்றனர். அவைகள் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. அதில் அவர்களுக்கு திருப்தியான ஒரு சோதனைகுழாய் கர்ப்பத்தை, அம்மாவின் கருப்பையில் வைக்கப்படுகிறது. அது அங்கு இயல்பாக புருஷனும் மனைவியும் உடலால் இணைந்து இன்ப அனுபவம் செய்வதால் உண்டான கர்ப்பம்போல, அங்கு விஞ்ஞானிகளால் செயற்கையாக தயார் செய்து வைக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் கூட கர்பஜ பர்யாப்த்த மனிதபவம் தான். இதற்கு லக்ஷக்கணக்கில் பணம் செலவு செய்கின்றனர். அங்கு சோதனை கூடத்தில் தயார் செய்யப்பட்ட அனேக கர்ப்பங்கள் அழிக்கப் படுகின்றன, அத்தனை கர்பஜ பர்யாப்த்த

மனிதபவங்கள் சோதனை கூடத்திலேயே மரணமடைகின்றன. அப்படிப்பட்ட மனித பவத்தால் என்ன பிரயோஜனம் இருக்கிறது? என்று சொல்லுங்கள்.

எப்போதாவது ஒரு கோடி பூர்வ ஆயுளை கட்டிக்கொண்டு மனிதராக ஒரு உயிர், பிறவி எடுக்கக்கூடும். அந்த நிலையில் அங்குகூட பர்யாப்த்தி முழுமையடைந்ததும் ஒரே அந்தர்முகூர்த்தத்தில், கருவிலேயே கலைந்து போகக்கூடிய அகால மரணத்தை சந்திக்கக்கூடும். இப்படி கர்ப்ப நிலையிலேயே கலைந்து பல மனிதப்பிறவி மரணங்கள் நடக்கத்தான் செய்கின்றன. அதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்படுவதே இல்லை. இப்போது நாம் சம்பாதிக்கலாம், கேளிக்கைகளில் ஈடுபடலாம், மற்ற எல்லா விஷயங்களையும், முதுமை அடைந்ததும் செய்யலாம் என்றுதான் நினைத்துக்கொண்டு செயல்படுகிறோம். யாருக்கும் ஆயுள் பற்றி எந்த நம்பிக்கையும் இல்லை, யார் எவ்வளவு ஆயுளை கட்டிக்கொண்டு வந்திருக்கிறோம்? இப்போது நமக்கு எவ்வளவு ஆயுள் மிச்சமிருக்கிறது? என்பதைப்பற்றி யாருக்கும் எதுவும் தெரிவதில்லை, அதனால், என்ன செய்ய வேண்டுமோ அதை, அதாவது சுவாத்யாயம், பேதவிஞ்ஞானம் முதலியவைகளை-உடனேயே செய்யவேண்டிய செயல்களை கண்டிப்பாக இந்த காலத்திலேயே செய்யவேண்டும், இதை எதிர்காலத்தில் செய்து கொள்ளலாம் என்று எதிர்காலத்தை நம்பி இருக்கக்கூடாது. நமது விவாதம் எங்கெங்கோ சென்றுவிட்டது. இப்போது நாம் நரகம் பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம், வாருங்கள்!

கேள்வி: பூமிகளின் பெயர்கள் இரத்தினப்பிரபா முதலானவைகளாக இருக்கின்றன. எங்கு எப்படிப்பட்ட பிரபை இருக்கிறதோ? அதை சார்ந்தே அந்த பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவா என்ன?

பதில்: எல்லா பூமிகளும் ஸ்படிகம் போன்றே இருக்கின்றன, மேல்பகுதி மட்டும் வெவ்வேறு பிரபைகள் கொண்டதாக இருக்கின்றன.

கேள்வி: இரத்தினப்பிரபா என்ற பெயர் இருப்பதால் அங்கு அந்த நரகத்தில் இருட்டே இல்லை என்று சொல்ல முடியுமா?

பதில்: இரத்தினப்பிரபா நரகத்தின் பூமியின் மேல் பகுதியான கரபாகத்தில் இரத்தினத்திற்கு சமமான பிரபா-ஜொலிப்பு இருக்கிறது. இதில் 16 தலங்கள்-நிலைகள்-layers கொண்ட நிலப்பகுதிகள் உள்ளன. ஒவ்வொன்றும் 1,000 யோஜனை பருமன் கொண்டது. ஒவ்வொரு நிலைக்கு இடையில் எந்த இடைவெளியும் இல்லை. இதைப்பற்றி நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். இவைகளின் நீளம், அகலம் முதல் பூமிக்கு சமமாகவே, உலகத்தின் எல்லைவரை இருக்கின்றன. இவைகளில் பவனவாசிகளின் பவனங்கள் உள்ளன. அங்கு இயற்கை ஜினாலயங்களும், ஜின பிம்பங்களும், சைத்ய விருக்ஷம் முதலானவைகளும் உள்ளன. அவைகளைப்பற்றி விரிவாக பவனவாசி தேவர்கள் பற்றிப் பார்க்கும்போது சொல்கிறேன். அதற்கு முன்

நரகம் பற்றிய எல்லா விஷயங்களையும் சர்ச்சை செய்து முடித்துவிட்டு இங்கிருந்து நாம் வெளியேற வேண்டுமல்லவா!

இரத்தினப்பிரபா பூமியின் பங்கபாகத்தில் சேறு போன்ற பிரபை இருக்கிறது. கீழே அப்பஹுள பாகத்தில் நீர் அதிகமாக இருக்கிறது. இதில் நரகர்களின் பிலங்கள் இருக்கின்றன. பூமியின் உள்பகுதியில், மிருதங்கத்தின் உள்பாகம் போன்ற, புதைக்கப்பட்டது போன்ற குழிகள் அதாவது காலியான பொந்து - cavities போன்ற நிலம் சூழ்ந்த கலியான பொந்து போன்ற அமைப்புகள், அதாவது நரகர்கள் வாழும் பிலங்கள் உள்ளன. இரண்டு நரகங்களுக்கு இடையில் நிலப்பகுதி இருக்கிறது. நரக பிலங்கள்கூட அசங்க்யாத-அசங்க்யாத யோஜனைகள் கொண்டதாக உள்ளன. கிட்டத்தட்ட நம் நிலப்பகுதியில் காணப்படும் எலி வளைகள் போன்றே ஆனால் மிகப் பெரிய பொந்துகளாக அவைகள் இருக்கின்றன. எலி பொந்திலிருந்து பொந்துகளின் வாய்பகுதி வழியாக வெளியே வரும் அமைப்பு, பிலங்களில் இல்லை. They look like enclosed caves. பிலங்களுக்கு இடையிலும் போக்கு-வரத்துக்கு சந்திப்புகள் அமைப்புகூட இல்லை. நம் பூமியில் சூரிய சந்திர பிரகாசம் இருப்பதுபோல போகபூமியிலும், சுவர்க்கத்திலும் கல்பவிருக்ஷங்களால் பிரகாசம் கிடைக்கும் அமைப்பு உள்ளது. பிலங்களில் இந்த வெளிச்ச வசதி இல்லை. பிலங்களின் பூமி உஷ்ணமாகவோ, குளிர்ச்சியாகவோ இருக்கிறது, ஆனால் கும்மிருட்டாகவே இருக்கிறது. நாம் வசிக்கும் இடம் பூமிக்கு மேல் பகுதியில் இருக்கிறது, நரகம் பூமியின் உள்பகுதியில் மூடப்பட்ட சுரங்கம் போல இருக்கிறது.

நாம் எத்தனை யோஜனை ஆழம் தோண்டினால் நம்மால் நரகத்தைப் பார்க்க முடியும்? என்பது உங்கள் கேள்வியாக இருக்கிறது. இதற்கு பதில் பூமியின் மேல்பகுதியிலிருந்து 1,00,000 யோஜனை தோண்டினால் நரகம் வரும். ஒரு யோஜனை என்பதே மிகப்பெரியதாக இருக்கிறது. தோண்டித்தோண்டி நரகம் செல்ல என்ன அவசியம் இருக்கிறது? நம் பரிணாமத்தாலேயே அனந்த முறை நாம் நரகத்திற்கு சென்று வந்திருக்கிறோம்.

இரத்தினப்பிரபா பெயர்கொண்ட முதல் பூமியின் முதல் சித்ரா பகுதிக்கு மேல் பகுதியில் நாம் வசிக்கிறோம். அது ஸ்படிகத்தால்-இரத்தினத்தால் செய்யப்பட்டதாக இருக்கிறது, ஆனால் அதில் இப்போது தும்பு-தூசுகளாலும் மண்ணாலும் மூடப்பட்டு கிடக்கிறது. எங்கு சம்மேதசிகரம் இருக்கிறதோ அங்கு அந்த சித்ரா பூமியில் ஸ்வஸ்தீகம் வரையப்பட்டு இருக்கிறது. ஆறாம் கால முடிவில் பிரளயம் நிகழும்போது, எல்லா தும்பு-தூசு, மண் முதலியன பறந்துபோய் விடுகின்றன, அப்போது இந்த பூமி இரத்தினம்போல ஆகிவிடுகிறது.

கேள்வி: நரகம் இருட்டாக இருப்பதால் நாரகிகளால் எப்படி பார்க்க முடிகிறது?

பதில்: எப்படி பூனை, புலி, சிங்கம் முதலான பிராணிகள் இருட்டில் பார்க்கக்கூடிய திறமை கொண்டவைகளாகளாக இருக்கின்றனவோ, அதேபோல நாரகிகள்கூட இருட்டில் பார்க்கும்சக்தி கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அங்கு இப்போது எந்த காலம் நடக்கிறது? என்பது உங்கள் கேள்வி. அதற்கு பதில், எவ்வாறு விதேக க்ஷேத்திரத்தில் எப்போதும் நாலாம் காலம்போல இருக்கிறதோ, சுவர்க்கங்களில் எப்போதும் முதல் காலம்போல இருக்கிறதோ, அதேபோல நரகத்தில் எப்போதும் ஆறாம் காலம்போல இருக்கிறது. இங்கு பரத-ஐராவத க்ஷேத்ர ஆரிய கண்டத்தில் ஆறாம் காலம் வருகிறது. போகபூமியில் சில இடங்களில் முதல் காலம்போலவும், சில இடங்களில் இரண்டாம் காலம்போலவும், சில இடங்களில் மூன்றாம் காலம்போலவும் இருக்கின்றன, ஏனென்றால் உத்தம, மத்யம, ஜகன்ய போகபூமியில் அவை முறையாக காணப்படுகின்றன. இங்கு மட்டுமே துக்கம் கொடுக்க கூடியவைகள் கூடவே இருப்பதன் நோக்கில் ஆறாம் காலம் என்று சொல்கின்றனர், ஆயுள் மற்றும் உடலின் உயரம் இவைகளின் நோக்கில் சொல்வதில்லை.

பரத-ஐராவத க்ஷேத்ரத்தின் ஆரிய கண்டங்களில் இறங்கு காலத்தில் ஆறு காலங்களும், ஏறு காலத்தில் ஆறு காலங்களும் என காலமாற்றங்கள் நிகழ்கின்றன. இறங்கு காலத்தின் முதல் காலம் உத்தம போகபூமி போல இருக்கும். இது 4 கோடகோடி கடற்காலமாகும். இதை ஸுஷ்மாஸுஷ்மா காலம் அல்லது நன்நற்காலம் என்றும் சொல்கின்றனர். இரண்டாம் காலம் மத்திம போகபூமி போல இருக்கும் காலம் 3 கோடாகோடி கடற்காலமாகும். இதை ஸுஷ்மா காலம் அல்லது நற்காலம் என்றும் சொல்கின்றனர். மூன்றாம் காலம் ஜகன்ய போகபூமி போல இருக்கும் காலம் 2 கோடாகோடி கடற்காலமாகும். இதை ஸுஷ்மாதுஷ்மா காலம் அல்லது நற்தீக்காலம் என்றும் சொல்கின்றனர். பிறகு இங்கு கர்மபூமியின் காலம் துவங்கி விடுகிறது. நான்காம் காலத்தை துஷ்மாஸுஷ்மா அல்லது தீநற்காலம் என்று சொல்கின்றனர். மோக்ஷம் செல்லவும், சிரேணி ஏறவும் கூடிய புருஷார்த்தம் - முயற்சி செய்தல் இந்த காலத்தில்தான் நிகழ்கிறது. நரகம் செல்ல கதவும் இந்த காலத்தில்தான் திறக்கப்படுகிறது, ஏனெனில் போகபூமி உயிர்கள் மரணமடைந்து தேவகதிக்கே சென்று பிறக்கின்றனர். இந்த நான்காம் காலம் 42,000 வருடங்கள் குறைந்த ஒரு கோடாகோடி கடற்காலமாகும். ஐந்தாம் காலம் 21,000 வருடங்களும் ஆறாம் காலம் 21,000 வருடங்களும் கொண்டதாகும். இவைகளின பெயர்கள் முறையாக துஷ்மா அல்லது தீக்காலம் மற்றும் துஷ்மாதுஷ்மா அல்லது தீத்தீக்காலம் என்று சொல்கின்றனர். இதை கீழிருந்து மேலாக கணக்கிட்டால் உத்சர்ப்பிணி-ஏறுகாலத்தில் ஆறு

காலங்கள் வரும். எல்லா காலத்தையும் கூட்ட இறங்குகாலம் 10 கோடாகோடி கடற்காலமாகவும், ஏறுகாலம் 10 கோடாகோடி கடற்காலமாகவும் இருக்கின்றன. இந்த இரண்டும் சேர்ந்த காலத்தை 20 கோடாகோடி கடற்காலம் கொண்ட ஒரு கல்பகாலம் என்று சொல்கின்றனர்.

இப்போது என்னுடைய கேள்வி - உத்ஸர்ப்பிணியின் கடைசி தீர்த்தங்கரருக்கு பிறகு வந்த அவஸர்பிணியின் முதல் தீர்த்தங்கரருக்கும் இடைப்பட்ட காலம் எவ்வளவு? சொல்லுங்கள் பார்க்கலாம். அதாவது இங்கு முதல் தீர்த்தங்கரர் பகவான் 1008 ஸ்ரீ ஆதிநாதர் எவ்வளவு காலம் சென்றபிறது தோன்றினார்? என்பதே கேள்வியாகும்.

பதில்: என்ன? தெரியாதா? இங்கு ஏறுகாலத்தின் மூன்று மற்றும் இறங்கு காலத்தின் மூன்று போகபூமிகளின் காலம் எவ்வளவோ அந்த 18 கோடாகோடி கடற்காலம் இருக்கிறதே, அந்த காலத்திற்கு பிறகுதான் பகவான் ஆதிநாத தீர்த்தங்கரர் பிறந்தார். அவர் பிறக்கும் முன் அவ்வளவு காலம்வரை நம் பரத க்ஷேத்திரத்திலிருந்து யாரும் மோக்ஷம் போகவில்லை, முனியாகவோ அல்லது ஐந்தாம் குணஸ்தானவர்த்தியாகவோகூட யாரும் ஆகவில்லை. ஆதிநாத பகவான் காலத்தில் மோக்ஷம் செல்வது மீண்டும் ஆரம்பமானது, அதனால்தான் அவரை ஆதிபுருஷர் என்று சொல்கின்றனர். மஹாவீர பகவான் காலத்தில் ஸ்ரேணிக அரசன் வாழ்ந்தார். 84,000 வருட நரக ஆயுளை அனுபவித்துவிட்டு வரும் ஏறுகாலத்தின் பரத க்ஷேத்திரத்தில் முதல் தீர்த்தங்கரர் பகவான் மஹாபத்மராக பிறவி எடுக்க இருக்கிறார். அதாவது இந்த இறங்கு காலத்தின் ஐந்தாம், ஆறாம் மற்றும் அடுத்த ஏறுகாலத்தின் ஆறாம், ஐந்தாம் காலம் கழிந்த பிறகு அவர், இந்த பரத க்ஷேத்திரத்தில் பிறவி எடுத்து ஏறுகாலத்தில் முதல் தீர்த்தங்கரர் பகவான் ஸ்ரீ மஹாபத்மராக ஆக இருக்கிறார். எல்லாம் சரியாகப் பொருந்துகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இது சகஜமாகவே-சுலபமாகவே நிகழ்கிறது. நாம் வேண்டி விரும்பி எதுவும் செய்யமுடியாது. எப்போது, எங்கு, என்ன நிகழ வேண்டுமோ; அப்போது, அங்கு, அப்படியே நிகழும். நமக்கு பத்து பவங்கள் மிச்சமிருக்குமானால், பிறகு அந்த பத்து பவங்களில் பிறவி எடுத்து வாழ்ந்த பிறகுதான் மோக்ஷம் செல்லமுடியும். எந்த உயிராவது இப்போது ஏகேந்திரிய பர்யாயத்தில் எங்காவது இருந்து பிறகு வேறு பிறவி எடுத்து சில காலத்தில் மோக்ஷம் செல்ல வேண்டி இருந்தால், அவசியம் அப்படிப்பட்ட பரிணாமத்தை செய்து மனித ஆயுள் முதலான தகுதியான பிரக்ருதிகளை கட்டிக்கொண்டு, அது மனிதராகி, முனியாகி, எல்லாக் கர்மங்களையும் க்ஷயம்செய்து மோக்ஷத்தை அடையவே செய்யும்.

நாம் மரணமடைந்து விடுவோமோ? என்ற பயம் நமக்கு இருக்கிறது. அய்யஹோ! நாம் மோக்ஷம் செல்லவேண்டும் என்று வாயால் என்னவோ சொல்கிறோம், இந்த பவம் முடிந்து விடுமோ என்ற பயத்தால் ஏன் வேதனை

அடைய வேண்டும்! மோக்ஷம் செல்லும் முன் எடுக்க வேண்டிய ஒரு பவம் குறையப்போகிறது, இதில் துக்கப்பட என்ன இருக்கிறது?

இந்த பவம் இவ்வளவுதான் இருக்கிறது என்றால், இந்த பவத்தின் ஆயுளை கூடுதலாக்க ஆக்க முடியுமா அல்லது முடியாதா? அமெரிக்காவுக்கு சென்று மரணத்தை நிறுத்த முடியுமா அல்லது ஆயுளை அதிகமாக்க முடியுமா , முடியாது இல்லையா?

இந்த நம்பிக்கை எப்படி இருக்கிறது தெரியுமா? நாம் எல்லா கர்மங்களையும் அழிக்க விரும்புகிறோம், ஆனால் ஆயுள் கர்மத்தை மட்டும் அப்படியே வைத்துக்கொள்ள விரும்புகிறோம். சாஸ்திரத்தில் 'சிறைச்சாலையை' ஆயுள் கர்மத்திற்கு உவமையாக சொல்லப்பட்டிருக்கிறது. இது நம்மை இந்த குறிப்பிட்ட பர்யாயத்திலிருந்து விடுபட முடியாமல் இருக்கச் செய்கிறது. லௌகீகத்தில் சிறைச்சாலையின் சுவர் இடிந்து விடுமானால், கைதி எப்படி தப்பித்து ஓட்டம் பிடிப்பான் என்று நமக்குத் தெரியும். ஆனால் நாம் எப்படிப்பட்ட புத்திசாலி என்றால், நம் முழு வாழ்க்கையையும் இந்த சிறைச்சாலையை-நம் உடம்பை நன்கு பராமரிப்பதிலுல் புஷ்டியாக-நலமாக வைத்திருப்பதிலுல் கழிக்கிறோம். இந்த உடம்பில் கொஞ்சம் பலஹீனம் வந்தாலும், உடனே டாக்டரிடம்-மருத்துவரிடம் சென்று சரிசெய்ய முயல்கிறோம். மேலோட்டமாக இவ்வாறு சொல்கிறோம் - 'உடம்பு இருந்தால்தானே நாம் மோக்ஷம் செல்லும் புருஷார்த்தத்தை செய்ய முடியும், இந்த மனித உடல்தானே நம்மை மோக்ஷமடைய வைக்கிறது'. அடே சேத்தன உயிரே! இந்த ஜட உடலா உன்னை மோக்ஷத்திற்கு கொண்டு செல்கிறது? சிந்தி!!

இப்போது உங்களுடைய சில கேள்விகளுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டே மேலே போகலாம், வாருங்கள்!

கேள்வி: நிகழ்கால 24 தீர்த்தங்கரர்களும் சுவர்க்கத்திலிருந்து வந்தனர், எதிர்காலத்தில் தீர்த்தங்கரர்கள் நரகத்திலிருந்தும் வருகிறார்கள். [மூன்றாம் நரகத்தில் இப்போது தீர்த்தங்கர நாமகர்கத்தை கட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனது உயிர், வரும் ஏறு காலத்தில் 16-ஆவது நிர்மல தீர்த்தங்கரராக பிறக்க இருக்கிறது. ஸ்ரேணிக உயிர் எதிர்கால முதல் தீர்த்தங்கரராக பிறக்க இருக்கிறது என்பதை முன்னரே பார்த்தோம்.] இப்படிப்பட்ட நிலை ஏன் என்று சொல்லுங்கள்.

பதில்: அப்படி எந்த நியமமும் இல்லை. நரகத்திலிருந்து வந்தாலோ அல்லது சுவர்க்கத்திலிருந்து வந்தாலோ; தீர்த்தங்கரர் என்னவோ தீர்த்தங்கரராகவே இருக்கின்றனர். சுவர்க்கத்திலிருந்து வந்தால் பெரிய-மஹான், நரகத்திலிருந்து வந்தால் சிறிய-ஹீனன் என்பதெல்லாம் இல்லை.

கேள்வி: க்ஷாயிக சம்யக்திருஷ்டி முதல் நரகம் செல்கிறார், அங்கு அவருடைய செயல்பாடு எப்படி இருக்கும்? இங்குகூட நாம் வாழும் இந்த தேசத்தில் சம்யக்திருஷ்டியின் செயல் எப்படி இருக்கிறது?

பதில்: பாருங்கள்! நாம் வெளியில் தெரியும்படி நிகழும் செயல்களின் ஆதாரத்தைக் கொண்டு மட்டுமே சம்யக்திருஷ்டியை அடையாளம் காண முயல்கிறோம், அது தவறாகும். நான்காம் குணஸ்தானத்தில் இருப்பவர் அவிரத சம்யக்திருஷ்டி அதாவது அஸய்யமியாவார். [விரதம் எதுவும் எடுக்காதவராவார்] அவரிடம் கூட இராக-த்வேஷ பரிணாமங்கள் உண்டாகிறது, ஆனால் அவர் இராக-த்வேஷத்திலிருந்து தன்னை வேறாக அடையாளம் காண்கிறார், அவ்வாறே அனுபவம் செய்கிறார், அப்படிப்பட்ட உணர்வையே கொண்டிருக்கிறார். தன்னில் நிகழும் இராக-த்வேஷத்தை அவர் தனதாக எண்ணுவதில்லை. அவருக்கு கோபம் வரலாம் ஆனால் வெளிநடத்தையில் யாருக்கும் எதுவும் தெரிவதில்லை, ஏனென்றால் அவருடைய அபிப்பிராயத்தின்படி அந்த கோபம் அவரிடம் எந்த மாற்றத்தையும் நிகழ்த்துவதில்லை. யாரிடம் அந்தரங்கத்தில் உறுதி அதிகரிக்கிறதோ அப்படிப்பட்டவரிடம் மேல் குணஸ்தானங்களில் வெளிநடத்தையில் மாற்றங்கள் அதற்கு உகந்தார்போல் நிகழ்கின்றன. நம்முடைய பார்வை வெளியில் தெரிபவைகளின் மேல்தான் இருக்கிறது. நாம் பார்க்கும் திசையை மாற்ற விரும்புவதில்லை, ஆனால் நிலைமையை மாற்றவே விரும்புகிறோம். சம்யக்த்திருஷ்டி நாரகி உயிரிடம்கூட அபிப்பிராயத்தில், நான் உயிர், அறிபவன் என்ற உணர்வு - அனுபவம் உண்டாகிறது, ஆனால் அதிக அளவில் ஆன்மாவில் நிலைத்தல்-ஸ்திரத்தன்மை இல்லை. அவர்களிடம் அனந்தானுபந்தி கஷாயம் மட்டும்தான் இல்லை, ஆனால் மற்ற மூன்றுவகை கஷாயங்களின் உதயம் இருக்கின்றன, மேலும் அந்த உதயத்தால் அங்கு எழும் காஷாயத்தை அவர் செய்பவராக எண்ணுவதில்லை. முனிவர்களிடம் ஸ்திரத்தன்மை-ஆன்மாவில் நிலைத்தல் அதிகமாக இருக்கிறது, மேலும் மூன்றுவகை கஷாய நான்மைகள் அவரிடம் உற்பத்தியாவதே இல்லை, வெறும் சஞ்சுவலன கஷாய உதய வடிவ இராகம் மட்டுமே இருக்கிறது.

கேள்வி: நாரகி உயிர்களிடம் குஅவதி ஞானம்தானே இருக்கும்? அல்லவா.

பதில்: சம்யக்திருஷ்டி நாரகிகளுக்கு சுஅவதி ஞானம் இருக்கிறது. முதல் இரண்டு குணஸ்தானத்தில் உள்ள நாரகிகளுக்கு குஅவதி அதாவது விபங்கஞானம் இருக்கிறது. தேவ மற்றும் நாரகிகளிடம் பவ சம்பந்தமான அவதிஞானம் இருக்கும், அதனால் அந்த ஞானத்தை பவபிரத்யய அவதிஞானம் என்று சொல்கின்றனர். இப்போது அந்த அவதிஞானத்தின் எல்லைகளைப் பார்க்கலாம்.

முதல் நரக நாரகிகளின் அவதிஞான இட எல்லை 4 கோசம் ஆகும், அது கிரமமாக ஒவ்வொரு பூமியிலும் அரை-அரை கோசம் குறைந்து-குறைந்து அதாவது இரண்டாம் பூமியிலிலிருந்து வரிசையாக 3.5, 3, 2.5, 2, 1.5 மற்றும் 1

கோசமாக அவதிஞான இட எல்லை இருக்கிறது. ஏழாம் நரக நாரகியின் அவதிஞான க்ஷேத்ர எல்லை ஒரு கோசமாகும்.

கேள்வி: ஐந்தாம், ஆறாம் காலங்களில் தர்மம் இல்லாமல் மறைந்து போய்விடும் அப்படித்தானே?

பதில்: நாம் இப்போது இறங்கு காலத்தில் ஐந்தாவதான தீக்காலத்தில் இருக்கிறோம், இந்த தீக்காலம் முடியும்வரை தர்மம் இருக்கும். இந்த காலத்தின் கடைசியில் விராங்கதர் என்ற பெயர்கொண்ட முனிவரும், சர்வஸ்ரீ என்ற பெயர்கொண்ட ஆர்யிகாவும், அக்நிலன் என்ற பெயர்கொண்ட ஸ்ராவகனும், பங்குசேனா என்ற பெயர்கொண்ட ஸ்ராவகியும் இருப்பார்கள். ஐந்தாம் காலத்தின் கடைசியில் இவர்கள் நால்வருமே சன்யாச (சல்லேகனா) மரணத்தால் உயிர் நீத்து, சௌதர்ம சுவர்க்கத்திற்கு செல்வார்கள். அதற்குப் பிறகுதான் இங்கு தர்மம் இல்லாமல் போகும். ஆறாம் காலத்தின் கடைசியில் பிரளயம் உண்டாகும். பிறகு ஏறுகாலத்தின் முதல் காலமும் (தீதீக்காலம்) இரண்டாவதாக தீக்காலம் உண்டாகும். அத்த தீக்காலத்தின்-துஷ்மாகாலத்தின் கடைசி 1,000 வருடங்கள் மிச்சம் இருக்கும்போது வரிசையாக 16 குலகரர்கள் தோன்றுவார்கள், அவர்கள் உயிர்களுக்கு எப்படி வாழவேண்டும், அப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி நடத்தை-ஒழுக்கம் கொள்ளவேண்டும் முதலிய வாழ்க்கை வழிமுறைகளை கற்றுத்தருவார்கள்.

கேள்வி: அலோகாகாசத்தில் இருட்டாக இருக்குமா அல்லது வெளிச்சமாக இருக்குமா?

பதில்: இருட்டு, வெளிச்சம் எல்லாம் புத்கலமாகும். அலோகாகாசத்தில் ஆகாச திரவியம் மட்டுமே இருக்கிறது, அங்கு புத்கல திரவியமே இல்லை. அங்கு இருட்டும் இல்லை பகலும் இல்லை. இப்போது இந்த பாடம் இத்துடன் முடிகிறது. உங்களுடைய மற்ற கேள்விகளுக்கு வரும் பாடங்களில் தக்க இடங்களில் அதற்குண்டான பதில்களை அளிக்கிறேன்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள நாலாம் தீர்த்தங்கரர் சுபாஹு பகவானுக்கு ஜே!

5. சலாகாபுருஷர்கள்

இங்கு திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் மூன்று புவனங்களின் வடிவை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். மூன்று புவனங்கள் என்று சொன்னாலும், மூவுலகம் என்று சொன்னாலும் ஒன்றுதான். சஹடாலாவின் கடவுள் வாழ்த்தில் இவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது -

தீன் புவன மே ஸார் வீதராக விஞ்ஞானதா |
சிவஸ்வரூப சிவகார், நமஹூம் திரியோக ஸம்ஹாரிகை ||

மூன்று புவனங்களில் - இந்த மூவுலகில் ஆறு திரவியங்கள் காணப்படுகின்றன. உயிர்கள் அனந்தம், புத்கலம் அனந்தானந்தம், தர்மம், அதர்மம், ஆகாஸம் இவை மூன்றும் ஒவ்வொன்று, கால திரவியம் அசங்க்யாதம் ஆகும். ஆகாஸ திரவியம் என்பது லோகாகாசம் அலோகாகாசம் சேர்ந்த ஒன்றேயாகும். இவைகள் எல்லாவற்றின் ஸாரமாக-முக்கிய சத்தாக வீதராக விஞ்ஞானம் இருக்கிறது. நாம் எல்லோரும் ஸ்வயமாகவே-இயற்கையாகவே திரவிய அம்சத்தில் வீதராக விஞ்ஞான வடிவமாகவே இருக்கிறோம். மேலும் தன்னையே சார்ந்து இருந்தால், பர்யாயத்தில்கூட இந்த வீதராக விஞ்ஞானத்தன்மை தானாகவே வெளிப்பட்டு விடுகிறது. யார் இந்த வீதராக விஞ்ஞானத்தன்மையை பர்யாயத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார்களோ அந்த அரஹந்த மற்றும் ஸித்தர்களைப்போல நாமும் ஆகவேண்டியே, அவர்களை நாம் நமஸ்காரம் செய்கிறோம் அதாவது வணங்குகிறோம்-வழிபடுகிறோம், அவர் பயணித்த பாதையில் நாமும் பயணம் செய்ய முற்படுகிறோம்.

இங்கு திரிலோகஸாரத்தின் கடவுள் வாழ்த்தில் மூன்றாவது சந்தத்தில் (முதல் பாடத்தில் நாம் பாடினோமே) யார் அவர்கள் மயமாகவே ஆகி - மூன்று புவனத்தின் நிலைமையை அதாவது இயல்பானத் தன்மையை-உண்மையான வடிவத்தை, முழு உலகத்தின் வடிவத்தை அறிந்து இவ்வாறு சொல்லியிருக்கிறார், என்றால் அவர்கள் ஏன் அப்படி அறிய வேண்டும் என்று கேட்கிறீர்களா? அஹோ! அறிதல் என்பது நம்முடைய ஸ்வபாவம்-தன்மையாகும். உயிர் தன்னையும் அறிகிறது மற்றும் பிற வஸ்துக்களையும் அறிகிறது. நானே நானாவேன், வேறு எதுவும் நானில்லை, மற்றவைகள் எல்லாம் மாயையாகும்; என்ற மயக்கத்தில் பிரமையான கற்பனையுடன் யாராவது தன்னை அனுபவம் செய்ய விரும்பினால், சம்யக்துவத்தை வெளிப்படுத்த விரும்பினால், அது மூன்று காலத்திலும் நிகழ வாய்ப்பில்லை. எது இருக்கிறதோ-எதன் அஸ்தித்துவம் எப்படியோ அதாவது எந்த வஸ்து எப்படி இருக்கிறதோ அவைகளை அப்படியே அறிவில் ஏற்றுக்கொள்ள வேண்டும் [பிற வஸ்துக்கள் எல்லாம் மாயை, உண்மை இல்லை-நாம் என்ன பார்க்கிறோமோ அவைகள் உண்மையில் அப்படி இல்லை என்ற எண்ணம்

உள்ளவரை சம்யக்தரிசனம் எந்த காலத்திலும் பெறமுடியாது என அறியவும். பிற வஸ்துக்களின் இருப்புத்தன்மையை, அவைகள் எப்படி உள்ளதோ அப்படியே அறிந்து, அப்படித்தான் உள்ளது என்று நம்பினால்தான் சம்யக்துவம் வெளிப்படும்.]

கரணானுயோக விஷயத்தில் என்ன கணக்கு சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளை நாம் சரிபார்த்து-பரிக்ஷை செய்து பார்க்கமுடியும். எப்படி தீபங்களின்-சமுத்திரங்களின் விஸ்தீரணத்தை கண்டுபிடிக்க வேண்டுமென்றால், கோளம், முக்கோணம், நாற்கோணம், மற்றும் பல கோணங்கள் கொண்ட வடிவின் விஸ்தீரணத்தை கண்டுபிடிக்கும் சூத்திரங்களை வைத்து (using formulas) நம்மால் கணக்குப்போட்டுத் தெரிந்து கொள்ளமுடியும். ஆனால் மேரு மலையின் உயரம் எவ்வளவு? நரகத்தில் நாரகர்கள் வாழும் பிலங்களின் எண்ணிக்கை எவ்வளவு? இவைகளை நம்மால் கணக்கிட்டுப் பார்க்கவோ அல்லது எண்ணிப் பார்க்கவோ முடியாது, கேவலியின் வாணியில் எப்படி சொல்லப் பட்டிருக்கிறதோ அப்படித்தான் அறிய வேண்டும். இதைத்தான் ஆகமப்பிரமாணம் என்று சொல்கின்றனர். கேவலி பகவான் இந்த எல்லா வஸ்துக்களையும் நேரடியாக பார்த்து, அறிந்து, எப்படிப் பார்த்து அறிந்தாரோ அப்படியே சொல்லியிருக்கிறார். யாருக்காவது அவர் கூறியதில் நம்பிக்கை-விசுவாசம் இல்லையென்றால், அவருக்கு பகவான்மேல், அவருடைய கேவலஞானத்தின் மேல், சிரத்தை-நம்பிக்கை இல்லை என்பது நிச்சயமாகும்.

நாம் உயிரியல் வல்லுனர் (bioligist) களிடம் இரத்தம் அல்லது உடலின் மற்ற அவயவங்களை பரிசோதனை செய்யச் செல்கிறோம். அவைகளை பரிசோதனை செய்துபார்த்து, அந்த உயிரியல் வல்லுனர் நமக்கு ஒரு அறிக்கை (report) கொடுக்கிறார். அதில் இரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பு முதலியவைகளின் அளவுகள் எப்படி உள்ளன என்பது பற்றி இருக்கிறது. அதில் நமக்கு எத்தனை சதவிகிதம் நம்பிக்கை இருக்கிறது? என்ன? 100% என்றுதானே சொல்கிறீர்கள்? அறிக்கையை தயார் செய்யும் போது அதை தயாரிப்பவர் ஏதாவது தவறுகூட செய்திருக்கலாம்; ஆனால் அதைப்பற்றி எல்லாம் நாம் சிந்திப்பதில்லை. அதைப் பார்த்த பின்பு வேறு நிபுணரிடம் ஓடி, அதைக்காட்டி, அவர் என்ன அறிவுரை கூறுகிறாரோ அப்படியே நாம் நடைமுறைப் படுத்துகிறோம். என்ன சாப்பிடலாம், என்ன சாப்பிடக்கூடாது, என்னென்ன செய்யவேண்டும் என்று வைத்தியர் சொல்கிறாரோ, 100% அப்படியே செய்கிறோம். அந்த இடங்களில் நாம் எந்த கேள்வியும் கேட்பதில்லை. அப்படி ஏன் செய்ய வேண்டும்? யார் அப்படி சொன்னார்கள்? என்று டாக்டரிடம் எந்த கேள்வியும் எழுப்புவதில்லை. அதற்கு ஒரே காரணம் 'நான் உடல்தான்' என்ற திடமான நம்பிக்கை அனாதி காலமாக நம்மிடம் இருக்கிறது, இதை யாரும் அசைக்கக்கூட முடியாது, அரஹந்த பகவான்கூட

இதை அசைக்க முடியாத அளவுக்கு 'உடலே நான்' என்ற நம்பிக்கை, நம்மில் பெரும்பாலானோரிடம் இருக்கிறது.

ஒவ்வொரு திரவியமும் கால எல்லைக்கு அப்பாற்பட்டதாகும், முதலும் முடிவும் இல்லாததாகும், அனந்த குணங்கள் கொண்டதாகும். அது அதுவாகவே, அதனிலேயே மாற்றங்களை சுயமாகவே செய்தவண்ணம் இருக்கிறது. அதன் பர்யாயம் அதனாலேயே நிகழ்கிறது. அதற்கு யாராவது உதவி செய்வதோ, அதில் தாக்கத்தை ஏற்படுத்துவதோ, அதை தள்ளி வேலை செய்ய வைப்பதோ என்பது எதுவும் இல்லை. நிமித்தத்தால் ஒரு வஸ்துவில் எந்த காரியமும் நிகழ்வதில்லை. ஆறு திரவியங்களின் சமூகமான இந்த உலகம் கூட கால எல்லைக்கு அப்பாற்பட்டதாகும், அனாதியாக இருக்கிறது, அனந்த காலம் இருக்கும், அதை காப்பாற்ற, பராமரிக்க, அழிக்க வல்லவர்கள் யாரும் இல்லை. ஒரு உயிர்கூட புதிதாக உற்பத்தியாவதில்லை, எந்த புத்கலமும்(பரமாணுவும்) புதிதாக உற்பத்தியாவதில்லை. பிறவி சுழற்சியில்-சம்சாரத்தில் எந்த அனந்த உயிர்கள் பயணிக்கின்றனவோ, நம் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், பிறந்து இறந்து கொண்டு இருக்கின்றனவோ, அவை ஒரு இடத்தில் மரணமடைந்து வேறு எந்த இடத்திலாவது பிறக்கின்றன-ஆனால் அவைகளின் எண்ணிக்கை கூடுவதோ, குறைவதோ இல்லை.

ஒரே குடும்பத்தில் அனேக உறுப்பினர்கள் இங்கு மனித பிறவியில் ஒன்று சேர்ந்து இருக்கிறார்கள். அதில் யாராவது நரகத்திலிருந்து வந்திருக்கலாம், வேறு சிலர் சுவர்க்கத்திலிருந்து வந்திருக்கலாம், மற்றும் சிலர் விலங்கு கதியிலிருந்தோ, மனிதகதியிலிருந்தோகூட வந்திருக்கலாம். ஆனால் மோக்ஷத்திலிருந்து யாராவது வந்திருக்க முடியுமா, முடியாதா? முடியாது! அது ஒருவழி நுழைவுவாகும்-oneway entry ஆகும். ஒருமுறை நிர்வாணம்-மோக்ஷம் அடைந்து விட்டால், பிறகு அந்த உயிர்கள் பிறவி சுழற்சிக்கு வருவதில்லை. பிற மதத்தினர், அதாவது வேறு நம்பிக்கை கொண்டவர்கள், பகவான் தேவை ஏற்படும்போது இங்கு வந்து அவதாரம் எடுப்பதாக கற்பனை செய்கிறார்கள், இது ஒரு பொய்யான கற்பனையாகும்.

தலைப்பில் சலாகாபுருஷர்கள் என்று இருந்ததே, அந்த 63 சலாகாபுருஷர்கள் பற்றி இதுவரை எந்த பேச்சையும் எடுக்கவில்லையே, அந்த சலாகாபுருஷர்கள் என்றால் என்ன? என்று சொல்லுங்கள் என்று சிலர் கேட்டிருக்கிறீர்கள்.

பதில்: மஹா புருஷர்களை - சிறந்த மனிதர்களை சலாகா பருஷர்கள் என்று சொல்கின்றனர். இங்கு நாம் வாழும் இந்த பரத க்ஷேத்திரத்தைப் பற்றி இப்போது பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இங்கு ஆரிய கண்டத்தில் ஏறு காலத்தில் ஆறு காலங்கள், மற்றும் இறங்கு காலத்தில் ஆறு காலங்கள்

இருப்பதைப் பார்த்தோம். இப்போது இங்கு இறங்கு காலத்தின் ஐந்தாம் காலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எப்போது இங்கு நான்காம் காலம் துவங்கியதோ அப்போது வரிசையாக 24 தீர்த்தங்கரர்கள் இருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள் எல்லாம் உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறதல்லவா? விருஷபதேவர் அதாவது ஆதிநாதர் முதல் மஹாவீரர் வரை ஒருவருக்குப்பின் ஒருவராக மொத்தம் 24 தீர்த்தங்கரர்கள் இருந்தார்கள். ஆரம்பத்தில் இரண்டு தீர்த்தங்கரர்களுக்கு இடையில் கால இடைவெளி மிக அதிகமாக இருந்தது. முதல் ஆதிநாதர் இருந்த காலத்திற்கும் இரண்டாவதாக வந்த அஜிதநாதர் காலத்துக்கும் எவ்வளவு கால இடைவெளி என்று தெரியுமா? 50 லட்சம்கோடி கடற்காலம்! ஒரு கடற்காலத்தை எண்ணி-எண்ணியே அல்ல, கேட்டுக்கேட்டே நமக்கு வியர்வையும், பிரமிப்பும் வந்து விடுகிறது.

நான்காம் காலம் ஒரு கோடாகோடி கடற்காலமாகும். கோடாகோடி என்றால் ஒரு கோடி X ஒரு கோடி யாகும். துவக்கத்தில் மனிதர்களின் ஆயுள்கூட அதிகமாக இருந்தது. ஆதிநாதரின் ஆயுள் எவ்வளவு என்று தெரியுமா? 84 லட்சம் வருடங்கள் கொண்டது ஒரு பூர்வாங்கம். 84 லட்சம் பூர்வாங்கங்கள் கொண்டது ஒரு பூர்வம். வேறு விதமாக சொல்ல வேண்டுமென்றால் 84 லட்சம் வருடங்கள் X 84 லட்சம் வருடங்கள் = ஒரு பூர்வம், அதாவது 70 லட்சத்து, 56 ஆயிரம் கோடி வருடங்கள். இவ்வாறே ஒரு பூர்வம், இரண்டு பூர்வம்..., ஆயிரம் பூர்வம்... , லட்சம் பூர்வம்..., என வருடங்கள் கடந்து 84 லட்சம் பூர்வங்கள் ஆயுள் கொண்டவராக பகவான் அவ்வளவு காலம் இந்த பூமியில் வாழ்ந்தார். கர்மபூமியின் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் அதிகபட்ச ஆயுள் ஒருகோடி பூர்வமாகும். போகபூமியில் ஆயுள் பல்யத்தில் இருக்கிறது. கர்மபூமி மற்றும் போகபூமி பற்றி பின்னால் நாம் விரிவாகப் பார்க்க இருக்கிறோம். சில விஷயங்கள் முதலில் வெறுமனே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதாகவும் பிறகு புரிந்துகொள்ள வேண்டியதாகவும் இருக்கின்றன; சில விஷயங்கள் முதலிலேயே விரிவாக தெரிந்து உடனேயே தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன.

கர்ம பிரக்ருதிகளில்கூட அப்படி இருக்கிறது. சில பிரக்ருதிகள் முதலில் பந்தமாகின்றன, பிறகு உதயத்திற்கு வருகின்றன. முதலில்தான் பந்தம் உண்டாகும், பிறகுதான் உதயத்திற்கு வரும்; இதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது? என்று கேட்பீர்கள். இருக்கிறது! கேளுங்கள்!! சில பிரக்ருதிகள் பின்னால் பந்தமாகும், சீக்கிரமே உதயத்திற்கு வந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதை படிப்பவர்களில் சிலர், இதற்கு விளக்கத்தை தெரிந்துகொண்டு அமைதியாக மௌனமாக இருக்கிறீர்கள். நாம் ஆகமங்களை கற்றுக்கொள்ளும் போது இந்த முறைமையை தான் பின்பற்றுகிறோம்! ஏனெனில் புதிதாக கற்றுக்கொள்பவர்களை மனதில்

கொண்டு, முதலில் அவர்களுக்குத்தான் பதில் அளிக்க அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான்.

ஆஹாரக சரீரம், ஆஹாரக அங்கோபாங்கம் பெயர்கொண்ட பிரக்ருதிகள் ஏழாவது, எட்டாவது குணஸ்தானத்தில்தான் பந்தமாகின்றன, ஆனால் அவை ஆறாவது குணஸ்தானத்தில் இருக்கும்போதுதான் உதயமாகின்றன. மேல் குணஸ்தாங்களில் இருக்கும்போது பந்தமாகிறது, பிறகு கீழ் குணஸ்தானத்திற்கு ஆறாவது குணஸ்தானத்திற்கு வந்த பிறகே அதன் உதயம் நிகழ்கிறது. முனிவர்கள் ஏழாம் குணஸ்தானத்திலிருந்து ஆறாம் குணஸ்தானத்திற்கும் மற்றும் பிறகு ஆறுக்கும் ஏழுக்கும் மாறிமாறி போய் வந்துகொண்டு இருக்கின்றனர். அந்தர்முகூர்த்த கால அளவே இந்த இரண்டு குணஸ்தானங்களின் காலமாக இருக்கிறது.

உங்களுடைய கேள்வி, எட்டாவதில் பந்தமாவது பிறகு எப்படி ஆறாவதில் உயத்திற்கு வருகிறது? என்பதாகும். யாருக்கு இந்த கேள்விக்கு பதில் தெரியும்? சொல்லுங்கள்! உபசமஸ்ரேணியில் 8, 9, 10, 11-ஆம் குணஸ்தானங்களில் ஏறிய பிறகு, முறையாக 10, 9, 8, 7-ஆவதும் அதற்குப்பிறகு 6-ஆவது குணஸ்தானங்களுக்கும் உயிர் இறங்குகிறது. எந்த உயிரும் 11-ஆம் குணஸ்தானத்திலிருந்து நேராக மித்யாத்துவ குணஸ்தானத்திற்கு செல்வதில்லை. 6-வது குணஸ்தானம்வரை வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகவே இறங்குகிறது, மரணமடையுமானால் அப்போது மட்டுமே நேராக 4-ஆம் குணஸ்தானத்திற்கு செல்கிறது. ஆஹாரக சம்பந்தமான பிரக்ருதி பந்தமாகி இருந்தால், அந்த முனிராஜருக்கு, தத்துவத்தில் ஏதாவது சந்தேகமோ, அல்லது தீர்த்தவந்தனை செய்ய விருப்பமோ வருமானால், அவருடைய உச்சந்தலையிலிருந்து, ஒரு முழ அளவுடைய, ஏழுதாதுக்கள் அற்ற, வெள்ளைநிற மனித வடிவம் கொண்ட, ஒரு உருவம் வெளிப்பட்டு திர்த்தவந்தனை செய்யும் அல்லது தத்துவசம்பந்த சந்தேகத்திற்கு விளக்கம் பெற தீர்த்தங்கரர் இருக்கும் இடத்திற்கு அருகில் சென்ற உடனேயே தேவையான விளக்கம் பெற்றுவிடுகிறது, பிறகு ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் திரும்பி வந்து முனிராஜரின் மூல சரீரத்துடன் கலந்து மறைந்துவிடும். இந்த ஆஹாரக சரீரம் உண்டாகி பிறகு எங்கு செல்லவேண்டுமோ, அங்கு சென்றுவரும் அந்தர்முகூர்த்த காலம், ஆறாம் குணஸ்தானத்தின் அந்தர் முகூர்த்த காலத்தைவிடச் சிறியதாகும்.

நாம் சலாகா புருஷர்கள் பற்றி பார்த்துக் கொண்டிருந்தோம். எந்த உயிர்கள் முன்னரே தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொண்டிருக்கிறதோ, அந்த உயிர்கள் கேவலஞானம் அடைந்ததும், அதாவது 13-ஆம் குணஸ்தானத்தை அடைந்ததும், தீர்த்தங்கரப் பிரக்ருதியின் உதயம் உண்டாகிறது, அவர்களுக்கு சமவசரண அமைப்பு உண்டாகிறது, அவரிடமிருந்து

திவ்யத்தொனி வெளிப்படுகிறது, அவர்களின் மாஹாபுண்ணிய உதயத்தால் மற்ற எல்லா அதிசயங்களும் அப்போதே உண்டாகின்றன.

தீர்த்தங்கரப் பிரக்ருதியின் பந்தத்தின் துவக்கத்தை யாரெல்லாம் செய்யமுடியும் என்பதை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம், உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? கர்மபூமி மனிதர், 4-ஆவது முதல் 7-வது குணஸ்தானத்தில் இருப்பவர்கள்வரை, தீர்த்தங்கரர் அல்லது சாமான்ய கேவலியின் பாதமூலத்தில், இந்த பிரக்ருதிகளை கட்டத் துவங்குகின்றனர். பிறகு அவர்கள் ஒவ்வொரு சமயமும் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக் கொண்டேதான் இருக்கின்றனர். அவர் ராஜாவாக இருந்தாலும், வீட்டில் தொழில் சம்பந்தமான வியாபாரம் முதலியன செய்தாலும், பூஜை, சுவாத்யாயம் செய்து கொண்டிருந்தாலும், முனி அவஸ்தையில் இருந்தாலும், நரக அல்லது தேவ பிறவிக்கு சென்றாலும், இது நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. எட்டாம் குணஸ்தானம்வரை இடைவிடாமல் பந்தமாகிக் கொண்டேதான் இருக்கிறது.

இந்த தீர்த்தங்கரப் பிரக்ருதியை பந்தம் செய்வது யார்? ஏனென்றால் அனேக உயிர்கள் சமவசரணம் செல்கின்றன, எல்லோருக்கும் இது பந்தமாவதில்லை. சாஸ்திரங்களில் இதன் பந்தகாரணத்தை பற்றி சர்ச்சை செய்யும்போது ஷோடசகாரண பாவனை - 16 பாவனைகள் பற்றிய வர்ணனை வருகிறது. உங்களில் யாராவது தீர்த்தங்கரப் பிரக்ருதியை பந்தம் செய்ய விரும்புகிறீர்களா? ஒரு குறுக்குவழி சொல்கிறேன். உங்களிடம் உள்ள ஆகமத்தில், எல்லா வழிகளும் சொல்லப்பட்டுள்ளன. எந்தனை உயிர்கள் இங்கு தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொள்ள விறும்புகிறீர்கள்? என்பதை சொல்லுங்கள்.

பாருங்கள், எந்த உயிராவது எந்த கர்மத்தையாவது கட்டிக்கொள்ள விரும்புகிறது என்றால், அந்த உயிருக்கு பந்தம் நல்லதாகப் படுகிறது என்று பொருள். யாருக்கு கர்மத்தின்-புண்ணிய கர்மத்தின் உதயத்தால் கிடைக்கும் பிறபொருள்கள் நல்லதாகப் படுகிறதோ, அவர் நாம் முன்னர் அதிக புண்ணியம் செய்திருக்கிறோம், அதனால்தான் இந்த நல்ல பொருள்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன என்று சொல்லி, புண்ணிய கர்மத்தை கட்டிக்கொள்வது நல்லதே என்று நம்பி அதை செய்யவே விரும்புகிறார். யாருக்கு பந்தம் நல்லதாகப் படுகிறதோ அவருக்கு, மோக்ஷம் நல்லதாகப்படுவதில்லை. நாம் நம்முடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்றுதான் பார்க்க வேண்டுமே ஒழிய, பிறரை நையாண்டி செய்ய வேண்டியதில்லை. நம் அந்தரங்கத்தில் இந்த மூடநம்பிக்கை இருக்கும்போது வெளியில் தெரியும் ஒழுக்கத்தை கொஞ்சம் மேம்படுத்திக்கொள்ள விரும்புகிறோம், அதனால் எந்த லாபமும் வரப்போவதில்லை. எப்படி உள்ளே ஏதாவது உறுத்தல்-சல்யம் இருந்தால், அல்லது ஏதாவது நம் உடலில் குத்தி

அந்த பொருளின் பகுதி உடலில் இருக்கும்வரை வெளியில் காயம் ஆற மருந்து போடுவதால் எந்த பயனும் இல்லை, அதனால் கெடுதல்தான் விளையும், காயம் சரியாகாது, உடலில் சீழ் பிடித்து ரணமாகிவிடும்.

நாம் இராக-த்வேஷங்களை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள விரும்புகிறோம். மேலும் கொஞ்சம் நல்ல உணர்வு வந்துவிட்டால் நாம் முன்னேற்றமடைந்ததாக நம்புகிறோம், நாம் நல்லவர்களாக ஆகிவிட்டதாக நம்புகிறோம். ஆனால் தீர்த்தங்கரப் பிரக்ருதிகூட சுலபமாகவே பந்தமாகிறது, அது பந்தமாவதற்குத் தகுதியான பரிணாமமும்-அதாவது உணர்வும் செயல்பாடும் சுலபமாகவே உயிரிடம் உண்டாகிறது. ஆனால் அதை பந்தம் செய்துகொள்ள விருப்பம் உடையவர்களுக்கு அது பந்தமாவதில்லை, ஏனென்றால் அது உண்மையில் சம்யக்திருஷ்டி நிலையில் உள்ளவர்களுக்கே பந்தமாகிறது, சம்யக்திருஷ்டிபோல வெளிவேடம் போடுபவர்களுக்கு பந்தமாவதில்லை.

நல்ல சிந்தனையுடன் தர்மத்தை தெரிந்து கொள்ள பெரிய முயற்சி செய்துதான் நாம் இங்கு கூடியிருக்கிறோம், ஆனால் நீங்கள் சுப உணர்வுகள் சுலபமாகவே நிகழ்கிறது என்று சொல்கிறீர்களே? அது எப்படி என்று நீங்கள் கேட்கலாம்.

பதில்: தத்துவ வகுப்பில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே அல்லது பூஜை செய்து கொண்டிருக்கும்போதே அல்லது தியானம் செய்துகொண்டு இருக்கும்போதே மற்ற விகல்பங்கள் - அதற்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத சிந்தனைகள் - அசுப உணர்வுகள் சுலபமாமாக நம்மிடம் வந்துவிடுகிறதே அது எப்படி? அசுப சிந்தனைகள் தானாகவே, சுலபமாகவே எந்த முயற்சியும் செய்யாமலே வருகிறதா அல்லது முயற்சி செய்து அதை அங்கு நீங்கள் கொண்டு வருகிறீர்களா? அசுப உணர்வு என்றால் அது தானாகவே வந்து விட்டது நான் எதுவும் செய்யவில்லை என்று சொல்லி பழியை கர்மத்தின் மேல் போடுகிறோம் ஆனால் சுப உணர்வு எப்படி வருகிறது? அதைமட்டும் நீங்கள் முயற்சி செய்து வந்ததாக அல்லது நீங்கள் பெரிய முயற்சி எடுத்து செய்ததாக உங்களை நீங்களே உங்கள் முதுகில் தட்டிக்கொள்கிறீர்கள். நாம் சுப உணர்வுகளை செய்பவராக எண்ணிக்கொண்டு அமர்ந்திருக்கிறோம், அது நம்முடைய தவறாகும். நல்ல உணர்வோ கெட்ட உணர்வோ எல்லாம் தானகவே நிகழும் விளையாட்டுத்தான், எதுவும் நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதுதான் உண்மை. 'இது எளிமையாக நிகழும் ஒரு வணிகம் என்று புத்திசாலிகள் சொல்கிறார்கள்' என்று நாடக் சமயசாரில் சொல்லப்பட்டிருக்கிறது.

தீர்த்தங்கர பிரக்ருதிகூட பந்திக்க வேண்டிய உயிர்களுக்கு, சுலபமாகவே, சகஜமாகவே பந்திக்கிறது. இந்த சுப-அசுப உணர்வுகள் எல்லாம் தானாகவே

சுலபமாகவே வருகின்றன, சுத்தபாஃவம்கூட சகஜமாகவே தானாகவே நிகழ்கிறது. தர்ம உணர்வும்கூட நம்மிடம் சகஜமாகவேதான் நிகழ்கிறது.

எந்த உயிர் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டுகிறதோ, அது தீர்த்தங்கரராக ஆகிறது. விதேக க்ஷேத்திரத்தில் எந்த பிறவியில் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டுகிறதோ, அந்த பிறவியிலேயே சில உயிர்கள் தீர்த்தங்கரராகி மோக்ஷம் அடைய முடியும். அல்லது ஒரு பவம் தேவ அல்லது நரக பிறவி எடுத்து பிறகு மனிதராகப் பிறந்து தீர்த்தங்கரராகி மோக்ஷம் அடையமுடியும். விலங்கு பிறவியில் தீர்த்தங்கரப் பிரக்ருதி கட்டுவதில்லை, தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொண்டிருக்கும் மனிதர், இறந்து போகபூமி மனிதராகவும் ஆகமுடியாது. இங்கு நம் பரத க்ஷேத்திரத்தில் எல்லா தீர்த்தங்கரர்களுக்கும் ஐந்து-ஐந்து கல்யாணங்களும் நிகழ்கின்றன. கர்ப்ப கல்யாணம், ஜென்ம கல்யாணம், தப கல்யாணம்-தீக்ஷா கல்யாணம், கேவலஞான கல்யாணம், மோக்ஷ கல்யாணம் - இந்த கல்யாணங்களில் இந்திரன் முதலான தேவர்கள் வந்து கல்யாணத்தை நிகழ்த்துகின்றனர்-கல்யாண சம்பந்தப்பட்ட எல்லா நிகழ்வுகளையும் செய்கின்றனர். ஜென்ம கல்யாணம் பற்றி மேருமலையின் வர்ணனை வரும்போது பார்க்கலாம். யாருக்கு ஐந்து கல்யாணங்களும் நிகழ்கிறதோ அந்த உயிர் முன்னர் மனித பிறவியில் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டத்துவங்கி, பிறகு சுவர்க்கம் அல்லது நரகத்தில் சென்று அங்கும் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொண்டிருக்கும் உயிராகவேதான் இருக்கும்.

விதேக க்ஷேத்திரத்தில் மனிதராகப் பிறந்தவர் பிறகு தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டத் துவங்கி அதே பவத்தில் தீர்த்தங்கராக ஆகமுடியும். அவர்களுக்கு கர்ப்பமும், பிறவியும் முடிந்துவிட்டது, அவர்கள் நான்காம், ஐந்தாம் குணஸ்தானத்தை அடைந்த பிறகு தீர்த்தங்கர பிரக்ருதியை கட்டத் துவங்கியிருந்தால் அவர்களுக்கு தப கல்யாணம், கேவலஞான கல்யாணம், மோக்ஷ கல்யாணம் முதலிய மூன்று கல்யாணங்கள் மட்டுமே நிகழும். அவர் முனியான பிறகு தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டத் துவங்கியிருந்தால் கேவலஞான கல்யாணம், மோக்ஷ கல்யாணம் ஆகிய கடைசி இரண்டு கல்யாணங்கள் மட்டுமே நிகழும்.

யாராவது தேவ ஆயுள் கட்டி இருந்து பிறகு தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டத் துவங்கியிருந்தால், அவர் மரணமடைந்து சௌதர்ம சுவர்க்கத்திலிருந்து சர்வார்த்தசித்தி வரை எங்கு வேண்டுமென்றாலும் சென்று பிறந்து, தேவகதியை அனுபவித்து விட்டு மனிதபிறவி எடுத்து தீர்த்தங்கரர் ஆவர். யாராவது மித்யாதிருஷ்டி நிலையில் நரக ஆயுள் கட்டி இருந்து பிறகு சம்யக்திருஷ்டியாகி தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டத் துவங்கியிருந்தால், அவர் மரணமடைந்து முதல் மூன்று நரகங்களில் எங்காவது சென்று பிறவி எடுத்து பிறகு மனிதபிறவி எடுத்து தீர்த்தங்கரர்

ஆவர். தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொள்ளும் மனிதர்கள் அல்ப-சங்க்யாத எண்ணிக்கையில் இருந்த போதிலும் அவர்கள் தேவ அல்லது நரக கதியில் பிறக்கிறார்கள், அங்கு ஆயுள் கடற்காலங்களில் இருப்பதால், முன்னர் கூறிய சுவர்க்க நரகங்கள் ஒவ்வொன்றிலும் அசங்க்யாத-அசங்க்யாத உயிர்கள் தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பிறகு அடுத்த பிறவியில் நான்காம் காலமாக இருக்கும் கர்ம பூமிகளில் பிறந்து தீர்த்தங்கரராகின்றனர். இவர்கள் அனைவருக்கும் ஐந்து கல்யாணங்களும் நிகழும்.

கேவலஞானம் உண்டான பிறகு தீர்த்தங்கரப் பிரக்ருதியின் உதயம் துவங்குகிறது. 13, 14-ஆம் குணஸ்தானத்தில் இருக்கும்வரை தீர்த்தங்கரப் பிரக்ருதியின் உதயம் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டே இருக்கும். கேவலஞானம் உண்டான பிறகு எவ்வளவு ஆயுள் மிச்சமிருக்கிறதோ அதுவே அவருடைய தீர்த்தங்கரரின் காலமாகும். அவர்களுக்கு குறைந்தபட்ச காலம் பிரதக் வருடங்களாக-அதாவது ஏழு, எட்டு வருடங்களாக இருக்கிறது. சாமான்ய கேவலிகளுக்கு 13-ஆம் குணஸ்தான குறைந்தபட்ச காலம் அந்தர்மு கூர்த்தமாக இருக்க முடியும், இவ்வளவு குறைந்த காலம் தீர்த்தங்கரர்களுக்கு இருப்பதில்லை.

நாம் சலாகாபுருஷர்கள் பற்றி பார்த்துக்கொண்டு இருக்கிறோம், இந்த விஷயத்தை விட்டு நாம் வெளியில் செல்லவேண்டாம். இவர்களில் 24 தீர்த்தங்கரர்கள் பற்றி இதுவரை நாம் பார்த்தோம். சலாகா புருஷர்களில் 12 சக்கரவர்த்திகள் இருக்கின்றனர், இவர்கள் ஆறு கண்டங்களுக்கு அதிபதிகளாக இருக்கின்றனர். பரத, ஐராவத, விதேக க்ஷேத்திரங்களில் ஐந்து-ஐந்து மிலேச்ச கண்டங்களும், ஒரு ஆரிய கண்டமும் இருக்கின்றன. இரண்டரை தீபம்-மனிதக்ஷேத்திரம் பற்றி பார்க்கும்போது இதைப்பற்றி மேலும் விரிவாகப் பார்க்கலாம்.

யார் முன்னரேயே சம்யக்திருஷ்டி புருஷராக இருக்கிறாரோ, அவர்கள் தேவ பிறவியில் பிறந்து, தேவசுகம் அனுபவித்துவிட்டு, அங்கிருந்து வந்து மனிதப்பிறவி எடுத்து, பிறகு சக்கரவர்த்தி பதவியைப் பெறுகின்றனர். இங்கு நம் பரதக்ஷேத்திரத்தில், ஒவ்வொரு நாலாம் காலத்திலும் அப்படி 12 சக்கரவர்த்திகள் பிறக்கின்றனர். தீர்த்தங்கரப் பிரக்ருதி போலவே சக்கரவர்த்தி பிரக்ருதி என்று ஏதாவது ஒரு புண்ணிய கர்ம பிரக்ருதி இருக்கிறதா என்ன? என்ற சந்தேகம் உங்களுக்கு எழுந்திருக்கிறது.

இதற்கு பதில் நமக்கு தெரிந்த 148 உத்திரப் பிரக்ருதிகளில் இந்த பெயர் கொண்ட பிரக்ருதி என்னவோ எதுவும் இல்லை. இந்த பதவி மாஹா சாதிஷ்ய புண்ணியப் பிரக்ருதியின் உதயத்தால் பெறப்படுகிறது. அப்படிப்பட்ட மஹா புண்ணியசாலிகளுக்கே இந்த உத்தோரோத்தர புண்ணியப் பிரக்ருதி

பந்தமாகிறது, சக்கரவர்த்தி போன்ற ஒப்பற்ற பெருமை அடையப்படுகிறது. அவர்கள் 14 இரத்தினங்களைப் பெறுகின்றனர், அதில் ஒன்றுதான் சக்கர இரத்தினமாகும். அந்த இரத்தினத்தைப் பெற்ற காரணத்தால் ஆறு கண்டத்திலுள்ள எல்லா அரசர்களையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவருகின்றனர். அவருடைய புண்ணியம் அப்படிப்பட்டதாக இருக்கிறது, அதனால் அவர் எந்த அரசருடனும் போர் செய்ய வேண்டியதாக இல்லை, சக்கர இரத்தினத்தை பார்த்த மாத்திரத்தில், எல்லா அரசர்களும் விரும்பி அவர் ஆட்சியின் கீழ் வருகின்றனர். இது ஹுண்டாவசர்பிணி காலமாக இருப்பதால் சக்கரவர்த்திக்குகூட மானபங்கம் உண்டானது - பரத சக்கரவர்த்தி மற்றும் பாஹுபலிக்கு இடையில் ஒன்றுக்கு ஒன்று என்ற முறையில் மல்யுத்தம், ஜலயுத்தம், திருஷ்டியுத்தம் மூன்றிலும் பரத சக்கரவர்த்தி தோல்வியுற்றார், ஆனால் அந்த சக்கரவர்த்தி புண்ணிய மஹிமையால் இந்த யுத்தத்தில், எந்த உயிர்ப்பலியும் நிகழவில்லை, பாஹுபலிக்கு இந்த உலக வாழ்க்கையில் வைராக்கியம் உண்டாகி அரச பதவியை துறந்து முனி தீக்ஷை எடுத்துக் கொண்டார்.

முன்பு நாம் அவசர்ப்பிணி பற்றி பார்த்தோம் அல்லவா, அப்படிப்பட்ட அசங்க்யாத அவசர்ப்பிணிகள் கழிந்த பிறகு பரத, ஐராவத க்ஷேத்திரங்களில் மட்டும் இப்போது நம் பரத க்ஷேத்திரத்தில் நிகழும் நிகழ்வுகள் போல பல விசித்திரமான குறைபாடுகள் நிகழ்கின்றன, இந்த காலத்தை ஹுண்டாவசர்பிணி காலம் என்று சொல்கின்றனர். இதுபோன்ற குறைபாடுகள் மற்ற அவசர்ப்பிணி காலங்களில் நிகழ்வதில்லை. ஆதிநாத பகவானின் பிறப்பு மூன்றாம் காலத்திலேயே உண்டானது, தீர்த்தங்கரருக்கு பொதுவாக பெண் குழந்தைகள் பிறப்பதில்லை, ஆனால் ஆதிநாதருக்கு இரண்டு மகள்கள் பிறந்தனர், நாலாம் காலத்தின் இடையில் எவ்வளவோ காலம்வரை தர்மமே இல்லாமல் போனது, தீர்த்தங்கரராக ஆகப்போகும் மஹாமுனிகளுக்கு கூட உபசர்க்கங்கள் நிகழ்கின்றன, இதுபோன்ற சில, பல அசுப நிகழ்வுகள் ஹுண்டாவசர்பிணி காலத்தில்தான் நிகழ்கின்றன.

சக்ரவர்த்திகளின் செல்வச்செழிப்புகள் கீழ்கண்டவாறு அமைகின்றன. சக்கரவர்த்திகளிடம் 84 லக்ஷம் யானைகள் இருக்கின்றன, அதே எண்ணிக்கையில் இரதங்கள் இருக்கின்றன. 18 கோடி குதிரைகள் இருக்கின்றன. ஆறு பருவங்களிலும் கிடைக்கும் எல்லா வஸ்துக்களையும் எப்போதும் கொடுக்கக்கூடிய காளநிதி, எல்லாவித சங்கீதக் கருவிகளையும் கொடுக்கவல்ல மஹாகாளநிதி, எல்லாவகை உணவுகளையும் வழங்கவல்ல பாண்டுநிதி, எல்லா ஆயுதங்களையும் கொடுக்கவல்ல மாணவகநிதி, கேட்பதைக் கொடுக்கும் சங்காநிதி, ஆலயங்களை அமைக்கவல்ல நைசர்க்கநிதி, எல்லாவகை ஆடைகளையும் வழங்கவல்ல பத்மநிதி, எல்லா ஆபரணங்களையும் அளிக்கவல்ல பிங்களநிதி, எல்லாவகை இரத்தினங்களையும் அளிக்கவல்ல நானாரத்தினநிதி இவ்வாறான நிதிகள்

சக்கரவர்த்திகளுக்கு இருக்கின்றன. யோஜனை யில் அளவுகொண்ட, பெரிய மாட்டுவண்டி வடிவில் [ஏர் உழும் கலப்பையில் உள்ள இரும்பினாலான கார் வடிவில் இருப்பதாக விளக்கம் மஹாபுராணத்தில் வருகிறது. இந்த வடிவில்தான் எல்லா நிதிகளும் இருப்பதாக சொல்லப்படுகிறது.] இந்த நிதிகள் இருக்கின்றன, அவைகளிலிருந்து இப்படிப்பட்ட பல வஸ்துக்கள் எடுக்கக் குறையாமல் வேண்டியஅளவு வந்துகொண்டே இருக்கின்றன.

சக்கரவர்த்திகளுக்கு 14 இரத்தினங்கள் கிடைக்கின்றன, அவைகளாவன: 1.சக்கர இரத்தினம், 2.அசி இரத்தினம், 3.சத்ர இரத்தினம், 4.தண்ட இரத்தினம் (சேனைகள் தங்குமிடத்தை தூய்மையாக வைத்திருப்பவை), 5.மணி இரத்தினம் [சூடாமணி போன்றது, சேனைகள் இருக்குமிடத்தில் வெளிச்சத்தைக் கொடுப்பது], 6.சர்ம இரத்தினம்[மிலேச்ச அரசனால் உண்டாக்கப்பட்ட நீர்நிலைகளில் மிதந்து சக்கரவர்த்தியின் சேனைக்கு அந்த நீர்நிலைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க இடமளிப்பது அளிப்பது], 7.காகிணி இரத்தினம்[குகையில் செல்லும்போது வெளிச்சத்தை உண்டாக்குவது, விஜயார்த்த மலையில் பெயர் பதிக்க உதவுவது-laser like item]. இவை ஏழும் அசேதன-ஜட இரத்திணங்களாகும். சக்கரவர்த்தி சேனை சகிதமாக விஜயார்த்தத்தில் உள்ள குகை அருகில் வரும்போது, அந்த பிரம்மாண்டமான குகைகளின் கதவுகளை, இந்த இரத்தினங்களின் உதவியால்தான் திறக்கப்படுகின்றன. இந்த குகையில் இரண்டு நதிகள், கங்கை நதியுடன் கலக்கின்றன. அவைகளின் பெயர்கள் ‘உன்மக்னா’ மற்றும் ‘நிமக்னா’ ஆகும். உன்மக்னா நதியில் எந்த வஸ்து விழுந்தாலும் அது வெளியில் தள்ளப்படும், மற்றும் நிமக்னா நதியில் மிகவும் தக்கையான வஸ்து விழுந்தாலும், அது உள்ளே இழுக்கப்பட்டு, குகையின் உள்பக்கம் அதாவது அடுத்த பக்கம் சென்று விடும். சக்கரவர்த்தியின் சேனை குகையைக் கடக்க வெவ்வேறு இரத்தினங்கள் உதவியாக இருக்கின்றன. மற்ற இரத்தினங்கள் உயிருள்ளவை-சேத்தன இரத்தினங்களாகும். அவைகளாவன 1.கிரஹபதி இரத்தினம், 2.சேனாபதி இரத்தினம், 3.யானை இரத்தினம், 4.குதிரை இரத்தினம், 5.புரோகித இரத்தினம், 6.ஸ்தபதி (கட்டிடக்கலை-தொழில் நிபுணர்) இரத்தினம், மற்றும் 7.ஸ்திரி இரத்தினம் என்பனவாகும்.

சக்கரவர்த்திகளுக்கு 96,000 ராணிகளும், 32,000 புத்திரர்களும் உள்ளனர். இவைகள் எல்லாம் அவர்களின் புண்ணிய வைபவத்தால் கிடைப்பதைப் பார்த்து, நமக்கு புண்ணியம் நல்லதாகப்படுகிறது. எந்த சக்கரவர்த்தி, சக்கரவர்த்தி பதவியில் இருக்கும்போதே மரணமடைகிறாரோ, அவர் ஏழாம் நரகத்தில் 33 கடற்கால ஆயுளுடன் சென்று பிறகின்றனர் என்பது நியமமாகும். இங்கு சக்கரவர்த்தி பதவியில் நல்ல இன்பம் அனுபவித்தாலும், க்ஷணநேரத்தில் மரணமடைந்து ஏழாம் நரகத்திற்கு சென்று விடுகின்றனர். நரகத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் அமைகின்றன, மற்றும் எப்படிப்பட்ட உணர்வுகள் உண்டாகின்றன என்பதைப்பற்றி நாம் முன்னரே பார்த்தோம்.

நமக்குக்கூட அனுகூலமான பொருள்கள் கிடைப்பது மிகவும் நல்லதாகவே படுகிறது, அவைகளை கொஞ்சநேரமாவது அனுபவிப்பதை விட்டுவிட்டு, நம் ஆத்ம நலத்திற்காக கெஞ்சம் தர்மோபதேசத்தை கேட்பதுகூட நல்லதாகப் படுவதில்லை. அந்த சக்கரவர்த்திகள் கூட அனுகூலமானவைகளில் ஆழ்ந்து போகின்றனர், அவைகளை அனுபவிப்பதை நல்லதாக உணர்கின்றனர், அதனால் தான் அவர்கள் சக்கரவர்த்தி பதவியிலேயே கடைசிவரை இருந்து விடுகின்றனர். யார் அந்த சக்கரவர்த்தி பதவியையும் அதன் வைபவங்களையும் தியாகம் செய்து முனிதீக்ஷை எடுக்கிறார்களோ, அவர்களில் சிலர் அந்த பிறவியிலேயே மோக்ஷமடைகின்றனர், சிலர் சுவர்க்கத்தில் சென்று பிறக்கின்றனர். இப்படி 12 சக்கரவர்த்திகள் பரத க்ஷேத்திரத்தில் நான்காம் காலத்தில் ஏறுகாலம், இறங்குகாலம் இரண்டிலுமே பிறக்கின்றனர்.

மற்ற சல்லாகாபுருஷர்கள் யார், யார்? ஆம், 9 நாராயணன்கள், 9 பிரதிநாராயணன்கள், 9 பலபத்திரர்கள். பலபத்திரர் என்ற பெயர் கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதல்லவா. நாம் இங்கு (தேவலாலியில்) காலையில் 8 பலபத்திரரின் பிரதிமைகளை தரிசனம் செய்தோம். ஒன்பதாவது பலபத்திரராக அதாவது பலராமன் என்பவர், ஸ்ரீகிருஷ்ணரின் சகோதரராக இருந்தார், அவர் மட்டும் இறந்து சுவர்க்கம் சென்றார், மற்ற எட்டு பேரும் மோக்ஷம் சென்றனர். நாராயணனனை வாசுதேவன் என்றும், பிரதிநாராயணனனை பிரதிவாசுதேவன் என்றும்கூட சொல்கின்றனர். நாராயணன்கள், பிரதிநாராயணன்கள், பலபத்திரர்கள் மூவரும் ஒரே காலத்தில் பிறக்கின்றனர்.

நாராயணனனும், பலபத்திரரும் ஒன்றுவிட்ட சகோதரர்களாகவே பிறக்கின்றனர். அதாவது இராமர், லஷ்மணன் போல, அவர்களுடைய தந்தை ஒருவராகவும், அவருடைய இரண்டு மனைவிகளுக்கு பிறந்த பிள்ளைகளாக இவர்கள் இருப்பர். இவர்கள் இருவருக்கும் இடையில் மிகுதியான பாசப்பிணைப்பு இருக்கும்.

சக்கரவர்த்தி ஆறு கண்டங்களுக்கு அதிபதியாக இருப்பதுபோல, பிரதி நாராயணன் மூன்று கண்ட அதிபதியாக-அர்த்தசக்கரவர்த்தியாக இருப்பார். பிரதிநாராயணன் துஷ்டராகவே இருப்பர், அவரை நாராயணன் போரில் வென்று, மூன்று கண்ட அதிபதியாக ஆவார் என்பது நியமமாகும். கிருஷ்ணர் பலபத்திரருக்கு முன்னும், லஷ்மணன், இராமருக்கு முன்னும் மரணமடைந்தது போல; நாராயணன், பலபத்திரருக்கு முன் இறந்து விடுவார். அவர்களுக்கு இடையில் மிகுந்த பாசப்பிணைப்பு இருப்பதால் அவருடைய சகோதரர் இறந்துவிட்டதாக நம்புவதில்லை, ஆறுமாத காலம்வரை அவருடைய பிணத்தை தோளில் சுமந்துகொண்டு, அந்த பிணத்தை தினமும் குளிப்பாட்டி, உணவு ஊட்டவும் முயற்சி செய்வர், அவர்களை கொண்டாடுவார்கள், அந்த பிணம் எந்த உணர்வையும் காட்டாததைப் பார்த்து துக்கப்படுவர்.

சம்யக்திருஷ்டிகள்கூட இப்படி செய்வார்களா? என்ற சந்தேகம் நமக்கு வருகிறது. அவருடைய வெளிக்கிரியைகளைப் பார்த்து, நம்மைப் போன்ற அஞ்ஞானிகள் கூட செய்யத்தகாத காரியத்தை, இவர்கள் எப்படி செய்கிறார்கள்? இது கூடவா இவர்களுக்கு தெரியாது? என்று நினைக்கிறோம். பிரதமானுயோகத்தில் இதைப்பற்றி படிக்கும்போது, பிணத்தை ஆறுமாத காலம் தன் தோளில் தூக்கிக்கொண்டு இருக்கும் இவர்கள் எப்படிப்பட்ட சம்யக்திருஷ்டிகள்? என்ற எண்ணம் வருகிறது. இதற்கு காரணம் அவர்களுக்கு இடையில் இருந்த மிகுந்த பாசமேயாகும் மற்றும் ஆறுமாத காலம் அவர்களுடைய புத்தி பேதலித்த நிலையில் இருக்கிறது என்பதே நம் கேள்விக்கு பதிலாகும். சாரித்திர மோஹனீயகர்ம வசமாகி இவ்வாறு செயல்படுகின்றனர், ஆனால் அவர்களிடம் மித்யாத்துவம் மற்றும் அனந்தானுபந்தியின் உதயம் இருப்பதில்லை, மற்ற மோஹனீய கர்மோதயத்தால் இவ்வாறு செய்கின்றனர்.

ஒவ்வொரு நான்காம் காலத்திலும் 63 சலாகபுருஷர்கள் இதுபோல தோன்றுகின்றனர் என்பது நியமமாகும். இது தடையற்ற நியமமாக இருப்பதால், இந்த ஹுண்டாவசர்ப்பிணி காலத்தில்கூட 63 சலாகாபுருஷர்கள் தோன்றியிருக்க வேண்டுமல்லவா? என்று உங்களைக் நான் கேட்கிறேன், உங்கள் பதில் என்ன என்பதை சொல்லுங்கள் பார்க்கலாம்!

பதில்: இல்லை, நான்கு குறைவாக, அதாவது 59 சலாகாபுருஷர்களே தோன்றினர். இதில் சிலர் அதாவது ஒரே உயிரே இரட்டை வேடங்களில் தோன்றினர். எல்லோரும் தனித்தனி உயிராக இருக்கும் பட்சத்தில் எண்ணிக்கை 63-ஆகவே இருந்திருக்கும். நம் தீர்த்தங்கரர்களில் மூவர் சக்கரவர்த்திகளாகவும் இருந்தனர். அவர்கள் யார்யார் என்று தெரியுமா? சாந்திநாதர், குந்துநாதர், அரநாதர் ஆகியவர்கள் இரண்டு பதவியையும் வகித்தவர்களாவர். மஹாவீரருடைய உயிர் முன்னர் ஸ்ரேயாம்சநாதர் காலத்தில் திருப்ரதிஷ்ட நாராயணனாக இருந்தார். பிறகு அந்த உயிர் எங்கு சென்றது? ஆம், நரகத்திற்குச் சென்றது. நாராயணனும், பிரதிநாராயணனும் இறந்து நியமமாக நரகத்தில் சென்று பிறக்கின்றனர். பலபத்திரர்களில் சிலர் மோக்ஷமடைகின்றனர், சிலர் சுவர்க்கத்தில் சென்று பிறக்கின்றனர். இந்த 63 சலாகாபுருஷர்களைத்தவிர இந்த காலத்தில் இன்னும் வேறு சில மஹாபுருஷர்களும் பிறக்கின்றனர். காமதேவர், தீர்த்தங்கரர்களின் தாய்-தந்தை ஆகியோர், நாரதர், மற்றும் ருத்திரர்கள் ஆகியோர்களே அவர்களாவர். இவர்களுக்குக்கூட தனித்தனி சிறப்புகள் இருக்கின்றன.

ருத்திரர்கள் கூட பிறகு மோக்ஷமடைகின்றனர், ஆனால் ருத்திரராக பிறக்கும் பவத்தில், பாவலிங்கி முனியாக ஆகி, அதிலிருந்து பிரஷ்டராகி

இறந்து நரகம் செல்கின்றனர். பாருங்கள்! உயிரினுடைய பரிணாமம் எப்படியெல்லாம் ஆகிறது என்பதைப் பருங்கள். சிலர் பாவலிங்கி முனியாக இருந்தாலும், கோடி வருடங்கள் ஆயுளில் அதிக பட்சகாலம் பாவலிங்கி முனி அவஸ்தையில் கழித்தாலும், பின்னர் அவர்களுடைய பரிணாமம் கெட்டு விடுவதால் மித்யாத்துவத்தில் விழுகின்றனர், மித்யாத்துவ நிலையில் ஆயுளை கட்டிக்கொண்டு நரக-நிகோதத்தில் சென்று பிறக்கின்றனர். எனவே நம்முடைய பரிணாமம் எப்போது எப்படி மாறிப்போகும் என்பது பற்றி உறுதியாக எதையும் சொல்லமுடியாததாக இருக்கிறது என்பதே உண்மையாகும்.

நாம் முதுமையில் தர்மவழியில் நடக்க விரும்புகிறோம். நாம் எதை நம்புகிறோம்? இப்போது இருக்கும் நம்பிக்கையே தொடர்ந்து இருக்கும் என்று உறுதியாகச் சொல்லமுடியாத நிலையில், முதுமையில் தர்மவழியில் நடப்போம் என்று எப்படி உறுதியாக நம்பமுடியும்? 'கல் சூடாக இருக்கும் போதுதான் ரொட்டியை வேகவைக்க முடியும்' என்ற ஒரு பழமொழி மராட்டியில் இருக்கிறது. புரியவில்லையா? கேளுங்கள், நாம், மகளிர் ரொட்டி சமைக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நம்மை தொலைபேசியில் யாராவது அழைத்தால், கேஸ் அடுப்பை அணைத்து விட்டு, போன் பேச சென்று விடுகிறோம், இவ்வாறு 30-40 நிமிடங்கள் ஓடிவிடுகிறது. பிறகு என்னவாகிறது? சூடாக இல்லாத தவாவிலா ரொட்டியை வேகவைக்கிறோம்? இல்லை அல்லவா? அதுபோல, இப்போது சுவாத்யாயம் செய்ய, சாஸ்திரங்களை கேட்க எண்ணம் இருக்கிறது, ஆனால் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட உணர்வு இருக்கும் என்று சொல்லமுடியும்? அந்த உணர்வு இருக்குபோதே நீங்கள் இதை செய்யவில்லை என்றால், தத்துவங்களை கேட்டு புரிந்து கொள்வதையும், புரிந்துகொண்டதை சிந்தனை செய்வதையும், இது இப்படித்தான் இருக்கிறது என்று தத்துவ நிர்ணயம் செய்வதையும் எப்போதுதான் செய்யப் போகிறோம்? பிறர் மரணமடைவதைப் பார்க்கிறோம், ஆனால் நாம் அமரராக மரணமடையாமல் இருப்போம் என்ற நம்பிக்கையுடன் எதுவும் செய்யாமல் காலத்தை வீணாகக் கடத்துகிறோம்.

எந்த பரிணாமத்தில் எப்போது, எந்த ஆயுளை பந்திப்போம், மற்றும் எங்கு சென்று பிறப்போம் என்பது பற்றி எதுவும் தெரியாது. முழு உலகத்திலும் உயிர் எங்கு சென்று சுற்றிக்கொண்டிருக்கும் என்பதும் தெரியாது - நரகத்தில் - நிகோதத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லமுடியும். இப்போது கிடைத்திருக்கும் சூழ்நிலையை விட்டுவிடவும் விரும்புவதில்லை, எதிர் காலத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலை அமையும்? என்பதும் தெரியாது. எதிர்காலத்தில் எந்த கதியில் பிறந்து நாம் மோக்ஷமடையும் செயலை செய்யப் போகிறோம் என்று சிந்தனையாவது வருகிறதா? இல்லையா?

இவ்வாறு சலாகாபுருஷர்கள் பற்றி நாம் இதுவரை தெரிந்து கொண்டோம். முழு உலகத்திலும் மேலே ஊர்த்தவலோகமும், நடுவில் மத்யலோகமும், கீழே அதோலோகமும் இருப்பதையும் நாம் பார்த்தோம். கீழ் உலகத்தில் நரகங்களின் அமைப்பு, அங்கிருக்கும் அனுகூலமற்ற சூழ்நிலைகள் பற்றியும் பார்த்தோம். அப்படிப்பட்ட மிகவும் அனுகூலமற்ற சூழ்நிலையிலும், உயிர்கள் சம்யக்தரிசனத்தை பெறுகின்றன - வேதக சம்யக்த்துவத்தையோ அல்லது பிரதமோபசம சம்யக்த்துவத்தையோ பெறுகின்றன. எந்த சூழ்நிலையும், உடனிருப்பவைகளும், நம் மார்க்கத்தை நிறுத்தி வைப்பதில் சாமர்த்தியம் கொண்டதாக இல்லை என்பது நமக்குத் தெரியவருகிறது. நமக்கு இங்கு உடனிருப்பவைகளின் மேல்தான் ருசி இருக்கிறது. அங்கு நரகத்தில் உடனிருப்பவைகளின் மேல்தான் ருசி இருக்க முடியாது. அங்குகூட உயிர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலை தமக்கு அமைந்திருக்கிறது? எப்படிப்பட்ட தீவிர வேதனையை நாம் அடைகிறோம்? எப்படிப்பட்ட துக்க உணர்வுகள் நமக்கு வருகின்றன? என்றெல்லாம் சிந்திக்கின்றன. இந்த இராக-த்வேஷ-துன்ப வடிவ சிக்கலான பரிணாமங்களிலிருந்து, நான் வேறானவன் என்ற தத்துவ சிந்தனையை அவ்வுயிர்கள் உணரும்போது - அப்படிப்பட்ட சிந்தனை வரும்போது, அந்த உயிர்கள் சம்யக்த்துவத்தைப் பெறுகின்றன.

நரகத்தில் பூமிகள் இருக்கின்றன, அப்படி இருந்தபோதிலும் ஏகேந்திரியங்கள் ஏன் நரகத்திற்கு செல்வதில்லை? என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறீர்கள். இங்கே பாருங்கள்! நரக க்ஷேத்திரம் எப்படி இருக்கிறது என்பதும், நாரகியாக பிறப்பது என்பதும் வெவ்வேறு விஷயங்களாகும். எங்கு நரகம் இருக்கிறதோ அங்கு பூமிகள் இருக்கவே செய்கின்றன, அங்கு பாதர மண்ணுடலி உயிர்கள் இருக்கவே செய்கின்றன. அந்த ஏழு பூமிகளின் ஆதாரத்தில், ஐந்துவித பாதர ஏகேந்திரிய உயிர்களும் வாழ்கின்றன, ஆனால் அவை நரககதி உயிர்கள் இல்லை. இந்த பூமிகளுக்கு கீழே மூன்று-மூன்று வாதவலையங்கள் உள்ளன, இடையில் அசங்க்யாத யோஜனை அளவு காலி இடங்களும் உள்ளன. ஐந்து வித ஏகேந்திரிய சூக்ஷ்ம உயிர்களும், உலகம் முழுவதும் இருக்கின்றன. முழு லோகாகாசத்திலும் சூக்ஷ்ம ஸ்தாவர உயிர்கள் வாழ்கின்றன. மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி முதலான எல்லா உயிர்களும் முழு உலகத்திலும் அசங்க்யாத-அசங்க்யாத எண்ணிக்கையில் இருக்கின்றன. நிகோத உடல்களும் அசங்க்யாத எண்ணிக்கையில் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு நிகோத உடலிலும் அனந்த-அனந்த நிகோத உயிர்கள் இருக்கின்றன. எத்தனை அனந்தங்கள் என்று தெரியுமா? முக்காலத்திலும் எவ்வளவு உயிர்கள் சித்தநிலை அடையுமோ அந்த எண்ணிக்கையைவிட அனந்த மடங்கு உயிர்கள் நிகோத உடலில் வசிக்கின்றன.

பாதர நிகோத உயிர்கள் உருளைகிழங்கு, வெங்காயம், கேரட், முள்ளங்கி, பூண்டு, சோத்துக்கற்றாழை (aloe vera) முதலான ஔதாரிக உடல்களில்

காணப்படுகின்றன. ஊசிமுனை அளவு சிறிய துண்டில் அசங்க்யாத எண்ணிக்கையில் நிகோத உடல்களும், ஒவ்வொரு நிகோத உடலிலும் அந்த நிகோத உயிர்கள் வாழ்கின்றன. ஒரு நிகோத உடலில் காணப்படும் உயிர்களின் அனந்தத்தின் ஒருபாக உயிர்களின் எண்ணிக்கை, முக்காலத்திலும் சித்தராகும் உயிர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். உயிர்களின் அனந்த எண்ணிக்கை எவ்வளவு என்பது நம் கற்பனைக்கு எட்டாத ஒன்றாக இருக்கிறது. சிலர் இந்த அளவில் உயிர்களும் சித்தராகி விட்டால் இந்த உலகமே உயிர்களே இல்லாததாக - காலியாகி விடுமல்லவா?! என்று எண்ணுகின்றனர். சிலர் இப்படிகூடக் கூறுகிறார்கள் - நீங்கள் சுவத்யாயம் செய்வதுபோல, எல்லோரும் சுவாத்யாயம் செய்து சித்தராகி விட்டால் என்னவாகும்? நம்முடைய பொருள்களை எல்லாம் யார் பார்த்துக் கொள்வார்கள்? கடவுள் இவ்வளவு பெரிய உலகத்தை நமக்காகத்தான் படைத்திருக்கிறார், எல்லோரும் இங்கிருந்து சித்தராகி சித்தகதிக்கு சென்றுவிட்டால் இதையெல்லாம் யார் அனுபவிப்பார்கள்? இப்படி கூறுபவர்கள் முழு உலகமும் அவர்கள் அனுபவிப்பதற்கே இருப்பதாக நம்புகிறார்கள்.

உங்கள் கேள்விக்கு பதில் கூறவே இப்படிப்பட்ட சர்ச்சைகள் செய்ய வேண்டியதாயிற்று. ஏகேந்திரியத்திலிருந்து நான்கு இந்திரிய உயிர்கள்வரை உள்ள எல்லா உயிர்களும், இறந்து நரகம் செல்வதில்லை, தேவகதிக்கும் செல்வதில்லை என்பது நியமமாகும் - விதிமுறை யாகும். எந்தெந்த உயிர்கள் எந்தெந்த கர்ம பிரக்ருதிகளை கட்டிக் கொள்ளும்? எப்போது எந்த கர்ம பிரக்ருதிகள் உதயத்திற்கு வரும்? இவைகள் எல்லாவற்றிற்கும்கூட நிச்சயிக்கப்பட்ட நியமங்கள் இருக்கின்றன, இந்த நியமங்களை யாராலும் மாற்ற முடியாது, அவைகளை நம்மால் தெரிந்துகொள்ள மட்டுமே முடியும். நாம் அவைகளை, அல்லது அந்த நிலைமையை உண்டுபண்ணும் உணர்வுகளை மாற்றியமைக்க முடியாது.

இத்துடன் நரகங்களின் வர்ணனை முடிகிறது, ஆனால் கீழ்உலகின் வர்ணனை இன்னும் முடியவில்லை. முதல் இரத்தினப்பிரபா பூமியின் மேல் இரண்டு பாகங்களில், அதாவது கர மற்றும் பங்க பாகத்தில் பவனவாசிகளும், வியந்தரஜாதி தேவகதி உயிர்களும் வாழ்கின்றனர். அந்த தேவகதி உயிர்கள் எல்லாம் அதோலோகத்தில் வாழும் தேவகதி உயிர்களாகும். தேவர்கள் எல்லோரும் மேல் உலகத்திலும், நரகர்கள் எல்லோரும் கீழ் உலகத்திலும் வாழ்வதாக நாம் நினைக்கிறோம், ஆனால் உண்மையில் அப்படி இல்லை. நாரகிகள் என்னவோ அதோலோகத்தில் அவரவர்களுக்கான நரக பிலங்களில் வாழ்கின்றனர், ஆனால் தேவகதி உயிர்கள் மேல் உலகம், நடு உலகம், கீழ் உலகம் மூன்றிலுமே வாழ்கின்றனர். ஜோதிஷி தேவர்கள் மட்டுமே நடு உலகில் வாழ்கின்றனர்.

இந்த பவனவாசி, வியந்தரர், ஜோதிஷி என்பவர்கள் யார் என்பதைப் பார்க்கலாம். இம்மூவரையும் சேர்த்து பவனத்திரிக் என்று சொல்கின்றனர். சம்யக்திருஷ்டி மனிதரோ அல்லது விலங்கோ சம்யக்த்துவத்துடன் இந்த பவனத்ரிகத்தில் சென்று பிறப்பதில்லை. அவர்கள் பின்னால் சம்யக்த்துவத்தைப் பெறமுடியும், நான்காம் குணஸ்தான வர்த்தியாக ஆகமுடியும், ஆனால் நான்காம் குணஸ்தான அசய்யம சம்யக்திருஷ்டியோ, அல்லது தேசசய்யம-ஐந்தாம் குணஸ்தானவர்த்தியோ பூஜிக்கத் தகுந்தவர்களல்ல, அவர்களுக்கு அர்க்கியம், பூஜை, ஆரத்தி செய்யப்படுவதில்லை - சரணானுயோகத்தில்கூட நியமங்கள் இருக்கின்றன, அவைகளைத் தெரிந்துகொண்டு விவேகத்துடன் செயல்பட வேண்டும், இல்லையென்றால் மித்யாத்துவ குற்றம் வந்துவிடும் என்று நீங்கள் சஹடாலாவில் படித்தோ அல்லது கேட்டோ இருக்கலாம். பவனத்ரிக யக்ஷ, தேவ, தேவிகளை பகவான்கள் என நம்புதல், அவர்களுக்கு பூஜை செய்தல் கிரஹீத மித்யாத்துவமாகும். அவர்கள் எல்லாம் பகவானின் பக்தர்களாவார்கள், அவர்களே பகவான்களில்லை. நாம் எந்த சிந்தனையுமின்றி, மற்றவர்கள் செய்வதைப் பார்த்து நாமும் அவர்களுக்கு பூஜை செய்கிறோம், அவ்வாறு செய்வது சரியா, தவறா என்றுகூட சிந்திப்பதேயில்லை.

பவனவாசி தேவர்கள் பவனங்களில் வசிக்கின்றனர். இங்கு பூமிக்கு கீழ் கீழ்தளம்-பேஸ்மெண்ட் இருப்பதுபோல அல்லது பூமிக்கு அடியில் குகைகள் இருப்பதுபோல, முதல் பூமியின் கர, பங்க பாகங்களில் இந்த தேவர்களின் பவனங்கள் இருக்கின்றன. அங்கு அவர்கள் வாழத்தேவையான எல்லா வசதிகளுடன், ஜிநாலயங்கள்-அக்ருத்திம சைத்யாலயங்கள் முதலியனகூட இருக்கின்றன. நாம் மூவுலகிலுமுள்ள அக்ருத்திம சைத்யாலயங்களுக்கு பூஜை செய்கிறோம். அப்போது அதோலோகத்தின் 7 கோடியே 72 லக்ஷம் அக்ருத்திம சைத்யாலயங்களுக்கு நமஸ்காரம் செய்கிறோம், அர்க்கியம் வைக்கிறோம். ஊர்த்தவலோகத்தின் 84 லக்ஷத்து 97 ஆயிரத்து 23 அக்ருத்திம சைத்யாலயங்களுக்கும், மத்யலோகத்து 458 அக்ருத்திம சைத்யாலயங்களுக்கும் நாம் வந்தனை செய்து அர்க்கியம் வைக்கிறோம். இவைகளின் அமைப்பு மற்றும் வர்ணனைகளை பின்னர் பார்க்க விருக்கிறோம். சில வியந்தர தேவர்களுக்குக்கூட பவனங்கள் உள்ளன, சில வியந்தர தேவர்களுக்கு ஆவாஸங்கள் உள்ளன, சில வியந்தர தேவர்களுக்கு பவனபுரங்கள் உள்ளன. அவைகளைப்பற்றிகூட பின்னர் நாம் பார்க்கலாம். வியந்தரர்களுக்கும், ஜோதிஷிகளுக்கும்கூட அக்ருத்திம சைத்யாலயங்கள் இருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கை அசங்க்யாதங்களில் இருக்கின்றன. இவைகளைத் தவிர சைத்ய விருக்ஷங்கள், மானஸ்தம்பங்கள், ஜினபிம்பங்கள், சைத்யங்கள் முதலியன பல இடங்களில் உள்ளன. எல்லா இடங்களிலும் ஜினபிம்பங்கள் உள்ளன, ஜின தர்மத்தையே எல்லோரும் பாலிக்கின்றனர்.

இங்கு இப்போது ஹுண்டாவசர்ப்பிணி காலம் நடப்பதால், மற்ற பிறமத நம்பிக்கைகளும், அவைகள் சம்பந்தமான தேவதைகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. விதேக க்ஷேத்திரங்களில் இப்போதுகூட இப்படிப்பட்ட குலிங்கிகளும், குதர்மங்களும் இல்லை, எல்லோரும் ஜின தர்மத்தையே பாலிக்கின்றனர். பரத ஐராவத க்ஷேத்திங்களில் இந்த ஹுண்டாவசர்ப்பிணி காலத்தில் குதர்மங்கள் ஆதிகமாக உள்ளன, அதானால் நம் ஜிதர்மத்திற்கு இந்த காலத்தில் இன்னும் என்ன நிகழுமோ என்ற கவலை வந்து விடுகிறது. உங்களுக்கு கவலை வருகிறதா இல்லையா?

சிலருக்கு நாம் என்னவாவோம் என்ற கவலைகூட இருப்பதில்லை. யார் ஜினதர்மத்தில் நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்கள், உலகில் எங்காவது அவசியம் நிலைத்திருப்பார்கள். ஜினதர்மத்தை கடைபிடிப்பவர்கள் எப்போதும் இருப்பார்கள். ஜினதர்மத்தை உபதேசிக்கும் தீர்த்தங்கரர்களும் எப்போதும் இருப்பார்கள். இவர்கள் இல்லாமல்போவது என்பது ஒருபோதும் இல்லை.

இந்த காலத்தில் இங்கு பரத பூமியில் தீர்த்தங்கரர் இல்லை, திகம்பர முனிவர்களின் தரிசனம்கூட மிகவும் அரிதாகிவிட்டது. ஆனால் விதேக க்ஷேத்திரத்தில் தீர்த்தங்கரர்கள் எப்போதும் சமவசரணத்தில் அமர்ந்திருக்கின்றனர். ஜினதர்மமும், ஜினதர்மத்தை உபதேசிப்பவரும் முக்காலத்திலும் இல்லாமல் போவதில்லை. இந்த மோசமான காலத்தில், இங்கு பிறந்திருக்கும் துரதிஷ்டவசமான நிலையில் நாம் இருக்கிறோம். ஆனாலும் ஆச்சார்யர்களின் பரம்பரையில் வந்த தீர்த்தங்கரரின் உபதேசத்தை கேட்கக்கூடிய பாக்கியசாலிகளாக நாம் இருக்கிறோம். ஞானிகள் அந்த உபதேசங்களை எளிமையாக்கி, நமக்கு புரியும் வகையில் எடுத்துச்சொல்வதால் இப்போதும் ஜினதர்மம் நமக்குக் கிடைக்கிறது.

குந்தகுந்தாச்சாரியர், அமிர்தசந்திராச்சாரியர், ஜெயசேனாச்சாரியர், நேமிச்சந்திர சித்தாந்த சக்கரவர்த்தி, வீரசேனாச்சாரியர் மற்றும் இன்னும்பல எத்தனையோ ஆச்சாரியர்கள் கிரந்தங்களை எழுதி, மூலமார்க்கமான ஜினதர்மத்தை காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கிரந்தங்களை மேலும் எளிமையாக்கி நமக்கு புரியவைத்தும் வந்துள்ளார்கள். இந்த கிரந்தங்கள் நம் ஆலயங்களில் சாஸ்திர அலமாரிகளில் வைக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் அவைகள் அலமாரிகளில் வைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. இளமையில் நாம் அந்த கிரந்தங்களுக்கு பூஜை செய்தோம். இப்போது அவைகளை எடுத்து சுவாத்யாயம் செய்வதால், இந்த மஹா தர்மத்தை பற்றிய அறிவை நாம் பெறுகிறோம். இதனால் நாம் நம் நல்லதைப்பற்றி அதாவது ஜினதர்மத்தை கடைபிடித்து பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு பகவான் ஆவதைப் பற்றி சிந்தித்து செயல்பட முடிகிறது.

நாம் ஆகமங்களை-இந்த கிரந்தங்களை காலத்தினால் அழிவதிலிருந்து பாதுகாக்க வேண்டியதுதான். தர்மவான்களுக்கு சாஸ்திரங்களை பிரசுரித்து அவைகளை எடுத்துச்சொல்லி பிரசாரம் செய்யவும், தீர்த்த க்ஷேத்திரங்களை பாதுகாக்கவும் எண்ணம் அவசியம் வருகிறது. நூல்களை பிரசுரிப்பதாலும், பாதுகாப்பாக வைப்பதாலும், அதற்கு தாராளமாக பணம் கொடுப்பதாலும் மட்டுமே தர்மம் காப்பாற்றப்படுவதில்லை. தர்மம், அந்த சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளவைகளை அறிந்து அவைகளை கைகொள்வதால்தான் காப்பாற்றப்படுகிறது. இந்த நூல்களை வாசித்து பயிற்சி செய்வதால் அதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் நம் புரிதலுக்கு வருகிறது. நடைமுறை வாழ்க்கையில் நாம் திறமையானவர்களாக இருக்கிறோம், புதிய விஷயங்களை சீக்கிரமாகவே கற்றுக்கொள்கிறோம். இந்த சாஸ்திரங்களிலும் அதுபோன்ற ருசி இருக்குமானால், எனக்கு எதுவும் புரியவில்லை என்று யாரும் சொல்ல மாட்டீர்கள்!

பவனங்களைப் பற்றி அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.

விதேகக்ஷேத்திரத்தில் சமவசரத்தில் வீற்றுள்ள ஐந்தாம் தீர்த்தங்கர் ஸ்ரீ சம்ஞாதக பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

6. கீழ்உலக தேவர்கள் - பவனவாசிகள்

திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் இங்கு நாம் மூவுலக அமைப்பு பற்றி பார்த்துக்கொண்டு இருக்கிறோம். திரஸநாளி 1X1 ரஜ்ஜு சதுர வடிவில் 14 ரஜ்ஜு உயரம் கொண்டது என்று நாம் முன்னரே பர்த்தோம். இது சம்பந்தமாக பலர் கேள்வி எழுப்பியுள்ளனர். கீழே 1 ரஜ்ஜு நிகோதம் இருப்பதால், திரஸநாளி 13 ரஜ்ஜு உயரம் கொண்டதாகத்தானே இருக்க வேண்டும்? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளீர்கள். திஸஸநாளி 13 ரஜ்ஜு உயரம் கொண்டதாக அச்சிடப்பட்ட படத்தைக்கூட சிலர் எனக்கு அனுப்பியுள்ளீர்கள். அதனால் திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் இதன் உயரம் எவ்வளவாக சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்கலாம். திரிலோகஸாரத்தின் காதை 143-ல் இதுபற்றி சொல்லப்பட்டுள்ளது. முதலில் அந்த காதையை பிராக்ருதம் மற்றும் ஹிந்தியிலும் பிறகு அதன் அர்த்தத்தையும் பார்க்கலாம்.

லோயபஹுமஜ்ஜதேஸே ருக்கே ஸாரவ்வ ரஜ்ஜுபதரஜுதா |
சோத்யஸரஜ்ஜுத்தும்கா தஸநாளி ஹோதி குணணாமா ||143||

லோகபஹுமத்யதேசே விருக்ஷே ஸார இவ ரஜ்ஜுப்ரதரயுதா |
சதுர்சரஜ்ஜுத்தும்கா த்ரசநாளி பவதி குணநாமா ||143||

லோகத்தின் மத்தியில் அதாவது லோகத்தின் நட்டநடு பிரதேசத்தில், எவ்வாறு மரத்தின் தண்டுப்பகுதியின் நடுவில் வைரம் (மரத்தின் தண்டுப்பகுதியில் நடுவில் வைரம் போன்ற உறுதியான பகுதியும், அதைச்சுற்றி அவ்வளவு உறுதி இல்லாத பகுதியும், வெளியில் ஆடைப்பகுதியும் இருக்கும்) உள்ளதுபோல உலகத்தின் மையப்பகுதியில் திரஸநாளி இருக்கிறது. அது எந்த அளவு கொண்டது? 1 ரஜ்ஜு நீளமும், 1 ரஜ்ஜு அகலமும், 14 ரஜ்ஜு உயரமும் கொண்டதாக உள்ளது. திரஸநாளி என்ற அதன் பெயருக்கு தகுந்தார்போல திரஸ உயிர்கள் அங்கு மட்டுமே காணப்படுகின்றன, அதற்கு வெளியில் திரஸ உயிர்கள் இல்லை. உபபாதம், மாரணாந்திகம் மற்றும் கேவலி சமுத்காதம் செய்யும் திரஸ உயிர்கள் அந்த சமயத்தில் மட்டும் திரஸநாளிக்கு வெளியிலும் காணப்படுகின்றன. திரஸநாளிக்கு வெளியில் ஸ்தாவர உயிர்கள் மட்டுமே உள்ளன, திரஸநாளிக்கு உள்ளேயும்கூட ஸ்தாவர உயிர்கள் உள்ளன. அதாவது உலகத்தில் எல்லா பகுதியிலும் ஸ்தாவர உயிர்கள் உள்ளன.

திரஸநாளி முழுவதும் திரஸ உயிர்களே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை, அதன் சில பகுதியில் திரஸ உயிர்கள் இல்லாமல்கூட இருக்கலாம். இரண்டுபொறி, மூன்றுபொறி, நான்குபொறி உயிர்கள்கூட

மத்திய லோகத்தில் இரண்டரை தீபத்திலும், கடைசி சுயம்புரமண சமுத்திரத்திலும் மற்றும் சுயம்புரமண தீவின் வெளிப்பாதியில் தான் இருக்கின்றன. திரஸநாளியை திரஸநாடி என்றுகூட சொல்கின்றனர். லோகாகாசத்தின் கனஅளவு 7 ரஜ்ஜு X 7 ரஜ்ஜு X 7ரஜ்ஜு அதாவது ஜகத்ஸ்ரேணியின் கனஅளவு 343 கனரஜ்ஜு என்று முன்னரே பார்த்தோம். அதில் திரஸநாளியின் கனஅளவான 1 ரஜ்ஜு X1 ரஜ்ஜு X14 ரஜ்ஜு =14 கனரஜ்ஜுவை கழித்தால் வரும் 329 கனரஜ்ஜுவில் திரஸ உயிர்கள் வசிப்பதில்லை. ஸ்தாவர உயிர்கள் 343 கனரஜ்ஜுவிலும் வசிக்கின்றன.

யாருடைய மனதிலாவது இங்கு இப்படிப் படித்தோம், அங்கு அப்படிப் பார்த்தோம் என்ற சந்தேகம் இருக்குமானால் அந்த சந்தேகத்தைப் போக்கவே நாம் இங்கு திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் சர்ச்சை செய்துகொண்டு இருக்கிறோம்.

நான் ஒருமுறை ஃபல்டனில் ஜெயின் பூகோளம் பற்றி ஒரு பயிற்சி முகாம் நடத்தினேன். அங்குள்ள கோயிலின் சுவரில் உலகஅமைப்பு சித்திரம் வரையப்பட்டிருந்தது. அங்கு லோகாகாசத்தின் மேல் எட்டாவது பூமிக்கு மேல் 20-20 ஆயிரம் யோஜனை பருமன் உள்ள மூன்று வாதவளையங்கள் காட்டப்பட்டிருந்தன. நான் அங்கு பொருப்பில் இருந்த ஸ்ரீசுபாஷ்ஜி காந்தியின் கவனத்திற்கு இதை கொண்டு வந்ததும், அவர் மோக்ஷசாஸ்திரம் பெயர்கொண்ட ராம்ஜிபாயி அவர்களின் விளக்கவுரையின் பின் அட்டையில் இருக்கும் படத்தைக் ஆதாரமாகக் காட்டினார். அதில் இந்த தவறு இருந்தது. அவருக்கு ஆகம ஆதாரத்தை காட்டியவுடன் அவர் அப்போதே அந்த சித்திரத்தில் இருந்த தவற்றை படம் 2-ல் உள்ளது போல திருத்தி அமைத்தார். பண்டிட் தோடர்மல்ஜி கூட எழுதும்போது சில தவறுகள் வரக்கக்கூடும், அந்த தவறு தெரிந்தவுடன் அதை ஆகம ஆதாரத்துடன் ஒப்பிட்டு திருத்திக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

இப்போது நாம் அதோலோகத்தின் கரபாகம் மற்றும் பங்கபாகம் பற்றி சர்ச்சை செய்யவிருக்கிறோம். அவை என்னவோ கீழ் உலகத்தில் இருக்கின்றன, ஆனால் அங்கு பவனவாசி மற்றும் வியந்தர தேவர்கள் வசிக்கின்றனர். நாம் அங்குள்ள இயற்கை ஜினாலயங்கள்(அக்ருத்திம சைத்யாலயங்கள்) பற்றி பார்த்திருக்கிறோம். பவனவாசிகளின் பவனங்களும் இருக்கின்றன என்று பார்த்திருக்கிறோம், ஆனால் வியந்தரர்களுக்கு பவனம், ஆவாசம் மற்றும் பவனபுரம் கூட அங்கு இருக்கின்றன. எதை பவனம் என்று சொல்கின்றனர்? எதை ஆவாசம் என்று சொல்கின்றனர்? எதை பவனபுரம் என்று சொல்கின்றனர்? பவனங்கள் பூமியின் உள்பகுதியில் இருக்கின்றன, அவைகள் மிகப்பெரியதாகவும், அனேக யோஜனை விஸ்தீரணமும், சுமார் 300 யோஜனை உயரமும் கொண்டதாக உள்ளன. ஒவ்வொரு பவனத்திலும் 100-100 யோஜனை உயரம் கொண்ட ஒரு மலை இருக்கிறது, அதன்

உச்சியில் இயற்கை ஜினாலயம் இருக்கிறது. ஒவ்வொரு ஜினாலயத்திலும் இரத்தினமயமான 500 வில் உயரம் கொண்ட108-108 ஜினபிம்பங்கள் அமர்ந்த வடிவில் உள்ளன. அங்கு சைத்யவிருக்ஷங்களும் உள்ளன, அதைப்பற்றி பின்னர் பார்க்கலாம். பவனங்களின் விஸ்தீரணம் பற்றிகூட பின்னர் பார்க்கலாம்.

பூமியின் மேல் உயர்ந்த இடத்தில் - குளம், மரம், மலை போன்றவைகளின் மேல் வியந்தரர்களின் வாழுமிடங்கள் இருக்கின்றன, அவைகளை ஆவாசம் என்று சொல்கின்றனர். வியந்தரர்கள் அனேக இடங்களில் வசிக்கின்றனர். கர பாகத்திலும், பங்க பாகத்திலும் என்னவோ வசிக்கின்றனர், ஆனால் நாம் எப்படி பூமிக்கு மேல் வாழ்கிறோமோ அதேபோல அவர்கள் பூமியின் மேலும், மரம், மலை மற்றும் சமுத்திரங்களின் மேலும்கூட வசிக்கின்றனர். மேருமலை, நாபிகிரி, விருஷபகிரி, யமககிரி, கஞ்சனகிரி முதலான அனேக மலைகளில் கூட வியந்தரர்களின் வாழுமிடங்கள் உள்ளன. சமுத்திரம் மற்றும் பூமியின்மேல் தனித்தனி மேற்பரப்புகளில் வெவ்வேறு உயரத்தில் ஒரு லட்சம் யோஜனை உயரம்வரை வெவ்வேறு ஜாதி வியந்தரர்களின் வாழுமிடங்கள் உள்ளன, அவைகளை ஆவாசம் என்று சொல்கின்றனர். பூமிகளுக்கு உள்பகுதியில் இருப்பவை பவனங்கள், பூமியின் மேல் பகுதியில் வெவ்வேறு உயரத்தில் இருப்பவைகளை ஆவாசங்கள் என்று சொல்கின்றனர். நாம் பூமியில் மேல்பகுதியில் சமநிலையில் வசிப்பதுபோல அவர்களுடைய வாழுமிடங்களை பவனபுரம் என்று சொல்கின்றனர்.

இந்த ஒவ்வொரு பவனத்திலும் அசங்க்யாத-அசங்க்யாத தேவர்கள் வசிக்கின்றனர். தேவகதியில் பவனவாசி, வியந்தரர், ஜோதிஷி மற்றும் விமானவாசி அதாவது வைமானிகர் என நான்கு பிரிவுகளாக தேவர்கள் உள்ளனர். சௌதர்மம் முதலான சுவர்க்கங்களில் வசிப்பவர்களை வைமானிகர் என்று சொல்கின்றனர். ஒவ்வொரு சுவர்க்கத்திலும் ஒவ்வொரு விமானத்திலும் (இவைகள் நாம் காணும் ஆகாயவிமானங்கள் போல இருப்பவை அல்ல) அசங்க்யாத தேவர்கள் வசிக்கின்றனர், ஆனாலும் வைமானிக தேவர்களைவிட பவனவாசி தேவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களைவிட வியந்தர தேவர்களின் எண்ணிக்கை அதிகம். எல்லோரையும்விட அதிகமான எண்ணிக்கையில் ஜோதிஷி தேவர்கள் உள்ளனர். நாம் எதை கிரஹம், தாரை, நட்சத்திரம், சந்திரன், சூரியன் என்று சொல்கிறோமோ, அவை ஜோதிஷி தேவர்களின் விமானங்களாகும். ஒரு லட்சம் யோஜனை உயரம் கொண்ட மத்திம லோகத்தில் 790-ல் இருந்து 900 யோஜனை வரை 110 யோஜனை பருமன் கொண்ட பட்டையான பகுதியில் இந்த ஜோதிஷி தேவர்கள் வசிக்கின்றனர். மத்திம உலகம் பற்றி பார்க்கும்போது அவைகளின் எண்ணிக்கையை கணக்கிடலாம்.

இந்த விமானங்கள் பூமியின் ஒரு பகுதி போன்றதுதான். எலுமிச்சம்பழத்தை பாதியாக வெட்டி மேல்பக்கம் சமமான பகுதியையும், கீழ்பக்கம் கோளப்பகுதியையும் வைத்தார்போன்ற இது, பூமி போன்ற ஒரு துண்டுப் பகுதியாக, ஜோதிஷிகளின் விமானங்கள் உள்ளன. பூமிகள் என்னவோ லோகாகாசத்தில் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை பரவி இருக்கிறது, ஆனால் இந்த விமானங்கள் பூமியாலான துண்டு போன்ற பகுதிகளாகும். இவை சூரியர், சந்திரர் போன்ற ஜோதிஷி தேவர்கள் வாழும் விமானங்களாகும், இருந்தபோதிலும் அவர்களை வைமானிக தேவர்களாக சொல்லுவதில்லை.

எப்படி நரகத்தில் 49 படலங்கள் பார்த்தோமோ, அதுபோல சுவர்க்கத்தில்கூட 63 படலங்கள் உள்ளன, ஒவ்வொரு படலத்திலும் அனேக விமானங்கள் இருக்கின்றன. இந்த விமானங்களில் வாழும் விமானவாசி தேவர்கள் கல்பவாசி மற்றும் கல்பாதீதர் என இரண்டு பிரிவினராக உள்ளனர். 16-ஆம் சுவர்க்கம்வரை வசிப்பவர்களை கல்பவாசி தேவர்கள் என்றும், அதற்கு மேலே 9 கிரைவேகயம், 9 அனுதிசை, 5 அனுத்தரம் முதலான விமானங்களில் வசிக்கும் தேவர்கள் கல்பாதீதர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

எங்கு இந்திரர், பிரதீந்திரர், லோகபாலர், திராயஸ்திரிம்சர், அனீகர் என்ற பிரிவுகள் காணப்படுகிறதோ அந்த தேவர்களை கல்பவாசி தேவர்கள் என்பர். நம் உலகில் இராஜா, சேனாபதி, சபாபதி, மந்திரி, சேனைகள், நகரவாசிகள் போன்ற பிரிவுகள் இருப்பதுபோல தேவர்களிலும் இதுபோன்ற பிரிவுகள் உள்ளன. எங்கு ஸ்வாமி, சேவகர் என்ற பிரிவு இல்லையோ, ஒவ்வொரு உயிரும் தங்களை அஹமிந்திரர்களாகவே எண்ணுகிறார்களோ, அவர்களை கல்பாதீத தேவர்கள் என்று சொல்கின்றனர். யார் சௌதர்ம-ஈசான போன்ற 16-ஜோடி சுவகர்கங்களில் வசிக்கிறார்களோ அவர்களை கல்பவாசி தேவர்கள் என்பர். ஜோடி சுவர்க்கங்களில் முதலில் வருவது தெற்கு பக்கம் இருக்கும் சுவர்க்கமாகும், இரண்டாவதாக வருவது வடக்கு பக்கம் இருக்கும் சுவர்க்கமாகும். இந்த விமாங்களின் அமைப்பு எண்ணிக்கை முதலானவைகள் பற்றிய சர்ச்சையை மேலுலகம் பற்றி பார்க்கும்போது செய்யலாம். இப்போது பவனவாசிகள் பற்றி மேலும் விரிவாகப் பார்க்கலாம்.

கல்பவாசிகளை போலவே பவனவாசிகளிலும்கூட 10-10 உட்பிரிவுகள் உள்ளன, அவர்களுடைய பதவிகள் வெவ்வேறாகும். அங்கு ஒரு இந்திரர் இருக்கிறார். இந்திரருக்கு சமமாக ஒரு பிரதிஇந்திரர் இருக்கிறார். இங்கு இராஜாபோல அங்கு இந்திரர் இருக்கிறார். பிரதிஇந்திரர் இளவரசர் போன்றவர் ஆவார். இங்கு இராஜாவின் மகனை இளவரசர் என்கிறோம், அங்கு தேவர்களுக்கு மகனோ, மகளோ இல்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். தேவர்கள் பிறக்குமிடம் இரத்தினமயமான உபபாத படுக்கைகள் இருக்கின்றன. அங்கு தேவ பிறவி எடுக்கும் உயிர்கள் அந்தர்முகூர்த்த காலத்தில் பர்யாப்திகள் முழுமை அடைந்து வளர்ந்த இளஞ்ர்களாகவே

பிறக்கின்றனர். இங்கு குழந்தை நிலையில் பிறப்பதில்லையாகையால், குழந்தைகளை வளர்க்கவோ பெரியவர்களாகும்வரை கவனித்துக்கொள்ளும் அவசியமோ இல்லை. இங்கு தேவர்களுக்கோ, தேவிகளுக்கோ குழந்தைகளை வளர்க்க வேண்டிய எந்தவிதமான கவலையுமில்லை. நமக்கு இங்கு குழந்தைகளை பார்த்துக்கொள்வதிலும், வளர்ப்பதிலுமே நம் அதிகபட்ச காலம் கழிந்து விடுகிறது. அவர்களை பற்றிய கவலையும் இருக்கிறது. சுவர்க்கத்தில் குழந்தைகளும் இல்லை, முடியும் இல்லை. அங்கு ஏழு தாதுக்கள், முடி, நகங்கள் அற்ற உடலமைப்பு இருக்கிறது. நாம் இங்கு முடி, நகங்களை பராமரிக்க எவ்வளவு நேரத்தையும், பணத்தையும் செலவழிக்கிறோம் என்பதை அது சம்பந்தமான நிலையங்களுக்கு செல்பவர்களுக்குத்தான் தெரியும்! உடலையே தாமாக எண்ணுவோமானால் இப்படித்தான் நடக்கும்.

நாம் ஒரு இந்திரரும் ஒரு பிரதிஇந்திரரும் இருப்பதை நாம் பார்த்தோம். நான்கு லோகபாலர்கள் உள்ளனர், இவர்களை திக்இந்திரர்கள் - திசைகளின் இந்திரர் - என்று கூட சொல்கின்றனர், இவர்கள் சேனாதிபதிக்கு சமமானவர்கள். சோம, யம, வருண மற்றும் குபேர என இவர்கள் நான்கு விதமாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் அவரவர்களின் இடத்தில்- சுவர்க்கத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் விகாரம் செய்து வேறு இடங்களுக்கும் செல்கின்றனர். பஞ்ச கல்யாணங்களுக்கும், அவர்களுடைய தேவிகளுடன் உல்லாசமாக பொழுதை கழிக்கவும் அசங்க்யாத தீபசமுத்திரங்களுக்கு செல்கின்றனர். அவர்கள் விக்ரியா சக்தி மூலம் பல உடல்களை எடுத்துக்கொண்டு அங்கு செல்கின்றனர், மூலசரீரம் அவர்களுடைய சுவர்க்கத்திலேயே இருக்கிறது. அவர்கள் எடுக்கும் எல்லா உடல்களிலும் ஆத்மபிரதேசம் அகண்ட வடிவில் பரவி இருக்கும். திராயஸ்திரிம்சர் என்ற பிரிவில் 33 பேர் இராஜபுத்திரர்களுக்கு சமமாக இருக்கிறார்கள். சாமானிகர்கள் என்பவர்கள் இராஜாவின் பரிவாரங்களுக்கு சமமானவர்கள். தனுரக்ஷகர் என்பவர்கள் அவர்களின் அங்கரக்ஷகர் (bodyguard) போன்றவர்கள்.

கேள்வி: தேவர்களுக்கு அங்கரக்ஷகர்கள் ஏன் இருக்கின்றனர்? அங்கு சண்டை அல்லது தாக்குதல் முதலியன நிகழ்கிறதா என்ன?

பதில்: இங்கு சண்டை நடக்குமா நடக்காதா என்ற கேள்விக்கே இடமில்லை. அவர்களுக்கு அங்கரக்ஷகர்கள் மற்றும் பெரிய-பெரிய சேனை இருப்பது அவர்களின் வைபவத்தைக் காட்டுகிறது - புண்ணிய உதயத்தைக் காட்டுகிறது. எப்படி நம் பிரதம மந்திரி, ஜனாதிபதி ஆகியவர்களுக்கு பாதுகாப்பு படைகளின் அமைப்பு இருக்கிறதோ அதுபோல எனலாம். அங்கரக்ஷகர்கள், வாகனங்கள் போன்று உருவம் எடுக்கும் தேவர்கள், தாழ்ந்த ஜாதி தேவர்களாவர், அவர்கள் இந்திரர்களுக்கு மரியாதை செய்கின்றனர், அவர்களின் கட்டளைபடி நடக்கின்றனர்.

பாரிஷதர் பெயர்கொண்ட தேவர்கள் இருக்கின்றனர். இவர்கள் இராஜாவின் சபையில் அமர்ந்திருப்பவர்கள். சபையில் இந்திரனின் அருகில் அமர்பவர்கள் அந்தஹ பாரிஷதர் ஆவர். மத்ய பாரிஷதர்கள் நடுசபையில் அமர்பவர்கள். பாஹ்ய பாரிஷதர்கள் வெளிசபையில் அமர்பவர்கள். அனீக ஜாதி தேவர்கள் இராஜாவின் சேனை போன்றவர்கள். அவர்கள் யானைப்படை, குதிரைப்படை முதலான ஏழு பிரிவில் இருக்கின்றனர். இந்த அனீக ஜாதி தேவர்களே சேனையின் வடிவங்களாக ஆகின்றனர். சுவர்க்கத்தில் யானை, குதிரை போன்ற மிருகங்கள் இல்லை. ஐராவதம் என்ற யானை கூட ஒரு தேவனால் எடுக்கப்படும் உருவமாகும். இந்த உருமாற்றம் எல்லாம் தேவர்களின் விக்ரியா சக்தியாலாகும். அப்படி இல்லையென்றால் ஆயிரம் தும்பிக்கைகள் கொண்ட ஒரு லட்சம் யோஜனை பெரிய யானையை எங்கே வைத்துக்கொண்டு இருக்க முடியும்? என்ன உணவு கொடுக்க முடியும்? சாஸ்திரங்களில் ஐராவத யானை பற்றிய வர்ணனை வருகிறது. அதன் ஒவ்வொரு தும்பிகையிலும் ஒரு ஏரியும், அதில் தாமரையும், அந்த தாமரையில் நடனமாடும், வாத்தியங்கள் வாசிக்கும் தேவகன்னிகள் இருப்பதும் வர்ணனையில் வருகிறது.

இங்கு அனீக ஜாதி தேவர்களைப் பற்றி பார்த்தோம். ஒரு தேவனே ஆயிரக்கணக்கான யானைகளின் உருவங்களை எடுக்க முடியும். பிரகீர்ணகர் என்ற ஜாதி தேவர்கள் நகரவாசி போன்றவர்களாவர். கில்விஷிகர் என்ற ஜாதி தேவர்கள் இருக்கின்றனர், இவர்கள் பாட்டு பாடுவதை தொழிலாகக் கொண்டவர்கள். அங்கு வாழ்க்கை நடத்த பணம் தேவைப்படுவதில்லை, அவர்களுக்கு தேவையான அனைத்தும் அவர்களின் புண்ணிய உதயத்தால் தானாகவே கிடைக்கின்றன. இப்படி 10 வகையான தேவர்கள் பவனவாசியிலும், கல்பவாசியிலும் உள்ளனர். ஆனால் ஜோதிஷி மற்றும் வியந்தரரில் 8 வகையினரே உள்ளனர். ஆவர்களில் நான்கு வித லோகபாலர்கள், மற்றும் திராயஸ்திரிம்சர் வகையினர் இல்லை. அவர்களில் இந்திரர், பிரதிஇந்திரர், ஸாமானிகர், தனுரக்ஷகர், பாரிஷதர், அனீகர், பிரகீர்ணர், ஆபியோக்யர் மற்றும் கில்விஷிகர் என்ற எட்டு பிரிவினரே உள்ளனர். இவர்களின் நிலை-பதவி முன்னர் கூறியபடியே இருக்கிறது. கீழ்ஜாதி தேவர்கள் கீழ்ஜாதிகளாகவே வாழ்கின்றனர். அங்கு வேலை நிறுத்தம், பணிதடை செய்தல் போன்றவைகள் செய்வதுமில்லை செய்யவேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் இந்திரரின் ஆணையை நிராகரிப்பதுமில்லை. வேலையிலிருந்து விடுமுறை எடுப்பதோ, சில வேலைகள் என்னுடையதில்லை என்று செய்யாமல் இருப்பதுமில்லை. இந்த செயல்கள் மனித உலகத்திற்கே பொருந்தும்.

தேவர்கள் எட்டு குணங்கள் கொண்ட வைக்ரீயிக சரீரம் உடையவர்கள், அணிமா, மஹிமா, கரிமா, லஹிமா, பிராப்தி, பிராகாம்ய, ஈஷித்வ, விசித்வ

முதலான ரித்திகள் கொண்டவர்கள். இவைகளின் அர்த்தம் இவ்வாறு இருக்கிறது.

1. அணிமா: உடலை அணு அளவு உடையதாக மாற்றும் சாமர்த்தியம் கொண்டிருத்தல்.

2. மஹிமா: ஐராவத யானை ஒரு லட்சம் யோஜனை ஜம்பூதீப அளவு கொண்டதாக தன் உடலை மேருமலை அளவு பெரியதாக ஆக்கிக்கொள்ள முடியும். அவ்வளவு பெரிய யானை அயோத்தியாவுக்கு எப்படி வந்திருக்கும்? அங்கு வரும்போது அதன் அளவை சிறியதாக்கிக்கொண்டு வருகிறது.

3. கரிமா: குரு என்றால் கனமான என்று பொருள். உடலை வஜ்ரத்திற்கு சமமாக வல்லமை பொருந்தியதாக ஆக்கிக் கொள்ளும் சக்தி கொண்டிருத்தல்.

4. லகிமா: லகு என்றால் லேசான என்று பொருள். உடலை பஞ்சு போன்று லேசாக ஆக்கிக் கொள்ளும் சக்தி கொண்டிருத்தல். சிலந்தி வலையில் எதுவும் செல்ல முடியாது. அப்படிப்பட்ட சிலந்தி வலையில் செல்லக்கூடிய அளவு தன் உடலை லேசாக ஆக்கிக் கொள்ளும் சக்தி கொண்டிருத்தல்.

5. பிராப்தி: பூமியில் நின்றுகொண்டு ஆள்காட்டி விரலின் முனையால் சூரிய சந்திரர்களை தொடுமளவு சாமர்த்தியம் கொண்டிருத்தல். வைக்ரிக உடலில் என்னவோ இந்த சக்தி இருக்கிறது. மனிதர்கள்கூட தபவலிமையால் இப்படிப்பட்ட வைக்ரிக ரித்தி கிடைக்கப் பெறுகின்றனர். அவர்களால் ஔதாரிக உடலைக்கூட இவ்வாறு செய்யமுடியும். விஷ்ணுகுமார் முனிவரின் கதை எல்லோரும் அறிந்ததுதான். உங்களுக்கு தெரியாதா என்ன? அகம்பனாச்சாரியார் முதலான 700 முனிகளின் முனிசங்கத்திற்கு கோரஉபசாரம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பலி என்ற பெயர்கொன்ட மந்திரி இராஜாவிடம் அவர் கொடுத்த சத்தியத்தின் பெயரில் ஏழுநாட்கள் அரசாட்சி செய்யும் பொறுப்பை பெற்று இராஜாவானான். அவன் வேண்டுமென்றே சிலர் மூலம் முனி சங்கம் இருக்குமிடத்தில் தீ மூட்டினான். வேறொரு முனிவர் தன் அவதி ஞானத்தால் விஷ்ணுகுமார் முனிவருக்கு விக்ரியா ரித்தி பெற்றிருப்பது தெரிந்தது. விஷ்ணுகுமார் முனிவர் பிராமண வேடம் தரித்து விக்ரியா ரித்தியின் பலத்தினால் பலி இராஜாவை சரண் அடைய வைத்து முனி சங்கத்துக்கு வந்த உபசர்க்கத்தை தீர்த்துவைத்தார். இரக்ஷாபந்தன் பற்றிய இந்த கதை பிரசித்தியான ஒன்றாகும். அவர் பிறகு முனி தீட்சை எடுக்கவேண்டி வந்தது, ஏனெனில் அவர் செய்த காரியம் முனிகளுக்கு தகுதியானதில்லை. இதுவே பிராப்தி ரித்தி யாகும்.

6. பிராகாம்ய: நீரில் செல்வது போன்று நிலத்திலும், நிலத்தில் செல்வது போன்று நீரிலும் செல்லும் சாமர்த்தியம் கொண்டிருத்தல்.

7. ஈஷித்வ: அண்டம் முழுவதிலும் தன் பிரபு தன்மையை ஸ்தாபிக்கும் சாமர்த்தியம் கொண்டிருத்தல்.

8. விசித்வ: அண்டம் முழுவதையும் தன்வசம் கொண்டுவரும் சாமர்த்தியம் கொண்டிருத்தல். இத்தகைய எட்டு குணங்கள் அல்லது சாமர்த்தியங்கள் தேவர்களிடம் காணப்படுகின்றன.

தத்வார்த்தஸூத்திரத்தில் பிரதிஇந்திரனை இந்திரனுக்கு சமமானவன் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய அவருக்கு வேறு எந்த தனிப் பெயர் சொல்லப் படவில்லை. இந்திரர்களும், பிரதிஇந்திரர்களும் எல்லா சுவர்க்கத்திலும் இருக்கிறார்கள், பவனதிரிகத்திலும் கல்பவாசியிலும் கூட இருக்கிறார்கள். எப்போது சமவசரணத்தில் 100 இந்திரர்கள் எண்ணிக்கையில் இருப்பது பற்றி பேசப்படுகிறதோ, அப்போது இந்திரன், பிரதிஇந்திரன் இருவரையும் சேர்த்தே எண்ணுகின்றனர்.

இப்போது நாம் தேவர்களின் 10 பிரிவுகள் பற்றியும், அவர்களின் நிலைகள் மற்றும் தரங்களையும் பார்த்தோம். பவனவாசி தேவர்களில் 10 குலங்கள்-இருக்கின்றன. அவைகளாவன: 1.அஸுரகுமார், 2.நாககுமார், 3.ஸ்வர்ணகுமார், 4.தீபகுமார், 5.உதிதகுமார், 6.வித்யுத்குமார், 7.ஸ்தனிதகுமார், 8.திக்குமார், 9.அக்னிகுமார்,10.வாதகுமார். இவர்களில் அஸுரகுமார தேவ ஜாதியினர் முதல் பூமியில் பங்க பாகத்தில் வசிக்கின்றனர். மற்ற ஒன்பது ஜாதி தேவர்களும் கர பாகத்தில் வசிக்கின்றனர். வியந்தரர்களின் எட்டு குலங்கள்-ஜாதிகள் பற்றி பின்னர் பார்க்கலாம். அவர்களில் ராக்ஷச ஜாதி வியந்தர தேவர்கள் பங்க பாகத்தில் வசிக்கின்றனர். மற்றவர்கள் கர பாகத்திலும், வேறு இடங்களிலும்கூட வசிக்கின்றனர்.

நாம் தொலைக்காட்சி படங்களில் மற்றும் நாடகங்களில் பூத வடிவில் வரும் வியந்தரர்களை பார்த்து இருக்கிறோம். நாம் அவர்களைப்பற்றி கற்பனையான கதைகளைக் கேட்டிருக்கிறோம்-பார்த்திருக்கிறோம். ஆனால் நாம் அவர்களைப்பற்றிய சர்ச்சையை ஆகமங்கள் மூலம் கேட்கும்போதும் அவர்கள் வாழும் இரத்தினமய மஹால்கள் பற்றியும் கேட்டு, நாம்கூட வியந்தரராக பிறந்திருக்கலாம் என்ற சிந்தனைகள் வரலாம், ஆனால் அதுபோல நீங்கள் சிந்திக்காதீர்கள். அரே! ரித்திதாரி பாஃவலிங்கி முனிகளுக்குகூட பரிணாமங்கள் கெட்டுப்போகிறது என்றால், அரண்மனை, செல்வம், மற்ற வசதிகளின் மேல் மஹிமை வருமானால், அப்படிப்பட்ட கஷாயங்கள் தோன்றுமானால்-விகார உணர்வு வருமானால், அவர்கள் சம்யக்த்துவத்திலிருந்து சிதைவடைந்து, அஸுரகுமார தேவ குலத்தில் இந்திரனாகப் பிறவி எடுக்கின்றனர். அங்குள்ள இந்திரர்கள்கூட அதிக புண்ணிய உதயத்தால்தான் அவ்வாறு பிறக்கின்றனர். அங்குள்ள சாதாரண ஜாதி தேவர்கள் அஞ்ஞானவசத்தால் செய்யப்பட்ட தபாசரணங்களால் அவ்வாறு பிறவி எடுக்க நேரிடுகிறது. இங்கு மஹாரித்திதாரி இந்திரர்களாக பிறவி எடுப்பவர்கள், முன் பவத்தில் மஹாவிரதங்கள் ஏற்று முனியாகியவர்களாகவே இருப்பார்கள், தவம் செய்தவர்களாக இருப்பார்கள்,

பாவலிங்கி முனிவர்கள்கூட சய்யமம் மற்றும் சம்யக்த்துவத்திலிருந்து இழிந்தால் - பிரஷ்டராகி அப்படிப்பட்ட ஆயுளை கட்டிக்கொண்டு அங்கு சென்று மஹாரித்திதாரி இந்திரர்களாக பிறக்கின்றனர்.

இங்கு நாம் பத்து வித பவனவாசி குலங்கள் பற்றி பார்த்தோம். அதில் ஒவ்வொரு குலத்திலும் இரண்டு இந்திரர்கள் இருப்பார்கள், அதில் ஒருவர் தக்ஷிண இந்திரர், மற்றொருவர் உத்தர இந்திரர். உதாரணமாக அசுரகுமார ஜாதி தேவர்களில் தக்ஷிண இந்திரரின் பெயர் சமரேந்திரன், உத்தர இந்திரரின் பெயர் வைரோசணேந்திரன். இவ்வாறு பவனவாசியின் பத்து குலங்களிலும் 10 தக்ஷிண இந்திரர்கள், 10 உத்தர இந்திரர்கள் இருப்பார்கள். இதில் ஒவ்வொரு இந்திரருக்கும் பிரதி இந்திரர்களும் இருப்பார்கள். ஆக பவனவாசிகளில் 20 இந்திர்கள், 20 பிரதிஇந்திரர்கள் சேர்த்து மொத்தம் 40 இந்திரர்கள் இருக்கின்றனர். வியந்தரர்களில் எட்டு குலங்கள் உள்ளது என்று பார்த்தோம். இவர்களிலும் ஒவ்வொரு குலங்களிலும் 2-2 இந்திரர்களும் 2-2 பிரதிஇந்திரர்களும் இருப்பர். இவர்களை எல்லாம் சேர்த்து வியந்தரர்களில் 16+16 = 32 இந்திரர்கள் உள்ளனர்.

வைமானிகரின் 16 சுவர்க்கங்களில் எத்தனை இந்திரர்கள் இருப்பார்கள்? 16? இல்லை! அங்கு 12 இந்திரர்கள்தான் இருக்கின்றனர். அதனால் அத்தனை பிரதிஇந்திரர்களே இருக்கின்றனர். ஆகமொத்தம் 24 இந்திரர்கள். இங்கு ஒரு கேள்வி என்னவென்றால் பஞ்சகல்யாணங்களில் 16 இந்திரர்கள் இருப்பது போல ஏன் காட்டுகிறார்கள்? நான் இந்த கேள்வியை பிரதிஷ்டாசாரியர்களிடமும், பிரதிஷ்டை செய்பவர்களிடமும் கேட்டேன். பலர் சிரித்து மழுப்பிவிடுகிறார்கள், சிலர் அப்படி ஒரு முறை பழக்கத்தில் உள்ளது என்று சொல்கின்றனர். சிலர் நன்கொடை பணம் வசூல் செய்ய இவ்வாறு செய்கின்றனர் என்று உண்மையை சொல்கின்றனர். அதாவது அவைகளை ஏலம் விடுவதால் அதிகத்தொகை வசூலாகிறது.

நாம் மொத்தம் 100 இந்திரர்கள் என்று பார்க்கிறோம். ஜோதிஷிகளில் சந்திரன் இந்திரர், சூரியன் பிரதி இந்திரர். ஆகமொத்தம் 40+32+24+2=98 ஆகிறது. மனிதர்களில் சக்கரவர்த்தியையும், விலங்குகளில் சிங்கம் அல்லது யாளி(அஷ்டாபதம்)யையும் சேர்த்து மொத்தம் 100 இந்திரர்கள் என்று கணக்கிடப்படுகிறது. தீர்த்தங்கரர்களின் சமவசரணங்களில் இந்த 100 இந்திரர்களும் இருக்கிறார்கள்.

நாம் பவனவாசியின் 10 குலங்களை பார்த்தோம். அந்த குலங்கள் ஒவ்வொன்றிலும் தெற்குக்கு ஒருவர், வடக்குக்கு ஒருவர் என 2-2 இந்திரர்கள் இருக்கின்றனர். அவர்களின் பெயர்கள் மற்றும் அவர் கட்டளையின் கீழ் எத்தனை பவனங்கள் உள்ளன என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

6.கீழ்உலக தேவர்கள் - பவனவாசிகள்

பவனவாசி தேவர்கள் அட்டவணை

	குல ப்பெயர்	தெற்கு இந்திரர் பெயர்	தெனதிசை பவனங்கள்	வடக்கு இந்திரர் பெயர்	வடதிசை பவனங்கள்	மொத்த பவனங்கள்
1	அசுரகுமார்	சரம	34 லட்சம்	வைரோசன்	30 லட்சம்	64 லட்சம்
2	நாககுமார்	பூதாந்த	44 லட்சம்	தரணாநந்த	40 லட்சம்	84 லட்சம்
3	சுபர்ணகுமார்	வேணு	38 லட்சம்	வேணுதாரி	34 லட்சம்	72 லட்சம்
4	தீபகுமார்	பூர்ண	40 லட்சம்	வசிஷ்ட	36 லட்சம்	76 லட்சம்
5	உதிதகுமார்	ஜலபிரப	40 லட்சம்	ஜலகாந்த	36 லட்சம்	76 லட்சம்
6	வித்யுத்குமார்	கோஷ	40 லட்சம்	மஹாகோஷ	36 லட்சம்	76 லட்சம்
7	ஸ்தனிதகுமார்	ஹரிஷேண	40 லட்சம்	ஹரிகாந்த	36 லட்சம்	76 லட்சம்
8	திக்குமார்	அமிதகதி	40 லட்சம்	அமிதவாஹன்	36 லட்சம்	76 லட்சம்
9	அக்னிகுமார்	அக்னிசிகி	40 லட்சம்	அக்னிவாஹன்	36 லட்சம்	76 லட்சம்
10	வாதகுமார்	பலம்ப	50 லட்சம்	பிரபஞ்சன்	46 லட்சம்	96 லட்சம்

பவனங்களின் மொத்த எண்ணிக்கை ஏழு கோடியே எழுபத்திஇரண்டு லட்சம்

இந்த பவனங்களின் விஸ்தீரணம் குறைந்தபட்சம் சங்யாதகோடி யோஜனையும், அதிகபட்சம் அசங்யாதகோடி யோஜனையும் ஆகும். மத்ய லோகத்தின் மத்தியில் அசங்க்யாத தீபசமுத்திரங்கள் போக வெளி அசங்க்யாத தீபசமுத்திரங்களுக்கு கீழ்பாகத்தில் இந்த பவனங்கள் இருக்கின்றன. சதுர வடிவில் இருக்கின்றன. இதன் மேல்பாகம் 300 யோஜனைகள் கொண்டது, அதாவது பவனங்களின் உயரம் 300 யோஜனைகள் உயரமாக உள்ளது. பவனங்களின் தரைப்பகுதியும் சுவர்களும் இரத்தின மயமாகவும் வாசனை மிகுந்த பூக்களால் அலங்கரிக்கப்பட்டும், எப்போதும் பிரகாசமாகவும் இருக்கின்றன. எல்லா இந்திரியங்களுக்கும் சுகமளிக்கக்கூடிய சந்தனம் முதலான வஸ்துக்கள் பவனங்களில் இருக்கின்றன.

ஒவ்வொரு பவனத்தின் மத்தியிலும் 100 யோஜனை உயரமான மலை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு இயற்கை(அக்ருத்திம்) ஜினாலயம் இருக்கிறது. ஒவ்வொரு ஜினாலயத்திலும் யாராலும் செய்யப்படாத, சாஸ்வதமான, இரத்தினத்தாலான(பதிக்கப்பட்ட இரத்தினங்கள் இல்லை, முழு தாதுவுமே இரத்தினத்தாலானது) பத்மாசன நிலையில் 500-500 தனுஷ் உயரம் கொண்ட 108 ஜினப்பிரதிமைகள் உள்ளன.

நீங்கள் அக்ருத்திரிம் சைத்யாலயங்களுக்கு நமஸ்காரம் செய்கிறீர்கள், அவைகளைப்பற்றி வர்ணனை செய்யும்போது இரத்தினமய, வஜ்ரமய பல

வர்ணங்களாலான இரத்தினத்தாலான பிரதிமைகளைப் பற்றி எல்லாம் எவ்வளவோ வர்ணனை செய்கிறீர்கள். இங்கு நாம் வணங்கும் பிரதிமைகளுக்கு அதேபோல இரத்தினத்தைப் பதித்தும், உடல் முழுவதும் அங்கிகளால் அலங்கரித்தும் வந்தனை செய்வதில் என்ன தவறு இருக்கிறது? என்ற கேள்வியை சிலர் எழுப்பியுள்ளீர்கள்.

பாருங்கள், ஒருமுறை இதை விரிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறேன். பிரதிமைகள் இரத்தினமயமாக இருப்பது என்பது வேறு, வேறு தாதுக்களால் ஆன பிரதிமைகளின்மேல் இரத்தினங்களை பதிப்பது என்பது வேறு. இங்குகூட பல இடங்களில் இரத்தினத்தால் செய்யப்பட்ட அதாவது பளிங்கு மற்றும் ஸ்படிகம் ஆகிய தாதுவால் செய்யப்பட்ட பிரதிமைகளை பார்த்திருப்பீர்கள். ஆனால் இரத்தினங்களால் பிரதிமைகளை அலங்காரம் செய்வதாலும், மகுடம் அல்லது அணிகலன்களை அணிவிப்பதாலும் வீதராகத்தன்மை எப்படி இருக்கும்? நம்மை அலங்கரித்துத் கொள்ளவேண்டும் என்ற இச்சை வருகிறது, நாம் நம் ஆசையைபூர்த்தி செய்ய விரும்புகிறோம், குழந்தைகளை பல ஆபரணங்களால் அலங்காரம் செய்கிறோம், நம்முடைய நிறைவேறாத ஆசைகளை நம் குழந்தைகளுக்கு அலங்காரம் செய்து திருப்தி அடைய முயல்கிறோம். நம்முடைய ஆசைகளை நம் செயல்திறன் மற்றும் பரிசோதனைகள் வழி அரஹந்த பகவானிடமும் அதேபோல காட்டுவது பொருத்தமானதுதானா? என்று சிந்தியுங்கள்.

இயற்கை ஜினாலய பிரதிமைகள் யாராலும் செய்யப்பட்டதல்ல, அதன் அமைப்பு எப்போதும் அப்படியே இருக்கிறது. அரஹந்தர் பிரதிமைகள் மட்டுமே இருக்கின்றன என்பதில்லை, அந்த பிரதிமைகளின் பக்கத்தில் சாமரைகளை வீசும் தேவர்களின் பிரதிமைகள்கூட இருக்கின்றன. இங்கே எந்த தீர்த்தங்கரரின் பிரதிமைகள் இருக்கின்றன? என்று சிலர் கேட்டுள்ளீர்கள். குறிப்பிட்ட எந்த தீர்த்தங்கரரின் பிரதிமைகளும் இல்லை, ஆனால் பொதுவாக தீர்த்தங்கர அரஹந்தரின் பிராதிஹார்ய வைபவங்களுடன் கூடியவைகளாகவும், சாமரை வீசும் இந்திரர்களின் பிரதிமைகளுடன் இருக்கின்றன. நாம் இங்கு ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யும் பிரதிமைகளில் லாஞ்சன சின்னத்துடன் அமைத்து பகவானின் பெயருடன் பூஜை செய்கிறோம். இவைகள் நம்மால் செய்யப்பட்டவை. நீங்கள் அக்ருத்திம ஜினாலய பிரதிமைகள் முன்னர் இருந்த தீர்த்தங்கரர்களின் பிரதிமைகளாக இருக்கலாம் என்று சொல்வீர்களானால், அதற்கு முன்பும் இந்த பிரதிமைகளே இருந்தன. இந்த ஜினதர்மமும், பொருள்களின் ஏற்பாடும் அனாதியாக இருக்கின்றனவென்றால், அக்ரித்திம ஜிநாலயங்கள், அவைகளில் அமைந்துள்ள பிரதிமைகள் கூட அனாதியாகவே இருக்கின்றன, இயற்கையாகவே, யாராலும் செய்யப்படாததாகவே இருக்கின்றன. அரஹந்தரும், ஸித்தரும் அனாதியாகவே இருக்கின்றனர். மோக்ஷமார்க்கமும் அனாதியாகவே இருக்கிறது. அரே! பூஜை செய்யும் ஜீவதிரவியமான நாமும்

அனாதியாகவே இருக்கிறோம்! பவனவாசிகள் பற்றி மேலும் சில விஷயங்களையும், அவர்களுடைய மகுட சின்னங்கள், சைதன்ய விருக்ஷம், மானஸ்தம்பம் முதலியனவைகள் பற்றி அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.

விதேகக்ஷேத்திரத்தில் சமவசரணத்தில் வீற்றுள்ள ஆறாம் தீர்த்தங்கர் ஸ்ரீ ஸ்வயம்பிரப பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

7. கீழுலக தேவர்கள் - வியந்தரர்கள்

சர்வக்ஞ பகவானின் உபதேசத்தின்படி திரிலோகஸாரம் எழுதப்பட்டது, அதன் ஆதாரத்தில் நாம் மூவுலக வர்ணனையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதில் கீழ்உலகம் பற்றிய வர்ணனையில் நாம் பவனவாசிகள் பற்றிய வர்ணனையை பார்த்துக்கொண்டு இருந்தோம். அவர்களில் இந்திரர், சாமானிகர், லோகபாலர் முதலான 10 வித ஜாதிகளைப் பற்றியும், நாககுமாரர் முதலான 10 குலங்களைப் பற்றியும் பார்த்தோம். இந்த 10 குலப் பிரிவினரையும் அடையாளம் காண அவர்களுடைய மகுடங்களில் தனித்தனி சின்னங்கள் இருக்கின்றன, அவர்களுக்கு கொடிகள் வெவ்வேறாக இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி சைத்ய விருக்ஷங்கள் உள்ளன. சைத்ய விருக்ஷங்களின் அடியில் ஒவ்வொரு திசையிலும் 5-5 பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் ஜினப்பிரதிமைகள் உள்ளன. ஒவ்வொரு பிரதிமைக்கும் முன்னால் உயரமான இரத்தினமய மானஸ்தம்பங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு திசையிலும் 5-5 மானஸ்தம்பங்கள் இருக்கின்றன, அந்த மானஸ்தம்பங்களில் ஒவ்வொரு திசையிலும் 7-7 பிரதிமைகள் இருக்கின்றன. நீங்கள் எப்போதாவது தேவகிரிக்கு சென்றிருந்தால் அங்குள்ள மானஸ்தம்பங்களில் 5-5 பிரதிமைகளின் அமைப்பைப் பர்த்திருப்பீர்கள். ஜினபிம்பங்கள் இங்கு இருப்பதால்தான் இந்த விருக்ஷங்களை சைத்ய விருக்ஷங்கள் என்று சொல்கின்றனர். தேவர்கள் தினமும் அங்கு சென்று பூஜை செய்கின்றனர். இந்த பத்துவித தேவர்களின் மகுடங்களில் உள்ள சின்னங்கள், மற்றும் சைத்யவிருக்ஷங்களின் பெயர்கள் கீழ்கண்டவாறு உள்ளன.

	பவனவாசி குல பிரிவுகள்	முகுடத்தில் உள்ள சின்னம்	சைத்யவிருக்ஷம்
1	அசுரகுமார்	சூடாமணி இரத்தினம்	அச்வத்ய விருக்ஷம்
2	நாககுமார்	சூர்யன்	ஸப்தபர்ண விருக்ஷம்
3	ஸ்வர்ணகுமார்	கருடன்	சால்மலி விருக்ஷம்
4	தீபகுமார்	யானை	ஜம்பூ விருக்ஷம்
5	உதிதகுமார்	மீன்	வேதஸ விருக்ஷம்
6	வித்யுத்குமார்	ஸ்வஸ்திகம்	கதம்ப விருக்ஷம்
7	ஸ்தனிதகுமார்	வஜ்ரம்	பிரயங்கு விருக்ஷம்
8	திக்குமார்	சிங்கம்	ஸரிஸோ விருக்ஷம்
9	அக்னிகுமார்	கலசம்	பலாச விருக்ஷம்
10	வாதகுமார்	குதிரை	ராஜத்ரும விருக்ஷம்

7. கீழுலக தேவர்கள் - வியந்தரர்கள்

பங்க என்றால் சேறு, பிறகு பங்கபாகத்தில் சேற்றில் இந்த அமைப்புகள் எப்படி செய்யப்பட்டிருக்கும்? என்ற சந்தேகத்தை சிலர் எழுப்பியுள்ளீர்கள்.

பதில்: பங்கபாகம் என்பது அதன் பெயர். இங்கு பூமி மற்றும் சுவர்கள் இரத்தினத்தால் ஆனது என்று பார்த்தோம். இவைகளை யாரும் செய்யவில்லை. இயற்கையாகவே இந்த பவனங்கள் அமைந்துள்ளன. மும்பையில் வாழும் சிலருக்கு இது ஏன் ஆச்சர்யமாக இருக்கிறது? கிட்டத்தட்ட முழு மும்பையுமே சேற்றில் கடல் தண்ணீரை அகற்றிவிட்டு அதன்மேல்தான் கட்டப்பட்டிருக்கிறது.

சாஸ்திரங்களில் ஒவ்வொரு ஜாதி தேவர்களுக்கும் தேவாங்கனைகளின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், அவர்களின் வாஹன தேவர்களின் பெயர்கள் முதலியன விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அசுரகுமார தேவர்களின் அதிகபட்ச ஆயுள் 1 கடற்காலம். தக்ஷினேந்திரர்களுக்கு ஒரு கடலும், உத்தரேந்திரர்களுக்கு 1 கடற்காலத்தைவிட கொஞ்சம் அதிக ஆயுளாகும். எல்லா இடங்களிலும் வடக்கில் உள்ள பவனவாசிகளின் ஆயுள் தெற்கில் உள்ள பவனவாசிகளைவிட கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. பவனவாசிகளில் அசுரகுமாரரின் ஆயுள் மற்ற பவனவாசிகள் எல்லோரையும்விட அதிகமாக உள்ளது. இரண்டாவதாக நாககுமார தேவர்களின் அதிகபட்ச ஆயுள் 3 பல்யம். மூன்றாவதாக ஸ்வர்ணகுமாரரின் அதிகபட்ச ஆயுள் 2.5 பல்யம். நான்காவதாக தீபகுமாரரின் அதிகபட்ச ஆயுள் 2 பல்யம் மற்றும் ஐந்திலிருந்து பத்தாவதுவரை உள்ள ஆறுவகை தேவர்களின் அதிகபட்ச ஆயுள் 1½ பல்யம். இந்த எல்லா பிரிவினர்களுக்கும் குறைந்தபட்ச ஆயுள் 10,000 வருடங்களாக இருக்கிறது.

அசுரகுமாரரின் உயரம் 25 வில் மற்ற ஒன்பது வித பவனவாசிகளின் உயரம் 10 வில். அசுரகுமார தேவர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை சுவாசம் எடுக்கின்றனர், 1000 வருடங்களுக்கு ஒருமுறை ஆஹாரம் எடுக்கின்றனர். தேவர்களில் ஒரு விதிமுறை இருக்கிறது. அதாவது எத்தனை கடல் ஆயுளோ அத்தனை பட்சங்கள்(15 நாட்கள்) ஆனபிறகு ஒரு சுவாசம் எடுக்கின்றனர், அத்தனை 1000 ஆண்டுகளுக்கு பிறகு ஒருமுறை ஆஹாரம் எடுக்கின்றனர். நாககுமாரர் முதலான அடுத்த மூன்றுவகை தேவர்கள் 12½ முகூர்த்தம் ஆனபிறகு ஒரு சுவாசமும், 12½ தினங்களுக்கு ஒருமுறை ஆஹாரமும் எடுக்கின்றனர். அடுத்த மூன்றுவகை தேவர்கள் 7½ முகூர்த்தம் ஆனபிறகு ஒரு சுவாசமும், 7½ தினங்களுக்கு ஒருமுறை ஆஹாரமும் எடுக்கின்றனர்.

இப்போது கீழ்உலகத்தில் வியந்தரர்களைப்பற்றி பார்க்கலாம். இவர்களுடைய எண்ணிக்கை அசங்யாதத்தில் இருக்கிறது. இவர்கள் கீழுலகம், நடுவுலகம் இரண்டிலுமே வசிக்கின்றனர். பவனவாசி, கல்பவாசி தேவர்களில் ஜாதி நோக்கில் இந்திரர், லோகபாலர், ஸாமானிகர் முதலான

10-10 பிரிவுகள் இருப்பதைப் பார்த்து ஞாபகத்தில் இருக்கிறதல்லவா! இவர்களில் லோகபாலர், திராயஸ்திரிம்சர் தவிர மற்ற எட்டு பிரிவினரும் வியந்தரர்களில் இருக்கின்றனர். 1.இந்திரர், ஸாமானிகர், 3.பாரிஷதரர், 4.தனுரக்ஷகர், 5.அனீகர், 6.பிரகீரணர், 7.ஆபியோக்யர், 8.கில்விஷிகர் முதலான எட்டு ஜாதியினரே உள்ளனர். வியந்தரர்கள் குல நோக்கில் கூட எட்டு பிரிவுகளே இருக்கின்றன. பவனவாசியில் நாம் அசுரகுமாரர் முதலான பத்து பிரிவுகள் பார்த்தோம். வியந்தரர்கள் குல நோக்கில் எட்டு விதமானவர். வியந்தரர்களின் குலங்களாவன:- 1.கின்னரர், 2.கிம்புருஷர், 3.மஹோரஹர், 4.கந்தர்வர், 5.யக்ஷர், 6.ராக்ஷஸர், 7.பூதர், 8.பிசாசர்.

இவர்களில் ராக்ஷஸரின் பவனங்கள் பங்க பாகத்தில் இருக்கின்றன, மற்ற ஏழு குல வியந்தரர்களின் பவனங்கள் மேலே கர பாகத்தில் இருக்கின்றன. இவர்களின் ஆவாஸம் பூமி மற்றும் சமுத்திரங்களின் மேல் ஒரு லட்சம் யோஜனைவரை இருக்கின்றன. வியந்தரர்களின் உடல் நிறங்களைப்பற்றி பார்க்கலாம். கின்னரர்களின் நிறம் பிரியங்கு பழத்தின் நிறமாகும். யக்ஷ, ராக்ஷஸ, பூதர்களின் நிறம் கருப்பாகும், பிசாசர்களின் நிறம் கருநீல வர்ணமாகும். இந்த தேவர்கள் அலங்காரத்துடன் இருக்கின்றனர்.

வியந்தரரின் பவனங்களில்கூட சைத்யவிருக்ஷங்கள் உள்ளன. சைத்ய விருக்ஷங்களின் அடியில் ஒவ்வொரு திசையிலும் 4-4 பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் ஜினப்பிரதிமைகள் உள்ளன, பவனவாசிகளின் பவனத்தில் உள்ள சைத்யங்களில் 5-5 ஜினப்பிரதிமைகள் உள்ளன என்று பார்த்தோம். இங்கு கொடிகளும், தோரணங்களும் உள்ளன. ஒவ்வொரு பிரதிமைக்கும் முன்னால் மானஸ்தம்பங்களும் இருக்கின்றன. இந்த மானஸ்தம்பங்கள் மூன்று பீடங்களின் மேல் உள்ளன. மானஸ்தம்பங்களில் மூன்று குறுக்கு சட்டங்கள் போற்ற அமைப்பு உள்ளது, அதில் முத்து மாலைகளும், தெய்வீக மணியும் உள்ளன. இங்குள்ள சைத்ய விருக்ஷங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	வியந்தரின் குலங்கள்	தெற்கு இந்திரன்	வடக்கு இந்திரன்	சைத்யவிருக்ஷம்
1	கின்னர	கிம்புருஷ	கின்னர	அசோக விருக்ஷம்
2	கிம்புருஷ	சத்புருஷ	மஹாபுருக்ஷ	சம்பா விருக்ஷம்
3	மஹோரஹ	மஹாகாய	அதிகாய	நாகசரி விருக்ஷம்
4	கந்தர்வ	கீதரதி	கீதயாச	தும்வடி விருக்ஷம்
5	யக்ஷ	மணிபத்ர	பூர்ணபத்ர	வட்ட விருக்ஷம்
6	ராக்ஷஸ	பீம	மஹாபீம	கன்டதரு விருக்ஷம்
7	பூத	ஸுரூப	பிரதிரூப	துளஸி விருக்ஷம்
8	பிசாச	கால	மஹாகால	கதம்ப விருக்ஷம்

இந்த இந்திரர்களுக்கு 2-2 வல்லபிகா என்ற தேவாங்கனைகள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1000-1000 பரிவார தேவாங்கனைகள் உள்ளனர். மனித கதியில் தபம் செய்து பிறகு அந்த உயிர் பிரஷ்டராகி வியந்தரர்களிலோ, ஜோதிஷிகளிலோ பிறக்கின்றனர். சாஸ்திரங்களில் இந்த வல்லபிகாக்களின் பெயர்கள், சாமானிகர், தனுரக்ஷர் முதலானோர்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அனீகர்களுடன் ஏழுவகை சேனைகள் மற்றும் அவைகளின் பெயர்கள் எல்லாம் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளைப்பற்றி இப்போது பார்க்காமல் வியந்தர இந்திரர்கள் வாழும் நகரங்கள் பற்றி பார்க்கலாம். எங்கு நகரங்கள் காணப்படுகின்றனவோ அந்த தீபங்களின் பெயர்கள் வரிசையாக 1.அஞ்சனக, 2வஜ்ரதாதுக, 3.சுவர்ணக, 4.மன:சிலக, 5.வஜ்ர, 6.ரஜத, 7.ஹிங்குலக, 8.ஹரிதால என கொடுக்கப்பட்டுள்ளன.

கின்னர குல இந்திரர்களுக்கு அஞ்சனக தீபத்தில் நகரங்கள் உள்ளன. அதில் கிம்புருஷ இந்திரரின் நகரம் தெற்கு திசையில் இருக்கிறது, மற்றும் கின்னர இந்திரரின் நகரம் வடக்கு திசையில் இருக்கிறது. இதுபோலவே மற்ற எல்லா இந்திரர்களுக்கும் என அறியவும். ஒவ்வொருவருக்கும் 5-5 நகரங்கள், மத்தியில் ஒன்றும் நாலா பக்கங்களிலும் ஒவ்வொன்றும் இருக்கின்றன. மத்தியில் வசிக்கும் இந்திரரின் பெயருக்குப்பிறகு புரம் சேர்த்து சொல்கின்றனர். கிழக்கு-தெற்கு-மேற்கு-வடக்கு திசையில் உள்ள நகரங்களின் பெயர்கள் இந்திரரின் பெயருக்குப்பிறகு வரிசையாக பிரப, காந்த, ஆவர்த, மத்ய சொல்லை சேர்த்து சொல்கின்றனர். உதாரணமாக கின்னர இந்திரரின் ஐந்து நகரங்களில் மத்திய நகரின் பெயர் கின்னரபுரம், கிழக்கு நகரின் பெயர் கின்னரபிரப, தெற்கு நகரின் பெயர் கின்னரகாந்த, மேற்கு நகரின் பெயர் கின்னராவர்த, வடக்கு நகரின் பெயர் கின்னரமத்ய அழைக்கப்படுகின்றன. இவைகளின் ஒவ்வொன்றின் விஸ்தீரணம் ஒரு லட்சம் யோஜனையாகும்.

ஜம்பூ தீப அளவு விஸ்தீரணம் கொண்டதாக அந்த ஒவ்வொரு நகரமும் இருக்கிறது. அவை சமதள பூமியில் மேல் இருக்கின்றன. நாம் எப்படி ஜம்பூ தீபத்தின் மேல் வசிக்கிறோமோ அதுபோலவே அவர்கள் வாழும் நகரங்கள் அந்தந்த தீபங்களில் அமைந்திருக்கின்றன, அதாவது மலையின் உச்சியிலோ அல்லது வேறு இடங்களிலோ இல்லை, ஆனால் குறிப்பிட்ட பூமியில் அமைந்துள்ளன. அந்த நகரங்களின் நாலாபக்கமும் மதில்சுவர்கள் உள்ளன. அதன் உயரம் 37½ யோஜனை, அகலம் 12½ யோஜனை, அதன் பருமன் 2½ யோஜனையாகும். அந்த மதில் சுவர்களில் வழியாக நகரின் உள்ளே செல்ல கோபுரங்களுடன் கதவுகள் இருக்கின்றன. அந்த மதில்களின் மத்தியில் மேல் 75 யோஜனை உயரத்தில் அழகான மாளிகையில் சுதர்ம என்ற

பெயர்கொண்ட சபை இருக்கிறது. அது 12½ யோஜனை நீளமும், 6½ யோஜனை அகலமும், 9 யோஜனை உயரமும் கொண்டது.

நீங்கள் சுதர்ம சபை என்ற பெயரை கேட்டிருப்பீர்கள் - இந்திரர்களின் சபையை சுதர்ம சபை என்று சொல்கின்றனர். இங்கு இந்திரர், ஸாமானிகர், முதலான எல்லோரும் அமர்கின்றனர். அங்கு எந்த நிலையில் யார் உட்கார வேண்டும், யாருடைய தேவிகள் எங்கே உட்கார வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்ட இடங்களும் அதற்கான எல்லா ஏற்படுகளும் உள்ளன.

நகரங்களுக்கு வெளியே 2-2 யோஜனை சென்ற பிறகு நான்கு திசைகளிலும் ஒரு லட்சம் யோஜனை நீளமும் 50,000 யோஜனை அகலமும் கொண்ட மகிழ்ச்சிகரமான பூங்காக்களும், தோட்டமும் கொண்ட வனப்பகுதி இருக்கின்றன.

இந்த இந்திரர்களுக்கு கேளிக்கைகளுக்காக கணிகா மஹத்திகள் உள்ளனர். அவர்களுடைய நகரங்கள் கூட அந்தந்த இந்திரரின் இந்திரபுரிக்கு இரண்டு பக்கங்களிலும் இருக்கின்றன. அவை 84,000 யோஜனை நீள-அகலம் கொண்டதாகும்.

மற்ற வியந்தரரின் நகரங்கள் அனேக தீப சமுத்திரங்களில் உள்ளன. இந்த நகரங்களை பவனபுரம் என்று சொல்கின்றனர்.

இரத்தினபிரபா பூமியின் கரபாகத்தில் வியந்தரர்களின் 14,000 பவனங்கள் உள்ளன, மற்றும் பங்கபாகத்தில் ராக்ஷச குல வியந்தரர்களின் 16,000 பவனங்கள் உள்ளன. பூமியிலோ அல்லது சமுத்திரத்திலோ ஒரு முழம் உயரத்திலிருந்து ஒரு லட்சம் யோஜனை உயரம் வியந்தரர்கள் வாழுமிடங்கள் உள்ளன, அவைகளை ஆவாஸம் என்று சொல்கின்றனர். இவைகளில் வாழும் வியந்தரர்களின் பெயர்கள் கீழ்கண்டவாறு உள்ளன.

பூமிக்கு ஒரு முழம் மேலுள்ள இடத்தில் உள்ள ஆவாஸங்களில் வாழ்பவரை நீசோபபாதி என்பர், அதற்குமேல் 10,000 முழத்துக்குமேல் உள்ள இடத்தில் வாழ்பவர்களுக்கு திக்வாஸி என்பர், அதற்குமேல் 10,000 முழத்துக்குமேல் உள்ள இடத்தில் வாழ்பவர்களுக்கு அந்தரநிவாஸி என்பர், அதற்குமேல் 10,000 முழத்துக்குமேல் உள்ள இடத்தில் வாழ்பவர்களுக்கு குஷ்மாண்ட என்பர், அதற்குமேல் 20,000 முழத்துக்குமேல் உள்ள இடத்தில் வாழ்பவர்களுக்கு உத்பன்னர் என்பர், இதற்கு மேலேயும் 20-20 ஆயிரம் முழ இடைவெளியில் வசிக்கும் வியந்தரர்களை வரிசையாக அனுத்பன்னர், பிரமாணகர், கந்தர், மஹாகந்தர், புஜங்கர், பிரீதிங்கர், அகாஸோத்பன்ன வியந்தர் என்பர். இவர்களுடைய ஆவாஸங்களை நம்மால் பார்க்கமுடியாது, இவைகளுக்கு எந்த ஆதாரமும் தேவைப்படுவதில்லை.

7. கீழுலக தேவர்கள் - வியந்தரர்கள்

வியந்தரர்கள் ஐந்து முகூர்த்தத்திற்கு கொஞ்சம் அதிக காலம் சென்ற பிறகு ஒரு சுவாசம் எடுக்கின்றனர். அவர்கள் பத்து நாட்களுக்கு கொஞ்சம் அதிக காலம் சென்ற பிறகு ஒரு முறை உணவு உண்கின்றனர். நீசோபபாதி முதலான வானவியந்தரர்களின் ஆயுள் இவ்வாறு இருக்கிறது - நீசோபபாதிக்கு 10,000 வருடங்கள், திக்வாஸிகளுக்கு 20,000 வருடங்கள், அந்தரநிவாஸிகளுக்கு 30,000 வருடங்கள், குஷ்மாண்டிகளுக்கு 40,000 வருடங்கள், உத்பன்னர்களுக்கு 50,000 வருடங்கள், அனுத்பன்னர்களுக்கு 60,000 வருடங்கள், பிரமாணிகர்களுக்கு 70,000 வருடங்கள், கந்தர்களுக்கு 80,000 வருடங்கள், மஹாகந்தர்களுக்கு 84,000 வருடங்கள், புஜங்கர்களுக்கு பல்யத்தில் எட்டில் ஒரு பங்கு, பிரீதிங்கரர்களுக்கு பல்யத்தில் நாலில் ஒரு பங்கு, அகாஸோத்பன்னர்களுக்கு ½ பல்யம் மாகும்.

பவனவாசிகள் மற்றும் வியந்தரர்கள் பற்றி கீழ்உலக வர்ணனையில் பார்த்தோம். ஜோதிஷிகளைப் பற்றி நடுஉலக வர்ணனையில் பார்க்கலாம். நாம் இப்போது சுவர்க்கத்திற்கு செல்லலாம், அதாவது மேல் உலகம் பற்றி பார்க்கலாம். அங்குள்ள வைமானிகர்களைப் பற்றி பார்க்கலாம். தேவகதியில் நான்கு பிரிவுகள் உள்ளதை முன்னரே பார்த்தோம். வைமானிகரில்கூட கல்பவாசி, கல்பாதீதர் என இரண்டு பிரிவினர்கள் உண்டு. முதல் சுவர்க்கத்திலிருந்து பதினாறாவது சுவர்க்கம்வரை கல்பவாசி தேவர்கள் உள்ளனர். அதற்குமேல் ஒன்பது கிரைவேயகம், ஒன்பது அநுதிசை, மற்றும் ஐந்து அநூத்தரங்களில் வாழும் விமாவாசிகள் கல்பாதீதர் ஆவார்கள். கல்பவாசிகளில் இந்திரர் முதலான பத்து பிரிவுகள் உள்ளன.

மேல் உலகம் ஏழு ரஜ்ஜு உயரமுடையது. மேருமலையின் அடியிலிருந்து இதன் உயரம் கணக்கிடப்படுகிறது. இந்த விமானங்கள் எல்லாம் திரஸநாளியின் உள்ளேயே இருக்கின்றன. விமானம் என்றால் பூமியின் துண்டு பகுதிகள், இதன்மேல் அசங்க்யாத-அசங்க்யாத தேவர்கள் வாழ்கின்றனர். நரகத்தில் படலங்கள் இருப்பதுபோல சுவர்க்கத்திலும் படலங்கள் உள்ளன. 16-வது சுவர்க்கம்வரை எட்டு ஜோடி படலங்கள் உள்ளன. ஒவ்வொரு ஜோடியிலும் எது முதல் பெயரோ அது தெற்கு பக்கத்தில் உள்ள சுவர்க்கத்தின் பெயராகும், இரண்டாவது வடக்கு பக்கத்தில் உள்ள சுவர்க்கத்தின் பெயராகும். உதாரணமாக சௌதர்ம சுவர்க்கம் தெற்கில் உள்ளது, ஈசான சுவர்க்கம் வடக்கில் உள்ளது. இவை இரண்டும் ஒரே மேற்பரப்பில், ஒரே உயரத்தில் உள்ளன. அடுத்த ஜோடிகளிலும் இதேபோலவே இருக்கின்றன. அவைகளின் பெயர்களாவன (1-2)சௌதர்ம-ஈசான, (3-4)ஸானத்குமார-மாஹேந்திர, (5-6)பிரம்ம-பிரம்மோத்தர, (7-8)லாந்தவ-காபிஷ்ட, (9-10)சுக்ர-மஹாசுக்ர, (11-12)சதார-ஸஹஸ்ரார, (13-14)ஆனத-பிராணத, (15-16)ஆரண-அச்சுத.

படம் 14-ல் இந்த பெயர்களைப் பாருங்கள். இந்த சுவர்க்கங்களின் எண்ணிக்கை மற்றும் விமானங்களின் எண்ணிக்கை பற்றி பிறகு பார்க்கலாம். இந்த 16 சுவர்க்கங்களுக்கு மேல் 9 கிரைவேயகங்கள் உள்ளன. அவைகள் 3-3 ஆக மூன்று குழுவாக உள்ளன. கீழே உள்ள மூன்றும் கீழ்கிரைவேயகம் (அதஸ்தன் கிரைவேயகம்), நடுவில் உள்ள மூன்றும் நடுகிரைவேயகம் (மத்ய கிரைவேயகம்), மேல்உள்ள மூன்றும் மேல்கிரைவேயகம் (உபரிமகிரைவேயகம்) என்று சொல்லப்படுகின்றன. இந்த மூன்றில் ஒவ்வொன்றிலும் அதோ, மத்ய, ஊர்த்வ என 3-3 பிரிவுகள் உள்ளன. அதோ என்றால் கீழே உள்ள என்று அர்த்தம். ஊர்த்வ என்றால் மேலே என்று அர்த்தம். இதற்கு மேல் ஒரே மேற்பரப்பில் ஒன்பது அநுதிசைகள் உள்ளன, அதற்கும் மேலே ஒரே மற்பரப்பில் ஐந்து அநூத்தர விமானங்கள் உள்ளன.

இப்போது இதன் இடங்களை பார்க்கலாம் - மேருவின் அடியிலிருந்து ஒன்றரை ரஜ்ஜு உயரம் வரை சௌதர்ம-ஈசான ஜோடிகள் உள்ளன. இதற்குமேல் ஒன்றரை ரஜ்ஜு உயரம் வரை ஸனத்குமார-மாஹேந்திர ஜோடிகள் உள்ளன. இதற்குமேல் ½-½ ரஜ்ஜு உயரத்தில் வரிசையாக 1-1 என 6 ஜோடிகள் உள்ளன. இவ்வாறு 6 ரஜ்ஜுவில் 16 சுவர்க்கங்கள் உள்ளன. மேலே ஒரு ரஜ்ஜுவில் வரிசையாக 9 கிரைவேயகங்கள், அநுதிசை மற்றும் அநுத்தர விமானங்கள் உள்ளன.

நீங்கள் கிரைவேயகயத்தின் பெயரை பலமுறை கேட்டிருப்பீர்கள். ஆம் சஹடாலாவில் வருகிறது அல்லவா! என்ன கேட்டிருக்கிறீர்களா?

முனிவிரத தார் அனந்த பார் கிரைவேயக உபஜாயோ |
பை நிஜ ஆதமஞான் பினா ஸுக லேச ந பாயோ ||

கேள்வி - இப்படி ஏன் சொல்கிறார்கள்?

பதில் - மித்யாத்துவ அவஸ்தையில் எந்த உயிராவது அதிகபட்சம் மேலே எந்த சுவர்க்கம்வரை செல்லமுடியும்? அந்த உயிர் ஒன்பதாவது கிரைவேயகம்வரை செல்லமுடியும்; அதிலும் நியமமாக ஜிநேந்திர பகவானால் சொல்லப்பட்ட வழியில் ஆகமத்தில் முனிக்கு அந்தரங்க ஸ்வரூபமும் வெளி ஒழுக்கமும் எப்படி இருக்கவேண்டுமென்று கூறியுள்ளதோ அதேபோல - அப்படியே வெளி ஒழுக்கம் நியாயமான முறையில் பின்பற்றிய போதிலும், இப்போதுவரை சம்யக்த்துவம் பெறவில்லை என்றால் அவரை மித்யாத்துவ குணஸ்தானவர்த்தி திரவியலிங்கி முனி என்று சொல்கின்றனர். திரவியலிங்கத்தை ஏற்காமல் பாவலிங்கியாக ஆகமுடியாது. திரவியலிங்கியாகி நான்காவது அல்லது ஐந்தாவது குணஸ்தானத்தை அடைந்து இருக்கலாம், ஐந்தாம் குணஸ்தானவர்த்தி உயிராக இருந்து திரவியலிங்கி முனியாகி இருக்கலாம், ஆனால் இதுவரை ஏழாம்

குணஸ்தானத்தை - அதாவது பவலிங்கத்தை வெளிப்படுத்தாத முனிவர் திரவியலிங்கி முனி எனப்படுகிறார்.

அப்படிப்பட்ட திரவியலிங்கி முனி ஒன்பதாவது கிரைவேயகம்வரை செல்லமுடியும் என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கு மித்யாத்துவத்துடன் மேலே எதுவரை சென்று பிறக்க முடியும் என்பது பற்றி சொல்லப்பட்டது. அந்த உயிர் முனிகளின் ஒழுக்கத்தை ஆகமத்துக்கு அனுசரணையாக பாலிக்கிறார், அதாவது முனியின் 28 வெளி ஒழுக்கங்களையும் எந்த அதிசாரமும் இன்றி கடைபிடிக்கிறார், ஆனால் அபிப்பிராயத்தில்-நம்பிக்கையில் மித்யாபுத்தி இருக்கிறது. எத்தனையோ சாஸ்திரங்களை படித்திருக்கலாம், 11 அங்கங்கள் தெரிந்தவராக இருக்கலாம், ஆனால் அவரை ஸய்யமி என்று சொல்லமுடியாது. நான்காம் குணஸ்தானம்வரை உயிர் அஸய்யமியே யாகும். தவளா கிரந்தத்தில் ஆச்சார்ய வீரஸேனஸ்வாமி இவர்களுடைய ஆசாரங்களை திரவ்யம் என்று சொல்கிறார், ஸய்யமி என்று சொல்லவில்லை. 6-7 வது குணஸ்தானத்திலும் அதற்கு மேல் உள்ள குணஸ்தானத்தில் உள்ளவர்களைத்தான் ஸய்யமி என்று சொல்கின்றனர்.

நாம் உலகில் சிலர் வெவ்வேறு சக்திகளை வெளிப்படுத்துவதை பார்க்கிறோம், அதில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தவர்களின் பெயர்கூட கின்னஸ் புக் ஆப் ரெக்கார்டில் வருகிறது. அதேபோல இந்த உயிர் கூட முனி ஒழுக்கத்தை பாலிக்கிறது, ஆனாலும் இப்போதுகூட அந்த உயிருக்கு, தன் உடலின் மேலும் - தன் உடலிலிருக்கும் வியாதியின் மேலும் ஒன்றி அதை தன்னுடையதாக-அவருடைய உயிரினுடையதாக ஏகத்துவபுத்தி கொண்டிருக்கிறது. நான் இந்த முனிகளுக்கான 28 மூலகுணங்களை கடைபிடிக்கிறேன் மற்றும் அந்த முனிக்கு தகுதியான ஒழுக்கங்களை கைக்கொள்கிறேன் என்ற சுபராகத்தை-புண்ணியத்தை செய்கிறேன், இந்த சுபராகத்தைக் கொள்வது தகுதியானதே, இதை செய்து செய்தே எனக்கு வீதராகத்துவம் வந்துவிடும், மேலும் நான் மோக்ஷமார்க்கத்தில் இருக்கிறேன், நான் முனியாவேன் என்ற நம்பிக்கையில் உண்மையில் மித்யாத்துவம்தான் ஓடுகிறது. நான் எவ்வளவு கஷ்டங்களை சகிக்கிறேன் என்று சிந்திக்கிறது. இப்படி கஷ்டங்களை சகிப்பது உண்மையில் ஆர்த்தத் தியானமாகும். மோக்ஷம் அனந்த சுகவடிவ அவஸ்தையாகும் என்றால் மோக்ஷமார்க்கத்தில் செல்லும்போது துக்கம் வருமா என்ன? இங்கு சம்யக்தரிசனம் அடைந்த உடனேயே அதீந்திரிய சுகம் வெளிப்பட்டு விடுகிறது, நிராகுலத்தன்மை-எந்த கஷ்டமும் இல்லாத தன்மை இருக்கிறது, அது மேல் குணஸ்தானங்களில் வளர்ந்துகொண்டே போகிறது, அந்த நிலையில் முனிராஜர்களுக்கு ஏராளமான சுகம் தான் இருக்கிறது, அவர்கள் அந்த ஏராளமான ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

நமக்கு நம்முடன் இருப்பவைகளின் மேல் விருப்பும் வெறுப்பும் இருக்கிறது, இது நம்முடைய மூடநம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையுடன் முனிகளிடம் இருப்பவைகளைப் பார்த்து நாம் இவ்வாறு நினைக்கிறோம்- 'பாவம், இந்த ஏழை முனிவர்! கடுமையான குளிரை நிர்வாணமாக இருந்து அதனால் வரும் உடல் கஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டு, குளிரில் வரும் நடுக்கத்தை தாக்குப்பிடித்துக்கொண்டு இருக்கிறார்.' இது மத்யாதிருஷ்டியின் நம்பிக்கையாகும். கஷ்டங்களை சகித்துக் கொள்வது அவருடைய இயல்பு அல்ல. அவருடைய எல்லாச் செயல்களும் எளிமையானதாக இருக்கின்றன. இந்த எளிமை நிமித்த நைமித்திக சம்பந்தமுடையது.

'நான் யார்?' என்பது பற்றிய மூடநம்பிக்கை துவக்கத்திலிருந்தே தவறாக உள்ளது. நான் உங்களுக்கு ஒரு கணக்கு சொல்கிறேன், அது சரியா தவறா என்று நீங்கள் சொல்லவேண்டும். 2+2=5, 5+5=10, 10+10=20, 20+20=40, 40+40=80, 80+80=160 ..... இந்த கணக்கு சரியா இல்லையா? சரியில்லை, ஆரம்பத்திலேயே இரண்டு கூட்டல் இரண்டு நான்கு என்பதற்கு பதில் இரண்டு கூட்டல் இரண்டு ஐந்து என கணக்கிடப்பட்டது, மேலே கோடி வரை கணக்கு சென்றாலும் கூட துவக்கத்தில் தவறு நிகழ்ந்துவிட்டது என்றால் மேலே கணக்கிடப்பட்டதெல்லாம் தவறாகவே இருக்கும். அதேபோலத்தான் மூடநம்பிக்கை வடிவ தவறு துவக்கத்திலேயே இருக்கிறது மற்றும் மோக்ஷம் பெற தவம் செய்கிறார்- வெளித்தபங்களை செய்கிறார் அதை சாஸ்திரத்தில் பாலதபம் என்று சொல்லப்பட்டுள்ளது. முதலில் எண்ணில்லாத பூஜ்ஜியங்கள் என்று சொல்லப்படுகிறது. இது எதையாவது சாதிக்குமா இல்லையா? ஆம், சம்சாரத்தை பெரிதுபடுத்தும் சாதனையை செய்யக்கூடியதாகும், மோக்ஷம் கிடைக்க எந்த பிரயோஜனமும் இல்லாததாகும். எந்த நிர்ஜரையால் மோக்ஷமார்க்கத்தில் எந்த பிரயோஜனமும் இல்லையோ அதை அகாமநிர்ஜரை என்று சொல்கின்றனர். இது சம்வரையோடு கூடிய நிர்ஜரை இல்லை, உதயவடிவ நிர்ஜரை யாகும். அஞ்ஞானி கோடி பவங்கள்வரை தபம் செய்தாலும்கூட அவருக்கு எவ்வளவு நிர்ஜரை நிகழ்கிறதோ அதைவிட அசங்க்யாத மடங்கு நிர்ஜரை ஞானிக்கு- பாவலிங்கி முனிக்கு ஒரு கண நேரத்திலேயே நிகழ்ந்து விடுகிறது.

இந்த நிர்ஜரை என்பது என்ன? அசங்க்யாத மடங்கு என்றால் என்ன? பாருங்கள்! நாம் ஒவ்வொரு சமயமும் அனந்த கர்ம பரமாணுக்களை பந்தித்துக் கொள்கிறோம், அதாவது உயிரோடு வந்து சேர்ந்து கொள்கின்றன. இதை ஒரு சமய பிரபந்தம் என்று சொல்கின்றனர். முன்னர் கட்டிக்கொண்ட கர்மங்களிலிருந்து அந்த அளவே அனந்த கர்ம பரமாணுக்கள் வெளியே செல்கின்றன, உயிரிலிருந்து பிரிந்து போகின்றன, இதையே உதயம் என்று சொல்கின்றனர். அதாவது எவ்வளவு கர்ம பரமாணுக்கள் புதிதாக வந்து சேர்கிறதோ அந்த அளவே பழைய-முன்னர் கட்டிக் கொண்ட கர்ம பரமாணுக்களிலிருந்து அந்த அளவே பிரிந்து போகின்றன. ஆனால்

பாவலிங்கி முனிகளுக்கு அப்படியில்லை, அவருக்கு பந்தமாவது ஒரு பிரபந்த அளவு ஆனால் பிரிந்து போவது அதைப்போல அசங்க்யாத மடங்காகும்.

மித்யாதிருஷ்டி உயிர் மித்யாத்துவ அவஸ்தையில் பந்தத் தகுதியான எல்லா பிரக்ருதிகளையும் பந்தித்திக் கொண்டிருக்கிறது. அதாவது மித்யாத்துவம், 16 கஷாயங்கள் முதலான எல்லாக் கர்ம பிரக்ருதிகளையும் மற்றும் வேறு சிலவற்றையும் பந்திக்கிறது, ஆனால் முனிகளுக்கு 55 பிரக்ருதிகள் பந்தமாவதில்லை. அவர்களுக்கு இவ்வளவு கர்மங்கள் பந்த வியுச்சித்தியாகி இருக்கிறது. மித்யாதிருஷ்டி தபம் செய்யும் சில காலங்களுக்கு புண்ணியப் பிரக்ருதியை பந்தம் செய்வார். சில காலங்களுக்கு என்று ஏன் சொல்லப்பட்டது? சுப உணர்வை செய்து யாராவது சுவர்க்கத்திற்கு சென்று, அங்கு ஐந்து பாபங்களையும் செய்யவில்லை என்றால், அவர்கள் இறந்து மேலே எந்த சுவர்க்கம்வரை செல்லமுடியும்? என்று நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம். ஏன், எந்த விஷயம் பற்றி சர்ச்சை நிகழ்கிறது? அரே, சுவர்க்கத்திலிருந்து எந்த உயிரும் இறந்து சுவர்க்கத்திலேயே பிறப்பதில்லை, அவர்கள் நியமமாக கீழே மனித அல்லது விலங்கு கதியில்தான் பிறக்க வேண்டியுள்ளது. புண்ணியத்தை செய்து சுவர்க்கம் சென்றாலும் அங்கு புண்ணிய பலனை இச்சையுடன் அனுபவிக்கின்றனர், அங்கு ஆயுள் பல்யத்திலும், கடற்கால அளவிலும் உள்ளது, அதனால் அவர்களை அமரர் என்று சொல்கின்றனர். இதை எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா, இல்லையா? பக்தாமர ஸ்தோத்திரத்தில் அவர்களை பக்த அமர் என்று சொல்லப்பட்டுள்ளது.

அவர்களுடைய ஆயுள் ஆறு மாதங்கள் மிச்சம் இருக்கும்போது, அவர்கள் கழுத்தில் உள்ள மாலை வாடத்தொடங்குகிறது. அப்போது அவர்கள் இங்கு வாழும் ஆயுள் சீக்கிரமாக முடிவுக்கு வரப்போகிறது என்பதை தெரிந்து கொள்கின்றனர். அப்போது மித்யாதிருஷ்டி உயிர்கள் மிகவும் சோகத்திற்கு உள்ளாகின்றனர், சிக்கலான உணர்வுகளை கொள்கின்றனர், அதனால் பலர் இறந்து ஏகேந்திரியத்திலோ, பாதர மண்ணுடலியிலோ, பாதர நீருடலியிலோ, பிரத்யேக தாவரங்களாகவோ பிறக்கின்றனர். சுவர்க்கத்திலிருந்து உயிர் இறந்து நேராக நிகோதத்தில் சென்று பிறப்பதில்லை.

அஞ்ஞானி உயிர்களுக்கு அப்படிப்பட்ட தபத்தால் என்ன லாபம் கிடைத்தது?

இங்கு கிரைவேயகங்கள் பற்றி பார்த்துக் கொண்டிருந்தோம். அங்கு பாஃவலிங்கி முனிகள் என்னவோ சென்று பிறக்கின்றனர். ஆனால் மித்யாதிருஷ்டி திரவ்யலிங்கிகள்கூட அதுவரை சென்று பிறவி எடுக்க முடியும் என்று பார்த்தோம். அதில்கூட ஒரு நியமம் இருக்கிறது. மனித பிறவியிலிருந்து கிரைவேயகத்தில் சென்று பிறக்க வேண்டுமானால், மேல் மூன்று உத்தம ஸம்ஹனனங்களில் ஏதாவது ஒரு ஸம்ஹனனம் இருக்க

வேண்டும். இந்த மூன்று ஸஹனனன்களும் ஐந்தாம் காலத்தில் முனிகளுக்குக்கூட இருப்பதில்லை. அதனால் இந்த ஐந்தாம் காலத்தில் திரவ்யலிங்கியோ, பாஃவலிங்கியோ யாரும் கிரைவேயகத்தில் சென்று பிறக்க முடியாது.

ஸம்ஹனனம் என்ற சப்தத்தை-சொல்லை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா. மனிதர்களுக்கோ இரண்டு இந்திரியம் முதலான விலங்குகளுக்கோ ஸம்ஹனன நாமகர்ம உதயத்தால், குறிப்பிட்ட ஸம்ஹனனன் அதாவது உடல் மற்றும் எலும்புகளின் வலுவானத்தன்மை கிடைக்கிறது. இதையே ஸம்ஹனனன் என்று சொல்கின்றனர். இதில் ஆறு பிரிவுகள் உள்ளன. - 1.வஜ்ரவிருஷபநாராச ஸம்ஹனனன், 2.விருஷபநாராச ஸம்ஹனனன், 3.நாராச ஸம்ஹனனன், 4.அர்த்தஃநாராச ஸம்ஹனனன், 5.கீலித ஸம்ஹனனன், மற்றும் 6.அஸம்பிராப்தாஸ்புருடிகா ஸம்ஹனனன். இதில் முதல் மூன்றும் உத்தம ஸம்ஹனனமாகும். பரத க்ஷேத்திரத்தில் நாலாம் காலத்தில் இந்த ஆறு ஸம்ஹனனனும் கொண்ட உயிர்கள் இருக்கின்றனர். ஆனால் ஐந்தாம் காலத்தில் கீழ்மூன்று ஸம்ஹனனன்கள் கொண்ட உயிர்களே இருக்கின்றனர்.

மோக்ஷம் செல்லும் உயிர்களுக்கு அந்த கடைசி பவத்தில் வஜ்ரவிருஷபநாராச ஸம்ஹனனனே இருக்கிறது. எந்த ஒரு ஸம்ஹனனும் உயிரை சுவர்க்கத்துக்கோ, மோக்ஷத்துக்கோ கொண்டு செல்வதில்லை. ஏழாம் நரகம் செல்லும் உயிருக்குக்கூட வஜ்ரவிருஷபநாராச ஸம்ஹனனே இருப்பது அவசியமாகும். இந்த நிமித்த நைமித்திக சம்பந்தம் எளிமையாகவே அந்த உயிர்களுக்கு இருக்கிறது. கரணானுயோகத்தில் இப்படிப்பட்ட நிமித்த விதிமுறைகளை பார்த்து அங்கு நிகழும் காரியங்களில் யூகிக்கப்படுகிறது. கர்மபூமி பெண்களுக்கு கீழ்மூன்று ஸம்ஹனனன்களே இருக்கிறது, ஆகையால் பெண்களுக்கு மோக்ஷமில்லை - நான்காம் காலத்தில்கூட பெண்களுக்கு மோக்ஷமில்லை. விலங்கு அல்லது மனிதகதி பெண்பிறவியில் உயர்ந்த பட்சம் ஐந்தாம் குணஸ்தானம்வரைதான் போகமுடியும்.

ஆனாலும்கூட சில தர்மங்களில் பெண்களுக்கு முக்தி உண்டு என்று சொல்கின்றனர். இதிலிருந்து அவர்களுக்கு நிமித்தம் பற்றிகூட சரியான புரிதல் இல்லை என்பதால் அவர்கள் அப்படி சொல்வது எப்போதும் பொய்யாகும் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். இவ்வாறு நாம் உண்மையை உறுதி செய்யமுடியும்.

ஒன்பது கிரைவேயகங்களுக்கு மேலே ஒரே படலத்தில் அனுதிசை என்ற பெயர்கொண்ட விமானங்கள் உள்ளன. நடுவில் ஒன்று, நான்கு திசைகளிலும் ஒவ்வொன்று என நான்கு, மற்றும் நான்கு குறுக்கு திசைகளில் ஒவ்வொன்று

என நான்கு என ஆக மொத்தம் 9 விமானங்கள் உள்ளன. அவைகளைப்பற்றி விரிவாக பிறகு பார்க்கலாம்.

அனுதிசைக்கு மேலே ஐந்து அனூத்தர விமானங்கள் உள்ளன. நடுவில் ஒன்று, நான்கு திசைகளிலும் ஒவ்வொன்று என நான்கு விமானங்கள் உள்ளன. இவ்வாறு நாம் சுவர்க்கங்களின் பெயர்களைப் பார்த்தோம். இவைகளில் எங்கே எத்தனை படலங்கள் உள்ளன? எத்தனை விமானங்கள் உள்ளன? இவைகளை பற்றி பிறகு விரிவாகப் பார்க்கலாம்.

விதேகக்ஷேத்திரத்தில் சமவசணரத்தில் வீற்றுள்ள ஏழாம் தீர்த்தங்கர் ஸ்ரீ விரஷபானன் பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

8. மேல் உலகம்-சுவர்க்க விமானங்கள்

இங்கு திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் நாம் மூவுலக வடிவம் மற்றும் அமைப்புகள் பற்றி பார்த்துக்கொண்டு இருக்கிறோம். பாருங்கள், பகவானின் வாணிக்கு அனுசரணையாக உலகம் பற்றிய வர்ணனை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பகவான் வீதராகியும், சர்வக்ஞனுமாவார். சர்வக்ஞ பகவான் தன் கேவலஞானத்தில் நேரடியாக, உள்ளதை உள்ளபடியே அறிந்து அவைகளைப்பற்றி எந்த கூடுதலும் குறைவுமின்றி அப்படியே எடுத்துச் சொல்லியிருக்கிறார். இது யாருடைய மனம்போன போக்கிலும் சொல்லப்பட்டதல்ல.

சர்வக்ஞரின் வாணி பிரமாணமாகும், அவர் கூறியவைகளை வேறு எந்தப் பிரமாணங்களின் மூலம் உறுதிசெய்ய வேண்டியதில்லை அதாவது வேறு எதனுடனோ ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் காலையில் சூரியன் உதிப்பதை எந்த விளக்கு கொண்டு பார்த்து உறுதி செய்கிறீர்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்! அது சுயமாகவே பிரகாசமாக இருக்கிறது, அந்த பிரகாசத்தின் நிமித்தத்தால் மற்ற பொருள்களும்கூட பிரகாசமாகத் தெரிகின்றன. அதை பார்த்து உறுதி செய்ய வேறு வெளிச்சம் தேவையில்லை அல்லவா! யார் தன்னுடைய அல்ப ஞானத்தின் மூலம் சர்வக்ஞரின் வாணியை உறுதி படுத்த நினைக்கிறாரோ, அது அவருடைய குற்றமாகும், மூடநம்பிக்கையாகும். அவருக்கு சர்வக்ஞரைப் பற்றிய உறுதிப்பாடு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சர்வக்ஞரின் வாணிக்கு அனுசரணையாக வஸ்து ஸ்வரூபத்தையும், மூவுலக அமைப்பையும் அறிந்து கொண்டு, நம் எண்ணத்தில்-நம்பிக்கையில் தவறு இருந்தால், அதை சரி செய்துகொள்ள வேண்டும். ஆனால் உலக மக்கள் இதற்கு மாறாக செய்கின்றனர்/செய்யவே விரும்புகின்றனர். அதாவது அவர்களுடைய மூடநம்பிக்கையை அல்லது தவறான புரிதலை அல்லது அல்ப ஞானத்தால் அறிந்ததை ஆதாரமாகக்கொண்டு, சர்வக்ஞர் வாணியில் கூறியவைகள் சரியா தவறா என்று உறுதிப்படுத்த விரும்புகின்றனர்.

இதுபற்றி நாம் முன்னரே நாம் சர்ச்சைசெய்திருக்கிறோம். 'விஞ்ஞானத்தின் ஆதாரத்தில் விஞ்ஞானிகள் சொல்லியுள்ள உலக அமைப்பு பற்றி தெரிந்துகொண்டு அதன் ஆதாரத்தில் இதை சர்வக்ஞர் கூறியுள்ள உலக அமைப்பை பொருத்திக் காட்டுங்கள்' என்று சொல்பவர், முதலிலிருந்தே இந்த தத்துவ வகுப்பில் கலந்து கொள்ளாதவராக இருந்தால் அது அவருடைய தவறாகும். இங்கு சொல்லப்படும் பிரமாணங்களை அறிந்து கொள்ள வேண்டும், மேலும் அவருடைய அறிவின்படி எந்த பிழை இருக்கிறதோ அதை போக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் ஞானத்தில் இதுவரை தவறாக அறிந்து வைத்திருப்பதே சரி என்று உறுதி படுத்த விரும்புவீரானால்,

உங்களுடைய நம்பிக்கையில் பிடிவாதமாக இருந்தால், அதனால் உங்களுக்குத்தான் தீங்கு உண்டாகும்.

இங்கு சில கேள்விகள் வந்திருக்கின்றன, அவைகளுக்கு சமாதானம் சொல்லிவிட்டு நாம் மேலே பார்க்கலாம், எனென்றால் அவைகளில் தெளிவு இல்லாவிடில் நாம் மேலே பார்க்கப்போகும் விஷயங்களை புரிந்து கொள்ள முடியாமல் போகும்.

கேள்வி: வாதவலையங்கள் சம்பந்தமான படம் 2-ல், நீலம், மஞ்சள், சிகப்பு கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள 7, 5, 4 மற்றும் 5, 4, 3 போன்றவைகள் எதை காட்டுகின்றன? என்று தெளிவு படுத்தவும்.

பதில்: வாதவலையங்கள் சம்பந்தமான படம் 2-ல் லோகாகாசத்தின் முன் நின்று பார்த்தால் தெரியும் வடிவம் காட்டப்பட்டுள்ளது. அதில் கிழக்கு மேற்காக விஸ்தீரணத்தை நம்மால் பார்க்கமுடியும். லோகாகாசம் கனவடிவமாகும் என்பதை படம் 1-ல் ஆதாரத்தில் நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். லோகாகாசத்தின் தெற்கு வடக்காக விஸ்தீரணம் ஏழு ரஜ்ஜு அளவு எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது, அதை படம் 2-ல் நம்மால் பார்க்க முடியாது. இதில் முகப்பு பக்கம் மட்டுமே தெரிகிறது.

லோகாகாசத்தின் அடியிலும் மற்றும் ஒவ்வொரு பூமியின் அடியிலும் 20,000 யோஜனை தடிமன் கொண்ட கனோததி வாதவலையம(கனோததி என்ற பெயர் கொண்ட காற்று மண்டலம்-படத்தில் அது நீல நிறத்தில்காட்டப் பட்டுள்ளது) இருக்கிறது. அதற்கு கீழே மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது கனவாதவலையமாகும், அதுவும் 20,000 யோஜனை தடிமன் கொண்டதாகும். எல்லாவற்றிற்கும் கீழே தனுவாத வலையம் சிகப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது. அதுவும் 20,000 யோஜனை தடிமன் கொண்டதாகும்.

லோகாகாசத்தின் அடிப்பகுதி தெற்கு வடக்காக 7 ரஜ்ஜுவும், கிழக்கு மேற்காக 7 ரஜ்ஜுவும் அளவு கொண்டதாக இருக்கிறது. அந்த பகுதியில் மூன்று வாதவலைங்களும் 20,000-20,000-20,000 யோஜனை அளவு கொண்டதாக உள்ளது. நான்கு பக்கங்களிலும் அதாவது பக்கவாட்டில் ஒரு ரஜ்ஜு உயரம்வரை மூன்று வாதவலைங்களும் அதே அளவு அதாவது 20,000-20,000-20,000 யோஜனை அளவு கொண்டதாகவே உள்ளது. பக்கவாட்டில் அங்கிருந்து மேலே போகப்போக அதனளவு குறைந்து கொண்டே கிரமமாக கனோததி வதவலம் 7 யோஜனையாகவும், கனவாத வலையம் 5 யோஜனையாகவும், தனுவாத வலையம் 4 யோஜனையாகவும், அதாவது மூன்றும் சேர்ந்து 16 யோஜனையாகவும் இருக்கிறது. 60,000 யோஜனையிலிருந்து 16 யோஜனையாக குறைந்து போகிறது. அதற்கு மேலே கொஞ்சம்கொஞ்சமாக குறைந்து மத்யலோகம் இருக்குமிடத்தில் நாலாபக்கமும் கனோததி வாதவலைம் 5 யோஜனையாகவும், கனவாத

வலையம் 4 யோஜனையாகவும், தனுவாத வலையம் 3 யோஜனையாகவும் குறைந்து போகிறது. அங்கிருந்து மேலே போகப்போக இந்த வாதவலையங்களின் பருமன் பக்கவாட்டில் நாலா பக்கமும் அதிகரித்துக் கொண்டேபோய் பிரம்ம சுவர்க்கத்திற்கு பக்கத்தில் கிரமமாக 7 யோஜனை, 5 யோஜனை, 4 யோஜனை அளவு கொண்டதாக இருக்கிறது. அதற்கு மேலே போகப்போக பக்கவாட்டில் நாலாபக்கமும் இந்த வதவலையங்களின் அளவு குறைந்து கொண்டேபோக, கனோததி வாதவலையம் 5 யோஜனையாகவும், கனவாத வலையம் 4 யோஜனையாகவும், தனுவாத வலையம் 3 யோஜனையாகவும் உலக உச்சியின் பக்கவாட்டில் குறைந்து போகிறது.

லோகாகாசத்தின் மேல் பாகத்தில் எட்டாவது ஈஷத்ப்ராக்பார் பூமி இருக்கிறது. அதற்கு கீழேயும் மூன்று வாதவலையங்களும் 20,000-20,000-20,000 யோஜனை அளவில் இருக்கிறது. ஆனால் இந்த பூமிக்கு மேலேகூட தலைகீழாக கிரமமாக இந்த மூன்று வாதவலையங்களும் வெவ்வேறு பருமனில் இருக்கின்றன. கனோததி வாதவலையம் இரண்டு கோஸம் பருமன் கொண்டதாக உலக உச்சியின் மேல் லோகாகாசத்தை தொட்ட வண்ணம் இருக்கிறது. அதற்கு மேல் அதாவது நடுவில் கனவாத வலையம் ஒரு கோஸம் அளவாக இருக்கிறது, கடைசியில் அதாவது உச்சியில் தனுவாத வலையம்1,575 வில் அளவு பருமன் கொண்டதாக இருக்கிறது. இதைப்பற்றிய சர்ச்சையை முன் பாடத்தில் கூட செய்திருந்தோம், ஆனாலும் சிலருக்கு புரியாமல் இருந்த காரணத்தால், மீண்டும் விளக்கமாக இங்கு சர்ச்சை செய்தோம்.

கேள்வி: அனுத்தர விமானங்களின் மத்தியில் இருக்கும் ஸர்வார்த்தஸித்தி விமானத்தின் மேலிருந்து ஸித்தசிலை எவ்வளவு உயரத்தில் இருக்கிறது?

பதில்: 12 யோஜனை உயரத்தில் இருக்கிறது. ஸித்தசிலை எட்டாவது ஈஷத்ப்ராக்பார் பூமிக்கு நட்டநடுவில் இருக்கிறது. இந்த பூமிக்கு கீழே மூன்று வாதவலையங்கள் இருக்கின்றன, அதில் கனோததி வாதவலையத்தில் அனுத்தர விமானம் உள்ளது.

கேள்வி: ஸர்வார்த்தஸித்தி தேவர்கள் ஸித்தசிலைக்கு போகமுடியுமா?

பதில்: ஸர்வார்த்தஸித்தி தேவர்கள் ஸித்தசிலைக்கு போகமுடியாது.

கேள்வி: அவர்கள் கீழே எவ்வளவு தூரம்வரை செல்ல முடியும்?

பதில்: அவர்களுக்கு கீழே ஏழாம் நரகம்வரை செல்லும் சக்தி இருக்கிறது, ஆனாலும் எங்காவது போகவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு வருவதில்லை, அதனால் அவர்கள் விமானத்தைவிட்டு வேறு எங்கும் செல்வதில்லை. பஞ்சகல்யாணத்திற்கு கூட அவர்கள் செல்வதில்லை. சௌதர்மேந்திரன் ஜென்ம கல்யாணத்தின்போது தீர்த்தங்கரராக ஆகப்போகும் குழந்தை பிறந்துள்ள பூமிக்கு வந்து நடனமாடுகிறான், எல்லா

இந்திரர்களும் ஐந்து கல்யாணங்களுக்கும் வந்து பூஜை செய்கின்றனர், சமவசரணத்தில் பகவானின் திவ்யத்தொனியை கேட்கின்றனர். அவர்களில் யார் நல்லவர்? இங்கு நல்லவர் கெட்டவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லோருமே நான்காம் குணஸ்தான உயிர்கள்தான். இங்குகூட சிலர் ஆடிப்பாடி சத்தமாக பூஜை செய்கின்றனர், சிலர் சாந்த பாவத்துடன் நமஸ்காரம் முதலின செய்கின்றனர், சுவாத்யாயம் செய்கின்றனர். வெளிக்கிரியைகளால் நல்லது கெட்டது நிகழ்வதில்லை, பலன் என்னவோ பரிணாமங்களால், அபிப்பிராயத்தால் தான் நிகழ்கிறது.

பூஜை, பக்தி முதலிய கிரியைகளை வெளியில் காணமுடிகிறது. நமக்கோ அல்லது வேறு யாருக்கோ காட்டுவதற்காக இந்த கிரியைகளை சிலர் செய்கின்றனர், அல்லது சிலரின் கிரியைகளை பார்த்துப்பார்த்து அதில் குற்றம் கண்டுபிடிக்க சிலர் முயல்கின்றனர். இவைகள் தவறான செயல்களாகும். நாம் என்னவோ நம் செயல்களையும், பரிணாமங்களையும் தான் பார்க்கவேண்டும், நமக்கு நல்லதை நாம்தான் செய்துகொள்ள வேண்டும்.

கேள்வி: சித்ரா பூமி எங்கு இருக்கிறது?

பதில்: ரத்தினப்பிரபா பெயர் கொண்ட முதல் பூமியின் கரபாகம் 16,000 யோஜனை பருமன் கொண்டதாகும். அதில் 1000-1000 யோஜனை பருமன் கொண்ட 16 பூமிகள் உள்ளன. அவைகளில் எல்லாவற்றிற்கும் மேல் உள்ள முதல் பூமியின் பெயர் சித்ரா வாகும். இரண்டாவது வஜ்ரா பூமியாகும், இந்த பெயரை நாம் முன்னரே கேட்டிருக்கிறோம். நாம் எல்லோரும் இந்த சித்ரா பூமிக்கு மேல்தான் வாழ்கிறோம்.

கேள்வி: கரபாகம், பங்கபாகம், மற்றும் அப்பஹுளபாகம் எல்லாம் முதல் பூமியிலேயே இருக்கின்றனவா அல்லது எல்லா ஏழு பூமிகளிலும் உள்ளனவா?

பதில்: இந்த மூன்று பாகங்களும் முதல் ரத்தினபிரபா பூமியிலேயே இருக்கின்றன. மற்ற பூமிகளில் இல்லை. அங்கு நரகத்தின் பிலங்களே உள்ளன.

ஒரு மிகவும் மர்மமான கேள்வியை ஒரு மாதாஜி எழுப்பி இருக்கிறார். தேவர்களின் ஆயுள் எத்தனை கடற்காலமோ அத்தனை ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை ஆஹாரம் பற்றிய இச்சை வருகிறது மற்றும் அந்த கால இடைவெளியில் ஆஹாரம் ஏற்கின்றனர். அதாவது அவர்கள் தொண்டையில் அமிர்தம் ஊற்றெடுக்கிறது, அதை விழுங்கியதும் அவர்களுக்கு உணவு உண்ட திருப்தி உண்டாகிறது. அவர்களுடைய ஆஹாரம் நம் ஆஹாரம்போல இல்லை. அவர்கள் ஆஹாரத்தை செய்வதுமில்லை, சாப்பிடுவதுமில்லை. அதாவது அவர்களுக்கு கவளாஹாரம் இல்லை. இதற்கிணங்க ஸர்வார்த்தஸித்தி தேவர்களின் ஆயுள் 33 கடற்காலம், அதனால் அவர்கள் 33,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆஹாரம்

பற்றிய இச்சை வருகிறது. அவர்கள் இவ்வளவு காலம் ஆஹாரம் எடுப்பதில்லை என்றால் இதை இந்த தேவர்களின் உபவாச தபம் என்று சொல்வது சரிதானே? என்ற ஒரு கேள்வியை ஒரு அம்மா எழுப்பியுள்ளார்கள்.

பாருங்கள், தபம் என்று சொன்னாலும், சய்யமம்-கட்டுப்பாடு என்று சொன்னாலும் முனி நிலையில் அந்தரங்கத்தில் உண்டாகும் அந்த உணர்வையே தபம் என்று சொல்கின்றனர். உபவாஸம் என்று எதை சொல்லலாம்? உப என்றால் அருகில், வாஸம் என்றால் வசித்தல் என்று பொருள். தன் ஆத்மாவின் அருகில் வசித்தல் அல்லது ஆத்மாவில் ஆழ்ந்து போதல் எனலாம். அப்படிப்பட்ட நிலையில் வெளியில் ஆஹாரம் முதலானவை பற்றிய எண்ணங்கள் வருவதில்லை, உணவு ஏற்க வேண்டும் என்ற இச்சையே உண்டாவதில்லை. இச்சை உண்டாகாமல் இருப்பதையே 'இச்சா நிரோதஸ்தப:' என்று சொல்கின்றனர். இச்சையை அடக்குவதை தபம் என்று சொல்வதில்லை. உபவாஸத்தில் கஷாயமும், ஆஹாரமும் குறைக்கப்படுகிறது. நாம் உபவாஸம் என்ற பெயரில் உணவு உண்பதை விட்டுவிடுகிறோம், கஷாயங்கள் வளர்ச்சியடைகின்றன. இந்த சமயத்தில் வேறு விஷயங்களில் (கடைக்கு சென்று வியாபாரத்தில் ஈடுபடுதல், சீட்டு விளையாடி காலங்கழித்தல், தொலைகாட்சி பெட்டியில் தங்களுக்கு விருப்பமான நாடகம், சினிமா பார்த்தல், தூங்கி ஓய்வு எடுத்தல் போன்ற காரியங்களில்) நேரத்தை செலவழிக்கின்றனர்.

சிலர் சுவாத்யாயம் செய்கின்றனர், ஆனால் அது முனிகள் செய்யும் தபம் போன்றதில்லை, ஏனெனில் தபத்தின் பலன் கர்ம நிர்ஜரையாகும். 'தபஸா நிர்ஜராச்ச' என்ற சூத்திரம் தத்துவார்த்தஸூத்திரத்தில் இருக்கிறது. உபவாசம் என்ற பெயரில் உணவு உண்பதை விட்டுவிட்டு யார் அதிகம் குஷியாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அதிக நிர்ஜரை உண்டாகுமா? அப்படி ஆவதில்லை. மூடநம்பிக்கையுடன் எந்தக் காரியம் செய்தாலும் அதனால் அவர்களுக்கு (முனிகளுக்கு ஆவது போன்ற) நிர்ஜரையே ஆவதில்லை. நிர்ஜரை என்னவோ நான்காம் குணஸ்தானத்தில் துவங்குகிறது, ஆனால் எதை தபம் அல்லது புலனடக்கம் என்று சொல்கின்றனரோ அது ஆறாவது குணஸ்தானத்திலிருந்து மேல் குணஸ்தானங்களில் நிகழ்கிறது.

தேவர்களுக்கு சம்யக்துவம் இருக்க முடியும் ஆனால் அவர்களுடைய குணஸ்தானம் நான்குக்கு மேல் போவதில்லை. அதனால் அவர்களுக்கு தபம் என்பதே இல்லை. நான்காம் குணஸ்தானம் வரை அஸய்யமம் தான் இருக்கிறது. உணவு உண்ணாமையை தபம் என்று சொல்வதில்லை. உடை அணியாமல் இருப்பதை ஸய்யமம் என்று சொல்வதில்லை. ஸம்+யம் அதாவது ஸம்யக் வடிவில் யார் தன் ஆத்மாவில் நிலைகொள்கிறார்களோ அந்த முனிராஜர்களுக்குத்தான் ஸய்யமம் இருக்கிறது. தன் ஆத்மஸ்வரூபத்தில் நிலைகொள்வதே உண்மையான ஆராதனையாகும், அதுவே ஸாமாயிகமாகும்,

அதுவே ஆலோசனாவாகும், அதுவே பிரதிக்ரமணமாகும், அதுவே பிரத்யாக்யானமாகும், அதுவே சமாதி முதலானவைகளாகும்.

கேள்வி: நாம் ஆத்மாவை பார்க்கவேண்டும் என்று சொல்கிறீர்கள், மற்றவைகள் எல்லாம் வெளிக் கிரியைகள் என்று சொல்கிறீர்கள், பிறகு நாம் ஆத்மாவில் போக வேண்டுமென்றால் உண்மையில் என்ன செய்ய வேண்டும்? உள்ளே செல்லவேண்டுமா? வெளியில் செல்ல வேண்டுமா?

பதில்: நீங்கள் ஆத்மாவில் செல்ல வேண்டுமென்றால் இப்போது நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? எங்கே இருக்கிறீர்கள்? நாம் உள்ளேயோ-வெளியேயோ செல்ல வேண்டியதில்லை. அரே! நாம் ஏற்கனவே ஸ்வயம்(நமக்கு நாமே) ஆத்மாவாகவே தான் இருக்கிறோம்.

கேள்வி: பிறகு நாம் லோகாகாசத்தை தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் நாம் வெளிப்பக்கம் பார்க்க வேண்டுமா அல்லது உள்பக்கம் பார்க்கவேண்டுமா?

பதில்: உண்மையில் உங்களுக்கு ஞானம் என்றால் என்ன? மற்றும் திருஷ்டி என்றால் என்ன? என்று தெரியாமலிருப்பதாலேயே இப்படிப்பட்ட கேள்வி உங்களுக்கு வருகிறது. இந்த திரிலோகஸாரத்தையும் மற்றும் வேறு பல நூல்களையும் முனிவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய திருஷ்டி உள்ளே இருந்ததா? வெளியில் இருந்ததா? வெளிப்பொருள்களின் அறிவை வெளிதிருஷ்டி என்று சொல்வதில்லை. திருஷ்டி என்றால் உணர்தல் அல்லது நம்பிக்கை எனப்படும். எதில் "நான் இதுதான்" என்று நிலைநிறுத்துகிறோமோ அதையே திருஷ்டி என்று சொல்கின்றனர். தன் சொந்த சுத்தாத்ம ஸ்வரூபத்தில்-முக்காலத்திலும் ஒன்றாக இருப்பதில்-திரிகாலிஸ்வபாவத்தில் 'இதுதான் நான்' என்று நிலைநிறுத்துதலை சம்யக்திருஷ்டி அதாவது உள்ளது உள்ளபடியான-யதார்த்தமான திருஷ்டி என்று சொல்கின்றனர்; மற்றம் வெளி வஸ்துக்களில் இதுதான் நான்' என்று நிலைநிறுத்துதலை பாஹ்யதிருஷ்டி-மித்யாதிருஷ்டி என்று சொல்கின்றனர்.

சமயஸார நூல் திருஷ்டி பிரதான-நம்பிக்கைக்கு முதன்மை தருவதான நூலாகும். திருஷ்டியின்-நம்பிக்கையின் விஷயம் ஸ்வயம் தன்னைப்பற்றிய -தன் சுத்தாத்மா பற்றிய சர்ச்சையாகும். பிரவசனஸாரம் ஞானபிரதான-அறிதலுக்கு முதன்மை தருவதான நூலாகும், அதில் ஆறு திரவியங்கள், அவைகளின் இயல்பு, தோன்றுதல், அழிதல், நிலைத்திருத்தல் முதலான எல்லாம் பார்க்கப்படும் பொருள்கள்(ஞேயங்கள்-அறிவில் வருபவை) மற்றும் அவைகளைப் பற்றி தெரிந்து கொள்ளும் விளக்கமாகும்.

இந்த லோகாலோகம் நம் அறிவால் பார்க்கப்படும் (ஞானத்தின் ஞேயம்) பொருளாகும். பார்க்கப்படும் பொருளை அறிவது ஆத்மா வாகும், நான் ஆத்மா, இந்த எல்லா பதார்த்தங்களும் என்னால் பார்க்கப்படும்

பொருள்களாகும். இவைகள் எல்லாம் என்னால் ஒருமுறையோ பலமுறைகளோ அனுபவிக்கப்படும் வஸ்துக்கள் இல்லை. நான் இவைகளை செய்பவனுமில்லை மற்றும் அனுபவிப்பவனுமில்லை. நான் அறிபவன், இவைகள் அறியப்படும் வஸ்துக்கள். இவைகள் என்னிலிருந்தும் வேறாகும். 'தீனபுவன திதி ஜானீகே, ஆப ஆபமய.....' என மங்கல வாழ்த்தில் நாம் தினமும் பாடுகிறோம், இங்கு ஞானம் தடைசெய்யப்படவில்லை. 'ஆப ஆபமய ஹோய' என்பதில் நான் என் ஸ்வருபத்தில் இருக்கிறேன். இந்த எல்லா வஸ்துக்களும் என்னிலிருந்தும் வேறான மற்ற வஸ்துக்களை அறிபவன் நானாவேன். இந்த வஸ்துக்கள் என் ஞானத்தில்-அறிவில் வருகின்றன. இவைகளிலிருந்து நாம் அறிவதை -ஆத்மாவின் இயல்பான அறிதலை உறுதி செய்யமுடிகிறது.

மேலும் தன்னை தன்வடிவிலும், பிற வஸ்துக்களை பிற வடிவமாகவும் புரிந்து கொள்ளுதல் தான் ஸ்வ-பர(தான்-பிற) பேதவிஞ்ஞானமாகும்-பிரித்தறியும் சிறப்பான அறிவாகும். தன்னையும் பிறவற்றையும் அறிதல் என்னவோ ஞானத்தின் காரியமாகும். மற்றும் தன்னில் 'இதுதான் என் ஸ்வரூபம்' என்று ஏற்றுக்கொள்ளுதல் - என்று உணர்தல் திருஷ்டியின் - நம்பிக்கையின் காரியமாகும். எப்போது திருஷ்டி அப்படி ஆகிவிடுகிறதோ அப்போது, ஞானம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்குமா என்ன? இப்போது திருஷ்டியின் வேலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது அதனால் கொஞ்ச நேரம் அறிவு ஓய்வெடுக்க வேண்டும் இல்லையா? அரே, ஞானம் அறியும் செயலை அப்போதும் செய்துகொண்டேதான் இருக்கும். ஒவ்வொரு குணத்திலும் இடைவிடாமல் செயல் நடந்துகொண்டேதான் இருக்கும். நான் என் ஸ்வரூபத்தில் இருக்கிறேன் என்ற நம்பிக்கை எப்போது வந்துவிடுகிறதோ அப்போது ஞானம் தன்னையும் அறிகிறது பிறவற்றையும் கூட அறிகிறது-தன்னை ஸ்வரூபத்திலிருந்து அறிகிறது, பிறவற்றை வேறு வடிவிலிருந்து அறிகிறது. திருஷ்டி திருஷ்டியின் காரியத்தை செய்கிறது ஞானம் ஞானத்தின் செயலை செய்கிறது.

பள்ளிக்கூடத்திற்கு நம் பிள்ளையை கூட்டி வரச்செல்லும்போது அங்கு பல பிள்ளைகள் நம் அறிவுக்கு வருகிறார்கள், அதில் நம் பிள்ளையும் கூட இருக்கிறது, அதுவும் நம் அறிவுக்கு வருகிறது, ஆனால் அவனை மட்டும் நம் பையன் என்று அறியவும்-நம்பவும் செய்கிறோம்.

இங்கு பாருங்கள், என் கையில் இந்த பேனா இருக்கிறது. உங்களுக்கு இது தெரிகிறதா? சொல்லுங்கள். 'எனக்கு பேனா தெரிகிறது' என்பது உங்கள் பதிலாக இருக்கிறது. நீங்கள் எனக்கு தெரிகிறது என்று சொல்வதின் அர்த்தம் நீங்கள் உங்களை பார்க்கிறீர்கள் என்பதாகும். உங்கள் பக்கத்தில் உள்ளவருக்கும் தெரிகிறது என்று நீங்கள் சொல்லவில்லை. இவ்வளவு எல்லாம் நம் ஞானத்தில் வருகிறது; அங்கு என்னவோ 'என்' ஞானத்தில் வருகிறது என தன்னைப் பற்றி உணர்வு அனைத்து உயிரினங்களுக்கும்

வருகிறது. இந்த ஞாயக்-அறிபவர் ஆபால் கோபால்(சாதாரண மனிதன் முதல் நல்ல ஞானிகள்வரை) எல்லோருக்கும் அவர்கள் ஞானத்தில் வருகிறது ஆனால் இதுதான் 'நான்' என்ற உணர்வு உண்டாவதில்லை. நாம் அனைவரும் தெரிந்துகொள்வதை தடை செய்வதின் மூலம் ஞானகுணத்தை அழிக்க விரும்புகிறோம், அது அழிவதில்லை ஆனால் நமது அபிப்பிராயத்தில் அப்படி எடுத்துக் கொள்கிறோம்.

நாம் உள்ளே வெளியே எதுவும் செய்யவேண்டியதில்லை. நாம் நமக்குள்ளேயேதான் இருக்கிறோம், எங்கும் வெளியே செல்லவில்லை. நான் என் வடிவில் இருக்கிறேன், ஞானம் மாத்திரமாகும் என்ற திருஷ்டி - உணர்வு வந்து விடுகிறது. பிறவற்றை அறிவதால் எந்தத் தீங்கும் ஆகப்போவதில்லை. இந்த எல்லாப் பொருள்களையும் அறியும் ஞானம் மூடப்பட்டுவிட்டால், நாம் ஆத்மாவில் செல்லமுடியும் என்று அஞ்ஞானி நம்புகிறார். இது பாதகமான நம்பிக்கையாகும். எது எல்லாவற்றையும் அறிகிறதோ அதுதான் நான் என்ற திருஷ்டி அதாவது நம்பிக்கை கொள்ளவேண்டும். அறிவுக்கும், நம்பிக்கைக்கும் அதாவது ஞானத்திற்கும் திருஷ்டிக்கும் உள்ள வித்தியாசம் தெரியாததால்தான் இந்த கேள்வி எழுகிறது.

இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது, அதில் கேள்வி கேட்பவர்களுக்கு மேலும் அதிக சிக்கலும் குழப்பமும் இருப்பது தெரிகிறது.

கேள்வி: இந்த திரஸநாளி வெளி உலக அமைப்பாகும், அதுபோல நம் உள்ளே கூட அமைப்பு இருக்கிறது என்று அவர் சொல்ல நினைக்கிறார் போலத் தெரிகிறது. வெளியில் திரஸநாளி இருப்பதுபோல, நம் உள்ளேயும் ஒரு கோடி நாடிகள் கொண்ட அமைப்பு அதாவது முதுகெலும்பு இருக்கிறதா?

பதில்: இந்த முதுகெலும்பு அதாவது மஜ்யைகயிறு(நாடி) உடலின் ஒரு அங்கமா அல்லது உங்களுடையதா(ஆத்மாவுடையதா)? உடலே நான் என்று நம்பிக்கொண்டு இருப்பதால் தான் இப்படிப்பட்ட குழப்பம் வந்துகொண்டு இருக்கிறது. ஏதேனும் நாடி அல்லது குண்டலினி விழித்தெழுதல் முதலான குழப்பங்களை விட்டுவிடுங்கள். நாம் நம் ஸ்வரூபத்தை நோக்குவதில் விழிப்படைந்து விட்டால், எது விழிப்படைய வேண்டுமோ அது விழிப்படைந்து விடும். உடலின் அமைப்பில் நாம் செய்ய ஒன்றுமில்லை. உடல் என்னவோ முற்றிலும் பிற பொருளாகும். இப்போது நம் அடையாளம் அதன்மூலம் ஆகிறது, உடலின் மூலம் உயிரை அறிகிறோம் என்கின்றனர், ஆனால் இது நம் உண்மையான அடையாளம் இல்லை.

நம் ஆத்ம பிரதேசம் எங்கிருக்கிறதோ அங்குதான் உடலின் பரமாணுக்கள் இருக்கின்றன. அதில்கூட அனந்த பரமாணுக்கள் வந்தும் போய்க்கொண்டும் இருக்கின்றன. நாம் கர்மத்தை பற்றி தெரிந்து கொண்டபோது அனந்த கர்ம

பரமாணுக்கள் ஒவ்வொரு சமயமும் பந்தமாகின்றன, மற்றும் வெளியேறுகின்றன என்பதை கற்றுக்கொண்டது போல, உடலிலும்கூட அனந்த பரமாணுக்கள் ஒவ்வொரு சமயமும் பந்தமாகின்றன, மற்றும் வெளியேறுகின்றன. நாம் என்னவோ கண்ணாடியில் உடலைப்பார்த்து எல்லாம் சரியாக இருப்பதாக நம்புகிறோம்.

எப்படி நாம் நம் ஊரில் ஓடும் நதியை 25 வருடங்களாக பார்த்துக்கொண்டு வருகிறோம். அது எப்போதும் அப்படியேதான் காணப்படுகிறது. ஆனால் நீங்கள் இப்போது சொல்லுங்கள் அரை மணி நேரமாக ஏதோ ஒரு இடத்தில் நதிக்கரையில் நிற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அரை மணி முன்னர் பார்த்த தண்ணீரா இப்போதும் அங்கே இருக்கிறது? இல்லை, அப்படியே இருப்பது போல தோன்றினாலும், முன்னர் பார்த்த தண்ணீர் ஓடிக்கொண்டே சில மைல் தூரம் சென்றிருக்கும், மேலிருந்து தண்ணீர் வெள்ள ஓட்ட வடிவில் இங்கு வந்திருக்கிறது. உடலிலும் கூட புதுப்புது அனந்த பரமாணுக்கள் வருகின்றன, பழைய பரமாணுவிலிருந்து அனந்த பரமாணுக்கள் சென்றுவிடுகின்றன, அப்படி என்றால் எதற்கு பிறந்தநாள் கொண்டாடுகிறீர்கள்? அதுகூட சாதா இல்லை 'ஹேப்பி பர்த் டே.' இங்கு என்னவோ அது அதுவாகவே இருப்பது ஸ்வயம் ஆத்மா மட்டுமே சாசுவதமாகும். ஆனால் உடலை தான் என்று நம்பிகொண்டு மகிழ்ச்சியுடன் அதற்கு அடிமையாவதால் தன் ஆத்மா பற்றிய நினைப்பு எங்கே வருகிறது?

கேள்வி: அனுப்பிரேக்ஷை என்றால் என்ன? ஆத்ம சிந்தனையை அதிகம் செய்யவேண்டுமா அல்லது அனுப்பிரேக்ஷையில் எந்த அனுப்பிரேக்ஷையை அதிகம் செய்யவேண்டும்? ஆத்ம சிந்தனைக்கும், அனுப்பிரேக்ஷைக்கும் எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும்?

பதில்: பாருங்கள், சாஸ்திர ஸ்வாத்யாயம் நிகழும்போது இதுபோன்ற கேள்வி எழுவதில்லை, ஆனால் கேள்வி எழும்போது நாம் சரியாக ஸ்வாத்யாயம் செய்தால் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் நம் எண்ணத்தில் வருகிறது. முதன்முதலில் ஆத்மாவின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறது என்பது பற்றி ஆம் சமயஸாரம் முதலான சாஸ்திரங்களின்படி உறுதி செய்யவேண்டும். கரணானுயோக சாஸ்திரங்களின்படிகூட ஆத்மா என்றால் என்ன? கர்மம் என்றால் என்ன? உறுதி செய்யவேண்டும்.

இங்கு நாம் க்ஷேத்திரம் பற்றி சர்ச்சை செய்கிறோம், மூவுலகம் பற்றி சர்ச்சை செய்கிறோம். இதில் எந்த திரவியம் எங்கு இருக்கிறது என்று அறிகிறோம். இதில் ஆத்மாவின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறது, எந்த பர்யாயத்தில் எந்த இடத்தில் இருக்கிறது, எங்கெங்கு எந்தெந்த மாதிரியான உடலை பெற்று அனாதி காலமாக சுற்றிக்கொண்டிருக்கிறது என்பன பற்றி எல்லாம் தெரிந்து கொள்கிறோம். ஆத்மா என்ன செய்யமுடியும், என்ன செய்யமுடியாது என்பது பற்றிய அறிவும் சுவாத்யாயத்தின் மூலம் வருகிறது. சுவாத்யாயத்தின் மூலம் நம்

குழப்பங்கள் விலகுகின்றன, நம் கேள்விகளுக்கு பதில் கிடைக்கின்றன, தத்துவங்கள் பற்றிய சரியான முடிவுக்கு வருவதின்மூலம் நாம் ஆத்ம தரிசனம் அதாவது சம்யக்த்துவம் பெறுகிறோம்.

ஒரு குறிப்பிட்ட சிந்தனை மூலம்தான் சம்யக்தரிசனம் பெறப்படுகிறது என்பதில்லை. ஆத்மா பற்றிய உறுதிப்பாடு நிகழவில்லை-தத்துவங்கள் பற்றிய உறுதிப்பாடு நிகழவில்லை என்றால், அதுவரை தத்துவ சிந்தனை-அதாவது வெவ்வேறு வழிகளில் சிந்தித்தல் உபயோகமாக இருக்கும். விகல்பங்களால்-பல்வேறு சிந்தனைகளால் சம்யக்தரிசனம் உண்டாவதில்லை, தத்துவ நிர்ணயம் ஆனபிறகு, அது பற்றிய விகல்பங்கள் நின்று போகின்றன, விகல்பங்கள்-எந்த குழப்பமான சிந்தனையும் இல்லாமல் போகும்போது சம்யக்த்துவம் உண்டாகிறது. மக்களுக்கு எந்த மாதிரி சிந்தனை செய்யவேண்டும்? அல்லது நிர்விகல்ப நிலையை எப்படி அடைவது? என்ற கேள்விதான் எழுகிறது. சந்தேகம் இருக்கும்வரை-ஆத்மா பற்றியும், தத்துவம் பற்றியும் சம்யக் நிர்ணயம்-சரியான உறுதிப்பாடு வராதவரை விகல்பங்கள்-சிந்தனைகள் வந்துகொண்டேதான் இருக்கும், சரியான உறுதிப்பாடு ஆனவுடன், விகல்பங்கள்-சிந்தனைகள் தானாகவே நின்று போகும். ஞானிகளுக்கு அவர்கள் ஆத்மாவில் நிலைத்தில்லாத காலத்தில் விகல்பங்கள் வரும். திரவ்யானுயோகத்தில் சொல்லப்பட்ட ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், நிமித்த நைமித்திக சம்பந்தம், உத்பாதவ்யயத்ருவம், ஐந்து சமவாயங்கள், கிரம்பத்தபர்யாயம் முதலான பல சித்தாந்தங்கள் பற்றி சரியான உறுதிப்பாடு வருதல் மிகவும் அவசியமாகும்.

கேள்வி: பிறகு ஏன் இந்த குழப்பம்? இந்த ஜெயின் பூகோளம் பற்றி ஏன் எங்களுக்கு எடுத்துச் சொல்கிறீர்கள்? இதனால் நமக்கு என்ன பயன் விளையப்போகிறது? நாம் நம்மைத்தான் பார்க்கவேண்டும் என்றால், இந்த பூகோள விஷயங்களால் என்ன பிரயோஜம்?

பதில்: அறிதல் ஆத்மாவின் இயல்பாகும் என்றால், சரியாக அறிதல் அதன் இயல்பா அல்லது அறியாமலே இருப்பது அதன் இயல்பா? முனிராஜர்கள் ஆத்மஞானிகளாக இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாக ஆத்மாவில் நிலை கொள்கிறார்கள், அவர்களுக்கு ஏராளமான அதீந்திரிய ஆனந்த அனுபவம் உண்டாகிறது. சுத்தோபயோகத்தை-சேதனத்தின் உபயோகத்தை அவர்களுடைய ஆத்மாவில் நிலைத்தலை முனிகளின் அடையாளம்-லட்சணம் என்று சொல்லப்படுகிறது. ஆனாலும்கூட அவர்களுக்கு ஆத்மாவில் நிலைத்தல் இல்லாதபோது, சுபோபயோக காலத்தில் அவர்களுக்கு தத்துவங்களின் இயல்பு, கர்மங்களின் நிலைகள், மூவுலக அமைப்பு முதலியவைகள் சம்பந்தமான சிந்தனை வருகிறது, அரஹந்தர் முதலானவர்கள் மேல் அவர்களுக்கு பக்தி உண்டாகிறது, பிரவசனவாத்ஸல்யம்-உபதேசங்களின்மேல் பாசம் உண்டாகிறது. இங்கு ஆச்சார்ய, உபாத்யாய, சாது ஆகியவர்களின் சொற்பொழிவுகளின் பக்கம்

ஈர்க்கப்படும் உணர்வை பிரவசனவாத்ஸல்யம் என்று சொல்கின்றனர். 'தவளா'வில் ஐந்தாம் குணஸ்தானத்தில் இருப்பவர், நான்காம் குணஸ்தானத்தில் இருப்பவர்களின் சொற்பொழிவுகளையும் பிரவசனம் என்று சொல்லப்பட்டுள்ளது. அவர்களின்மேல் இருக்கும் குணானுராகத்தை-பாராட்டை பிரவசனபக்தி அல்லது பிரவசனவாத்ஸல்யம் என்று சொல்கின்றனர். ஞானி உயிர் சுத்தோபயோகத்தில் நிலைக்க முடியாதபோது சுபோபயோகத்திற்கு வருகிறார்கள். அப்போது அவர்களுக்கு வெவ்வேறு விதமான சுபஉணர்வு சுலபமாகவே வருகிறது. எப்படிப்பட்ட சிந்தனை செய்யவேண்டும் என்ற கேள்வி அர்த்தமற்றதாகும். இந்த உணர்வுகள் விகல்பங்கள் நம் இச்சையால் வருவதில்லை. உங்களுடைய கேள்வி சிந்தித்து தேர்வு செய்து எந்த உணர்வு கொள்ள வேண்டும்? அதாவது எந்த உணர்வு கொள்ள வேண்டியது மற்றும் எந்த உணர்வை கொள்ளக்கூடாது?

இப்படிப்பட்ட உணர்வை கொள்ள வேண்டியதில்லை. வரத்தகுதியான உணர்வே வருகிறது மேலும் வரத்தகுதியான உணர்வு வரவே செய்கிறது. நான் இராகம் முதலான உணர்வுகளிலிருந்து வேறானவன் என்றும் இராகம்கூட என்னால் பார்க்கப்படும் ஞேயமே என்றும், நான் அதை அறிபவன் மட்டுமே என்றும், அதை நான் செய்பவன் இல்லை என்றும், அதற்கு நான் உடையவன்(ஸ்வாமி) இல்லை என்றும் உறுதி செய்ய வேண்டும். நாம் இந்த கேள்வி பற்றி அதிகமாக சர்ச்சை செய்தோம் என்றாலும்கூட எதுவரை தத்துவ நிர்ணயம் ஆகவில்லையோ அதுவரை முகாம்களின்(சிவீர்கள்) மூலம் இந்த கேள்விகளுக்கு சமாதானமும், குழப்பங்களிலிருந்து விடுதலையும் பெறுவது தகுதியானதாகும் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த முகாம்களில் சமூக வடிவில் நான் கேள்விகள் சம்பந்தமான சர்ச்சை செய்கிறேன் ஏனெனில் தினமும் 6 மணி நேரம் பேசவேண்டியிருக்கிறது ஆகையால் ஒன்றுக்கொன்று நேரடியாக ஒவ்வொருவரிடமும் சர்ச்சை செய்ய சாமர்த்தியம் இல்லாத நிலையில் இருக்கிறேன்.

அக்ருத்திம ஜினாலய பிம்பங்களில் இரத்தினங்கள் பதிக்கப்பட்டு (அலங்காரம் செய்யப்பட்டு) இருக்கின்றனவா? என்ற கேள்வி மீண்டும் வந்திருக்கிறது. அவைகள் முழுக்க முழுக்க இரத்தினங்களால் ஆனவை, அது யாராலும் செய்யப்பட்டதில்லை, அவைகளில் இரத்தினங்கள் பதிக்கப்பட்டு இல்லை. பதிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா என்ன? மோதிரத்தில் வைரம் பொருத்தப்பட்டிருந்தால் அதை வைரம் பதித்தது என்று சொல்லலாம். இதைப்பற்றி நாம் விரிவாகவே சர்ச்சை செய்திருக்கிறோம்.

நாம் பகவான் மூர்த்தியை பல பொருள்கள் மூலம் அலங்காரம் செய்கிறோம், மூர்த்திகளை பூக்களால், இரத்தினம், ஆடைகள் முதலானவைகளால் அழகு படுத்துகிறோம், நம் திருப்திக்காக அவருடைய கால்களில் சந்தனம்

முதலியவைகளால் பொட்டு வைக்கிறோம் என்றால் அதற்கு ஏன் மறுப்பு சொல்கிறீர்கள்? என்று சிலர் கேட்டுள்ளீர்கள்.

மறுப்பு எந்த நபருக்கும் சொல்லப்படுவதில்லை, விபரீத நம்பிக்கைக்குதான் மறுப்பு சொல்லப்படுகிறது. நாம் வீதராகி பகவானை சராகியாக நம்பிக்கொண்டு இருக்கிறோம். நாம் இராகமுடையவர்கள், ஆகையால் நம் நம்பிக்கையில் நாம் வீதராகி பகவானின் ஸ்வரூபத்தை கெடுக்கிறோம், அதாவது பகவான் பற்றிய நம் நம்பிக்கை தவறானதாக இருக்கிறது. உண்மையான தேவ, குரு, தர்மத்தின் ஸ்வரூபத்தை நாம் உறுதி செய்ய வேண்டும், அவைகளைப்பற்றிய நம் நம்பிக்கை சரியா சரிஇல்லையா என்று பார்க்க வேண்டும், இந்த வெப்பமானி மூலம் முழு உலகத்தையும் சரிபார்க்க நாம் விரும்பக்கூடாது. இந்த முனிவர் உண்மையான முனிவரா இல்லையா என்ற சர்ச்சையை விட்டுவிட்டு, உண்மையான முனிவரின் இயல்பை, உண்மையான பகவானின் இயல்பை உறுதி செய்வதில் நம் கவனம் செல்ல வேண்டும்.

நாம் முனியானால் அப்போது அதைச் செய்யலாம், இப்போதே ஏன் செய்ய வேண்டும்?, எங்களை இப்போது சிராகவர்களாகவே இருக்க விடுங்கள் என்று சிலர் சொல்கின்றனர். அது வேலைக்காகாது. மோக்ஷமார்க்கத்தை நாம் வெளிப்படுத்த வேண்டுமென்றால், மோக்ஷமார்க்கம் நான்காம் குணஸ்தானத்திலிருந்து துவங்குகிறது, அங்கிருந்து மோக்ஷ மார்க்கத்தையும் மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும் அறிவது அவசியமாகும். அந்த நிலையில் உள்ள உயிர்களின் அந்தரங்க-பஹிரங்க(உள்-வெளி) இயல்பு எப்படி இருக்கிறது என்பது பற்றிய ஞானம், மற்றும் உறுதி ஏற்பட்டால்தான் மோக்ஷமார்க்கம் நம்மில் தோன்றும்.

உண்மையான தேவன் முதலானவைகள் பற்றி உறுதி இல்லையானால் குலவழக்கப்படி மட்டுமே யாராவது உண்மையான தேவருக்கு புஜை, பக்தி, வந்தனை செய்வாரானாலும்கூட சாஸ்திரத்தில் இதை கிரஹீத மித்யாத்துவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மிகவும் கடினமான சொல்தான்! எதுவரை உயிர் வீதராகத்தையும், சர்வக்ஞத்துவத் தன்மையையும் தெரிந்து அவைகளை உறுதி செய்யவில்லையோ அதுவரை அதன் நம்பிக்கையை குதேவ, குகுரு, குதர்ம நம்பிக்கையே என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது.

இன்னுமொரு கேள்வி தேவகதி தேவர்கள் பகவானுக்கு பூஜை எவ்விதமாக செய்கின்றனர்? என்பதாகும். இதைப்பற்றிய விளக்கம் அக்ருத்திம சைத்யாலயங்கள் பற்றிய வர்ணனையில் பார்க்கவிருக்கிறோம். இப்போது நாம் இங்கு பார்க்க வேண்டிய விஷயத்தைப் பார்க்கலாம்.

விமானவாசி தேவர்கள் பற்றிய சர்ச்சையில் நாம் விமானங்களின் பெயர்களைப் பார்த்தோம். எப்படி நரகங்களில் படலங்கள் இருக்கின்றனவோ அதுபோலவே சுவர்க்கத்திலும் படலங்கள் இருக்கின்றன. வெவ்வெறு மேற்பரப்பில், மாடிகள் போல, வெவ்வேறு உயரத்தில் விமானங்கள் உள்ளன. சௌதர்ம-ஈசான ஜோடி விமானத்தில் சௌதர்ம சுவர்க்கத்தில் 32 லட்ச விமானங்களும், ஈசான சுவர்க்கத்தில் 28 லட்ச விமானங்களும் உள்ளன. இவைகள் எல்லாம் முப்பத்தோரு படலங்களில் பரவி இருக்கின்றன. நீங்கள் படம் 14-ஐ பார்க்கவும். இதில் சுவர்க்கங்களின் பெயர்களும் படலங்களின் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளின் எண்ணிக்கை கீழிருந்து மேலாக கொடுக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு சுவர்க்கங்கள் கீழே உள்ளன, மற்ற சுவர்க்கங்கள் கிரமமாக மேலே-மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறு நரகத்தில் ஒவ்வொரு படலத்திலும் நடுவில் இருப்பதை இந்தரக் பிலம் என்று சொன்னோமோ அதேபோல சுவர்க்கத்தில் உள்ள விமானங்களில்கூட ஒவ்வொரு படலத்திலும் நடுவில் இருப்பதை இந்தரக் விமானம் என்று சொல்கின்றனர். நான்கு திசைகளிலும் வரிசையாக விமானங்கள் அமைந்துள்ளன, அவைகளை ஸ்ரேணிபந்த விமானங்கள் என்று சொல்கின்றனர். அவைகளுக்கு இடையில் பூக்கள் சிதறியதுபோல உள்ள விமானங்களை பிரகீரணக் விமானங்கள் என்று சொல்கின்றனர். ஒவ்வொரு படலத்தின் இந்தரக் விமானம், கிழக்கு-தெற்கு-மேற்கு இந்த மூன்று திசைகளின் உள் உள்ள ஸ்ரேணிபந்த விமானங்கள் மற்றும் அவைகளின் இடையில் உள்ள பிரகீரணக் விமானங்கள் எல்லாம் தக்ஷிணேந்திரனின் கட்டளையில் அவருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றன. முதல் சுவர்க்கத்தின் முதல் படலம் எல்லாவற்றிற்கும் கீழே உள்ளது, அங்கிருந்து மேல்பக்கமாக எண்ணவேண்டும்.

இந்த முதல் படலத்தின் இந்தரக் விமானத்தின் பெயர் ருதுஇந்தரக். இதன் விட்டம் 45 லட்சம் யோஜனை கொண்டதாகும். இப்படி 45 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்டவைகள் எவை தெரியுமா? முதல் நரகத்தின் முதல் படலத்தின் சீமந்தகம் பெயர் கொண்ட இந்தரக் பிலம், நடு உலகின் மனிதர்கள் வாழும் இரண்டரை தீபம், சித்தசிலை கூட 45 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்டவைகளாகும்.

சுவர்க்கங்களின் படலங்களில் திசைகளில் மட்டுமே ஸ்ரேணிபந்த விமானங்கள் உள்ளன, விதிசைகளில் விமானங்கள் இல்லை. நரகங்களில் படலங்களில் திசைகளிலும் விதிசைகளிலும் ஸ்ரேணிபந்த பிலங்கள் உள்ளன என்று நாம் பார்த்தோம். நரகத்தின் முதல் படலத்தில் நான்கு திசைகள் ஒவ்வொன்றிலும் 49-49 மற்றும் நான்கு விதிசைகளில் ஒவ்வொன்றிலும் 48-48 ஸ்ரேணிபந்த பிலங்கள் உள்ளன. சுவர்க்கத்தின்

முதல் படலத்தில் நான்கு திசைகள் ஒவ்வொன்றிலும் 62-62 ஸ்ரேணிபந்த விமானங்கள் உள்ளன. விமானங்களின் எண்ணிக்கை அடுத்தடுத்த படலங்களில் 1- 1 ஆக குறைந்து கொண்டே போகின்றன.

ஒவ்வொரு படலத்திலும் தக்ஷணேந்திரனிடம் விமானங்களின் எண்ணிக்கை அதிகமாகும் ஏனெனில் கிழக்கு மற்றும் மேற்கில் உள்ள ஸ்ரேணிபந்தங்கள் அவருடைய ஆளுகையில் உள்ளன. படம் 14-ல் சௌதர்மனின் விமானம் சிகப்பு நிறத்திலும் ஈசான விமானங்கள் நீல நிறத்திலும் காட்டப்பட்டுள்ளன. இதனால் இந்த விஷயத்தை நம்மால் சரியாக புரிந்து கொள்ள முடிகிறது. இந்த படத்தின் ஆதாரத்தில் நாம் ஒவ்வொரு சுவர்க்கத்தின் படலங்களின் எண்ணிக்கையை பார்க்கலாம்.

சௌதர்ம-ஈசான சுவர்க்கத்தில் 31 படலங்களும், சனத்குமார-மாஹேந்திரத்தில் 7 படலங்களும், பிரம்ம-பிரம்மோத்தரத்தில் 4 படலங்களும், லாந்தவ-காபிஷ்டவில் 2 படலங்களும், சுக்ர-மஹாசுக்ரவில் 1 படலமும், சதார-சஹஸ்ராரவில் 1 படலமும் உள்ளன. ஆனத-பிரானதவில் 3 படலமும், ஆரண-அச்சுதவில் 3 படலங்களும் என மொத்தம் 6 படலங்கள் உள்ளன. நவகிரைவேயகத்தில் ஒவ்வொரு கிரைவேயகத்திலும் 1-1 படலம் என மொத்தம் 9 படலங்கள் உள்ளன. அனுதிசையில் ஒரு படலமும் அனூத்தரத்தில் ஒரு படலமும் உள்ளன. இவ்வாறு மொத்த படலங்களின் எண்ணிக்கை 63 ஆகும்.

இப்போது இந்த சுவர்க்கங்களின் விமானங்களின் எண்ணிக்கையை பார்க்கலாம். சௌதர்ம கல்பத்தில் 32 லட்சம், ஈசான கல்பத்தில் 28 லட்சம் என இந்த ஜோடியில் 60 லட்சம் விமானங்கள் உள்ளன. சனத்குமார கல்பத்தில் 12 லட்சம், மாஹேந்திர கல்பத்தில் 8 லட்சம் என இந்த ஜோடியில் 20 லட்சம் விமானங்கள் உள்ளன. பிரம்ம-பிரம்மோத்தர கல்ப ஜோடியில் 4 லட்சம் விமானங்கள் உள்ளன. லாந்தவ-காபிஷ்ட கல்பஜோடியில் 50,000 விமானங்கள் உள்ளன. சுக்ர-மஹாசுக்ர கல்பஜோடியில் 40,000 விமானங்கள் உள்ளன. சதார-சஹஸ்ரார கல்பஜோடியில் 6,000 விமானங்கள் உள்ளன.

ஆனத, பிரானத, ஆரன, அச்சுத நான்கு கல்பங்களிலும் 700 விமானங்கள் உள்ளன. கிரைவேயகத்தில் 3-3 குழுக்களாக படலங்கள் உள்ளதைப் பார்த்தோம். கீழ் மூன்று கிரைவேயகங்களில் 111 விமானங்களும், மத்திய மூன்று கிரைவேகயங்களில் 107 விமானங்களும், மேல் மூன்று கிரைவேகயங்களில் 91 விமானங்களும் உள்ளன. அனுதிசையில் 9 விமானங்கள் உள்ளன. அங்கு மத்தியில் ஒரு இந்திரக விமானமும், நான்கு திசைகளில் 1-1 ஸ்ரேணிபந்த விமானங்களும், நான்கு விதிசைளில் 1-1

பிரகீரணக விமானங்களும் உள்ளன. அனூத்தரத்தில் 5 விமானங்கள் உள்ளன. அதில் மத்தியில் உள்ள இந்திரக விமானத்தின் பெயர் சர்வார்த்தசித்தி யாகும், கிழக்கு திசையில் விஜய பெயர்கொண்ட விமானமும், தெற்கில் வைஜெயந்த பெயர்கொண்ட விமானமும், மேற்கில் ஜெயந்த பெயர்கொண்ட விமானமும், வடக்கில் அபராஜித பெயர்கொண்ட விமானமும் உள்ளது. ஒவ்வொரு விமானத்திலும் அசங்க்யாத-அசங்க்யாத தேவர்கள் வாழ்கின்றனர். ஸர்வார்த்தசித்தி பெயர் கொண்ட அனூத்தர விமானங்களில் மட்டும் சங்க்யாத தேவர்கள் வாழ்கின்றனர்.

இந்த விமானங்களின் மொத்த எண்ணிக்கை 84 லட்சத்து 57 ஆயிரத்து 23 ஆகும். நாம் பூஜையில் மேலுலக அக்ருத்ரிம் ஜினசைத்யாலயங்களுக்கு அர்க்கியம் வைக்கும்போது இந்த எண்ணிக்கையை சொல்லி வைக்கிறோம். அங்குள்ள ஒவ்வொரு விமானத்திலும் ஒவ்வொரு அக்ருத்திம் ஜினசைத்யாலம் இருக்கிறது. அந்த ஒவ்வொன்றிலும் 108-108 அக்ருத்திம் ஜினபிம்பங்கள் உள்ளன, அவைகளுக்கு நாம் பரோக்ஷமாக வணங்குகிறோம். அங்கு எப்போதுமே ஜினதர்மம் நடக்கிறது. அங்கு பிறந்த உடனே அந்த தேவரை மற்ற தேவர்கள் வரவேற்கின்றனர், வாத்தியங்களை வாசிக்கின்றனர் , அவரை தூய்மை செய்து ஆபரணங்களால் அலங்கரித்து அவர்கடளுன் அவரை அழைத்து கொண்டுபோய் அபிஷேகமும் பூஜையும் செய்கின்றனர். சம்யக்திருஷ்டியாக இருந்தால் அவர்களே அக்ருத்திம் சைத்யாலயத்திற்கு சென்று வணங்குவர். அவர் மித்யாதிருஷ்டியாக இருந்தால் மற்ற தேவர்கள் உபதேசதின் மூலம் அக்ருத்ரிம் சைத்யாலயத்திற்கு சென்று வணங்குவர்.

இங்கு கூட ஜெயின குலத்தில் பிறந்த குழந்தையை 40 நாட்களுக்குப் பிறகு அம்மாவுடன் ஜினாலயத்திற்கு கூட்டிச் செல்கிறோம், அந்த குழந்தையின் காதில் நமோகார மந்திரத்தை சொல்கிறோம். குழந்தை எட்டு வயது வரும்வரை அந்த குழந்தை எட்டு மூலகுணங்களை கடைபிடிக்க வைப்பது (தேன், கள், மாமிசம், ஐந்து உதும்பரப்பழங்கள் இவைகளை உணவாக கொடுக்காமல் இருப்பது) அம்மாவின் கடமையாகும். குழந்தையை தினமும் ஜினாலயத்திற்கு உடன் கூட்டிக் கொண்டு போவதும், நமோக்கார மந்திரம் சொல்லிக்கொடுப்பதும், சாப்பிடக்கூடாதவைகளை சாப்பிடாமல் இருக்க வைப்பதும், ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்களை பற்றி கற்பிப்பது, நல்லொழுக்கத்துடன் வாழும்படி வழிகாட்டுதல் இவைகள் எல்லாம்கூட அம்மாவின் மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களின் பொறுப்பாகும். எட்டு வருடம் முடிந்ததும் மனித உயிர்களுக்கு சம்யக்தரிசனத்தை பெறும் சாமர்த்தியம் வந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல, ஆணாக இருந்தால் முனி திக்ஷைகூட எடுக்க முடியும், கேவலஞானமும் பெறமுடியும்.

விதேகக்ஷேத்திரத்தில் சமவசரத்தில் வீற்றுள்ள எட்டாம் தீர்த்தங்கரர் ஸ்ரீ அனந்தவீர்ய பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

9.வைமானிக இந்திரன்

சர்வக்ஞ பகவானின் உபதேசத்தின்படி திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் நாம் மூவுலக வர்ணனையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். கீழ்உலக வர்ணனையை விரிவாக பார்த்த பிறகு நாம் இப்போது மேல்உலகத்தைப் பற்றி பார்க்கவிருக்கிறோம். லோகாகாசத்தின் மத்தியிலிருந்து 7 ரஜ்ஜுவுக்கு மேல்பகுதி வரை மேல்உலகம் இருக்கிறது. இதில் ஒரு லட்சம் யோஜனை உயரமுடைய மத்ய லோகமும்-நடு உலகமும் அடங்கியுள்ளது. கீழ் உலகத்தில் பூமிகள் இருக்கின்றன. அது உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை பரவியிருக்கிறது. ஆனால் சுவர்க்கங்களில் பூமியின் துண்டுகள் பரவி இருக்கின்றன, ஆனால் அவைகளை விமானங்கள் என்று சொல்கிறோம். விமானங்களில் வாழும் தேவர்களை வைமானிகர்கள் என்று சொல்கின்றனர்.

படம் 14-ன் ஆதாரத்தில் நாம் இந்த சுவர்க்கங்களின் படலங்கள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கைகளை பார்த்தோம். ஒவ்வொரு படலத்திலும் உள்ள விமானங்களின் எண்ணிக்கை மேலே போகப்போக குறைந்துகொண்டே போகிறது, அதேபோல இந்திரக் விமானத்தின் விஸ்தீரணமும் குறைந்து கொண்டே போகிறது. முதல் படலத்தில் 45 லட்சம் யோஜனை விஸ்தீரணமுடைய இரந்திரக் விமானத்திலிருந்து குறைந்து-குறைந்து கடைசி அனூத்தர விமானத்தின் சர்வார்த்தசித்தி என்ற பெயர்கொண்ட இந்திரக் விமானத்தின் விஸ்தீரணம் ஒரு லட்சம் யோஜனையாக இருக்கிறது. நாம் எங்கு எவ்வளவு விமானங்கள் இருக்கின்றன என்பது பற்றி முன் பாடத்தில பார்த்தோம், ஆனால் எங்கு எத்தனை இந்திரர்கள் இருக்கிறார்கள் என்று இன்னும் பார்க்க வேண்டியுள்ளது.

முதல் ஜோடியில் தெற்கில் சௌதர்ம இந்திரனும் வடக்கில் ஈசான இந்திரனும் என இரண்டு இந்திரர்கள் உள்ளனர். அவர்களின் பெயராலேயே அந்த சுவர்க்கங்களின் பெயரும் இருக்கிறது. இரண்டாவது ஜோடியில் கூட சனத்குமாரன் மற்றும் மாஹேந்திரன் என்ற பெயர்கொண்ட இரண்டு இந்திரர்கள் உள்ளனர்.

பிரம்ம-பிரம்மோத்தர பெயர்கொண்ட மூன்றாவது ஜோடியில் ஒரு இந்திரனே இருக்கிறார், அவருடைய பெயர் பிரம்ம இந்திரனாவார். பிரம்ம தெற்கில் உள்ள விமானமாகும். பிரம்மோத்தர வடக்கில் உள்ள விமானமாகும். இரண்டு பக்க விமானங்களிலும் ஒரே இந்திரனின் கட்டளையின் கீழ் உள்ளன, இங்கு தனித்தனியாக இரண்டு இந்திரர்கள் இல்லை.

மேலே லாந்தவ-காபிஷ்ட விமானங்களுக்கும் லாந்தவ இந்திரன் என ஒரு இந்திரன் மட்டுமே இருக்கிறார். அதேபோல சுக்ர-மஹாசுக்ர

விமானங்களுக்குக்கூட மஹாசுக்ர இந்திரன் என ஒரு இந்திரன் மட்டுமே இருக்கிறார். சதார-சஹஸ்ரா விமானங்களிலுக்கும்கூட சஹஸ்ர இந்திரன் என ஒரு இந்திரன் மட்டுமே இருக்கிறார். ஆனால் ஏழாவது ஜோடியில் ஆனத-பிராணதவில் இரண்டு இந்திரர்கள் உள்ளனர். ஒருவர் ஆனத இந்திரர் மற்றுறொருவர் பிரானத இந்திரர். எட்டாவது ஆரண-அச்சுத ஜோடியில் கூட இரண்டு இந்திரர்கள் உள்ளனர். ஒருவர் ஆரண இந்திரர் மற்றுறொருவர் அச்சுத இந்திரர்.

இவ்வாறு முதல் இரண்டு ஜோடிகளில் 2-2 என 4 இந்திரர்கள், அதற்கு மேல் நான்கு ஜோடிகளில் 1-1 என 4 இந்திரர்கள் அதற்கு மேல் 7-வது-8-வது ஜோடியில் ஒவ்வொன்றிலும் 2-2 என 4 இந்திரர்கள் உள்ளனர். இவ்வாறு 16 சுவர்க்கங்களில் மொத்தம் 12 இந்திரர்கள் உள்ளனர். எத்தனை இந்திரர்கள் உள்ளனரோ அத்தனை பிரதீந்திரர்கள் உள்ளனர், அதாவது 12 இந்திரர்கள் 12 பிரதீந்திரர்கள் உள்ளனர்.

கேள்வி: இந்திரக் விமானம் மத்தியில் இருப்பதால் அது தெற்கு இந்திரனுடையதா அல்லது வடக்கு இந்திரனுடையதா?

பதில்: இந்திரக் விமானம் தெற்கு இந்திரனுடைய ஆதிக்கத்தில்தான் உள்ளது, வடக்கு இந்திரனுடைய ஆதிக்கத்தில் இல்லை. அப்படிப்பட்ட எளிமையான ஏற்பாடுதான் அங்கு உள்ளது. அதனால் எந்த பாரபட்சமும் இல்லை.

கேள்வி: ஒவ்வொரு விமானத்திலும் அக்ருத்திம-இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. இதில் உள்ள பகவானின் பிம்பங்களை யார் பிரதிஷ்டை செய்தது? நாம் பிரதிஷ்டை செய்யப்படாத பிம்பங்கள் பூஜிக்க உகந்ததில்லை என்று சொல்லப்படுகிறது அல்லவா.

பதில்: இந்த பிம்பங்கள் அனாதி காலமாக உள்ளவை. அனாதி காலமாகவே இந்திரர்கள் முதலான எல்லா தேவர்களும் இந்த பிம்பங்களுக்கு பூஜை செய்து கொண்டு வருகின்றனர். இந்த அக்ருத்திம ஜினபிம்பங்கள் நிச்சயமாக வணங்கவும், பூஜிக்கவும் தக்கதாகும்.

இப்போது இந்த இந்திரர்கள் எங்கே வாழ்கிறார்கள்? என்று பார்க்கலாம். ஏனென்றால் சௌதர்ம இந்திரனுக்கு 32 லட்சம் விமானங்கள் உள்ளன என்றால் அவைகளில் எந்த தளத்தில் எந்த விமானத்தில் சௌதர்ம இந்திரன் வாழ்கிறர்?

சௌதர்ம இந்திரன் 31-வது படலத்தில் வாழ்கிறார். 31-வது படலத்தில் பிரப என்ற பெயர் கொண்ட இந்திரக் விமானம் உள்ளது. அதில் தெற்கு திசையில் பதினெட்டாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் சௌதர்ம இந்திரன்

வாழ்கிறார். ஈசான இந்திரன் அதே 31-வது படலத்தில் வடக்கு திசையில் பதினெட்டாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் வாழ்கிறார்.

சனத்குமார மற்றும் மாஹேந்திர சுவர்க்கத்தில் மொத்தம் ஏழு படலங்கள் உள்ளன, ஏழாவது படலத்தின் மத்தியில் சக்ரேந்திர விமானம் இருக்கிறது. அதற்கு தெற்கில் 16-வது ஸ்ரேணிபந்த விமானத்தில் சனத்குமார இந்திரனும், வடக்கில் 16-வது ஸ்ரேணிபந்த விமானத்தில் மாஹேந்திர இந்திரனும் வாழ்கின்றனர்.

பிரம்ம-பிரம்மோத்தர சுவர்க்கத்தில் ஒரே இந்திரர்தான் இருக்கிறார். இந்த மூன்றாவது ஜொடியில் நான்கு படலங்கள் உள்ளன. நான்காவது படலத்தில் பிரம்மோத்தர இந்திரகம் இருக்கிறது. அதற்கு தெற்கில் பதினான்காவது ஸ்ரேணிபந்த விமானத்தில் பிரம்ம இந்திரர் வாழ்கிறார்.

லாந்தவ ஜோடியில் இரண்டு படல்கள் உள்ளன, இங்கும் ஒரே இந்திரர்தான் இருக்கிறார். இரண்டாவது படலத்தில் லாந்தவ இந்திரகம் இருக்கிறது. அதற்கு தெற்கில் பன்னிரண்டாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் லாந்தவ இந்திரர் வாழ்கிறார்.

அதற்கு மேலே சுக்ர ஜோடியில் ஒரே படலம்தான் இருக்கிறது. இங்குள்ள இந்திரக் விமானத்தின் பெயர் மாஹாசுக்ர இந்திரகமாகும், இந்திரனின் பெயரும் மாஹாசுக்ர இந்திரனாகும். இது வடக்கு திசையில் பத்தாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் மாஹாசுக்ர இந்திரன் வாழ்கிறார்.

சதார-ஸஹஸ்ரார ஜோடியில்கூட ஒரே படலம்தான் இருக்கிறது. இங்குள்ள இந்திரக் விமானத்தின் பெயர் ஸஹஸ்ரார இந்திரக்கமாகும். இது வடக்கு திசையில் எட்டவது ஸ்ரேணிபந்த விமானத்தில் ஸஹஸ்ரார இந்திர வாழ்கிறார்.

பார்த்தீர்களா! பிரம்ம-பிரம்மோத்தரத்தின் பிரம்ம இந்திரனும், லாந்தவ-காபிஷ்டவின் லாந்தவ இந்திரனும் தெற்கில் வசிக்கின்றனர், ஆனால் அவர்களுடைய ஆதிக்கம் தெற்கு-வடக்கு எல்லா இடத்திலும் நடக்கிறது. சுக்ர-மஹாசுக்ர சுவர்க்கத்தின் மஹாசுக்ர இந்திரனும், சதார-ஸஹஸ்ரார சுவர்க்கத்தின் ஸஹஸ்ரா இந்திரனும் வடக்கு இந்திரர்களாவர், அவர்கள் வடக்கில் வசித்தாலும் அவர்களுடைய ஆதிக்கம் தெற்கு-வடக்கு எல்லா இடத்திலும் நடக்கிறது.

சில புத்தகங்களில் சதார ஜோடியில் சதார இந்திரக் மற்றும் சதார இந்திரன் என்றும் சுக்ர ஜோடியில் சுக்ர இந்திரக் மற்றும் சுக்ர இந்திரன் என்று பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனத-பிராணத ஜோடியில் இரண்டு இந்திரர்கள் உள்ளனர். தெற்கில் ஆனத இந்திரனும், வடக்கே பிராணத இந்திரனும் உள்ளனர். அங்குள்ள ஆனத இந்திரக்கத்தின் தெற்கில் ஆறாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் ஆனத இந்திரரும், வடக்கில் ஆறாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் பிராணத இந்திரரும் வாழ்கிறார்கள்.

ஆரண-அச்சுத ஜோடியில் கூட இரண்டு இந்திரர்கள் உள்ளனர். தெற்கில் ஆரண இந்திரனும், வடக்கே அச்சுத இந்திரனும் உள்ளனர். அங்குள்ள ஆரண இந்திரகத்தின் தெற்கில் ஆறாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் ஆரண இந்திரரும் வடக்கில் ஆறாவது ஸ்ரேணிபந்த விமானத்தில் அச்சுத இந்திரரும் வாழ்கின்றனர்.

இந்த இந்திரர்களின் விமானங்கள் எங்கெங்கே உள்ளன என்பதை நாம் பார்த்தோம். ஆனால் அவர்கள் எங்கே வசிக்கிறார்கள்? அவர்களுக்கு நகரங்கள் உள்ளன. நாம் வியந்தர இந்திரர்களின் நகரங்கள் பற்றி சர்ச்சை செய்தோம், அதேபோல கல்பவாசி இந்திரர்களுக்குக்கூட பெரிய-பெரிய நகரங்கள் உள்ளன. சமசதுர வடிவில் நான்கு மூலைகள் கொண்டதாக இந்த நகரங்கள் உள்ளன. அவைகளின் சௌதர்ம இந்திரனின் நகரம் 84,000 யோஜனை விஸ்தீரணமாகும். ஈசான இந்திரனின் நகரம் 80,000 யோஜனை விஸ்தீரணமாகும். சனத்குமார இந்திரனின் நகரம் 72,000 யோஜனை விஸ்தீரணமாகும். மாஹேந்திர இந்திரனின் நகரம் 70,000 யோஜனை விஸ்தீரணமாகும். பிரம்ம இந்திரனின் நகரம் 60,000 யோஜனை விஸ்தீரணமாகும். லாந்தவ ஜோடியில் நகரம் 50,000 யோஜனை விஸ்தீரணமாகும். சுக்ரஜோடியில் நகரம் 40,000 யோஜனை விஸ்தீரணமாகும். சதார ஜோடியில் நகரம் 30,000 யோஜனை விஸ்தீரணமாகும். மேலே உள்ள நான்கு சுவர்க்க நகரங்களின் விஸ்தீரணம் 20,000-20,000 யோஜனையாகும்.

இந்த நகரங்களுக்கு நான்கு பக்கமும் ஐந்து மதில்கள் உள்ளன. இங்கு மதில்கள் உள்ளது போலவே கதவுகள் கொண்ட மதில்கள் உள்ளன. ஒரு மதிலுக்கு பிறகு அதிக இடைவெளி விட்டு இரண்டாவது மதில், பிறகு இடைவெளி, அடுத்து மூன்றாவது மதில் இவ்வாறு ஐந்து மதில்கள் இருக்கின்றன. இவைகளுக்கு இடையில் இந்திரனின் நகரம் இருக்கிறது. நாலாபக்கமும் முதல் மதில் இருக்கிறது. முதல் மதிலுக்கும் இரண்டாவது மதிலுக்கும் இடையில் 13 லட்சம் யோஜனை இடைவெளி இருக்கிறது, அதில் சேனைத் தலைவர்களும் மெய்க்காப்பாளர்களும் வாழும் குடியிருப்புகள் உள்ளன. இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிலின் இடையில் 63 லட்சம் யோஜனை கொண்ட இரண்டாவது இடைவெளி உள்ளது, அங்கு மூன்று ஜாதி பாரிஷத தேவர்கள் வாழ்கின்றனர். மூன்றாவது மற்றும் நான்காவது மதிலின்

இடையில் 65 லட்சம் யோஜனை கொண்ட மூன்றாவது இடைவெளி உள்ளது, அங்கு ஸாமானிக தேவர்கள் வாழ்கின்றனர். நான்காவது மற்றும் ஐந்தாவது மதிலியின் இடையில் 84 லட்சம் யோஜனை கொண்ட மூன்றாவது இடைவெளி உள்ளது, அங்கு ஆபியோக்ய மற்றும் கில்விஷிக தேவர்கள் வாழ்கின்றனர்.

ஐந்து மதில்களுக்கும் வெளியில் 50,000 யோஜனை சென்ற பிறகு நந்தவனங்கள் உள்ளன. ஆனந்தத்தை கொடுப்பதாகையால் இதை பொதுவாக நந்தவனம் என்று சொல்கின்றனர், ஆனால் அவைகள் வெவ்வெறாக உள்ளன. கிழக்கு திசையில் அசோக வனமும், தெற்கில் ஏழுஸ்வர வனமும், மேற்கில் சம்பங்க வனமும் மற்றும் வடக்கில் மாந்தோப்கள் நிறைந்த வனமும் உள்ளன. ஒவ்வொரு வனமும் 1,000 யோஜனை நீளமும் 500 யோஜனை அகலமும் கொண்டதாக உள்ளன. இந்த ஒவ்வொரு வனத்தின் மத்தியில் ஒவ்வொரு சைத்ய விருக்ஷம் கணப்படுகின்றன. இந்த சைத்ய விருக்ஷத்தின் நான்கு பக்கங்களிலும் பத்மாஸன நிலையில் ஜினபிரதிமைகள் உள்ளன.

வனங்களுக்கு வெளியே பல யோஜனைகளுக்குப் பிறகு கிழக்கு முதலான திசைகளில் லோகபாலர்களின் நகரங்கள் உள்ளன. இந்த நகரங்களுக்கு அக்னி மூலை முதலான குறுக்கு திசைகளில் நான்கு கன்னி தேவாங்கனைகளின் நகரங்கள் உள்ளன.

இந்திரர்களுக்கு 8-8 மஹாதேவிகள் உள்ளனர். எப்படி சௌதர்ம இந்திரனின் மஹாதேவிகள் விக்ரியா சக்தி மூலம் 16,000-16,000 உடல்கள் செய்துகொள்வதுபோல ஒவ்வொரு தேவியும் விக்ரியா சக்தி மூலம் ஆயிரக்கணக்கான உடல்களை செய்கின்றனர். இந்திரர்களுக்கு பரிவார தேவிகள் உள்ளனர். அவர்களில் சௌதர்ம முதலான ஜோடிகளில் கிரமமாக 32,000, 8,000, 2,000, 500 வல்லபிகாக்கள் உள்ளனர்.

இந்திரபுரத்தின் பெயர் அமராவதியாகும். அதற்கு மத்தியில் இந்திரர் வசிக்கும் மாளிகையின் ஈசான மூலையில் சுதர்ம என்ற பெயர்கொண்ட ஆஸ்தான மண்டபம் அதாவது இந்திர சபை இருக்கிறது. அது 100 யோஜனை நீளமும், 50 யோஜனை அகலமும் 85 யோஜனை உயரமும் கொண்டது. அதற்கு மத்தியில் இந்திரன் அமரும் சிம்மாஸனம் இருக்கிறது. அதற்கு முன்னால் எட்டு பட்ட தேவிகளின் எட்டு ஆஸனங்கள் உள்ளன. அதற்குப்பிறகு கிழக்கு முதலான திசைகளில் ஸோமன், யமன், வருணன், குபேரன் ஆகிய நான்கு லோகபாலர்களின் ஆஸனங்கள் உள்ளன. மற்ற பாரிஷதர், திராயஸ்திரிம்சர், முதலான ஆயிரக்கணக்கான தேவர்களின் ஆஸனங்களும் எந்தெந்த திசைகளில் உள்ளன என்பது பற்றி வர்ணனை உள்ளது.

இந்த ஆஸ்தான மண்டபத்திற்கு முன்னால் மானஸ்தம்பம் இருக்கிறது. அதைப்பற்றி பார்க்கும் முன் இந்த விமானங்கள் பற்றி மேலும் சில விஷயங்களை பார்க்கலாம். இதன் வர்ணங்கள் எப்படி உள்ளன என்ற உங்களுக்கு தெரியுமா? சௌதர்ம-ஈசான விமானங்கள் ஐந்து வர்ணங்களில் உள்ளன. சானத்குமார-மாஹேந்திர விமானங்கள் கிருஷ்ண வர்ணம் தவிர மற்ற நான்கு வர்ணங்களில் உள்ளன. பிரம்ம முதலான நான்கு கல்பங்களில் விமானங்கள் நீல வர்ணம் தவிர மற்ற மூன்று வர்ணங்களில் உள்ளன. சுக்ர முதலான நான்கு கல்பங்களில் விமானங்கள் இரத்த அதாவது சிகப்பு வர்ணம் தவிர மற்ற இரண்டு வர்ணங்களில் உள்ளன. ஆனதவிலிருந்து அனூத்தரம் வரை எல்லா விமானங்களும் ஒரே வெள்ளை நிறத்தில் உள்ளன.

இந்த விமானங்கள் பிருத்வியின் துண்டுகளாக உள்ளன, இவை எதன் ஆதாரத்தில் உள்ளன? இங்கே ஆதாரம் கொடுக்க வேறு வஸ்துகள் எதுவும் இல்லை, ஆனால் அங்குள்ள புத்கலங்கள் ஆதாரம் கொடுக்கும் வகையில் பரிணமிக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அது இவ்விதமாக உள்ளது.

புத்தகத்தில் வாதவலையங்கள் சம்மந்தமான இரண்டாவது படத்தில் இந்த சுவர்க்கங்களின் ஆதாரம் பற்றி காட்டப்பட்டுள்ளது. சௌதர்ம ஜோடி ஜலத்தின் ஆதாரத்தில் உள்ளது, அதாவது சௌதர்ச ஈசான கல்ப விமானங்கள் ஜல வடிவ புத்கல ஸ்கந்தங்களின் ஆதாரத்தில் அதன்மேல் உறுதியாக உள்ளன. இந்த சுவர்க்கங்களின் அக்கம்பக்கத்தில் மற்றும் கீழே உள்ள புத்கலங்கள் ஜல வடிவில் பரிணமித்து உள்ளன, அதனால் அவைகளை ஜலதார் என்று சொல்லப்படுகிறது. சானத்குமார-மாஹேந்திர விமான பவனங்களின் ஆதாரம் காற்று வடிவ புத்கல ஸ்கந்தங்களின் ஆதாரத்தில் விமானங்கள் நிலைகொண்டுள்ளன. மேல் நான்கு ஜோடிகளின் அதாவது எட்டு கல்ப விமானங்கள் நீரும் காற்றும் கலந்த புத்கல ஸ்கந்தங்களின் ஆதாரத்தில் நிலைகொண்டுள்ளன. ஆனதவிலிருந்து அனூத்தரம்வரை உள்ள எல்லா விமானங்களும் ஆகாசத்தின் ஆதாரத்தில் உள்ளன. இதை சுத்த ஆகாசம் என்றும் சொல்கின்றனர், ஏனெனில் இங்கு காற்று மற்றும் நீர் சம்பந்தமான புத்கல ஸ்கந்தங்கள் இல்லை, இங்கு வெறும் இடைவெளி மட்டுமே உள்ளது, அந்தராலம்-காலி இடம்தான் உள்ளது.

இப்போது இந்த கல்ப தேவர்களின் மகுடங்களில் உள்ள சின்னங்கள் பற்றிப் பார்க்கலாம். இங்கு சௌதர்ம முதலான 12 கல்பங்களில் 12 ஸ்தானங்கள் , ஆனத ஜோடியில் 1 ஸ்தானம், ஆரண ஜோடியில் ஒரு ஸ்தானம் என 14 ஸ்தானங்களில் இந்த சின்னங்கள் வரிசையாக இவ்வாறு உள்ளன- 1.பன்றி, 2.மான், 3.எருமை, 4.மீன், 5.ஆமை, 6.தவளை, 7.குதிரை, 8.யானை, 9.நிலா, 10.பாம்பு, 11.காண்டாமிருகம், 12.ஆடு, 13.காளை, 14.கல்பவிருக்ஷம்.

இப்போது மானஸ்தம்பம் பற்றிப் பார்க்கலாம். ஆஸ்தான மண்டபத்திற்கு அதாவது சுதர்மாசபைக்கு முன்னால் மானஸ்தம்பம் உள்ளது. ஒவ்வொரு இந்திரனின் தர்மசபைக்கு முன்னால் மானஸ்தம்பங்கள் உள்ளன. இந்த மானஸ்தம்பங்கள் ஒரு யோஜனை பரப்பும் 36 யோஜனை உயரமும் உடையன. இந்த மானஸ்தம்பங்கள் பீடத்துடன் உள்ளன அதாவது மேடைமீது உள்ளன. இந்த மானஸ்தம்பங்கள் பன்னிரண்டு கோணங்கள் கொண்ட வட்ட வடிவில் உள்ளன, இதன் சற்றளவு 12 யோஜனையாகும், பரிதியில் 12 தாரைகள்-பட்டைகள் உள்ளன; ஒவ்வொரு தாரையும் ஒரு-ஒரு கோசம் பரப்புடையதாக உள்ளன. இங்கு, தேவலாலியில் மானஸ்தம்பம் இருக்கிறது, அதில் எத்தனை கோணங்கள் உள்ளன என்று தெரியுமா? தினமும் பார்க்கிறீர்கள், தினமும் முதலில் அதை வலம் வருகிறீர்கள், நான்கு திசையிலும் நான்கு மூர்த்திகள் உள்ளன, ஆனால் அதில் எத்தனை கோணங்கள் உள்ளன என்று கவனித்தீர்களா? நாளை தரிசனம் செய்யும்போது எண்ணி பார்த்து வந்து சொல்லுங்கள், நாங்கள் பிரயோஜனமான விஷயங்களை மட்டும்தான் பார்ப்போம் என்று சொல்லாதீர்கள். சிலர் ஆறு கோணங்கள் என்று சொல்கின்றனர், இல்லை, அதில் எட்டு கோணங்கள் உள்ளன.

கேள்வி: சுவர்க்கத்தில் உள்ள மானஸ்தம்பங்களில் ஒவ்வொரு பட்டைகள்-தாராவும் ஒரு-ஒரு கோசமாக எப்படியானது?

பதில்: ஒரு யோஜனை என்றால் நான்கு கோசங்கள். ஸ்தூல வடிவில் பார்க்கும் போது முன்று மடங்கு பரிதி-சுற்றளவாக இருக்கிறது, அவ்வாறு அது 12 கோசம் ஆகிறது. அதில் 12 பட்டைகள்-தாரைகள் உள்ளன, அதனால் ஒவ்வொரு தாரையும் ஒரு கோசம் அளவுடையதாக ஆகிறது. அதாவது ஒரு கோணத்திலிருந்து இரண்டாவது கோணம்வரை உள்ள பக்கத்தின்-பட்டையின் அளவு 1 கோசமாகிறது. இவைகள் பிரமாண யோஜனையும், பிரமாண கோசமும் ஆகும். இந்த மானஸ்தம்பம் 36 யோஜனை உயரமும் உடையது. இதில் இரத்தின மயமான சங்கலியில் தொங்கும் இரத்தினமய பெட்டிகள் தூக்குகள்போல-உரிகள் போல தொங்குகின்றன. மேலிருந்து 6¼ யோஜனையும் கீழிருந்து 5¾ யோஜனையும் போக நடுவில் 24 யோஜனை அளவில் இந்த பெட்டிகள் உள்ளன. இந்த பெட்டிகள் கோசத்தில் நாலில் ஒரு பகுதி பரப்பும் ஒரு கோசம் உயரமும் உடையதாகும். இதில் தீர்த்தங்கரர்களாகப்போகும் குழந்தை, இளமைப்பருவம், இளவரசர், மற்றும் இராஜா நிலையில் வீட்டில் வசிக்கும்போது அணிய தேவையான உடைகளும் ஆபரணங்களும் நிறைந்து கிடக்கின்றன. இந்திரர் இங்கிருந்து அந்த பொருள்களை எடுத்துக்கொண்டு தீர்த்தங்கரராகப் போகிறவர் இடத்திற்கு வருகின்றனர்.

தீர்த்தங்கர உயிருக்கு ஜென்மாபிஜேகம் நடக்கும்போது இந்திரர் சுவர்க்கத்திலிருந்து அவருக்காக உடைகளையும் ஆபரணங்களையும் கொண்டு வருவதை நாம் அறிந்திருக்கிறோம். எங்தெந்த தீர்த்தங்கரர்களுக்கு

எந்தெந்த பெட்டியில் இந்த ஆபரணங்கள் இருக்கின்றன என்பதற்கு நியமம் இருக்கிறது. தீர்த்தங்கரருக்கு என்றால் தீர்த்தங்கரராகப் போகிறவர் என புரிந்து கொள்ளுங்கள். முனி நிலையில் தான் நிர்வாணமான-ஆடை ஆபரணங்கள் இல்லாத நிலை இருக்கிறது, தீர்த்தங்கரரான பிறகு ஆடை ஆபரணங்கள் பற்றிய கேள்வி எங்கே எழுகிறது?

சௌதர்மேந்திரனின் ஆஸ்தான மண்டபத்தில் அதாவது இந்திரசபையின் முன்னால் இருக்கும் மானஸ்தம்பத்தில் உள்ள பெட்டியில் பரத க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரருக்கு தேவையான வஸ்திர ஆபரணங்கள் இருக்கின்றன. சௌதர்மேந்திரன் அவைகளை பரத க்ஷேத்திரத்திற்கு வரும்போது அங்கிருந்து கொண்டுவருகிறார். ஈசாநேந்திரனின் ஆஸ்தான மண்டபத்தில் அதாவது இந்திரசபையின் முன்னால் இருக்கும் மானஸ்தம்பத்தில் உள்ள பெட்டியில் ஐராவத க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரருக்கு தேவையான வஸ்திர ஆபரணங்கள் இருக்கின்றன. ஈசாநேந்திரன் அவைகளை ஐராவத க்ஷேத்திரத்திற்கு வரும்போது அங்கிருந்து கொண்டுவருகிறார்.

மேலே சனத்குமார ஜோடியில் சனத்குமாரேந்திரனின் இந்திரசபையின் முன்னால் இருக்கும் மானஸ்தம்பத்தில் உள்ள பெட்டியில் கிழக்கு விதேக க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரருக்கு தேவையான வஸ்திர ஆபரணங்கள் இருக்கின்றன. மாஹேந்திரேந்திரனின் இந்திரசபையின் முன்னால் இருக்கும் மானஸ்தம்பத்தில் உள்ள பெட்டியில் மேற்கு விதேக க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரருக்கு தேவையான வஸ்திர ஆபரணங்கள் இருக்கின்றன. தேவர்கள் இந்த மானஸ்தம்பங்களுக்கு பூஜை செய்கின்றனர்.

அந்த மானஸ்தம்பங்களுக்கு அருகில் எட்டு யோஜனை நீளமும், எட்டு யோஜனை அகலமும், எட்டு யோஜனை உயரமும் கொண்ட உபபாத கிரஹம் இருக்கிறது, அதில் இரத்தினமயமான படுக்கைகள் உள்ளன. இது இந்திரர்கள் உபபாதஸ்தானம்-ஜன்மஸ்தானம்-பிறக்குமிடமாகும். இந்த உபபாத கிரஹத்திற்கு பக்கத்தில் அனேக சிகரங்களுடன்கூடிய ஜினாலயங்கள் உள்ளன.

கல்பவாசி தேவர்களின் தேவாங்கனைகள் 16-வது சுவர்க்கம்வரை காணப்படுகிறார்கள், ஆனால் அவர்கள் அனைவரும் சௌதர்ம-ஈசான சுவர்க்கத்திலுள்ள இந்த ஜன்மஸ்தானத்தில்தான் பிறக்கின்றனர், எந்த விமானவாசி தேவியரும் மேல் சுவர்க்கங்களில் பிறப்பதில்லை, அங்கு தேவர்களே-புருஷர்களே பிறக்கின்றனர். மேலே-மேலே உள்ள சுவர்க்கங்களின் தேவிகளின் ஆயுள் அதிகம்-அதிகமாக இருக்கிறது, ஆனால் அவர்கள் எல்லோரும் முதலாவது-இரண்டாவது சுவர்க்கத்திலேயே பிறக்கின்றனர். தெற்குதிசை சம்பந்தமான கல்பவாசி தேவிகள் சௌதர்ம

சுவர்க்கத்திலும், வடக்குதிசை சம்பந்தமான கல்பவாசி தேவிகள் ஈசான சுவர்க்கத்திலும் பிறக்கின்றனர்.

அங்குகூட எத்தனையோ விமானங்களில் கல்பவாசி தேவிகள் மட்டுமே வசிக்கிறார்கள், அந்த விமானங்களில் தேவர்கள் காணப்படுவதில்லை. மற்ற விமானங்களில் தேவர்கள் மற்றும் தேவிகள் இருவருமே வசிக்கிறார்கள். இங்கு பெண்கள் மட்டுமே சில பள்ளிகளில் படிக்கின்றனர், சில பள்ளிகளில் ஆண்கள், பெண்கள் இருபாலருமே சேர்ந்து படிக்கும் பள்ளிகள் இருப்பதுபோல என அறியவும். எங்கு தேவிகள் மட்டுமே தோன்றி வாழ்கிறார்களோ அதுபோல 6,00,000 விமானங்கள் சௌதர்ம சுவர்க்கத்தில் உள்ளன, 4,00,000 விமானங்கள் ஈசான சுவர்க்கத்தில் உள்ளன. இருவரும் சேர்ந்து வாழும் விமானங்கள் சௌதர்ம சுவர்க்கத்தில் 26,00,000 விமானங்களும், ஈசான சுவர்க்கத்தில் 24,00,000 விமானங்களும் உள்ளன.

கேள்வி: அவர்களுக்கு உபபாத படுக்கை என்று ஏன் சொல்கின்றனர்?

பதில்: உபபாதம் என்பதின் பொருள் பிறப்பு என்பதாகும். இங்கு தேவர்கள் பிறக்கின்றனர் அதாவது அந்தர்முகூர்த்த காலத்தில் ஆறு பர்யாப்திகளும் முழுமையடைந்து உயிர் இளமை பருவத்துடன் தோன்றுகின்றனர். தேவகதி உயிர்கள் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறப்பதில்லை. இங்கு நம் கர்மபூமியிலும், போகபூமியிலும் கர்பஜ பிறவியில்தான் பிறப்பு அமைகிறது, அதைப்பற்றி பின்னர் பார்க்கலாம்.

சௌதர்ம சுவர்க்கத்தில் பிறக்கும் தேவிகள் மேலே தெற்கிலுள்ள சுவர்க்கங்களுக்கு செல்கின்றனர் மற்றும் ஈசான சுவர்க்கத்தில் பிறக்கும் தேவிகள் மேலே வடக்கிலுள்ள சுவர்க்கங்களுக்கு செல்கின்றனர். மேலுள்ள தேவர்கள் அவதிஞானத்தின் மூலம் தன் தேவிகள் பிறப்பை அறிந்து அங்கு வந்து அவரவரின் தேவிகளை அழைத்துச் செல்கின்றனர். இங்குகூட நம்பூமியில் அப்படி நடக்கிறதா இல்லையா? நம் பாரத பூமியை சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் வசிக்கின்றனர், அவர்கள் நம் தேசத்திற்கு வந்து தனக்கு மனைவி ஆகவேண்டிய பெண்ணை திருமணம் செய்து அமெரிக்காவுக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள் அல்லவா. சிலர் இவ்வாறு சொல்கின்றனர், சுவர்க்கத்தில் பரவாயில்லை, அவர்கள் அவதி ஞானம் மூலம் அறிந்து அவரவர்களின் தேவிகளை எந்த சங்கடமுமின்றி அழைத்துச் செல்கின்றனர், இங்கு நம் தேசத்தில் அப்பா-அம்மாக்களுக்குதான் வரன் தேடும் கவலை அதிகமாக இருக்கிறது.

என்ன செய்வது! நீங்கள் கவலையில்லாமல் இருக்க முடிவதில்லை! உங்கள் பிள்ளைகள் அவர்கள் திருமண விஷயத்தில் நீங்கள் குறுக்கிடுவதை விரும்புதில்லை. நம்முடைய மோஹம்தான் நம்மை இந்தபாடு படுத்துகிறது. இந்த வயதான காலத்தில் சுவாத்யாயம் முதலான உபயோகமான

காரியங்களில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, நம் பிள்ளைகளுக்கு வரன் தேடும் கவலையில் இரவும், பகலும் காலத்தை கழிக்கிறோம். அப்படிப்பட்ட கவலையாலும் நம் விருப்பத்தாலும் எதுவும் நடக்கப் போவதில்லை, நடக்கப்போவது நிற்கப்போவதுமில்லை.

தேவர்கள் மற்றும் தேவாங்கனைகளின் ஆயுளில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சௌதர்ம சுவர்க்கத்தில் தேவர்களின் அதிகபட்ச ஆயுள் கொஞ்சம் அதிக இரண்டு கடற்காலங்களாகும், தேவாங்கனைகளுக்கு அதிகபட்ச ஆயுள் ஐந்து பல்யமாகும். ஒரு கடற்காலத்தில் எத்தனை பல்யங்கள் உள்ளன என்று சொல்லுங்கள், பார்க்கலாம். 10 கோடாகோடி பல்யங்கள் கொண்டது ஒரு கடற்காலமாகும். ஒரு இந்திரருக்கு 8-8 மஹாதேவிகள் உள்ளனர். அவர்களுடைய இரண்டு கடற்கால ஆயுளில் எத்தனை தேவிகள் இறந்து போய்விடுகின்றனர் என்பதை பார்க்கும்போது அங்கு அவர்களுக்கு சுகம் எங்கே இருக்கப்போகிறது? சசி இந்திராணி நியமமாக அடுத்து மனித பிறவிக்கு வந்து மோக்ஷம் செல்கின்றனர். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ சசி இந்திராணிகள் இறந்து கர்ம பூமியில் பிறந்து மோக்ஷம் செல்கின்றனர், மேலும் சௌதர்ம இந்திரர் அந்த சிறப்பான கல்யாணங்களை செய்ய அங்கு வருகின்றனர்.

எந்த தேவர்கள் அடுத்த பவத்தில் நியமமாக மோக்ஷம் செல்கின்றனரோ அவர்களை ஒரு பவதாரி அல்லது ஏகாவதாரி என்று சொல்கின்றனர். சௌதர்ம இந்திரர் மற்றும் எல்லா தெற்கு இந்திரர்கள், சௌதர்ம சுவர்க்கத்தின் நான்கு லோகபாலர்கள - யமன், ஸோமன், வருணன், குபேரன், சசி இந்திராணி ,லௌகாந்திக தேவர்கள் ஸர்வார்த்தசித்தி விமான தேவர்கள் ஆகிய எல்லோரும் ஏகாவதாரிகளாவர். அவர்கள் அந்த தேவ வாழ்க்கையை வாழ்ந்து முடித்து மனிதராக பிறந்து அதே பவத்தில் நியமமாக மோக்ஷம் செல்கின்றனர். லௌகாந்திக தேவர்களைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள், இங்கு தீக்ஷா கல்யாணத்தின்போது வருவதை பார்த்தும் - கேட்டும் இருப்பீர்கள். பிரம்ம சுவர்க்கத்தின் எட்டு திசைகளிலும்(திசை மற்றும் குறுக்கு திசை) வெளிப்பக்கத்தில் அவர்ளுடைய விமானங்கள் உள்ளன, அங்கு அவர்கள் பிரம்மசாரி போலவே வாழ்கின்றனர். அவர்கள் வைராக்கியமய பரிணாமத்தை உடையவர்கள், அவர்களை தேவரிக்ஷி-பிரம்மரிக்ஷி என்றுகூட சொல்கின்றனர். தீர்த்தங்கரருடைய தீக்ஷா கல்யாணத்தின்போது வந்து அவர்கள் தீக்ஷைக்கு அனுமோதனை செய்கின்றனர்.

இவ்வளவு சர்ச்சை செய்த பிறகு இப்போது இந்த வைமானிக தேவர்களின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஆயுள் எவ்வளவாக இருக்கிறது என்பதை பார்க்கலாம். சௌதர்ம-ஈசானத்தில் குறைந்தபட்ச ஆயுள் ஒரு பல்யம் மற்றும் அதிகபட்ச ஆயுள் இரண்டு கடற்காலமாகும். சனத்குமார-மாஹேந்திரத்தில் குறைந்தபட்ச ஆயுள் ஒரு சமயம் கூடிய இரண்டு கடற்காலம் மற்றும்

அதிகபட்ச ஆயுள் ஏழு கடற்காலமாகும். கீழ் சுவர்க்க அதிகபட்ச ஆயுளுடன் ஒரு சமயம் கூட்ட வருவது மேல் சுவர்க்கத்தின் குறைந்த பட்ச ஆயுளாகும். இந்திரர்களின் ஆயுள் அதிக பட்சமாகவே இருக்கிறது. எங்கு சுப உணர்வு அதிகமாக அதாவது கஷாயம் மந்ததரமாக இருக்கிறதோ அங்கு தேவாயுளின் ஸ்திதி அதிகமாக பந்தமாகிறது.

பிரம்ம ஜோடியில் அதிகபட்ச ஆயுள் பத்து கடற்காலமாகும். லாந்தவ ஜோடியில் அதிகபட்ச ஆயுள் பதிநான்கு கடற்காலமாகும். சுக்ர ஜோடியில் அதிகபட்ச ஆயுள் பதினாறு கடற்காலமாகும். சதார ஜோடியில் அதிகபட்ச ஆயுள் பதினெட்டு கடற்காலமாகும். ஆனத ஜோடியில் அதிகபட்ச ஆயுள் இருபது கடற்காலமாகும். ஆரண ஜோடியில் அதிகபட்ச ஆயுள் இருபத்தி இரண்டு கடற்காலமாகும்.

மேலே ஒவ்வொரு கிரைவேயகத்திலும் கிரமமாக ஒரு-ஒரு கடற்காலம் அதிகமாகிக் கொண்டே போகிறது. கீழே முதல் கிரைவேயகத்தில் 23 கடற்காலத்திலிருந்து மேலே கடைசி அதாவது ஒன்பதாவது கிரைவேயகத்தில் அதிகபட்ச ஆயுள் 31 கடற்காலமாக இருக்கிறது. அனுதிசையில் அதிகபட்ச ஆயுள் 32 கடற்காலமாக இருக்கிறது. அனூத்தரத்தில் அதிகபட்ச ஆயுள் 33 கடற்காலமாக இருக்கிறது.

சாஸ்திரங்களில் காதாயுஷ்க பற்றி சொல்லப்பட்டுள்ளது. சௌதர்ம ஜோடியில் அதிகபட்ச ஆயுள் 2 கடற்காலம் என்று நாம் பார்த்தோம். ஆனால் அங்கு சில உயிர்கள் இரண்டரை கடற்கால ஆயுள் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இந்த ½ கடற்கால அதிக ஆயுள் எப்படி வந்தது? பந்திக்கும்போது இரண்டு கடற்காலத்திற்கு மேல் அங்கு பிறக்க ஆயுள் கட்டுவதில்லை. இந்த இரண்டரை கடற்கால ஆயுள் கொண்டவரை காதாயுஷ்க சம்யக்திருஷ்டி என்று சொல்கின்றனர். இந்த சம்யக்திருஷ்டி உயிர் முதலில் மேல் சுவர்க்க சம்பந்தமான அதிக ஆயுளை பந்தித்து இருக்கும், அது 4, 5, 7 கடற்கால ஆயுளை பந்தித்து இருக்கும். அதன் பரிணாமத்தில் அப்படி ஒரு விசித்திரத்தன்மை உண்டாகிறது, அதனால் அது பந்தித்த ஆயுள் குறைந்து கீழ் சுவர்க்கத்தின் ஆயுளான இரண்டு கடற்காலத்திற்கு கொஞ்சம் அதிகமாக அதாவது அந்தர் முகூர்த்தம் குறைந்த அரை கடற்கால அளவாக, அதாவது இரண்டரை கடற்கால ஆயுளாக ஆகிவிடுகிறது. இந்த குறைதல் பத்யமான் ஆயுளில் தான் ஆகிறது, புஜ்ஜமான் ஆயுளில் ஆவதில்லை.

இதன் அர்த்தத்தை புரிந்து கொள்ளலாம். நாம் இப்போது நிகழ்காலத்தில் எந்த ஆயுளை அனுபவிக்கிறோமோ அதனுடைய உதயம் நிகழ்ந்து கொண்டுள்ளதோ அதை புஜ்ஜமான் ஆயுள் என்று சொல்கின்றனர். நம் எல்லோருக்கும் புஜ்ஜமான் ஆயுள் மனித ஆயுளாக இருக்கிறது. நிகழ்கால

பிறவியில் இருக்கும்போது அடுத்த பிறவி சம்பந்தமான எந்த ஆயுள் பந்தமாகிறதோ அதை பத்யமான் ஆயுள் என்று சொல்கின்றனர். ஒருமுறை ஆயுள் பந்தமான பிறகு அந்த பந்தமான ஆயுளின் ஸ்திதி பரிணாம வசத்தால் குறைந்து போவதை காதாயுஷ்க என்று சொல்கின்றனர். யார் தேவ ஆயுளை பந்தித்து உள்ளாரோ அப்படிப்பட்ட காதாயுஷ்க உயிர் சம்யக்திருஷ்டியாக இருந்தால் கீழ் சுவர்க்கத்தின் அதிகபட்ச ஆயுளிலிருந்து அந்த உயிருடைய ஆயுள் ½ கடற்காலம் அதிகமாக இருக்கிறது. அதே சமயம் அந்த காதாயுஷ்க உயிர் மித்யாதிருஷ்டியாக இருந்தால் கீழ் சுவர்க்கத்தின் அதிகபட்ச ஆயுளிலிருந்து அந்த உயிருடைய ஆயுள் பல்யத்தின் அசங்க்யாதத்தின் ஒரு பாக அளவு அதிகமாக இருக்கிறது. பத்யமான் ஆயுளின் பந்திந்த ஸ்திதி அதே பவத்தில் குறைந்து போவதை காதாயுஷ்க என்று சொல்கின்றனர். நிகழ்கால ஆயுள் அதாவது புஜ்ஜமான் ஆயுள் குறைந்து போவதை கதலிகாத என்று சொல்கின்றனர். தேவர், நாரகி, மற்றும் போகபூமி உயிர்களில் கதலிகாதம் நிகழ்வதில்லை. கர்மபூமி மனிதர் மற்றும் விலங்கு கதி உயிர்களின் ஆயுளில்தான் கதலிகாதம் நிகழ்ந்து மரணம் சம்பவிக்கிறது.

ஒரு உயிர் 100 வருட மனித ஆயுள் பந்தம் செய்து மனித பிறவியில் வந்து பிறந்திருப்பதாக வைத்துக் கொள்வோம், அதாவது அதற்கு மனித ஆயுள் புஜ்ஜமான் ஆயுளாக இருக்கிறது. ஆனால் அந்த ஆயுள் முடிவதற்கு முன்னரே கூட இப்படி ஒரு அசந்தர்ப்பம் அவர் வாழ்க்கையில் நிகழலாம். உதாரணமாக அவர் 50 வயது இருக்கும்போது விபத்தில் சிக்கியோ, நோயாலோ, விஷமருந்தியோ, தற்கொலை செய்து கொண்டோ அல்லது இது போன்ற எந்த நிமித்தத்தாலாவது அவருடைய ஆயள் கர்மத்தின் நிஷேகங்கள் காதமடைந்து அங்கிருக்கும் எல்லா பரமாணுக்களும் உதயத்திற்கு வந்து அந்தர்முகூர்த்த கால அளவு மட்டுமே இருக்குமளவு குறைந்து போகிறது. பிறகு அது அடுத்த பவ ஆயுளை கட்டிக்கொண்டு அந்த உயிர் அந்தர்முகூர்த்த காலத்தில் மரணமடைகிறது.

புஜ்ஜமான் ஆயுள் இவ்வாறு குறைந்து போதலை கதலிகாதம் என்றும், பத்யமான் ஆயுள் குறைந்து போதலை காதாயுஷ்கம் என்றும் சொல்கின்றனர். காதாயுஷ்க உயிர் ஸஹஸ்ரார சுவர்க்கம்வரையே சென்று பிறக்கிறது.

தேவர்கள் பிறக்கும்போதே இளமை பருவத்துடன் பிறக்கின்றனர் என்று பார்த்தோம். அவர்களுக்கு தாய்-தந்தையர்கள் இல்லை. உபபாத படுக்கையிலேயே அவர்கள் பிறக்கின்றனர். வாழ்நாள் முழுவதும் இளமை பருவத்துடனேயே இருக்கின்றனர். கடற்கால ஆயுள் ஆனபிறகுகூட நம்மைப்போன்று முதியவர்களாக ஆவதில்லை. மரணமடைய ஆறுமாத காலம் இருக்கும்போது அவர்கள் கழுத்தில் உள்ள மாலை வாடத்துவங்குகிறது, உடலில் பிரகாசம் குறைந்து போகிறது.

ஆறு மாதம் என்பது இங்கு நம் காலம் கழிவதற்கு அனுசரனையாக செல்லப்படுகிறது. அங்கு இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லை. இங்கு சூரிய சந்திரர்கள் செல்லுகையால் இரவு பகல் என்ற பேதம் காணப்படுகிறது. சூரியன் பிரகாசமாக இருப்பதால் அது எந்த க்ஷேத்திரத்திற்கு வருகிறதோ அங்கு பிரகாசமாக இருக்கிறது, அது சென்ற பிறகு இரவு வந்துவிடுகிறது.

என்னுடைய கேள்வி என்னவென்றால் அங்கு சூரியன், சந்திரன் ஏன் இல்லை?

இந்த சூரியன், சந்திரன், தாரை முதலியன எல்லாம் இந்த முதல் பூமிக்கு மேல் 790 யோஜனையிலிருந்து 900 யோஜனைவரைதான் இருக்கின்றன. சுவர்கம் 1,00,040 யோஜனை உயரமுடைய மேருமலைக்கு மேலிருந்துதான் துவங்குகிறது. அங்கு சந்திரன் முதலானவைகள் இல்லை. அங்கு கல்பவிருக்ஷங்களால் பிரகாசம் இருக்கிறது.

இங்கு பரதக்ஷேத்திரத்தில்கூட போகபூமியாக இருந்தபோது கல்பவிருக்ஷங்களின் பிரகாசம் இருந்தது. அந்த சமயத்தில்கூட இங்கு சூரியன், சந்திரன், தாரை முதலியன எல்லாம் இருந்ததா இல்லையா? ஆம், இருந்தன! ஆனால் கல்பவிருக்ஷத்திற்கு முன்னால் அதன் பிரகாசம் குறைவாக இருந்தது.

உங்களுடைய கேள்வி என்னவென்றால் அங்கு சூரிய, சந்திரர்கள் இல்லை, பிறகு காலத்தை எப்படி கணக்கிடுகிறார்கள்? கடிகாரம் இருக்கிறதா இல்லையா?

பதில்: அவர்கள் காலத்தை கணக்கிடும் ஏற்பாடு - ஏதாவது வழிமுறை இருக்க வேண்டும். அவர்களுக்கு ஆயுள் லட்சம், கோடி வருடங்களாக கடற்காலங்களில் இருக்கிறது, எனவே அங்கு காலம் எப்படி கணிப்பார்கள், என்பது எனக்கும் கேள்வியாக இருக்கிறது. உங்களில் யாருக்காவது விடை கிடைத்தால் எனக்கும் சொல்லுங்கள்.

தேவர்களுக்கும், நாரகிகளுக்கும் கடற்காலத்தில் ஆயுள் இருக்கிறது. அங்கு ஆயிரம் கோடி வருடங்கள் கழிந்த பிறகும்கூட தெரிவதில்லை. சுவர்க்கத்தில் உயிர்கள் போகங்களில் பரபரப்புடன் உள்ளனர், நரகங்களில் ஒருவருக்கொருவர் வலி கொடுப்பதில் துன்ப சூழலில் பரபரப்புடன் இருக்கின்றனர். அங்கு அவர்கள் ஆழமான தூக்கம்கூட எடுப்பதில்லை. நீங்கள் தூக்கத்தின் பிரிவுகளை கேட்டிருக்கிறீர்களா? ஸ்தியானக்ருத்தி, நித்ராநித்ரா, பிரசலாபிரசலா, நித்ரா, பிரசலா என்பன அவ்வகைகள்.

தேவர்களுக்கும், நாரகிகளுக்கும் முதல் மூன்று ஆழ்ந்த தூக்கங்களான ஸ்தியானக்ருத்தி, நித்ராநித்ரா, பிரசலாபிரசலா கர்மங்களின் உதயம் இல்லை. அங்கு தூங்க நேரம் கிடைப்பதில்லை, அதனால் எவ்வளவு தூங்க வேண்டுமோ அவ்வளவும் இங்கேயே தூங்கிவிடுங்கள். அதனால்தான் ‘இங்கு

சுவாத்யாயம் கேட்கும்போதுகூட தூங்கி விடுகிறார்களோ' என்று சிலர் சொல்கின்றனர். அங்கு சுவாசம், ஆஹாரம் பற்றி பவனதிரிகத்தில் பார்த்தோம், அதே விகிதத்தில் தான் இங்கும் இருக்கிறது. யாருடைய ஆயுள் 2 கடற்காலமோ அவர்கள் இரண்டு பட்சத்திற்கு-ஒரு மாத இடைவெளியில் ஒரு சுவாசமும், 2,000 வருடங்களுக்கு ஒருமுறை ஆஹாரமும் எடுக்கின்றனர். அவர்கள் தொண்டையில் அமிர்தம் சுரக்கிறது, அதை விழுங்குவதே அவர்களுக்கு ஆகாரமாக இருக்கிறது. இதை மானசீகாஹாரம் என்பர், அவர்களுக்கு கவளாஹாரம் இல்லை.

சுவர்க்கத்தில் குறைந்த பட்ச ஆயுள் 10,000 வருடங்கள் என்று கேட்டிருக்கிறோம். இந்த குறைந்த ஆயுள் பவன, வியந்தரர்களுக்கு இருக்கிறது. ஜோதிஷிகளில் குறைந்த பட்ச ஆயுள் பல்யத்தில் எட்டில் ஒரு பகுதியாகும். சௌதர்ம ஈசான சுவர்க்க தேவர்களின் குறைந்த பட்ச ஆயுள் ஒரு பல்யமாகும். மற்றவைகளை பிறகு பார்க்கலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள ஒன்பதாம் தீர்த்தங்கரர் ஸ்ரீ சூர்யபிரப பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

♣

10.தேவ பிறவியில் கதி, ஆகதி, மத்யலோகம்

திரிலோகஸாரத்தின் ஆதாரத்தில் நாம் மூவுலக வர்ணனையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தேவர்கள் சம்பந்தமாக இன்னும் சில விஷயங்களை தெரிந்து கொள்ளவேண்டியது இன்னும் கொஞ்சம் இருக்கிறது. அவைகளைப் பார்த்தபிறகு நாம் மத்திய லோகத்தைப்பற்றி அதாவது விலங்குகளின் உலகத்தைப் பற்றிப் பார்க்கலாம்.

தேவர்களுக்கு எந்தெந்த குணஸ்தானங்கள் இருக்கமுடியும்? இதற்கு பதில் ஒன்பதாவது கிரைவேயகம் வரை மித்யாத்துவம், ஸாஸாதனம், சம்யக்மித்யாத்துவம், மற்றும் அவிரத சம்யக்துவம் முதலான முதல் நான்கு குணஸ்தானங்கள் இருக்கமுடியும். பவனத்திரிகத்திலும் மற்றும் எல்லா தேவிகள் பிறவியிலும் சம்யக்திருஷ்டி உயிர்கள் சென்று பிறப்பதில்லை. ஆனால் அங்கு சென்று பிறந்த அந்தர்முகூர்த்த காலத்திற்குப் பிறகு யார் வேண்டுமானாலும் சம்யக்துவத்தை பெறமுடியும். அனுதிசை மற்றும் அனுத்தர விமானவாசி தேவர்கள் எல்லோரும் சம்யக்திருஷ்டிகளாகவே இருக்கின்றனர், பாஃவலிங்கி முனிகளே மரணமடைந்து பிறகு அங்கு சென்று பிறக்கின்றனர், வேறு எந்த உயிரும் அங்கு சென்று பிறக்க முடியாது.

எந்த கதி உயிர்கள் தேவகதிக்கு வருகின்றன என்று பார்க்கலாம். என் கேள்வி என்னவென்றால் முதல் சுவர்க்க தேவர்கள் மரணமடைந்து மேலே எந்த சுவர்க்கம் வரை போகமுடியும்? பாருங்கள்! எந்த தேவகதி உயிரும் மரணமடைந்து மீண்டும் தேவகதியில் பிறக்க முடியாது. நாரகி உயிர்கள்கூட மரணமடைந்து தேவகதியில் பிறக்க முடியாது. பிறகு தேவகதியில் பிறக்கக்கூடியவர்களில் மனித விலங்குகதி உயிர்கள் மட்டுமே மிஞ்சியுள்ளன. மனிதர்களில் கூட லப்திஅபர்யாப்த்த நிலையில் இறந்து தேவகதியில் பிறக்க முடியாது. விலங்குகளில் ஒரு இந்திரிய உயிர்களிலிருந்து நான்கு இந்திரிய உயிர்கள் தேவகதியில் பிறக்க முடியாது. லப்திஅபர்யாப்த்த ஐந்து இந்திரிய விலங்கு உயிர்கள் கூட தேவகதியில் பிறக்க முடியாது.

போக பூமியின் எல்லா மனித மற்றும் விலங்கு உயிர்களும் மரணமடைந்து நியமமாக தேவகதியில் மட்டுமே சென்று பிறவி எடுக்கின்றன. போகபூமியின் மித்யாதிருஷ்டி மற்றும் ஸாஸாதனர் பவனத்திரிகத்திலேயே பிறக்கின்றனர், எல்லா சம்யக்திருஷ்டி போகபூமி உயிர்களும் சௌதர்ம-ஈசான சுவர்க்கத்திற்கு மட்டுமே சென்று பிறக்கின்றனர். அவர்கள் மேல் சுவர்க்கங்களுக்கு சென்று பிறக்கமுடியாது. குபோகபூமியின் உயிர்கள் மரணமடைந்து பவனத்திரிகத்திலோ அல்லது கல்பவாசி தேவிகளாகவோ பிறக்கின்றனர்.

அவிரத, மற்றும் தேசவிரத மனித மற்றும் விலங்கு உயிர்கள் மேலே அச்சுத சுவர்க்கம்வரை சென்று பிறக்கமுடியும். யார் உடலால் ஜினலிங்கத்தை (நிர்வாணத் துறவை) ஏற்றுள்ளார்களோ அதாவது திகம்பரமுனி நிலையை அங்கீகாரம் செய்து சாஸ்திரத்தில் கூறியபடி முனிகளின் எல்லா ஒழுக்கங்களையும் அதிசாரமின்றி-மீறல்கள் எதுவும் இல்லாமல் வெளி ஒழுக்கங்களை கைக்கொள்பவர்களை திரவியலிங்கி முனி என்று சொல்கின்றனர். அப்படி திரவியலிங்கத்தை ஏற்ற உயிர்கள் முதலாவது, நான்காவது அல்லது ஐந்தாவது குணஸ்தானத்தில் இருக்க முடியும். அவர்களுக்கு முனிக்கு தகுதியான வீதராகத்தன்மை அதாவது முதல் மூன்று கஷாய நான்மைகள் இல்லாமல் போகுமானால், அவர்களுக்கு ஆறாவது-ஏழாவது குணஸ்தானம் உண்டாகிறது. அந்த உயிரை பாஃவலிங்கி முனி என்று சொல்கின்றனர். திரவியலிங்கத்தை ஏற்ற உயிர்களுக்கே பாஃவலிங்க நிலை உண்டாகிறது, நேராக யாரும் பாஃவலிங்கி முனியாக ஆகமுடியாது.

மித்யாத்துவ நிலையில் யார் திரவியலிங்கத்தை ஏற்றிருக்கிறாரோ அவரே புருஷார்த்தத்தால் நேராக ஏழாவது குணஸ்தானத்தை அடைகிறார், பிறகு ஆறாவதற்கு வந்து அதன்பிறகு ஆறாவது-ஏழாவது குணஸ்தாணங்களில் அந்தர்முகூர்த்த காலங்களில் மாற்றமடைந்து கொண்டு இருக்கிறார். சிலர் நாலாவது அல்லது ஐந்தாம் குணஸ்தானங்களில் இருப்பவர்கூட திரவியலிங்கி முனி நிலையில் இருக்கின்றனர். அவர்கள் என்னவோ சம்யக்திருஷ்டிகள்தான் என்றாலும்கூட, எதுவரை அவர்கள் ஆறாவது-ஏழாவது குணஸ்தாணங்களில் இல்லையோ அதுவரை, அவரை பாஃவலிங்கிமுனி என்று சொல்லுவதில்லை. இந்த உயிர்களைக்கூட எப்போது திரவியலிங்கி முனி என்று சொல்லப்படுவார்கள் என்றால்; அவர்கள் முனியின் 28 மூல குணங்களை-முனிக்கான எல்லா வெளி ஒழுக்கங்களையும் ஒன்று விடாமல் 28 வெளிச்செயல்களிலும் எந்த அத்துமீறலுமின்றி-அதிசாரமில்லாமல் கடைபிடிக்கும்போதுதான். எதுவரை இவர்களுடைய பாஃவம் முனித்தன்மையை வெளிப்படுத்தவில்லையோ அப்படிப்பட்ட மித்யாதிருஷ்டியிலிருந்து ஐந்தாம் குணஸ்தான நிலையில் இருக்கும் திரவியலிங்கி உயிர்கள் மரணமடைந்து ஒன்பதாவது கிரைவேயகம்வரை செல்லமுடியும். பாஃவலிங்கி முனிகள் சௌதர்ம சுவர்க்கத்திலிருந்து சர்வார்த்தஸித்திவரை கூட சென்று பிறக்கமுடியும். அதற்குக்கூட எந்த ஸஹனன் அதாவது உடல் கட்டுக்கோப்பு கொண்ட மனிதர் எந்த சுவர்க்கம்வரை சென்று பிறக்கமுடியும் என்பதற்குக்கூட நியமங்கள்-விதிமுறைகள் உள்ளன. முதல் ஸஹனன் உடலமைப்பு கொண்ட பாஃவலிங்கி முனிவர்கள் அனூத்தரம் வரையும், இரண்டாவது ஸஹனன் உடலமைப்பு கொண்ட பாஃவலிங்கி முனிவர்கள் அனுதிசை வரையும், மூன்றாம் ஸஹனன் உடலமைப்பு கொண்ட பாஃவலிங்கி முனிவர்கள்-மனிதர்கள்(திரவிய லிங்கிகள்) ஒன்பதாவது கிரைவேயகம் வரையும், நான்காவது ஸஹனன் உடலமைப்பு கொண்ட முனிவர்கள்-மனிதர்கள் அச்சுத கல்பம் வரையும்,

ஐந்தாவது ஸஹனன் உடலமைப்பு கொண்ட பாஃவலிங்கி முனிவர்கள்-மனிதர்கள் ஸஹஸ்ரார கல்பம் வரையும், ஆறாவது அதாவது கடைசி ஸஹனன் உடலமைப்பு கொண்ட பாஃவலிங்கி முனிவர்கள்-மனிதர்கள் காபிஷ்ட கல்பம் வரையும் சென்று பிறக்க முடியும். இதன் பொருள் மூன்று உத்தம ஸஹனன்-உடலமைப்பு கொண்ட முனிவர்கள் மட்டுமே கிரைவேயகங்களில் செல்ல முடியும் என்பதாகும். கடைசி மூன்று ஸஹனன்-உடலமைப்பு கொண்ட முனிவர்கள்கூட அங்கு சென்று பிறவி எடுக்க முடியாது.

தாபசிகள்-பாஷண்டிகள்-முனி வேஷதாரிகள், பஞ்சாக்னி தபம் செய்பவர் மித்யாதிருஷ்டிகள் அதிகபட்சம் கீழ்முத்தேவர்கள்-பவனத்ரிகங்கள் வரை சென்று பிறக்கமுடியும். ஏகதண்டி(ஈட்டி போன்ற கொம்பு), த்ரிதண்டி (திரிசூலம் போன்ற கொம்பு) வைத்திருக்கும் பாஷண்டிகள் அதிகபட்சம் பிஃரம்ம சுவர்க்கம்வரை சென்று பிறக்கமுடியும். கஞ்சி உணவுமுறை ஏற்பவராக இருக்கும் வேறு தர்மத்தை கைகொள்பவர் அச்சுத கல்பம்வரை சென்று பிறக்கமுடியும்.

இப்போது தேவகதி உயிர்கள் மரணமடைந்து எங்கெங்கு சென்று பிறக்கமுடியும் என்பதைப் பார்க்கலாம். தேவகதியிலிருந்து மனிதகதி, விலங்கு கதி இரண்டில் எதிலும் சென்று பிறக்க முடியும். முதல் இரண்டு குணஸ்தானவர்த்தி தேவகதி உயிர்கள் மனித, விலங்கு பர்யாயத்தில் எதில் வேண்டுமானலும் பிறக்க முடியும். விலங்கு பர்யாயத்தில் சென்று பிறக்கும் தேவ உயிர் ஏகேந்திரியத்திலோ அல்லது மனமுடைய பஞ்சேந்திரிய கர்பஜத்திலோ சென்று பிறக்கின்றனர். ஆனால் சம்யக்திருஷ்டி தேவர்கள் மற்றும் தேவிகள் மரணமடைந்து நியமமாக துஷ்மா-ஸுஷ்மா(நான்காம் காலம்) நடக்கும் கர்ம பூமியில் மனிதரில் புருஷ பர்யாயத்திலேயே பிறக்கின்றனர். அனூத்தர மற்றும் அனுதிசை விமானங்களிலிருந்து வருபவர் நாராயணன் அல்லது பிரதி நாராயணன் ஆகியவர்களாக ஆவதில்லை, காரணம் நாராயணன் மற்றும் பிரதி நாராயணன் ஆகியவர்களுக்கு நியமமாக அடுத்து நரக கதியே அமைகிறது. ஆனால் அனூத்தர மற்றும் அனுதிசை விமானங்களிலிருந்து வருபவர் மனிதராகி மோக்ஷமடைகின்றனர்; அல்லது மனிதராகி மீண்டும் சுவர்க்கம் சென்று பிறகு மனிதராகி மோக்ஷமடைகின்றனர். தேவகதியிலிருந்து வந்து நியமமாக மோக்ஷம் அடைபவர்கள் பற்றி முன்னரே பார்த்திருக்கிறோம்.

கேள்வி: நீங்கள் ஒருபவதாரி தேவர்களில் சசி இந்திராணி பெயரையும் கூறினீர்கள். ஆனால் தேவி சம்யக்திருஷ்டி இல்லையே பிறகு அது எப்படி சாத்தியமாகிறது?

பதில்: சசி இந்திராணியோ அல்லது வேறு பிற தேவி பர்யாய உயிரோ, பிறக்கும்போது மித்யாதிருஷ்டியாகவே பிறக்கின்றனர். ஆனால் அவர்கள் பிறந்த பிறகு சம்யக்துவம் பெறமுடியும். சசி இந்திராணிகூட அங்கு

சம்யக்துவம் பெற்று, பிறகு மனித பர்யாயத்தில் பிறந்து, அதே பவத்தில் மோக்ஷமடைகிறார். பொதுவாக சம்யக்துவத்துடன் மரணமடையும் உயிர் எங்கு சென்று பிறக்கும் என்பதில்கூட நியமம் இருக்கிறது. அவர்கள் பெண் பர்யாயத்தில் பிறப்பதில்லை, அதாவது பாஃவத்தால்கூட பெண் பர்யாயத்தில் பிறப்பதில்லை, உடலாலும் பெண் பர்யாயத்தில் பிறப்பதில்லை. சம்யக்துவத்துடன் மரணமடையும் தேவ, மனித அல்லது விலங்கு உயிர் பர்யாயத்தில் புருஷவேதத்துடன் பிறக்கின்றனர். அவர்கள் இரண்டாவது அல்லது கீழ் எந்த நரகத்திலும் பிறப்பதில்லை. சம்யக்துவத்துடன் முதல் நரகத்தில் சென்று பிறக்கமுடியும், அங்கு நபூம்ஸக வேதம் தான் காணப்படுகிறது, ஆனால் வேறு கதியில்-மனித விலங்குகளில் சம்யக்துவத்துடன் பிறப்பவர் நபூம்ஸக வேதியாகக்கூட ஆவதில்லை.

நபூம்ஸக வேத உயிர் சம்யக்துவம் பெறமுடியுமா? என்று ஒரு கேள்வியை எழுப்பியுள்ளீர்கள்.பெறமுடியாது என்றால், நாரகி உயிர்கள் எப்படி சம்யக்துவத்தை பெறுகின்றனர்?

பதில்: நபூம்ஸக வேத உயிர் சம்யக்துவம் பெறமுடியாது என்று எங்கும் எழுதப்பட்டிருக்கவில்லை. ஆனால் உடலால் புருஷலிங்கமாக உள்ள உயிர் பாஃவ வேத நோக்கில் மூன்று வேதத்தில் எந்த வேதத்தில் இருந்தாலும்; அந்த உயிர் அந்த பஃவத்திலேயே மோக்ஷமடைய முடியும் என்று ஆகமத்தில் பல இடங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ஒன்பதாவது குணஸ்தானத்தின் முதல் பகுதிவரை வேத சம்பந்தமான பிரக்ருதியின் உதயம் காணப்படுகிறது. அப்படிப்பட்ட உயிர் ஐந்தாம் குணஸ்தானத்தில் பிரம்மசர்ய பிரதிமையை ஏற்கிறது, அவருடைய ஒழுக்கத்தில், உணர்வில் வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை, வேதம் பெயர்கொண்ட நோகஷாய கர்மத்தின் உதயம் மிகவும் குறைந்த அனுபாக வடிவில் காணப்படுகிறது, அதனால் அந்த உயிர்களை ஸவேதி என்று சொல்கின்றனர், பிறகு வேதத்தின் உதயம் இல்லாமல் போகும்போது அந்த உயிர்களை அபகத்வேதி என்று சொல்கின்றனர். அப்படிப்பட்ட உயிரே மேலே 14-ஆம் குணஸ்தானத்தை கடந்து மோக்ஷத்தை பெறுகிறது. ஆனால் பாஃவத்தில் ஸ்திரி வேத மற்றும் நபூம்ஸக வேத உயிர், அந்த பஃவத்தில் தீர்த்தங்கரராவதில்லை. ஆனால் தீர்த்தங்கர பிரக்ருதியை கட்டிக் கொள்ளமுடியும். அப்படி பந்தித்தால், ஒரு தேவ பஃவத்திலும் மற்றுமொரு மனித பஃவத்திலும் புருஷராகி அந்த உயிர் தீர்த்தங்கரராகும். முன்னரே நரக ஆயுள் கட்டியிருந்தால் ஒரு நரக பஃவமும், பிறகு மனித பஃவமும் பெற்று தீர்த்தங்கரராகும். நரகத்தில் எல்லோரும் நபூம்ஸக வேதிகளாவே உள்ளனர், அங்குகூட அசங்க்யாத உயிர்கள் சம்யக்துவத்தை பெறுகின்றனர். அசங்க்யாத விலங்குகதி சம்மூர்ச்சன மனமுடைய பஞ்சேந்திரிய உயிர்கள் ஐந்தாம் குணஸ்தானத்தில் உள்ளன, அவைகள்கூட நபூம்சக வேதி உயிர்களாகும்.

கேள்வி: இப்போது நீங்கள் ஸ்திரி வேதி உயிர் மோக்ஷம் போகமுடியும் என்றும் ஆனால் அவர்கள் தீர்த்தங்கரர் ஆவதில்லை என்று கூறினீர்கள். ஆனால் மல்லிநாத தீர்த்தங்கரர் ஸ்திரி வேதி உயிர் என்று பலர் சொல்வதை நாங்கள் கேட்டிருக்கிறோம்! அது எப்படி?

பதில்: நான் ஸ்திரி வேதி(பாஃவத்தால், உடலால் அல்ல) உயிர் மோக்ஷம் போகமுடியும் என்றுதான் கூறினேன். உடலால் ஸ்திரி அதாவது பெண் பர்யாயத்தில் உள்ள உயிர், ஐந்தாம் குணஸ்தான அளவுக்கு உயரும் புருஷார்த்தத்தையே செய்ய முடியும், அதற்கு மேல் இல்லை. உடலால் புருஷ பர்யாயத்திலும், பாஃவத்தால்-உணர்வால் ஸ்திரி வேதத்தில் உள்ள மனிதர், தீர்த்தங்கர பிரக்ருதியை கட்டிக்கொள்ள என்னவோ முடியும், ஆனால் தீர்த்தங்கர பிரக்ருதியின் உதயம் அந்த பர்யாயத்தில்-அந்த பிறவியில் நிகழ்வதில்லை. இன்னும் மல்லிநாத தீர்த்தங்கரர் பற்றிச் சொல்ல வேண்டியுள்ளது பாக்கி உள்ளது. இங்கு நம் பரதக்ஷேத்திரத்தில் தீர்த்தங்கரர் ஆனவர்கள் எல்லோருக்கும் ஐந்து கல்யாணங்களும் நடந்துள்ளன, அதாவது எல்லோரும் முன்னர் அவர்களுடைய முன் மூன்றாவது பஃவத்திலேயே தீர்த்தங்கரப் பிரக்ருதியை கட்டிக்கொண்டு வந்தவர்கள் மற்றும் சம்யக்த்துவத்துடன் ஜினமாதாவின் கர்பத்தில் வந்தவர்கள். சம்யக்துவத்துடன் பிறப்பவர் நியமமாக உடலாலும், மனதாலும்-பாஃவத்தாலும் புருஷராகவே பிறக்கிறார்கள், ஸ்திரியாக எப்போதும் பிறப்பதில்லை. இதிலிருந்து மல்லிநாதர் தீர்த்தங்கரர் புருஷ வேதத்தில்தான் பிறந்தார் என்பது உறுதியாகிறது.

மல்லிநாதர் எந்த சுவர்க்கத்திலிருந்து வந்தார் என்று தெரியுமா? அவர் அனூத்தர சுவர்க்கத்தின் அபராஜித விமானத்திலிருந்து இங்கு வந்துள்ளார். அனூத்தரத்தில் உள்ள அனைவரும் சம்யக்திருஷ்டிகள் ஆவர் மற்றும் புருஷ வேதிகளுமாவர். ஆகையால் மல்லிநாதர் இந்த பஃவத்தில் புருஷவேதியக இருந்தோடு மட்டுமல்லாமல், அவருடைய முன் பஃவத்திலும் புருஷவேதியகவே இருந்திருக்கிறார். அனூத்தர விமானத்தில் நக்ன திகம்பர பாஃவலிங்கி முனிராஜரே மரணமடைந்து அங்கு சென்று பிறக்கமுடியும். இவ்வாறு மூன்று முன் பிறவியிலும் மல்லிநாத உயிர் புருஷவேதியாகவே இருந்திருக்கிறது. அவரை ஸ்திரி என்று சொல்வது மஹா மித்யாத்துவமாகும், தீர்த்தங்கரரை அவர்ணவாதம் செய்ததாகும்-பழித்து கூறுவதாகும். அதனால் மல்லிநாத தீர்த்தங்கரர் ஸ்திரி வேதி உயிர் என்று சொல்வது சர்வக்ஞர் கூறியதற்கு மாறாக உள்ளது.

கேள்வி: இவ்வாறு நிர்ணயம் செய்வதற்கு எவ்வளவு சமயம் கொடுக்க வேண்டும்?

பதில்: உங்கள் முழு நேரத்தையும் தத்துவ நிர்ணயம் செய்வதற்குக் கொடுக்க வேண்டும். நாம் தேவனின் ஸ்வரூபத்தை-பகவானின் ஸ்வரூபத்தை, குருவின் ஸ்வரூபத்தை, சாஸ்திரத்தின் ஸ்வரூபத்தை நிர்ணயம் செய்வது

எல்லாம் உண்மையாக இருக்கவேண்டும். முனிவர்களே நக்ன திகம்பரராக இருக்கும்போது, பகவானுக்கு வஸ்தர அலங்காரம் செய்தல் எந்த அளவுக்கு சரி என்று சிந்தித்து செயல்படுதல் வேண்டும். வீட்டில் இருந்து கொண்டே ஐந்தாவது குணஸ்தானம்வரையிலான புருஷார்த்தம்தான் செய்யமுடியும். புருஷர்களுக்குக்கூட திகம்பர முனிநிலையை ஏற்று பிறகு செய்யப்படும் தியானத்தின்போதுதான், ஆத்மாவில் ஆழும்போது ஏழாவது குணஸ்தானம் உண்டாகிறது, முனிநிலை-பாஃவலிங்க நிலை கிடைக்கப் பெறுகிறது. வஸ்திரங்களுடன் இருக்கும் போதே ஏழாம் குணஸ்தானம் பெற்றுவிடலாம் என்றால் முனிநிலையை ஏற்க வேண்டிய அவசியம் ஏன் இருக்கப்போகிறது? எனவே கிரஹஸ்த நிலையில் அதாவது வஸ்திரத்துடன் இருக்கும்வரை முனிநிலையும், கேவலஞானமும் பெறமுடியாது என்பது உறுதியாகிறது.

இங்கு மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படி நினைக்கிறார்கள் என்பது பற்றிய சர்ச்சை செய்யவேண்டிய அவசியமில்லை. நாம் நமக்கு நல்லது செய்து கொள்ளவேண்டும், அதற்காக நம்முடைய நிர்ணயம் சரியாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். நிர்ணயம் சரியாகவும், உறுதியாகவும் இல்லை என்றால், மற்றும் தேவ, குரு, சாஸ்திரம் இவைகளை வேறு விதமாக நம்பினால், அது அஞ்ஞான மித்யாத்துவமாகும். நம் நிர்ணயம் சரியாகவும், உறுதியாகவும் இல்லை என்றால், சந்தேகம் இருக்குமானால், உயிர் இங்கும் அங்கும் வழிதவறி அலைந்து திரிந்து கொண்டிருக்கும். யார்-யார் என்னென்ன செய்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள ஒருவர் மூடநம்பிக்கை கொண்டவர்களுடைய உபதேசங்களை கேட்டுக்கொண்டு இருந்து, அதில் நல்லவைகளை மட்டும் எற்றுக்கொள்ளலாம் என்று எண்ணுவது, அவர்கள் பிறவி சுழற்சியில் சிக்கிக் கொள்வதற்கே வழி வகுக்கும். அவர்களுக்கு இன்னும் எது சரி, எது பொய் என்பதை உறுதி செய்ய முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

லௌகீகத்தில்-உலக வாழ்க்கையில் உடை, நகைகள், வீடு, உண்ணத் தகுதியானவை முதலானவைகளில் நல்லது-கெட்டது பற்றி நிர்ணயம் நாமே செய்கிறோம், ஆனால் தேவன், சாஸ்திரம், குரு பற்றி வரும்போது மட்டும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பது காணப்படுகிறது. கிடைத்த இந்த மனிதப்பிறவி இப்படியே கழிந்து போகுமானால் அடுத்து இப்படிப்பட்ட துர்லபமான மனிதப்பிறவி எப்போது கிடைக்கப்போகிறதோ!?

நாம் 63 சலாகா புருஷர்கள் பற்றிப் பார்த்திருக்கிறோம், அவர்களில் எந்த உயிரும் மனித கதியிலிருந்து நேராக வந்து பிறப்பதில்லை. மனித பிறவியிலிருந்து மரணமடைந்து மீண்டும் மனிதராகி சக்கரவர்த்தி முதலான சலாகாபுருஷராகவும் ஆவதில்லை. விலங்கு பிறவியிலிருந்து மரணமடைந்து மனிதராகி சக்கரவர்த்தி முதலான சலாகாபுருஷராக ஆவதுமில்லை.

அதேபோல கீழ்முத்தேவர் பிறவியிலிருந்து மரணமடைந்து மனிதராகி சக்கரவர்த்தி முதலான சலாகாபுருஷராக ஆவதுமில்லை. நரகத்திலிருந்து மனித பிறவி எடுக்கும் உயிர் தீர்த்தங்கரராக முடியும். எந்த மனிதர் நரக ஆயுள் கட்டிக்கொண்ட பிறகு சம்யக்த்துவத்தைப் பெற்று மேலும் தீர்த்தங்கரப் பிரக்ருதியையும் கட்டத் துவங்கியுள்ளாரோ, அவர் மூன்றாம் நரகம் வரை சென்று பிறக்கமுடியும்; அங்கு இறந்து மனிதராகப் பிறந்து அதே பவத்தில் தீர்த்தங்கரராகிறார்கள். அவர்களைத் தவிர மற்ற எல்லா தீர்த்தங்கரர்கள், 12 சக்கரவர்த்திகள், 9 பலதேவர்கள், 9 நாராயணன்கள், 9 பிரதி நாராயணன்கள் ஆகப் பிறக்கும் உயிர்கள் மனித, விலங்கு, கீழ்முத்தேவ நிலைகளிலிருந்து வந்து பிறப்பதில்லை. விமானவாசி தேவ உயிர்களே மனிதராகப்பிறந்து இப்படிப்பட்ட சலாகா புருஷர்களாக ஆகமுடியும்.

இப்போது தேவகதி உயிர்கள் மரணமடைந்து எங்கெங்கு சென்று பிறக்கின்றனர் என்று பார்க்கலாம். ஸஹஸ்ரார கல்பம் வரை உள்ள தேவ உயிர்கள் மரணமடைந்து கர்ம பூமியில் மனிதராகவோ அல்லது விலங்காகவோ பிறக்க முடியும். எல்லா சம்யக்திருஷ்டி தேவ உயிர்களும் மரணமடைந்து மனிதர்களாகவே பிறக்கின்றனர். ஆனால் மித்தியாத்துவ அல்லது ஸாஸாதன நிலையில் மரணமடையும் உயிர்கள், மனிதராகவோ அல்லது விலங்காகவோ பிறக்கிறார்கள். ஆனதவிலிருந்து ஒன்பதாவது கிரைவேயகம்வரை உள்ள தேவ உயிர்கள், மித்யாதிருஷ்டியாகவோ, ஸாஸாதனாகவோ அல்லது அவிரத சம்யக்திருஷ்டியோ இருந்தாலும் நியமமாக மனிதராகவே பிறக்கின்றனர். அனுதிசை மற்றும் அனூத்தர தேவர்கள் எல்லோரும் சம்யக்திருஷ்டியாக இருக்கின்றனர் அதனால் அவர்களும் மனிதர்களாகவே பிறக்கின்றனர்.

எந்த தேவ உயிரும் மரணமடைந்து விகலத்திரயங்களிலோ(2, 3 மற்றும் 4 இந்திரியங்கள் உடைய உயிராகவோ) அல்லது மனமில்லாத பஞ்சேந்திரியமாகவோ பிறப்பதில்லை, விலங்கு கதியில் மனமுடைய விலங்காகவோ அல்லது ஏகேந்திரியமாகவோ பிறக்கின்றனர். சஹடாலாவில் ‘தஹம் தை சய தாவர தன்தரை’ என்று படித்திருக்கிறோம். இதன் பொருள் விமானவாசி தேவ உயிர்கள் மரணமடைந்து ஏகேந்திரியத்தில் பிறக்கமுடியும்; ஆனால் எல்லா சுவர்க்க தேவ உயிர்களும் ஏகேந்திரியத்தில் பிறப்பதில்லை. கீழ்முத்தேவர்களும் மற்றும் சௌதர்ம - ஈசான தேவர்களில் மித்யாதிருஷ்டிகளும் மரணம் சீக்கிரமாக வர இருப்பதை அறிந்து அதிக துக்கமடைந்து அழுதும், அமர்க்களம் செய்தும், மிகவும் சிக்கலான பரிணாமத்தின் காரணத்தால் ஏகேந்திரியமாகப் பிறக்கின்றனர். அதில்கூட மண்ணுடலியாகவோ, நீருடலியாகவோ அல்லது தனிஉடலி வனஸ்பதியில் பருஉடலியில் மட்டுமே பிறக்கின்றனர், சூக்ஷ்ம உடலியாகவோ ஸாதாரண(நிகோத) உடலியாகவோ பிறப்பதில்லை. அவர்கள் காற்றுடலியாகவோ அல்லது நெருப்புடலியாகவோ கூடப் பிறப்பதில்லை.

தேவர்களின் இந்த நிலை ஒருபக்கம் இருக்கட்டும், நாம் கூட நம்முடைய அல்லது நம்முடைய சொந்தங்களுடைய, நண்பர்களுடைய மரணம் அருகில் இருப்பதைப் பார்த்து, மிகவும் அழுவதாலோ, சிக்கலான உணர்வுகள் கொள்வதாலோ நரக, நிகோத மற்றும் ஏகேந்திரிய சம்பந்தமான கர்மங்களை கட்டிக்கொண்டு அங்கு சென்று பிறக்க நம்மை தயார் படுத்திக் கொள்கிறோம் என்று அறிந்து கொள்ளுங்கள்!

இப்போது தேவர்களின் பிறவி பற்றிய புத்தகத்திலிருந்து கொஞ்சம் படித்துக் காட்டுகிறேன். 'எப்படி உதயாசலத்திலிருந்து சூரியன் உதிக்கிறதோ....'

கேள்வி: உதயாசலம் என்பது எந்த மலையை குறிக்கிறது?

பதில்: எங்கு சூரியன் உதிப்பதாக காணப்படுகிறதோ அதையே உதயாசலம் என்று சொல்கின்றனர். அவரவர்களுக்கு அவர்கள் வாழுமிடத்தில் வெவ்வேறு உதயாசலங்கள் இருக்கும், மும்பை போன்ற நகரங்களில் ஏதாவது ஒரு கட்டிடத்தை உதயாசலம் என்று சொல்லவேண்டி இருக்கும். இவைகள் எல்லாம் உதாரணம் என்ற முறையில் கேளுங்கள்.

'..... அதுபோல உபபாத படுக்கையிலிருந்து அந்தர்முகூர்த்த காலத்தில் ஆறு பர்யாப்த்திகளையும் பூர்த்தி செய்து, அழகான நறுமணமிக்க புனிதமான உடலை உடைய தேவர்கள் பிறக்கின்றனர். பிறந்ததுமே மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய வாந்தியங்களின் இசை மற்றும் ஜெயகோஷ வடிவ துதி சப்தங்களைக் கேட்டுக்கொண்டே தனக்கு தேவ பிறவி கிடைத்திருப்பதை அறிந்து அங்கு கிடைத்திருக்கும் ஐஸ்வர்யங்கள், வைபவங்கள், மற்றும் தேவாங்கனைகள் முதலான பரிவாரங்களை பார்த்தும், அவதி ஞானத்தின் மூலம் அவருடைய முன் பர்யாயத்தை அறிகின்றனர்.'

தேவர்களுக்கு பிறவியிலேயே அவதிஞானம் இருக்கிறது. தேவர்களும், நாரகிகளும் சம்யக்திருஷ்டியாக இருந்தாலும் சரி மித்யாதிருஷ்டியாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் அந்த பஃவத்தில் அவதிஞானம் இருக்கிறது. பர்யாப்தி முழுமை அடைந்ததும் இந்த அவதிஞானம் அவர்களுக்கு வந்துவிடுகிறது, ஆனால் சம்யக்திருஷ்டிகளுக்கு முன் பஃவத்திலேயே அவதிஞானம் இருந்தால், அவர்களுக்கு அவதிஞானம் அபர்யாப்த நிலையில் கூட இருக்கிறது.

'அவதிஞானத்தின் வழியாக முன் பர்யாயம் பற்றி தெரிந்துகொண்டு, தனக்கு முன்னர் இருந்த தகுதியான ஒழுக்கம் மற்றும் மற்றும் தர்மத்தின் காரணத்தால் தேவகதி கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து தர்மத்தை பாராட்டுகின்றனர். அங்குள்ள நிர்மல, நறுமணமுடைய குளத்தின் நீரில் குளித்து, அவர்களுக்கு உகந்த கிரீடத்துடன் கூடிய ஆபரணங்களை பெறுகின்றனர். சம்யக்திருஷ்டி

தேவர்கள், அவர்களாகவே ஜினேந்திர பகவானுக்கு அபிஷேகம் மற்றும் பூஜை செய்கின்றனர். மித்யாதிருஷ்டி தேவராக இருந்தால், மற்ற தேவர்களின் அறிவுரையின் மூலம், அவர்கள் எப்படி சொல்கிறார்களோ அப்படியே ஜினேந்திர பகவானுக்கு பூஜை செய்கின்றனர். சுவர்க்கத்தில் கிடைக்கும் புலனின்ப சாதனங்களில் அவர்கள் மூழ்கிவிடுவதால் அவர்களுக்கு கிடைத்த ஆயுள் காலம் முடியப்போகிறது என்பதுகூட அவர்கள் கவனத்திற்கு வருவதில்லை.

தீர்த்தங்கரரின் கல்யாணங்களிலும், மஹாபூஜை முதலியவைகளுக்கு கல்பவாசி தேவர்கள் வருகின்றனர், ஆனால் அகமிந்திரர்கள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே எந்த திசையில் தீர்த்தங்கரர் இருக்கிறாரோ அந்த திசையில் ஏழு அடிகள் எடுத்து வைத்து தலைக்குமேல் கைகூப்பி வணங்குகின்றனர்.'

இப்போது இன்னும் சில கேள்விகள் வந்திருக்கின்றன, அவைகளைப் பார்த்துவிட்டு மேலும் பார்க்க வேண்டிய விஷயங்களை துவங்கலாம். சித்தசிலை விரிந்த பிரகாசமான குடைபோல இருக்கிறது, ஆனால் நாம் பார்க்கும் படங்களில் அதை பிறைச்சந்திரன்போல காட்டப்பட்டுள்ளதே, அது எப்படி? வளைவு பகுதி மேலேயும், தட்டையான பகுதி கீழேயும் தானே இருக்கிறது?

பதில்: திரிலோகஸாரம் காதை 557, 558-ல் இதைப் பற்றி வர்ணனை வருகிறது. ஜெயதவளா நூல்13-ன் கடைசியில் கூட இதைப் பற்றி வர்ணனை வருகிறது. அங்கு 'உத்தான' என்பதின் பொருள் மேல்பாகம் சமமாக இருக்கிறது, கீழே வட்ட வடிவில் இருக்கிறது. ஆனால் அவ்வளவு பிறைச்சந்திரன் தெரியக்கூடிய அளவுக்கு வட்டமாக இல்லை. ஏனென்றால் மத்தியில் மேலும் கீழுமாக எட்டு யோஜனை அளவு பருமன் கொண்டதாகவும், வளைவுப் பகுதி 45,00,000 யோஜனை நீளமாகவும் இருக்கிறது. அதனால் வளைவு பகுதி கிட்டத்தட்ட நேர்கோடு போலவே இருக்கிறது.

கேள்வி: சுவர்க்கத்தில் விமானங்கள் வட்டவடிவாக இருக்கிறதா அல்லது எப்படி இருக்கிறது?

பதில்: விமானம் வட்டவடிவில் இருக்கிறது, மற்றபடி அங்குள்ள நகரங்கள் வர்ணனையில் கூறியது போலவே உள்ளன.

கேள்வி: சுவர்க்கங்களில் உள்ள வனங்களில் ஸ்தாவர உயிர்கள் இருக்கின்றனவா இல்லையா? அங்கு ஸ்தாவர உயிர்கள் இல்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்.

பதில்: அப்படி என்று எங்கு கேட்டீர்கள்? யார் அங்கு ஸ்தாவர உயிர்கள் இல்லை என்று சொன்னது? ஸ்தாவர உயிர்கள் உலகம் முழுவதும்

இருக்கின்றன. எங்கு பூமி இருக்கிறதோ அங்கு ஏல்லா பாதர ஏகேந்திரியங்களும் இருக்கின்றன.

இங்கு இன்னும் பல கேள்விகள் வந்துள்ளன - தேவர்கள் எந்த மொழியில் பேசுகின்றனர்? வியந்தர தேவர்கள் எந்த கதி உயிர்களுக்கு வருத்தம் கொடுக்கின்றனர்? தேவர்கள் விமானங்களின் மூலம் எங்கெங்கு செல்கின்றனர்?

பதில்: தேவர்கள் விமானங்களில் வசிக்கின்றனர். அவர்கள் விக்ரியா-வேறு உருவங்கள் செய்து கொண்டு அதன்மூலம் எங்கெங்கு போகவேண்டுமோ அங்கங்கு போகின்றனர். நாம் பயணம் செய்யும் விமானங்கள் போன்று, அவர்களுடைய விமானங்கள் இல்லை. மத்ய லோகத்தின் அசங்க்யாத தீப சமுத்திரங்களில் எங்கு வேண்டுமானாலும் அவர்களால் போகமுடியும். ஸஹஸ்ரார சுவர்க்கம் வரை உள்ள தேவர்கள் கீழே மூன்றாம் நரகம்வரை செல்லமுடியும் - செல்லவும் செய்கிறார்கள். தேவர்களின் வாகனங்களை கூட விமானம் என்று சொல்கின்றனர். அவர்கள் பேசும் பாஷை கிவார்ணபாஃரதி என்று சொல்கின்றனர், ஆனால் எனக்கு அதுபற்றி மேலும் எதுவும் தெரியாது.

கேள்வி: மித்யாதிருஷ்டி உயிர் எந்த இடம்வரை இந்திரராக முடியும்?

பதில்: மித்யாதிருஷ்டி உயிர்களால் ஒன்பதாவது கிரைவேயக அகமிந்திரர்களாக ஆகமுடியும்.

இப்போது தெரிந்து கொள்ள மீதம் கொஞ்சம் இருக்கட்டும். எப்போது நாம் தேவகதிக்கு போகிறோமோ, அப்போது இந்த கேள்விகள் மீதமிருப்பதை அவதிஞானம் மூலம் தெரிந்து, அதற்கு பதில்களை தேடலாம்! இப்போது தேவலோகத்தை விட்டுவிடலாம் இல்லையா? நான்கு கதிகளில் எங்கும் சுகம் இல்லை, அதனால் மேலுலகத்தை விட்டுவிட்டு, இப்போது மத்ய லோகத்திற்கு அதாவது திரியஞ்ச (மத்ய-நடு) உலகத்துக்குப் போகலாம், அதாவது மத்ய லோக சர்ச்சையை இப்போது துவங்கலாம்.

திரியஞ்ச என்றால் குறுக்கு என்று பொருள். உலகத்தின் மத்தியில் நிலைகொண்டுள்ளதால் இதை மத்யலோகம் என்று கூட சொல்கின்றனர். மேரு மலையின் தளத்திலிருந்து, மேரு மலையின் 1,00,040 யோஜனை உயரம்வரை, அதாவது அதன் உச்சிவரை மத்யலோகத்தின் உயரமாகும், மற்றும் இதன் நீளம் 7 ரஜ்ஜுவும், அகலம் 1 ரஜ்ஜுவும் ஆகும். முதல் பூமி கிழக்கு-மேற்காக 1 ரஜ்ஜுவும், தெற்கு-வடக்காக 7 ரஜ்ஜுவும் இருக்கிறது. இதுவே மத்ய உலகின் அகலமும், நீளமுமாகும். மேரு மலையின் தளம் 1,000 யோஜனை ஆழமுடையது. அதிலிருந்து மேருவின் உயரம் அளக்கப்படுகிறது.

இவைகளுக்கு இடையில் 1X1 ரஜ்ஜு பரப்பு உடைய நாற்கோண அமைப்பு கொண்ட திரஸநாளி இருக்கிறது. இந்த திரஸநாளியின் உள்தான்

அசங்க்யாத தீப சமுத்திரங்கள் உள்ளன. அதற்கு வெளியில் வெறும் பூமி மட்டுமே இருக்கிறது. இப்போது இந்த 1X1 ரஜ்ஜு நாற்கோணத்தில் 1 ரஜ்ஜு விட்டமுள்ள வட்டப் பரப்பை - புத்தகத்தில் உள்ள படம் 3-ஐ எடுத்துப் பாருங்கள். இந்த வட்டத்தின் வெளியில், நான்கு கோணங்களில், பூமி இருக்கிறது, இவைகளை நான்கு கோண பூமி என்று சொல்கின்றனர். அந்த வட்டத்தில் ஒன்றுக்குள் ஒன்றாக அசங்க்யாத தீப சமுத்திரங்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் நட்டநடுவில் ஜம்பூ தீபம் என்ற பெயர் கொண்ட ஒரு லட்சம் யோஜனை விட்டமுள்ள வட்டவடிவத் தீவு இருக்கிறது. அதன் நான்கு பக்கங்களிலும்-அதாவது அதைச் சுற்றிலும் வட்டவடிவில் பரவியுள்ள லவண சமுத்திரம் இருக்கிறது, அதன் விஸ்தீரணம் அதாவது அதன் அகலம் இரண்டு லட்சம் யோஜனையாகும். அது கங்கண வடிவில்-வளையல் போன்ற வடிவில் பரவியுள்ளது, ஜம்பூ தீபத்தை சுற்றி வளைத்தார்போல் அது உள்ளது. ஜம்பூ தீபத்திற்கு வெளியில் அதன் உட்புற கரை இருக்கிறது, அதன் வெளிப்புற கரை அடுத்த தாதகி கண்டத்தை தொட்டுக்கொண்டு இருக்கிறது.

(<—1,00,000 யோஜனை—>)<—2,00,000 யோஜனை—>)<—4,00,000 யோஜனை—>)
ஜம்பூ தீபம் லாவண சமுத்திரம் தாதகி கண்டம்

இதை நன்கு தெரிந்துகொள்ள ஜம்பூ தீபத்தின் மத்திய புள்ளியிலிருந்து அதாவது மேரு மலையின் நட்டநடுவிலிருந்து 50,000 யோஜனை ஆரம் கொண்ட வட்டத்தை வரைந்தால் கிடைக்கும் வட்டப்பகுதி 1,00,000 விட்டம் கொண்ட ஜம்பூ தீபம் கிடைக்கிறது. அந்த மத்திய புள்ளியிலிருந்து ஆரத்தின் அளவை மேலும் 2 லட்சம் கூட்டி வட்டம் வரைந்தால் லவண சமுத்திரத்தின் வெளிக்கரை வரையிலான வட்டம் கிடைக்கும், அது எல்லாப் பக்கமும் 2 லட்சம் யோஜனை கொண்டதாக இருக்கும்.

லவண சமுத்திரத்தின் உள்வட்டத்தின் அகலம் 1 லட்சம் யோஜனை மற்றும் வெளி வட்டத்தின் விட்டம் 5 லட்சம் யோஜனை யாகும். இப்போது நாம் 50,000 யோஜனையுடன் 2 லட்சம் கூட்டி 2.5 லட்சம் யோஜனை ஆரம் கொண்ட வட்டம் வரைந்தோம். ஆரத்தின் இரண்டு மடங்கு விட்டமாகிறது. படத்தைப் பார்த்து இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த வெளி எல்லையின் விட்டத்தை அந்த சமுத்திரத்தின் கரை என்று சொல்கின்றனர்.

லவண சமுத்திரத்தின் ஒரு பக்க விஸ்தீரணம் 2 லட்சம் யோஜனை யாகும். அதற்கு வெளியே அதை சூழ்ந்து தாதகிகண்டம் பெயர் கொண்ட தீபம் 4 லட்சம் யோஜனை விஸ்தீரணமுடையதாக இருக்கிறது. முன்னர் 2½ லட்சம் ஆரத்துடன் இந்த 4 லட்சத்தைக் கூட்ட 6½ லட்சம் யோஜனை ஆரம் கொண்ட அதாவது 13 லட்சம் யோஜனை விட்டம் கொண்ட தாதகிகண்ட தீபம் இருக்கிறது.

நடுவிலிருந்து பார்க்கும்போது ஜம்பூ தீபத்தின் ஒரு பக்க விஸ்தீரணம் 50,000 யோஜனை, அதைவிட 1½ லட்சம் அதிகம் லவண சமுத்திரத்தின் விஸ்தீரணமாகும். இரண்டும் சேர்த்து 2½ லட்சம் யோஜனை ஆகிறது. அதனுடன் 1½ லட்சம் யோஜனை கூட்ட 4 லட்சம் யோஜனை தாதகி கண்டத்தின் விஸ்தீரணம் மட்டுமாகும். நடுவிலிருந்து ஜம்பூ தீபம், லவண சமுத்திரம், தாதகி கண்டம் மூன்றன் விஸ்தீரணங்களை சேர்க்க 6½ லட்சம் யோஜனையாகிறது. அத்துடன் 1½ லட்சம் யோஜனை கூட்ட வரும் 8 லட்சம் யோஜனை அளவு அடுத்துவரும் காலோததி சமுத்திரத்தின் ஒருபக்க விஸ்தீரணமாகும்.

ஜம்பூ தீபம் ஒன்று மட்டுமே வட்ட வடிவமாக இருக்கிறது, அதற்கு வெளியே ஒரு சமுத்திரம், ஒரு தீபம், ஒரு சமுத்திரம் ஒரு தீபம் வரிசையாக இரண்டிரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்ட ஒன்றை சுற்றி இரண்டாவது, இரண்டாவதை சுற்றி மூன்றாவது என இதுபோல சுயம்பூரமண சமுத்திரம்வரை அசங்க்யாத தீபங்களும் அத்தனை சமுத்திரங்களும் உள்ளன.

எந்த தீபம் அல்லது சமுத்திரத்தின் விஸ்தீரணத்தை கண்டுபிடிக்க அதன் உள்ளிருக்கும் எல்லாத் தீபம் மட்டும் சமுத்திரத்தின் விஸ்தீரணங்களை கூட்டி அதனுடன் 1½ லட்சம் யோஜனை கூட்டினால் அந்த குறிப்பிட்ட தீபம் அல்லது சமுத்திரத்தின் ஒரு பக்க விஸ்தீரணம் கிடைக்கும். இப்போதுதான் நாம் நான்காவது காலோததி சமுத்திரத்தின் விஸ்தீரணம் 8 லட்சம் யோஜனை என்று பார்த்தோம். மற்றும் மத்தியிலிருந்து அங்குவரை - அதன் வெளிக் கரைவரை விஸ்தீரணம் 14½ லட்சம் யோஜனை என்று பர்த்தோம் - மீண்டும் பாருங்கள் - மத்தியிலிருந்து ஒரு திசையில் ஜம்பூ தீபத்தின் விஸ்தீரணம் அரை லட்சம் (50,000) யோஜனை, லவண சமுத்திரம் 2,00,000 யோஜனை, தாதகிகண்டம் 4,00,0000 யோஜனை மற்றும் காலோததி சமுத்திரம் 8,00,0000 யோஜனை யாகும். இவைகளின் மொத்தம் 14½ லட்சம் யோஜனை யாகும், இதிலிருந்து கலோததி சமுத்திரத்தின் 1½ லட்சம் யோஜனை அதிகம் கொடுக்க வேண்டும். அகையால் அதிலிருந்து எடுத்து பிறகு மீதம் வருவதை இரண்டு பாகம் செய்து, ஒரு பாகம் உள்ளிருக்கும் எல்லா தீப மற்றும் சமுத்திரங்கள் விஸ்தீரணமாகும். இரண்டாம் பாகத்துடன் 1½ லட்சம் யோஜனை கூட்ட காலோததி சமுத்திரத்தின் விஸ்தீரணமாகும். இங்கு காலோததி சமுத்தரத்தின் வெளி ஆரம் 14½ லட்சம் யோஜனை, இதிலிருந்து 1½ லட்சம் குறைக்க 13 லட்சம் வருகிறது, இதில் பாதி 6½ லட்சம் யோஜனையில் உள்ளிருக்கும் மூன்றும் சேர்ந்த விஸ்த்தீரணம் வருகிறது, மற்றும் 6½ யில் 1½ கூட்ட 8 லட்சம் யோஜனை நான்காவதின் அதாவது காலோததியின் விஸ்தீரணமாகும்.

இப்போது நாம் எல்லாவற்றிற்கும் வெளியே உள்ள சுயம்புரமண சமுத்திரத்தின் விஸ்தீரணத்தைப் பற்றிப் பார்க்கலாம். மத்ய லோகத்தின் திரஸநாளி 1X1 ரஜ்ஜு விஸ்தீரணமுடைய நாற்கோணமாகும். அதில் அந்த அளவு விட்டம் கொண்ட வட்டமே சுயம்புரமண சமுத்திரத்தின் வெளி வட்டமாகும். அதாவது மத்தியிலிருந்து ஒரு திசையில் ½ ரஜ்ஜு அளவுடையதாகும் அதில் அசங்க்யாத தீப சமுத்திரங்கள் உள்ளன. அதில் 1½ லட்சம் யோஜனை கழித்து அதை இரண்டு சம பாகமாக ஆக்கவும், அது கொஞ்சம் குறைந்த ரஜ்ஜுவின் கால் பகுதியாகும்-கொஞ்சம் குறைந்த ¼ ரஜ்ஜு வாகும். அதாவது ரஜ்ஜு வின் கால் பங்கில் கிட்டத்தட்ட உள்ளிருக்கும் அசங்க்யாத தீப-சமுத்திரங்கள் அடங்கி விடுகின்றன. சமான பாகத்தில் 1½ லட்சம் யோஜனை கூட்ட அது சுயம்புரமண சமுத்திரத்தின் விஸ்தீரணமாகும். அது முழு வட்ட வடிவடிவமாகும் - எல்லா திசையிலும் இதே விஸ்தீரணம் கொண்ட கங்கணம் போன்ற வடிவில் பரவி இருப்பதாகும்.

இப்போது இந்த 1½ லட்சம் யோஜனையை கௌணப்படுத்தி பார்த்தால்கூட ஒரு பக்கம் ¼ மற்றொரு பக்கம் ¼ உடன் ½ ரஜ்ஜு சேர்க்க சுயம்பூரமண சமுத்திரத்தின் விஸ்தீரணம் வருகிறது. ஒரு திசையில் வெளியிலிருந்து உள்வரை பார்த்தால் சமுத்திரத்திலிருந்து உள்ளிருக்கும் தீபம் பாதி விஸ்திரணமுடையதாகும், அதாவது சுயம்பூரமண தீபத்தின் விஸ்தீரணம் ஒரு திசையில் ⅛ ரஜ்ஜுவாகும். அதற்கு உள்ளிருக்கும் சமுத்திரம் அதிலிருந்து பாதியாகும். சுயம்பூரமண சமுத்திரத்தில் அசங்கியாத ஐந்தாம் குணஸ்தான சம்யக்திருஷ்டி மஹாமத்ஸயங்கள் இருக்கின்றன என்று நாம் பலமுறை பிரவசனங்களில் கேட்டிருக்கிறோம். அங்கு இப்படிப்பட்ட பெரிய-பெரிய உடல்களுடைய மீன்களும் மற்ற நீர்வாழ் உயிரினங்களும் உள்ளன.

கேள்வி: அங்கு சமுத்திரத்தின் அடிதலத்தில் இரத்தினங்கள் இருப்பதாக கேள்விப் பட்டிருக்கிறோம், அது உண்மையா?

பதில்: ஆம், அது மட்டும் நம் நினைவுக்கு வருகிறது, அதிக மஹிமை வருகிறது, ஆனால் சம்யக்திருஷ்டிகள் பற்றிய மஹிமை வருவதில்லை, அல்லவா! இவைகளைப் பற்றி மேலும் விரிவாக அடுத்து வரும் பாடத்தில் பார்க்கலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள பத்தாம் தீர்த்தங்கர் ஸ்ரீ விசாலகீர்த்தி பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

11. நடு உலகம்: தீப-சமுத்திரங்கள்

ஸ்ரீமத் நேமிசந்திர ஆச்சார்யரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலில் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பு பற்றி கொஞ்சம் தெரிந்துகொள்ள முயல்கிறோம். கீழுலக மற்றும் மேலுலக அமைப்பு பற்றி கொஞ்சம் தெரிந்து கொண்ட பிறகு, இப்போது நாம் மத்யலோகம் அதாவது நடு உலக அமைப்பு பற்றி பார்க்கவிருக்கிறோம். திர்யக் லோகம் என்றால் விலங்குகள் வாழுமிடம் என்று எடுத்துக் கொள்ளாதீர்கள், ஏனெனில் விலங்குகதி உயிர்கள் முழு உலகத்திலும் இருக்கின்றன. ஒரு இந்திரிய உயிர்களான ஸ்தாவரங்கள் உலகத்திலும் எல்லா இடங்களிலும் முழுமையாக அடைத்த வண்ணம் உள்ளன என்று கூறலாம். திரியக் என்றால் குறுக்கு அதாவது உலகின் நடுவில் பரவிய மாதிரியான அமைப்பு எனலாம். இதற்கு கனச்செவ்வக வடிவில் பக்கங்கள் உள்ளன. செவ்வகத்தின் ஒரு பக்கம் 1 ரஜ்ஜு மற்றொரு பக்கம் 7 ரஜ்ஜு, உயரம் 1,00,040 யோஜனை யாகும்.

முதல் பூமியின் கரபாகத்தில் 16,000 யோஜனையில் 16 பூமி பிரிவுகள் ஒன்றன்கீழ் ஒன்றாக உள்ளன. ஒவ்வொரு பூமி பிரிவும் 1,000 யோஜனை பருமன் கொண்டது. மேலிருக்கும் பூமிப் பிரிவின் பெயர் சித்ராபூமி யாகும். சித்ரா பூமியின் அடி பாகம்வரை மேரு மலையின் அடித்தளம்(foundation) இருக்கிறது. பூமிக்கு மேல் 99,040 யோஜனை வரை மேரு மலை உள்ளது. மேரு மலையின் அடித்தளத்திலிருந்து சிகரம்வரை இந்த நடு உலகின் எல்லையாகும். இடையில் 1X1 ரஜ்ஜு விஸ்தீரணமுடைய, கனசெவ்வக விடிவில் திரஸநாளி உள்ளது. அதில் அசங்க்யாத தீபங்களும் சமுத்திரங்களும் ஒன்று மற்றொன்றை சூழப்பட்டது போல உள்ளன. அசங்க்யாதம் என்பது எத்தனை? அது 25 கோடாகோடி உத்தார பல்ய அளவாகும்.

முன்னரே நாம் பல்லியம் கணக்கிடும் முறையை பார்த்திருக்கிறோம். அதற்கு ஒரு பள்ளம் தோண்டி முடித்துண்டுகளால் நிறப்பினோம் இல்லையா! ஒரு 100 ஆண்டுக்கு ஒரு ரோமகண்டத்தை-மயிர்த்துண்டை வெளியில் எடுத்தோம், எப்போது அந்த பள்ளம் காலியாகிறதோ அதற்கு ஆகும் காலத்தை ஒரு வியவஹார பல்யம் என்று பார்த்தோம். நீங்கள் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஒரு ஆவளியில் அசங்க்யாத(ஜெகன்ய யுக்தாசங்க்யாத) சமயங்கள் உள்ளன. அதுபோல சங்க்யாத கோடாகோடி ஆவளிகள் கொண்டது ஒரு செகண்டு-ஒரு மணித்துளி யாகும். கோடி மடங்கு கோடியை ஒரு கோடாகோடி என்று சொல்கிறோம். ஒரு கோடியில் ஒன்றுக்கு பக்கத்தில் 7 பூஜ்ஜியங்கள் உள்ளன, ஒரு கோடா கோடியில் ஒன்றுக்கு பக்கத்தில் 14 பூஜ்ஜியங்கள் உள்ளன. ஒரு மணித்துளியில் இத்தனை சமயங்கள் என்றால் ஒரு மணியில் எத்தனை, ஒரு வருடத்தில் எத்தனை, 100 வருடங்களில் 1-க்கு ஒன்றுக்குப் பக்கத்தில் எத்தனை பூஜ்ஜியங்கள் இருக்கும்? இத்தனை

சமயங்கள் சென்ற பிறகு ஒரு ரோமகண்டத்தை எடுக்கவும். எப்போது அந்த பள்ளம் காலியாகிறதோ அந்த கால அளவு ஒரு வியவஹார பல்லியமாகும். இதை அசங்க்யாத கோடி வருடங்களின் சமயத்தால் பெருக்க உத்தார பல்யத்தின் ரோமகண்டங்களின் எண்ணிக்கை வரும். இப்படி ஒரு உத்தார பல்யம், இரண்டு உத்தார பல்யம், கோடி உத்தார பல்யம், கோடாகோடி உத்தார பல்யம், 25 கோடாகோடி உத்தார பல்யத்தில் எத்தனை சமயங்கள் உள்ளனவோ அத்தனை அசங்க்யாத தீப சமுத்திரங்கள் இந்த நடுஉகில் உள்ளன, அவைகள் ஒன்றுக்கொன்று இரண்டு-இரண்டு மடங்கு விஸ்தீரணம் உடையவைகளாகும். இப்போது ஒரு ரஜ்ஜு எவ்வளவு பெரியது என்று யூகித்துப் பாருங்கள்.

இதில் பாதி தீபம் பாதி சமுத்திரம் அதாவது இரண்டும் எண்ணிக்கையில் சமமாக உள்ளன. இந்த அசங்க்யாத சமுத்திரங்களில் கர்மபூமி சம்பந்தமானவை லவண சமுத்திரம், காலோததி சமுத்திரம், மற்றும் சுயம்புரமண சமுத்திரம் ஆகிய மூன்று சமுந்திரங்கள் மட்டுமே. முதல் சமுத்திரம் லவண சமுத்திரம், இரண்டாவது சமுத்திரம் காலோததி சமுத்திரம், மற்றும் கடைசி சமுத்திரம் சுயம்புரமண சமுத்திரம். இவைகளில் மட்டுமே ஜலசர்-நீர்வாழ் பிராணிகள் இருக்கின்றன, மற்ற சமுத்திரங்களில் இல்லை. ஜலசர் என்று கூறினேன், ஜல காயிக் என்று சொல்லவில்லை. ஜலசர் என்றால் நீரில் வாழும் மீன், முதலை, பாம்பு, ஆமை முதலியன. இந்த சமுத்திரங்களின் நீரின் சுவை கீழ்கண்டவாறு இருக்கின்றன:-

சமுத்திரம்	நீரின் சுவை
லவண சமுத்திரம்,	உப்புக்கு சமமான கரிப்பு சுவை
காலோததி சமுத்திரம்	நீரின் சுவை
புஷ்கரவர சமுத்திரம்	நீரின் சுவை
வருணீவர சமுத்திரம்	மதுவுக்கு சமமான சுவை
க்ஷீரவர சமுத்திரம்	பால் போன்ற சுவை
கிருதவர சமுத்திரம்	நெய் போன்ற சுவை
மற்ற எல்லா சமுத்திரங்கள்	கரும்பு சாறு போன்ற சுவை

நடுஉலகின் சமுத்திரம் மற்றும் தீபங்களை வெளியிலிருந்து உள்பக்கம் அளக்கும்போது முதலில் வரும் சுயம்புரமண சமுத்திரத்தின் ஒரு பக்கம் கிட்டத்தட்ட ¼ ரஜ்ஜு வாகும். அதற்கு உள்பக்கம் கிட்டத்தட்ட ⅛ ரஜ்ஜு அளவு விஸ்தீரணம் கொண்டதாக சுயம்புரமண தீபம் இருக்கிறது. நீங்கள் படம் 3-ஐ பாருங்கள். வெளியில் நீல நிறத்தில் இருப்பது சுயம்புரமண சமுத்திரமாகும்.

அதற்கு உள்ளே அதில் பாதி அளவு இருப்பது சுயம்புரமண தீபமாகும். அதை ஏன் இரண்டு நிறத்தில் காட்டப்பட்டு இருக்கிறது? அந்த இரண்டு நிறங்களுக்கு இடையே வட்ட வடிவில் மேடும் பள்ளமாக இருப்பது எது? என்று நீங்கள் கேட்கலாம்.

சுயம்புரமண தீபத்தின் மத்தியில் வட்டவடிவ கங்கணம் போல இருப்பது சுயம்பிரபா என்ற பெயர் கொண்ட மலையாகும். இந்த மலையால் அந்த தீபம் இரண்டு பாகமாக ஆகிறது-ஒன்று உள் பக்கமாகவும், ஒன்று வெளிப்பக்கமாக சுயம்புரமண சமுத்திரத்தின் பக்கமாகவும் இருக்கிறது. உள்பகுதி மற்ற தீபங்களைப்போல விலங்குகளின் ஜெகன்ய போகபூமியாகும். வெளி பாகம் விலங்குகளின் கர்மபூமியாகும். சுயம்புரமண சமுத்திரம் கூட விலங்குகளின் கர்ம பூமியாகும். இதில் பெரிய-பெரிய உடலளவு கொண்ட விலங்கு உயிர்கள் உள்ளன. இந்த சமுத்திரத்திலேயே பெரிய உடலுடைய மஹாமத்ஸ்யங்கள் உள்ளன. இந்த பெரிய உடலின் அளவு எவ்வளவு என்று தெரியுமா? 12½ கோடி கனயோஜனை அதாவது ஒவ்வொரு மஹாமத்ஸ்யமும் 1,000 யோஜனை நீளம், 500 யோஜனை அகலம், 250 யோஜனை உயரமுடையதாகும். அவைகளில் அஸங்க்யாத சம்மூர்ச்சன மஹாமத்ஸ்யங்கள் சம்யக்திருஷ்டிகளாகும்-ஐந்தாம் குணஸ்தானவர்த்தி உயிர்களாகும்.

அங்கு ஐந்தாம் காலம்போல இருப்பதாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. இங்கிருந்து எத்தனையோ மத்ஸ்யங்கள் மரணமடைந்து ஏழாம் நரகம் கூட செல்கின்றன. சுயம்புரமண சமுத்திரம் வட்ட வடிவில் இருக்கிறது, திரஸநாளி நாற்கோண வடிவில் இருக்கிறது. சமுத்திரத்திற்கு வெளியே நான்கு மூலைகளில் பூமி இருக்கிறது, அங்குகூட ஐந்தாம் காலம் போல இருக்கிறது, அங்குகூட ஐந்து இந்திரிய விலங்கு உயிர்கள் காணப்படுகின்றன. கர்மபூமியாக இருப்பதால் இங்கு இரண்டு இந்திரிய, மூன்று இந்திரிய, நான்கு இந்திரிய உயிர்கள்கூட காணப்படுகின்றன. சுயம்பிரப மலைக்கு வெளிப்பக்கத்தில் வாழும் உயிர்களின் அதிகபட்ச உடலளவு கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜாதி	பெயர்	உயரம்	கன அளவு
ஒரு இந்திரிம்	தாமரை	1,000 யோஜனைக்கும் கொஞ்சம் அதிகம்	750 கனயோஜனை
இரண்டு இந்திரியம்	சங்கு	12 யோஜனை	365 கனயோஜனை
மூன்று இந்திரியம்	சிகப்பு தேள்	¾ யோஜனை	27/8192 கனயோஜனை
நான்கு இந்திரியம்	வண்டு	1 யோஜனை	⅜ கனயோஜனை
ஐந்து இந்திரியம்	மீன்	1000 யோஜனை	1,250,00,000 கனயோஜனை

இந்த எண்ணிக்கையற்ற தீப சமுத்திரங்கள் எண்ணிக்கையற்றத் தன்மையை தெரிந்துகொள்ள ஒரு லட்சம் யோஜனையை இரண்டு மடங்கு இரண்டு மடங்காக ஆக்கிக்கொண்டே போனால் கடைசி சமுத்திரம் ¼ ரஜ்ஜு அளவு ஆக வேண்டும் என்பது நம் கற்பனையில் வரும்போது நடு உலகத்தின் விசாலத்தன்மை பற்றிய ஒரு புரிதல் நமக்கு வரும், ஆனாலும்கூட இதை ஒரு லட்ச அசங்க்யாதம் என்று சொல்கின்றனர் என்றால், கேவலஞானத்திற்கு விஷயமான அனந்தம் எவ்வளவு பெரியதாக இருக்கும்! ஐயஹோ, நாம் ஒரு பைசாவில் துவங்கி, முதல் நாள் ஒரு பைசா, இரண்டாம் நாள் இரண்டு பைசா, மூன்றாம் நாள் நான்கு பைசா, இந்த கிரமத்தில் எடுத்துக் கொண்டால் 32-ஆவது நாள் 31-ஆம் நாளைப்போல இரண்டு மடங்கு பைசா கிடைக்கும். இரண்டை இரண்டால் பெருக்க நான்கு வருகிறது, இரண்டை நான்கு முறை பெருக்க 16 வரும். இரண்டை எட்டு முறை பெருக்கினால் 256 வரும், இரண்டை 16 முறை பெறுக்கினால் 65,536 வரும், இரண்டை 32 முறை பெருக்கினால் 429,49,67,296 பைசா அதாவது 4,29,49,672.96 ரூபாய் வரும். 31-வது முறை செய்யும்போது இதில் பாதி அதாவது 2,14,74,836.48 ரூபாய் கிடைக்கும். நடுஉலக அளவை கணக்கிடும்போது, ஒரு லட்சத்தில் துவங்கி அசங்க்யாத (25 கோடாகோடி உத்தார பல்லிய தடவை) முறை இரண்டு-இரண்டு மடங்காக ஆக்கவேண்டும்.

இந்த அசங்க்யாத தீப சமுத்திரங்களில் 2½ தீபம் மற்றும் அதனுள் உள்ள இரண்டு சமுத்திரங்களை கூட்ட 45 லட்சம் யோஜனை விட்ட அளவு கொண்ட வட்டவடிவில் மனிதர்களின் உலகம் இருக்கிறது. நடுவில் ஜம்பூதீபம் ஒரு லட்சம் யோஜனை, அதற்கு வெளியே அதைச்சுற்றி 2 லட்ச விஸ்தீரணமுடைய லவண சமுத்திரம், அதற்கு வெளியே அதைச்சுற்றி 4 லட்ச விஸ்தீரணமுடைய தாதகி கண்டம், அதற்கு வெளியே அதைச்சுற்றி 8 லட்ச விஸ்தீரணமுடைய காலோததி சமுத்திரம், அதற்கு வெளியே அதைச்சுற்றி 16 லட்ச விஸ்தீரணமுடைய புஷ்கரார தீவின் உள்பக்க பாதி மனிதர்களின் உலகம்-மனுஷ க்ஷேத்ரமாகும். அதன் விட்டம் 1+2+2+4+4+8+8+8+8=45 லட்சம் யோஜனை அளவு மனுஷ க்ஷேத்ரமாகும். இவ்வளவு பெரிய உலகில் இந்த சிறிய இடத்தில் மட்டுமே மனிதர்களைப் பார்க்கமுடியும், இதற்கு வெளியில் எங்குமில்லை. தேவர்கள் கூட மனிதர்களை தூக்கிக்கொண்டு இதற்கு வெளியில் போகமுடியாது. ஆம் சமுத்காத நிலையில் மட்டும் உயிரின் பிரதேசம் இதற்கு வெளியில் பரவமுடியும் என்பது வேறு விஷயம், அப்போதுகூட மூல உடல் இங்கிருந்து வெளியில் செல்வதில்லை.

மனித உலகின் எல்லை மானுக்ஷோத்ர மலை வரையாகும். அது புஷகரார தீவின் மத்தியில் உள்ளது. மானுக்ஷோத்ர மலையின் வெளிப் பக்கத்திலிருந்து ஸ்வயம்பிரப மலையின் உள்பகுதிவரை உள்ள அசங்க்யாத தீபங்கள் விலங்குகளின் ஜெகன்ய போகபூமியாகும். இடையில் இருக்கும் அசங்க்யாத சமுத்திரங்களில் நீர்வாழ்-ஜலசர் உயிர்கள் எதுவும் இல்லை. அங்கு போக பூமி

மனிதர்கள் கூட இல்லை. தேவர்கள் என்னவோ நடு உலகில் உள்ள எல்லா இடங்களுக்கும் (அசங்க்யாத தீபங்களுக்கும், சமுத்திரங்களுக்கும்) எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும்!

கேள்வி: பிறகு ஏன் இங்கு அவர்கள் வருவதில்லை?

பதில்: அவர்கள் கொஞ்சம்கூட பாபிகளை பார்க்க விரும்புவதில்லை. இங்கு தீர்த்தங்கரர் இருக்கும்போது வந்தார்கள்.

கேள்வி: நடு உலகில் மானுக்ஷோத்ர மலையின் வெளிப் பக்கத்திலிருந்து ஸ்வயம்பிரப மலையின் உள்பகுதிவரை ஜெகன்ய போகபூமி என்று ஏன் கூறப்படுகிறது?

பதில்: உத்தம போகபூமி, மத்யம போகபூமி மற்றும் ஜெகன்ய போகபூமி என மூன்று வகை போகபூமிகள் இருக்கின்றன. இரண்டரை தீபங்களில் அதாவது மனித உலகில் என்னவோ மூன்று போகபூமிகளும் இருக்கின்றன, அவைகளைப் பற்றி பின்னர் பார்க்கலாம். அதில் விலங்குகளும் மனிதர்களும் என இரண்டு கதி உயிர்களுமே வாழ்கின்றன. இரண்டரை தீபங்களிலும் விலங்குகளும் மனிதர்களும் வாழ்கின்றன. மனித உலகம் என்றதுமே மனிதர்கள மட்டுமே வாழ்வதாக அர்த்தமில்லை, இங்கு விலங்கு உயிர்களும் வாழ்கின்றன, ஜோதிஷி மற்றும் தேவ கதி உயிர்கள் கூட இருக்கின்றன. விலங்கு கதிகளின் தங்குமிடம் முழு உலகமுமாகும்.

கேள்வி: விலங்குகள் மற்றும் பறவைகள் (பசு-பக்ஷி) முழு உலகத்திலும் இருக்கின்றனவா?

பதில்: கால்நடைகளும் மற்றும் பறவைகளும் ஐம்புல உயிர்களாகும், அவை கர்ம பூமி மற்றும் போக பூமியில் வாழ்கின்றன. விகலேந்திரியங்கள் - இரண்டு இந்திரிய, மூன்று இந்திரிய, நான்கு இந்திரிய உயிர்கள் கர்ம பூமியில் மட்டுமே வாழ்கின்றன. ஏகேந்திரிய உயிர்கள்கூட விலங்குகதி உயிர்களேயாகும், அவைகள் என்னவோ முழு உலகத்தில் எல்லா இடத்திலும் வாழ்கின்றன.

கேள்வி: இங்கு ஆயுள் எவ்வளவாகவிருக்கிறது?

பதில்: இங்கு என்றால் எங்கு?அசங்க்யாத தீபங்களில் எங்கு விலங்குகளின் ஜெகன்ய போகபூமியோ அங்கு அதிகபட்ச ஆயுள் பல்லிய அளவு இருக்கிறது, குறைந்தபட்ச ஆயுள் ஒரு கோடி பூர்வ வருடங்களுக்கு ஒரு சமயம் அதிகமாகும். கர்மபூமி மனித மற்றும் பஞ்சேந்திரிய விலங்குகளின் அதிகபட்ச ஆயுள் ஒரு கோடி பூர்வ வருடங்கள். பூர்வம் என்றால் எவ்வளவு என்று ஞாபகம் இருக்கிறதா? எழுபது லட்சத்து ஐம்பத்தாறாயிரம் கோடி வருடங்கள் ஒரு பூர்வம் ஆகும். அப்படி ஒரு பூர்வம், இரண்டு பூர்வம்,.. லட்சம் பூர்வம், ... ஒரு கோடி பூர்வம். கர்மபூமி மனிதர்கள், மனமுடைய மற்றும் மனமில்லா ஐந்து இந்திரிய விலங்குகள் ஆகிய எல்லா உயிர்களுக்கும் இவ்வளவு அதிக பட்ச ஆயுளாகும். கர்ம்பூமியில் குறைந்தபட்ச ஆயுள் பர்யாப்த உயிர்களுக்கு

அந்தர்முகூர்த்தமாகும், மற்றும் லப்தி அபர்யாப்த உயிர்களுக்கு ஷுத்ரபஃவ பிரமாணமாகும், அதாவது ஒரு சுவாச காலத்தில் 18-ல் ஒரு பாகமாகும்.

கேள்வி: சுயம்பூரமண சமுத்திரத்தில் உள்ள சம்யக்திருஷ்டிகள் எந்த சம்யக்த்துவத்துடன் உள்ளனர்? அங்கு யார் உபதேசம் கொடுக்கின்றனர்? அவைகள் எந்த வகையான உணவை உட்கொள்கின்றன?

பதில்: அங்கு கர்பஜ உயிர்கள் பிரதமோபசம சம்யக்த்துவம் கூட பெறமுடியும், மற்றும் க்ஷயோபசம(வேதக) சம்யக்த்துவம் கூட பெறமுடியும். எல்லா சம்மூர்ச்சன ஐம்பொறி உயிர்கள் க்ஷயோபசம(வேதக) சம்யக்த்துவம் மட்டுமே பெற முடியும், ஏனெனில் அவைகள் பிரதமோபசம சம்யக்த்துவம் பெறமுடியாது. தேசனாலப்தியின் அவசியம் பிரதமோபசம சம்யக்த்துவம் பெற முக்கியமாகும், அதிலும் முன்பவ தேசனாகூட நிமித்தமாக இருக்கமுடியும். ஜாதிஸ்மரணம்-முற்பிறவி நினைவுகூட ஒரு காரணமாக இருக்கிறது. வேதக சம்யக்த்துவத்தை சாதி மித்யாதிருஷ்டிகளே பெறுகின்றனர். அவைகள் எந்த வகையான உணவை உட்கொள்கின்றன? என்றும் கேட்டீர்கள். அங்கு கூட அவைகளுக்கு தகுதியான உணவுகளையே உண்கின்றன.

இப்போது நாம் மற்ற கேள்விகளை கொஞ்சம் ஒதுக்கி விட்டு, பூகோளம் பற்றி மேலும் சில தகவல்களை பார்க்கலாம். இப்போது இரண்டரை தீபத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள படம் 4-ஐ பாருங்கள். இங்கு லவண சமுத்திரமும், காலோததி சமுத்திரமும் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளன. காலோததியை காலோதக என்றும் சொல்கின்றனர். லவண சமுத்திரத்திற்கு மத்தியில் ஜம்பூதீபம் ஒரு மிகச்சிறிய வட்டமாக காட்டப் பட்டுள்ளது. இரண்டு சமுத்திரங்களுக்கு இடையில் தாதகி கண்டத் தீபம் இருக்கிறது. காலோததி சமுத்திரத்திற்கு வெளியே முழு புஷ்கரவர தீபம் இருக்கிறது, அதற்கு மத்தியில் மானுக்ஷோத்ர மலை கங்கண வடிவில் வட்டமாக இருக்கிறது. காலோததி சமுத்திரத்திலிருந்து மானுக்ஷோத்ர மலைவரை பாதி புஷ்கரவர தீபம் உள்ளது, புஷ்கரார்த்தம் என்றுகூட சொல்கின்றனர். அதற்கு வெளியே தீபத்தில் எந்த அமைப்பும் காட்டப்படவில்லை. இந்த படத்தில் ஜம்பூ தீபத்தின் வடிவம் சிறியதாக இருப்பதால் அதிலும் எந்த அமைப்பும் காட்டப்பட முடியவில்லை. இதைப்பற்றிய விரிவான சர்ச்சையை ஜம்பூதீப அமைப்பு பற்றி பார்க்கும் போது காணலாம். இங்கு சரியான விகிதத்தில் (drawing to scale) படம் வரையப்பட்டுள்ளதால் இந்த படத்தில் ஜம்பூதீப உள் அமைப்பு எதுவும் காட்டப்படவில்லை.

ஜம்பூதீபம் ஒரு முழு வட்ட வடிவில் இருக்கிறது. தாதகி கண்டத் தீபம் கிழக்கு தாதகி கண்டம், மேற்கு தாதகி கண்டம் என இரண்டு பாகமாக உள்ளது. இதை இரண்டு பாகமாக பிரிப்பது ஈஷ்வாகார மலை என்று பெயரால் அழக்கப்படுகிறது. இந்த மலையின் அமைப்பை படத்தில் பாருங்கள். லவண

சமுத்திரத்திற்கு வடக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றும் என இரண்டு ஈஷ்வாகார மலைகள் உள்ளன, அது காலோததி சமுத்திரம்வரை விரிந்து இருக்கிறது. அதேபோல புஷ்கரார்த்தத்திலும் கூட இரண்டு ஈஷ்வாகார மலைகள் உள்ளன, அது காலோததி சமுத்திரத்திலிருந்து மானுக்ஷோத்ர மலை விரிந்து இருக்கிறது. இதனால் புஷ்கரார்த்தம் கூட கிழக்கு புஷ்கரார்த்தம், மேற்கு புஷ்கரார்த்தம் என இரண்டு பாகமாக உள்ளது.

மனிதர்களின் உலகம் அதாவது 2½ தீபம் வரிசையாக இப்படிப்பட்ட ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன:- 1.ஜம்பூ தீபம், 2.கிழக்கு தாதகி, 3.மேற்கு தாதகி, 4.கிழக்கு புஷ்கரார்த்தம், 5.மேற்கு புஷ்கரார்த்தம். ஒவ்வொன்றின் நடுவில் ஒரு புள்ளி வடிவில் ஐந்து மேருமலைகள் உள்ளன, அவைகளின் பெயர்களாவன:- 1.சுதர்சன மேரு, 2.விஜய மேரு, 3.அசல மேரு, 4.மந்தர மேரு, 5.வித்யுன்மாலி மேரு. ஒவ்வொரு மேருவிற்கு கிழக்கிலும், மேற்கிலும் விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு தீபத்திற்கும் (அல்லது அரை தீபத்திற்கும்) தெற்கில் ஒரு பரத க்ஷேத்திரமும், வடக்கில் ஒரு ஐராவத க்ஷேத்திரமும் உள்ளது. இந்த படத்தில் தெற்கு பக்கத்தில் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது பரத க்ஷேத்திரமாகும். அவைகளில் 4 படத்தில் நன்றாகத் தெரிகின்றன, ஜம்பூ தீப பரத க்ஷேத்திரம் மஞ்சள் புள்ளி வடிவில் காட்டப்பட்டுள்ளது. இவை ஐந்து பரத க்ஷேத்திரங்கள் மட்டுமே, இதே போல ஐந்து ஐராவத க்ஷேத்திரங்கள் வடக்கு பக்கத்தில் சிகப்பு நிறத்தில் காட்டப் பட்டுள்ளன.

ஒவ்வொரு மேரு சம்பந்த விதேக க்ஷேத்திரம், பரத க்ஷேத்திரம், ஐராவ க்ஷேத்திரம் மற்றும் பிற போகபூமிகள், மலைகள், ஆறுகள், குளங்கள் முதலான அமைப்புகளை அடுத்த பாடத்தில் பார்க்கலாம். பிறகு ஜம்பூ தீபத்திற்கும் மற்ற தீபங்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும், சிறப்பு அம்சங்களையும் பார்க்கலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள பதினொன்றாம் தீர்த்தங்கர் ஸ்ரீ வஜ்ரதர பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

12. ஜம்பூதீபம்

ஸ்ரீமத் நேமிசந்திர ஆச்சார்யரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலில் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பு பற்றி தெரிந்து கொண்டு வருகிறோம். நடு உலகின் 2½ தீபங்களின் அமைப்பு பற்றி நாம் பார்த்துக்கொண்டு இருந்தோம். 2½ தீபங்களின் வெவ்வேறு இடங்களின் பெயர்கள் மற்றும் அவைகள் பற்றி பொதுவான விஷயங்களை பார்த்தோம், ஆனால் அந்த தீபங்களைப் பற்றி விரிவான வர்ணனையை பார்த்த பிறகு நமக்கு அவைகளின் அமைப்பு பற்றிய சரியாக யூகம் வரமுடியும். முதன்முதலில் நாம் ஜம்பூதீப அமைப்பை பார்க்கலாம். இதை நாம் படம் 5-ன் ஆதாரத்தில் புரிந்துகொள்ள முயலலாம்.

ஜம்பூதீபம் ஒரு லட்சம் விட்டம் கொண்ட வட்ட வடிவில் இருக்கிறது என்பதை நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். இதில் ஆறு மலைகள் கிழக்கிலிருந்து மேற்குவரை முழுவதும் பரவியிருக்கின்றன, அவை கிழக்கு பக்கத்திலும் லவண சமுத்திரத்தை தொட்டுக்கொண்டிருக்கின்றன, மேற்கு பக்கத்திலும் லவண சமுத்திரத்தை தொட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த மலைகளை குலாசல மலைகள் என்று சொல்கின்றனர். இந்த படத்தில் கீழே தெற்கில் மஞ்சள் நிறத்தில் உள்ள இடத்துக்கு மேலே ஒரு மலை காட்டப்பட்டுள்ளதே அதன் பெயர் ஹிமவான் மலை எனப்படுகிறது. அதற்கு மேலே வட பக்கம் உள்ள இடத்தை விட்டு இரண்டாவது மலை இருக்கிறது அதன் பெயர் மஹாஹிமவான் மலை எனப்படுகிறது. மேலே உள்ள மூன்றாவது மலையின் பெயர் நிஷத மலை யாகும். இந்த மலைகள் எல்லாம் சமமாக இல்லை என்பதை படத்தைப் பார்த்து தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஒரு லட்சம் விட்டம் கொண்ட ஜம்பூ தீபத்தின் தெற்கு-வடக்கு அளவு விட்டத்தை 190-ஆல் வகுக்க அதில் ஒரு பாக அளவு கொண்டது பரத க்ஷேத்திரத்தின் அளவாகும். இதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

ஜம்பூ தீபம் வட்டமாக இருப்பதால் அதை குறுக்காக வெட்டினால் எல்லாவற்றிற்கும் தெற்கு பக்கத்தில் இந்த வில்வடிவில் பரத க்ஷேத்திரத்தைப்

பார்க்க முடியும். மத்தியில் இந்த இடம் பெரிய அளவாகவும், இரண்டு பக்கமும் செல்ல செல்ல குறைந்து கொண்டேயும் போகும். இந்த நடுப்பகுதி (இதை பரத க்ஷேத்திர அம்பு பகுதி அல்லது விஷ்கம்பம் என்றும் சொல்லுவார்கள்)

முழு வட்டத்தின் விட்டத்தில் நூற்றுத்தொண்ணூற்றில் ஒரு பகுதியாக (1/190) இது இருக்கிறது. இதை ஒரு பாகப் பிரமாணம் என்று சொல்வார்கள்.

இந்த அளவை(unit) மூலம் எல்லா க்ஷேத்திரங்களின் மற்றும் மலைகளின் அகலம் எவ்வளவு என்பதை பார்க்கலாம். எங்கு பரதக்ஷேத்திரத்தை ஒரு பாகப் பிரமாணம் என்று சொல்லப்பட்டதோ அங்கு ஹிமவான் மலையின் அகலம் தெற்கு வடக்காக இரண்டு பாக அளவாகும். இங்கு கிழக்கு மேற்கின் அகலம் பேசப்படவில்லை. இங்கு ஒரு க்ஷேத்திரம், ஒரு மலை, ஒரு க்ஷேத்திரம், ஒரு மலை ஒவ்வொன்றும் ஒன்றைவிட அடுத்தது இரண்டு மடங்காகும். ஹிமவான் மலையைப்போல இரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்டது அதாவது நான்கு பாகப்பிரமாணம் கொண்டது ஹைமவத க்ஷேத்திரமாகும். அதைப்போல இரண்டு மடங்கு-எட்டு பாகப் பிரமாணம் கொண்டது மஹாஹிமவான் மலை யாகும். அதைப்போல இரண்டு மடங்கு-பதினாறு பாகப் பிரமாணம் கொண்டது ஹரிக்ஷேத்திரமாகும். அதைப்போல இரண்டு மடங்கு-முப்பத்திஇரண்டு பாகப் பிரமாணம் கொண்டது நிஷத மலை யாகும்.

வடக்கிலும் இதேபோன்ற அமைப்பு தான் உள்ளது. ஐராவத க்ஷேத்திரம் ஒரு பாகப் பிரமாணம் ஆகும். சிகரி மலை இரண்டு பாகப் பிரமாணம் ஆகும். ஹைரண்யவத க்ஷேத்திரம் நான்கு பாகப் பிரமாணம் ஆகும். ருக்மி மலை எட்டு பாகப் பிரமாணம் ஆகும். ரம்யக க்ஷேத்திரம் பதினாறு பாகப் பிரமாணம் ஆகும். நீல மலை முப்பத்திஇரண்டு பாகப் பிரமாணம் ஆகும். இவ்வளவு மூன்று மலைகளும் மூன்று க்ஷேத்திரங்களும் இரண்டு பக்கமும் உள்ளன. இடையில் நிஷத மலைக்கும் நீல மலைக்கும் இடையில் அறுபத்திநான்கு பாக அளவு கொண்ட க்ஷேத்திரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு விதேக க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. இவைகளை நாம் இப்போது கூட்டிப் பார்க்கலாம். ஒரு பக்கம் 1+2+4+8+16+32=63 பாகங்கள் வருகிறது. அடுத்த பக்கம் கூட 63 பாகங்கள் இதேபோலவே இருக்கிறது. நடுவில் 64 பாகங்கள் இருக்கிறது. மொத்தத்தையும் கூட்ட 63+63+64=190 பாகங்களாகிறது. இதில் ஒரு பாகம் பரதக்ஷேத்திரத்தின் நடுவில் அகலமாக இருக்கிறது. இதை 'பாஃண்' அல்லது 'உத்ஸேத' என்றும் சொல்கின்றனர்.

நாம் 1,00,000 யோஜனையை 190 பாகமாக்கினோம். அதில் ஒரு பாக அளவை கண்டுபிடிக்க 1,00,000-ஐ 190-ஆல் வகுக்க வேண்டும்.

100000/190 = 10000/19 = 526+6/19

அதாவது ஐநூற்று இருபத்திஆறு மற்றும் பத்தொன்பதில் ஆறு யோஜனை அளவு பரத க்ஷேத்திர பாஃணத்தின் பிரமாணமாகும். பரத க்ஷேத்திரத்தை நாம் வில் வடிவில் பார்த்தோமல்லவா? இப்போது 'நாண்' பகுதியின் பிரமாணம் செய்யப்படவில்லை.

நாம் படம் 5-ல் பரதக்ஷேத்திரத்தின் மேலிருந்து கீழ்வரை உள்ள விட்டப் பகுதியை 190-ல் ஒரு பாகம் என்று சொன்னோம். அதேபோல அதன் விஸ்தீரணம் 526 6/19 யோஜனை என்று பார்த்தோம். இதைப்போல இரண்டு மடங்கு ஹிமவான் மலையாகும். அதைப்போல இரண்டிரண்டு மடங்கு மேலே உள்ள க்ஷேத்திரமும் மலையுமாகும். எவ்வளவு பரத க்ஷேத்திரத்தின் பாஃணமோ-விஸ்தீரணமோ அவ்வளவே ஐராவத க்ஷேத்திரத்தின் அளவுமாகும். எவ்வளவு ஹிமவான் மலையின் விஸ்தீரணமோ எவ்வளவோ அவ்வளவே சிகரி மலையின் விஸ்தீரணமாகும். எவ்வளவு ஹைமவத க்ஷேத்திரத்தின் விஸ்தீரணமோ அவ்வளவே ஹைரண்யவத க்ஷேத்திரத்தின் அளவுமாகும். எவ்வளவு மஹாஹிமவான் மலையின் விஸ்தீரணமோ எவ்வளவோ அவ்வளவே ருக்மி மலையின் விஸ்தீரணமாகும். எவ்வளவு ஹரிச் க்ஷேத்திரத்தின் விஸ்தீரணமோ அவ்வளவே ரம்யக க்ஷேத்திரத்தின் அளவுமாகும். நிஷத மலையின் விஸ்தீரணம் எவ்வளவோ அவ்வளவே நீல மலையின் விஸ்தீரணமாகும். இந்த இரண்டு மலைகளுக்கும் இடையில் மலையின் இரண்டு மடங்கு அளவில் ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது, அதில் விதேக க்ஷேத்திரங்களும் மற்றும் வேறு அமைப்புகளும் உள்ளன.

நாம் இதை கீழே காட்டியள்ள கட்டத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

பாகப் பிரமாணம்	1	2	4	8	16	32	64	32	16	8	4	2	1
மலை		ஹமவன்		மஹாஹிமவன்		நிஷதம்		நீலம்		ருக்மி		சிகரி	
க்ஷேத்ரம்	பரதம்		ஹைமவதம்		ஹரி		விதேகம்		ரம்யகம்		ஹைரண்யவதம்		ஐராவதம்

தெற்கு வடக்காக விட்டத்தை இவ்வாறு பிரித்துப் பார்த்தோம். கிழக்கு மேற்காக விட்டத்தை பிரித்துப் பார்த்தோமானால், மத்தியில் 10,000 யோஜனை கொண்ட சுதர்சன மேரு இருக்கிறது. அதற்கு இரண்டு பக்கத்திலும் 22,000 யோஜனை கொண்ட பத்ராசல வனம் இருக்கிறது. மற்றும் அதற்கு இரண்டு பக்கத்திலும் 23,000 யோஜனை கொண்ட விதேக க்ஷேத்திரம் இருக்கிறது. இவ்வாறு 10,000 +22,000 + 22,000 +23,000 +23,000 =1,00,000 யோஜனை விட்டம் வருகிறது.

இங்கு இறந்த பிறகு விதேக க்ஷேத்திரத்திற்கு சென்று பிறக்க சிலர் விரும்புகிறீர்கள் அல்லவா? யார்-யார் விரும்புகிறீர்கள்? ஆம் பலர் விரும்புகிறீர்கள். பிறகு விதேகம் எங்கிருக்கிறது என்பது பற்றியும் தெரிந்து

கொள்ளுங்கள். ஆனால் ஒன்றை சரியாக நினைவில் கொள்ளுங்கள்-இந்த கர்ம பூமியிலிருந்து யார்-யார் விதேக க்ஷேத்திரத்திற்கு சென்று பிறக்க விரும்புகிறீர்களோ, அவர்கள் அங்கு மித்யாத்துவ நிலையில்தான் செல்ல வேண்டும், ஏனென்றால் சம்யக்த்துவம் பெற்ற பிறகு தேவஆயுள் கட்டிக் கொண்டு உயிர் சுவர்க்கத்தில் சென்று பிறக்கிறது. முதலில் மனித ஆயுள் கட்டிக்கொண்டு பிறகு சம்யக்த்துவம் பெற்று அங்கு செல்லலாம் அல்லவா? என்று நீங்கள் கேட்கலாம். அப்படிப்பட்ட உயிர் போகபூமியில்தான் சென்று மனிதராகின்றனர், அதுவும் க்ஷாயிக சம்யக்த்வியாக இருந்தால் தான், இல்லையென்றால் அங்குகூட மித்யாத்வத்துடன்தான் சென்று பிறக்க வேண்டும்.

விதேக க்ஷேத்திரத்திற்கு எதற்காகப் போக விரும்புகிறீர்கள்? மோக்ஷ மார்க்கத்தை வெளிப்படுத்துவதற்காக போதிய உபதேசம் மற்றும் அதற்குத் தேவையான எல்லாம் இங்கேயே கிடைக்கின்றன. வேறு எங்கோ பிறப்பது எனக்கு நல்லதாக இருக்கும் என்ற நம்பிக்கை, நிமித்தத்தால் தான் காரியம் நிகழ்கிறது என்ற தவறான நம்பிக்கையாகும். ஒரு பவத்தில் ஆசை கொள்வதுகூட அனந்த பவங்களில் பிறக்க ஆசை-விருப்பம் இருப்பதற்கு சமமாகும். மனிதப் பிறவி எடுப்பதற்காக நாம் எதுவும் செய்ய வேண்டியதில்லை, ஏனெனில் நாம் இப்போதே மனிதப் பிறவியில்தான் இருக்கிறோம், இங்கு நம்மை அடையாளம் காணவேண்டும், சம்யக்தரிசனத்தை பெறும் காரியத்தை சீக்கிரம் செய்ய வேண்டும்.

இப்போது இந்த வகுப்பு துவங்குவதற்கு சற்று முன்பு ஒரு சகோதரர் என்னிடம் வந்து இந்த மூவுலக அமைப்பைப் பற்றி தெரிந்து கொள்ள நமக்கு என்ன அவசியம் இருக்கிறது? அதை முதலில் புரிய வையுங்கள் என்று கேட்டுக் கொண்டார். இது 12-வது பாடம், நான் முதல் தினத்தன்று முதல் பாடத்திலேயே அரை மணி நேரம் இதை தெரிந்து கொள்ளும் அவசியத்தை நன்றாக புரியும்படி கூறினேன். ஒன்று, இந்த சகோதரர் துவக்கத்தின்போது வராமல் இருந்திருக்கலாம், அது ஒவ்வொன்றையும் இப்போது புரியவைப்பது இங்குள்ள 350-400 நபர்களின் நேரத்தை வீணாக்கும், அதோடு மட்டுமில்லாமல் குறிப்பிட்ட கால எல்லைக்குள் எதையெல்லாம் உங்களுக்கு புரியவைக்க விரும்புகிறேனோ அவைகள் எல்லாவற்றையும் எடுத்து சொல்ல முடியாமல் போகும். நாம் ஆத்மாவில் நிலைத்து நிற்க வேண்டும் என்பது நம் முனி ராஜர்களுக்கு தெரியாதா என்ன? ஏன் அவர்கள் இவ்வளவு நூல்களை எழுதி வைத்திருக்கின்றனர்? ஷட்கண்டாகமங்களை நன்றாக தெரிந்திருந்த நேமிசந்திர ஸித்தாந்த சக்கரவர்த்தி, கோமட்டஸார ஜீவகாண்டம், கர்மகாண்டம், லப்திஸாரம், க்ஷபணாஸாரம், த்ரிலோகஸாரம், திரவ்யஸங்கிரஹம் முதலான மஹான் கிரந்தங்களை ஏன் எழுதியுள்ளார்? அவர் என்ன நேரத்தை போக்குவதற்குத்தான் இவைகளை எழுதினாரா? பண்டிட் தோடர்மல்ஜி கூட கரணானுயோகத்தை ஏன் படிக்க வேண்டும்

மோக்ஷமார்க்கத்தில்தானே முன்னேற வேண்டும் என்று நினைத்திருப்பாரா? அப்படி என்றால் மோக்ஷமார்க்க பிரகாசத்தை எழுதும் முன்பு மேலே குறிப்பிட்டுள்ள கிரந்தங்களுக்கு விளக்கவுரைகளை அவர் ஏன் எழுதினார்? கணிதத்தில் சின்னங்களை(ஸந்துருக்ஷ்டி) பற்றிய அதிகாரத்தை ஏன் எழுதினார்? எல்லோரும் இவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும், சாதாரண அறிவு உள்ளவர்கள்கூட இவைகளை எல்லாம் சுலபமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தான் இவைகளை விரிவாக எழுதி புரிய வைக்கிறார்.

நான் மோக்ஷமார்க்கத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றல் வியாபாரம், வேலை ஏன் செய்ய வேண்டும்? செய்திதாள்களை ஏன் படிக்க வேண்டும்? இது போன்ற கேள்விகள் யார் மனதிலும் எழுவதில்லை! கரணானுயோகம் பற்றி பேச்சு வரும்போது மட்டும், இது போன்ற கேள்விகளை எழுப்புகின்றனர்! இப்படிப் பட்டவர்களின் நம்பிக்கையை பண்டிட் தோடர்மல்ஜி சம்யக்ஞானசந்த்திரிகாவின் பின்னுரையிலும், திரிலோகஸாரத்தின் முன்னுரையிலும் மிகவும் நன்றாக கண்டனம் செய்திருக்கிறார். நீங்கள் அவைகளை அவசியம் படியுங்கள்.

நாம் ஜம்பூ தீபத்தைப் பற்றி பார்த்துக் கொண்டு இருந்தோம். அதில் கிழக்கு மேற்காகவும் மேருவுக்கு தெற்கில் மூன்றும் மேற்கில் முன்றும் என ஆறு குலாசல மலைகளைப் பார்த்தோம். இந்த மலைகளால் ஜம்பூதீபம் ஏழு க்ஷேத்திரங்களாகப் பிரிக்கப்படுகிறது. க்ஷேத்திரத்தை ‘வர்ஷ’ என்றும், குலாசல மலைகளை ‘வர்ஷதர’ என்றும்கூட சொல்கின்றனர்.

தெற்கில் பரத க்ஷேத்திரமும், வடக்கில் ஐராவத க்ஷேத்திரமும் இருக்கின்றன. இவைகளில் உள்ள ஆர்ய கண்டத்தில் உத்ஸர்பிணி, அவஸர்ப்பிணி வடிவில் 6-6 காலங்களின் சுழற்சி நடக்கிறது. பரதத்திற்கு வடக்கில் ஹைமவதமும், ஐராவதத்திற்கு தெற்கில் ஹைரண்யவதமும் எப்போதும் ஜகன்ய போகபூமியாக இருக்கின்றன. ஹைமவதத்திற்கு வடக்கில் ஹரி க்ஷேத்திரமும், ஹைரண்யவதத்திற்கு தெற்கில் ரம்யக க்ஷேத்திரமும் எப்போதும் மத்யம போகபூமியாக இருக்கின்றன. இவைகளுக்கு இடையில் சுமேரு மலை இருக்கிறது, அதன் நான்கு பக்கங்களிலும் பத்ராசல வனம் இருக்கிறது, தெற்கு பக்க வனத்திற்கு தெற்கில் தேவகுருவும், வடக்கு பக்க வனத்திற்கு வடக்கில் உத்தர குருவும் இருக்கின்றன. இவை எப்போதும் உத்தம போகபூமிகளாக இருக்கின்றன. அந்த பத்ராசல வனத்திற்கு கிழக்கிலும் மேற்கிலும் விதேக க்ஷேத்திரம் இருக்கிறது. விதேக க்ஷேத்திரத்தில் உள்ள நதிகள் மற்றும் மலைகளால் வெவ்வேறு க்ஷேத்திரங்களாக பிரிக்கப்படுகின்றன. படத்தைப் பாருங்கள் - கிழக்கு விதேகத்தில் நீல வண்ணத்தில் ஸீதா நதி காட்டப்பட்டுள்ளது. அதனால் அது தெற்கு மற்றும் வடக்கு என இரண்டு பிரிவாகிறது. இதில் எண்கள் எழுதப்பட்டுள்ளதை பாருங்கள்- கிழக்கு விதேகத்தின் வடக்கில் 1 முதல் 8-ம், தெற்கில் 9 முதல்

16-ம், மேற்கு விதேகத்தில் தெற்கில் 17 முதல் 24-ம் வடக்கில் 25 முதல் 32-ம் என சுமேரு சம்பந்த 32 விதேக க்ஷேத்திரங்கள் இருக்கின்றன.

இங்கு பரத-ஐராவத க்ஷேத்திரத்தில் அவசர்ப்பிணியின்-இறங்கு காலத்தின் முதல் காலத்தை முதல் காலம் என்று சொல்கிறோம், அதன் பெயர் ஸுஷ்மாஸுஷ்மா - நன்நற்காலம் என்றும், இரண்டாம் காலத்தை ஸுஷ்மா - நற்காலம் என்றும், மூன்றாம் காலத்தை ஸுஷ்மாதுஷ்மா - நற்தீக்காலம் என்றும், நான்காம் காலத்தை துஷ்மாஸுஷ்மா - தீநற்காலம் என்றும், ஐந்தாம் காலத்தை துஷ்மா - தீக்காலம் என்றும், ஆறாம் காலத்தை துஷ்மாதுஷ்மா - தீத்தீக் காலம் என்றும் சொல்கிறோம். ஸுஷ்மாவை ஸுக்மா என்றும் துஷ்மாவை துக்மா என்றும் கூட சொல்கின்றனர். பரத, ஐராவத க்ஷேத்திரத்தில் ஆர்ய கண்டங்களில் மட்டுமே இந்த ஆறு கால மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆறாம் காலத்திற்குப் பிறகு எதிர் வரிசையில் உத்ஸர்ப்பிணி-ஏறுகாலம் உண்டாகிறது.

முதல் காலத்தில் பரத-ஐராவத க்ஷேத்திரங்கள் உத்தம போகபூமி போல இருக்கிறது, மற்றும் தேவகுரு, உத்தரகுரு க்ஷேத்திரம் எப்போதும் போகபூமியாகவே இருக்கிறது. இரண்டாம் காலத்தில் பரத-ஐராவத க்ஷேத்திரங்கள் மத்யம போகபூமி போல இருக்கிறது மற்றும் ஹரி க்ஷேத்திரம் மற்றும் ரம்யக க்ஷேத்திரம் எப்போதும் மத்யம போகபூமியாகவே இருக்கிறது. மூன்றாம் காலத்தில் பரத-ஐராவத க்ஷேத்திரங்கள் ஜெகன்ய போகபூமி போல இருக்கிறது, மற்றும் ஹைமவத, ஹைரண்யவத க்ஷேத்திரம் எப்போதும் ஜகன்ய போகபூமியாகவே இருக்கிறது. பரத-ஐராவத க்ஷேத்திரங்களில் நான்காம் காலத்தில் கர்மபூமி ஆரம்பமாகிறது ஆனால் விதேக க்ஷேத்திரங்கள் எப்போதும் நான்காம் கால கர்மபூமியாகவே இருக்கிறது. பரத-ஐராவத க்ஷேத்திரங்களில் நான்காம் காலத்திலும், விதேக க்ஷேத்திரங்களில் எப்போதும் உயிர்கள் மோக்ஷம் செல்கின்றன. போகபூமி உயிர்கள் இறந்து தேவகதிக்கே செல்கின்றன - எல்லா மித்யாதிருஷ்டிகளும் இறந்து கீழ்முத்தேவர்களிலும், எல்லா சம்யக்திருஷ்டிகளும் இறந்து சௌதர்ம-ஈசான சொர்க்கங்களிலும் சென்று பிறக்கின்றனர். ஆனால் நான்காம் கால உயிர்கள் இறந்து நன்கு கதிகளிலும் சென்று பிறவி எடுக்கமுடியும், அல்லது புருஷார்த்தம் செய்து மோக்ஷம் கூட செல்கின்றனர்.

படத்தின் காட்டியுள்ளபடி நடுவில் பூமியில் 10,000 யோஜனை விட்டம் மேரு மலையின் விஸ்தீரணமாகும். மலையின் அடிப்பகுதி இவ்வளவு பருமன் கொண்டதாக இருக்கிறது. அதன் நான்கு பக்கத்திலும் யானை தந்தம் போல கஜதந்த மலைகள் உள்ளன. இந்த மலைகளில் அக்ருத்திம சைத்யாலயங்கள் உள்ளன. நாம் இந்திரத்வஜ விதானம் செய்யும்போது இந்த எல்லா சைத்யாலயங்களின் பெயரைச் சொல்லி அர்க்கியம் வைத்துக்கொண்டு வருகிறோம். ஆனாலும் பூஜையில் நம் எங்கே கவனம் வைக்கிறோம்? எந்த

அரிசி வைக்கவேண்டும்? பாதாம் வைக்க வேண்டுமா அல்லது உருண்டை வைக்க வேண்டுமா? என்பதில் கவனம் இருக்கிறதே ஒழிய எதற்கு அர்க்கியம் வைக்கிறோம் என்பதிலும் எது எங்கிருக்கிறது என்பதிலும் நம் கவனம் இருப்பதில்லை.

இந்த கஜதந்த மலைகள் சுவரைப்போல படத்தில் காட்டியுள்ளபடி இருக்கின்றன. இவைகளை பத்ராசால வனவேதி என்றும் சொல்கின்றனர். மேருமலையை சுற்றி பத்ராசால வனம் இருக்கிறது. அதைத்தவிர கஜதந்தங்களுக்கு தெற்கில் தேவகுரு, வடக்கில் உத்தரகுரு என்ற பெயர் கொண்ட உத்தம போகபூமிகளின் க்ஷேத்திரம் உள்ளது.

அதில் உருண்டை வடிவில் வடக்கில் ஜம்பூ விருக்ஷமும், தெற்கில் சால்மலி விருக்ஷமும் காட்டப்பட்டுள்ளது. விருக்ஷம் என்றதுமே அதை வனஸ்பதி காயிக மரம் என்று எண்ணிவிடாதீர்கள். ஆனால் இவை இரத்தினமய மண்ணினால் ஆன மர வடிவமாகும், ஒரு மரம் மட்டுமல்ல அதற்கு பெரிய பரிவாரங்கள் உள்ளன. இந்த விருக்ஷங்களில் அனேக அக்ருத்திம ஜினபிரதிமைகள் உள்ளன.

மத்தியில் 10,000 யோஜனை மேரு மலை இருக்கிறது, அதற்கு முன்னால் 22,000 யோஜனை தூரம் சென்றதும் பத்ராசல வனவேதி உள்ளது, அதுவரை பத்ராசால வனமும், கஜபந்தா மலையும் பரவி இருக்கிறது. அதற்கு முன்னால் விதேக க்ஷேத்திரம் இருக்கிறது. இந்த கிழக்கு விதேகத்திற்கு கிழக்கில் தேவாரண்ய வேதி இருக்கிறது. இந்த தேவாரண்ய வேதிக்கும் லவண சமுத்திரத்திற்கும் இடையில் தேவாரண்ய வனம் இருக்கிறது. இதேபோல மேற்கு விதேகத்திற்கு மேற்கில் பூதாரண்யவேதி மற்றும் பூதாரண்ய வனமும் இருக்கிறது. சில சாஸ்திரங்களில் இரண்டு பக்கங்களிலும் தேவாரண்ய வனம் இருப்பதாக பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜம்பூ தீபத்தின் பரிதியில் ஜம்பூ தீபத்திற்கும் லவண சமுத்திரத்திற்கும் இடையில் சுவர் அல்லது கரை போன்ற அமைப்பு இருக்கிறது, இதை ஜகதி என்று சொல்கின்றனர். ஜம்பூ தீபத்தின் நதிகள் எங்கு லவண சமுத்திரத்தில் சேர்கிறதோ அங்கு அந்த ஜகதியில் துவாரம் மற்றும் வளைவுகளுடன் கூடிய தூண்கள் போன்ற அமைப்பு எல்லா திசைகளிலும் இருக்கின்றன.

விதேக க்ஷேத்திரம் மற்றும் பரத க்ஷேத்திரம் இவைகளின் விஸ்தீரணம் மற்றும் அமைப்பு பற்றி நாம் பிறகு பார்க்கலாம். இப்போது ஜம்பூ தீபத்தின் மற்ற சிறப்புகளைப் பார்க்கலாம். நாம் இங்கு ஆறு குலாசல மலைகளை பார்த்தோம் அல்லவா, அதன் ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு குளம் இருக்கிறது. ஹிமவான் மலையின் மேல் உள்ள குளத்திற்கு பத்ம ஸரோவர் என்று பெயர். மஹாஹிமவான் மலையின் மேல் உள்ள குளத்திற்கு மஹாபத்ம

ஸரோவர் என்று பெயர். நிஷத மலையின் மேல் உள்ள குளத்திற்கு திகிஞ்ச ஸரோவர் என்று பெயர். அடுத்த பக்க மலைகளை பார்க்கும்போது சிகரி மலையின் மேல் உள்ள குளத்திற்கு புண்டரீக ஸரோவர் என்று பெயர். ருக்மி மலையின் மேல் உள்ள குளத்திற்கு மஹாபுண்டரீக ஸரோவர் என்று பெயர். நீல மலையின் மேல் உள்ள குளத்திற்கு கேஸரீ ஸரோவர் என்று பெயர்.

பத்ம ஸரோவரைப்போல இரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்டது மஹாபத்ம ஸரோவர். மஹாபத்ம ஸரோவரைப்போல இரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்டது திகிஞ்ச ஸரோவர். புண்டரீக ஸரோவர் பத்ம ஸரோவர் அளவு விஸ்தீரணம் கொண்டது. அதைப்போல இரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்டது மஹாபுண்டரீக ஸரோவர். அதைப்போல இரண்டு மடங்கு விஸ்தீரணம் கொண்டது கேஸரீ ஸரோவர். பத்ம ஸரோவர் 500 யோஜனை அகலமும் 1,000 யோஜனை நீளமும், 10 யோஜனை ஆழமும் கொண்டது.

பத்ம ஸரோவரிலிருந்தும், புண்டரீக ஸரோவரிலிருந்தும் 3-3 நதிகள் வெளிப்படுகின்றன, இடையில் உள்ள ஸரோவரிலிருந்து 2-2 நதிகள் வெளிப்படுகின்றன. ஒன்று தெற்கு பக்கத்திலிருந்தும் மற்றொன்று வடக்கு பக்கத்திலிருந்தும் உற்பத்தியாகின்றன. ஜம்பூ தீபத்தின் 14 மஹாநதிகள் லவண சமுத்திரத்தில் வந்து சேர்கின்றன. ஏழு க்ஷேத்திரங்களில் 2-2 நதிகள் பாய்கின்றன. முதலில் வரும் பெயர் கொண்ட நதிகள் கிழக்கு பக்கம் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கும், இரண்டாவதாக வரும் பெயர் கொண்ட நதிகள் மேற்கு பக்கம் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கும்.

பத்ம ஸரோவரிலிருந்து 3 நதிகள் உற்பத்தியாகின்றன. கிழக்கு கரையிலிருந்து கங்கை நதியும், மேற்கு கரையிலிருந்து சிந்து நதியும் உற்பத்தியாகி தெற்கு பக்கமாக பரத க்ஷேத்திரத்தில் வந்து பாய்கின்றன. அங்கு கங்கை கிழக்கு பக்கமும், சிந்து மேற்கு பக்கமும் திரும்பி லவண சமுத்திரத்தில் கலக்கின்றன. வடக்கு பக்கத்திலிருந்து ரோஹிதா நதி உற்பத்தியாகி வடக்கில் ஹைமவத க்ஷேத்திரத்தில் பாய்கிறது. மற்றும் நாபிகிரி அதாவது ஹைமவத க்ஷேத்திரத்தின் மத்தியில் உள்ள மலையின் கால் பகுதியில் வலம் வந்து மேற்குப் பக்கம் திரும்பி பாய்ந்து மேற்கில் லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

மஹாபத்ம ஸரோவரின் தெற்கு கரையிலிருந்து ரோஹித் நதி தெற்கு திசையில் ஹைமவத க்ஷேத்திரத்தில் பாய்கிறது, நாபிகிரி மலையின் கால் பகுதியில் வலம் வந்து கிழக்கு பக்கம் திரும்பி பாய்ந்து கிழக்கில் லவண சமுத்திரத்தில் கலக்கிறது. மஹாபத்ம ஸரோவரின் வடக்கு கரையிலிருந்து ஹரிகாந்தா நதி வடக்கு திசையில் ஹைமவத க்ஷேத்திரத்தில் பாய்கிறது,

நாபிகிரி மலையின் கால் பகுதியில் வலம் வந்து மேற்கு பக்கம் திரும்பி பாய்ந்து மேற்கில் லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

திகிஞ்ச ஸரோவரின் தெற்கு கரையிலிருந்து ஹரிதா நதி தெற்கு திசையில் ஹரிக்ஷேத்ர க்ஷேத்திரத்தில் பாய்கிறது, நாபிகிரி மலையின் கால் பகுதியில் வலம் வந்து கிழக்கு பக்கம் திரும்பி பாய்ந்து கிழக்கில் லவண சமுத்திரத்தில் கலக்கிறது. திகிஞ்ச ஸரோவரின் வடக்கு கரையிலிருந்து ஸீதோதா நதி வடக்கு திசையில் தேவகுரு க்ஷேத்திரத்தில் பாய்கிறது, மற்றும் ஸுதர்சன மலையின் கால் பகுதியில் வலம் வந்து கஜதந்த மலைக்கு கீழே குகையில் புகுந்து வடக்கு பக்கம் திரும்பி பாய்ந்து, இரண்டாவது குகைபக்க வழியாக வெளியே வந்து மேருவின் கால் பகுதியில் வலம் வந்து பிறகு மேற்கு திசையில் விதேக க்ஷேத்திரத்தில் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

கேசரி ஸரோவரின் தெற்கு கரையிலிருந்து ஸீதா நதி தெற்கு திசையில் உத்தரகுரு க்ஷேத்திரத்தில் பாய்ந்து ஸுமேரு மலைவரை வருகிறது பிறகு மேரு மலையின் கால் பகுதியில் வலம் வந்து கஜதந்த மலைக்கு கீழே குகையில் புகுந்து வெளியே வந்து மேருவின் கால் பகுதியில் வலம் வந்து பிறகு கிழக்கு திசையில் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கிறது. கேஸரி ஸரோவரின் வடக்கு கரையிலிருந்து நரகாந்தா நதி வடக்கு திசையில் ரம்யக் க்ஷேத்திரத்தில் பாய்ந்து, அங்கிருந்து நாபி கிரியை வலம் வந்து மேற்கு பக்கம் திரும்பி மேற்கில் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

மஹாபுண்டரீக ஸரோவரின் தெற்கு கரையிலிருந்து நாரி நதி கிளம்பி தெற்கு திசையில் ரம்யக க்ஷேத்திரத்தில் பாய்ந்து அங்கிருந்து நாபிகிரி மலையின் வலம் வந்து கிழக்கு திசையில் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கிறது. மஹாபுண்டரீக ஸரோவரின் வடக்கு கரையிலிருந்து ரூப்யகூலா நதி கிளம்பி வடக்கு திசையில் ஹைரண்யவத க்ஷேத்திரத்தில் பாய்ந்து, அங்கிருந்து நாபி கிரியை வலம் வந்து மேற்கு பக்கம் திரும்பி மேற்கில் பாய்ந்து லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

புண்டரீக ஸரோவரிலிருந்து 3 நதிகள் உற்பத்தியாகின்றன. அதன் தெற்கு கரையிலிருந்து ஸுவர்ணகூலா நதி மேற்கு திசையில் ஹைரண்யவத க்ஷேத்திரத்தில் வந்து பாய்ந்து, அங்கு உள்ள நாபிகிரி மலையின் வலம் வந்து கிழக்கு பக்கம் திரும்பி லவண சமுத்திரத்தில் கலக்கின்றன. இதன் கிழக்கு கரையிலிருந்து ரக்தா நதியும் மேற்கு பக்கத்தில் ரக்தோதா நநியும் உற்பத்தியாகி ஐராவத க்ஷேத்திரத்தில் பாய்ந்து கிரமமாக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் திரும்பி லவண சமுத்திரத்தில் கலக்கிறது.

பரத க்ஷேத்திரம் மற்றும் ஐராவத க்ஷேத்திரத்தை தவிர்த்து மற்ற ஐந்து க்ஷேத்திரங்களின் மத்தியில் நாபி கிரிகள் உள்ளன, மற்றும் அதை வலம் வந்து தெற்கிலிருந்து வரும் நநி மேற்கிலும் வடக்கிலிருந்து வரும் நதி கிழக்கிலும்

பாய்கிறது. இந்த காரணத்தால் நதியின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள க்ஷேத்திரம் 2-2 பாகமாக ஆகின்றன. இங்கு படத்தில் நீங்கள் விதேக க்ஷேத்திரத்தைப் பாருங்கள். மேருவுக்கு கிழக்கிலும் மேற்கிலும் முறையாக கிழக்கு விதேகமும் மேற்கு விதேகமுமாகும். கிழக்கு விதேகத்தில் சீதா நதி பாயும் காரணத்தால் வடக்கு மற்றும் தெற்கு என இரண்டு பாகங்களாகின்றன. அதேபோல மேற்கு விதேகத்தில் சீதோதா நதி பாயும் காரணத்தால் வடக்கு மற்றும் தெற்கு என இரண்டு பாகங்களாகின்றன. கிழக்கு விதேகத்தில் வடக்கு மற்றும் தெற்கு பாகத்தில் கூட எட்டு வெவ்வேறு க்ஷேத்திரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன, அதைப்பற்றி நாம் பிறகு விரிவாகப் பார்க்கலாம்.

இங்கு நாம் படம் 5-ல் ஜம்பூ தீபத்தில் இருக்கும் ஆறு குலாசல மலைகளின் பெயர்கள் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன, அதற்கு மேலே அடைப்புக்குறிக்குள் அந்த மலைகளில் உள்ள பொய்கைகளின் அதாவது ஸரோவர்-குளங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதே படத்தில் இரண்டு பக்க க்ஷேத்திரங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் அடைப்புக்குறிக்குள் அந்த க்ஷேத்திரங்களில் பாயும் 2-2 நதிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.முதலில் கொடுக்கப்பட்ட நதிகள் கிழக்கிலும் இரண்டாவதாக கொடுக்கப்பட்ட நதிகள் மேற்கிலும் பாய்கின்றன.

மலை	ஹிமவான்	மஹாஹிமவான்	நிஷதம்	நீலம்	ருக்மி	சிகரி
நிறம்	பொன்	வெள்ளி	வெளிர்ந்த பொன்	வைடூர்யம்	வெள்ளி	பொன்
உயரம் யோஜனை	100	200	400	400	200	100
குளம்	பத்ம	மஹாபத்ம	திகிஞ்ச	கேஸரி	மஹா புண்டரீக	புண்டரீக
குளத்தின் அகலம்	500	1000	2000	2000	1000	500
குளத்தின் நீளம்	1000	2000	4000	4000	2000	1000
குளத்தின் ஆழம்	10	20	40	40	20	10
தாமரையின் உயரமும் அகலமும்	1	2	4	4	2	1
தேவியின் பெயர்	ஸ்ரீ	ஹ்ரி	த்ருதி	கீர்த்தி	புத்தி	லக்ஷ்மி

இப்போது இந்த மலைகளின் உயரம் குளங்களின் நீள-அகல-ஆழங்களின் அளவு விகிதாசாரங்கள் முன்பக்க கட்டத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த குளங்களில் மண்ணாலான தாமரை மலர் போன்ற அமைப்புகள் உள்ளன, அவைகளின் நீள-அகல-ஆழங்களின் அளவு விகிதாசாரங்கள் பற்றியும்

பார்க்கலாம். மலையின் உயரத்தைவிட குளத்தின் அகலம் ஐந்து மடங்காகவும், நீளம் பத்து மடங்காகவும், ஆழம் பத்தில் ஒரு பாகமாகவும் மற்றும் தாமரையின் நீள-அகல-உயர அளவு குளத்தின் அளவில் பத்தில் ஒரு பாகமாகவும் இருக்கின்றன.

இந்த தாமரை மலர்கள் மிகவும் நறுமணம் கொண்டவைகளாக இருக்கின்றன, இந்த நறுமணத்தின் காரணத்தால் பத்து திசைகளும் மணக்கின்றன. வைடூர்யமணி (நீலமணி) யால் அமைக்கப்பட்ட இதன் மேல் பகுதியில் ஒரு ஊற்று இருக்கிறது. இந்த தாமரையில் 11,000 இதழ்கள் உள்ளன. தாமரை ஒரு யோஜனை அளவுடையது, அது அங்கு நீரிலிருந்து அரை யோஜனை உயரத்தில் மலர்ந்த தாமரை வடிவில் இருக்கிறது, ஆனால் இது தாவர உடலி இல்லை, இரத்தினமய மண்ணால் ஆனது போன்ற அமைப்பாகும். அதனுடைய குமிழ் (நடுபகுதி) மூன்று கோஸ பருமன் கொண்டதாகவும், வெள்ளை நிறத்திலும் இருக்கிறது. ஒரு கோசம் அளவுடைய அதன் மொட்டு பிரகாசமானதாக இருக்கிறது. அதன் மேல் ஒரு கோஸ நீளமும், அரை கோஸ அகலமும், கால் கோஸ உயரம் உடைய ஸ்ரீதேவியின் வாசம்(வாழுமிடம்) இருக்கிறது. இந்த தடாகத்தில் இந்த தாமரையின் பாரிவாரங்கள் வடிவில் 1,40,115 வேறு தாமரைகள் இருக்கின்றன. அந்த தாமரைகளில் இந்த தேவிகளின் பரிவாரங்கள் அதாவது அனீகர், ஸாமானிகர், அங்கரக்ஷகர்கள் முதலான தேவர்களின் வாஸம் - வாழுமிடங்கள் உள்ளன. ஸ்ரீ, ஹ்ரீ, த்ருதி ஆகிய மூன்று பேரும் சௌதர்ம இந்திரனின் தேவிகளாவர், மற்றும் கீர்த்தி, புத்தி, லக்ஷ்மி மூவரும் ஈசான இந்திரனின் தேவிகளாவர்.

நாம் ஜம்பூ தீபத்தின் அமைப்பை விரிவாகப் பார்த்தோம். இதேபோலவே கிழக்கு தாதகி கண்டம், மேற்கு தாதகி கண்டம், கிழக்கு புஷ்கரார்த்தம், மேற்கு புஷ்கரார்த்தம் ஆகிய தீபங்களின் அமைப்பும் இருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றின் நடுவிலும் 1-1 மேரு மலை இருக்கிறது, 6-6 குலாசல மலைகள் இருக்கின்றன, 7-7 க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. ஆனால் சிறப்பு அம்சம் என்னவென்றால் ஜம்பூதீபத்தில் குலாசல மலைகள் கிழக்கிலிருந்து மேற்கு வரை முழுவதும் பரவி இருக்கின்றன, ஆனால் மற்ற தீபங்களில் இந்த மலைகள் வட்டத்தின் ஆரம் போல இருக்கின்றன. தாதகி கண்டத்தின் குலாசல மலைகள் உள்பக்கம் லவண சமுத்திரத்தையும் வெளிப்பக்கம் காலோததி சமுத்திரத்தையும் தொட்டுக் கொண்டுள்ளன. புஷ்கரார்த்த கண்டத்தின் குலாசல மலைகள் உள்பக்கம் காலோததி சமுத்திரத்தையும் வெளிப்பக்கம் மானுக்ஷோத்ர மலையை தொட்டுக் கொண்டுள்ளன. இங்கு படம் 4-ல் பாருங்கள். அதில் இந்த மலைகள், அதன் மத்தியில் உள்ள குளங்கள், அவைகளிலிருந்து பாயும் நதிகள் காட்டப்பட்டுள்ளன. இந்த எல்லா மலைகளும் கீழிருந்து மேல்வரை சமமான அகலம் கொண்டதாக உள்ளன.

அதன் பக்கங்களில் பலவகை மணிகளும், இரத்தினங்களும் கொண்டதாக இருக்கின்றன.

இங்குள்ள குலாசல மலைகள், குளங்கள், நதிகள் ஆகியவைகளின் பெயர்கள் எல்லாம் ஜம்பூ தீபத்தில் கொடுக்கப் பட்டுள்ளது போலவே யாகும். ஆனால் மேரு மலைகளின் பெயர்கள் மட்டும் வேறாக உள்ளன. கிழக்கு தாதகி கண்டத்தில் விஜய மேருவும், மேற்கு தாதகி கண்டத்தில் அசல மேருவும், கிழக்கு புஷ்கரார்த்த கண்டத்தில் மந்திர மேருவும், மேற்கு புஷ்கரார்த்த கண்டத்தில் வித்யுத்மாலி மேருவும் உள்ளன. இங்குள்ள பரத, ஐராவத, விதேக க்ஷேத்திரங்கள் உள்பக்கம் குறைந்த பருமன் கொண்டவைகளாகவும், வெளிப்பக்கம் அதிக பருமன் கொண்டவைகளாகவும் உள்ளன. படத்தை பார்த்து இதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். தாதகி கண்டத்தில் தெற்கு பக்கத்தில் இரண்டு மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்ட க்ஷேத்திரங்கள் தாதகி கண்டத்தின் பரத க்ஷேத்திரங்களாகும், இவைகளுக்கு இடையில் ஈஷ்வாகார மலை இருக்கிறது. இதேபோல இரண்டு புஷ்கரார்த்ங்களிலும் இரண்டு பரத க்ஷேத்திரங்கள் உள்ளன. இதேபோல வடக்கில் அவைகளின் 2-2 ஐராவத க்ஷேத்திரங்கள் உள்ளன. அவைகளின் மேருவின் கிழக்கிலும் மேற்கிலும் அந்த கண்டத்தின் விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன.

இவ்வாறு நாம் இரண்டரை தீபத்தில் 5X32=160 விதேக க்ஷேத்திர கர்ம பூமிகளையும், 5 பரத, 5 ஐராவத கர்ம பூமிகளைப் பற்றியும் தெரிந்து கொண்டோம். மற்றும் ஒவ்வொரு மேரு சம்பந்த 6-6 போகபூமிகள் என மொத்தம் 30 போகபூமிகள் பற்றியும் தெரிந்து கொண்டோம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 12-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ சந்திரானன பகவானுக்கு ஜே! என்று சொல்லி இந்த பாடத்தை முடிக்கிறேன்.

13. பரத க்ஷேத்திரம்

திரிலோகஸார நூலில் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பு பற்றி தெரிந்து கொண்டு வருகிறோம். மத்திய லோகத்தில் அதாவது நடு உலகில் இரண்டரை தீபத்தின் அமைப்பை இதுவரை விரிவாகப் பார்த்தோம். ஜம்பூ தீபத்தைப் பற்றியும் அதில் உள்ள க்ஷேத்திரங்கள், மலைகள், நதிகள் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டோம். இப்போது பரத க்ஷேத்திரம் பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம். ஜம்பூ தீபத்தின் தெற்கு வடக்கான ஒரு லட்ச யோஜனை விட்டத்தை 190 பாகமாகப் பிரித்தால், அதில் ஒரு பாக அளவு பரத க்ஷேத்திரத்தின் பாஃண் ஆகும், அதாவது விட்டத்தின் பகுதியாகும், இதை விஷ்கம்பம் என்றும் கூறுவர் என்பதைப் பற்றி நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். அதன் அளவு 525 6/19 யோஜனை யாகும். இந்த பரத க்ஷேத்திரத்தின் நாக்குப்பகுதி 14,771 5/21 யோஜனை யாகும். அதன் வடிவம் மிகச் சிறிய அளவில் குறுக்கில் பரவியுள்ளது, ஆனால் அதை நமக்கு புரியவைக்க அதை அரை வட்ட வடிவில் பெரிதாக்கி அதன் உள்பகுதியை நமக்கு புரிய வைக்கிறார்கள். இதை நீங்கள் படம் 6-ல் பார்க்கலாம். மேலே ஹிமவான் மலை, பத்ம ஸரோவர் மற்றும் அதிலிருந்து உற்பத்தியாகும் கங்கை, சிந்து நதிகள் காட்டப்பட்டுள்ளன. அதற்கு கீழே படத்தில் மஞ்சள் நிறத்தில் உள்ளப்பகுதி பரத க்ஷேத்திரமாகும். ஆனால் அவைகளில் உள்ள நதிகள், மலைகள், ஆறு கண்டங்கள் ஆகியவைகளின் அமைப்பை நமக்கு தெளிவு படுத்த பெரிய அரை வட்ட வடிவில் இது காட்டப்பட்டுள்ளது.

முதலில் கங்கை நதி உற்பத்தியாகுமிடம், அது பாயும் பிரதேசங்கள் ஆகியவைகளைப் பார்க்கலாம். ஹிமவான் மலையில் தெற்கு வடக்காக 500 யோஜனை அகலமும், கிழக்கு-மேற்காக 1,000 யோஜனை நீளமும் கொண்ட பத்ம ஸரோவர் இருக்கிறது. அதன் கிழக்கில் வஜ்ர துவாரத்திலிருந்து கங்கா நதி வெளியில் வருகிறது. அது ஹிமவான் மலையின் மேல் கிழக்குப் பகுதியில் 500 யோஜனை வரை பாய்கிறது. ஹிமவான் மலையில் கங்கா என்ற பெயர் கொண்ட குறியீடு உள்ளது, அதற்கு அரை யோஜனை முன்னரே கங்கை நதி தெற்கு பக்கம் திரும்பி ஹிமவான் மலையின் தெற்கு பக்கம் வரை பாய்ந்து செல்கிறது. அங்கு மலையின் வெளிப் பகுதியில் வாழ்வாதாரம் அதாவது ஒரு பிரநாளி உள்ளது, அது அனேகவித மணிமயமாக இருக்கிறது. இது இரண்டு கோஸ நீளமும், இரண்டு கோஸ உயரமும், 6½ கோஸ பரப்பு கொண்டதாகவும், விரஷபாகார அதாவது கோமுக வடிவமாகவும் இருக்கிறது. இந்த பிரநாளியின் முகம், காது, நாக்கு, கண் முதலியன சிங்கம் போன்றும் புருவம் மற்றும் தலை பசு போன்றும் இருக்கிறது.

இங்கு ஹிமவான் மலையை விட்டு 25 யோஜனை முன்னால் சென்று கங்கா நதி 10 யோஜனை அகலமாகி கீழே விழுகிறது. எங்கு விழுகிறதோ அங்கு

ஹிமவான் மலையின் அடியில் 10 யோஜனை உயரமும், 7 யோஜனை பரப்பும் கொண்ட ஒரு குண்டம் இருக்கிறது. அந்த குண்டத்தின் மத்தியில் நீர் நிலைக்கு ½ யோஜனை உயரமும் 8 யோஜனை பரப்பும் கொண்ட கோள வடிவ தீவு இருக்கிறது. அந்த தீவின் மத்தியில் 10 யோஜனை உயரமுடைய மலை இருக்கிறது. அந்த மலை கீழே 4 யோஜனையும், நடுவில் 2 யோஜனையும் மேலே 1 யோஜனையும் பரப்பு கொண்டதாக உள்ளது. அந்த மலையின் உச்சியில் ஸ்ரீதேவியின் கோயில் உள்ளது. அது கீழே 3,000 வில்லும், நடுவில் 2,000 வில்லும், மேலே 1,000 வில்லும் பரவி இருக்கிறது. அதன் மேல் ஸ்ரீதேவியின் மாளிகை இருக்கிறது. அந்த ஸ்ரீதேவி கோயிலின் மேல் ஒரு தாமரை இருக்கிறது, அதன் மொட்டில் ஒரு சிம்மாசனம் இருக்கிறது. அந்த சிம்மாசனத்தின் மேல் ஒரு ஜினபிம்பம் அமைந்திருக்கிறது. அந்த பிம்பத்தின் மேல்தான் கங்கை நதி மலையிலிருந்து விழுகிறது. இந்த அமைப்பால் கங்கை ஜின பிம்பத்தை அபிஷேகம் செய்வதாகக்கூட நம்பலாம். இந்த ஜினபிம்பம் தலையில் முடியுடன் கூடியதாக உள்ளது. இதனால் மற்ற மதத்தினர் அந்த பிம்பத்தை சங்கரின் பிம்பமாகவும், அந்த சங்கரின் (சிவனின்) ஜடையிலிருந்து கங்கை அவதரிப்பதாகவும் கற்பனை செய்து கூறுகின்றனர்.

எங்கெங்கெல்லாம் நதிகள் மலையிலிருந்து விழுகின்றதோ அங்கங்கெல்லாம் இப்படிப்பட்ட குண்டமும், தீவும், தேவியின் கோயிலும், அதன்மேல் தாமரை அமைப்பும் அதில் சிம்மாசனத்தில் ஜினபிம்ப அமைப்பும் இயற்கையாகவே அமைந்துள்ளன.

கங்கா கூடத்திலிருந்து வெளிவந்து கங்கை தெற்கு பக்கமாக நேராக பாய்ந்து விஜயார்த்த மலையில் உள்ள கன்டபிரபாத் என்ற பெயர் கொண்ட குகையில் நுழைகிறது. இதுவரை நாம் விஜயார்த்த மலை பற்றி எதுவும் பார்க்கவில்லை. பரத க்ஷேத்திரத்தின் மத்தியில் கிழக்கிலிருந்து மேற்காக விஜயார்த்த மலை இருக்கிறது. இது போன்ற மலை எல்லா பரத, ஐராவத, விதேக க்ஷேத்திரங்களிலும் உள்ளன, அவைகள் எல்லாம் விஜயார்த்த மலை என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றன.

இந்த மலையின் அகலம் 50 யோஜனை. அந்த குகையின் நீளமும் அவ்வளவே யாகும். குகையின் அகலம் 12 யோஜனையும், உயரம் 8 யோஜனையுமாகும். குகையின் வடக்கு மற்றும் தெற்கில் 6-6 யோஜனை அளவு வஜ்ரமய கதவுகள் உள்ளன. குகைக்கு கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கதவுகளுக்கு அருகில் இரண்டு குளங்கள் உள்ளன. அதில் உன்மக்னா, நிம்மக்னா என்ற பெயரில் வெளிவாங்கும் நீர்சுழற்சி, உள்வாங்கும் நீர்சுழற்சி, என்ற பெயரில் 2 யோஜனை அகலமுடைய இரண்டு நதிகள் உள்ளன, அது நேராக சென்று கங்கையில் கலக்கின்றன. அதில் ஒன்றின் ஜல பிரவாஹத்தில் எவ்வளவு கனமான பொருள் விழுந்தாலும் அது வெளியே தள்ளப்படும், அதில்

மூழ்க விடுவதில்லை, உள்ளே போக விடுவதில்லை, அந்த நீர் சுழற்சியை உன்மக்ன என்று சொல்கின்றனர். மற்றொன்றின் ஜல பிரவாஹத்தில் எவ்வளவு லேசான பொருள் விழுந்தாலும் அது உள்ளே இழுத்துக் கொள்ளும், அதில் மூழ்கி விடும், உள்ளே போய் விடும், அந்த நீர் சுழற்சியை நிம்மக்ன என்று சொல்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்தான் இந்த விஷயம் குருதேவின் பிரவசனத்தில் வந்தது. நாம் ஆறு கண்டங்களின் ஸ்வாத்யாயத்திற்கு மேல் இங்கு குருதேவின் பிரவசன ஒலிநாடாக்களையும் போட்டு கேட்கிறோம், அல்லவா! அதில் குருதேவ் கூட இந்த இரண்டு பெயர்களை எடுத்துக் கூறினார். இதுபோன்ற பல கரணானுயோக எத்தனையோ விஷயங்களை குருதேவ் எளிதாக அவருடைய பிரவசனத்தில் எடுத்துக்கூறி நமக்கு புரிய வைக்கிறார். ஒவ்வொரு சந்திரனின் பரிவாரத்திலும் எத்தனை தாரகைகள் உள்ளன, லவண சமுத்திரத்தில் பாதாளங்கள் எப்படி இருக்கின்றன, ஆத்ம பிரதேசத்தின் சலனம்-யோகம் எந்த கர்ம உதயத்தால் உண்டாகிறது முதலான பல விஷயங்கள் நாம் அவருடைய பிரவசனங்களில் கேட்கிறோம், படிக்கிறோம். குருதேவின் எத்தனையோ பிரவசனங்கள் எழுதி பிரசுரிக்கப் பட்டுள்ளனவோ, அவைகளை எல்லாம் இங்கு ஸ்வாத்யாயம் செய்துள்ளோம், மற்றும் அவைகள் எல்லாவற்றிலும் கரணானுயோகம் சம்பந்தமான பல உதாரணங்களை குருதேவர் எடுத்துக் கூறியுள்ளார், அவைகளை நாம் குறித்து வைத்துக் கொண்டும் இருக்கிறோம். அவர் ஜெயதவளா மற்றும் தவளாவிலிருந்தும் அனேகமுறை எங்கெங்கு எவ்வாறு எடுத்து சொல்லப்பட்டுள்ளன என்று ஆதாரப்பூர்வமாக குறிப்பிட்டுள்ளார். அதனால் அவைகள் அந்த நூல்களில் எங்குள்ளன என்று அவர் ஞாபகம் வைத்திருந்ததால் அவர் அவைகளை தேடவேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. ஆனால் இந்த காலத்தில் நாம் கரணானுயோகத்தை சுவாத்யாயம் செய்யும்போது, எங்கு வகுப்பு எடுத்தாலும், சிலருக்கு ஒவ்வாமை (allergy) வந்துவிடுகிறது. உங்களுக்கு இது தெரியாதா? கேளுங்கள், அதைப்பற்றி ஒரு சுவையான அனுபவத்தை கூறுகிறேன்.

இங்கு தேவலாலியில் கேள்வி-பதில் வகுப்பு (சிவீர்) ஒன்றில் நான் பஞ்சலப்தி வகுப்பு நடத்திக் கொண்டு இருந்தேன். ஒரு தங்கை எழுந்து இந்த கேள்வியை எழுப்பினார், 'நீங்கள் எப்போதாவது குருதேவின் பிரவசனத்தை கேட்டிருக்கிறீர்களா?' அதற்கு நான், 'ஆம், அவருடைய அனேக பிரவசனங்களை மும்பையில் நாங்கள் கேட்கும் பாக்கியம் பெற்றிருந்தோம், ஸோன்கட்டுக்கும் சென்று மாதக்கணக்கில் தங்கி அவருடைய பிரவசனங்களை கேட்டிருக்கிறோம். போபால், பெங்களூரு, பரோடா முதலான இடங்களில் நடந்த பஞ்ச கல்யாணங்களின் போதும் 8-8 தினங்கள் அவருடைய பிரவசனங்களை கேட்டிருக்கிறோம்.' அந்த பெண்மணி மீண்டும் கேட்டார், 'என்ன, நீங்கள் உண்மையிலேயே குருதேவின் பிரவசனத்தை

கேட்டிருக்கிறீர்களா?!' நான் அவருடைய இந்த கேள்வியில் கொஞ்சம் ஆழம் இருக்க வேண்டும் என்று எண்ணினேன்.

'நாங்கள் குருதேவின் பிரவசனத்தை நேரடியாக கேட்கும் பாக்கியத்தை பெற்றிருந்தோம். அவரிடமிருந்துதான் நாங்கள் எல்லாவற்றையும் பற்றிய அறிவு பெற்றோம். நாங்கள் பிறவியில் திகம்பர சம்பிரதாயத்தில் பிறந்திருந்தும், இந்த கிரந்தங்கள் நம் வீட்டின் அலமாரில் இருந்த போதிலும், அவருடைய உபகாரத்தினால்தான் நாங்கள் தத்துவங்களை புரிந்து கொண்டோம்' என்று நான் கூறினேன். ஆனாலும் அவர் 'இல்லை, நீங்கள் குருதேவின் உபதேசத்தை கேட்டிருக்க முடியாது!' என்று கூறினார். அதற்கு நான் 'நல்லது, நீங்கள் என்னை விட அதிகம் தெரிந்திருக்கிறீர்கள் என்றால், பிறகு நீங்கள் அப்படி ஏன் சொல்கிறீர்கள்? என்று நீங்களே கூறுங்கள்' என்று அவரிடம் கூறினேன். அவர் 'குருதேவ் எப்போதும் கரணானுயோகம் பற்றி பிரவசனமே செய்யவில்லை, பிறகு நீங்கள் ஏன் கரணானுயோகம் பற்றி பேசுகிறீர்கள்? உங்களுக்கு கரணானுயோகம் பற்றி பேச எப்படி தைரியம் வந்தது?' என்று கேட்டார்.

பிறகு நான், 'மிகவும் நல்லது, நீங்கள் நல்ல விஷயம் சொல்கிறீர்கள். கான்ஜி ஸ்வாமி எதிர்காலத்தில் சில பிறவிகளுக்குப் பிறகு தீர்த்தங்கரராக இருக்கிறார், என்று நாங்கள் கேட்டிருக்கிறோம், உங்களுக்கு இந்த பேச்சில் நம்பிக்கை இருக்கிறதா?' என்று கேட்டேன். அதற்கு அவர் 'எனக்கு அதில் உறுதியான நம்பிக்கை இருக்கிறது' என்று கூறினார். அதற்கு நான், 'சரி, பிறகு அவருடைய திவ்யத்தொனி விழும்போது அவர் எந்த அனுயோகத்தில் உபதேசம் கொடுப்பார்? திரவியானுயோகம் பற்றி மட்டும்தான் உபதேசம் கொடுப்பார் என்று நினைக்கிறீர்களா? அல்லது நான்கு அனுயோகங்களிலும் உபதேசம் கொடுப்பாரா?' என்று கேட்டேன். அந்த பெண்மணி இந்த கேள்விக்கு எந்த பதிலும் சொல்லாமல் சென்று விட்டார்.

நான் உங்களிடம் கேட்கிறேன், குருதேவ் தவளா கிரந்தம் பற்றி பிரவசனம் செய்திருக்கிறார், அந்த கால கட்டத்தில் பிரவசனங்களை பதிவு செய்யும் வசதி இல்லாமல் இருந்தது என்பது உங்களுக்கு தெரியுமா, என்ன?... பாருங்கள், இங்கு நம் எதிரில் ஸோன்கட்டில் பிரம்மசாரி நிலையில் இருந்த ஒரு அம்மா அமர்ந்திருக்கிறார், அவர் கூறுகிறார் குருதேவ் இரண்டு முறை தவளாவின் எட்டு பாகங்களை-எட்டு புத்தகங்களை முதலிலிருந்து கடைசிவரை பலர் முன்னிலையில் ஸ்வாத்யாயம் செய்ததை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன் என்று சாட்சி வடிவில் கூறுகிறார்.

தங்களுடைய கற்பனையினால் தவறாக புரிந்து கொள்ளும் கண்மூடித்தனமான பக்தர்கள்தான் சிலர், இப்படிப்பட்ட மஹாபுருஷர்கள் மேல் குற்றம் சாற்றுகின்றனர், இப்படி முன்னுக்குபின் முரணாகப்

பேசுகின்றனர். கரணானுயோகம் யாரால் புரிந்துகொள்ள முடியவில்லையோ, அவைகளை யார் பயிற்சி செய்ய விருப்பமில்லையோ அவர்களுடைய விஷயம் வேறு, ஆனால் நாம் கரணானுயோக விஷயங்களை மறுப்பது, சர்வக்ஞரை அவமதிப்பதாகும். நாம் என்னவோ முக்காலத்திலும் நிலைத்துள்ள அறியும் தன்மை கொண்ட பகவான் ஆத்மாவாவோம், மற்றும் கரணானுயோகம் பிரயோஜனமற்றது என்றும், அதைப் படிக்க வேண்டாம் என்றும் அல்லது அதை சொல்லிக்கொடுப்து அவசியமில்லை என்றும் சொல்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சகோதரி விமலா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இந்த சகோதரி கரணானுயோகத்தில் அதிக ருசி கொண்டவர், அதில் சிறந்த ஞானம் கொண்டவர், அதனால்தான் அவருடைய பெயரை இங்கு கூறினேன். இங்கு பண்டிட். ஹேமசந்த்ஜி, பண்டிட். தேவேந்திர குமார்ஜி சாஸ்திரி முதலான பெரிய வித்வான்கள் அமர்ந்துள்ளனர். நம்முடைய தின ஸ்வாத்யாயத்தில் பங்கு பெறுபவர்கள்கூட கரணானுயோகத்தை நன்கு தெரிந்தவர்களாவர். நீங்கள் எல்லோரும்கூட இதை மிகவும் ஆர்வத்துடன் கேட்கிறீர்கள். ஒவ்வொரு சொற்பொழிவின்போதும், மதிய நேரத்தில் நடக்கும் சொற்பொழிவுகளின்போதும் கூட, இந்த கடுமையான வெயில் நேரத்திலும், சொற்பொழிவு நடக்க 15 நிமிடம் இருக்கும்போதே, இந்த கூடம் முழுவதும் நிரம்பி விடுகிறது என்று இந்த இடத்தின் அறங்காவலர்கள்கூட சொல்கிறார்கள். இது இங்கு நடக்கும் முகாம்களின் சிறப்பாகும்.

இது என்னவோ பகவானின் வாணியாகும், இதை நாம் எல்லோரும் சேர்ந்து கேட்கிறோம். குருதேவின் பிரதாபத்தால்-எடுத்துச்சொல்லும் நேர்த்தியான உபதேசத்தால், அவருடைய நிமித்தத்தால், இந்த காலத்தில் மோக்ஷவிரும்பிகள் தத்துவஞானம் பெற்றுள்ளனர். திரவியானு யோகத்தின் மர்மங்களை தெரிந்து கொண்டுள்ளனர். கரணானுயோக பயிற்சியால் திரவியானுயோகத்தின் எல்லா ஸித்தாந்தங்களுக்கும் பலம்-நல்ல தெளிவு கிடைக்கிறது, நாம் தத்துவ நிர்ணயம் செய்ய இவைகள் பேருதவியாக இருக்கின்றன. கர்ம வசத்தால், பூகோள அமைப்பில் நாம் சில தவறான கற்பனை செய்திருந்தால், அது நம் அறிவின் தவறாகும், அப்படிப்பட்ட தவறான அறிவுடன் இருக்கும்போது நம் சிரத்தை-நம்பிக்கை எப்படி நன்நம்பிக்கையாக முடியும்? என்ன உங்களுக்கு சம்யக்ஞானமில்லாமல் சம்யக்தரிசனம் வேண்டுமா? ஏதாவது ஒரு நூலில் ஒரு குறிப்பிட்ட காதையை படித்துவிட்டு, சம்யக்தரிசனத்தை பெற்றுவிட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

ஞானத்தின் விஷயம் என்னவோ எல்லா லோகாலோகமுமாகும், இங்கு பார்த்தல் மற்றும் அறிதல் இரண்டின் விஷயங்கள் என்ன என்பது பற்றி தெரிந்துகொள்ளவில்லை, இப்போது நாம் அந்த விஷயம் பற்றி பேசவில்லை. மக்களின் கூற்றையும் மற்றும் ஏதாவது அனுயோகத்திற்கு மறுப்பு சொல்வதையும் கேட்டு மிகவும் கவலைப்பட வேண்டியுள்ளது. இவைகள்

சர்வக்ஞரால் சொல்லப்பட்ட விஷயமாகும், இதை மறுப்பது பகவானுக்கு மறுப்பு சொல்வதாகும், அவருடைய வாணிக்கு மறுப்பு சொல்வதாகும், நம்முடைய சர்வக்ஞ ஸ்வபாவத்திற்கும் அது மறுப்பாகிறது. சர்வக்ஞ ஸ்வபாவத்தை மறுப்பதும், அதை அனுபவம் செய்ய முயற்சி செய்வதும் எப்படி சரியாக இருக்கும் !

நாம் கங்கை நதி பற்றி பேசிக்கொண்டிருந்தோம், அங்கிருந்து நாம் எங்கெங்கோ சென்றுவிட்டோம். குகையில் பாய்ந்து இந்த இரண்டு நதிகளும் உன்மக்ன ஜலமும் மற்றும் நின்மக்ன ஜலமும் கங்கா நதியில் சென்று சேர்கின்றன. குகையில் பாய்ந்து கங்கா நதி குகையின் தெற்கு துவாரத்தின் வழியாக வெளியே வருகிறது, நேராக தெற்கு திசையில் தெற்கு பரதத்தின் பாதிவரை பாய்ந்து, கிழக்குப் பக்கம் திரும்பி ஜம்பூதீபத்தின் கரையில் மாகதம் என்ற பெயர்கொண்ட கதவின்-துவாரத்தின் வழியாக லவண சமுத்திரத்தில் கலக்கிறது. நம் மதில் சுவரில் கதவுகள் இருப்பது போல அதன் பக்கத்தில் கம்பங்கள் இருப்பது போல; நதிகள் சமுத்திரத்தில் சேருமிடத்தில்-கலக்குமிடத்தில் கதவுகள் இருக்கின்றன-துவாரங்களும் இருக்கின்றன. ஜம்பூதீபத்தின் கடைசி பாகத்தில், சமுத்திரக் கரையில் சுவர் போன்ற அமைப்பு உள்ளது அதை ஜகதி என்று சொல்கின்றனர்.

நாம் கங்கை நதி பற்றிய வர்ணனையை பார்த்தோம். இப்போது சிந்து நதி பற்றிய வர்ணனையை பார்க்கலாம். இது கூட ஹிமவான் மலையின்மேல் பத்ம ஸரோவரிலிருந்து வெளிவருகிறது. ஆனால் மேற்கு திசையில் வஜ்ர துவாரத்திலிருந்து கிளம்பி, மேற்கு திசையில் 500 யோஜனை தூரம் பாய்ந்து பிறகு தெற்கில் திரும்பி ஹிமவான் மலையின் தெற்கு பக்கம்வரை பாய்கிறது கங்கை நதி போலவே கோமுக வடிவ-விரஷபாகார பிரநாளி வழியாக வெளிவருகிறது. அங்கிருந்து 25 யோஜனை முன்னால் சென்று விழுகிறது. அங்கு மலையின் கீழே சிந்துகூட் என்ற கூடம் இருக்கிறது. கங்காகூட் போலவே இதில்கூட எல்லா அமைப்புகளும் உள்ளன. இங்கும் தேவியின் மஹலுக்கு மேலே சிம்மாசனத்தில் ஜினபிம்பம் உள்ளது, அதன் உச்சியில் சிந்து நதியின் பிரவாஹம் விழுகிறது. அந்த கூட்டிலிருந்து தெற்கு பக்கம் பாய்ந்து விஜயார்த்த மலையின் தமிஸ்ரா பெயர்கொண்ட குகையில் பிரவேசிக்கிறது. பிறகு அதன் தெற்கு துவாரத்திலிருந்து வெளிவந்து தெற்கு பரதத்தின் பாதிவரை பாய்ந்து தெற்கு திசையில் பாய்ந்து பிறகு தெற்கு பக்கம் திரும்பி ஜம்பூதீபத்தின் விளிம்பில் பிரபாஸ் என்ற பெயர்கொண்ட துவாரத்தின் வழியாக லவண சமுத்திரத்தை அடைகிறது.

பரதக்ஷேத்திரம் விஜயார்த்தமலை மற்றும் கங்கா, சிந்து ஆகிய இரண்டு நதிகளால் ஆறு பாகங்களாக பிரிக்கப்படுகிறது. அவைகளில் விஜயார்த்தமலையின் தெற்கில் இரண்டு நதிகளுக்கும் இடையில் இருக்கும் பாகம் ஆரிய கண்டமாகும், மற்ற ஐந்து பாகங்களும் மிலேச்சகண்டங்களாகும்.

இங்கு படத்தில் விஜயார்த்தமலை மலைக்கு வடக்கில் இரண்டு நதிகளுக்குமிடையில் உள்ள பிரிவில் விரஷபகிரி என்ற பெயர் கொண்ட மலை காட்டப்பட்டுள்ளது. இந்த பெயரை கேட்ட ஞாபகம் இருக்கிறதா? ஆம் நம் பூஜையில் வருகிறது இல்லையா, 'பரத் சலே விரஷபார்த்த பர்' சக்கரவர்த்தி ஆறு கண்டங்களை ஜெயித்து வந்து இந்த விருஷபகிரி மலையில் தன் பெயரை பொறிக்க செல்கிறார், ஆனால் அங்கு கொஞ்சம் கூட பெயர் பொறிக்க இடமில்லாததால், முன் சக்கரவர்த்தி ஒருவரின் பெயரை அழித்து தன் பெயரை பொறிக்க வேண்டி இருந்தது. அனாதி காலமாகவே சக்கரவர்த்தியாக ஆகிவந்தவர்கள் பலர் இருக்கின்றனர் என்பதை அறிந்து 'நான் சக்கரவர்த்தியாகி விட்டேன்' என்ற தற்பெருமை அவர்களுக்கு இல்லாமல் போகிறது.

கங்கையும்-சிந்துவும் குளத்தின் கிழக்கு-மேற்கு துவாரம் வழியாக வெளிவருகின்றன, அதேபோல ரக்தா-ரக்தோதா நதிகளும் சிகரி மலையில் உள்ள புண்டரீக குளத்திலிருந்து கிழக்கு-மேற்கு துவாரம் வழியாக வெளிவந்து கிழக்கு-மேற்கு திசைகளில் பாய்ந்து 500-500 யோஜனை சென்று வடக்கு பக்கம் திரும்பி விருஷபாகார பிரநாளியிலிருந்து கீழே குண்டத்தில் உள்ள தீபம், மலை, ஜினபிம்பம் வழியாக பாயும் அமைப்பு இருக்கிறது, அங்கு ஜினபிம்பத்தின் முடியுடன் கூடிய தலையில் விழுகிறது, மற்றும் வடக்கில் பாய்ந்து ஐராவதத்தின் விஜயார்த்த குகை வழியாக சென்று வடக்கில் பாய்ந்து கிழக்கு-மேற்காக திரும்பி லவணசமுத்திரத்தில் சென்று கலக்கின்றன.

மற்ற எல்லா நதிகளும் குளத்தின் தெற்கு மற்றும் வடக்கு துவாரத்திலிருந்து கிளம்பி தெற்கு அல்லது வடக்கில் பாய்ந்து அங்கு அந்த க்ஷேத்த்த்தின் நபிகிரியின் கால்பாகத்தல் வலம்வந்து கிழக்கு அல்லது மேற்கில் பாய்ந்து லவணசமுத்திரத்தில் சென்று கலக்கின்றன.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 13-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ பத்ரபஹு பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்.

14. போக பூமி, விதேக க்ஷேத்திரம்

திரிலோகஸார நூலில் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பு பற்றி தெரிந்து கொண்டு வருகிறோம். நாம் இப்போது நடு உலகம் பற்றி தெரிந்து கொண்டு இருக்கிறோம். நடு உலகில் அசங்க்யாத தீபசமுத்திரங்கள் உள்ளன. அதில் நட்ட நடுவில் 2½ தீப அளவு மனிதர் உலகமாகும். அங்கு ஐந்து மேரு சம்பந்தமான 5-5 பரத, ஐராவத, விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. அங்கு கர்ம பூமிகள் மற்றும் போகபூமிகள் எங்கு இருக்கின்றன என்று பார்த்தோம். இப்போது போகபூமியின் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்.

உத்தம போகபூமியில் உயர்ந்த பட்ச ஆயுள் 3 பல்லியமாகும். குருக்ஷேத்திரம்-உத்தரகுரு மற்றும் தக்ஷிணகுரு எப்போதும் உத்தம போகபூமியாகவே இருக்கிறது. ஆனால் பரத மற்றும் ஐராவத க்ஷேத்திரங்கள் இறங்கு காலத்தின் ஆரம்பத்தில் 4 கோடாகோடி கடற்காலம்வரை உத்தம போகபூமியாக இருக்கிறது. அதற்குப்பிறகு மத்திய போகபூமியாக இருக்கிறது. நாம் இறங்கு காலம் என்று சொல்லும்போது அதில் முறையே ஆயுள், உடலின் உயரம், போக்குவரத்து குறைந்து கொண்டே போகிறது ஆனால் ஆஹாரம் மட்டும் அதிகமாகிக் கொண்டே போகிறது. உத்தம போகபூமியில் உடலின் உயரம் 6,000 வில் அதாவது 3 கோஸ அளவாக இருக்கிறது. அங்கு 3 நாட்களுக்கு பிறகு ஒருமுறை சாப்பிடுகின்றனர். கடுகளவு கல்பவிருக்ஷங்கள் மூலம் கிடைக்கும் தெய்வீக உணவை அங்குள்ள உயிர்கள் உண்ணுகின்றனர். மனிதர்களின் உடலின் நிறம் உதயமாகும் சூரியனுக்கு சமமாக இருக்கிறது.

உடலின் உயரமும் ஆயுளும் குறைந்து கொண்டே போய் 4,000 வில்லும் 2 பல்லியமாகவும் ஆகிறது. அதுவே மத்திய போகபூமியின் அதிகபக்ஷ உயரமும் ஆயுளுமாக இருக்கிறது. அங்கு இரண்டு நாட்கள் இடைவெளியில் உணவு ஏற்கின்றனர், அது மிளகு அளவு இருக்கிறது. மனிதர்களின் உடலின் நிறம் உதயமாகும் முழு சந்திரனுக்கு சமமாக இருக்கிறது.

இரண்டாவது காலத்தின் முடிவில் மூன்றாம் காலத்தின் துவக்கத்தில் உடலின் உயரம் 2,000 வில் மற்றும் ஆயுள் ஒரு பல்லியமாக இருக்கிறது. இங்கு ஒரு நாள் கழித்து உணவு ஏற்கின்றனர், அது நெல்லிக்கனி அளவாக இருக்கிறது. இந்த காலத்தில் மனிதர்களின் உடலின் நிறம் பச்சை கலந்த கருப்பு நிறமாக இருக்கிறது. மூன்று போகபூமியிலும் உயிர்கள் மலம் மூத்திரம் கழிப்பதில்லை.

நான்காம் காலத்தின் துவக்கத்தில் இந்த இடங்கள் கர்ம பூமியாக ஆகின்றன, அங்கு உடலின் உயரம் 500 வில் அளவும் ஆயுள் ஒருகோடி

பூர்வமாகவும் இருக்கிறது. பகலில் ஒரு முறை ஆஹாரம் ஏற்கின்றனர். உடலின் நிறம் ஐந்து நிறங்களிலும் இருக்கின்றன. ஆயுள் குறைந்து-குறைந்து கடைசியில் 120 வருடங்கள் அளவும் உயரம் 7 முழமாகவும் ஆகின்றன. அதுவே ஐந்தாம் காலத்தின் அதிக பட்ச ஆயுளும், உயரமுமாகின்றன. ஐந்தாம் காலத்தின் முடிவில் 2 முழ உயரமும் 20 வருட ஆயுளுமாக குறைந்து போகின்றன. ஆறாம் காலத்தின் முடிவில் உயரம் ஒரு முழ அளவும் ஆயுள் 15 வருடங்களாகவும் குறைந்து போகின்றன. ஐந்தாம் காலத்தில் உடலின் பிரகாசம் இல்லாமல் பழுப்பு நிறத்தில் இருக்கிறது, அந்த காலத்தில் உயிர்கள் ஒரு நாளில் பலமுறை ஆஹாரம் உட்கொள்கின்றனர். ஆறாம் காலத்தில் உடல் புகை போன்ற நிறத்தில் இருக்கிறது, உயிர்கள் அதீத ஈடுபாட்டுடன் மீண்டும் மீண்டும் உணவு ஏற்கின்றனர்.

போகபூமி உயிர்கள் மந்த கஷாயிகளாக இருக்கின்றனர். அங்கு 10 விதமான கல்ப விருக்ஷங்கள் உள்ளன. தூர்யாங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து வாத்யங்களும், பாத்ராங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து பாத்திரங்களும் கிடைக்கின்றன. பூஷ்பாங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து பூக்களும், ஜோதிராங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து பிரகாசமும் கிடக்கின்றன. கிரஹாங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து வீடுகள்/ மாளிகைகள் கிடைக்கின்றன. வஸ்திராங்கம் என்ற பெயர் கொண்ட கல்ப விருக்ஷத்திலிருந்து உடைகளும், தீபாங்கத்திலிருந்து விளக்கு/தீபங்கள் கிடைக்கின்றன. இப்போது போகபூமியின் ஸ்வருபம் பற்றி பார்க்கலாம். போகபூமி கண்ணாடி போல மணிமயமாக இருக்கிறது, மற்றும் பூமியின் மேல்பகுதி 4 அங்குல உயரத்திற்கு உயர்ந்த சுவை மற்றும் வாசனை கொண்ட தாமரை இதழ்கள் போன்ற அமைப்பு உள்ளது. பால், அல்லது இனிப்பு சாறு அல்லது நீர் அல்லது தேனுக்கு சமமான சுவை அல்லது கூழ் போன்ற படியுடன் கூடிய கிணறு அல்லது குளங்கள் ஆகியவைகள் போகபூமியில் பரவலாக இருக்கின்றன.

இங்கு தாயின் கர்ப்பம் மூலம் ஆண் பெண் என இரண்டு குழந்தைகள் ஒன்றாகப் பிறக்கின்றனர், அதனால் இவர்களை இரட்டையர்கள்-ஜோடிகள் அல்லது தம்பதிகள் என்று சொல்கின்றனர். குழந்தைகள் பிறந்த உடன் மாதா-பிதா இருவருமே இறந்து விடுகின்றனர். என்ன, தாய் தந்தை இல்லாத குழந்தைகளா? ஆம்! நாம் இல்லாமல் நம் குழந்தைகளின் நிலைமை என்னவாகும்? என்று நாம் எண்ணுகிறோம். இங்கு உள்ள மக்கள் புத்திர மோஹத்தால் குருடராகி பெரிய பெரிய பாபங்களை செய்கின்றனர். குழந்தைகளுக்காக சம்பாதிக்கின்றனர். தங்களுக்காக அதை செலவு செய்யக்கூட அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. எல்லாவற்றையும் இங்கேயே விட்டுச் செல்லவேண்டிய போதிலும், பணம் சம்பாதிக்க எல்லா வகையான பாபங்களையும் செய்கின்றனர். உங்கள் புத்திரன் நல்லவனாக

இருந்தால் அவனுக்காக தனம் - செல்வம் சேர்த்து வைக்க என்ன அவசியம் இருக்கிறது? என்று ஒரு சமஸ்கிருதத்தில் ஸ்லோகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. நல்ல புத்திரனாக இருந்தால் அவன் சுயமாக சம்பாதிக்கும் திறன் கொண்டவன், சம்பாதித்து அவன் வாழ்க்கையை நடத்துவான், கெட்டவனாக இருந்தால் அவனுக்காக ஏன் நீங்கள் சம்பாதித்து வைக்க வேண்டும்? அவன் என்னவோ எல்லாவற்றையும் இழக்கப் போகிறான், அதற்காக நீங்கள் ஏன் பாபம் செய்து சம்பாதிக்கிறீர்கள்?

போகபூமியில் இரட்டையராகவே பிறக்கின்றனர். பிறந்து 7 தினங்கள்வரை அவர்களுடைய மோதிர விரலை சப்புகின்றனர். அடுத்த 7 தினங்கள் புரண்டு படுக்கின்றனர், அதாவது அவர்கள் வயிற்றை பூமியில் அழுத்தி நகர முயற்சி செய்கின்றனர். அடுத்த 7 தினங்கள் தட்டுத்தடுமாறி நடக்கின்றனர். அடுத்த 7 தினங்கள்வரை நன்கு நடக்கின்றனர். அடுத்த 7 தினங்கள் கலைகளை கற்றுக் கொள்கின்றனர். அடுத்த 7 தினங்களில் யவ்வன பருவமடைந்து விடுகின்றனர். அடுத்த 7 நாட்களில் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். இவ்வாறு 49 நாட்களில் அவர்கள் தம்பதியர் போன்ற முழுமை நிலையை அடைகின்றனர்.

இந்த தம்பதிகள் அதாவது ஸ்திரி-புருஷ ஜோடிகள் இருவருமே வஜ்ரவிருஷபநாராச சம்ஹன உடலமைப்பு கொண்டவர்கள். இவர்களின் உடல் சமசதுர சமஸ்தானம் கொண்டது. இவர்கள் மந்த கஷாயிகளானதால் இவர்களை ஆரியர்கள் என்று சொல்கின்றனர். ஐந்து இந்திரிய விஷயங்கள் இவர்களுக்கு மிக எளிதாகவே கிடக்கின்றன, ஆனாலும்கூட அவர்கள் அதில் திருப்தி அடைவதில்லை, விஷயங்களில் ருசி கொஞ்சம்கூட குறைவதில்லை. ஆயுள் முடிவில் புருஷர் தும்மல் தும்பியும், ஸ்திரி கொட்டாவி விட்டும் மரணமடைகின்றனர், அவர்களுடைய உடல் இலையுதிர்க்கால மேகம் கலைவது போல கரைந்து போகிறது, உடலின் எந்த பகுதியும் இருப்பதில்லை.

போகபூமி மனிதர்களும் விலங்குகளும் இறந்து நியமமாக தேவகதிக்கே செல்கின்றனர், வேறு கதிக்கு செல்வதில்லை. இங்கு உள்ள எல்லா மித்யாதிருஷ்டிகளும் இறந்து கீழ்முத்தேவகதியில் சென்று பிறக்கின்றனர், எல்லா சம்யக்திருஷ்டிகளும் சௌதர்ம-ஈசான சுவர்க்கத்தில் சென்று பிறக்கின்றனர். இங்கு உள்ள உயிர்கள் அகால மரணமடைவதில்லை, ஆயுட்கர்மம் அபவர்தனமாவதில்லை, கதலிகாத் மரணமடைவதில்லை. இவர்களுடைய ஆயுள் அசங்க்யாதத்தில் இருக்கிறது, அவர்கள் கட்டிக்கொண்ட முழு ஆயுளையும் அனுபவித்த பிறகே மரணமடைகின்றனர். அவர்களுடைய புஜ்ஜமான் ஆயுள் அனுபவித்தே கழிக்கப்படுகிறது.

பிறருடைய ஆயுள் அனுபவிக்காமல் கழிகிறதா என்ன? ஆம், கர்ம பூமியில் சில மனித மற்றும் விலங்குகளின் புஜ்ஜமான் ஆயுள் அனுபவிக்காமல் குறைந்து போகிறது. யாராவது 100 வருட ஆயுள் பந்தத்துடன் பிறக்கிறார் மற்றும் 20 வயதிலேயே அவருடைய ஆயுள் கர்மத்தின் எதிர்கால எல்லா நிஷேகங்களும் சரிந்து அந்தர்முகூர்த்த அளவுள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து விடுகின்றன. பிறகு அடுத்த கதிக்கான ஆயுளை கட்டிக் கொண்டு, பிறகு மரணமடைகின்றனர். இப்படிக்கூட ஆகமுடியும் - ஒருவர் கோடி பூர்வ ஆயுளுடன் பிறந்து, பர்யாப்த்தி முழுமை அடைந்தது அந்தர்முகூர்த்தம் கழிந்ததுமே அவருடைய ஆயுள் கதலிகாதமடைந்து அவர் மரணமடையக்கூடும். அப்படிப்பட்ட பரிணாமத்துடன் ஆயுள் பந்தத்தை கட்டியிருந்தால் கதலிகாதத்தின் மூலம் ஆயுள் குறைந்து போகிறது. நிகழ்கால உணர்வால் அப்படிப்பட்ட மரணம் நிகழ்வதில்லை, கட்டிக் கொள்ளும்போதே முடிவான விஷயமாக அது இருக்கிறது. இதனால் கிரமபத்த பர்யாய சித்தாந்தம் எந்த பாதிப்பும் அடைவதில்லை, இதைப்பற்றி நாம் முன்னரே அனேகமுறை சர்ச்சை செய்திருக்கிறோம், அகையால் இப்போது அதைப்பற்றி இங்கு எந்த விவாதமும் செய்யப்போவதில்லை.

எங்கு எந்த போகபூமி எப்போதும் இருக்கிறது என்று நாம் பார்த்திருக்கிறோம். பரத, ஐராவதத்தில் கூட 6 காலங்களின் மாற்றங்களில் 3 காலங்களில் போகபூமியாக மாற்றமடைவதைப் பார்த்தோம். எப்போது இங்கு இறங்கு காலத்தின் மூன்றாம்காலம் அதாவது ஜகன்ய போகபூமி முடியும் காலம் அருகில் வரும்போது அதாவது ஒரு பல்யத்தில் எட்டில் ஒரு பாகம் மீதம் இருக்கும்போது, வரிசையாக 14 குலகரர்கள் தோன்றுகின்றனர். இங்கு மூன்றாம் காலத்தில் தோன்றிய குலகரரின் பெயர்களாவன 1. பிரதிசுருதி, 2.ஸன்மதி, 3.சேமங்கரன், 4.சேமந்தரன், 5.சீமங்கரன், 6.சீமந்தரன், 7.விமலவாகனன், 8.சக்ஷுஷ்மான், 9.யசஸ்வி, 10.அபிசந்திரன், 11.சந்திராபன், 12.மருதேவன், 13.பிரஸேனசித், 14.நாபிராஜ்.

நாபிராஜ் குலகரரின் புத்திரன் விருஷப தேவரின் புண்ணிய பரிணாமத்தால் அவர் முதலில் மனித ஆயுளை பந்தித்து பிறகு சம்யக்திருஷ்டியாகி பிறகு க்ஷாயிக சம்யக்த்துவத்தைப் பெற்றிருக்க வேண்டும். வேறு யார் சம்யக்த்துவத்துடன் பிறக்கிறாரோ அவர் க்ஷாயிக சம்யக்திருஷ்டியாகவே இருக்க வேண்டும். மற்றவர்கள் அங்கு மித்யாத்துவம் மற்றும் ஸாஸாதனத்துடன் பிறவி எடுப்பவர்களாகக் கூட பல உயிர்கள் இருக்கின்றன. சம்யக்த்துவத்துடன் பிறவி எடுப்பவர் க்ஷாயிகியாகவோ அல்லது க்ஷாயிக சம்யக்த்துவத்தை பெறத்துவங்கியவரோ-அப்படிப்பட்ட கிருதக்கிருத்திய வேதகியாகவோ இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த குலகரர்கள் சத்ரிய குலத்தில் பிறக்கின்றனர் என்று சொல்கின்றனர். அப்போது குலப்பிரிவுகள் இல்லாத போதிலும், இவருடைய குலத்தில் எதிர்காலத்தில் பிறப்பவர்கள்தான் சத்ரியர்கள் என்று சொல்லப்படுவதால் உபசாரமாக இவரையும் சத்திரியராக

சொல்லப்படுகிறது. இந்த குலகரர்களில் சிலர் முற்பிறவி நினைவு-ஜாதிஸ்மரணம் உடையவர்களாகவும், சிலர் அவதிஞானத்துடனும் இருக்கின்றனர்.

முதலில் தோன்றும் குலகரரின் ஆயுள்கூட அதிகமாக இருக்கிறது, முதல் குலகரரின் ஆயுள் பல்லியத்தில் பத்தில் ஒரு பங்காக இருக்கிறது. முதல் இரண்டு குலகரர்களின் கால இடைவெளிகூட அதிகமாக இருக்கிறது. முதல் குலகரர் இறந்த பிறகு பல்யத்தில் 80-ல் ஒரு பாகம் கழிந்த பிறகு இரண்டாவது குலகரர் பிறக்கிறார்.

இவர்களை ஏன் குலகரர் என்று அழைக்கப்படுகின்றனர்? என்று தெரியுமா. இதுவரை போகபூமியாக இருந்தது, எதையும் சம்பாதிக்க வேண்டியதாக இல்லை. உயிர்கள்கூட மென்மையான பரிணாமம் கொண்டவர்களாக இருந்தனர். கல்பவிருக்ஷங்களால் எல்லா தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு பிறகு இது கர்ம பூமியாக ஆகப்போகிறது, அதனால் உயிர்களுக்கு அனேகப் பிரச்சனைகள் உருவாகின்றன. குலகரர்கள் அந்த பிரச்சனைகளுக்கு பரிகாரம் செய்கின்றனர். மாறிக்கொண்டு வரும் சூழ்நிலைகளில் எப்படி வாழவேண்டும், என்ன செய்ய வேண்டும் போன்ற அறிவுரைகளை அவர்கள் வழங்குகின்றனர்.

முதல் குலகரரின் காலத்தில் ஜோதிராங்க கல்பவிருக்ஷத்தின் பிரகாசம் மந்தமாகத் தெடங்கியது, அதனால் சூரியன் சந்திரன் வானில் தெரியத்தொடங்கின. அவைகள் முதலிலேயே இருந்த போதிலும் கல்பவிருக்ஷத்தின் பிரகாசத்தால் அவைகள் தெரியாமலிருந்தன. மக்கள் அவைகளை பார்த்து ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று பயந்தனர். முதல் குலகரர் அவர்களுக்கு இதை புரியவைத்து அவர்களின் பயத்தைப் போக்கினார். இரண்டாவது குலகரர் வானில் தாரகைகள்-நட்சத்திரங்கள் தெரிய வந்ததால் உன்டான பயத்தைப் போக்கினார். பிறகு சிங்கம் முதலான கொடிய விலங்குகளின் கொடுமை வரத்துவங்கியது, அவைகளிடமிருந்து தப்பிக்கும் உபாயத்தை மூன்றாவது குலகரர் கற்பித்தார். பிறகு மேலும் பல கொடிய விலங்குகளை தடிகொண்டு துரத்தும் உபாயத்தை மக்களுக்கு கற்பித்தார். அதற்குப்பிறகு கல்பவிருக்ஷங்களின் பலன்தரும் சக்தி குறையத் தொடங்கியது, அதனால் மக்களுக்கிடையே முரண்பாடு உண்டானது. அப்போது ஐந்தாவது குலகரர் எல்லைகள் வகுத்து அவரவர்கள், அவரவர்கள் எல்லைக்குள் கிடைப்பதைக் கொண்டு வாழ வகைசெய்தார். பிறகு கல்பவிருக்ஷங்களின் பலன்தரும் சக்தி மிகவும் குறைந்து போனது, அதனால் எல்லைகளுக்குள்ளும் மக்களிடையே கலவரங்கள் உண்டாயின. அப்போது ஆறாவது குலகரர் எல்லைக்கு சின்னங்களை பதித்து, கலவரங்கள் இல்லாமலிருக்கும்படி வழிகாட்டினார். ஏழாவது குலகரர் குதிரைகள் மேல் ஏறி சவாரி செய்வதைக் கற்றுக் கொடுத்தார். எட்டாவது குலகரர் காலத்தில்

குழந்தை பிறந்து சிலகாலம் தாய்-தந்தையர் உயிர் வாழ்ந்தனர், அதனால் குழந்தைகளின் முகத்தைப் பார்த்ததனால் அவர்களுக்கு வந்த பயத்தைப் போக்கினார். அதற்குப்பிறகு ஒன்பதாவது குலகரர் காலத்தில் குழந்தை பிறந்த பிறகு கொஞ்சம் அதிக காலம் தாய்-தந்தையர் உயிர் வாழ்ந்தனர், அவர்களுக்கு குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் கொடுக்கும் வழிமுறையை கற்பித்தார். பிறகு பத்தாவது குலகரர் காலத்தில் குழந்தை பிறந்த பிறகு அதிக காலம் தாய்-தந்தையர் உயிர் வாழ்ந்தனர், அப்போது அவர்களுக்கு குழந்தைகளுக்கு சந்திரன் முதலியவைகளை காட்டி விளையாடும் வழிமுறைகளை கற்பித்தார். அதற்குப்பிறகு குழந்தை பிறந்த பிறகு மேலும் அதிக காலம் தாய்-தந்தையர் உயிர் வாழ்ந்தனர், அப்போது 11-வது குலகரர் அதனால் உண்டான பயத்தை போக்கினார். 12-வது குலகரர் காலத்தில் மேகங்களும், மழையும் உண்டானதால் நதிகளும், நீர்தேக்கங்களும் உண்டாயின. அவைகளில் மக்கள் படகுகளின் மூலம் பயணம் செய்வதை கற்பித்தார். 13-வது குலகரர் காலத்தில் குழந்தைகள் படலத்துடன் பிறந்தன, அப்போது அந்த படலத்தை விலக்கும் முறையை கற்பித்தார். பிரஸூதி-பிரசவம் பார்க்கும் முறை பற்றி கலை-வழிமுறை சாஸ்திரம் அப்போதே உருவானது எனலாம்.

இந்த படலம் என்னவென்று தெரியுமா? குழந்தை பிறக்கும்போது அதன்மேல் மெல்லிய ஜவ்வு போன்ற படலம் (membrane) மூடி இருந்தது. அதற்கு உள்ளே ஒருவகை திரவியம் இருந்தது, அதன் உள்ளே குழந்தைகள் பத்திரமாக இருந்தன. அதற்குப் பிறகு குழந்தைகள் தொப்புள் கொடியுடன் பிறந்தன. தொப்புளுடன் ஒட்டி இருந்த அந்த கொடியை எப்படி துண்டிக்க வேண்டும் என்பதை 14-வது குலகரர் கற்பித்தார். அதனால் அவர் பெயர் நாபிராஜர் ஆனது. அவருடைய காலத்தில் வானவில், இடி, மின்னல் முதலியன வர ஆரம்பித்தன. இவைகளைப் பார்த்து பயந்த மக்களின் பயத்தையும் அவர் போக்கினார். மரங்களின் பழங்களில் மருத்துவ குணம் இருப்பதை உணர்த்தி, உண்ணத் தகுதியானவைகளைப் பற்றி கற்பித்தார். இதற்குப்பிறகு இந்த ஆர்ய கண்டம், கர்ம பூமியாகத் தொடங்கியது. கிராமம், நகரம், துறைமுகம் முதலியவைகளை அமைத்து, வாழ்க்கை நடத்தும் முறையை கற்பித்தார். வாள் பயிற்சி, கல்விப் பயிற்சி, வேளாண்மை, சிற்பக்கலை, வாணிபம் செய்தல் முதலான வாழ்க்கை முறைகளையும், ஒழுக்கமாக வாழ்க்கை நடத்தும் வழிமுறைகளையும் கற்பித்தார். கருணையுடன் வாழ்வதே தர்மத்தின் மூலமாகும் என்பதை ஆதி பிரம்மனான நாபிராஜனின் மகன் விருஷபதேவர் கற்பித்தார். அவரே இந்த பரத க்ஷேத்திரத்தில் இறங்கு காலத்தின் முதல் தீர்த்தங்கரர் ஆனார்.

முதல் ஐந்து குலகரர்கள் தவறு செய்பவர்களை “ஹா” என்ற சொல்லால் தண்டனை கொடுத்தார். அந்த காலத்தில் உயிர்கள் மென்மையான பரிணாமம் கொண்டவர்கள், அவர்களை திட்டுவது கூட அவசியமில்லாமல் போனது.

“ஹா” என்பதின் பொருள் “ஹாய், நீ தவறு செய்கிறாய்” என்று சொல்வதே அவர்களுடைய குற்றத்திற்கு தண்டனையாக இருந்தது, அதனாலேயே அவர்கள் தவறான செயல்களை விட்டுவிட்டனர். அதற்குப்பிறகு ஐந்து குலகரர்கள் “ஹா மா” என்று சொல்லி தண்டனை கொடுத்தனர். இதன் பொருள் “ஹாய், கெட்ட செயல் செய்கிறாய், அப்படி செய்யாதே” என்பதாகும். அதற்குப் பிறகு “ஹா, மா, திக்” என்று சொல்லி தண்டனை கொடுத்தனர். “தவறு செய்கிறாய், அப்படி செய்யாதே, நாசமாய் போ’ என்பது அதன் பொருள். இதுவரை நாம் பரதக்ஷேத்திர ஆரிய கண்டத்தில் கால மாற்றம் எப்படி நிகழ்கிறது என்று பார்த்தோம். இங்கு போக பூமியிலிருந்து கர்ம பூமியின் மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது, எங்கு எப்போதும் போகபூமியாக இருக்கிறது என்பதைப் பற்றி பார்த்தோம். நாம் இப்போது ஒவ்வொரு மேரு சம்பந்தமான விதேக க்ஷேத்திரங்களின் அமைப்பை தெரிந்து கொள்ளலாம். முதலில் நாம் கிழக்கு விதேகம் பற்றி பார்க்கலாம், பிறகு அந்த ஆதாரத்தில் மேற்கு விதேகம் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

ஜம்பூ தீபத்தில் விதேக க்ஷேத்திரம் எங்கு இருக்கிறது என்பதை படம் 5-ல் பார்க்கலாம். அதன் மத்தியில் சுதர்சன மேருவின் விட்டம் 10,000 யோஜனை யாகும். அதற்கு கிழக்கில் 22,000 யோஜனை வரை பத்ரசால வனம் இருக்கிறது. அது முடிந்ததும் பத்ரசால வனவேதி இருக்கிறது, அது நீல மலையிலிருந்து நிஷதமலை வரை இருக்கிறது. அதற்கு கிழக்கில் கிழக்கு விதேகம் இருக்கிறது, இதைப்பற்றி விரிவாக படம் 12.1-ன் ஆதாரத்தில் பார்க்கலாம். விதேக க்ஷேத்திரத்திற்கு கிழக்கில் சமுத்திரத்தின் அருகில் தேவாரண்ய வனம் மற்றும் தேவாரண்ய வனவேதி இருக்கிறது. இந்த வனவேதிகூட நீல மலையிலிருந்து நிஷதமலை வரை இருக்கிறது. படத்தைப் பாருங்கள், இங்கு கீழே தெற்கில் நிஷத மலையும், வடக்கில் நீல மலையும் இருக்கிறது. நீல மலையில் உள்ள கேஸரி தடாகத்திலிருந்து சீதா நதி மேரு வரை வந்து, மேருவை ¼ பாகம் வரை வலம் வந்து கிழக்கு திசை பக்கம் பாய்கிறது. அதனால் கிழக்கு விதேகம் வடக்குப்பகுதி தெற்குப்பகுதி என இரண்டு பிரிவாகிறது.

இங்கு படம் 12.1-ல் பத்ரசால வனவேதி மற்றும் தேவாரண்ய வனவேதி இரண்டுக்கும் இடையில் கிழக்கு விதேகம் இருக்கிறது, அதன் நடுவில் சீதா நதி பாய்கிறது, அது கிழக்கு பக்கமாகச் சென்று லவண சமுத்திரத்தில் கலக்கிறது. சீதா நதிக்கு வடக்கிலும் தெற்கிலும் 4-4 வக்ஷார மலைகள் உள்ளன, அவை பழுப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது, அவைகளில் வடக்கில் 1,2,3,4 மற்றும் தெற்கில் 5,6,7,8 வரிசையாக எழுதப்பட்டுள்ளன. மேல்திசையின் 4 வக்ஷார மலைகள் நீல மலையிலிருந்து சீதா நதி வரை பரவி இருக்கிறது, தெற்கு திசையின் 4 வக்ஷார மலைகள் நிஷத மலையிலிருந்து சீதா நதி வரை பரவி இருக்கிறது. இந்த வக்ஷார மலைகளின் பெயர்களாவன - 1.சித்திரகூட வக்ஷார மலை, 2.நலினகூட வக்ஷார மலை, 3. பத்மகூட வக்ஷார

மலை, 4.ஏகசைல வக்ஷார மலை, 5.திரிகூட வக்ஷார மலை, 6.வைஸ்ரவனகூட வக்ஷார மலை, 7.அஞ்சனசைல வக்ஷார மலை, 8.ஆத்மான்ஜன வக்ஷார மலை. இதன் வரிசையை படத்தில் சரியாக பாருங்கள். வடக்கில் 1-4 மலைகள் மேற்கிலிருந்து கிழக்கிலும், தெற்கில் 5-8 மலைகள் கிழக்கிலிருந்து மேற்கிலும் உள்ளன. (note the numbering is done clockwise).

வடக்கில் உள்ள 4 வக்ஷார மலைகளுக்கு நடுவில் 1-1 நதி நீல மலையிலிருந்து துவங்கி தெற்கு பக்கம் பாய்ந்து சீதா நதியுடன் வந்து கலக்கின்றன. இந்த நதிகளை விபங்கநதி என்று சொல்கின்றனர். தெற்கிலும் இதேபோல 3 விபங்கநதிகள் உள்ளன, அவை நிஷத மலையிலிருந்து துவங்கி வடக்கு பக்கம் பாய்ந்து சீதா நதியுடன் வந்து கலக்கின்றன. வடக்கில்உள்ள 3 நதிகளின், தெற்கில் உள்ள 3 நதிகளின் பெயர்களாவன - 1.திரஹவதி(காதவதி), 2.கிராஹவதி(திரஹவதி), 3.பங்கவதி, 4.தப்தஜலா, 5.மத்தஜலா, 6.உன்மத்தஜலா.

சீதா நதிக்கு வடக்கில் 2 வனவேதிகள், 4 வக்ஷார மலைகள், 3 விபங்க நதிகள் இவைகளுக்கு இடையில் 8 க்ஷேத்திரங்கள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் ஒரு விதேக க்ஷேத்திரமாகும். தெற்கிலும் இதேபோல 8 விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. மேருவுக்கு கிழக்கில் 8+8=16 விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. இதேபோல மேரு மலைக்கு மேற்கிலும் 16 விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு மேரு சம்பந்தமான 32 விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. இந்த 32 விதேக க்ஷேத்திரங்களின் வரிசை கூட கடிகார முள் சுற்றும் திசைப்படி clockwise direction-ல் உள்ளன. இவைகளின் பெயர்களை இப்போது பார்க்கலாம். நீங்கள் இதை படம் 12.1 - ல் பார்க்கலாம். முதலில் சுமேருவின் கிழக்கு விதேகத்தில், வடக்கில் இருப்பவை 1.கச்சா, 2.ஸுகச்சா, 3.மஹாகச்சா, 4.ஸுகச்சாவதி, 5.ஆவர்தா, 6.லாங்கலாவர்த்தா, 7.புஷ்கலா, 8.புஷ்கலாவதி. தெற்கில் இருப்பவை 9.வத்ஸா, 10.ஸுவஸ்தா, 11.மஹாவஸ்தா, 12.வத்ஸகாவதி, 13.ரம்யா, 14.ஸுரம்யகா, 15.ரமணீயா, 16.மங்கலாவதி.

மேற்கு விதேஹத்தில் முதலில் தெற்கு பக்கத்திலும், பிறகு வடக்கு பக்கத்திலும் உள்ள க்ஷேத்திரங்களை கணக்கிடலாம். மேற்கு விதேகத்தில் எந்த நதி பாய்கிறது என்று ஞாபகம் இருக்கிறதா? ஆம், ஸீதோதா நதி. ஸீதோதாவிற்கு தெற்கில் பத்ரசல வனவேதிக்கு பிறகு, அங்கிருந்து நாம் 17, 18 முதலான விதேகங்களை எண்ணி கணக்கிடலாம். மேற்கு விதேகம் பற்றி படம் 12.2-ல் பார்க்கவும். தெற்கில் 17 முதல் 24 வரையும் பிறகு வடக்கில் 25 முதல் 32 வரை வரிசையாக படத்தில் காட்டப் பட்டுள்ளன. அவைகளின் பெயர்களாவன - தெற்கில் - 17.பத்மா, 18.ஸுபத்மா, 19.மஹாபத்மா, 20.பத்மகாவதி, 21.சங்கா, 22.நளினி, 23.குமுத, 24.சரித; வடக்கில் - 25.வப்ரா, 26.ஸுவப்ரா, 27.மஹாவப்ரா, 28.வப்ரகாவதீ, 29.கந்தா,

30.ஸுகந்தா, 31.கந்திலா, 32.கந்தமாலினி. இந்த 32 விதேகங்களும் சுமேரு சம்பந்தமானவைகள். நிகழ்காலத்தில் விதேக க்ஷேத்திரங்களில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருக்கிறார்கள்? 20 தீர்த்தங்கரர்கள் இருக்கிறார்கள். ஐந்து மேரு சம்பந்தமாக 20 என்றால் ஒவ்வொரு மேரு சம்பந்த விதேகத்திலும் 4-4 தீர்த்தங்கரர்கள் இருக்கிறார்கள். முதல் நான்கு தீர்த்தங்கரர்கள் ஸீமந்தரர், யுகமந்தரர், பாஹு மற்றும் ஸுபாஹு. பாருங்கள் - ஸீமந்தர பகவான் ஸுதர்சனமேரு சம்பந்த கிழக்கு விதேகத்தின் வடக்கு பக்கத்தில் இருக்கிறார், யுகமந்தர பகவான் கிழக்கு விதேகத்தின் தெற்கு பக்கத்தில் இருக்கிறார். பாஹு பகவான் மேற்கு விதேகத்தின் தெற்கு பக்கத்தில் இருக்கிறார். ஸுபாஹு பகவான் மேற்கு விதேகத்தின் வடக்கு பாகத்தில் இருக்கிறார். அவர்களுக்கு பிறகு அடுத்த நான்கு தீர்த்தங்கரர்கள் 5.ஸம்ஜாதகர், 6.ஸ்வயம்பிரபர், 7.விரஷபானன், 8.அனந்தவீர்யன்; அவர்கள் கிழக்கு தாதகி கண்டத்தில் விஜயமேரு சம்பந்த கிழக்கு விதேகத்தின் வடக்கிலும், தெற்கிலும் மற்றும் மேற்கு விதேகத்தின் தெற்கிலும் வடக்கிலும் எழுந்தருளியுள்ளனர்.

அதற்கு பிறகு நாம் மேற்கு புஷ்கரார்த்த அசலமேரு சம்பந்த விதேகத்தையும் பிறகு சுதர்சனமேரு சம்ந்தமான விதேகத்தையும் சொல்லலாம். இவ்வாறு ஐந்து மேரு சம்பந்த 20 க்ஷேத்திரங்களில் 20 தீர்த்தங்கரர்கள் இப்போது இருக்கிறார்கள். நம் பரத க்ஷேத்திரத்தில் நாம் 24 நிகழ்கால தீர்த்தங்கரர்களின் பெயர்களை சொல்கிறோமே அவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக இருந்தவர்கள் ஆவர். நாம் இப்போது 32X5=160 விதேக க்ஷேத்திரங்களைப் பார்த்தோம். அவைகள் ஒவ்வொன்றிலும் 6-6 கண்டங்கள் உள்ளன. அவைகளில் ஒரு ஆரிய கண்டமும் 5 மிலேச்ச கண்டங்களுமாகும். நாம் கச்சா விதேக க்ஷேத்திரம் பற்றி இப்போது பார்க்கலாம். கச்சா விதேக க்ஷேத்திரம் எண்ணிக்கையின் வரிசையில் முதலாவதாக படம்-12.1-ல் காட்டப்பட்டுள்ளது. இந்த தேசத்தின் நடுவில் பழுப்பு நிறத்தில் பத்ரசால வனவேதியிலிருந்து சித்ரகூட மலைவரை விஜயார்த்த மலை காட்டப்பட்டுள்ளது. நீல மலையிலிருந்து துவங்கும் இரண்டு நதிகள் - ரக்தா மற்றும் ரக்தோதா, நேராக தெற்கு திசையில் பாய்ந்து விஜயார்த்த குகை வழியாக சென்று, தெற்கில் சீதா நதியோடு கலக்கிறது. இரண்டு நதிகள் மற்றும் விஜயார்த்த மலையின் காரணத்தால் இந்த விதேகம் ஆறு கண்டங்களாக ஆகிறது. விஜயார்த்த மலைக்கு தெற்கில் இரண்டு நதிகளுக்கும் இடையில் ஆரியகண்டம் இருக்கிறது, மற்ற ஐந்தும் மிலேச்ச கண்டங்களாகும். பரத ஐராவத க்ஷேத்திரங்களில் 6-6 கண்டங்களைப் பார்த்தது போலவே இங்கும் இருக்கிறது. ஆனால் பரத ஐராவத ஆரிய கண்டத்தில் எப்படி கால மாற்றங்கள் இருந்ததோ அதேபோல இங்கு கால மாற்றங்கள் இல்லை, எப்போதும் இறங்குகாலத்தின் நான்காம் காலம் போலவே இங்கு இருக்கிறது.

160 விதேகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விஜயார்த்த மலையும் 2-2 நதிகளும் இருப்பதால் 6-6 கண்டங்கள் இருக்கின்றன. இங்கு கிழக்கு விதேகத்திற்கு வடக்கில் நீலமலையிலிருந்து துவங்கி ஒவ்வொரு விதேகத்திலும் ரக்தா, ரக்தோதா என்ற 2-2 நதிகள் தெற்கு பக்கம் பாய்ந்து சீதா நதியோடு கலக்கின்றன. கிழக்கு விதேகத்திற்கு தெற்கில் நிஷத மலையிலிருந்து துவங்கி ஒவ்வொரு விதேகத்திலும் கங்கா, சிந்து என்ற 2-2 நதிகள் வடக்கு பக்கம் பாய்ந்து சீதா நதியோடு கலக்கின்றன. ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் நதியின் பெயர்கள் இதேதான்.

ஒவ்வொரு விதேகக்ஷேத்திரத்தின் விஜயார்த்த மலை தனித்தனி யாகும். இங்கு 2-ஆவது எண்ணிக்கை கொண்ட ஸுகச்சா தேசம் சித்ரகூட மலை மற்றும் த்ரஹவதி விபங்க நதிகளுக்கு இடையில் உள்ளது, அதன் விஜயார்த்த மலைகூட வக்ஷார மலையிலிருந்து நதிவரை இருக்கிறது. இந்த ஒவ்வொரு விதேகத்திலும் சக்கரவர்த்தி, தீர்த்தங்கரர், மற்றும் சலாகா புருஷர்கள் தனித்தனியாக இருக்கிறார்கள். இவர்கள் ஒரு விதேகத்திலிருந்து மற்ற விதேகங்களுக்கு செல்வதில்லை. அங்குகூட சக்கரவர்த்திகள் 6 கண்டங்களை ஜெயித்து, விரஷபகிரி மலைக்கு சென்று அவர்களுடைய பெயர்களை பதிக்கின்றனர். எத்தனை விதேக க்ஷேத்திரங்கள் உள்ளனவோ அத்தனை விஜயார்த்த மலைகள் உள்ளன. இப்போது என்னுடைய கேள்வி ஜம்பூ தீபத்தில் மொத்தம் எத்தனை விஜயார்த்த மலைகள் உள்ளன? பதில் - 34-சரிதானே. பாருங்கள், 32 விதேகங்களில் 32, பரத க்ஷேத்திரத்தில் 1, ஐராவத க்ஷேத்திரத்தில் 1, ஆக மொத்தம் 34 விஜயார்த்த மலைகள் ஒவ்வொரு மேரு சம்பந்தமாக இருக்கின்றன. ஜம்பூ தீபத்தில் மொத்தம் எத்தனை வக்ஷார மலைகள் உள்ளன? கிழக்கு விதேகத்தில் வடக்கில் 4, தெற்கில் 4 வக்ஷார மலைகள் இருப்பதை பார்த்தோம். அதேபோல மேற்கு விதேகத்தில் வடக்கில் 4, தெற்கில் 4 வக்ஷார மலைகள் இருப்பதை பார்த்தோம். ஆக மொத்தம் 16 வக்ஷார மலைகள் இருக்கின்றன. இந்த எல்லா பெயர்களையும் நாம் கடைசியில் எப்போது நடு உலகில் உள்ள இயற்கை ஜினாலயங்களைப் பற்றி பார்க்கிறோமோ, அப்போது மீண்டும் பார்க்க விருக்கிறோம். ஆகையால் இந்த மலைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள.

என்ன, ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறதா? ஒவ்வொரு விதேகத்திலும் 5-5 மிலேச்ச கண்டங்களும், 1-1 ஆரிய கண்டமும் உள்ளது. மிலேச்ச கண்டங்களில் தர்மத்தை கைகொள்பவர்கள் இல்லை. இங்கு நம்மில் பலர் மஹாவிதேகத்தில் சென்று பிறக்க விரும்புகின்றனர். கொஞ்சம் யோசித்து பாருங்கள், அங்கு உள்ள மிலேச்ச கண்டத்தில் சென்று பிறந்தால் நாம் என்ன வாவோம்? மக்கள் விதேகத்தில் சீமந்தர பகவான் இருக்குமிடத்தில் சென்று பிறக்க விரும்புகின்றனர், அவர்களுக்கு பாஹு, சுபாஹு பகவான் தேவையில்லை, ஏனெனில் சீமந்தரர் தான் அதிகம் விரும்பப் படுபவராக இருக்கிறார் அல்லவா? நம் க்ஷேத்திர 24 தீர்த்தங்கரர்களில் யார் அதிகமாக

விரும்பப்படுகிறார்? பார்ஸ்வநாதரை சங்கடங்களை தீர்ப்பவர் என்றும், சாந்தி நாதர் சாந்தி அளிப்பவர் என்றும் நம்புகிறோம்! அப்படித்தானே? இவைகள் எல்லாம் நம் அபிப்பிராயத்தில் உள்ள தவறாகும். நம்பிக்கையில் உள்ள குற்றமாகும்!

விதேகக்ஷேத்திரத்தில் நிகழ்காலத்தில் 20 தீர்த்தங்கரர்கள் உள்ளனர். எப்போதாவது 160 விதேகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தீர்த்தங்கரர் இருக்கிறார், அதே காலத்தில் ஐந்து பரதம், ஐந்து ஐராவதங்களிலும் தீர்த்தங்கரர்கள் உள்ளனர். இவ்வாறு மொத்தம் 170 தீர்த்தங்கரர்கள் ஒரே காலத்தில் இருக்க முடியும். அப்படி எப்போது நிகழ்ந்தது என்று தெரியுமா? எப்போது நம் பரதக்ஷேத்திரத்தில் அஜிதநாத தீர்த்தங்கரர் இருந்தாரோ அப்போது, அப்படி நிகழ்ந்தது. கிழக்கு விதேகத்தின் கடைசியில் கிழக்கு எல்லையில் தேவாரண்ய வனவேதி இருக்கிறது, அதற்கு கிழக்கில் தேவாரண்ய வனம் இருக்கிறது. இதற்கு இடையில் சீதாநதி கிழக்குப் பக்கம் பாய்ந்து லவணசமுத்திரத்தில் வந்து கலக்கிறது. தேவாரண்ய வனத்திற்கும் லவண சமுத்திரத்திற்கும் இடையில் சுவர் போன்ற அமைப்பு இருக்கிறது, இதை ஜகதி என்று சொல்கின்றனர். சீதாநதி எங்கு சமுத்திரத்தில் கலக்கிறதோ அங்கு இந்த ஜகதியில் துவாரங்கள் உள்ளன. எல்லா மஹாநதிகளும் எங்கு சமுத்திரத்தில் கலக்கிறதோ அங்கு இப்படிப்பட்ட அமைப்பே இருக்கிறது. இத்துடன் இது பற்றிய சர்ச்சையை முடித்துக் கொள்ளலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 14-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ புஜங்க பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்.

விலங்குகளின அதிகபட்ச உயரமும் ஆயுளும்
ஏகேந்திரியம் - தாமரை - 1,000 யோஜனையை விட கொஞ்சம் அதிகம். வனஸ்பதி - 10,000 வருடம்,
சுத்த பிருத்வி - 12,000 வருடம், மண்ணுடலி - 22,000 வருடம் , நீருடலி- 7,000 வருடம்.
நெருப்புடலி - 3 நாட்கள், காற்றுடலி- 3,000 வருடம்.
இரண்டு இந்திரியம் - சங்கு - 12 யோஜனை,12 வருடம்.
மூன்று இந்திரியம் - எறும்பு - 3/4 யோஜனை, 49 நாட்கள்.
நான்கு இந்திரியம்- வண்டு - 1 யோஜனை, 6 மாதங்கள்.
ஐந்து இந்திரியம் - பெரியமீன்- 1,000 யோஜனை, பூர்வ கோடி வருடங்கள்.

15. வித்யாதரர்கள், குபோகபூமி

ஸ்ரீமத் நேமிசந்திர ஆச்சார்யரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலில் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பு பற்றி தெரிந்து கொண்டு வருகிறோம். கீழுலகம், மேலுலகம் பற்றி பார்த்த பிறகு, நடு உலக அமைப்பில் நாம் மனித உலகில் உள்ள 6 குலாசல மலைகள், 7 க்ஷேத்திரங்கள், கர்மபூமி, போகபூமி முதலியவைகளைப் பற்றி பார்த்தோம். பரதக்ஷேத்திரம் மற்றும் விதேகக்ஷேத்திரம் பற்றிய வர்ணனையையும் பார்த்தோம். 6-6 கால மாற்றங்கள் பரத மற்றும் ஐராவத க்ஷேத்திரங்களில் மட்டுமே நிகழ்கிறது, அங்குகூட ஆரிய கண்டத்தில் மட்டுமே நிகழ்கிறது, மிலேச்ச கண்டங்களில் காலமாற்றங்கள் நிகழ்வதில்லை. ஆரிய கண்டத்தில் முதல் காலத்திலிருந்து 6-ம் காலம் வரை மாற்றமடைந்த பிறகு, தலைகீழாக அதே கால மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் பரத-ஐராவத மிலேச்ச கண்டங்களில் நான்காம் காலத்தைப் போன்ற நிலைமையே எப்போதும் இருக்கிறது. அவை போகபூமியாகவோ 5, 6-ஆம் கால நிலையையோ அடைவதில்லை. இங்கு நான்காம் காலம் என்பதின் பொருள் அங்கிருந்து மோக்ஷம் போகலாம் போல இருக்கிறது என்று நம்பாதீர்கள். இங்கு உடலின் அமைப்பு மற்றும் ஆயுள் நோக்கில் மட்டுமே நாலாம் காலம்போல என்று சொல்லப்படுகிறது. ஆரிய கண்டத்தில் ஆறு காலங்கள் நிகழும்போது மிலேச்ச கண்டங்களில் நான்காம் கால துவக்கத்திலிருந்து கடைசிவரை எவ்வளவு மாற்றம் நிகழ்கிறதோ அதே அளவு மாற்றங்களே நிகழ்கின்றன.

இங்கு இறங்கு காலத்தின் ஆரம்பத்தில் 500 வில் உயரமும் ஒருகோடி பூர்வம் ஆயுளும், முடிவில் 7 முழ உயரமும் 120 வருட ஆயுளும் உயர்ந்த பட்ச அளவில் இருக்கிறது. சக்கரவர்த்தி 6 கண்டங்களையும் ஜெயிக்கிறார், மிலேச்ச கண்டங்களை வெற்றி கொள்கிறார், அப்போது ஆயிரக்கணக்கான மிலேச்ச கன்னியர்களை திருமணம் செய்து அவர்களை ஆரிய கண்டத்திற்கு அழைத்து வருகிறார். அப்போது அவருக்கு சமமான உயரம் உடையவர்களாக அந்த கன்னியர்கள் இருக்கிறார்கள், இல்லையா? மற்றும் கடைசியில் சக்கரவர்த்தி ஆகுபவருடைய உயரம் குறையும்போது அந்த மிலேச்ச கன்னியர்களின் உயரமும் அவருக்கு உகந்த அளவிலேயே இருக்கிறது.

எங்கு எந்த காலம் நிகழ்கிறது என்பதை நாம் முன்னரே பார்த்தோம். எங்கு எப்போதும் உத்தம, மத்திய, ஜகன்ய போகபூமியாக இருக்கிறதோ அவைகளையும் நாம் பார்த்தோம். விதேக க்ஷேத்திரத்தில் எப்போதும் நான்காம் காலம் போலவே இருக்கிறது, அங்கு தீர்த்தங்கரர்களும் எப்போதும் இருக்கிறார்கள், இல்லாமல் போவதில்லை. இந்த ஜின தர்மம் என்னவாகும்? அது மறைந்து விட்டால் என்னவாகும்? என்ற கவலை நமக்கு வருகிறது. அங்கு

யாருக்கும் நான் ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட தத்துவ ஞானத்தை ஏற்காவிட்டால் எனக்கு என்னவாகும்? என்ற பயம் வருவதில்லை. உலகம் எவ்வளவு பெரியது என்பதை நாம் பார்க்கிறோம், ஆனால் நாம் நம்மைப்பற்றி தெரிந்து கொள்ளவில்லை என்றால், பிறகு எங்கெங்கு சென்று நாம் பிறப்போம் மற்றும் எங்கெங்கு அலைய வேண்டியிருக்கும் என்பதை கருத்தில் கொள்ளுங்கள் - இந்த பயம் ஒரு பக்கம் இருக்கட்டும், பிறவி சுழற்சி பற்றிய பயம் வந்தால், அதிலிருந்து விடுபடுதலுக்கு வேண்டிய உபாயத்தை இந்த பிறவிவியிலேயே - வெகு விரைவாகச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய உணர்வு வரும்.

பரத-ஐராவதங்களின் 5-5 மிலேச்ச கண்டங்களிலும் மற்றும் விஜயார்த்த மலையின் பக்கங்களிலும் எங்கு வித்யாதரர்கள் வசிக்கிறார்களோ அங்குகூட நான்காம் கால துவக்கத்திலிருந்து முடியும்வரை உள்ளது போலவே ஏற்ற இறக்கங்கள் நிகழ்கின்றன. தேவர்களுக்கு எப்போதும் முதல் காலம் போன்றும், நரகர்களுக்கு எப்போதும் ஆறாம்காலம் போன்றும் சுக-துக்கங்கள் இருக்கும், இது ஆயுள், உடல் அளவு மற்றும் உணவு நோக்கில் இல்லை. குபோக பூமியில் மூன்றாம் காலம்போல எப்போதும் இருக்கும். சுயம்புரமண சமுத்திரம், மற்றும் வெளிப்பாதி சுயம்புரமண தீபமும் தீக்காலம் அதாவது ஐந்தாம் காலம்போல இருக்கும்.

நாம் முன்னர் விஜயார்த்த மலைகளைப் பற்றி பார்த்திருக்கிறோம், ஞாபகம் இருக்கிறதா? ஒவ்வொரு விதேக க்ஷேத்திரத்திலும், பரத க்ஷேத்திரத்திலும் ஐராவத க்ஷேத்திரத்திலும், ஒவ்வொரு விஜயார்த்த மலை இருக்கிறது. அது அந்தந்த க்ஷேத்திரத்தையும் தெற்கு மற்றும் வடக்கு என இரண்டு பிரிவாக ஆக்குகின்றன. விஜய என்பதின் பொருள் தேசம், இந்த மலையின் மூலம் இந்த தேசம் இரண்டு பாகங்களாகின்றன, அதனால் இதற்கு விஜயார்த்த மலை என்ற பெயர் பொருத்தமானதே. இந்த மலையின் கிழக்கு-மேற்கு நீளமாக இருக்கிறது, அந்த க்ஷேத்திரத்தின் எல்லை வரை பரவி இருக்கிறது. இதன் தெற்கு-வடக்கு அகலம் 50 யோஜனையாகும், உயரம் 25 யோஜனையாகும். விஜயார்த்த மலை கீழிருந்து 10 யோஜனை உயரம்வரை 50 யோஜனை அளவு சமமாக இருக்கிறது. 10 யோஜனை உயரத்தில் தெற்கு வடக்கு இரண்டு பக்கத்திலும் 10-10 யோஜனை அளவு குறைந்து அங்கு மலையின் அகலம் 30 யோஜனையாக இருக்கிறது. அது மேலே 10 யோஜனை உயரம் வரை சமமாக இருக்கிறது. பிறகு தெற்கு வடக்கு இரண்டு பக்கத்திலும் 10-10 யோஜனை அளவு குறைந்து அங்கு மலையின் அகலம் 10 யோஜனையாக இருக்கிறது. அது மேலே 5 யோஜனைவரை சமமாக இருக்கிறது.

அங்கு முதல் சமவெளியில் வித்யாதரர்கள் வாழ்கின்றனர். அங்கு தெற்கு மற்றும் வடக்கு இரண்டு பக்க ஸ்ரேணிகளிலும் வித்யாதரர்கள் வாழும்

நகரங்கள் உள்ளன. விதேக க்ஷேத்திரத்தின் விஜயார்த்த மலையின் தெற்கு ஸ்ரேணியில் 55 நகரங்களும், வடக்கு ஸ்ரேணியில் 55 நகரங்களும் உள்ளன. ஜம்பூ தீபத்தின் பரத-ஜராவத க்ஷேத்திர சம்பந்தமான விஜயார்த்த மலையின் தெற்கு ஸ்ரேணியில் 50 நகரங்களும், வடக்கு ஸ்ரேணியில் 60 நகரங்களும் உள்ளன. இந்த எல்லா நகரங்களும் இரத்தின மயமாக உள்ளன. கோட்டை, கதவுகள், ஆலயங்கள், வீதிகள், குளங்கள், வனங்கள் எல்லாம் இந்த நகரங்களில் உள்ளன. இந்த நகரங்களில் வித்யாதரர்கள் வாழ்கின்றனர். இந்த வித்யாதரர்கள் என்னவோ மனிதர்கள்தான். அவர்கள் குறிப்பிட்ட வித்தைகளில் கை தேர்ந்தவர்கள், இவர்கள் மோக்ஷம்கூட செல்லமுடியும். உங்களுக்கு மோக்ஷமடைந்த வித்யாதரர்கர்கள் யார்-யார் என்று தெரியுமா? ஹனுமான் வித்யாதரர், அவர் அதே பிறவியில் மோக்ஷமடைந்திருக்கிறார். இராவணனின் மகன் மேகநாதன் கூட வித்யாதரர், அவரும் மோக்ஷமடைந்தார்.

இந்த வித்யாதரர்கள் மூன்றுவகை வித்தைகளைப் பெற்றுள்ளனர். 1.புலனடக்கங்களில் சாதனை செய்து பெற்ற வித்தைகள். 2.குல வித்தைகள்-அவர்களுடைய தகப்பனார் பரம்பரையில் அதாவது அவர் பிறந்த குல சம்பந்தமான வித்தைகள். 3.ஜாதி வித்தைகள்-அவர்களுடைய தாயார் பரம்பரையில் அதாவது அவர் பிறந்த ஜாதி சம்பந்தமான வித்தைகள்.

வித்யாதரர்கள் ஆறு கர்மங்களையும் செய்பவர்களாக இருக்கின்றனர். அந்த ஆறு கர்மங்கள்-செயல்களாவன: 1.இஜ்யா, 2.வார்த்தா, 3.தத்தி, 4.ஸ்வாத்யாய, 5.சய்யம், 6.தபம். வணங்கத்தக்கவர்களை பூஜித்தல் இஜ்யா வாகும். அசி, மசி முதலான தொழில் செய்து வாழும் வழிமுறைகள் வார்த்தா வாகும். தானமளித்தல் தத்தி எனப்படுகிறது. படித்தல், படிப்பித்தல் செய்தல் ஸ்வாத்யாய மாகும். விரதமின்மையை தியாகம் செய்தல் சய்யம மாகும். தவம் மேற்கொள்ளல் தப மாகும்.

கேள்வி: இந்த அசி, மசி என்பதெல்லாம் என்ன?

பதில்: அசி, மசி, க்ருஷி, வித்யா, சில்பம், மற்றும் வாணிஜ்யம் முதலானவை வாழ்க்கை நடத்த உலக வழக்கில் இங்கு பரத க்ஷேத்திரத்தில் விருஷபதேவர் அரசராக இருந்தபோது மக்களுக்கு கற்றுக்கொடுத்த தொழில் முறைகளாகும். அசி என்றால் வாள் பயிற்சி, வில் பயிற்சி முதலான சஸ்திர வித்தைகளில் நிபுணர்கள். இவர்கள் சேனைகளில் வேலை செய்து பணம் சம்பாதித்து அதன்மூலம் வாழ்க்கை நடத்துவர். நம் மொழியில் தினமும் சாப்பிட - உணவு உண்ண வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுதல் போன்றதாகும். மசி என்றால் எழுதுதல் மூலம் பணம் சம்பாதித்தல். இந்த காலத்தில் தட்டச்சு செய்தல், கணக்கு வழக்குகளை எழுதி கணக்கர் வேலை செய்தல் முதலியன இதிலடங்கும். க்ருஷி என்றால் விவசாயம் - பயிர் தொழில் செய்தல். வித்யா என்றால் சித்திரம் வரைதல், நாட்டியம், பாடுதல் முதலியன இதிலடங்கும்.

சில்பம் என்றால் கைவினைஞர்; வண்ணான், முடி வெட்டுதல், தச்சு-மர வேலை, கருமார்- உலோக சம்பந்தமான வேலை, பொற்கொல்லர் முதலியன வேலைகள் செய்து பிழைத்தல். வாணிஜ்யம் என்றால் அனேக வஸ்துக்களை வாங்கி விற்று வாணிபம் செய்தல்.

வித்யாதரர்கள் கர்ம பூமி மனிதர்களாவர். எப்போதும் இங்கே நான்காம் காலம் போலவே இருக்கிறது. பரத ஐராவதங்களில் உள்ள ஆரிய கண்டத்தில் நான்காம் காலம் முதல் கடைசிவரை எப்படி ஏற்ற இறக்கங்கள் நிகழ்கிறதோ அப்படியே விஜயார்த்த வித்யாதரர்கள் வாழும் ஸ்ரேணியில் நிகழ்கிறது. அங்கு ஐந்தாம், ஆறாம் காலங்கள் போல ஆவதில்லை. பரத ஐராவதங்களில் ஆறாம் கால முடிவில் பல தினங்களுக்கு புயல் வீசுவதை-பிரளயங்கள் வருவதை கேள்விப் பட்டிருப்பீர்கள். அந்த சமயத்தில் வித்யாதரர்கள் வந்து சில மனிதர்களையும், விலங்குகளையும் அவர்கள் இருக்கும் இடங்களுக்கு பத்திரமாக அழைத்துச் செல்கின்றனர். விஜயார்த்த மலையின் இரண்டாம் சமவெளியில் சௌதர்ம சம்பந்த ஆபியோக்ய தேவர்கள் வாழும் மணிமயமான நகரங்கள் உள்ளன. விஜயார்த்த மலையின் சிகரத்தில் சித்தாயத்தன் முதலான கூடங்கள் உள்ளன. அங்கு பூரணபத்ர கூடத்தில் விஜயார்த்த குமாரபதி தேவர் வாழ்கிறார்.

இதுவரை நாம் கர்ம்பூமி, போகபூமி பற்றி பார்த்தோம். ஆனால் இதில் குபோகபூமி என்றால் என்ன? அது எங்கிருக்கிறது? அதைப்பற்றி இப்போது நாம் பார்க்கலாம். இவைகளை குமானுஷ பூமி என்றுகூட சொல்கின்றனர். இதை நீங்கள் படம் 9-ல் பருங்கள். இங்கு வாழும் மனிதர்களை குமானிடர்கள் அல்லது அந்தர்த்வீபஜ் மிலேச்சர்கள் என்றுகூட சொல்கின்றனர். இந்த குபோக பூமிகள் லவண சமுத்திரத்திலும் மற்றும் காலோததி சமுத்திரத்திலும் தீவுகளாக இருக்கின்றன. இவைகளை இப்போது படத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இங்கு நடு உலகில் 1,00,000 யோஜனை விட்டம் கொண்ட ஜம்பூ தீபம் இருக்கிறது. அதைச்சுற்றி 2,00,000 யோஜனை விஸ்தீரணமுடைய லவண சமுத்திரம் படத்தில் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளது. அதற்குப் பக்கத்தில் அதைப்போல இரண்டு மடங்கு பெரியதான தாதகி கண்ட தீபம் இருக்கிறது. இங்கு படத்தில் இடம் இல்லாததால் சரியான அளவில் அதை காட்ட முடியவில்லை. அதற்கு வெளியே காலோததி சமுத்திரம் இருக்கிறது. அதில் உள்ள பூமிகளை காட்ட படத்தில் இதை கொஞ்சம் பெரியதாக காட்டப்பட்டுள்ளது. அதற்கு வெளியில் காலோததி சமுத்திரம் இருக்கிறது, அது 8,00,000 யோஜனை விஸ்தீரணம் கொண்டது.

இங்கு நாம் லவண சமுத்திரம், காலோததி சமுத்திரம் இவை இரண்டிலும் உள்ள 96 தீபங்களைப் பற்றி பார்க்கலாம். இங்குதான் குபோகபூமிகள்

உள்ளன. இவைகளில் 48 தீபங்கள் லவண சமுத்திரத்திலும், மேலும் 48 தீபங்கள் காலோததி சமுத்திரத்திலும் உள்ளன. அங்குகூட 24 தீபங்கள் சமுத்திரத்தின் உட்புற கரைக்கு அருகிலும், 24 தீபங்கள் சமுத்திரத்தின் வெளிப்புற கரைக்கு அருகிலும் உள்ளன. இவைகளை நாம் படத்தைப் பார்த்து தெரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். முதலில் லவண சமுத்திரத்தின் உட்புற கரைக்கு அருகில் உள்ள, அதாவது ஜம்பூ தீபத்திற்கு அருகில் 4 திசைகளிலும் மற்றும் 4 குறுக்கு திசைகளிலும் 1-1 என 8 தீபங்கள் உள்ளன. படத்தில் அவை கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளன, அதற்கு பக்கத்தில் அதன் எண்ணும் வரிசையாக எழுதப்பட்டுள்ளது. முதல் எண் கிழக்கிலும், இரண்டாவது தெற்கிலும் , மூன்றாவது மேற்கிலும், நான்காவது வடக்கிலும், 5-தாவது தென்கிழக்கு(அக்னி) மூலையிலும், 6-வது தென்மேற்கு (குபேர) மூலையிலும், ஏழாவது வடமேற்கு(வாயு) மூலையிலும், 8-ஆவது வடகிழக்கு (ஈசான்ய) மூலையிலும் உள்ளன. இவைகளுக்கு இடையில் அதைவிட கொஞ்சம் சிறிய அளவிலான 8 தீபங்கள் உள்ளன, அவை படத்தில் சிகப்பு நிறத்தில் காட்டப் பட்டுள்ளன. முதல் தீபத்திற்கும் 5-வது தீபத்திற்கும் இடையில் 9-ஆவது தீபம் உள்ளது, பிறகு வரிசையாக ஒவ்வொன்றுக்கும் இடையில் 10-லிருந்து, 16-வரை தீபங்கள் உள்ளன. இவ்வாறு 16 தீபங்கள் உள்ளன.

ஜம்பூதீபத்தின் வடக்கில் ஸிகரி மலையும், தெற்கில் ஹிமவான் மலையும் காட்டப்பட்டது. அவைகள் ஒவ்வொன்றின் கிழக்கு திசையில் இரண்டு, மேற்கு திசையில் இரண்டு, அப்படி 4-4 தீபங்கள் உள்ளன. படத்தைப் பாருங்கள் - ஹிமவான் மலைக்கு நேராக கிழக்கில் 9-ஆவது தீபத்திற்கு கிழக்கில் 17-வது தீபம் இருக்கிறது, அதற்கு நேராக ஹிமவான் மலைக்கு மேற்கில் 12-வது தீபத்திற்கு மேற்கில் 18-ஆவது தீபம் இருக்கிறது. 17-க்கு கீழே 19-ஆவதும் 18-க்கு கீழே 20-ஆவது தீபமும் இருக்கிறது. அதேபோலவே ஸிகரி மலைக்கு கிழக்கில் 21-வது, மேற்கில் 22, கிழக்கில் 23-வது, மற்றும் மேற்கில் 24-ஆவது தீபமும் இருக்கிறது. இப்போது இந்த தீபங்களின் விஸ்தீரணத்தைப் பார்க்கலாம். ஜம்பூதீபத்தின் ஜகதியிலிருந்து 500 யோஜனை தூரத்தில் சமுத்திரத்தில் திசை சம்பந்தமான (1-ல் இருந்து 4-ஆவது) தீபங்கள் இருக்கின்றன, அவை 100 யோஜனை விட்டம் கொண்ட வட்டமாக இருக்கிறது. ஜம்பூதீபத்தின் ஜகதியிலிருந்து 500 யோஜனை தூரத்தில் சமுத்திரத்தில் குறுக்கு திசை சம்பந்தமான (5-ல் இருந்து 8-ஆவது) தீபங்கள் இருக்கின்றன, அவை 55 யோஜனை விட்டம் கொண்ட வட்டமாக இருக்கிறது. ஜம்பூதீபத்தின் ஜகதியிலிருந்து 550 யோஜனை தூரத்தில் இடைவெளியில் உள்ளவை சம்பந்தமான (9-ல் இருந்து 16-ஆவது) தீபங்கள் உள்ளன, அவைகள் 50 யோஜனை விஸ்தீரமுடையவை யாகும். ஜம்பூதீபத்தின் ஜகதியிலிருந்து 600 யோஜனை தூரத்தில் மலைகளுக்கு அருகில் இருக்கும் (17-ல் இருந்து 24-ஆவது) தீபங்கள் உள்ளன, அவைகள் 25 யோஜனை

விஸ்தீரமுடையவை யாகும். இவைகள் எல்லாம் சமுத்திரத்திலேயே நிலைகொண்டுள்ள வட்ட வடிவ தீபங்களாகும்.

இவைகளின் பெயர்கள் வெவ்வேறாகும். இவ்வாறாக 24 தீபங்கள் லவண சமுத்திரத்தின் வெளிகடற்கரையின் சமீபத்தில், தாதகி கண்டத்திலிருந்து அதே தூரத்தில் இருக்கின்றன. அவைகளின் பெயர்களும் அதுவேயாகும். இப்போது நாம் அவைகளின் பெயர்களை வரிசையாகப் பார்க்கலாம். படம்-9 -ல் முதலில் நாம் லவண சமுத்திரத்தின் 24 தீபங்களின் பெயர்களைப் பார்க்கலாம். உள் மற்றும் வெளி கரையில் அதே எண்ணில் அதே பெயரில் அப்படியேயான தீபங்கள் இருக்கின்றன. படத்தில் அவைகளின் நிறத்திலிருந்தும், அளவிலிருந்தும் அவைகளை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். திசை, குறுக்கு திசை சம்பந்த தீபங்களின் பெயர்கள் உள்கரையிலிருந்து வெளிகரைவரை கொடுக்கப்பட்டுள்ளன. 9-தில் இருந்து 24-ஆவது தீபம்வரை பெயர்கள் வெளிக்கரை பக்கம் எழுதப்பட்டுள்ளன. இவைகளின் பெயர்கள் வரிசையாக இவ்வாறு இருக்கின்றன. - 1.ஏகோரூக, 2.லாங்குலிக, 3.வைஷாணிக, 4.அபாஃஷக, 5.சஷ்குலிகர்ண, 6.கர்ணப்ராவரண, 7.லம்பகர்ண, 8.சசகர்ண 9.சிங்கமுக, 10.அஸ்வமுக, 11.ஸ்வான்முக, 12.மஹிஷ்முக, 13.வராஹமுக, 14.சார்துலமுக, 15.குகமுக, 16.பந்தர்முக, 17.மத்ஸ்யமுக, 18.காலமுக, 19.மேஷமுக, 20.கோமுக, 21.மேகமுக, 22.வித்யுன்முக, 23.தர்பணமுக, 24ஹஸ்திமுக.

இவ்வாறு லவண சமுத்திரத்தில் 24 தீவுகள் உள்பக்கத்திலும், 24 தீவுகள் வெளிப்க்கத்திலும் ஆக மொத்தம் 48 குமானுஷ தீவுகள் உள்ளன. காலோததி சமுத்திரத்திலும் கூட 24 தீவுகள் உள்பக்கத்திலும், 24 தீவுகள் வெளிப்க்கத்திலும் ஆக மொத்தம் 48 குமானுஷ தீவுகள் உள்ளன. திசைகளில் 4, விதிசைகளில் 4, இவைகளுக்கு இடையில் 8, கிழக்கில் சிறிச-சிறிய 4, மற்றும் மேற்கில் சிறிச-சிறிய 4 என மொத்தம் 24 குமானுஷ தீவுகள் உள்ளன. இப்போது அவைகளின் பெயர்களைப் பார்க்கலாம். 1.வத்ஸ்யமுக, 2.அஸ்வகர்ண, 3.பக்ஷிமுக, 4.ஹஸ்தகர்ண, 5, 6, 7, 8.சுகரகர்ண, 9. உஷ்ட்ரகர்ண, 10, 11.மார்ஜாரமுக, 12.கர்ணப்ராவர்ண, 13.கஜமுக, 14, 15. மார்ஜாரமுக, 16.கோகர்ண, 17.வ்ருகமுக, 18.வ்யாக்ரமுக, 19.சிசுமார்முக, 20.மகரமுக, 21.அக்ஷமுக, 22.ஸருகாலமுக, 23.த்வீபிகமுக, 24.பிர்ம்கார்முக.

இவ்வாறு லவண சமுத்திரத்தில் 48 மற்றும் காலோததி சமுத்திரத்தில் 48 சேர்ந்து 96 குமானுஷ தீபங்கள் உள்ளன. அங்கு வாழும் மனிதர்களை அந்தர்தீபஜ்ய மிலேச்சர்கள் என்றோ குமானுஷர்கள் என்றோ சொல்கின்றனர். இவர்கள் வாழும் இந்த தீவுகள் குபோகபூமி என்று சொல்லப்படுகிறது. இங்கு வசிக்கும் மனிதர்களின் முகம் விசித்திரமாக இருக்கின்றன, அதற்கு தகுந்தார்போல அந்த தீபங்களின் பெயர்கள் இருக்கின்றன. இவை சமுத்திரத்தில் ஆங்காங்கே இருப்பதால் இவைகளை தீவுகள் அல்லது

தீபங்கள் என்று சொல்கின்றனர். இங்கு அந்தமான் தீவுகள், லக்ஷத்தீவுகள் இருப்பது போல எனலாம். இதை ஆங்கிலத்தில் Island என்று சொல்கின்றனர்.

அந்த தீவில் பெயரிலேயே அங்கு வாழும் மனிதர்களை அழைக்கின்றனர். ஏகோருக மனிதர் ஒருகால் உடைய மனிதர்கள் ஆவர், இவர்கள் குகைகளில் வாழ்கின்றனர், அங்கு கிடைக்கும் சுவையான மண்களை உண்ணுகின்றனர். மற்ற எல்லா குமானுடர்களும் மரங்களின் கீழே வசிக்கின்றனர், அங்கு இருக்கும் கல்பவிருக்ஷங்களிலிருந்து கிடைக்கும் பழங்களை உண்ணுகின்றனர். அவர்கள் பிறவி, வாழ்க்கைமுறை எல்லாம் ஜெகன்ய போகபூமி போலவே இருக்கிறது.

லாங்குலிக மனிதர்கள் வால் உடைய மனிதர்கள் ஆவர். வைஷானிகர் கொம்புகள் உடைய மனிதர்கள் ஆவர். அபாஃஷகர்கள் ஊமைகளாவர், சஷ்குலிகர்ணி பூ போன்ற காதுகள் உடையவர்கள். கர்ணப்ராவரண மனிதர்கள் பெரிய-பெரிய காதுகள் உடையவர்கள், ஒரு காதை படுப்பதற்கும், மற்றொரு காதை போர்த்திக்கொள்ளவும் உபயோகிக்கின்றனர். காதுகளால் உடையைப்போல உடலை மறைத்துக் கொள்கின்றனர். லம்பகர்ணர்கள் நீளமான காதுகள் கொண்டவர்கள், அவர்கள் செல்லும்போது இரண்டு காதுகளையும் கையில் சுமந்து கொண்டு நடக்கின்றனர். சசாகர்ணர்கள் முயல்கள் போன்ற காதுகள் உடையவர்கள்.

மற்ற மனிதர்கள் அனேக பிராணிகள் போன்ற முகமும், மனித உடலும் உடையவர்களாக இருக்கின்றனர். அதை அவர்களுடைய பெயரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். சிங்கமுகன், குதிரைமுகன், சுவானமுகன்-நாய்போன்ற முகம் உடையவர், மஹிஷமுகம்-எருமைமுகன், வராஹமுகன்-பன்றிமுகன், சார்தூலமுகன்-சிங்கமுகன். இவ்வாறே எல்லோருடைய பெயரும் அனேக முகங்கள் அல்லது காதுகள் இருப்பதற்கு தகுந்தார்போல இருக்கின்றன.

இந்த பெயர்களை எல்லாம் கேட்டதும் உங்களுக்கு சிரிப்பு வருகிறது அல்லவா! நீங்கள் அங்கு சென்று குமானுடர்களாக பிறக்க விரும்பவில்லை என்றால், அங்கு போக விரும்பவில்லை என்றால், அங்கு சென்று பிறவி எடுக்க காரணம் என்ன என்று பார்க்கலாம். பிறகு நீங்கள் அப்படிப்பட்ட உணர்வுகள் கொள்ள வேண்டுமா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இந்த பரிணாமங்களை செய்வதாலும், அந்த பரிணாமத்துடன் செயல்படுபவர்களை ஆமோதிப்பதாலும் குபோகபூமியில் சென்று இப்படிப்பட்ட விசித்திர உடலுடன் பிறந்து வாழவேண்டி இருக்கிறது. குபோக பூமியில் எந்த உயிர்கள் சென்று பிறவி எடுக்கின்றனர் என்ற விபரம் த்ரிலோகஸரம் காதை 922, 923, மற்றும் 924-ல் சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் மூல கிரந்தத்தை பாருங்கள். இந்த விஷயத்தை 108 ஸ்ரீ.ஸூர்யஸாகர்ஜி மஹராஜ் எழுதியுள்ள

ஸய்யம்பிரகாஷ் கிரந்தத்தில், முனிதர்ம சம்பந்தமான இரண்டாம் பாகத்தில் பக்கம் 620-ல் எழுதியுள்ளார். இந்த நூல் 108 முனிராஜ் ஸ்ரீ தர்மபூஷண்ஜி மஹராஜின் தூண்டுதலால், 1995-ஆம் வருடம் மீண்டும் பிரசுரித்து வெளியிடப்பட்டது. இது மிகவும் ஊக்கமளிக்கும் ஒரு நூலாகும். இந்த நூல் ஸ்ராவக தர்மம் பற்றி இரண்டு பாகமும், முனி தர்மம் பற்றி இரண்டு பாகமும் ஆக மொத்தம் நான்கு பாகங்கள் கொண்டது. வாசிம் என்ற ஊரில் தசலட்சண சமயத்தில் சொற்பொழிவு ஆற்ற சென்றிருந்தபோது ஸந்தோஷ்ஜி பாட்னி, மஞ்சு பாட்னி அவர்கள் வீட்டில் நான் இந்த நூல்களைப் பார்த்தேன். இந்த நூல்கள் வேறு எங்கும் கிடைக்கவில்லை. என்னுடன் சுவாத்யாயம் செய்பவர்கள் பல இடங்களில் தேடி இந்த நூலின் பாகங்களை கொண்டு வந்தனர். அந்த நூலில் இவ்வாறு எழுதப்பட்டு இருக்கிறது.

எந்த உயிர் ஜினலிங்கத்தை தரித்து அதாவது முனி வேடம் ஏற்று மாயாசாரம் செய்கிறார்களோ, ஜாதகம் பார்த்தல், மந்திரங்கள் செய்து பொருள்களை கொடுத்தல், வைத்தியம் செய்தல் முதலான காரியங்களைச் செய்து பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்துகிறார்களோ அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். இதை கேட்டீர்கள் அல்லவா? உணவு ஏன் வாழ்வாதாரம் என்று அழைக்கப்படுகிறது? முனிராஜர்களுக்கு ஆஹாரதானம் கொடுப்பது நம் சமூகத்தின் அதிஷ்டமாகும், கடமையாகும், சமூகம் அவர்களுக்கு எதையும் எதிர்பார்த்து எந்த உதவியும் செய்வதில்லை. ஜாதகம் பார்த்தல், மந்திரம் செய்தல், வைத்தியம் செய்தல் - இவைகளைப்பற்றி உபதேசம் செய்தல் முனிகளின் காரியமில்லை. ஆஹாரம் எடுத்துக் கொண்ட பிறகு இப்படி செய்வதால் அல்லது இது பற்றி பேசுவதால், சமூகம் நம்பால் ஈர்க்கப்பட்டு நமக்கு நல்ல ஏற்பாடுகள் செய்வார்கள் என்று எண்ணுதல், மித்யா அபிப்பிராயமாகும். யாருக்காவது ஜாதகம் பார்த்தல், மந்திரித்துக் கொடுத்தல், மணி அதாவது ரத்தின சிகிச்சை - இந்த கல் பதித்த மோதிரம் போட்டுக் கொள்ளுங்கள் என்று உபதேசித்தல் - குறித்துக் கொடுத்தல், வெள்ளியில் இப்படி செய்யுங்கள், தங்கம் வாங்குங்கள், முதலான உபதேசங்கள் கொடுத்தல், மருந்து தயாரித்து கொடுத்தல், அல்லது அது பற்றி உபதேசம் செய்தல் முதலியன எல்லாம் செய்பவர்களைத்தான் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்துபவர் என்று சொல்கின்றனர்.

முனிவேடம் ஏற்று பணம் கேட்டல், தானம் கேட்டல் இவைகள் எல்லாம் செய்தால் குபோக பூமியில் சென்று பிறக்க வேண்டியிருக்கும் என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. எந்த சாக்குபோக்கும் சொல்லி பணம் சேர்த்தல் முனிகளின் காரியமில்லை. தீர்த்த க்ஷேத்திரங்கள் அமைத்தலோ அல்லது தீர்த்தங்களின் பாதுகாப்பு என்ற பெயரிலோ அல்லது மற்ற எந்த காரணத்தையும் காட்டி பணம் சேர்த்தல், முனிகள் செய்யக்கூடிய தகுதியான காரியங்களில்லை. மேலும் எழுதப்பட்டிருக்கிறது - முனிவேடம் ஏற்று யார் ரித்தி பெற்றவன், புகழ் உடையவன், பெருமை உடையவன் என்ற எண்ணம்

கொண்டுள்ளாரோ, அவரை அந்த உணர்வே குபோக பூமியில் சென்று பிறக்க வைக்கக் காரணமாகும். இது முனி வேடம் ஏற்று யார் ரித்தி, புகழ் மற்றும் எந்த அனுகூலங்களாலும் அபிமானம் (தன்னை உயர்ந்தவராக எண்ணுதல்) கொள்பவர் - மதம் பிடித்தவர்கள் பற்றி சொல்லப்பட்டதாகும். முனி வேடம் ஏற்று ஆஹார, பய, மைத்துன, பரிக்கிரஹ சம்பந்த ஆசை-தீவிர லட்சியம் கொண்டவர் குபோகபூமியில் சென்று பிறக்கின்றனர். இந்த நான்கு சஞ்சைகளும் நான்கு கதி உயிர்களிடமும் காணப்படுகின்றன, ஆனால் முனி தர்மத்தை அங்கீகாரம் செய்த பிறகுகூட, இவைகளில் தீவிர ருசி உடையவர்களைப்பற்றி இங்கு சொல்லப்படுகிறது.

அந்த நூலில் மேலும் எழுதப்பட்டுள்ளது - முனிநிலையை ஏற்ற பிறகு சமூகத்தில் மற்ற இல்லற வாழ்க்கை நடத்தும் குடும்பங்களில் உள்ள பெண்கள் பிள்ளைகள் திருமணப்பொருத்தம் சொல்வதில் ஈடுபடுவோர் குபோகபூமியில் பிறக்கின்றனர். முனி போன்ற உயர்ந்த பதவியை ஏற்ற பிறகு இது என்ன கேலிகூத்தாக இருக்கிறது! எப்படிப் பட்ட பரிணாமங்கள் கொண்டு உயிர்கள் எங்கெங்கல்லாம் செல்கின்றன பாருங்கள்! அவர்கள் மட்டுமல்ல, அவைகளை அனுமோதிப்பவர்கள்கூட, அவர்களிடம் மரியாதையாக இருப்பவர்கள், அவர்களை வணங்குபவர்கள், அவர்களுக்கு ஆஹார தானம் கொடுப்பவர்கள்கூட, அவர்களுடைய முனி போன்றே, குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். அங்கு செல்லும் உயிர் அவர்களுடைய சிஷ்யர்களையும் எங்கு விட்டுவிட்டு போகப்போகிறார்கள்? உடனேயே அழைத்துக் கொண்டுதான் குபோக பூமிக்கு போவார்கள், அல்லது நரகம், நிகோதங்களுக்கு தன் சிஷ்யர்களையும் உடன் கூட்டிக்கொண்டே செல்வார்கள். சஹடாலாவில் அவர்களை “கல்படகு-உபலநாவ்” என்று வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது.

இவைகளை என் மனதில் வந்தபடி ஏதோ சொல்கிறேன் என்று எண்ணாதீர்கள். த்ரிலோகஸாரத்தில் என்ன 1,000 வருடங்களுக்கு முன்னால் ஆச்சார்ய நேமிசந்திரர் எழுதியுள்ளாரோ, அந்த காதைகளை படித்து விட்டுத்தான் உங்களுக்கு இங்கே சொல்கிறேன். இதுவரை ஒரே காதையின் அர்த்தம் மட்டுமே மேலே சொல்லிக்கொண்டிருந்தேன், மூன்று காதைகளையும் முதலில் சொல்லிவிட்டு, பிறகு மற்ற இரண்டு காதைகளின் அர்த்தத்தை சொல்கிறேன்.

ஜினலிங்கே மாயாவினோ ஜ்யோதிர்மந்ரோபஜீவன்: தஃன்கான்க்ஷிண: |
அதிகாரவன்ஸம்ஜாயுதா: குர்வந்தி யே பரவிவாஹமபி ||922||

தர்சனவிராதிகா யே தோஷம் நாலோசயம்தி தூஷணகா: |
பஞ்சாக்னிதபஸ: மித்யா: மௌனம் பரிஹர்த்யபுன்ஜதே ||923||

துர்பாஃவாசுசிஸூதகபுஷ்பவதிஜாதிஸங்கராதிபி: |
க்ருதாநா ஆபி குபாத்ரேஷு ஜீவா: குனரேஷு ஜாயந்தே||924||

நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சமஸ்கிருத காதைகளை அப்படியே இங்கு கூறினேன், இப்படித்தான் மூல பிராக்ருதத்தில் இருக்கிறது. இப்போது ஒவ்வொரு காதையின் அர்த்தங்களை பார்க்கலாம். - எந்த உயிர் முனிலிங்கம் - முனிவேஷம் ஏற்று சம்யக்தரிசனத்திற்கு எதிராக நடக்கிறார்களோ - மித்யாத்துவத்தை பலப்படுத்துகிறார்களோ, அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். யார் முனி வேஷத்தை ஏற்று தான் செய்யும் தவறுகளுக்கு ஸ்ரீகுரு(ஆச்சார்யர்) முன் சென்று ஆலோசனை செய்யவில்லையோ, அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். முனி வேஷத்தை ஏற்று யார் மற்றவர்களின்மேல் தவறை சுமத்துகிறார்களோ, அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். எந்த மித்யாதிருஷ்டி பஞ்சாக்னி மூலம் தபம்(குதபம்) செய்கிறார்களோ, மற்றும் யார் மௌனம் இல்லாமல் உணவு ஏற்கிறார்களோ, அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். அதேபோல எந்த இல்லறத்தில் இருப்பவர்கள் தானம் கொடுக்கக்கூடிய தகுதி இல்லாத நிலையில், தானம் கொடுத்தல், அதாவது கெட்ட உணர்வுடன், தூய்மை அற்ற அதாவது அபவித்திர நிலையில் தானம் செய்தல், சூதக காலத்தில் தானம் கொடுத்தல், ஸ்திரி பௌஷ்டிக காலத்தில்-மாதவிலக்கு காலத்தில் தானம் கொடுத்தல், கலப்பு திருமணம் அதாவது intercast marriage செய்தவர்கள் முதலான இதுபோன்ற குற்றமுடையவர்கள் தானம் கொடுத்தால் அவர்கள் குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். எப்போது தானம் கொடுக்கிறார்களோ அங்கு கொடுப்பவரின் குணம், ஏற்பவர்களின் குணம், கொடுக்கப்படும் வஸ்து முதலியவைகளில் கவனம் இருக்க வேண்டும். முதலிலேயே கொடுப்பவர், பெறுபவர் பற்றிய சிரத்தை எப்படி இருக்க வேண்டும் என்று பார்த்திருக்கிறோம். இருவருக்குமே சர்வக்ஞ பகவான் மேல் நம்பிக்கை இருக்க வேண்டும். அவர் இருக்கிறார் என்பதைப் பற்றியும், அவருடைய வீதராகத்தனமை, சர்வக்ஞத்தன்மை, கேவல ஞானத்தின் மஹிமை, அவருடைய வாணியின் மேல், அந்த வாணியின்படி எழுதப்பட்ட ஆகமங்களின் மேல், அவரால் கூறப்பட்ட முனியின் ஸ்வரூபத்தின் மேல், மோக்ஷ மார்க்கத்தின்மேல் நம்பிக்கை இல்லாதவர்கள் தகுதியான தானம் கொடுப்பவர்களாகவோ, தானம் ஏற்பவர்களாகவோ இருக்க முடியாது. இவ்வாறு தானம் கொடுப்பவர்களின் குணங்கள் பற்றியும், எந்தெந்த தோஷங்களை தவிர்த்துதானம் கொடுக்கப்படுகிறது என்பது பற்றிய ஞானம் இருப்பது அவசியமாகும். எப்படி கொடுப்பவர்கள் குணங்களைப் பார்த்தோமோ, அப்படியே யாருக்கு தானம் கொடுக்கப் படுகிறது என்பது பற்றிய விவேகமும்-எண்ணமும் இருக்க வேண்டியது அவசியமாகும். கொடுக்கப்படும் வஸ்து பற்றியும் நல்லறிவு இருப்பது அவசியமாகும். பணம் கொடுத்தால் போதும் தானம் செய்தாகி விட்டது என்பது சரியல்ல; தானத்தில் விவேகத்துடன் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

சாஸ்திரங்களில் நால்வகை தானம் சொல்லப்பட்டிருக்கிறது - ஆஹாரதானம், ஔஷததானம், அபயதானம், ஞானதானம். ஆஹாரதானம் கொடுக்கும்போது கூட யாருக்கு கொடுக்க வேண்டும் என்பது பற்றி சத்பாத்திரம்-குபாத்திரம் பற்றி சிந்தித்து செய்வது அவசியமாகும். பாத்திரங்களில் முனிராஜ்-மஹாவிரதி உத்தம பாத்திரமாகும். ஸ்ராவகர்கள்-விரதிகள் மத்யம பாத்திரமாவர். முனி வேடம் ஏற்றும்கூட யார் சிதிலாசாரத்துடன் இருக்கிறார்களோ-பிரஷ்டராக (வேடத்திற்கு தகுதியான ஒழுக்கத்தில் குறைபாடும், ஒழுக்கம் தவறியும்) இருக்கிறார்களோ அவர்கள் குபாத்திரமாகும். குபாத்திர தானத்தின் பலனால், குபோக பூமியில் சென்று பிறக்கின்றனர். ஆகையால் இவைகளில் விவேகத்துடன் செயல்பட வேண்டும். அஞ்ஞானத்தின் காரணத்தால்கூட இந்த குற்றங்கள் செய்தால், அதன் பலனும் அதுவேயாகும். இதற்கு உபாயம் சுயம் ஞானியாக இருக்க வேண்டும்-அதாவது சாஸ்திரங்களிலிருந்து இவைகளைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். முனியின் ஸ்வரூபம், பகவானின் ஸ்வரூபம் பற்றி நாம் ஆகமங்களின் ஆதாரத்தில் உறுதி செய்ய வேண்டும். சமூகத்தில் யார் உண்மையானவர், யார் பொய்யானவர் என்பதை ஆகமத்தை கொண்டு கணக்கிட முடியாது - நம்மிடம் இந்த குறைகள் இல்லாமல் இருக்கிறதா என்று நாம்தான் கவனமாக இருக்க வேண்டும். புரியவில்லையா என்ன? பஜாரில் கள்ள நோட்டுகள் புழங்கக்கூடும், நம் கையில் எந்த கள்ள நோட்டும் வராமல் நாம்தான் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கள்ள நோட்டுகளை அடிப்பவர்கள் பலர் இருக்கலாம் அவர்களுடைய கை அதிகாரத்தில் உயர்ந்தவர்களிடம்வரை ஓங்கி இருக்கலாம், அவைகளை அலசிப் பார்ப்பது நம் வேலை இல்லை.

நாம் உண்மையான கடவுள், உண்மையான குரு, உண்மையான தர்மம் பற்றி உறுதி செய்யவேண்டும், மோக்ஷ மார்க்கத்தை உறுதி செய்யவேண்டும். நம்முடைய அபிப்பிராயத்தில், நம்முடைய செயல்களில் மித்தியாத்துவம் பஃலப்படாமல் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 'சமூகம் என்ன சொல்லும்?' என்பதைப் பற்றிய கவலையை விடவேண்டும். சமூகம் பார்ப்பதற்காக செய்ய வேண்டுமா, அல்லது நமக்கு நல்லது செய்து கொள்ள வேண்டுமா? மனித பிறவியின் கிடைப்பதற்கரியத் தன்மையை தெரிந்து கொண்ட பிறகும்கூட, என்ன, இந்த மனித பவத்தை, நீங்கள் சமூகத்திற்காக இழக்க வேண்டுமா என்ன? சமூகம் உங்களுடன் நரக-நிகோதங்களுக்கு வரப்போகிறதா என்ன? சமூகத்தைத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால் நீகோதத்தில் எல்லாவற்றையும்விட பெரிய சமூகம் கிடைக்கும்! மனித பிறவியில் பிறக்கும் போதெல்லாம் சமுதாயம் இல்லாமல் பிறப்பீர்களா, என்ன?

நாம் போகபூமியில் பிறக்க பல காரணங்களைப் பார்த்தோம். இங்கு உயிர்கள் மூடநம்பிக்கை பாபத்துடன் கொஞ்சம் புண்ணியம் சம்பாதிக்கிறது, இங்கு அல்ப ஆயுள் இருக்கிறது. ஆனால் இதன் பலனாக குபோக பூமியில் ஒரு பல்லிய பிரமாண ஆயுள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இது ஏதோ ஒரு சஸ்திரத்தில் சொல்லப்பட்டதில்லை. பண்டிட்.தோடர்மல் மூலம் எழுதப்பட்ட திரிலோகசாரத்தில், விசுத்தமதி மாதாஜியால் எழுதப்பட்ட பெரிய திரிலோகசாரத்தில், திலோயபண்ணத்தியில் கூட இந்த விஷயமே எழுதப்பட்டிருக்கிறது. முனி பிரமாணசாஹர் அவர்களின் பிரவசனங்களை தொகுத்து எழுதப்பட்ட ஜெயின்தத்துவவித்யா என்ற நூலில் கரணானுயோக பிரிவில் பக்கம் 87-ல் இந்த விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த எல்லா நூல்களையும் பயின்றுதான் நான் இந்த விஷயங்களை இங்கு உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். இத்துடன் இந்த சர்ச்சையை முடித்துக் கொள்ளலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 15-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ ஈஷ்வர பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்.

16. லவணசமுத்திர பாதாளங்கள்

ஸ்ரீ நேமிசந்திரரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலின் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பைப் பார்த்துக்கொண்டு வருகிறோம். மேலுலகம், கீழுலகம், மற்றும் நடுவுலகம் பற்றி நாம் பார்த்தோம். நடுவுலகில் எண்ணிலடங்கா தீப சமுத்திரங்கள் உள்ளன. அவைகளில் நாம் 2½ தீபம், ஜம்பூதீபம், மற்றும் அங்குள்ள பரத, ஐராவத, விதேக க்ஷேத்திரங்கள் பற்றி சர்ச்சை செய்தோம். லவண காலோததி சமுத்திரங்களில் உள்ள அந்தர்தீபங்கள்-இடையில் உள்ள தீவுகள் அதாவது குமானுடர்கள் வாழும் பூமிகள் பற்றியும் பார்த்தோம். இப்போது லவண சமுத்திரம் மற்றும் அதில் உள்ள பாதாளங்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம். அதற்கு முன்னர் ஜம்பூதீபம் லவணசமுத்திம் இவற்றின் இடையே உள்ள கோட்டை போன்ற சுவர் பற்றி பார்க்கலாம். முன்னர் நாம் இதை ஜகதி அல்லது வேதிகா என்று கூறினோம். இதை பிராகார் என்று கூட சொல்கின்றனர். இப்படிப்பட்ட பிராகார் எல்லா தீப சமுத்திரங்களுக்கு இடையிலும் உள்ளன.

இந்த பிராகாரம் நான்கு கோபுரங்களுடன் அதாவது துவாரங்களுடன் இருக்கின்றன. இந்த பிராகாரம் கீழே 12 யோஜனை அகலமும், மேலே 4 யோஜனை அகலமும், 8 யோஜனை உயரமும் கொண்டதாக இருக்கின்றன. பூமியில் 2 கோஸ அளவு இதன் அஸ்திவாரம்-கடைக்கால்(foundation) இருக்கிறது. பலவித இரத்தினமயமாக இந்த பிரகாரம் இருக்கிறது. இதனுடைய அடிதளம் வஜ்ரமயமாக இருக்கிறது. வைடூர்ய இரத்தினத்தாலான மிக அழகான சிகரங்களுடன் கொண்ட கோட்டை சுவர் போன்ற அமைப்பு அதாவது ஒவ்வொரு தீப சமுத்திரங்களுக்கும் இடையிலும் பரிதி வடிவில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. இந்த பிராகாரங்களுக்கு மேல் பருமனின் மத்தியில் அழகிய இரத்தினமயமான அலங்கார வளைவுகள் உள்ளன, இது 2 கோஸ உயரமும், 500 வில் அகலமும் கொண்டது. அதன் இரண்டு பக்கத்திலும் பல வனங்கள், படியுடன்கூடிய கிணறுகள், மற்றும் ஆலயங்கள் உள்ளன. இங்கு வியந்தர தேவர்கள் வாழ்கின்றனர். இந்த பிரகாரங்களின் கிழக்கு முதலான திசைகளில் விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித பெயர் கொண்ட 4 துவாரங்கள் உள்ளன. இந்த தோரணங்களுடன் கூடிய துவாரங்களுக்கு மேல் ஒவ்வொன்றிலும் 2 யோஜனை அகலமும், 4 யோஜனை உயரமும் கொண்ட அரண்மணைகள் உள்ளன. அதன் மேல் ஆகாசத்தில் 12,000 யோஜனை உயரமும், 6,000 யோஜனை அகலமும் கொண்ட நகரம் இருக்கிறது. அவைகளின் பெயரும் விஜய முதலானவை தான். அவைகளில் வாழும் வியந்தரர்களின் பெயரும் அதுவேதான்.

16. லவணசமுத்திர பாதளங்கள்

கிழக்கு-மேற்கு துவாரங்கள் வழியாக சீதா, சீதோதா நதிகள் லவண சமுத்திரத்தில் வந்து கலக்கின்றன. 14 நதிகளில் பிற 12 நதிகள் மற்ற துவாரங்கள் வழியாக லவண சமுத்திரத்தில் வந்து கலக்கின்றன. இப்போது நாம் லவண சமுத்திரம் பற்றி பார்க்கலாம். ஜம்பூதீபம் ஒரு லட்சம் யோஜனை விட்டம் கொண்ட வட்ட வடிமாக இருக்கிறது. அதை சுற்றிய வண்ணம் லவண சமுத்திரம் சுற்றிலும் இரண்டு லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்டதாக இருக்கிறது. இதன் ஒரு பக்கம் ஜம்பூதீபமும், மறுபக்கம் தாதகிகண்டமும் இருக்கிறது. ஆனால் இதன் ஆழம் எங்கு எவ்வளவு என்பதை புரிந்து கொள்ள அதன் பக்க வடிவத்தை (cut view)வை பார்த்து தெரிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

நீங்கள் படம் 7-ஐ பாருங்கள். அதில் மேல் பக்கத்தில் வலதுகை பக்கம்-மேல் பாகத்தின் வலது மூலையில் நீல நிறத்தில் லவண சமுத்திரம் காட்டப்பட்டிருக்கிறது. அதன் பக்கத்தில் பழுப்பு நிறத்தில் சித்ராபூமி இருக்கிறது, மற்றும் அடியில் மஞ்சள் நிறத்தில் வஜ்ராபூமி இருக்கிறது. இந்த படத்தை பார்த்து நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள், ஏனெனில் இங்கு சமுத்திரத்தின் மேல்மட்டம் பூமிக்கு மேல் காட்டப்பட்டுள்ளது. நாம் இதுவரை பள்ளியில் பூகோளத்தில் அல்லது உலக வழக்கில் சமுத்திர மட்டத்திலிருந்து நாம் இருக்கும் பூமி எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்பதைத்தான் பார்த்திருக்கிறோம். இங்கு லவண சமுத்திரம் எப்படி இருக்கிறது என்பதை பார்த்தீர்களா? ஒரு படகை மற்றொரு படகின்மேல் கவிழ்த்து வைத்தார்போல் போல் இருக்கிறதல்லவா!

இதன் அதிகபட்ச ஆழம் நடுவில் இருக்கிறது. அதாவது இரண்டு பக்கத்திலிருந்தும் 95,000 யோஜனை தூரத்தில், மத்தியில் 10,000 யோஜனை அளவில், லவண சமுத்திரத்தின் ஆழம் 1,000 யோஜனையாக இருக்கிறது. அங்கு சமுத்திரத்தின் தரைப்பகுதி வஜ்ரமயமாக இருக்கிறது. ஏனெனில் முதல் பூமியின் 16,000 யோஜனை கரபாகத்தில் எல்லாவற்றிற்கும்மேல் சித்ராபூமி 1,000 யோஜனை பருமனாக இருக்கிறது. கடல் நடுவில் ஆழமாகவும் ஜம்பூதீபம் மற்றும் தாதகிகண்டம் அருகில் வரவர ஆழம் குறைந்து கொண்டேபோகிறது, கடலின் உயரம் நடுவில் உயர்ந்து கொண்டேபோகிறது, இதை நீங்கள் படத்தில் தெளிவாகக் காணமுடியும். இது மட்டுமல்ல, இங்கு தரையின் தளப்பகுதியிலிருந்து சமுத்திரத்தின் உயரம் அதிகரித்துக் கொண்டே போகிறது. நடுவில் எங்கு 1,000 யோஜனை உயரமோ அங்கு 11,000 யோஜனை (சில இடங்களில் 900 யோஜனை என்று சொல்லப்பட்டிருக்கிறது) பூமியின் தளத்தில் இருந்து கடல் உயரமாக இருக்கிறது. பௌர்ணமி தினம்வரை இது உயர்ந்து கடலின் உயரம் 5,000 யோஜனை (சில இடங்களை 2 கோச அளவு என்று சொல்லப்பட்டிருக்கிறது) அதிகரித்து 16,000 யோஜனையாகிறது.

நடுவில் கடலின் நீர் இவ்வளவு மேலும் கீழும் போகிறது. எப்போது மேலே போகிறதோ அப்போது இரண்டு பக்கமும் பாய்ந்து 95,000 யோஜனை தூரத்தில் எங்கு இரண்டு பக்கமும் தீபம் இருக்கிறதோ அங்கு கடலலைகள் உண்டாகின்றன, பிறகு மத்தியில் கடல் நீர் கீழே போகிறது, அதனால் மீண்டும் கடல்நீர் நடுக்கடல் பக்கம் போகிறது. இதை ஆஹோடி-பாஃடா என்று சொல்கின்றனர், ஆங்கிலத்தில் இதை (high tide-low tide) என்று சொல்கின்றனர்.

எப்போது கடலில் அலை வருகிறதோ அப்போது தண்ணீர் இரண்டு பக்கமும் உயரமாக எழுகிறது, அலை திரும்ப கடலுக்குள் போகும்போது இரண்டு பக்கமும் தண்ணீர் கீழே போகிறது. இவ்வளவு தண்ணீரும் எங்கே போகிறது? என்று சொல்லுகள், பார்க்கலாம். இதற்கு பதில் ஆகம அடிப்படையில் காணலாம். மீண்டும் படம் 8-ஐ பாருங்கள். இங்கு நடுவில் ஒரு லட்சம் யோஜனை விட்டம் கொண்ட ஜம்பூதீபம் இருக்கிறது. அதற்கு வெளியே 2 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்ட லவண சமுத்திரம் இருக்கிறது. லவண சமுத்திரத்தின் மத்தியில் இரண்டு பக்கமும் ஒரு லட்சம் யோஜனை தூரத்தில் உங்களுக்கு ஒரு வட்ட வடிவ இழை-மெல்லிய கோடு காட்டப்பட்டுள்ளது. அதில் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கில் இருக்கும் நான்கு திசைகளிலும் நான்கு வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன அது எல்லாவற்றையும் விட பெரிய பாதாளத்தின் வாய்ப்பகுதி யாகும், அந்த வாய் பகுதியின் விட்டம் 10,000 யோஜனை யாகும். இவைகளுக்கு இடையில் குறுக்கு திசைகளில் நான்கு வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன, இவை நடு பாதாளத்தின் வாய்ப்பகுதி, அந்த வாய்ப் பகுதியின் விட்டம் 1,000 யோஜனை யாகும். இந்த திசை மற்றும் குறுக்கு திசைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உங்களுக்கு புள்ளி வடிவில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு இடைப்பகுதியிலும் ஒன்றுக்கு 125 என்ற விகிதத்தில் இடைப்பட்ட பகுதிகளின் மொத்தம் 1,000 பாதாளத்தின் சிறிய வாய்ப்பகுதிகள் உள்ளன, அதன் ஒவ்வொன்றின் விட்டமும் 100 யோஜனை யாகும். இவ்விதமாக மொத்தம் 1,008 பாதாளங்கள் உள்ளன.

இப்போது இதன் வடிவத்தை படம் 7-ல் பார்க்கவும். இது மிருதங்க வாத்திய வடிவில் இருக்கிறது. சமதள பூமியிலிருந்து கீழே அதன் உயரம் எவ்வளவோ அதுவே பாதாளத்தில் உயரமாகும். நடுவில் இதன் விட்டம் மிக அதிகமாகும், மேலும் கீழும் முறையாக குறைந்து கொண்டே போகும். இதனுடைய வாய்ப் பகுதியும் தளத்தின் விட்டமும் சமமாகும். இவைகளில் பெரிய பதாளத்தின் வர்ணனையை பார்க்கலாம். அது ஒரு லட்சம் யோஜனை பருமன் கொண்டது. அது எப்படி இவ்வளவு அளவில் இருக்கும்? முதலில் நாம் முதல் பூமி 1,80,000 யோஜனை பருமன் என பார்த்தோம். அதில் மேல் பகுதியான கரபாகம் 16,000 யோஜனையும், பங்கபாகம் 84,000 யோஜனையாகவும் இருக்கிறது. பங்கபாகத்தின் கடைசிவரை இந்த பாதாளத்தின் பருமனாகும், அதாவது இதன் தளப்பகுதிக்கு கீழே அப்பஹுள பாகம் இருக்கிறது, அங்கு முதல்

நரகத்தின் ஸீமந்தக பிலம் இருக்கிறது. இந்த பாதாளத்தின் சுவர்கள் மற்றும் தளம் வஜ்ரமயமாக 500 யோஜனை பருமன் கொண்டதாக இருக்கிறது. இடைப்பட்ட, மற்றும் சிறிய பாதாளங்களின் அளவையும் பார்க்கலாம்.

பாதாளங்களின் அமைப்பு

பாதாளம்	உயரம்	நடுப்பகுதி விட்டம்	வாய்-தளம் விட்டம்	சுவர் பருமன்
பெரியது	100000	100000	10000	500
மத்யமம்	10000	10000	1000	50
சிறியது	1000	1000	100	5

நான்கு பெரிய பாதாளங்களின் பெயர்கள் இவ்வாறு இருக்கின்றன - கிழக்கு திசையிலிருந்து வரிசையாக கிழக்கில் வடவாமுகம் இருக்கிறது. இங்கு படத்தில் இதை தெற்கில் காட்டப்பட்டுள்ளது. வெவ்வேறு சாஸ்திரங்களில் கிழக்கு மற்றும் மேற்கு பாதாளங்களின் பெயர்கள் மாற்றி மாற்றி சொல்லப்பட்டுள்ளது. திரிலோகசார காதையில் கிழக்கில் வடவாமுகம் என்று சொல்லப்பட்டுள்ளது. தில்லோயபண்ணத்தியில் மேற்கில் இந்த பெயர் சொல்லப்பட்டுள்ளது. தெற்கில் கதம்பகம், மேற்கில் பாதாள், வடக்கில் யுபகேசரி என்பன பெரிய பாதாளங்களின் பெயர்களாகும்.

இப்போது இந்த பாதாளங்களின் உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கலாம். ஒவ்வொரு பாதாளத்தின் உயரத்தை மூன்று பாகங்களாகப் பிரித்தால் மேல்பகுதியில் தண்ணீர் மட்டுமே இருக்கிறது, கீழ்பாகத்தில் காற்று மட்டுமே இருக்கிறது, நடுப் பகுதியில் தண்ணீரும் காற்றும் கலந்த வடிவில் இருக்கிறது. கொஞ்சம் கவனமாகப் பாருங்கள், படம் 7-ல் கூட இது காட்டப்பட்டிருக்கிறது. இந்த பாதாளங்களின் வாய்ப்பகுதி லவண சமுத்திரத்தின் தளப்பகுதியில் இருக்கிறது. இந்த பாதாளங்களின் மூன்று பாகங்களில் நடுவில் தண்ணீரும் காற்றும் கலந்த பகுதி கீழே இருக்கும் பாகத்தில் உள்ள காற்றின் காரணத்தால் மேலும் கீழும் செல்கிறது. பாதாளத்தில் இருக்கும் காற்று எப்போதும் இயல்பாகவே வளர்பிறையில் உயர்கிறது, தேய்பிறையில் தாழ்கிறது. தேய்பிறையில் நடுபாகத்தில் தண்ணீர் அதிகமாகிறது அதனால் சமுத்திரத்திலிருந்து தண்ணீர் பாதாளத்திற்கு வருகிறது, வளர்பிறையில் நடுப்பகுதியில் காற்று அதிகமாகிறது அதனால் பாதாளத்தில் உள்ள தண்ணீர் சமுத்திரத்திற்கு போகிறது, அதனால் கடலில் அலைகள் உயரமாக எழுகின்றன.

பௌர்ணமியில் பாதாளத்தின் மூன்று பாகங்களில் கீழ் இரண்டு பாகங்களில் வாயு அதாவது காற்றும், மேல் பாகத்தில் தண்ணீரும் இருக்கிறது.

அமாவாசையில் மேல் இரண்டு பாகங்களில் தண்ணீரும் கீழ்பாகத்தில் காற்று மட்டுமே இருக்கிறது.

பெரிய பாதாளங்களில் அதன் மூன்றில் ஒரு பாகம் அதாவது ஒரு லட்க்ஷத்தில் மூன்றில் ஒரு பாகம் 33,333⅓ யோஜனை யாகும், மத்தி பாதாளத்தின் மூன்றில் ஒரு பாகம் 3,333⅓ யோஜனை யாகும், சிறிய பாதாளத்தின் மூன்றில் ஒரு பாகம் 333⅓ யோஜனை யாகும். அந்தந்த பாதாளத்தில் நடுப்பகுதியில் தேய்பிறையின் 15 நாட்கள் வரை தண்ணீர் அதிகமாகிறது, வளர்பிறையின் 15 நாட்கள் வரை காற்று அதிகமாகிறது. பெரிய பாதாளங்களில் 15 தினங்களில் 33,333⅓ யோஜனை அதிகமாகிறது, ஆகையால் இதில் 15-ல் ஒரு பகுதி கொடுக்கும்போது ஒரு நாளில் எவ்வளவு அதிகமாகிறது என்பது நமக்குத் தெரிய வருகிறது. இதேபோலவே மத்திம, சிறிய பாதாளங்களிலும் அதனதன் மூன்றின் ஒரு பாகத்தில் 15-ல் ஒரு பாகம் கொடுக்கும் போது ஒவ்வொரு நாளில் எவ்வளவு அதிகமாகிறது என்பது நம்மால் பாக்கமுடியும்.

கேள்வி: எந்த பாதாளத்திற்கு கீழே ஸீமந்தக பிலம் இருக்கிறது?

பதில்: ஸீமந்தக பிலம் முதல் நரகத்தின் முதல் படலத்தின் இந்திரக் பிலமாகும். அதன் விஸ்தீரணம் 45 லட்சம் யோஜனையாகும் அதாவது முழு 2½ தீப அளவாகும். ஆகையால் எல்லாவற்றிலும் பெரிய பதாளத்தின் தளத்தில் ஸீமந்தக பிலம் இருக்கிறது. மத்திய பாதாளம் என்னவோ 10,000 யோஜனை பருமன் கொண்டதாகும், அவை முதல் இரத்தினப்பிரபா பூமிக்கு கரபாகத்தில் இருக்கிறது. ஆம், இங்கு எந்த பவனவாசியின் பவனங்களும் இல்லை. அவை வெளி தீப சமுத்திரங்களுக்கு கீழே இருக்கின்றன.

பெரிய பதாளத்தின் இரண்டு பக்கத்திலும் ஒவ்வொரு மலை இருக்கிறது, அது தண்ணிரிலிருந்து 1,000 யோஜனை மேலே இருக்கின்றன. அவைகளில் வியந்தரர்கள் வாழ்கின்றனர்.

இங்கு வேறு ஒருவர் கேள்வி எழுப்பி இருக்கிறார் - இந்த தீப, சமுத்திர, பாதாளங்களை தெரிந்து கொள்வதில் நமக்கு என்ன லாபம் இருக்கிறது? இந்த கேள்வியை ஸ்ரீ பள்ளுபாஃயி இடம் யாரோ கேட்டிருக்கிறார்கள். இந்த பள்ளுபாஃயி இங்கே 55 வயது கொண்ட நம்முடைய இளம் முமுக்ஷு-ஆத்ம விரும்பியாவார். நீங்கள் முதல் தினத்தன்றே இதைப்பற்றி கூறினீர்கள் ஆனால் நான் மறந்துவிட்டேன், இப்போது வேறு ஒருவரும் அந்த கேள்வியை எழுப்பியுள்ளதால், தயவு கூர்ந்து மீண்டும் இதைப்பற்றி புரியவையுங்கள் என்று அவர் கூறுகிறார்.

அதனால் கேளுங்கள், கரணானுயோகத்தின் இந்த விஷயங்களைப் பற்றி அதாவது மூவுலக அமைப்பானாலும், கர்மங்களின் நிலைகள் ஆனாலும்

அல்லது குணஸ்தானம்-மார்க்கணாஸ்தானம் ஆனாலும் இவைகளை தெரிந்து கொள்வதில் நமக்கு என்ன லாபம் இருக்கிறது? இதே கேள்வியை எல்லோரும் கேட்கின்றனர். அவர்கள் கேள்வி கேட்கும் தோரணையிலிருந்தே அவர்களுடைய மனதில் என்ன ஓடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்களுடைய அபிப்பிராயத்தில்-நம்பிக்கையில் இவைகள் எல்லாம் உபயோகமற்ற-பயனற்ற விஷயமாகத் தெரிவதால் இவைகளை எங்களுக்கு எடுத்துச் சொல்லி எங்கள் நேரத்தை ஏன் வீணடிக்கிறீர்கள்? என்று கேட்கின்றனர். இவர்களுக்கு என்னுடைய எதிர் கேள்வி என்னவென்றால், இந்த விஷயங்களை தெரிந்து கொண்டு நீங்கள் என்ன லாபம் அடைய விரும்புகிறீர்கள்? இவைகளை தெரிந்து கொள்வதால் நம்முடைய அறிவு-ஞானம் சரியாக ஆகிறது, அதுவே லாபம்தான். அது சம்பந்தமான அஞ்ஞானம் அழிகிறது, அதுவே இதன் பலனாகும். கேவலஞானி ஒரே சமயத்தில் ஒன்றாக இந்த எல்லா உயிர்களையும் பற்றி அறிகிறார், அவருக்கு என்ன லாபம்? சொல்லுங்கள்! அது அவருடைய இயல்பு என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆம், இங்கு நாம் எல்லோரும் தெரிந்து கொள்கிறோமே அதுகூட நம்முடைய இயல்பு தானே! நாம் எல்லோரும் நம் ஸ்வபாவத்தால் தானே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

இந்த திரிலோகசாரத்தின் இவ்வளவு விஷயங்களையும் எந்த காணத்தால் இவ்வளவு ஆழமாக தெரிந்து கொள்கிறீர்கள்? நீங்கள் கற்பிப்பதால் நாங்கள் தெரிந்து கொள்கிறோம் என்று சிலர் சொல்கின்றனர். நிமித்தத்தால் காரியம் நிகழ்வதில்லை. ஞானத்தின் ஒவ்வொரு பர்யாயமும் உங்களிடமே நிகழ்கிறது. அறிதல் உயிரின்-நம் எல்லோரின் ஸ்வபாவமாகும்-இயல்பாகும், தெரிந்து கொள்ள வேண்டியப் பொருளும்-ஞேயமும்-நீங்கள் தெரிந்து கொள்ளும் விஷயமும் கூட நிச்சயிக்கப்பட்டதாகும். இங்கு தெரிந்து கொள்ள மறுப்பு ஏன் வருகிறது என்ற கவலை எனக்கில்லை. இவைகளை தெரிந்து கொள்வதில் என்ன லாபம்? என்று கேட்கிறீர்கள். இவைகளை தெரிந்து கொள்வதில் உங்களுக்கு என்ன தீங்கு விளைகிறது? என்று சொல்லுங்கள். கரணானுயோகத்தைப் பற்றி தெரிந்து கொள்வதில் மட்டுமே இப்படிப்பட்ட கேள்வி உங்கள் மனதில் ஏன் எழுகிறது? என்று எனக்கு கேட்கத் தோன்றுகிறது. நீங்கள் தொலைக்காட்சியில் கிரிக்கெட் பந்தயம் பார்க்கும்போது இந்த கேள்வி ஏன் வருவதில்லை? அங்கு ஒரு பந்து அதன் உபாதனத்தால் இங்கிருந்து அங்கு துள்ளுகிறது, அதற்குப் பின்னால் அங்கு 11 விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள், அவர்களில் சிலர் ஓடுகிறார்கள், இங்கு கோடிக்கணக்கான மக்கள் சோபாஃவில் அமர்ந்த நிலையிலேயே குதிக்கிறார்கள். அங்கு அதை தெரிந்து கொள்வதால் என்ன லாபம் வருகிறது - இந்த கேள்வியை யாரும் கேட்பதில்லை. தொலைக்காட்சி பெட்டியில் செய்திகள் வாசிக்கும்

நிகழ்ச்சி நடக்கிறது, அதை தெரிந்து கொள்வதால் என்ன லாபம்? அவைகளைப் பார்ப்பதால் நமக்கு இராக-த்வேஷ உணர்வு வருகிறது, கவலை உண்டாகிறது, இராக-த்வேஷத்தால் கர்ம பந்தம் உண்டாகிறது, அதனால் தீங்கே விளைகிறது. டீவியில் நடக்கும் தொடர்களில் நடிக்கும் பாத்திரங்களில் பார்ப்பவர்கள் ஒன்றி விடுகின்றனர், அந்த பாத்திரங்கள் துக்கமடைவதுபோல நடிக்கும்போது அந்த பாத்திரத்துடன் ஒன்றியவர்கள் துக்கமடைகின்றனர், அங்கு ஹீரோ கையில் துப்பாக்கி வைத்துக்கொண்டு அடி உதை வாங்கும்போது, அதைப் பார்ப்பவர்கள் அரே, அவனை சுடு என்று ஆவேசப்படுகின்றனர். சகோதரனே, அது நாடகம், அவர் சுடாமல் இருப்பதற்கு, அடி-உதை வாங்குவதற்கு அவருக்கு பணம் கிடைக்கிறது, ஆனால் நீங்கள் எந்த உணர்வு கொள்கிறீர்களோ அந்த ஒவ்வொரு உணர்வுக்கும் அப்படிப்பட்ட கர்மத்தை நீங்கள்தான் கட்டிக் கொள்கிறீர்கள். இது பயனற்ற செயலுக்கான தண்டனை-அனர்த்த தண்டம்! அந்த கர்மங்களின் பலனை நீங்கள் தான் அவசியம் அனுபவிக்க வேண்டும்.

இங்கு நாம் உண்மையான வஸ்துவின் நிலையை தெரிந்து கொள்கிறோம். இங்கு பெரிய அளவில் இராக-த்வேஷமோ அல்லது ஹிம்சை முதலான பாப உணர்வோ வருவதில்லை. நாங்கள் வீட்டில் காலையில் 1½ மணி நேரம் கரணானுயோகம் படிக்கிறோம், ஜீவகாண்டம், கர்மகாண்டம், லப்திஸாரம்-ஷபணாஸாரம், தவளா, ஜயதவளா ஆகிய கரணானுயோக நூல்களை சுவாத்யாயம் செய்துமுடித்த பிறகு, இப்போது மஹாதவளா சுவாத்யாயம் நடந்துகொண்டு இருக்கிறது. 1½ மணி நேரம் போவதுகூட எங்களுக்கு தெரிவதில்லை! ஆத்மாவின் இயல்பு அறிந்து கொள்வது தான், அது சரியாக அறிந்து கொள்ளும்போது அங்கு ஞானம் பிரகாசமடைகிறதா அல்லது வீணாகிறதா? திரவியானுயோக நூல்களையும் கூட அதுபோலவே தினமும் 2 மணி நேரம் சுவாத்யாயம் செய்கிறோம். கரணானுயோகப் பயிற்சியால் திரவ்யானுயோக சித்தாந்தங்களின் மேலும் திடத்தன்மை அதிகரிக்கிறது.

எந்த பரிணாமத்தால் எந்த கர்மம் பந்தமாகிறது? எந்த கதிக்கு உயிர் எந்த கர்மத்தை கட்டிக்கொண்டு எங்கு பிறவி எடுக்கிறது, மூடநம்பிக்கையின் காரணத்தால் உயிர் எங்கெங்கு சென்று பிறக்கின்றன, எந்த பிறவியில் அதிகமாக எவ்வளவு காலம் பிறந்து-இறந்து கொண்டிருக்கிறது, அவைகளின் எண்ணிக்கை-அவைகள் வாழுமிடங்கள், கர்மங்களின் நிர்ஜரை எந்த குணஸ்தானங்களில் எந்த முறையில் நிகழ்கிறது, கர்மங்களின் அழிவு எப்படி நிகழ்கிறது -முதலான விஷயங்களை படிக்கும்போது ஞானம் அந்த விஷயங்களில் மிகவும்

ஒன்றிவிடுகிறது, ஞானத்தின் தூய்மை அதிகரிக்கிறது. எந்த அனுயோகமாக இருந்தாலும், அதில் ஒன்றிவிடுவதால் தூய்மை அதிகரிக்கிறது. அமிர்தசந்திர ஆச்சார்யர் கூட சமயசாரத்திற்கு விளக்கவுரை எழுதும்போது "எனக்கு மிகுந்த தூய்மை கிடைக்கட்டும்-மம பரமவிசுத்திர்பவது" என்று எழுதுகிறார்.

ஞானத்தில் ஒன்றிவிடுதலால் விசுத்தி அதிகரிக்கும்போது தத்துவசிந்தனை காலத்தில், உயிர் தன் ஆத்மாவில் ஆழ்ந்து விடுகிறது. கரணானுயோக கணிதங்களை என்னவோ நாம் இங்கு விட்டுவிட்டோம். அந்த கணிதங்கள் புரிந்து கொள்வதாலும்-புரியவைப்பதாலும் கூட அப்படிப்பட்ட ஒன்றிவிடுதல் நிகழ்கிறது. அந்த காலத்தில் ஆத்மாவை எதிர்கொள்ளுவதின் மூலம் சம்யக்தரிசனம் கிடைத்து விடுகிறது, அதை பீஜ சம்யக்த்துவம் என்று சொல்கின்றனர். நாங்கள் டீவி பார்க்கும்போதுகூட அத்துடன் ஒன்றிப்போய்தான் பார்க்கிறோம், பங்குகளின் (Share market) நிலவரங்களை அவைகளுடன் ஒன்றிதான் கேட்கிறோம்-படிக்கிறோம்-பார்க்கிறோம் என்று கூறுகிறீர்கள்! அங்கு அபிப்பிராயம்-நம்பிக்கை மற்றும் ஞானம் ஆகியவைகளை மறந்து எந்த ஒன்றுதல் நிகழ்கிறதோ அதில் உங்களுக்கு ஆத்மாவின் அனுபவம் வருவதில்லை-அங்கு கவலைதான் உன்டாகிறது. இராக-த்வேஷம்தான் வந்து கொண்டிருக்கிறது. உங்களால் அமைதியாக அதை அனுபவிக்க முடிவதில்லை, பெரிய சந்தேகத்துடனும் மிகுந்த கவலையுன்தான் உங்கள் அனுபவம் அமைவதை நீங்களே ஒத்துக்கொள்வீர்கள் இல்லையா? சொல்லுங்கள்!

இராக-த்வேஷமில்லாத அதாவது ஏகதேச வீதராகத்துடன் எந்த ஒரு விஷயத்தையும் தெரிந்து கொள்ளும் வடிவ தியானம் ஸ்ரேணியில்கூட நிகழ்கிறது, அதை சுக்லத்தியானம் என்று சொல்கின்றனர். யார் பூர்வங்களை அறிந்தவர்களோ - 14 பூர்வங்களை அறிந்தவராகவோ, 10 பூர்வங்களை அறிந்தவராகவோ இருக்கும் உயிர்களே ஸ்ரேணி ஏறுகிறார்கள். நாம் நம்முடைய கற்பனையாலேயே எந்த அனுயோகத்திற்காவது மறுப்பு சொல்வது சரியில்லை. திரவ்யானுயோகத்திலிருந்து தத்துவஞானப் பயிற்சி செய்து சித்தாந்தங்களைத் தெரிந்து கொண்டு அதைப்பற்றி நினைத்தல்-சிந்தனை செய்தல் வேண்டும். ஆனால் நம் மனம் வர்த்தக நிலவரம்போல நிலையற்றதாக இருக்கிறது, அதற்கு தினமும் புதுப்புது விஷயங்களில் சார்வது விருப்பமாக இருக்கிறது. டீவி பார்ப்பவர் கையில் ரிமோட் கன்ரோலை-அமர்ந்த இடத்திலேயிருந்து இயக்கும் கருவி மூலம் அடிக்கடி வெவ்வேறு நிலைய நிகழ்ச்சிகளை ஏன் மாற்றிக்கொண்டே

இருக்கிறார்? அங்கு என்ன நடக்கிறது?- என்பதை அறிய கவலை-ஆசை இருந்து கொண்டே இருப்பதால் அமைதியாக அவரால் அமர்ந்திருக்க முடிவதில்லை.

பண்டிட் தோடர்மல்ஜி சம்யக்ஞானசந்திரிகாவின் முன்னுரையில் இவ்வாறு எழுதுகிறார்- யாருக்காவது திரவ்யானுயோகத்திலோ, அல்லது சரணானுயோகத்திலோ, அல்லது பிரதமானுயோகத்திலோ, அல்லது அழகாக எடுத்துச்சொல்வதிலோ, அல்லது பணம் சம்பாதிப்பதிலோ பாரபட்சம் இருக்கிறதோ அவர்களுடைய நம்பிக்கை-சிந்தனை எவ்வாறு தவறானது என்பதை மிகவும் தெளிவாகப் புரிய வைக்கிறார். அதை நீங்கள் அவசியம் படிக்க வேண்டும்.

இங்கு நாம் எதை அறிந்து கொள்கிறோமோ அந்த அறிதல் எங்கிருந்து வருகிறது? படத்திலிருந்து வருகிறதா அல்லது நான் எடுத்து சொல்லும் சப்தவடிவ ஜடத்திலிருந்து வருகிறதா? ஒவ்வொருவரின் ஞான பர்யாயமும் அவர்களிடமிருந்தே மலர்கிறது. நாம் எல்லோரும் அவரவர்களின் தகுதியால் அறிந்து கொள்கிறோம், மற்றும் நாம் அறிந்து கொள்ள மறுத்தால் ஞான இயல்புக்கு-எல்லாவற்றையும் அறியும் இயல்புக்கு தடை செய்ய முயல்கிறோம்.

இந்த அறிதல் சுலபமாகவே நிகழ்கிறது. எல்லோரையும் இங்கு ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஞானத்தை புகட்டும் சக்தி யாருக்கு இருக்கிறது? சில விஷயம் புரிந்துகொள்ள முடியவில்லை என்பது வேறு விஷயம், ஆனால் அபிப்பிராயத்தில் இது தெரிந்து கொள்ள வேண்டியதில்லை, இதை கற்றல்-கற்பித்தல் வீணான செயல் என்று நம்புதல் மிகவும் தவறாகும். இந்த சாஸ்திரங்கள்-கிரந்தங்கள் நம்முடைய பாரம்பர்யமாகும். சொத்து சுகம் எல்லாம் புண்ணியத்தால் ஆவது என்ற போதிலும், நிலையற்ற சொத்துகளை நாம் நம் குழந்தைகளுக்காக சம்பாதித்து வைக்க விரும்புகிறோம். நாம் இந்த விஷயங்களை படித்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும், சாஸ்திரங்களை பதிப்பிப்பதால் மட்டுமே எந்த பிரயோஜனமும் உண்டாவதில்லை.

இந்த காலத்தில் புத்தகங்களை அச்சிட்டு பிரசுரிக்க பல வசதிகள் இருக்கின்றன. பிரதி எடுக்கக்கூட ஜராக்ஸ் மெஷின்கள் இருக்கின்றன, அவைகள் மூலம் குறைந்த காலத்திலேயே பல பிரதிகளை எடுக்க முடிகிறது. கொஞ்சம் சிந்தியுங்கள், ஜின முனிவர்கள், இந்த வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில், இந்த கிரந்தங்களை எப்படி செய்தார்கள்! ஆச்சார்ய குந்தகுந்தராகட்டும், ஆச்சார்ய நேமிசந்திரராகட்டும், அவர்கள்

ஓலைசுவடியில் எழுதினார்கள். அந்த காலத்தில் பேப்பர் பேனா கூட இல்லை. ஓலைச்சுவடியில் எழுதுவது கூட உங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காய்ந்து விழுந்த பனை ஓலைகளை பதமாக எடுத்து எழுத்தாணி கொண்டு எழுதினார்கள். பிறகு தாவரங்களிலிருந்து தயாரித்த நிறங்களை பூசினார்கள். அந்த கால ஸ்ராவகர்கள் இந்த ஓலைசுவடிகளை எவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வைத்தனர். இவைகளை பிரதி எடுத்து வைத்தார்கள். அவைகளை பாதுகாப்பாக காப்பாற்றினர். அவர்களும் படித்தனர், அவைகளை பல நூறு ஆண்டுகளாக காப்பாற்றி நமக்கு கிடைக்கும்படி செய்துள்ளனர். அவர்கள் எல்லோரும் நமக்கு பெரிய உபகாரம் செய்துள்ளார்கள்.

நாம்கூட இவைகளை நம் நலனுக்காக படித்தோமானல் அப்போது இவைகளை புதுப்பது யுக்திகள் மூலமாக எல்லோரும் படிக்க வேண்டும், எல்லோருக்கும் கற்பிக்க வேண்டும் என்ற உணர்வு சுலபமாகவே வந்துவிடுகிறது. இந்த காலத்தில் கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் நன்கு வளர்ச்சி கண்டிருக்கிறது. உங்கள் எல்லோருடைய கைகளிலும் இந்த வண்ணப்படங்களின் பிரதிகள் கிடைத்துள்ளன, எத்தனை, 400 பட கோப்புகள் இங்கு இலவசமாக வினியோகிக்கப் பட்டுள்ளன. உங்களிலேயே சிலர் கொடுத்த தானத்தின் மூலம் இந்த வசதி சாத்தியமானது.

யார் படிக்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு பல சாதனங்களும்-வசதிகளும் கிடைக்கின்றன. இங்கு இதை படம் பிடிக்கிறார்களே இதுவும், எங்கள் வீட்டில் தினமும் நடைபெறும் 3½ மணி நேர சுவாத்யாயங்களும், ஒலிநாடா-பதிவு தகடுகள் மூலமாகவும் நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள பலர் லாபமடைகின்றனர்.

இப்படிப்பட்ட கேள்விகள் வரும்போது நாம்கூட பேசிக்கொண்டே நாம் பார்த்துக்கொண்டு இருந்த விஷயத்தை விட்டுவிட்டு எங்கெங்கோ போய்விடுகிறோம். மேலும் சமுத்காதம் என்றால் என்ன? என்ற ஒரு கேள்வியும் வந்திருக்கிறது. அதைப்பற்றி பிறகு நான் தெளிவாக விளக்குகிறேன். சமுத்காத வகைகள், எந்தெந்த உயிர்கள் எந்தெந்த சமுத்காதங்களை செய்கின்றன, அந்த நிலையில் அந்த உயிர்களின் ஆத்மப்பிரதேசம் எதுவரை பரவுகிறது முதலானவைகளை எடுத்துச்சொல்ல தேவையான கால அவகாசம் இன்று இல்லை, அதனால்தான் பிறகு சொல்கிறேன் என்கிறேன்.

கேள்வி: குபோகபூமி மனிதர்கள் கர்பஜப் பிறவியா, இல்லையா?

பதில்: ஆம், குபோகபூமி மனிதர்களும் மற்ற போக பூமி-கர்ம பூமி மனிதர்களைப் போலவே கர்பஜப் பிறவியே எடுக்கின்றனர்.

இன்னுமொரு கேள்வி கர்மங்கள் எப்படி விழுகின்றன? என்று கேட்டிருக்கிறீர்கள். இது கர்மகாண்ட விஷயம், இதைப்பற்றி தனி முகாம்களில் நாங்கள் விரிவாகக் கூறியுள்ளோம். அவைகளை இந்த மூவுலக அமைப்பு பற்றி தெரிந்து கொள்ளும் இந்த முகாமில் புரியவைக்க நேரம் போதாது. இத்துடன் இன்றைய வகுப்பை முடித்துக் கொள்ளலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 16-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ நேமிபிரப பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்.

17. ஜோதிஷி விமானங்கள்

ஸ்ரீமத் நேமிசந்திர ஆச்சார்யரால் சொல்லப்பட்ட திரிலோகஸார நூலின் ஆதாரத்தில் நாம் இங்கு மூவுலக அமைப்பை பார்த்துக் கொண்டு இருக்கிறோம். கீழுலக வர்ணனையை பார்த்தபோது நாம் பவனவாசி, வியந்தர தேவர்களை பற்றி சர்ச்சை செய்தோம் மற்றும் மேலுலக வர்ணனையை பார்த்தபோது நாம் கல்பவாசி மற்றும் கல்பாதீத தேவர்களாகிய விமானவாசி தேவர்களை பற்றி சர்ச்சை செய்தோம்.

தேவகதி தேவர்களில் ஜோதிஷி தேவர்கள் பற்றி நாம் இதுவரை சர்ச்சை செய்யவில்லை ஏனென்றால் இந்த ஜோதிஷி தேவர்களின் விமானங்கள் மத்திய லோகத்தில் தான் இருக்கின்றன. மத்யலோகத்தின் அமைப்பை தெரிந்து கொள்ளாமல், அங்குள்ள தீப-சமுத்திரங்களின் அளவு மற்றும் அமைப்பு பற்றி தெரிந்து கொள்ளாமல், ஜோதிஷிகளின் விமானங்கள் பற்றி தெரிந்து கொள்வது கடினமாகும், அதனால்தான் இப்போது நாம் அவைகளைப்பற்றி சர்ச்சை செய்ய இருக்கிறோம்.

மத்திய லோகத்தின் அசங்க்யாத தீப-சமுத்திரங்களுக்கு மேலே பூமி தளத்திலிருந்து அதாவது நாம் வசிக்கும் முதல் பூமிக்கு மேல் 790 யோஜனை உயரத்தில் இருந்து 900 யோஜனை வரை எல்லா சூரிய, சந்திர, நக்ஷத்திரங்கள், தாரகைகள் முதலியன எல்லாம் இருக்கின்றன. இந்த 110 யோஜனை பருமனில் மட்டுமே இவைகள் எல்லாம் இருக்கின்றன. நாம் இங்கு இரவில் அமர்ந்து கொண்டு தாரகைகளை எண்ண முடியுமா, முடியாதா? இரவு நேரத்தை பற்றி ஏன் சொல்கிறீர்கள், நான் உங்களுக்கு பகலில் தாரைகளை எண்ணிச் சொல்லுகிறேன், ஆம், அதற்கு நமக்கு ஆகமசக்ஷு-ஆகமக்கண் தேவைப்படுகிறது. பிரவசனசாரத்தில் எல்லா உயிர்களும் இந்திரியசக்ஷு உடையவர்கள், தேவர்கள் அவதிசக்ஷு உடையவர்கள், முனிராஜர்கள் ஆகமசக்ஷு உடையவர்கள், மற்றும் சர்வக்ஞ பகவான் சர்வதசக்ஷு உடையவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அல்லவா!

சர்வதசக்ஷு உடைய சர்வக்ஞ பகவான் தீர்த்தங்கரர் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு என்ன கூறினாரோ, அதன்படி ஆகமங்கள் எழுதப்பட்டன. அந்த ஆகமவடிவக் கண்களால் பார்த்து நாம் இங்கு அமர்ந்தபடியே எல்லா தாரகைகளையும் கணக்கிட்டு சொல்லலாம். இவைகளை ஜோதிஷ்க விமானம் அல்லது ஜோதிஷ்க பிம்பம் என்றும் சொல்கின்றனர்.

மத்திய லோகத்தில் ஒரு ரஜ்ஜு நீள அகல திரஸநாளிக்கு கிழக்கு மற்றும் மேற்கு திசையின் எல்லையில் கனோததி வாதவலையம் உள்ளதோ அதுவரை

அதாவது அசங்க்யாத தீப-சமுத்திரங்கள் எதுவரை உள்ளனவோ அதுவரை எல்லா ஜோதிஷ்க விமானங்களும் உள்ளன. மத்தியில் மேரு மலையிலிருந்து 1,121 யோஜனை தூரத்தில் இவைகள் சுற்றி வருகின்றன. 2½ தீபம்வரை அதாவது மனித லோகம்வரை உள்ள சந்திரன், சூரியன், தாரகைகள் இடம்விட்டு இடம் செல்கின்றன, அதாவது சுற்றுகின்றன. அவைகளில் பல தாரகைகள் நிலையாகவும் இருக்கின்றன. ஆனால் 2½ தீபத்திற்கு வெளியே உள்ள தீப சமுத்திரங்களுக்கு மேலே உள்ள ஜோதிஷ்க விமானங்கள் - அதாவது சூரிய, சந்திர, தாரகைகள் எல்லாம் நிலையாக இருக்கின்றன, அவைகள் சுற்றுவதில்லை.

சூரியன் உதயமாவதையும், மறைவதையும், சந்திரன் வருவதையும் நக்ஷத்திரங்களும் தாரகைகளும் சுற்றி வருவதையும் நாம் இங்கு பார்க்கிறோம். இவைகள் எல்லாம் மனித உலகத்திற்கு மேலேயே இருக்கின்றன. இதற்கு வெளியே அசங்க்யாத தீப-சமுத்திரங்களின் மேலே இந்த சூரியன், சந்திரன், தாரகைகள் எல்லாம் எங்கே இருக்கின்றனவோ அங்கேயே நிலையாக இருக்கின்றன, அவைகள் சுற்றுவதில்லை. எங்கு சூரியன் நிலையாக இருக்கிறதோ அங்கு எப்போதும் பிரகாசம் இருந்து கொண்டே இருக்கிறது, எங்கு இருள் இருக்கிறதோ அங்கு எப்போதும் இருளாகவே இருக்கிறது.

இரவு பகல் மாற்றம் மனித உலகத்தில் மட்டுமே நிகழ்கிறது. நாம், பகல் இரவு, மாதம், வருடம், முதலியன கணக்கிடுதல் எல்லாம் நம்முடைய நோக்கில்-மனிதர்களின் நோக்கில் கணக்கிடுகிறோம். விமானவாசி தேவர்களைப்பற்றி பார்த்தபோது அங்கு அவர்களுக்கு எத்தனை கடற்கால ஆயுளோ அத்தனை 1,000 ஆண்டுகளுக்கு பிறகு உணவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற இச்சை வருகிறது என்றும் அத்தனை பட்சங்களுக்கு பிறகு சுவாசம் எடுக்கின்றனர் என்றும் பார்த்தோம். அந்த கணக்கு நம்முடைய கணக்கிடும் நோக்கில்தான் ஏனென்றால் நாம் நம் மொழியில்தான் தெரிந்துகொள்ள வேண்டும். மிலேச்சர்கள் மிலேச்ச மொழியின் மூலம் தெரிந்து கொள்கின்றனர். அதேபோல நாம் நம் மொழியில் பகல்-இரவு பற்றி காலம் பற்றி தெரிந்து கொள்கிறோம். சந்திரனும் சூரியனும் அதனதன் குறிப்பிட்ட பாதையில் சுற்றுகின்றன, அந்த காரணத்தால் இங்கு பகல் இரவு என்ற வேறுபாடுகள் நிகழ்கின்றன.

தீர்த்தங்கரர் 100 இந்திரர்கள் முன்னிலையில் திவ்யத்தொனி முழங்கும்போது அந்த 100 இந்திரர்களில் ஜோதிஷி தேவர்களில் சூரியனும்(பிரதி இந்திரன்), சந்திரனும்(இந்திரன்) அடங்குவர்.

கேள்வி: சூரியனும் சந்திரனும் தன்னிடத்தை விட்டுவிட்டு சமவசரணத்திற்கு வருகிறார்களா என்ன?

பதில்: நாம் பார்க்கும் சூரியன் மற்றும் சந்திரன் அந்த தேவர்களின் விமானங்களாகும்-ஜோதிஷி தேவர்கள் வாழுமிடமாகும். சூரியனும், சந்திரனும் இங்கு வருவதில்லை, சூர்ய இந்திரனும், சந்திர இந்திரனும் தான் இங்கு வருகிறார்கள். அவர்கள் வாழுமிடத்தைத் தான் விமானம் என்று சொல்கிறோம். இது அரை கோள வடிவில் இருக்கிறது. அதாவது ஒரு எலுமிச்சம் பழத்தை பாதியாக்கி அதன் மேல் பாகம் சமமாகவும் கீழ்பகுதி பாதி-½ கோளவடிமாகவும் வைத்தால் எப்படி இருக்குமோ அப்படியே இந்த விமானங்கள் இருக்கின்றன.

மேலே தளப்பகுதியில் அவர்களின் தங்குமிடம் - வசிக்கும் வீடு, ஜிநாலயம் முதலியவைகள் இருக்கின்றன.

இந்த எல்லா விமானங்களும் மண்ணால் ஆனது. சூரிய விமானத்தின் மண் உடலிகளுக்கு ஆதப நாமகர்ம உதயம் இருக்கிறது. அவைகளுக்கு உஷ்ணத்துடன் கூடிய ஒளி இருக்கிறது. சந்திர விமான மண் உடலிகளுக்கு உத்யோத நாமகர்ம உதயம் இருக்கிறது. அங்குள்ள தேவர்களுக்கு வைக்ரீயிக உடல் இருக்கிறது. இந்த எல்லா தேவர்களும் விக்ரியா சக்தி மூலம் அனேக உடல்களை செய்கின்றனர், அந்த வைக்ரீயிக உடலின் மூலம் சமவசரணம் மற்றும் பிற இடங்களுக்கும் செல்கின்றனர். ஆஸ்டானிக பருவத்தில் நந்தீஸ்வர தீபத்திற்கும், தேவாங்கனைகளுடன் கிரீடை செய்வதற்கும் மற்ற தீப சமுத்திரங்ளுக்கு செல்கின்றனர். அவர்களுடைய மூல சரீரத்துடன் கூடிய தேவர்களும் இந்திரர்களும் அவர்களின் சுவர்க்கங்களில் வாழ்கின்றனர். விக்ரியா சக்தி மூலம் வேறு உடல்களை செய்வதை விக்ரியா சமுத்காதம் என்று சொல்கின்றனர். அவர்களுடைய ஆத்ம பிரதேசம் மூல உடல், மற்றும் விக்ரியா உடல்களிலும் பரவி இருக்கும், அவைகளுக்குள் தொடர்பு விட்டுப்போவதில்லை. ஆத்மா ஒரு துண்டு பண்ண முடியாத அகண்ட திரவியமாகும், அது துண்டாவதில்லை. வெறுமனே உடலை செய்து பிற இடங்களுக்கு அனுப்புவதில்லை, அவர்களே எல்லா உடலிலும் இருக்கிறார்கள். இல்லையென்றல் ஜட உடல் மட்டும் சமவசரணத்திற்கு வருமா என்ன? அது என்ன கேட்கும், மற்றும் புரிந்து கொள்ளும்?

தேவர்கள் விக்ரியையும் செய்கிறார்கள், வேறு இடங்களுக்கும் செல்கின்றனர். நீங்கள் ஆஹாரக உடல் என்ற பெயரை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா. அங்குகூட முனிராஜருக்கு ஔதாரிக உடல் இருக்கிறது, எப்போது

அவர்கள் ஆஹாரக உடலை செய்து அதனுடன் சமவசரணம் முதலான இடங்களுக்கு செல்கின்றனர், அங்கு இரண்டு உடல்களுக்கும் இடையில் அவர்களுடைய ஆத்மப்பிரதேசம் பரவி இருக்கிறது. இந்த காலத்தில் லேசர் ஒளி கற்றைகளை பார்க்கிறீர்கள். லேசரின் பிரகாச ஒளிகற்றைகள் அதிக தூரம் வரை பரவுகின்றன, அதேபோல நீங்கள் கற்பனை செய்து ஆத்ம பிரதேசம் பரவுவதையும் புரிந்து கொள்ளுங்கள்.

இந்த எல்லா ஜோதிஷ்க விமானங்களின் மேல் ஜோதிஷி தேவர்களின் நகரங்கள் ஜினாலயங்களுடன் உள்ளன. நாம் அக்ருத்திம ஜின சைத்யாலயங்களுக்கு பூஜை செய்யும்போது கீழுலகத்திலுள்ள 7 கோடியே 72 லட்சம் சைத்யாலயங்களுக்கும், மேலுலகிலுள்ள விமானவாசிகளின் விமானங்களிலுள்ள 84 லட்சத்து 57 ஆயிரத்து 23 சைத்யாலயங்களுக்கும் மற்றும் நடு உலகில் உள்ள 458 சைத்யாலயங்களுக்கும் அர்க்கியம் வைக்கிறோம். பிறகு ஜோதிஷிகள் மற்றும் வியந்தரர்கள் இருக்குமிடங்களில் ஜினாலயங்கள் இல்லையா என்ன? ஆம், இருக்கின்றன, அவைகள் அசங்க்யாத எண்ணிக்கையில் உள்ளன. நம் எண்ணிக்கையில் அவைகள் வருவதில்லை, ஒவ்வொரு ஜோதிஷ்க விமானத்திலும் ஜினாலயங்கள் உள்ளன. பரத சக்கரவர்த்தி சூரிய விமானத்திலுள்ள ஜினபிம்பத்தை தினமும் நமஸ்காரம் செய்கிறார் என்று நீங்கள் பிரதமானுயோகத்தில் படித்திருப்பீர்கள் இல்லையா!

இந்த ஜோதிஷ்க விமானங்கள் ஒவ்வொன்றிலும் சங்க்யாத ஜோதிஷி தேவர்கள் வாழ்கின்றனர். அந்த ஜோதிஷி தேவர்கள் பவனத்திரிக தேவர்களில் ஒரு பிரிவினர். ஆனால் நாம் ஜோதிடம் பார்த்து சொல்லுபவர்களை, இராசி-பலன்களை சொல்பவர்களை ஜோதிஷிகளாக ஆக்கி விடுகிறோம். ஜோதிட பலன்களை தெரிந்துகொண்டு என்ன செய்வீர்கள்? என்னென்ன நடக்கவிருக்கிறதோ அது மாறப்போவதில்லை, எதை மாற்றமுடியுமோ அது நிகழப்போவதில்லை. ஆனால் அதன் பின்னால் ஓடி நாம் நம்முடைய விலைமதிப்பற்ற நிகழ்காலத்தை வீண்டிக்கிறோம்.

இந்த கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் நமக்கு எதுவும் கொடுப்பதில்லை, அவைகளால் நம்முடனிருப்பவைகள் என்னவாக இருந்தாலும் மாற்றமடைவதில்லை, அப்படி மாற்றமடைவது ஏன் தற்செயலாக இருக்கக்கூடது? நாம் நம்முடனிருப்பவைகளிலிருந்து நாம் வேறு என்பதை அறிய வேண்டும். முதலில் உடனிருப்பவைகளை சரிசெய்துவிட்டு பின்னர் அவைகளிலிருந்து நம் தனித்தன்மையை தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன? உடலிலிருந்து நாம் வேறு என்று தெரிந்துகொள்ள முதலில் உடலை அழகு படுத்தும் நிலையங்களுக்கு சென்று உடலை அழகு படுத்த வேண்டுமா என்ன? இவைகள் எல்லாம் தவறான கற்பனைகளாகும். மித்யாத்துவம் கூட புதுப்புது வேடங்களில் வருகிறது. உங்களுக்கு தெரியாதா என்ன? வாஸ்து சாஸ்திரம்

பேஃங்சுயி என்ற பெயரில் வீட்டின் அமைப்பை குறிப்பிட்ட முறையில் மாற்றி அமைப்பதால் சுகம் பெறலாம், எனக்கு செல்வம் கொழிக்கும், எனக்கு எந்த சங்கடமும் வராது என்பதெல்லாம் தவறான நம்பிக்கை இல்லாமல் வேறு என்ன?

ஒவ்வொரு வஸ்துவும் தானே மாற்றமடையக்கூடியது. நிமித்தம், வேறு திரவியத்தில் எதுவும் செய்வதில்லை, ஒவ்வொரு திரவியமும் தானே சுயமாக செயல்படுகிறது, அதனதன் செயல்பாடு அதனதன் கட்டுப்பாட்டில் நிகழ்கிறது, நிகழத்தகுதியானதே நிகழ்கிறது-அது எப்போது நிகழவேண்டுமோ அப்போதுதான் நிகழ்கிறது என்பதை அடிக்கடி நாம் சாஸ்திரங்களில் படிக்கிறோம். ஒவ்வொரு திரவியத்திலும் அனாதியிலிருந்து அனந்த காலம்வரை ஒவ்வொரு பர்யாயமும் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது, அதன் வரிசைமுறையும் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது, அது நிகழ வேண்டிய காலமும் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது, அதற்கான நிமித்தமும் கூட நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிச்சயிக்கப்பட்ட தன்மையை முடிவு செய்துவிட்டால் பிறகு அவைகளைப்பற்றி இந்த உயிர் கவலை அற்றதாக ஆகி-தான் அல்லது பிற பதார்த்தங்களைப்பற்றிய கவலை விடுபட்டு தன் சுய ஸ்வபாஃவத்தை அறிந்து கொண்டு இருக்குமானால், அதற்கு உண்மையான சுகம் -அனந்த சுகம் கிடைத்துவிடும். ஆனால் எதில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாதோ மற்றும் எதில் சுகமோ அல்லது துக்கமோ கிடைப்பதில்லையோ அப்படிப்பட்ட உடன் இருப்பவைகளில், நாம் சுக-துக்க கற்பனை செய்து, அவைகளை ஒன்று சேர்ப்பதிலோ அல்லது அவைகளை விலக்குவதிலோ நம்முடைய நிகழ்கல வாழ்க்கையை இழக்கிறோம்.

11-ஆம் குணஸ்தானத்தில் உள்ள முனிராஜர் அவருடைய ஆயுள் பூர்த்தியாகிவிட்டால், அவர் மரணமடைந்து 33-கடற்கால ஆயுள் கொண்ட சர்வார்த்தசித்தியில் தேவனாகப் பிறக்கிறார். ஒரு சமயத்தில் 11-ஆம் குணஸ்தான பூரண வீதராகத்தன்மையிலிருந்து தாழ்வடைந்து விக்ரஹ கதியில் 4-ஆம் குணஸ்தானவர்த்தி தேவனாகி விடுகிறார். அவர் அதிக சுகத்தில் எப்போது இருந்தார்? முனி அவஸ்தையிலா, சர்வார்த்தசித்தி தேவ அவஸ்தையிலா? அங்கு என்னவோ 33 கடற்காலம்வரை இரத்தினமய மஹலில், கல்பவிருக்ஷங்களின் மூலம் போகங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. முனிராஜர் காட்டில் வசித்தார்.

இங்கு நாம் உடன் இருப்பவைகள், போகப்பொருள்கள் சுகத்திற்கு காரணம் என்று நம்புகிறோம், அவைகள் செல்வத்தால் கிடக்கும்போல இருக்கிறது, அதனால் பண வடிவ சாதனத்தின் பின்னால் உலகம் பைத்தியக்காரன் போல ஓடுகிறது, எல்லோரும் ஓடுகிறார்கள், ஆகையால் நாமும் பணத்தின் பின்னால் ஓடுகிறோம்.

எனக்கு ஒரு தோழி இருக்கிறாள் - அவள் நம் சமணர் குலம்தான், அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர், அவள் 15 வருடங்களுக்கு முன் என்னிடம் கூறுவாள் - "நீ ஒரு முட்டாள், உன்னுடைய டாக்டர் தொழிலை விட்டுவிட்டு தர்மத்தின் பின்னால் ஓடுகிறாய், என்னைப்பார், நான் கத்தியின் மூலம் பணம் சம்பாதிக்கிறேன்." நான் அவளிடம் கூறினேன், "நல்லது, நீ கத்தியின் மூலம் பணம் சம்பாதிக்கிறாய், ஆனால் உணவு ஸ்பூன் மூலம் தானே சாப்பிடுகிறாய், இல்லையா?"

நாம் நம் வாழ்க்கை நடத்த தேவையான பணத்தை சம்பாதித்து விட்டு, அதிக சமயம் நம் சுத்தாத்மாவை தெரிந்து அதில் நம்பிக்கை வைக்க வேண்டும் - இந்த மனித பிறவியை அர்த்தமுள்ளதாகச் செய்யவேண்டும். ஆனால் நாம் என்னவோ நம் ஏழு தலைமுறை உட்கார்ந்து கொண்டே சாப்பிட வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் புண்ணிய-பாபத்தின் ஓட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது, அதற்கு ஏற்றார்போல் சேர்த்து வைத்த செல்வமும் கூட போய்விடுகிறது இல்லையேல் நோய் காரணமாக செலவாகிறது, குடும்பங்களின் பிரிவால் அல்லது வேறு சில பிரச்சனைகள் பணத்தின் மூலம் சாதிக்க முடியாமல் போகிறது.

நாம் இங்கு ஜோதிஷி உலகம் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். முதல் பூமியிலிருந்து 790 யோஜனை உயரத்தில் தாரகைகள் இருக்கின்றன. அதற்கு 10 யோஜனை மேலே சூரியன் இருக்கிறது. அதிலிருந்து 80 யோஜனை மேலே சந்திரன் இருக்கிறது. அதற்கு 4 யோஜனை மேலே நக்ஷத்திரங்கள் உள்ளன. அதற்கு 4 யோஜனை மேலே புதன் கிரஹம் உள்ளது. அதற்கு 3 யோஜனை மேலே சுக்கிரன் இருக்கிறது. அதற்கு 3 யோஜனை மேலே குரு-பிரஹஸ்பதி இருக்கிறது. அதற்கு 3 யோஜனை மேலே செவ்வாய்(அங்காரஹன்) இருக்கிறது. அதற்கு 3 யோஜனை மேலே சனி இருக்கிறது. அதன் பெயர் சனீஸ்வரன் அதாவது மந்தகதியில் செல்வது. இவைகள் எல்லாம் அந்த உயரத்தில் அவைகளின் இடங்களில் இருக்கின்றன, ஆனால் அவைகளின் பெயரால் அதாவது அந்த கிரஹங்களின் பெயரால் நாம் பயம் கொள்கிறோம்.

இப்போது இவைகளின் விஸ்தீரணம் - அதன் அளவைகளை தெரிந்து கொள்ளலாம். சந்திர விமானம் 56-ன் கீழ் 61 யோஜனை விட்டம் கொண்டது. சூரிய விமானம் 48-ன் கீழ் 61 யோஜனை விட்டம் கொண்டது. குரு ஒரு கோசத்திற்கு கொஞ்சம் குறைந்த விட்டம் கொண்டது. புதன், செவ்வாய் மற்றும் சனி ஒரு கோசம் விட்டம் கொண்டது. தாரகைகள் சில பெரியதாகவும் சில சிறியதாகவும் இருக்கின்றன. ¼ கோசம் முதல் ஒரு கோச அளவு வரை விட்டம் கொண்டவைகளாக உள்ளன. நக்ஷத்திரங்கள் ஒரு கோச விட்டமுடையவைகளாக இருக்கின்றன.

இந்த தாரகைகளும், நக்ஷத்திரங்களும் அதனதன் பாதையில் சுற்றி வருகின்றன. சூரியன், சந்திரன், கிரஹங்கள் கூட அதனதன் பாதையில்தான் சுற்றி வருகின்றன. அவைகளுக்கு அதனதன் சுற்றும் இடங்கள் இருக்கின்றன, அவைகள் வெவ்வேறு வட்டப்பாதையில் சுற்றுகின்றன. உத்தராயணம், தக்ஷிணாயணம் நிகழ்வதை நாம் பார்க்கிறோம், அதைப்பற்றி தெரியுமல்லவா. பாருங்கள், சூரியன் கிழக்கு திசையில் உதிக்கிறது ஆனால் சிலசமயம் தெற்கு திசை பக்கமும், சிலசமயம் வடக்கு திசை பக்கமும் அதன் கோணம்-அது செல்லும் பாதை சாய்ந்தார்போல் இருக்கிறது. 6-6 மாதங்களில் 6 மாதம் தட்க்ஷணாயணத்திலும் 6 மாதம் உத்தராயணத்திலும் செல்கிறது. சூரிய-சந்திரன் செல்லும் பாதைகளும் தனித்தனியாக இருக்கின்றன.

ஜம்பூதீபத்தில் 2 சூரியனும் 2 சந்திரனும் இருக்கின்றன. ஜம்பூதீபத்தில் சந்திரன் சுற்ற 15 வீதிகள் உள்ளன, சூரியனுக்கு 184 வீதிகள் உள்ளன. சந்திரன் இந்த 15 வீதிகளில் சுற்றுவதால் கிருஷ்ண பட்க்ஷமும் சுக்ல பட்க்ஷமும்-வளர்பிறை, தேய் பிறைகள் உண்டாகின்றன.

இப்போது தாரகைகளின் எண்ணிக்கையை நம்மால் கணக்கிட முடியாவிட்டாலும் ஆகமங்களின் வழி அவைகளின் எண்ணிக்கையை கணக்கிட்டுப் பார்க்கலாம். இந்த சூரியன், தாரகைகள், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் எல்லாம் சந்திரனின் பரிவாரமாகும். நாம் சூரியனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனுடன் கிரஹ, நக்ஷத்திர, தாரகைகளை சேர்த்து சூரிய மண்டலம் என்று சொல்கிறோம். ஆனால் இங்கு சந்திரன் முக்கியமாகும். ஒவ்வொரு சந்திரனின் பரிவாரத்திலும் என்னென்ன இருக்கின்றன என்பதைப் பார்க்கலாம். ஒன்று சந்திரன். ஒரு சந்திரனுடன் ஒரு சூரியன், 88 கிரஹங்கள், 28 நக்ஷத்திரங்கள் 66,975 கோடாகோடி தாரகைககள் உள்ளன. எல்லாவற்றையும் கூட்ட 1+1+88+28+66,975 கோடாகோடி அதாவது 66,975 கோடாகோடி+118 இத்தனையும் சந்திரனின் பரிவாங்களாகும். இப்போது நாம் சந்திரன்களை கணக்கிட்டால் நமக்கு எல்லா ஜோதிஷி விமானங்களின் மொத்த எண்ணிக்கை கிடைக்கும்.

ஜம்பூதீபத்தில் 2 சூரியனும் 2 சந்திரனும் இருக்கின்றன. ஒரே வீதியில் இரண்டு சந்திரனும் இரண்டு சூரியனும் சுற்றுகின்றன. நாம் இன்று பார்க்கும் சூரியன் நாம் மூன்றாம் நாள் பார்ப்போம், மறுநாள் வேறு சூரியனை பார்ப்போம். லவண சமுத்திரத்தில் 4 சந்திரனும், 4 சூரியன்களும் உள்ளன. தாதகி கண்டத்தில் 12 சந்திரனும், 12 சூரியன்களும் உள்ளன. காலோததி சமுத்திரத்தில் 42 சந்திரனும், 42 சூரியன்களும் உள்ளன. புஷ்கரார்த்தில் மானுக்ஷோத்திரமலை வரை உள்ள பாதி புஷ்கரார்த்த தீவில் 72 சந்திரனும், 72 சூரியன்களும் உள்ளன.

மானுக்ஷோத்தர மலைக்கு வெளியே இவைகளின் எண்ணிக்கையை எப்படி கண்டுபிடிப்பது என்பதை பார்க்கலாம். இதற்கு வெளியே எந்த தீபம் அல்லது சமுத்திரம் எத்தனை லட்ச யோஜனை விஸ்தீரணமோ அத்தனை வளையங்கள் இருக்கின்றன. வெளி புஷ்கரார தீபம் 8 லட்ச யோஜனை விஸ்தீரணம் கொண்டது, எனவே அதில் 8 வளையங்கள் உள்ளன. முதல் வளையம் மானுஷோத்தர மலையிலிருந்து ½ லட்சம் யோஜனையில் இருக்கிறது, அதாவது முதல் வளையம் 50,000 யோஜனையில் இருக்கிறது, மற்ற வளையங்கள் 1-1 லட்ச யோஜனை இடைவெளியில் உள்ளன. முதல் வளையத்தில் 144 சந்தினும், 144 சூரியனும் உள்ளன. இரண்டாவது வளையத்தில் 148 சந்திரனும், 148 சூரியனும் உள்ளன. மூன்றாவது வளையத்தில் 152 சந்திரனும், 152 சூரியனும் உள்ளன. நான்காம் வளையத்தில் 156 சந்திரனும், 156 சூரியனும் உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு வளையத்திலும் 4-4 சூரியனும் சந்திரனும் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

இதுபோல இதற்கு வெளியே 32 லட்சம் யோஜனை விஸ்தீரண புஷ்கரார சமுத்திரத்தில் 32 வளையங்கள் உள்ளன. அதன் முதல் வளையத்தில் 288-288 சூரியனும் சந்திரனும் உள்ளன. அடுத்த ஒவ்வொரு வளையத்திலும் 4-4 காக அதிகரித்து 292, 296, 300, 304, 308,312, ... இவ்விதமாக 32 முறை 4-4 அதிகரிக்கின்றன. அதற்குப்பிறகு நான்காவது தீபம் 64 லட்சம் யோஜனை கொண்டது, அதன் முதன் வளையத்தில் 576-576 சூரியனும் சந்திரனும் உள்ளன. அதற்கு அடுத்த வளையத்தில் 4-4 ஆக அதிகமாதல் 63 முறை நிகழும்.

இதற்கு அடுத்த சமுத்திரம்128 லட்சம் யோஜனை கொண்டது. இதுவரை 4 தீபமும் 4 சமுத்திரங்களும் ஆனது. நந்தீஸ்வரதீபம் 8-வதாகும் இது தீபசமுத்திரத்தில் இதன் எண்ணிக்கை 15 ஆகும். அங்கு கூட இந்த கணக்கு செய்யலாம். இங்கு நாம் சந்திரனின் எண்ணிக்கையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம், அதன் பரிவாரங்களின் எண்ணிக்கையை பிறகு பார்க்கலாம்.

பயப்பட வேண்டாம், நம்மிடம் கரணானுயோக சூத்திரங்கள் இருக்கின்றன. பெரிய-பெரிய கணக்குகளை சுலபமாக செய்யலாம். மானுக்ஷோத்திர மலைக்குப் பிறகு ஒவ்வொரு தீப சமுத்திரத்திலும் முதல் வளையத்தில் இருந்து இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கு இரண்டு மடங்காக ஆகிக்கொண்டே போகிறது. நாம் 144-ல் ஆரம்பித்தோம், பிறகு 188, அதற்குப்பிறகு இரண்டு மடங்காக ஆகிக்கொண்டே போகும் மற்றும் ஒவ்வொரு வளயத்திலும் 4-4 சூரிய-சந்திரனும் அதிகரித்துக் கொண்டே போகும். அப்படியானால் இவைகளின் எண்ணிக்கையை எப்படி கணக்கிடுவது?

நீங்கள் சொல்லுங்கள், மொத்தம் எத்தனை தீப சமுத்திரங்கள் உள்ளன? அசங்க்யாதம், அசங்க்யாதத்தில் இருந்து ஒன்று கூட குறைவு இல்லை அல்லவா! ஆம், கோடாகோடி உத்தார பல்லிய எண்ணிக்கையில் தீப சமுத்திரங்கள் உள்ளன. 144 எண்ணிக்கையை நாம் புஷ்கரார்த்தத்திலிருந்து துவங்கினோம். ஆகையால் மொத்த எண்ணிக்கையில் 2½ தீபம் - 2 சமுத்திரங்கள் சம்பந்தமான எண்ணிக்கையை கழித்தால் எத்தனை தீப-சமுத்திரங்கள் மிச்சமுள்ளதோ அதில் முதல் வளைய சூரிய-சந்திர எண்ணிக்கையை இரண்டிரண்டு மடங்காச் செய்யலாம்.

புஷ்கரவர சமுத்திரத்திலிருந்து எத்தனை தீப சமுத்திரங்கள் எத்தனை லட்சம் விஸ்தீரணம் கொண்டவைகளோ அதை லட்சத்தால் வகுத்தால் என்ன எண் வருகிறதோ அத்தனை வளையங்களின் எண்ணிகையாக வருகிறது. அதை 9-ஆல் பெருக்கினால் மூதல் வளயத்தில் இருக்கும் சூரிய-சந்திரன்களின் எண்ணிக்கை வருகிறது. புஷ்கரவரம் மூன்றாவது சமுத்திரமாகும், அது 32 லட்சம் யோஜனை கொண்டது. அதை லட்சத்தால் வகுத்தால் 32 வருகிறது, இதை 9-ஆல் பெருக்க 288 வருகிறது. அதன் முதல் வளைத்தில் 288-288 சூரிய-சந்திரன்கள் இருக்கின்றன. வாருணீவர நான்காவது தீபம் 64 லட்சம் யோஜனை கொண்டது. அதை லட்சத்தால் வகுத்தால் 64 வருகிறது, இதை 9-ஆல் பெருக்க 576 வருகிறது. அங்கு அத்தனை-அத்தனை சூரிய-சந்திரன்கள் இருக்கின்றன.

சுயம்புரமண சமுத்திரத்தின் விஸ்தீரணம் ¼ ரஜ்ஜுவுடன் 75,000 யோஜனை கூட்ட வரும் விஸ்தீரண அளவாகும். இதை கணக்கிடும் முறையை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். ஒரு ரஜ்ஜு அதாவது ஜகத்ஸ்ரேணி/7 ஏனெனில் ஜகத்ஸ்ரேணி 7 ரஜ்ஜுவாகும். அதில் நான்கில் ஒரு பாகம் அதாவது ஜகத்ஸ்ரேணி/28, இத்துடன் 75,000 யோஜனையை கூட்ட வருமளவு லட்ச யோஜனையாகும். இதை ஒரு லட்சத்தால் வகுத்து ஒன்பதால் பெருக்கவும்.
[(ஜகத்ஸ்ரேணி/28)+75000] X (9/100000) இத்தனை சூரிய சந்திரர்கள் சுயம்புரமண சமுத்திரத்தின் முதல் வளையத்தில் இருக்கின்றன.

நம்மிடம் ஒரு சூத்திரம் இருக்கிறது - எல்லா முதல் வளையங்களிலும் உள்ள சூரிய-சந்திரர்களின் எண்ணிக்கை இரண்டு-இரண்டு மடங்காகும். அதனால் அதை சேர்க்கவும் மற்றும் அதைத்தவிர மற்ற வளையங்கள் ஒவ்வொன்றிலும் 4-4 எண்ணிக்கையில் சூரிய-சந்திரர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. சமமாக கூடிக்கொண்டு போவதை கரணானுயோக கணிதத்தில் “சய” என்று சொல்கின்றனர். இதை கூட்டி கணக்கிடுவதற்குக்கூட கரணானுயோக கணிதத்தில் ஒரு வழிமுறை இருக்கிறது.

திரிலோகசாரம், தில்லோயபண்ணத்தி முதலான கிரந்தங்களில் இந்த கணித வழிமுறைகள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் ஆதாரத்தில்

நாம் மொத்த சந்திரன்களின் எண்ணிக்கையை கண்டுபிடிக்க முடியும். இவைகளுடன் மனிதலோகத்தின் 2+4+12+42++72=132 சந்திரன்களின் எண்ணிக்கையை கூட்டவும். மொத்த சந்திரன்களின் எண்ணிக்கையை "ச" என்று வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு சந்திரனின் பரிவாரத்திலும் நாம் 1சந்திரன்+1சூரியன்+88கிரஹங்கள்+28நட்சத்திரங்கள்+66,975 கோடாகோடி தாரகைகள் இருப்பதை பார்த்தோம். இந்த எண்ணிக்கையை மொத்த சந்திரன்களின் எண்ணிக்கையால் பெருக்க எல்லா ஜோதிஷ்க விமானங்களின் எண்ணிக்கை கிடைக்கும். ச X (66975 கோடாகோடி+118). இங்கு ச-வின் எண்ணிக்கை மட்டுமே அசங்க்யாதத்தில் இருக்கிறது.

ஜோதிஷி தேவர்களின் எண்ணிக்கை ஜகத்ஸ்ரேணி / 256-அங்குலங்களின் வர்கம். 256-ன் வர்கம் 256X256=65,536. இந்த 65,536 எண்ணிக்கையை "பண்ண்ட்டி" என்று சொல்கின்றனர். அங்குலத்தின் வர்க்கம் பிரதராங்குலம். இதை இப்படி எழுதும்போது [ஜகத்ஸ்ரேணி/(பிரதராங்குலம்Xபண்ண்ட்டி)]. எத்தனை ஜோதிஷ்க விமானங்கள் இருக்கின்றனவோ, அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சைத்யாலயம் இருக்கிறது. இந்த ஜோதிஷ்க விமானங்களில் உள்ள அசங்க்யாத ஜினசைத்யாலயங்களுக்கும் நாம் இங்கிருந்தே உணர்வுப் பூர்வமாக நமஸ்காரம் செய்வோம்.

ஒவ்வொரு விமானத்திலும் சங்க்யாத ஜோதிஷி தேவர்கள் வசிக்கின்றனர். மேல் கூறப்பட்ட எண்ணிக்கையை சங்க்யாதத்தால் பெருக்கும்போது நமக்கு மொத்த ஜோதிஷி தேவர்களின் எண்ணிக்கை கிடைக்கும். தேவகதியில் அதிகபட்ச எண்ணிக்கையில் ஜோதிஷி தேவர்களின் எண்ணிக்கையே மிகவும் அதிகமாகும்.

இந்த எண்ணிக்கையின் பிரம்மாண்டத்தை தெரிந்துகொள்ள அசங்க்யாதத்தின் வெவ்வேறு பிரிவுகளை பார்க்கலாம். ஆவளி, பல்லியம், அங்குல், பிரதரங்குல், கனாங்குல், ஜகத்ஸ்ரேணி, ஜகத்கஃன்(லோகப்பிரமான அசங்க்யாதம் எல்லாம் அதன் பிரிவகளாகும். சம்யக்ஞானசந்திரிகாவில் ஜீவகாண்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள கணிதத்தில் 14 தாரகைகள்-வரிசைகளில்-series-களில் ஒன்று த்விரூபவர்கதாரா வாகும். அதில் 2-ன் வர்க்கத்தில் துவங்கி வர்க்கத்தின் வர்க்கம், இரண்டாவது முறையாக வர்க்கம், மூன்றாவது முறையாக வர்க்கம் என்று செய்து கொண்டே போகவும். அசங்க்யாத வர்க்கஸ்தானம் சென்றதும் பல்லியத்தின் எண்ணிக்கை வருகிறது. அதற்கு மேலும் அத்தனை அசங்க்யாத வர்க்கஸ்தானம் சென்றதும் அங்குலத்தின் எண்ணிக்கை வருகிறது.

கேள்வி: ஆவளி என்றால் என்ன?

பதில்: ஆவளி என்னவோ ஜகன்ய யுக்தாசங்க்யாத சமயத்தின் அளவாகும். மிகச்சிறிய அசங்க்யாதத்தின் பெயர் ஜகன்ய பரீதாசங்க்யாதம். இந்த

எண்ணிக்கையை இந்த எண்ணிக்கை முறை எழுதி அவைகளை அவைகளுக்குள் பெருக்க வரும் எண்ணிக்கை ஜகன்ய யுக்தா சங்க்கியாதமாகும். இத்தனை சமயங்கள் ஒரு ஆவளியில் இருக்கின்றன. அந்த எண்ணிக்கை கொண்ட அவளி போல சங்க்யாத கோடாகோடி ஆவளி ஒரு செகண்டில் உள்ள சமயங்களின் மொத்த எண்ணிக்கையாகும். இதிலிருந்து சமயம் எவ்வளவு நுட்பமானது என்பது நம் எண்ணத்தில் வருகிறது. இந்த ஒரு சமயத்தில் கேவலி பகவான் விஸ்வத்தின் எல்லா திரவியங்களின் குணங்கள், அவைகளின் முக்கால பர்யாயங்கள் ஆகிய அனைத்தையும் ஒன்றாக அறிகிறார், அதிலும் ஒவ்வொன்றின் தனித்தன்மையையும் கூட அறிகிறார். எப்படிப்பட்ட மாஹா அற்புதமான ஞான ஸ்வபாவம் நம் எல்லோரிடமும் இருக்கிறது. அது பற்றிய விஸ்வாசம்-அதில் நம்பிக்கை-அந்த உணர்வு வருவதால் அது பர்யாயத்திலும் வெளிப்பட்டு விடவே செய்யும்.

கேள்வி: ஜகன்யபரிதா அசங்க்யாதத்தை எப்படி கணக்கிடுவது?

பதில்: இதை கணக்கிடுவது மிகவும் சுவாரஸ்யமான விஷயம் தான். ஆனால் கணிதத்தில் ருசி இல்லாதவர்களுக்கு புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் என்பதால் இங்கு அதை சொல்லப்போவதில்லை. ஜீவகாண்டத்தில் இந்த விஷயம் விரிவாக புரியவைக்கப் பட்டுள்ளது, அதைப்படித்து புரிந்து கொள்ளவும். அது புரியவில்லை என்றால் “சங்க்யாமான்” என்ற என்னுடைய ஒலிப் பதிவை கேட்டு புரிந்து கொள்ள முயலுங்கள்.

இரண்டரை தீபத்திற்கு வெளியே எல்லா விமானங்களும் அதாவது சூரிய, சந்திர, தாரகைகள் எல்லாம் நிலையாகவே இருக்கின்றன. இரண்டரை தீபத்தில் இவைகள் எல்லாம் அதனதன் பாதையில் மேருவை சுற்றி வருகின்றன. மேருவின் 10,000 யோஜனை விட்டத்தை விட்டுவிட்டு அதற்கு வெளியே 1,121 யோஜனை தூரத்தில் எல்லாம் காணப்படுகின்றன. இவைகளில் சில தாரகைகள் சுற்றுகின்றன, சில நிலையாக-துருவமாக இருக்கின்றன. நிலையாக இருக்கும் தாரகைகளின் எண்ணிக்கை இவ்வாறு இருக்கின்றன - ஜம்பூ தீபத்தில் 36, லவண சமுத்திரத்தில் 139, தாதகி கண்டத்தில் 1,010, காலோததி சமுத்திரத்தில் 41,120, புஷ்கரார தீபத்தில் 53,230 என இரண்டரை தீபத்தில் 95,534 துருவ தாரகைகள் உள்ளன. தாதகி கண்டம் மற்றும் புஷ்கரார்த்தத்திலும் கிழக்கு மற்றும் மேற்கு பாகத்தில் ஜோதிஷி விமானங்கள் அதனதன் பாதையில் சுற்றுகின்றன.

ஆகமத்தில் மிகவும் விரிவாக பல விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த இரண்டு இரண்டு சூரிய-சந்திரனுக்கும் இடையே உள்ள இடைவெளி, இரவு பகல் மாற்றம், மற்றும் முழு வானியல் சாஸ்திரம் எல்லாம் கூறப்பட்டுள்ளன. அதிலிருந்து அவசியம் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம். நான்

ஒரு சில விஷயங்கள் மட்டுமே கொடுத்திருக்கிறேன். நமக்கு ஆகமமே பிரமாணமாகும்.

இந்த சந்திரன் முதலான விமானங்களை இழுத்துச் செல்லும் வாகன தேவர்கள் சிங்கம், யானை, எருது முதலான வடிவங்களை எடுத்து இந்த விமானங்களை குறிப்பிட்ட பாதையில் இழுத்துச் செல்கின்றன. சூரிய மற்றும் சந்திர விமானங்களின் வாகன தேவர்கள் ஒவ்வொன்றுக்கும் 13,000 தேவர்களும், கிரஹங்களுக்கு 8,000 தேவர்களும், தாரகைகளுக்கு 2,000 தேவர்களும் உள்ளனர்.

கேள்வி: வாஹன தேவர்கள் விமானங்களை இழுத்துச் செல்கிறார்கள் என்றால், இழுக்காமல் அந்த விமானங்கள் செல்லாதா என்ன?

பதில்: இவைகள் அங்குள்ள இந்திரர்களின் தேவர்களின் புண்ணிய பலனாகும்-அவர்களுடைய வைபவமாகும். நம்முடைய ஜனாதிபதி, பிரதம மந்திரி முதலான உயர்ந்த பதவி வகிப்பவர்களுடன் செல்லும் பாதுகாப்பு அமைப்பு -convoy போலவாகும்.

இப்போது இந்த தேவர்களின் ஆயுள் பற்றி பார்க்கலாம்.
சந்திரனின் ஆயுள் - 1 பல்லியம்+1,00,000 வருடங்கள்.
சூரியனின் ஆயுள் - 1 பல்லியம் + 1,000 வருடங்கள்.
பிரஹஸ்பதியின் ஆயுள் - 1 பல்லியம்.
புதன், செவ்வாய், சனி கிரஹங்களின் ஆயுள் - ½ பல்லியம்.
தாரை, நக்ஷத்திரங்களின் அதிகபட்ச ஆயுள் ¼ பல்லியம், குறைந்த பட்ச ஆயுள் ⅛ பல்லியம். தேவாங்கனைகளின் ஆயுள் அவர்களுடைய தேவர்களின் ஆயுளில் பாதியாகும். சூரிய-சந்திரர்களுக்கு 4-4 பட்டதேவிகள் உள்ளனர். 4-4 ஆயிரம் பரிவார தேவிகளுக்கு 1-1 பட்டதேவி உள்ளனர். ஒவ்வொரு பட்ட தேவியும் 4,000-4,000 விக்ரியா செய்கிறார்கள். இங்கு மிக தாழ்ந்த நிலை தேவர்களுக்கு 32 தேவாங்கனைகள் உள்ளனர்.

எங்களை ஒரு சகோதரர் சந்தித்து நான் இப்போது பிரம்மசர்யம் எடுக்க விரும்புகிறேன், ஏனெனில், பிறகு தேவனாகும்போது எனக்கும் 32 தேவாங்கனைகள் கிடைப்பார்கள் அல்லவா, தேவர்களுக்கு 32 தேவாங்கனைகள் கிடைக்கின்றனர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று கூறினார். உயிர்களின் அபிப்பிராய விசித்திரங்களைப் பாருங்கள்!

ஜோதிஷி, வியந்தரர் மற்றும் பவனவாசி மூன்றுவகை தேவர்களையும் பவனத்திரிகர்கள் என்று சொல்கின்றனர். அங்கு யார் சென்று பிறக்கின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜின தர்மத்திற்கு விபரீதமாக உள்ள தர்மங்களை கடைபிடிப்பவர்கள், நிதானம் செய்பவர்கள், அக்னி, ஜலம், மற்றும் சண்டையில் மரணமடைபவர்கள், அகாமநிர்ஜரை செய்பவர்கள்,

பஞ்சாக்னி முதலான கெட்ட தபம் செய்பவர்கள், குறைபாடுடைய ஒழுக்கம் கொண்டவர்கள் பவனத்திரிகத்தில் சென்று பிறக்கின்றனர். போகபூமியில் உள்ள எல்லா மித்யாதிருஷ்டிகள், சாசாதனர்கள் பவனத்திரிகத்தில் சென்று பிறக்கின்றனர். இத்துடன் ஜோதிஷி தேவர்கள் பற்றிய சர்ச்சையை முடித்துக் கொள்ளலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 17-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ வீரசேன பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்.

★

18. பஞ்சமேரு

ஆச்சார்ய ஸ்ரீநேமிசந்திரரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலின் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பைப் பார்த்துக்கொண்டு வருகிறோம். மத்தியலோக அமைப்பில் இப்போது மேருமலைகள் பற்றிப் பார்க்கலாம். நாம் 2½ தீப அமைப்பில் மேருமலைகள் எங்கு இருக்கின்றன என்பதைப் பார்த்தோம். ஜம்பூ தீபத்தின் நடுவில் ஒன்றும், தாதகி கண்டத்தில் கிழக்கிலும் மேற்கிலும் ஒவ்வொன்றும், புஷ்கரார்த்தத்தில் கிழக்கிலும் மேற்கிலும் ஒவ்வொன்றும் என மொத்தம் 5 மேருமலைகள் உள்ளன. அவைகளின் பெயர்களைக்கூட நாம் பார்த்திருக்கிறோம், அவைகள் முறையே 1.சுதர்சனமேரு, 2.விஜயமேரு, 3.அசலமேரு, 4.மந்தரமேரு மற்றும் வித்யுத்மாலிமேரு என்பனவாகும்.

முதன் முதலில் சுதர்சனமேருவின் அமைப்பைப் பார்க்கலாம். மற்ற நான்கு மேருகளின் அமைப்பும் ஒரேமாதிரி இருக்கின்றன ஆனால் சுதர்சனமேரு தனி அமைப்பு கொண்டதாக இருக்கிறது. அதனால் சுதர்சனமேரு பற்றிப் பார்த்த பிறகு மற்ற மலைகளின் அமைப்பைப் பார்க்கலாம்.

ஜம்பூ தீபத்தின் படம் 5-ஐ பார்க்கவும். ஒரு லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்ட ஜம்பூ தீபத்தின் நட்டநடுவில் மேருவின் விட்டம் பூமியின் சமதளத்தில் 10,000 யோஜனை யாகும். அதற்கு கிழக்கிலும், மேற்கிலும் 22,000-22,000 யோஜனை கொண்ட பத்ரசாலவனம் இருக்கின்றன. மேருவிற்கு தெற்கிலும் வடக்கிலும் இதன் அகலம் 250 யோஜனையாகும், அது 22,000த்தில் 88-ல் ஒரு பாகமாகும். பத்ரசால வனத்தின் கிழக்கிலும் மேற்கிலும் விதேக க்ஷேத்திரங்கள் உள்ளன. இவைகளின் அமைப்பை நாம் பார்த்திருக்கிறோம்.

சுமேரு அதாவது சுதர்சனமேரு ஒரு லட்சம் யோஜனை உயரம் கொண்டது என்பதை பலமுறை கேட்டிருக்கிறோம். இதன் உயரம் 1,00,040 யோஜனையாகும். 40 யோஜனை கொண்ட சூலிகை இதன் மேல் பகுதியில் இருக்கிறது. மற்றும் 1,000 யோஜனை பூமிக்கு அடியில் இதன் அடித்தளம் இருக்கிறது. சித்ரா பூமியின் பருமன் எவ்வளவோ அவ்வளவு பருமன் இதன் அடித்தளமாகும், பூமிக்கு மேல் இதன் உயரம் 99,040 யோஜனையாகும்.

பூமியில் இதன் விட்டம் 10,000 யோஜனை, 99,000 யோஜனைக்கு மேல் சென்றதும் பாண்டுகவனம் இருக்கிறது, அங்கு இதன் விட்டம் 1,000 யோஜனையாக இருக்கிறது. ஆனால் இந்த விட்டம் சமமாக குறையவில்லை,

அது எவ்வாறு குறைகிறது, எந்த உயரத்தில் எவ்வளவாக இருக்கிறது என்பதைப் பார்க்கலாம். இதற்கு நீங்கள் படம் 10-ஐ பாருங்கள்.

மேருமலையை சுற்றிலும் அதாவது நாலாபக்கமும் பத்ரசால வனம் இருக்கிறது. இங்கு மேரு மலையின் கிழக்கு முதலான நான்கு திசைகளிலும் அக்ருத்திரிம-இயற்கையாக அமைந்த நான்கு ஜினாலங்கள் உள்ளன. இயற்கை ஜினாலங்களின் அமைப்பை நாம் பிறகு பார்க்கவிருக்கிறோம். பூமி தளத்திலிருந்து 500 யோஜனை மேல் சென்றதும் மலையின் அளவு குறைகிறது. இதன் பொருள் கீழே படத்தில் காட்டியபடி மலை எல்லா பக்கத்திலும் 500-500 யோஜனை குறைந்து உள்பக்கம் போகிறது.



இங்கு 500 யோஜனை சமதளம் அமைகிறது, இங்கு அதே அளவு கொண்ட நந்தனவனம் என்ற பெயர்கொண்ட வனம் இருக்கிறது, இங்குகூட நான்கு திசையிலும் ஒவ்வொரு இயற்கை ஜினாலயம் உள்ளது.

அங்கிருந்து 62,500 யோஜனை மேலே சென்றதும் மலையின் அளவு மேலும் குறைகிறது. அங்கு சௌமனஸவனம் இருக்கிறது. அது கூட 500 யோஜனை அகலம் கொண்டது. அங்குகூட நான்கு திசையிலும் ஒவ்வொரு இயற்கை ஜினாலயம் உள்ளது. அங்கிருந்து 36,000 யோஜனை மேலை சென்றதும் மலையின் பருமன் அங்கும் குறைகிறது, இந்த இடத்தில் பாண்டுகவனம் இருக்கிறது. இங்கு மலையின் விட்டம் 1,000 யோஜனையாக இருக்கிறது. அதன் நடுவில் சூலிகை-சிகரத்தின் விட்டம் 12 யோஜனையாகும், அதாவது நடு புள்ளியிலிருந்து ஒருபக்கம் 6 யோஜனை சிகரத்தை விட்டுவிட்டு மீதமுள்ள 494 அளவு மலையின் சிகரப்பகுதி தளமாக இருக்கும் அந்த பகுதி முழுவதும் பாண்டுகவனம் இருக்கிறது. இங்கும் நான்கு திசையிலும் ஒவ்வொரு இயற்கை ஜினாலயம் உள்ளது. பத்ரசாலவனத்தில் 4, நந்தனவனத்தில் 4, சௌமனசவனத்தில் 4 மற்றும் பாண்டுகவனத்தில் 4 என மேரு மலையில் மொத்தம் 16 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

நீங்கள் படம்-10-ஐ கவனமாகப் பாருங்கள். மேரு மலையின் அடித்தளம் பூமிக்கு கீழே 1,000 யோஜனை என்று சொல்லி இருக்கிறார்கள். பூமியின் சமதளத்தில் பத்ரசால வனம் இருக்கிறதே அங்கிருந்து 500 யோஜனை மேலே சென்றதும் அங்கு குறைந்த பருமன் பகுதியில் நந்தனவனம் இருக்கிறது. அங்கிருந்து 62,500 யோஜனை மேலே சென்றதும் சௌமனஸ வன

சம்பந்தமான சமதளப்பகுதி வருகிறது. ஆனால் இதில் 11,000 யோஜனை வரை மேரு மலையின் பருமன் சமானமாக இருக்கிறது, அதற்கு மேலே 51,500 யோஜனை வரை கிரமமாக மலையின் பருமன் குறைந்து கொண்டே போகிறது.

சௌமனஸ வனத்திலிருந்து பாண்டுகவனம் 36,000 யோஜனை உயரத்தில் இருக்கிறது. ஆனாலும் இங்குகூட சௌமனச வனத்திலிருந்து 11,000 யோஜனை வரை மேரு மலையின் பருமன் சமானமாக இருக்கிறது, அதற்கு மேலே 25,000 யோஜனை வரை கிரமமாக மலையின் பருமன் குறைந்து கொண்டே போகிறது. இங்கு வரையப்பட்டுள்ள படத்தில் அதன் பருமன் அதே விகிதத்தில் (in the same propotion) வரையப்பட்டுள்ளது.

பாண்டுக வனத்தில் நான்கு திசைகளிலும் நான்கு ஜினாலயங்களும், நான்கு குறுக்கு திசைகளிலிலும் நான்கு பாறைகள் (சிலாக்கள்-மேடை போன்ற கல்லால் ஆன அமைப்பு) உள்ளன. அதில் ஈசான திசையில்-வடகிழக்கு மூலையில் பாண்டுகசிலா இருக்கிறது. இந்த பெயரை நீங்கள் பலமுறை கேட்டிருப்பீர்கள், பரத க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரராகப் போகும் குழந்தைக்கு ஜென்மாபிஷேகம் இந்த சிலாவில்தான் நிகழ்கிறது. அக்னி முலையில்-தென்கிழக்கு திசையில் பாண்டுகம்பலா சிலா இருக்கிறது, நைருத்யதிசையில்-குபேர மூலையில்-தென்மேற்கு திசையில் ரக்த சிலாவும், வாயு மூலையில்-வடமேற்கு மூலையில் ரக்தகம்பலா சிலாவும் இருக்கின்றன. பாண்டுகம்பலா சிலாவில் மேற்கு விதேகத்தில் பிறக்கும் தீர்த்தங்கரராகப் போகும் குழந்தைக்கு ஜென்மாபிஷேகம் நிகழ்கிறது. இரக்த சிலாவில் ஐராவத க்ஷேத்திரத்தில் பிறக்கும் தீர்த்தங்கரராகப் போகும் குழந்தைக்கு ஜென்மாபிஷேகம் நிகழ்கிறது. ரக்தகம்பலா சிலாவில் கிழக்கு விதேகத்தில் பிறக்கும் தீர்த்தங்கரராகப் போகும் குழந்தைக்கு ஜென்மாபிஷேகம் நிகழ்கிறது. இந்த எல்லா சிலாவும் 100 யோஜனை நீளமும், பாதிசந்திரன் வடிவிலும் இருக்கின்றன, நடுவில் 50 யோஜனை அகலமும் 8 யோஜனை பருமனும் கொண்டதாகும். படத்தில் பார்த்து இதை தெரிந்து கொள்ளுங்கள்.

ஒவ்வொரு சிலாவிலும் 3-3 சிம்மாசனங்கள் உள்ளன. நடுவில் உள்ள சிம்மாசனம் ஜிநேந்திரனாக ஆகப்போகும் குழந்தைக்கானதாகும். அதன் மேல்தான் ஜினேந்திர பாலகனை அமர வைக்கின்றனர். பாண்டுக சிலையின் தெற்கு பக்கத்தில் சௌதர்ம இந்திரனின் பத்ராசனமும், வடக்குப் பக்கத்தில் ஈசான இந்திரனின் பத்ராசனமும் இருக்கிறது. இந்த ஆசனங்கள் கிழக்கு திசையை நோக்கிய வண்ணம் இருக்கின்றன.

ஜினாபிஷேகப் படத்தை நீங்கள் பல ஜினாலயங்களின் சுவரில் வரையப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். தேவர்கள் அங்கு வந்து ஷீர சமுத்திர நீரால் 1,008 கலசங்களில் நிரப்பிக் கொண்டுவந்து அபிஷேகம்

செய்கின்றனர். இந்த கலசங்கள் 8-8 யோஜனை அளவு கொண்டதாகும். நீங்கள் கூட இங்கு ஜினாலயம் கட்டி இருக்கிறீர்கள், பகவானின் சிலைகளை ஸ்தாபனை செய்திருக்கிறீர்கள். அப்போது நீங்கள் ஜென்மாபிஷேகத்தை நேரடியாகப் பார்த்திருப்பீர்கள். பிரதமானுயோகத்தில் ஜென்மாபிஷேக வர்ணனையை படித்திருப்பீர்கள். தீர்த்தங்கரராகப்போகும் குழந்தை பிறந்ததும் சுவர்க்கத்திலிருந்து இந்திரன் வருகிறார்-ஐராவதம் என்ற யானையை அங்கு கொண்டுவருகிறார். சசி இந்திராணி ஜினமாதா அருகில் சென்று ஒரு மாயக்குழந்தையை அங்கு இருக்கும்படி செய்து தீர்த்தங்கரராகப்போகும் குழந்தையை எடுத்துக்கொண்டு வருகிறார். இந்திரன் தன் பரிவாரங்கள் சூழ ஜினபாலகனை மேரு மலைக்கு கொண்டு செல்கிறார். அங்கு ஆயிரக்கணக்கான தேவர்கள் ஜினபாலகனுக்கு ஜென்மாபிஷேகம் செய்கின்றனர்.

இத்தனை 1,008 கலசங்களின் நீரால் இன்று பிறந்த ஜினபாலகனின் மேல் அபிஷேகம் செய்வதால் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை, அவர் அதிக பலமுள்ள குழந்தையாக இருக்கிறார். அந்த பிறவியில் மோக்ஷமடையும் உயிர்களுக்கு வஜ்ரவிருஷபநாராச சம்ஹனன உடலமைப்பு இருக்கிறது. எந்த உபசர்க்கமும் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது. ஆனாலும் கூட முனி நிலையில் யாராவது உபசர்க்கம் கொடுக்கும்போது ஸ்ராவகர்களுக்கு அந்த உபசர்க்கத்தை போக்கவேண்டும் என்ற உணர்வு சகஜமாகவே வருகிறது. அவரை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு வராவிட்டால் அவர் ஸ்ராவகராக இருக்கமுடியாது. பார்ஸ்வநாத முனியின் மீது எப்போது உபசர்க்கம் நிகழ்ந்ததோ ஆலங்கட்டி மழை, தணல், கற்கள், தண்ணீர் இவைகள் மழை போல அவர்மேல் வீசப்பட்ட போது தரணேந்திரன் பத்மாவதி தேவ உயிர்களுக்குக்கூட அவருக்கு பாதுகாப்பு கொடுக்கும் நோக்கத்தோடு அங்கு வந்து அவர்களின் பணாமுடி மூலம் பாதுகாப்பு கவசங்களை அமைத்தனர்.

ஆனால் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? யார் பகவானுக்கு பாதுகாப்பு செய்தார்களோ அவர் நமக்கும் பாதுகாப்பு தருவார் என நினைக்கிறார்கள். பகவான் வீதராகியாவார், அவர் எதுவும் செய்யப்போவதில்லை, ஆகையால் நாம் இவர்களுக்கு பூஜை செய்தால் நம்மை ஞாபகம் வைத்துக்கொண்டு இருப்பார், நமக்கு சங்கடம் வரும்போது நமக்கு வந்து உதவுவார் என்ற உணர்வில் இப்படி எல்லாம் செய்கின்றனர்.

பாருங்கள், நாம் பல பிரதமானுயோக நூல்களைப் படிக்கிறோம். அதில்கூட சுவர்க்கத்தில் வாழும் தேவ-தேவிகள் வந்து ஞானிகளின் சங்கடங்களை போக்கும் கதைப் பகுதிகளை படிக்கிறோம், ஆனால் அதே கிரந்தங்களில் ஞானிகள் சுவர்க்கத்தில் வாழும் தேவ-தேவிகளுக்கு பூஜை செய்ததாகவோ, அவர்களுடைய பாதங்களை வணங்குவதாகவோ எங்கும் படித்ததில்லை. மற்ற மதத்தினர்களுக்கு தேவதைகள்-குலதேவதைகள் இருக்கிறார்கள்,

ஆகையால் நம்மைப் போன்றவர்கள் அவர்களைப் பார்த்து நம் சாசன தேவ-தேவிகளை குலதேவதைகளாக கற்பனை செய்து, பூஜிக்கத் தொடங்கி விட்டனர். ஆனால் நம்முடைய குழந்தைகள்கூட பகவான் வீதராகியும் சர்வக்ஞரும் ஆவார், பூஜை அப்படிப்பட்ட உண்மையான பகவானுக்கு, குருக்களுக்கு, சாஸ்திரங்களுக்கு செய்யவேண்டும் என்று தெரிந்து கொண்டுள்ளனர்.

கேள்வி: ஜினபாலகனுக்கு அபிஷேகம் செய்யும் ஷீர சமுத்திர நீர் வடிகட்டப்பட்டதா இல்லையா?

பதில்: நீரில் காணப்படும் திரஸ உயிர்கள்-ஜலசர உயிர்கள்-நீர்வாழ் உயிரினங்கள் 2½ தீபத்தில் உள்ள இரண்டு சமுத்திரங்களிலும் கடைசி சுயம்புரமண சமுத்திரத்திலும் தான் இருக்கின்றன, மற்ற சமுத்திர நீர்களில் திரஸ உயிர்கள்-ஜலசர உயிர்கள்-நீர்வாழ் உயிரினங்கள் இல்லை. அப்படிப்பட்ட தூய்மையான நீரைக் கொண்டே ஜினபாலகனுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. அது இயற்கையாகவே தூய்மையாக இருப்பதால் அதை வடிகட்டவோ சூடாக்கவோ தேவையில்லை.

இப்போது அத்த சிலாக்களை பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம். பாண்டுகசிலா தங்கமயமாக இருக்கிறது. பாண்டுகம்பலாசிலா வெள்ளி மயமாக இருக்கிறது, ரக்தசிலா பழுக்க சூடாக்கப்பட்ட பொன்போல இருக்கிறது. இரத்தகம்பலாசிலா சிகப்பாக-உதிரம் போன்ற நிறத்தில் இருக்கிறது.

பாண்டுக வனத்தின் நடுவில் சூலிகா அதாவது சிகரம் இருக்கிறது. இது வைடூர்யமணி வண்ணத்தில் (நீல நிறத்தில்), 40 யோஜனை உயரமும், கீழ்பகுதி 12 யோஜனை விட்டமும், மேல்பகுதி 4 யோஜனை விட்டமும் கொண்டதாக இந்த சிகரம் இருக்கிறது. சிகரத்தின் நான்கு பக்கத்திலும் 30-30 கோச விட்டம் கொண்ட பிரசாதங்கள் உள்ளன. கிழக்கு முதலான நான்கு திசைகளில் இரும்பு நிற, கருமை நிற, பச்சை நிற, தங்க நிற மாளிகைகள் உள்ளன, இங்கு லோகபால தேவர்கள் வசிக்கின்றனர். அந்த லோகபால தேவர்களின் பெயர்கள் முறையே சோம, யம, வருண, மற்றும் குபேர என்பதாகும். இவர்களில் சோம மற்றும் யம தேவர்களின் ஆயுள் 2½ பல்லியம், வருண மற்றும் குபேர தேவர்களின் ஆயுள் கொஞ்சம் குறைந்த 3 பல்லியமாகும். சோமன் சிகப்பு நிறமாகவும், யமன் கருப்பு நிறமாகவும், வருணன் கண்ணாடி நிறமாகவும், குபேரன் வெள்ளை நிறமாகவும் இருக்கின்றனர். இவர்கள் அனேக ஆபரணங்களுடன் காணப்படுகின்றனர். இவர்களுடைய சுவர்க்கங்களில் கூட குடியிருப்பு பவனங்கள் மற்றும் மேரு மலையின் பல இடங்களில் கூட பவனங்கள் உள்ளன. நீங்கள் கூட மும்மையில் வசிக்கிறீர்கள், இங்கு தேவலாலி போன்ற இடங்களிலும் பங்களாக்கள் வைத்திருக்கிறீர்கள் அல்லவா அதுபோல அவர்கள் வாழ பல

பவனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு லோகபாலர்களுக்கும் 3½கோடி மலைவாழ் கனியாக்கள் அதாவது வியந்தர தேவாங்கனைகள் உள்ளனர்.

மேரு மலை கீழிருந்து 62,000 யோஜனைவரை சுவர்ணமயமாக இருக்கிறது, மற்றும் அனேகவித நிறங்கள் கொண்ட பலவித இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு மேலே சுவர்ணமயமாக மட்டுமே இருக்கிறது-தங்கத்தாலேயே ஆனதாக இருக்கிறது. தங்கத்தின் பெயரை கேட்ட மாத்திரத்திலேயே நம் கண்கள் ஒளிவிடுகின்றன, மேரு எங்கிருக்கிறது, அதை தேடி கண்டுபிடக்க வேண்டும் என்று கனவு காண்கிறீர்கள், இல்லாயா? ஜினாலங்களின் வர்ணனையை என்னவோ பெரிய வீதராகிபோல இருந்து கேட்டுக் கொண்டிருந்தீர்கள்!

இதுவரை நாம் சுதர்சன மேருவின் வர்ணனையைப் பார்த்தோம். மற்ற நான்கு மேருக்களும் இதைவிட உயரத்தில் குறைந்தவை, ஆனால் மற்ற விதத்தில் சமமாகவே இருக்கின்றன. அவைகளின் உயரம் 85,000 யோஜனையாகும். 1,000 யோஜனை பூமிக்கு அடியில் அடித்தளமாக இருக்கிறது. 84,000 யோஜனை பூமிக்கு மேலே உள்ளது. இவைகளில்கூட பத்ரசாலவனமும், பூமிக்கு மேல் 500 யோஜனை மேலே நந்தவனவனமும் உள்ளன. ஆனால் நந்தவனவனத்திலிருந்து 55,500 யோஜனைக்கு மேலே சௌமனசவனம் உள்ளது, அது சுமேருவில் 62,500 யோஜனைக்கு மேலே இருக்கிறது. அங்கிருந்து பாண்டுகவனம் 28,000 யோஜனைக்கு மேலே இருக்கிறது, அது சுமேருவில் 36,000 யோஜனைக்கு மேலே இருக்கிறது. இவைகளில்கூட ஒவ்வொன்றிலும் 16-16 இயற்கை ஜினாலயங்கள்-அக்ருத்திரிம சைத்யாலயங்கள் உள்ளன.

இவ்வாறு ஐந்து மேருவிலும் 16X5=80 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. பஞ்சமேருவுக்கு பூஜை செய்யும்போது இதன் அமைப்பை நினைவில் கொண்டுவந்து உணர்வுப் பூர்வமாக அர்க்கியம் வைக்கவும். முழு ஜெயமாலாவை பாடிக் காட்டுகிறேன், புத்தகத்திலும் இதை கொடுக்கிறேன்-

பிரதம ஸுதர்சன ஸ்வாமி, விஜய அசல மந்திர கஹா |
வித்யுன்மாலி நாம, பஞ்சமேரு ஜக மே பிரகட ||
பிரதம ஸுதர்சன மேரு விராஜை, பத்ரசால வன பூபர சாஜை |
சைதாலய சாரோ ஸுககாரி, மனவசதன வந்தனா ஹமாரீ ||
உபர பஞ்சதகபர சோஹை, நந்தனவன தேகத மன மோஹை |
சைதாலய சாரோ ஸுககாரி, மனவசதன வந்தனா ஹமாரீ ||
ஸாடே பாஃஸட ஸஹஸ ஊஞ்சாயி, வன ஸுமனஸ ஸோபே அதிகாயி |
சைதாலய சாரோ ஸுககாரி, மனவசதன வந்தனா ஹமாரீ ||
ஊஞ்சா ஜோஜன ஸஹஸ சத்தீஸம், பான்டுகவன ஸோஹை கிரிஸீஸம் |
சைதாலய சாரோ ஸுககாரி, மனவசதன வந்தனா ஹமாரீ ||

சாரோ மேரு ஸமான பகாநை, பூஃபர பத்ரஸால சஹு ஜாநை |
சைதாலய ஸோலஹ ஸுககாரி, மனவசனதன வந்தனா ஹமாரீ ||
ஊஞ்சே பான்ச சதக பர பாஃகே, சாரோ நந்தனவன அபிஃலாகே |
சைதாலய ஸோலஹ ஸுககாரி, மனவசனதன வந்தனா ஹமாரீ ||
ஸாடே பசபன ஸஹஸ உதங்கா, வன ஸோமனஸ சார பஹுரங்கா |
சைதாலய ஸோலஹ ஸுககாரி, மனவசனதன வந்தனா ஹமாரீ ||
உச்ச அடாஇஸ ஸஹஸ பதாயே, பான்டுக சாரோ வன சுபஃ காயே |
சைதாலய ஸோலஹ ஸுககாரி, மனவசனதன வந்தனா ஹமாரீ ||
சுரநர சாரன வந்தன ஆவைன், ஸோ சோபாஃ ஹம கிஹ முக காஃவை |
சைதாலய அஸ்ஸீ ஸுககாரி, மனவசனதன வந்தனா ஹமாரீ ||

தோஹா : பஞ்சமேரு கீ ஆரதி, படை, ஸுநை ஜோ கோய |
'த்யானத' பஃல ஜாநை பிரபு, துரத மஹாஸுக ஹோய ||

சீக்கிரமே மஹாசுகத்தை அடைவார்கள் என்று இங்கு எழுதப்பட்டு இருக்கிறது. இந்த மேருமலைகள் பற்றி, அங்குள்ள வனங்கள், வனவேதிகள், தோரணங்கள், குளங்கள் முதலானவைகளைப் பற்றி வர்ணனைகள் சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்போது நாம் நந்தீஸ்வர தீபம் சம்பந்தமாகப் பார்க்கலாம். நந்தீஸ்வர தீபம் என்ற பெயரை பலமுறை கேட்டிருக்கிறோம். ஆஷ்டானிக காலத்தில் நந்தீஸ்வரபூஜை, விதானம் கூட செய்கிறோம். நடு உலகில் அசங்க்யாத தீபங்களும் சமுத்திரங்களும் இருக்கின்றன என்று பார்த்திருக்கிறோம். ஜம்பூதீபத்தில் துவங்கி இந்த தீபம் எட்டாவது தீபமாக இருக்கிறது. அதாவது 7 தீபங்கள் 7 சமுத்திரங்கள் போனதும் 15-ஆவது தீபமாக நந்தீஸ்வர தீபம் வருகிறது. அதாவது தீபசமுத்திரங்கள் முறையே முதல் 1 லட்சம், இரண்டாவது 2 லட்சம், மூன்றாவது 4 லட்சம், நான்காவது 8 லட்சம், ஐந்தாவது 16 லட்சம், ஆறாவது 32 லட்சம், ஏழாவது 64 லட்சம், எட்டாவது 128 லட்சம், ஒன்பதாவது 256 லட்சம், பத்தாவது 512 லட்சம், பதினொன்றாவது 1,024 லட்சம், பன்னிரண்டாவது 2,048 லட்சம், பதிமூன்றாவது 4,096 லட்சம், பதிநான்காவது 8,192 லட்சம் மற்றும் பதினைந்தாவது 16,384 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்டதாக இருக்கின்றன. வேறு விதமாக சொல்ல வேண்டு மென்றால் நந்தீஸ்வர தீபம் 163 கோடியே 84 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்டதாக இருக்கிறது. இந்த அளவை நீங்கள் நந்தீஸ்வர தீப பூஜையில் கேட்டிருப்பீர்கள்.

ஏக சௌ த்ரஸட கோடி ஜோஜன மஹா,
லாக சௌராசியா ஏக திச மே லஹா |

அட்டமோ தீப நந்தீஸ்வரம் பாஃஸ்வரம்,

18.பஞ்சமேரு

பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||

பௌன என்பதன் பொருள் பவனம் அதாவது ஜினாலயம் ஆகும். அது இந்த தீபத்தின் நான்கு திசைகளிலும் 13-13 அக்ருத்திரிம ஜினாலயங்கள்- இயற்கையாக அமைந்துள்ள ஜினாலயங்கள் உள்ளன. நாம் அங்கு போக முடியாது, ஆனால் இங்கு அமர்ந்த படியே அவைகளை அறிய முடியும் - ஒவ்வொரு ஜினாலயத்திலும் அமைந்துள்ள 108-108 ஜினப்பிரதிமைகளுக்கு இங்கிருந்தே உணர்வுப்பூர்வமாக பாஃவநமஸ்காரம்-உணர்வுபூர்வ வந்தனை செய்யலாம். நந்தீஸ்வர தீபத்தைப்பற்றி மேலும் விரிவாக அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.

விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 18-ஆம் தீர்த்தங்கர் ஸ்ரீ மஹாபத்ர பகவானுக்கு ஜே! சொல்லுங்கள்

19. நந்தீஸ்வர தீபம்

ஆச்சார்ய ஸ்ரீ நேமிசந்திரரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலின் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பைப் பார்த்துக்கொண்டு வருகிறோம். தீபங்களில் எட்டாவது தீபம், தீப சமுத்திரங்களில் பதினைந்தாவதாக இருப்பது நந்தீஸ்வர தீபம். நாம் இத்தனை முறை இரண்டு மடங்கு-இரண்டு மடங்கு செய்து நாம் சோர்ந்து விட்டோம். அதனால் இப்போது ஒரு சிறிய கரணானுயோக சூத்திரத்தின் மூலம் நாம் இதனுடைய விஸ்தீரணத்தை கணக்கிடும் முறையை உங்களுக்கு கூறுகிறேன்.

ஒரு லட்சத்தில் துவங்கி, இரண்டாவது 2 லட்சம், மூன்றாவது 4 லட்சம், நான்காவது 8 லட்சம். அதாவது இரண்டாவதை கண்டுபிடிக்க அதை 2-ஆல் பெருக்கினோம், மூன்றாவதை கண்டுபிடிக்க 2-ஐ 2-முறை பெருக்கினோம், நான்காவதை கண்டுபிடிக்க 2-ஐ 3-முறை பெருக்கினோம். அதனால் 15-ஆவதை கண்டுபிடிக்க 2 என்ற எண்ணை 14 முறை எழுதி அவைகளை பெருக்க வேண்டும். கரணானுயோக மொழியில் சொல்ல வேண்டுமென்றால் 14 எதன் 'அர்த்தசேத்'-ஓ அந்த எண்ணிக்கை 16,384 ஆகும், அதுவே நமக்கு வேண்டிய அளவாகும்.

'அர்த்தசேத்' என்று எதைச் சொல்கிறோம்? நவீன கணிதத்தில் லாக் 2 (log 2) என்று சொல்வார்கள். ஒரு எண்ணை இரண்டால் எத்தனைமுறை வகுக்க முடியுமோ அந்த எண்ணிக்கையை அந்த பெரிய எண்ணின் 'அர்த்தசேத்' என்று சொல்கின்றனர். உதாரணமாக 16 என்ற எண்ணை முதல் முறையாக 2-ஆல் வகுக்க 8 வருகிறது, அதை இரண்டாவது முறையாக 2-ஆல் வகுக்க 4 வருகிறது, அதை மூன்றாவது முறையாக 2-ஆல் வகுக்க 2 வருகிறது, அதை நான்காவது முறையாக 2-ஆல் வகுக்க 1 வருகிறது. அதாவது 16 என்ற எண்ணை நான்கு முறை 2-ஆல் வகுக்க 1 வருகிறது. வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2X2X2X2=16. அதனால் 16-ன் 'அர்த்தசேத்' நான்கு. நாம் 16-ஐ வர்க்கம் செய்தால் (16-ஐ 16-ஆல் பெருக்கினால்-if we squre the number 16) 256 வருகிறது. இந்த 256-ன் 'அர்த்தசேத்' நான்கின் இரண்டு மடங்கு அதாவது 8 ஆகும். நாம் 256-ஐ வர்க்கம் 65536-ஐ பார்த்தால் அதன் 'அர்த்தசேத்' 16 வருகிறது, நமக்கு 14-ன் 'அர்த்தசேத்' வேண்டுமாக இருந்தது, 16-2=14 வருகிறது. ஆகையால் 2 எதன் 'அர்த்தசேத்'-ஓ அந்த 4 என்ற எண்ணால் 65536-ஐ வகுத்தால் 65536/4=16384 வருகிறது. இதுதான் நந்தீஸ்வர தீபத்தின் விஸ்தீரணமாகும்-ஒரு திசையின் அகலமாகும். இது நடுவிலிருந்து இது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற அளவு இல்லை. அதை கண்டுபிடிக்கக்கூட கரணானுயோகத்தில் சூத்திரம் இருக்கிறது.

அதைப்பற்றி கணக்கை இப்போது மேலும் பார்க்காமல் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய மற்ற விஷயத்திற்குப் போகலாம்.

இந்த 15-ஆவது வரை எந்தெந்த தீப சமுத்திரங்கள் உள்ளன என்பதைப் பார்க்கலாம். அவைகள் வரிசையாக 1.ஜம்பூதீபம், 2.லவணசமுத்திரம், 3.தாதகிகண்டம், 4.காலோததி சமுத்திரம், 5.புஷ்கரவர தீபம், 6.புஷ்கரவர சமுத்திரம், 7.வருணீவர தீபம், 8.வருணீவர சமுத்திரம், 9.க்ஷீரவர தீபம், 10.க்ஷீரவர சமுத்திரம், 11.க்ருதவர தீபம், 12.க்ருதவர சமுத்திரம், 13.க்ஷைத்ரவர தீபம், 14.க்ஷைத்ரவர சமுத்திரம், 15.நந்தீஸ்வர தீபம் முதலியன வாகும்.

வருடத்தில் மூன்றுமுறை மூன்று ஆஷ்டானிக பருவங்களில் நாம் நந்தீஸ்வர தீபத்தில் உள்ள இயற்கை ஜினாலயங்களுக்கு பூஜை செய்கிறோம். “கார்த்திக பாஃகுன ஸாட கே அந்த ஆட தின மான்கி” என்று நந்தீஸ்வர பூஜையில் வருகிறது. இதன் பொருள் கார்த்திகை, பாஃல்குன மற்றும் ஆஷாட மாதங்களின் வளர்பிறையில் அஷ்டமியிலிருந்து பௌர்ணமி வரை எட்டு தினங்கள். இதையே மாதங்களின் கடைசி தினம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு மராத்தி மற்றும் குஜராத்தி பேசுபவர்களின் முகத்தில் கேள்விக்குறி இருப்பதை பார்க்கிறேன். அவர்கள் அமாவாசையைத்தான் மாதத்தின் கடைசி நாளாக எண்ணுகிறார்கள். கொஞ்சம் கேளுங்கள், ஹிந்தி பேசுபவர்கள் பௌர்ணமியை மாதத்தின் கடைசி நாளாக எண்ணுகிறார்கள், அவர்களுக்கு புது மாதம் தேய்பிறையிலிருந்து துவங்குகிறது. மராத்தி மற்றும் குஜராத்தி பேசுபவர்கள் அமாவாசையைத்தான் மாதத்தின் கடைசி நாளாக நம்புகிறார்கள், அவர்களுக்கு புது மாதம் வளர்பிறையிலிருந்து துவங்குகிறது. ஒவ்வொரு மாதத்தின் வளர்பிறை ஹிந்தி மற்றும் குஜராத்தி காலண்டரில் ஒரே மாதிரியே இருக்கிறது; உதாரணமாக சைத்ர சுக்ல1-ல் இருந்து சைத்ர சுக்ல பௌர்ணமி வரை. ஆனால் குஜராத்தி காலண்டரில் சைத்ர க்ருஷ்ண 1-ல் இருந்து க்ருஷ்ண 15 (அமாவாசை) என எழுதப் பட்டிருக்கிறது அங்கு ஹிந்தி காலண்டரில் சுக்ல 1-ல் இருந்து 15 தினங்களுக்கு இருவருக்கும் சமமாக இருக்கிறது. ஆனால் குஜராத்தி-மராட்டி வைசாக கிருஷ்ண என்று சொல்லும்போது, ஹிந்தி ஜ்யேஷ்ட கிருஷ்ண என்று சொல்கின்றனர்.

தீபாவளியில் மஹாவீரர் நிர்வாணோத்ஸவத்திற்கு ஹிந்தி பேசுபவர்கள் கார்த்திகை கிருஷ்ண அமாவாசை என்று சொல்கின்றனர், குஜராத்தி-மராட்டி பேசுபவர்கள் அச்வின் கிருஷ்ண அமாவாசை என்று சொல்கின்றனர். நம்முடைய பலவித பூஜைகள் ஹிந்தி கவிஞர்களால் எழுதப்பட்டவை, நாம் தீர்த்தங்கரரின் கல்யாணங்களுக்கு அர்க்கியம் வைக்கும்போது ஹிந்தி

நாள்காட்டியை-கேலன்டரை பார்க்கும்போதான் இந்த வேறுபாடு நமக்குத் தெரிய வருகிறது. இது நம்மில் பலருக்குத் தெரியாது.

இந்த ஆஷ்டானிக பருவத்தில் சௌதர்மன் முதலான 12 கல்ப இந்திரர்கள், மற்ற கல்பவாசி தேவர்கள், ஜோதிஷி, வியந்தர, பவனவாசி தேவர்கள் நந்தீஸ்வர தீபத்திற்குச் செல்கின்றனர். அவர்கள் எல்லோரும் அவரவர்களுடைய வாகனங்களில் ஏறிச் செல்கின்றனர். அவர்களைப்பற்றி பின்னர் பார்க்கலாம், அதற்கு முன்னர் அங்கு மலைகளில் உள்ள 52 ஜினாலயங்கள் எங்கே உள்ளன என்பதைப் பார்க்கலாம்.

நந்தீஸ்வர தீபத்தின் கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு திசையில் 13-13 மலைகள் உள்ளன, அந்த மலைகளில் இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. இவைகளை நீங்கள் படம் 11-ல் பாருங்கள்.

படத்தில் பெரிய மஞ்சள் நிறத்தில் நந்தீஸ்வர தீபம் காட்டப்பட்டுள்ளது, அதற்கு உள்ளே ஏழு தீபங்களும் ஏழு சமுத்திரங்களும் உள்ளன. அங்கு 1,63,84,00,000 யோஜனை இதன் அகலமாகும். ஒவ்வொரு திசையிலும் உள்ள அமைப்புகள் மேலே இருந்து பார்த்தால் எப்படி தெரியுமோ அப்படி காட்டப்பட்டுள்ளது. அந்த தீவின் நடுவில் நான்கு இடங்களில் கருப்பு நிற வட்டமாக காட்டப்பட்டிருப்பது அஞ்சனகிரி மலையாகும். அவை 84,000 யோஜனை உயரமும், 84,000 யோஜனை விட்டமும் கொண்டது. பூமிக்கு அடியில் 1,000 யோஜனை அடித்தளம் கொண்டது. இது கன-உருளை (Solid cylinder-cylindrical shape) வடிவில் உள்ளது, அதாவது இதன் அடிப்பகுதி, நடுப்பகுதி, மேல்பகுதி எல்லாம் சம அளவில் இருக்கின்றன. இதன் உச்சியில் சிகரம் போன்ற அமைப்பு இல்லை. இது கருமை நிறமான மலையாக இருப்பதால் இதை அஞ்சனகிரி என்று சொல்கின்றனர். ஒவ்வொரு அஞ்சனகிரியிலும் ஒரு இயற்கை ஜினாலயம் உள்ளது.

அஞ்சனகிரிக்கு நான்கு பக்கத்திலும் 50,000-50,000 யோஜனை இடைவெளிக்கு வெளியே வனங்கள் இருக்கின்றன. இந்த வனங்கள் 50,000-50,000 யோஜனை அகலமும் 1,00,000-1,00,000 யோஜனை நீளம் கொண்டவைகளாக இருக்கின்றன. அந்த வனங்களின் வெளிப்பக்கத்தில் அதாவது அஞ்சனகிரியிலிருந்து ஒரு லட்சம் யோஜனை தூரத்தில் நான்கு திசைகளிலும் சதுர வடிவில் 1-1 லட்சம் யோஜனை விஸ்தீரணம் கொண்ட நான்கு ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளை வாபி அல்லது வாபிகா என்று சொல்கின்றனர். தூய்மையான நீரால் நிரம்பிய இந்த வாபிகளின் மத்தியில் ஒரு-ஒரு ததிமுக மலை இருக்கிறது. இந்த ததிமுக மலையும் உருளை வடிவில் 10,000 யோஜனை உயரமும், 10,000 யோஜனை விஸ்தீரணமும் கொண்டதாக உள்ளன. இதன் அடிதளம் 1,000 யோஜனை கொண்டது. இந்த ததிமுக மலைகள் வெள்ளை நிறம் கொண்டவைகளாக இருக்கின்றன. இந்த

ஒவ்வொரு மலைகளின் உச்சியில் கூட ஒவ்வொரு இயற்கை ஜினாலயம் உள்ளது.

ஒவ்வொரு வாபிகாவும் ஒரு லட்சம் நீள அகலம் கொண்ட அதாவது சதுர வடிவம் கொண்டவை மற்றும் அதன் நான்கு திசைகளிலும் 1-1 என நான்கு வனங்கள் உள்ளன. இதன் நீளம் வாபிக்கு சமமாக ஒரு லட்சம் யோஜனையும் 50,000 யோஜனை அகலமும் கொண்டவை. படத்தில் வாபி நீல நிறத்தில் வனம் பச்சை நிறத்திலும் தனியாக காட்டப்பட்டுள்ளது. இந்த வனங்களின் பெயர்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன- கிழக்கில் அசோக வனமும், தெற்கில் ஸப்தபர்ண வனமும், மேற்கில் சம்பக வனமும், வடக்கில் ஆம்ர வனமும் உள்ளன.

இப்போது உங்கள் நந்தீஸ்வர படத்தில் கிழக்கு பக்க அமைப்பை பார்க்கலாம். நடுவில் ஒரு அஞ்சனகிரி, அதன் நான்கு பக்கத்திலும் 4 வாபிகாக்கள் அதன் மத்தியில் 4 ததிமுகங்கள் உள்ளன. அஞ்சன கிரிக்கு கிழக்கில் உள்ள வாபி மற்றும் ததிமுகமும் இருக்கிறதே அதன் ஈசான மூலையில் ஒன்றும் மற்றும் அக்னி மூலையில் ஒன்றும் என 2 ரதிகர மலைகள் உள்ளன. படத்தில் அவை சிகப்பு நிற புள்ளிகளாக காட்டப்பட்டுள்ளன. அஞ்சனகிரிக்கு தெற்கில் இருக்கும் வாபி மற்றும் ததிமுகமும் உள்ளனவே அதன் அக்னி மூலையில் ஒன்றும் மற்றும் நைருத்ய(குபேர) மூலையில் ஒன்றும் என 2 ரதிகர மலைகள் உள்ளன. அஞ்சனகிரிக்கு மேற்கில் இருக்கும் வாபி மற்றும் ததிமுகமும் உள்ளனவே அதன் நைருத்ய(குபேர) மூலையில் ஒன்றும் மற்றும் வாயு மூலையில் ஒன்றும் என 2 ரதிகர மலைகள் உள்ளன. அஞ்சனகிரிக்கு வடக்கில் இருக்கும் வாபி மற்றும் ததிமுகமும் உள்ளனவே அதன் வாயு மூலையில் ஒன்றும் மற்றும் ஈசான மூலையில் ஒன்றும் என 2 ரதிகர மலைகள் உள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு ததிமுகத்தின் வெளியில் குறுக்கு திசைகளில் 2-2 ரதிகரங்கள் உள்ளன. இப்படி ஒவ்வொரு அஞ்சனகிரி சம்பந்த 4 ததிமுகங்களும், 8 ரதிகரங்களும் என எல்லாம் சேர்த்து 13 மலைகள் உள்ளன.

ரதிகர மலைகள் சிகப்பு நிறம் கொண்டவைகளாகும். அவைகள் கூட உருளை வடிவில் உள்ளன. 1,000 யோஜனை உயரமும் 1,000 யோஜனை விட்டமும் கொண்ட அவைகளின் அடிதளம் 250 யோஜனை கொண்டதாகும். ஆச்சார்யர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மூலை திசைகளில் 4 ரதிகரங்கள் உள்ளன, ஆனால் அவைகளில் வெளிப்பக்க மூல திசையில் உள்ள ரதிகரங்களில் மட்டுமே இயற்கை ஜினாலயங்கள் இருக்கின்றன. நாம் எங்கு இயற்கை ஜினாலயங்கள் உள்ளனவோ அந்த மலைகளைப்பற்றி மட்டுமே இங்கு சர்ச்சை செய்கிறோம். ஆகையால் நந்தீஸ்வர தீபத்தில்

கிழக்கு முதலான நான்கு திசைகளில் ஒவ்வொரு திசையிலும் உள்ள 13 மலைகள் மற்றும் அவைகளின் உச்சியில் உள்ள 13 இயற்கை ஜினாலயங்கள் பற்றிய வர்ணனைகளை காண்கிறோம். மொத்தம் 52 அக்ருத்திம ஜினாலயங்கள் நந்தீஸ்வர தீபத்தில் உள்ளன.

நாம் பூஜையில் அர்க்கியம் வைக்கும்போது "ஓம் ஹ்ரீம் ஸ்ரீ நந்தீஸ்வர தீபே பூர்வ பச்சிம தக்ஷிணோத்தரே த்வீப்ப ஞ்ஞாசத் ஜினாலயஸ்த ஜினபிரதிமாப்யோ அர்க்கியம் நிர்வபாமிதி ஸ்வாஹா" இவ்வாறு சொல்கிறோம் அல்லவா! இதுவரை நாம் 52 ஜினாலயங்களை மட்டுமே பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு ஜினாலயத்திலும் 108-108 ஜினபிரதிமைகள் உள்ளன. மொத்தம் 52X108=5,616 ஜினபிரதிமைகள் உள்ளன. அவைகள் எல்லாம் இரத்தினமயமானவை - இரத்தினம் பதிக்கப்பட்டவைகள் அல்ல - யாராலும் செய்யப்பட்டதுமில்லை - சாஸ்வதமாகும், நாம் எல்லோரும்கூட சாஸ்வதமாவோம் - அக்ருத்திமமாவோம்; இந்த பெருமையே ஏன் வருவதில்லை?

ஆஷ்டானிக பர்வத்தில் கல்பவாசி, வியந்தரர், ஜோதிஷி, பவனவாசி இந்திரர்கள் மற்றும் பிற தேவர்கள், அவர்களுடைய பரிவாரங்களுடன் இங்கு வருகின்றனர். கல்பவாசியின் சௌதர்மன் முதலான 12 இந்திரர்கள் அவரவர்களுடைய வாகனங்களில் வருகின்றனர். அவர்கள் வாழுமிடங்களை கூட விமானம் என்று சொல்கிறோம். இங்கு இவர்களுடைய வாகனங்கள் வரிசையாக - யானை, குதிரை, சிங்கம், நாரைப்பறவை, காக்கை, அன்னப்பறவை, சக்ரவாஹப்பறவை, கருடன், மீன், மயில், தாமரை, புஷ்பக விமானம் முதலியனவாகும். அங்கு விலங்குகள் வாகனங்களாக இல்லை, வாகன ஜாதி தேவர்கள் விக்ரியா சக்தி மூலம் இந்த வடிவங்களை ஏற்கின்றனர். இந்த வாகனங்களைக்கூட விமானம் என்று சொல்கின்றனர். இவைகளில் ஏறி சௌதர்மன் முதலான தேவர்கள் அவர்களுடைய பரிவாரங்களுடன் கல்பவிருக்ஷங்களிலிருந்து பெறப்பட்ட திரவியங்கள்-பூக்கள்-பழங்கள் முதலான பூஜை திரவியங்களை கையில் ஏந்திக்கொண்டு வருகின்றனர். இந்த இந்திரன் முதலான தேவர்கள் நல்ல கவர்ச்சியான ஆபரணங்களை அணிந்துகொண்டு வருகின்றனர். சாமரை, இராணுவம் முதலானவைகளுடனும் வாத்திய முழக்கங்களுடனும் வருகின்றனர். அங்கு எட்டு தினங்கள் இந்திரத்வஜ பூஜை செய்கின்றனர். அங்கு இரவு பகல் என்ற வித்யாசமில்லை. விலங்குகளின் ஜெகன்ய போகபூமியாக இருப்பதால் அங்குகூட கல்ப விருக்ஷங்களால் பிரகாசம் எப்போதும் இருக்கிறது. நம் ஒரு நாள் இரவு-பகலில் 8 பிரஹர்(பஹர்- மூன்று மணி நேரத்தை ஒரு பஹர் என்று சொல்கின்றனர்) இருக்கிறது. இந்த எல்லா தேவர்களும் 8 தினங்கள்வரை அஷ்டமியிலிருந்து பௌர்ணமி வரை இடைவிடாது பூஜை செய்கின்றனர். ஒவ்வொரு திசையில் இரண்டு பஹர் வரை பூஜை செய்துவிட்டு பிறகு வேறு திசைக்கு சென்று பூஜை செய்கின்றனர். கிழக்கில் இருப்பவர் தெற்கு

திசைக்கு செல்கின்றனர், தெற்கில் இருப்பவர் மேற்குக்கும், மேற்கிலிருப்பவர் வடக்கிற்கும், வடக்கில் இருப்பவர் கிழக்கிற்கும் சென்று பூஜை செய்கின்றனர். பிறகு இரண்டு பஹர் கழித்து இதே வரிசையில் மற்ற திசைகளுக்கு சென்று பூஜை செய்கின்றனர். இவ்வாறு வலம்வந்து மஹோத்சவத்துடன் கூடிய ஜினபூஜை செய்கின்றனர். துவக்கத்தில் கிழக்கில் கல்பவாசிகளும், தெற்கில் பவனவாசிகளும், மேற்கில் வியந்தரர்களும், வடக்கில் ஜோதிஷிகளும் பூஜை செய்கின்றனர். அவர்களின் இந்திரன் வரிசையாக சௌதர்ம ஈசான முதலான சமரேந்திர வைரோசன முதலான கிம்புருஷ முதலான, மற்றும் சந்திரன் முதலானவர்கள் ஆவர். வலம் வந்தபடி தொடர்ந்து எட்டு தினங்கள் 24 மணி நேரமும் பூஜை நிகழ்கிறது. அங்கு இரவு பகல் மாற்றமில்லை. ஆனாலும் இங்கு நம் பூமியில் இரவில் நாம் பூஜை செய்வதில்லை. இரவில் சுவாத்யாயம், தியானம், தத்துவ சிந்தனை செய்ய இங்கும் தடை இல்லை.

கேள்வி: நாம் இங்கு பழம்-பூக்கள் (உயிருள்ளவை என்பதால்) பூஜையில் உபயோகிப்பதில்லை, தேவர்கள் அவைகளை புஜையில் உபயோகிக்கலாமா?

பதில்: இந்திரர்கள் கொண்டுவரும் பூக்களும் பழங்களும் கல்பவிருக்ஷத்திலிருந்து பெறப்பட திரவியங்கள்-அவைகள் இரத்தினமயமாக இருப்பவை-அச்சித்தமானவை, சச்சிதமில்லை. நாம் அர்ப்பணிப்பவை தூய்மை செய்யப்பட்ட (பிராசுக்) தாகவும், ஹிம்சை அற்றதாகவும் இருக்க வேண்டும். ஒரு சில தவறான பழக்கங்கள் நம் மக்களிடையே வந்துவிட்டது, நாம்தான் அது சரியா தவறா என்று முடிவு செய்து, சரியான திரவியங்களை அங்கீகாரம் செய்து, ஜினபூஜையில் உபயோகிக்க வேண்டும்.

மலைகளின் மேல் இருக்கும் இந்த ஜினாலயங்களில் மூன்று மணிமயமான கோட்டை-மதில் சுவர்கள் உள்ளன, அவைகள் நான்கு பக்கமும் வாயில்கள் கொண்டவை. இந்த வாயில்களில் இருந்து உள்ளேபோக வழி இருக்கிறது-அதை வீதி ஏன்று சொல்கின்றனர். ஒவ்வொரு வீதியிலும் ஒரு மானஸ்தம்பமும் 9-9 ஸ்தூபிகள் உள்ளன. மூன்றாவது மதிலுக்கும் இரண்டாவது மதிலுக்கும் இடையில் வனம் இருக்கிறது, இரண்டாவது மதிலுக்கும் முதல் மதிலுக்கும் இடையில் கொடியுடன் கூடிய கம்பங்கள் உள்ளன. உள் மதிலில் சைத்யபூமி உள்ளது, அதன் மத்தியில் இயற்கை ஜினாலயம் அமைந்துள்ளது.

இந்த எல்லா அக்ருத்திம சைத்யாலயங்களின் வடிவ அமைப்பை நாம் பிறகு பார்க்கலாம். இந்த நான்கு மலைகள், ஜினாலயங்கள் மற்றும் அனைத்து அமைப்புகளும் வெவ்வேறு ஜாதி வியந்தரர்கள் வாழுமிடங்களாகவும் இருக்கின்றன. இப்போது நாம் நந்தீஸ்வர பூஜையின் ஜெயமாலாவை பார்க்கலாம். இதில் நான்கு திசைகளிலும் உள்ள நான்கு அஞ்சனகிரி, ஒவ்வொரு திசையிலும் 4-4 என உள்ள 16 ததிமுகங்கள், ஒவ்வொரு திசையிலும் உள்ள 8-8 என உள்ள 32 ரதிகரங்கள் எல்லாம் சேர்த்து 52

19.நந்தீஸ்வர தீபம்

ஜினாலயங்களின் வர்ணனை மிகவும் உணர்வுப் பூர்வமான மொழியில்-இராகத்தில் எழுபப் பட்டுள்ளது.

ஜெயமாலா

தோஹா: கார்த்திக பாஃகுன ஸாடகே, அந்த ஆட தின மாஹிம் |
நந்தீஸ்வர ஸுர ஜாத ஹை, ஹம் பூஜே இஹ டாஹிம் ||1||

ஏக-ஸௌ த்ரேஸட கோடி ஜோஜன் மஹா |
லாக சௌராஸியா ஏக திச மே லஹா ||
அட்டமோ தீப நந்தீஸ்வரம் பாஃஸ்வரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||2||

சார திசா சார அஞ்ஜனகிரி ராஜஹிம் |
ஸஹஸ சௌராஸியா ஏக திசா சாஜஹீ ||
டோலஸம கோல உபர தலே சுந்தரம்
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||3||

ஏக இன சார திசா சார சுப பாவரி |
ஏக ஏக லாக ஜோஜன அமல ஜலபஃரி ||
சஹுதிசா சார வன லாக ஜோஜன வரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||4||

ஸோல வாபின மதி ஸோல கிரி ததிமுகம் |
ஸஹஸ தசா மஹா ஜோஜன லகத ஹீ ஸுகம் ||
பாவரிகோன தோ மாஹிம் தோ ரதிகரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||5||

சௌல பத்தீஸ் இக ஸஹஸ ஜோஜன கஹே |
சார ஸோலை மிலைன் ஸர்வ பாவன லஹே ||
ஏக இக ஸீஸ பர ஏக ஜின மந்திரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||6||

பிம்ப ஆட ஏகஸௌ ரத்னமயீ ஸோஹ ஹீ |
தேவதேவி ஸரவ நயநமனமோஹ்ஹீ ||
பான்சசௌ தனுஷ தன பத்ம ஆசன பரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||7||

லால நக முக நயன ஸ்யாம அரு ஸ்வேத ஹை |
ஸ்யாமரங்க போஹ ஸிரகேச சவி தேத ஹை ||

வசன போலத மனோ ஹஸத காலுஷ ஹரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||7||

கோடி சாசி-பானதுதி தேஜ சிப ஜாத ஹை |
மஹா வைராக பரிணம டஹராத ஹை ||
பயன நஹீ கஹைன் லகி ஹோத ஸம்யக் தரம் |
பௌன பாவன்ன பிரதிமா நமோ ஸுககரம் ||7||

ஸோரடா - நந்தீஸ்வர ஜினதாம, பிரதிமா மஹிமா கோ கஹை |
'த்யானத' லீனோ நாம, யஹீ பஃகதி சிவஸுக கரைன் ||

கடைசியில் என்ன எழுதியிருக்கிறார் பாருங்கள். அந்த ஜினபிரதிமைகளின் பளபளப்பு சூரிய-சந்திரனின் கிரணங்களைக்கூட கூட பிரகாசம் இல்லாமல் செய்துவிடுகிறது, அது மஹாவைராக்யம் உண்டாகக் காரணமாகிறது. ஜினபகவானின் சாந்த முத்திரையை பார்த்ததுமே நம்முடைய மாசுபட்ட உணர்வுகள் விலகிப் போய்விடுகின்றன. பகவானின் பிரதிமையைப் பார்த்து பகவானின் இயல்பை சிந்திப்பவர்களுக்கு, அவர்களுடைய சுய நிஜ இயல்பு தெரிய வருகிறது. பகவானின் உள்நோக்குப் பார்வை, நமக்கு மௌன உபதேசம் கொடுக்கிறது. பகவானால் சொல்லப்பட்ட மார்க்கம்-உபதேசம் நமக்கு ஜினாகமங்கள் மூலம் கிடைக்கிறது, அவைகளை படித்ததுமே பகவானின் மேல் தீவிர பக்தி உணர்வு நமக்கு வரவே செய்கிறது.

மக்கள் பக்தி பூஜை பாடல்களைப்பாடி பகவானை அவர்கள் சொல்லுவதை கேட்கும்படி செய்கின்றனர், பகவான் சொன்ன உபதேசங்களை யார் கேட்கிறார்கள்? யாருக்கு அதை கேட்க நேரம் இருக்கிறது? உங்களுக்குத் தெரியுமா? இரண்டுபுலன், மூன்றுபுலன், நான்குபுலன் உயிர்களுக்கு வாய் மட்டுமே இருக்கிறது, காது இல்லை, அவைகளால் பேச மட்டுமே முடியும், ஆனால் மற்றவர்கள் பேச்சை கேட்க முடியாது. நாம்கூட பகவானின் முன்னர் சென்று ஸ்துதி, பக்தி, பூஜை பாடல்களை சப்தமாக சொல்கிறோம். பகவானால் சொல்லப்பட்ட உபதேசத்தை நாம் கேட்பதில்லை என்றால் நமக்கும் அந்த விகலேந்திரியங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? சிந்தியுங்கள்!

இப்போது நாம் நந்தீஸ்வர தீபத்தில் உள்ள 52 ஜினாலயங்களில் இயற்கையாக அமைந்துள்ள 5,616 ஜினபிரதிமைகளுக்கு நமஸ்காரம் செய்து ஓய்வு பெறலாம். சொல்லுங்கள்! விதேக க்ஷேத்திரத்தில் உள்ள 19-தாவது தீர்த்தங்கரர் ஸ்ரீதேவயச பகவானுக்கு ஜெய் !

20. இயற்கை ஜினாலயங்கள்

ஸ்ரீமத் நேமிசந்திர ஆச்சார்யரால் எழுதப்பட்ட திரிலோகஸார நூலின் ஆதாரத்தில் நாம் மூவுலக அமைப்பைப் பார்த்துக்கொண்டு வருகிறோம். நூலின் துவக்கத்தில் இரண்டாவது காதையில் உலகில் உள்ள அக்ருத்திம ஜின சைத்யாலயங்களுக்கு-இயற்கையாக அமைந்துள்ள ஜினாலயங்களுக்கு வந்தனை செய்து இந்த நூல் துவங்கப்பட்டது.

அந்த காதை இவ்வாறு இருக்கிறது -

பஃவணவ்வின்தரஜோஇஸ விமாணணரதிரியலோய ஜிணபஃவணே |
ஸவ்வாமரிந்தணரவஇ ஸம்பூஜிய வந்தியே வந்தே ||2||

நாம்கூட இதுவரை அக்ருத்திரிம சைத்யாலயங்கள் எங்கெங்கே உள்ளன என்பதைப் பார்த்தோம். ஜோதிஷிகளின் அசங்க்யாத ஜோதிஷ்க விமானங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அக்ருத்திரிம ஜினாலயம் இருக்கின்றது. வியந்தரர்களின் பவனங்களிலும் மற்றும் ஆவாஸங்களிலும் அசங்க்யாத அக்ருத்திம ஜினாலயங்கள் இருக்கின்றன. மூவுலகத்திலும் உள்ள மற்ற சங்க்யாத அக்ருத்திரிம ஜினாலயங்களில் கீழுலகத்தில் பவனவாசிகளின் ஏழு கோடியே எழுபத்திரண்டு லட்சம் பவனங்களில் 7,72,00,000 அக்ருத்திம ஜினாலயங்கள் இருக்கின்றன, மேலுலகில் வைமானிகர்களின் மொத்த 84,97,023 விமானங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அக்ருத்திரிம ஜினாலயங்கள் என 84,97,023 அக்ருத்திம ஜினாலயங்கள் இருக்கின்றன, மேலும் நடுவுலகில் 458 அக்ருத்திம ஜினாலயங்கள் இருக்கின்றன.

நடுவுலகில் உள்ள இயற்கை ஜினாலயங்களைப் பற்றி மீண்டும் பார்க்கலாம். அதற்கு முன் மானுக்ஷோத்ர மலை, குண்டலகிரி, ருசககிரி ஆகிய மூன்று மலைகள் பற்றி பார்க்கலாம். புஷ்கரவர தீபத்தின் மத்தியில் இரண்டரை தீபத்தை சுற்றி வட்டவடிவில் மானுக்ஷோத்ர மலை இருக்கிறது. மனித உலகின் உள்பக்கம் அந்தமலை சுவர்போல நேராகவும் உயரமாகவும் இருக்கிறது, இதன் உயரம் 1,721 யோஜனை யாகும். அதனுடைய அடிதளம் அதன் உயரத்தில் ¼ பாகமாகும், அதாவது 430¼ யோஜனையாகும். வெளியில் விலங்கு உலகின் பக்கம் அடியிலிருந்து சிகரம் வரை கிரமமாக குறைந்து கொண்டே போகிறது. அடிதளத்தின் அகலம் 1,022 யோஜனை, சிகரத்தின் உச்சியில் அகலம் 424 யோஜனை யாகும். இந்த மலை பொன் நிறமாகும். இந்த மலையில் 14 குகை வடிவ துவாரங்கள் உள்ளன, அதிலிருந்து 14 மஹாநதிகள் உற்பத்தியாகி வெளியே செல்கின்றன. இந்த மலையின்

சிகரத்தில் மலையைப் போலவே வட்ட வடிவில் வேதி இருக்கிறது, அது 4,000 தனுஷ்(வில்) உயரமும் 1¼ கோச பரப்பும் கொண்டதாகும்.

இந்த மலையின் பரிதியில் குபேர மற்றும் வாயு மூலையை தவிர்த்து மற்ற ஆறு திசைகளிலும் வரிசையாக 3-3 கூடங்கள் உள்ளன. அந்த கூடங்களின் உட்புரம் மனித உலகின் பக்கம் நான்கு திசைகள் ஒவ்வொன்றிலும் ஒரே மாதிரியான நான்கு இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. அக்னி மற்றும் ஈசான திசையில் 6 கூடங்களில் கருடகுமார தேவர்கள் வாழ்கின்றனர். மற்ற திசைகளின் 12 கூடங்களில் ஸுபர்ணகுமார தேவர்கள் மற்றும் திக்குமார தேவாங்கனைகள் வசிக்கின்றனர்.

குண்டலகிரி என்ற பெயர் கொண்ட மலை 11-ஆவது குண்டலவர தீபத்தில் இருக்கிறது. இந்த மலைகூட அந்த தீபத்தின் மத்தியில் வட்ட வடிவமாக இருக்கிறது. இதன் அகலம் மானுக்ஷோத்ர மலையைவிட 10 மடங்கு பெரியதாகும். அடித்தளம் 10,220 யோஜனை, சிகரத்தில் அகலம் 4,240 யோஜனை யாகும். இதன் உயரம் 75,000 யோஜனை யாகும். இந்த மலை ஸ்வர்ணமயமாக இருக்கிறது. இந்த குண்டலகிரியின் பரிதியில் ஒவ்வொரு திசையிலும் 4-4 கூடங்கள் என வரிசையாக 16 கூடங்கள் உள்ளன. அதன் உள்பகுதி மனித லோகத்தின் பக்கம் நான்கு திசைகளில் உள்ள நான்கு ஜினேந்திர கூடங்கள் அதாவது சித்த கூடங்கள் உள்ளன, அவைகளில் இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

பதிமூன்றாவது ருசகவர தீபத்தில் வட்ட வடிவில் ருசககிரி என்ற பெயர்கொண்ட மலை இருக்கிறது. அதன் பரிதியில் கிழக்கு முதலான ஒவ்வொரு திசையிலும் வரிசையாக 8-8 கூடங்கள் உள்ளன, அதனுள் நான்கு திசைகளில் நான்கு கூடங்கள் உள்ளன, மேலும் அதனுள் நான்கு திசைகளில் நான்கு கூடங்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் உள்ளே உள்ள நான்கு கூடங்கள் ஜினேந்திர கூடங்களாகும், அங்கு இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

கிழக்கு முதலான நான்கு திசைகளில் 8-8 கூடங்கள் இருக்கின்றனவே அவைகளில் ஒவ்வொரு திசையிலும் 8-8 திக்குமாரி தேவாங்கனைகள் வசிக்கின்றனர், அவர்கள் முறையாக ஜாரி, தர்பண, முக்குடை, சாமரை முதலியவைகளை வைத்திருக்கும் தேவிகளாவர். தீர்த்தங்கரரின் கர்ப்ப மற்றும் ஜென்ம காலத்தில் ஜினமாதாவுக்கு சேவைசெய்ய அவர்கள் வருகின்றனர். அதற்கு உள்ளிருக்கும் நான்கு கூடங்களில் நான்கு தேவிகள் வசிக்கின்றனர். அவர்கள் தீர்த்தங்கரரின் ஜென்ம காலத்தில் திசைகளை சுத்தமாக வைத்துக் கொள்கின்றனர்-தூய்மை படுத்துகின்றனர். அதற்குள் இருக்கும் நான்கு கூடங்களில் நான்கு தேவிகள் வசிக்கின்றனர். அவர்கள்

தீர்த்தங்கரரின் ஜென்ம சமயத்தில் தீர்த்தங்கர பாலகனை பிரசவம் பார்க்க வருகின்றனர்.

இப்போது நாம் நடு உலகில் உள்ள மற்ற இயற்கை ஜினாலயங்களைப் பார்க்கலாம். மனித லோகத்தின் 2½ தீபத்தில் ஐந்து மேரு மலைகள் உள்ளன, அவைகள் ஒவ்வொன்றிலும் பத்ரசாலவனத்தில் நான்கு, நந்தனவனத்தில் நான்கு, சௌமனஸவனத்தில் நான்கு மற்றும் பாண்டுகவனத்தில் நான்கு என 16 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

ஒவ்வொரு மேரு சம்பந்த குலாசல மலைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. குலாசல மலைகள் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா, இந்த மலைகளால்தான் தீபம் ஏழு க்ஷேத்திரங்களாகப் பிரிகிறது.

ஒவ்வொரு மேரு சம்பந்த விதேக க்ஷேத்திரங்களில் நாம் வக்ஷார மலைகள் இருப்பதைப் பார்த்தோம். இந்த நான்கு வக்ஷார மலைகள் மற்றும் மூன்று விபங்க நதிகள் பாய்வதின் காரணத்தால், கிழக்குப்பக்க விதேகம், வடக்கு மற்றும் தெற்கு திசையிலும், மற்றும் மேற்குப்பக்க விதேகம் வடக்கு மற்றும் தெற்கு திசையிலும் 8-8 க்ஷேத்திரங்களாக பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு மேரு சம்பந்த 16 வக்ஷார மலைகள் உள்ளன, அந்த மலைகள் ஒவ்வொன்றிலும் இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

ஒவ்வொரு விதேகத்திலும் மற்றும் ஒவ்வொரு பரத-ஐராவதத்திலும் நாம் ஒவ்வொரு விஜயார்த்த மலை இருப்பதைப் பார்த்தோம். இந்த மலை மற்றும் இரண்டு நதிகள் பாய்வதின் காரணத்தால், ஒவ்வொரு க்ஷேத்திரமும் 6-6 கண்டங்களாக பிரிக்கப்படுவதை பார்த்தோம். இவ்வாறு விதேகத்தில் 32, பரதத்தில் ஒன்று, மற்றும் ஐராவதத்தில் ஒன்று என ஒவ்வொரு மேரு சம்பந்தமான 34 விஜயார்த்த மலைகள் உள்ளன. இந்த ஒவ்வொரு மலையிலும் ஒரு இயற்கை ஜினாலயம் உள்ளது.

ஜம்பூ தீபத்தில் ஒரு ஜம்பூ விருக்ஷமும் ஒரு சால்மலி விருக்ஷமும் இருப்பதைப் பார்த்தோம். ஒவ்வொரு மேருவிலும் 2-2 விருக்ஷங்கள் உள்ளன, அவை ஒவ்வொன்றிலும் ஒரு இயற்கை ஜினாலயம் உள்ளது. ஒவ்வொரு மேருவின் நான்கு குறுக்கு திசைகளிலும் 4 கஜதந்தங்கள் உள்ளன, அவைகளில் ஒவ்வொன்றின் ஒரு கூடத்தில் ஜினாலயம் உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மேருவின் சமீபத்தில் 4 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

தாதகி கண்டத்தில் வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களில் இரண்டு ஈஷ்வாகார மலைகள் உள்ளன. புஷ்கரார்த்தத்திலும் இதேபோல இரண்டு

ஈஷ்வாகார மலைகள் உள்ளன. இந்த நான்கு ஈஷ்வாகார மலைகளிலும் ஒவ்வொரு மலையிலும் ஒரு இயற்கை ஜினாலயம் உள்ளது.

மானுக்ஷோத்ர மலையில் நான்கு இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. நந்தீஸ்வர தீபத்தில் 52 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. குண்டலகிரியில் நான்கு மற்றும் ருசகரமலையில் நான்கு என 8 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. இவ்வாறு நடு உலகில் மொத்தம் 458 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. அவைகளை கீழ்கண்டவாறு வேறு விதமாக சேர்த்துப் பார்க்கலாம்.

ஒவ்வொரு மேருவில் 16, கஜதந்தத்தில் 4, குலாசலத்தில் 6, விஜயார்த்தத்தில் 34, வக்ஷாரத்தில் 16, விருக்ஷங்களில் 2 என மொத்தம் 78 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. எனவே ஐந்து மேருவில் 78X5=390 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன.

ஈஷ்வாகாரத்தில் 4, மானுக்ஷோத்ரத்தில் 4, நந்தீஸ்வரதீபத்தில் 52, குண்டலவரத்தில் 4, ருசகரத்தில் 4 என மொத்தம் 68 இயற்கை ஜினாலயங்கள் உள்ளன. 390+68=458 நடு உலகில் உள்ள மொத்த இயற்கை ஜினாலயங்கள் ஆகும்.

இப்போது இந்த இயற்கை ஜினாலயங்களின் அமைப்பைப் பார்க்கலாம். இவைகளில் பெரியவை, நடுத்தரமானவை மற்றும் சிறியவை என மூன்று விதமாக இதன் வடிவ அமைப்புகள் உள்ளன.

பெரிய ஜினாலயம் 100 யோஜனை நீளமும், 50 யோஜனை அகலமும், 75 யோஜனை உயரமும் கொண்டவைகளாக உள்ளன. பூமியின் அடியில் இதன் அடிதளம் ½ யோஜனை யாகும். இதன் கிழக்கு பக்க வாசலின் உயரம் 16 யோஜனை, அகலம் 8 யோஜனை யாகும். இரண்டு பக்கங்களிலும் உள்ள கதவுகள் 8 யோஜனை உயரமும், 4 யோஜனை அகலமும் கொண்டது. பின் பக்கத்தில் எந்த நுழைவாயிலும் இல்லை. நடுத்தரமான ஜினாலயம் இதன் அளவில் பாதி அளவாகவும், சிறிய ஜினாலயம் அதிலும் பாதி அளவாகவும் இருக்கின்றன. இவைகளை கட்டங்களின் மூலம் கீழ்கண்டவாறு பார்க்கலாம்.

இயற்கை ஜினாலங்களின் அளவுகள்

	பெரிய ஜினாலயம்	நடுத்தர ஜினாலயம்	சிறிய ஜினாலயம்
நீளம்	100 யோஜனை	50 யோஜனை	25 யோஜனை
அகலம்	50 யோஜனை	25 யோஜனை	12½ யோஜனை
உயரம்	75 யோஜனை	37½ யோஜனை	18¾ யோஜனை
முக்கிய வாசல் -உயரம்	16 யோஜனை	8 யோஜனை	4 யோஜனை

20. இயற்கை ஜினாலயங்கள்

முக்கிய வாசல் -அகலம்	8 யோஜனை	4 யோஜனை	2 யோஜனை
சிறிய வாசல்- உயரம்	8 யோஜனை	4 யோஜனை	2 யோஜனை
சிறிய வாசல்- அகலம்	4 யோஜனை	2 யோஜனை	1 யோஜனை

இந்த பெரிய, நடுத்தர மற்றும் சிறிய ஜினாலயங்கள் எங்கெங்கு உள்ளன என்பதைப் பார்க்கலாம்.

பெரிய ஜினாலயங்கள் - பத்ரசாலவனம், நந்தனவனம், நந்தீஸ்வரதீபம், மற்றும் வைமானிக தேவர்களின் விமானங்கள் ஆகிய இடங்களில் உள்ள ஜினாலயங்கள் பெரிய வடிவம் (100 யோஜனை) கொண்டவைகளாகும்.

நடுத்தர ஜினாலயங்கள் - சௌமனசவனம், ருசகர தீபம், குண்டலவர தீபம், வக்ஷாரமலை, ஈஷ்வாகாரமலை, மானுக்ஷோத்ரமலை மற்றும் குலாசல மலைகளில் உள்ள ஜினாலயங்கள் நடுத்தர வடிவம் (50 யோஜனை) கொண்டவைகளாகும்.

சிறிய ஜினாலயங்கள் - பாண்டுக வனத்தில் உள்ள ஜினாலயங்கள் சிறிய வடிவம் (25 யோஜனை) கொண்டவைகளாகும்.

பவனவாசி மற்றும் வியந்தர பவனங்களில் உள்ள ஜினாலயங்களின் வடிவம் பற்றி சிறப்பான வர்ணனைகள் சாஸ்திரங்களில் கொடுக்கப் படவில்லை. பகவான் எப்படி பார்த்தாரோ அப்படியே அதன் வடிவங்களாகும் என்று மட்டுமே நம்மால் சொல்ல முடியும்.

இந்த எல்லா ஜினாலயங்களும் கிழக்கு முகம் கொண்டவைகளாக இருக்கின்றன. இந்த ஜினாயங்களில் உள்ள ஜினபகவானின் உருவஅமைப்பு கூட ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் சங்கு-சந்திரன்-குந்த புஷ்பம் போல வெள்ளை நிறத்தில் உள்ளன மற்றும் மணிகளின் கிரணங்களால் ஜினாலயத்தினுள் இருளே இல்லாமல் எப்போதும் வெளிச்சமாகவே இருக்கிறது, அதாவது எப்போதும் பிரகாசமாகவே இருக்கிறது. திரிபுவன திலகம் என்ற பெயரால் இந்த இயற்கை ஜினாலயங்கள் அறியப்படுகின்றன. இந்த ஜினாலயங்களின் நுழைவாயில் உள்ள இரட்டை கதவுகள் வஜ்ரமயமாகவும் மரகதம், மற்றும் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டதாகவும் உள்ளன. ஜினாலயத்தில் ஐந்து வர்ண இரத்தினங்களாலான தூண்கள் உள்ளன. அங்கு அழகான மற்றும் சிறப்பான ஸ்படிக இரத்தினங்களால் உருவாக்கப்பட்ட பல அற்புதமான சுவரோவியங்கள் உள்ளன.

தூணின் நடுப்பகுதி ஐந்து வர்ண இரத்தினங்களால் செய்யப்பட்டும், உடல், மனம், கண்களுக்கு இதம் தரும் வகையில் சுத்தமாகவும், மாசற்றதாகவும்

இருக்கின்றன. இந்த ஆலயங்கள் முத்து, மணிகள், மற்றும் நேர்த்தியான இரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

இந்த ஜினாலயத்தில் 108 கர்ப்பகிரஹங்கள் உள்ளன. ஜினாலயத்தில் மத்தியில் இரத்தினத்தாலான தூண்களுடன் கூடிய 2 யோஜனை அகலமும், 8 யோஜனை நீளமும், 4 யோஜனை உயரமும் கொண்ட கூரையுடன் கூடிய மண்டபம் உள்ளது. அதில் இரத்தினங்களால் ஆன பல வண்ண பூமாலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன, 64 தாமரை பூக்களால் அலங்கரிக்கப்பட்ட, கண்கவரும் பலவித கண்ணாடிகள், மணிகளால் சூழப்பட்டதும், வாசனை நிறைந்த நறுமணம் மிக்க மலய சந்தனம், தூபம் ஆகியவைகளால் சூழப்பட்டதும், கலசம், கண்ணாடி, மற்றும் அனேக வித கொடிகள் முதலான சின்னங்களால் அலங்கரிக்கப்படதும், இரத்தின தீபங்களுடன் கூடியதுமான கர்ப்ப கிரஹ மண்டபங்கள் உள்ளன.

ஜினாலயத்தில் மத்தியில் பாதபீடங்களுடன் கூடிய ஸ்படிக மணிமய 108 சிம்மாசனங்கள் உள்ளன, அதன் மேல் 500 வில் உயரம் கொண்ட 108 அனாதி அனந்த காலம் இருக்கும் ஜினபிரதிமைகள் பத்மாசன நிலையில் அமைந்துள்ளன. மரகத மணிமய கேசமும், முன்புருவமும், ஸ்படிகமணி வெண்மையும் மரகதமணி கருமையும் கொண்ட கண்களும், வஜ்ரமயமான பல்வரிசையும், இலைகள் போன்ற உதடுகளும், வைரம் போன்ற நகங்களும், தாமரை சிகப்பு வண்ணத்தில் கைகளும் பாதங்களும், 32 சுபலட்சணங்கள் கொண்ட முக்குடையுடன், 1,008 சுபச் சின்னங்களுடன் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் சமசதுரஸ்ச உடலமைப்பும் கொண்ட இந்த ஜினப்பிரதிமைகள் ஜெயவந்தர்களாகட்டும். ஒவ்வொரு படிமைகள் அருகிலும் 32 ஜோடி தேவர்கள் கையில் 64 சாமரைகளை ஏந்தி இருக்கும்படியான அமைப்பும் இருக்கும். ஒவ்வொரு பிரதிமையின் அருகிலும் மணி முதலான உபகரணங்களுடன் அஷ்டமங்கலங்களான 1.ஜாரி(மூக்குடன் கூடிய சொம்பு), 2.கலசம், 3.கண்ணாடி, 4.சாமரை, 5.கொடி, 6.விசிறி, 7.குடை, 8.ஸ்வஸ்தீகம் ஆகியவைகள் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரதிமையின் அருகேயும் 108-108 மங்களப் பொருள்கள் இருக்கும். யட்சர்கள் வடிவ படிமைகளும் அங்கு இருக்கும். ஸ்ரீதேவி, சுருததேவி-சரஸ்வதி, சர்வாண யக்ஷன், சனத்குமார யக்ஷன் ஆகிய நால்வரின் படிமைகளும் பகவானின் பிரதிமையின் பக்கத்தில் இருக்கும்.

ஜினாலயங்களுக்கு வெளியே இரத்தினமய கூடங்கள் இருக்கின்றன. அங்கு பெரிய-பெரிய தூப குடங்கள் இருக்கும், கொடிகள் இருக்கும். இந்திரத்வஜ விதான புத்தகங்களில் இவைகள் பற்றி விரிவான விளக்கம் உள்ளது.

இவ்வாறு வியந்தரர்கள் மற்றும் ஜோதிஷிகளின் அசங்க்யாத அக்ருத்திம ஜினாலயங்களைத் தவிர, மூவுலகிலும் 8 கோடியே 56 லட்சத்து 97 அயிரத்து 481 இயற்கை ஜினாலயங்கள் பவன, வைமானிக மற்றும் 2½ தீப, நந்தீஸ்வர தீப, 11-வது , 13-வது தீபங்களிலும் உள்ளன. ஒவ்வொன்றிலும் 108 ஜினபிரதிமைகள் உள்ளன. மொத்த பிரதிமைகளின் எண்ணிக்கை 9,25,53,27,948 ஆகும். இவைகள் எல்லாவற்றிற்கும் நாம் இங்கிருந்தே உணர்வுப்பூர்வமாக நமஸ்காரம் செய்வோம்.

இப்போது சில கேள்விகள் உங்களிடமிருந்து வந்திருக்கிறது. அதில் ஒரு கேள்வி சக்கரவர்த்தி சம்பந்தமானது. அதாவது சக்கரவர்த்திகள் அதே பவத்தில் மோக்ஷமடைகிறார்களா? அல்லது சுவர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ சென்று பிறக்கிறார்களா? என்பதுதான். இந்த கேள்விக்கு பதில் இந்த மூன்றுக்கும் அதாவது மூன்றில் ஏதாவது ஒன்றுக்கு சொல்லமுடியும் என்பதுதான். இங்கு நாம் கடந்த நான்காம் காலத்தில் தோன்றிய சக்கரவர்த்திகள் எங்கு சென்றார்கள் என்பதைப் பார்க்கலாம். மூன்றாவது மகவான் சக்கரவர்த்தியும், நான்காவது ஸனத்குமார சக்கரவர்த்தியும் மரணமடைந்து சுவர்க்கம் சென்றனர். எட்டாவது சுபௌம சக்கரவர்த்தியும், பன்னிரண்டாவது பிரம்மதத்த சக்கரவர்த்தியும் மரணமடைந்து ஏழாம் நரகம் சென்றனர். மற்ற எட்டு சக்கரவர்த்திகளும் மோக்ஷமடைந்தனர். சக்கரவர்த்தி பதவியிலேயே மரணமடைபவர்கள் நியமமாக ஏழாம் நரகம் செல்கின்றனர்.

அடுத்த கேள்வி சமுத்காதம் பற்றியது. சமுத்காதம் என்றால் என்ன? அங்கு எதை காதம் செய்ய வேண்டியிருக்கிறது?

பதில்: சமுத்காதத்தில் எந்த காதமும் நிகழ்வதில்லை. மூல சரீரத்தை விடாமல் ஆத்மப்பிரதேசம் சரீரத்திற்கு வெளியில் பரவுவதை சமுத்காதம் என்று சொல்கின்றனர். கேவலி சமுத்காதம் என்ற பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். பதிமூன்றாம் குணஸ்தானத்தின் கடைசியில் ஆயுள் கர்ம ஸ்திதியுடன் மற்ற 3 அகாதி கர்மங்களின் ஸ்திதியை சமன் செய்வதற்காக கேவலி சமுத்காதம் செய்யப்படுகிறது. இது சுலபமாகவே தானாகவே நிகழ்கிறது. இதை செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பி செய்வதில்லை. கர்மங்களின் ஸ்திதி நிலை சமமாக இருக்கிறதா இல்லையா என்று அடிக்கடி சென்று பார்க்க வேண்டிய அவசியமுமில்லை.

கேள்வி: நமக்குக்கூட சமுத்காதம் நிகழ்கிறதா என்ன?

பதில்: பொதுவாக ஏழு விதமான சமுத்காதங்கள் நிகழ்கின்றன. அவைகளாவன: 1.வேதனா சமுத்காதம், 2.கஷாய சமுத்காதம், 3.மாரணாந்திக சமுத்காதம், 4.வைக்ரியிக சமுத்காதம், 5.தேஜச சமுத்காதம், 6.ஆஹாரக சமுத்காதம், 7. கேவலி சமுத்காதம்.

வேதனா சமுத்காதம்-தீவிர வேதனை அனுபவத்திற்கு வரும்போது ஆத்மப்பிரதேசம் உடலுக்கு வெளியிலும் பரவுகிறது, மூல சரீரத்திலும் இருக்கவே செய்கிறது. ஒரு பிரதேசம் முதல் மூல சரீரத்தைப்போல மும்மடங்குவரை ஆத்ம பிரதேசம் பரவமுடியும், அதுகூட பக்க வாட்டில்தான் பரவ முடியும், உயர வாட்டில் இல்லை. மும்மடங்குக்கு மேலும் பரவுவதில்லை. கொஞ்ச நேரத்தில், அதாவது அந்தர்முகூர்த்த நேரத்தில் மீண்டும் மூல சரீரத்திற்கு வெளியில் பரவிய ஆத்மப்பிரதேசம் பழையபடி மூல சரீரத்திற்குள் வந்து விடுகிறது.

கஷாய சமுத்காதம் - தீவிர கஷாய காலத்தில் ஆத்ம பிரதேசம் உடலுக்கு வெளியில் பரவுகிறது. இங்குகூட ஆத்மப்பிரதேசம் பக்கவாட்டில் வேதனா சமுத்காதம் போலவே மும்மடங்கு பரவுகிறது. அதாவது 3X3=9 மடங்கு ஆத்மப்பிரதேசத்தின் இடப்பரப்பு இருக்கமுடியும். பிறகு மூல சரீரத்திற்குள் வந்து விடுகிறது.

மாரணாந்திக சமுத்காதம் - மரணத்திற்கு அந்தர்முகூர்த்தத்திற்கு முன் உயிரின் ஆத்மப்பிரதேசம் எங்கு பிறவி எடுக்க வேண்டுமோ அந்த இடம்வரை பரவுகிறது. விக்ரக கதியில் உயிர் எவ்வாறு நேர் கோட்டிலோ, அல்லது திருப்பத்துடன் செல்லுகிறதோ, அதேபோலவே ஆத்மப்பிரதேசம் மாரணாந்திக சமுத்காத காலத்திலும் பரவுகிறது. இரண்டு-மூன்று உயிர்களுக்கு அல்ல, அனேக சங்க்யாத உயிர்களுக்கு மாரணாந்திக சமுத்காதம் ஒரே காலகட்டத்தில் நிகழமுடியும். மாரணாந்திக சமுத்காதம் ஏகேந்திரியங்களுக்குக் கூட நிகழ்கிறது. முழு உலகத்திலும் ஒரு பிரதேசம்கூட மாரணாந்திக சமுத்காதத்தால் பரவாத இடமேயில்லை.

மாரணாந்திக சமுத்காதம் நிகழ்ந்த பிறகு உயிர்ப் பிரதேசம் மூல சரீரத்தில் திரும்ப வந்து சேர்ந்து, பிறகு மரணம் நிகழ்கிறது என்று நாம் முன்னர் கேட்டோ அல்லது படித்தோ இருக்கலாம். ஆனால் நாங்கள் தவளா கிரந்தத்தை படித்த போது அது பற்றி சர்ச்சை கூட நிகழ்த்தினோம். தவளாவில் கூறியபடி மாரணாந்திக சமுத்காதம் இப்படி நிகழ்கிறது- மரணத்திற்கு அந்தர்முகூர்த்தத்திற்கு முன் உயிரின் ஆத்மப்பிரதேசம் இந்த விதத்தில் பரவிய நிலையிலேயே இருக்கிறது, மற்றும் மரணம் நிகழும்போது மூல சரீரத்திலிருக்கும் ஆத்மப்பிரதேசம் வெளியேறி அதே விக்ரககதி மார்க்கத்தில், அது பிறவி எடுக்கும் இடத்திற்குச் சென்று விடுகிறது. அதாவது நாம் நடக்குபோது ஒரு பள்ளத்தை கடக்க முதலில் ஒரு காலை தூக்கி பள்ளத்தின் மறுபக்கம் வைத்து பிறகு இரண்டாவது காலை அடுத்த பக்கத்திற்கு எடுத்து வைப்பது போல இதை புரிந்து கொள்ளலாம்.

கேள்வி: மாரணாந்திக சமுத்காதம் ஏன் செய்ய வேண்டியதாக இருக்கிறது?

பதில்: அடுத்த பிறவி சம்பந்தமான ஆயுள் கர்மம் பந்தமாகி அது சத்தாவில் இருக்கிறது. எங்கு பிறக்க வேண்டுமோ அதுகூட நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த விஷயம் சகஜமாகவே நிமித்த நைமித்திக வடிவில் ஏற்படுகிறது. ஒருவர் தான் பிறக்க வேண்டிய இடத்தை பார்த்துவிட்டு வந்து, அதனால் சிரித்தபடி இறந்தார் என்று சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. மரணத்திற்கு பிறகு ஆத்மா அலைந்து திரிந்து கொண்டு இருக்கிறது என்று சொல்வதெல்லாம் மாயை-பிரமை யாகும்.

வைக்ரியிக சமுத்காதம் - தேவகதி உயிர்கள் விக்ரியா சக்தி மூலம் வேறு உடலை செய்து பல்வேறு இடங்களுக்கு செல்கின்றனர், நடு உலகுக்கு வருகிறார்கள், மூன்றாம் நரகம் வரைகூட செல்லமுடியும், ஆனால் அவர்களுடைய ஆத்மப்பிரதேசம் மூல உடலை விடுவதில்லை, அதாவது எங்கு புதிய உடல் சென்றதோ அதுவரை ஆத்மப்பிரதேசம் பரவி இருக்கிறது. இதுகூட ஒரு அந்தர்முகூர்த்தம்வரை இருக்கிறது. சக்கரவர்த்திகூட ஔதாரிக உடல் மூலம் விக்ரியா செய்யமுடியும். மற்ற உயிர்களுக்கும் அல்லது ரித்திதாரிகளுக்கும் வைக்ரியிக சமுத்காதம் நிகழ்கிறது. விஷ்ணுகுமார முனியின் கதை எல்லோரும் தெரிந்த ஒன்றுதானே. இது மட்டுமல்ல வாயுகாயிக உயிர்களுக்குக்கூட விக்ரியா நிகழ்கிறது.

தேஜச சமுத்காதம் - இது சுப தேஜச மற்றும் அசுப தேஜச என இரண்டு விதமாகும். கெட்டகாலம், பெருவாரியாகப் பரவும் தொற்று நோய் முதலியன வெடிக்கும்போது, உயிர்களின் மேல் கருணை, அனுகம்பா-இரக்க உணர்வு காரணமாக முனிராஜரின் வலது தோளிலிருந்து நீல வர்ணத்துடன் கூடிய சுப தேஜச சரீரம் வெளிவருகிறது, அதனுடன் ஆதமப் பிரதேசமும் பரவுகிறது. 12 யோஜனை X 9 யோஜனை வரை இந்த உடல் பரவ முடியும். பெருவாரியாகப் பரவும் தொற்று நோய்களுக்கு நிவாரணம் அளித்துவிட்டு திரும்ப மூல சரீரத்தில் பிரவேசிக்கிறது. தீவிர கோபம் முதலான காரணத்தால் அசுப தேஜச உடல் செந்தூர நிற பூனை வடிவில் முனிராஜரின் இடது தோளிலிருந்து வெளிப்பட்டு 12 யோஜனை X 9 யோஜனை வரை பரவி அந்த அளவு க்ஷேத்திரத்தை எரித்து விட்டு, திரும்ப மூல சரீரத்தில் பிரவேசித்து முனிராஜரின் உடலையும் பஸ்பமாக்கி விடுகிறது.

இது சுப தேஜச சமுத்காதமாக இருந்தாலும் அல்லது அசுப தேஜச சமுத்காதமாக இருந்தாலும், இது பாஃவலிங்கி முனிகளாலேயே செய்யமுடியும். முனிராஜர் யாரையும் எரித்து பஸ்பமாக்க விரும்புவதில்லை, ஆனால் பரிணாமம் சீரழிய எவ்வளவு நேரம் எடுக்கிறது? தீபாயன முனியின் கதையை கேட்டிருப்பீர்கள் அல்லவா? நேமிநாத தீர்த்தங்கரரின் வாணியில் “12 வருடங்களுக்கு பிறகு மது அருந்திவிட்டு தீபாயன முனிக்கு உபசர்க்கம் நிகழ்விப்பதால் துவாரகை நகரமே ஏரிந்து பஸ்பமாகும்” என்று வந்தது. இதை கேட்ட தீபாயன முனி துவாரகையை விட்டே சென்றுவிட்டார், முழு

இராஜ்யத்திலும் மது உற்பத்தி பண்ணுவதே தடை செய்யப்பட்டு, மது தயாரிக்கும் பொருள்களை காட்டில், மலையில், பள்ளத்தாக்குகளில் தூக்கி எறியப்பட்டன. இப்போது நாம் நிமித்தங்களை அகற்றி விட்டதால் எப்படி துவாரகா எரியும், அது பாதுகாக்கப்படும் என்று எல்லோரும் நினைத்தனர்.

மேலும் மாதங்களை சரியாக கணக்கிடாமல், நான் இங்கேயே இல்லாத தால் இப்போது துவாரகை எப்படி இருக்கிறது? என்று பார்க்க, தீபாயன முனி துவாரகைக்கு திரும்பி வந்தார். அந்த சமயத்தில் யாதவ ராஜகுமாரர்கள் கேளிக்கைக்காக வனம்-காடு இருக்கும் திசையில் சுற்றுலா சென்றனர். வழி தெரியாமல் சுற்றித்திரிந்ததால் தாகம் எடுக்கவே அங்குள்ள குளத்தின் நீரை அருந்தினர். அந்த குளத்தில்தான் மது தயாரிக்கும் பொருள்கள் பல வருடங்களுக்கு முன்னர் தூக்கி வீசப்பட்டன. அது இப்போது நல்ல போதை கொடுக்கும் மதுவாக அந்த குளத்தின் நீர் மாற்றமடைந்திருந்தது. அந்த நீரை குடித்துவிட்டு திரும்பிய வந்தவர்கள், தீபாயன முனி திரும்ப வருவதைப் பார்த்து, அவர் மேல் கற்களை எறியத் தொடங்கினர். அதனால் கோபமடைந்த முனி அசுப தேஜச சரீரத்தால் துவாரகை நகரமே எரிந்து சாம்பலானது. சில சாஸ்திரங்களில் உபசர்க்க காலத்தில் கோபமடைந்து மரணமடைந்த தீபாயனமுனி இறந்து, அக்னிகுமார தேவனாக பிறந்து உடனே துவாரகைக்கு வந்து அதை எரித்து பஸ்பமாக்கியதாக என்றுகூட எழுதப்பட்டிருக்கிறது.

நிமித்தங்களை அகற்ற எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டதால் நிகழ வேண்டிய விபத்து தவிர்க்கப்பட்டதா என்ன? நிமித்தங்கள் கூட ஒத்தி வைக்கப் பட்டதா என்ன? நிமித்தங்களைக்கூட தவிர்க்க முடியாது, கட்டாயப்படுத்தி கொண்டுவரவும் முடியாது. ஒவ்வொரு காரியமும் அது நிகழ வேண்டிய நேரத்தில் தன் உபாதானத்தாலேயே நிகழ்கிறது, மற்றும் அதன் நிமித்தம் கூட நிச்சயிக்கப் பட்டதாக இருக்கிறது. நிமித்தத்தால் காரியம் நிகழ்வதில்லை, ஆனாலும் அது கூட நிச்சயிக்கப் பட்டதாகவே இருக்கிறது, அதை மாற்றவும் முடியாது.

யாருக்காவது சாலை விபத்தால் மரணம் ஏற்பட்டால் மக்கள் என்ன சொல்கிறார்கள்! பாவம் மரணமடைந்து விட்டான், அவன் வீட்டிலேயே இருந்திருந்தால் பிழைத்திருப்பான்! அல்லது யாராவது நோயால் மரணமடைந்தால், ஏன் அந்த டாக்டரிடம் சென்றார்? பலான மருத்துவமனைக்கு அவர் சென்றிருக்க வேண்டும். அமெரிக்காவில் ஏன் சிகிச்சை பெறவில்லை? அங்கு சென்றிருந்தால் பிழைத்திருப்பார்! என்றெல்லாம் சொல்கின்றனர். ஒவ்வொரு உயிரின் மரண சமயமும், இடமும், நிமித்தமும், விதிமுறையும் எல்லாம் நிச்சயிக்கப்பட்டுள்ளன. மரணத்திற்கு மட்டுமல்ல, பிறவி எடுப்பதிலிருந்து, மரணம்வரை எல்லா நிகழ்வுகளும், எல்லா அவஸ்தைகளும், உயிர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு பரமாணுவுக்கும், ஒவ்வொரு திரவியத்தின் ஒவ்வொரு பர்யாயமும் எந்த சமயத்தில், எந்த

இடத்தில், எந்த நிமித்தத்தால், எந்த விதிமுறையில் எப்படி நிகழ வேண்டுமோ அது அப்படியே நிகழ்கிறது, எதில் எந்த மாற்றமும் யாராலும் செய்யமுடியாது.

கார்த்திகேயானுபிரேக்ஷாவில் ஸ்வாமி கார்த்திகேய மஹராஜ் இவ்வாறு எழுதி இருக்கிறார்.-

ஜம் ஜிஸ்ஸ ஜம்மி தேஸே ஜேண விஹாணேண ஜம்ஹி காலம்ஹி |
ணாதம் ஜிண்ணித ணியதா ஜம்மம் வா அஹவ மரணம் வா ||321||

தம் தஸ்ஸ தம்ஹி தேஸே தேன விஹாணேண தம்ஹி காலம்ஹி |
கோ ஸக்கதி வாரேதும்இந்தோ வா தஹ ஜிணிந்தோ வா ||322||

ஏவம் ஜோ நிச்சயதோ ஜாணதி தவ்வாணி ஸவ்வபஜ்ஜாயே |
ஸோ ஸத்திட்டி ஸுத்தோ ஜோ ஸங்கதி ஸோ ஹு குத்திட்டம் ||323||

ஒவ்வொரு திரவியத்தின் ஒவ்வொரு பர்யாயமும் எந்த க்ஷேத்திரத்தில் எந்த விதிப்படி எந்த காலத்தில், எப்படி நிகழ வேண்டுமோ அது ஜினேந்திர பகவானின் ஞானத்தில் உறுதியாக அறியப்படுகிறது ஆனால் அது நிகழ்வதிலிருந்து தவிர்க்க சக்கரவர்த்தி, இந்திரர் அல்லது ஸ்வயம் அதை பார்த்த ஜினேந்திர பகவானுக்குக்கூட சாமர்த்தியம் இல்லை. இப்படி யார் உறுதி செய்கிறாரோ அவர் சம்யக்திருஷ்டியாவார், அதில் சந்தேகம் கொள்பவர் யாரானும் அவர் மித்யாதிருஷ்டி யாவார்.

ஆஹாரக சமுத்காதம் - ஆஹாரக ரித்திதாரி முனிராஜர்களுக்கு தத்துவங்களில் ஏதாவது கேள்வி எழும்போதோ அல்லது ஏதாவது தீர்வு செய்ய வேண்டியபோதோ அல்லது அவர் ஜினாலய வந்தனை செய்ய விரும்பும்போதோ அவருடைய தலையின் உச்சியிலிருந்து ஒரு முழ உயரம் கொண்ட ஏழு தாதுக்கள் அற்ற வெள்ளை உருவம் அதாவது ஆஹாரக சரீரம் உருவாகிறது. மூல சரீரத்தை விடாமல் ஆத்மப்பிரதேசம் அந்த சரீரத்துடன் தீர்த்தங்கரரின் சமவசரணம் வரை செல்கிறது, அல்லது ஜினாலயம்வரை செல்கிறது. அந்தர் முகூர்த்த காலத்தில் திரும்பி மூல சரீரத்தில் பிரவேசிக்கிறது. ஆறாவது குணஸ்தானத்தில் தான் இந்த காரியம் நிகழ்கிறது. இந்த காரணத்தால் ஆறாவது குணஸ்தானத்தின் அந்தர் முகூர்த்த காலத்தில் இருந்து இந்த காலம் சிறியதாக இருக்கிறது.

இங்கு தத்துவங்களில் ஏதாவது கேள்வி எழும்போது என்று சொன்னது, ஏழு தத்துவ சம்பந்த சந்தேகமில்லை, கரணானுயோக விஷய சம்பந்தமானதாக இருக்கும். ஏழு தத்துவத்தில் சந்தேகம் வருமானால் அவருக்கு சம்யக்த்துவம்கூட இல்லாமல் போகும்.

கேவலி சமுத்காதம்-கேவலி சமுத்காதம் எட்டு சமயங்கள் மட்டுமே நிகழ்ந்து ஆத்மப் பிரதேசம் மூலசரீரத்தில் பிரவேசித்து விடுகிறது. அந்த எட்டு சமய சமுத்காதத்தின் பெயர்கள் வரிசையாக இவ்வாறு இருக்கிறது - 1.தண்ட, 2.கபாட, 3.பிரதர,4.லோகபூரண, 5.பிரதர, 6.கபாட, 7.தண்ட, 8.மூலசரீரத்தில்.

கேவலி பகவானின் ஆத்மப்பிரதேசம் முதல் சமயத்தில் மேலும் கீழும் அதாவது இரண்டு பக்கமும் வாத வலயங்களைத் தவிர கொம்பு வடிவில் பரவுகிறது. அது உயரத்தில் கொஞ்சம் குறைந்த 14 ரஜ்ஜுவாகவும், பருமனில் 12 அல்லது 36 அங்குலம் கொண்டதாக இருக்கும், கேவலி பத்மாசன நிலையில் இருந்தால் 36 அங்குலமாகவும், கடகாசன நிலையில் இருந்தால் 12 அங்குலமாகவும் இருக்கும். கீழே 60,000 (20,000, 20,000, 20,000) யோஜனை மற்றும் மேலே 3 கோசம் 1525 வில் (2 கோசம், 1 கோசம், 1525 வில்) வாத வலயங்களின் பகுதியை விட்டுவிட்டு உயரம் கொஞ்சம் குறைந்த 14 ரஜ்ஜுவாக இருக்கும். இதை தண்ட சமுத்காதம் என்று சொல்கின்றனர்.

இரண்டாம் சமயத்தில் ஆத்மப்பிரதேசம் பக்கவாட்டில் லோகாகாசத்தின் கடைசிவரை பரவுகிறது, இங்குகூட வாதவலையங்களை விட்டுவிட்டு மற்ற எல்லா இடங்களிலும் பரவுகிறது. கிழக்கில் முகம் இருந்தால் வடக்கு தெற்காகவும், வடக்கு பக்கம் முகம் இருந்தால் கிழக்கு மேற்காகவும் பரவுகிறது. இதை கபாட சமுத்காதம் என்று சொல்கின்றனர்.

மூன்றாம் சமயத்தில் வாத வலயத்தை விட்டுவிட்டு முன்னும் பின்னும் உலக எல்லை வரை பரவுகிறது. இதன் பொருள் வெளியில் உள்ள வாதவலையங்களை தவிர லோகாகாசத்தின் நான்கு பக்கங்கள் மற்றும் மேல், கீழ் முழுவதும் ஆத்மப்பிரதேசம் பரவுகிறது. இதை பிரதர சமுத்காதம் என்று சொல்கின்றனர்.

நான்காம் சமயத்தில் முழு உலகத்திலும் அதாவது வாதவலையங்கள் முழுவதிலும்கூட ஆத்மப்பிரதேசம் பரவுகிறது. இதை லோகபூரண சமுத்காதம் என்று சொல்கின்றனர். பிறகு ஆத்மப்பிரதேசம் சுருங்கி பிரதர, கபாட, தண்ட மற்றும் எட்டாம் சமயத்தில் ஆத்மப்பிரதேசம் மூல சரீர அளவாகி விடுகிறது.

கேவலி சமுத்காத எட்டு சமயங்களில் வேதனீயம், நாமம், கோத்திரம் ஆகிய கர்மங்களில் அசங்க்யாத மடங்கு நிர்ஜரை நிகழ்ந்து அவைகளின் ஸ்திதி ஆயுள் கர்மத்தின் ஸ்திதிக்கு சமமாக ஆகிவிடுகிறது.

எப்போது எந்த சமுத்காதம் நிகழ்கிறதோ அப்போதெல்லாம் ஆத்மப்பிரதேசத்துடன் தேஜச மற்றும் கார்மண சரீரத்தின் பரமாணுக்கள் கூட அதனுடன் பரவுகின்றன, இல்லையென்றால் வெளியில் பரவும்

ஆத்மப்பிரதேசப் பகுதி கர்மங்கள் இல்லாமல் போனால் அவ்வளவு பிரதேசம் முக்தி அடைந்ததாக நம்ப வேண்டியிருக்கும்.

கேள்வி: கஷாய சமுத்காதத்தில் எதன் நிமித்தத்தால் கஷாயம் உண்டானதோ அதை தொட்டுவிட்டு ஆத்மப்பிரதேசம் திரும்பி வருகிறதா என்ன?

பதில்: அப்படி இல்லை. கஷாயத்தை என்னவோ நாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். முன்னர் யாராவது ஒருவர் இருந்தால்தான் கஷாயம் வருகிறது என்பதில்லை, யாரும் இல்லாபோதிலும்கூட மனதால் நினைத்துகூட நமக்கு கோபம் வருகிறது அல்லவா!

கேள்வி:ஆஷ்டானிக பருவத்தில் நந்தீஸ்வரதீப சம்பந்த ஜினாலயங்களுக்கு மட்டுமே ஏன் பூஜை செய்யப்படுகிறது?

பதில்: கரணானுயோக விஷயத்தில், ஏன் என்ற கேள்வி எழுப்புவதில்லை, அது அஹேதுவாத ஆகமமாகும், அதில் என்ன நிகழ்கிறதோ அவைகளே சொல்லப்படுகின்றன. சூரியன் ஏன் கிழக்கில்தான் உதிக்கிறது என்று நீங்கள் சொல்ல முடியுமா? தெரியாது இல்லையா அல்லவா ?! நான் சொல்கிறேன், எந்தப்பக்கம் சூரியன் உதிக்கிறதோ அந்த திசையையே நாம் கிழக்கு என்று சொல்கிறோம்.

தசலட்சண பருவத்தில் மட்டுமே ஏன் மக்கள் ஏன் ஜினாலங்களுக்கு செல்கின்றனர்? தினமும் ஏன் செல்வதில்லை? தினமும் செல்ல வேண்டும், ஆனால் செல்வதில்லை. அதேபோல தினமும் சுவாத்யாயம் செய்யவேண்டும்- பலர் செய்யவும் செய்கிறார்கள். ஆனால் எப்போது கூட்டம் சேர்கிறதோ அந்த சமயத்தில்தான் விசேஷ சொற்பொழிவுகள், நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது, அந்த நிகழ்வில் கேட்ட உபதேசத்தால் சில உயிர்கள் தினமும் ஜினபூஜை, சுவாத்யாயம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர் என்றல் அது நல்ல விஷயம் தனே!

கேள்வி: மிலேச்சகண்டம் மற்றும் ஆர்ய கண்டம் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்: நாம் ஆர்ய கண்டம், அனார்ய கண்டம் என்று சொல்கிறோமே அதே தான். ஆர்ய கண்டத்தில் பெரும்பாலோனோர் தர்ம சிந்தனை உடையவர்களாகவும், மிலேச்சகண்டத்தில் பெரும்பாலோனோர் தர்ம சிந்தனை இல்லாதவர்களாகவும் இருப்பர்.

கேள்வி: கேவலிகள் எத்தனை விதமாக உள்ளனர்?

பதில்: உண்மையில் கேவலிகள் ஒரே விதமாகத்தான் இருக்கிறார்கள். எல்லா அரஹந்தர்களும், சித்தர்களும் கேவலிகள் தான். அரஹந்தர்களில் கூட சயோககேவலி (யோகத்துடன் கூடியவர்), அயோககேவலி (யோகம் இல்லாதவர்) என இரண்டு விதமாக இருக்கின்றனர். சயோக கேவலியிலும்

தீர்த்தங்கர கேவலி, சாமான்ய கேவலி என பேதங்கள் உள்ளன. சாமான்ய கேவலிகளில்கூட முக கேவலி, அந்தகிருதகேவலி (திவ்யத்தொனி இல்லாத கேவலி) என வேறுபாடு சொல்லப்படுகிறது. அவர்கள் எத்தனை விதமாக வியவஹாரத்தில் சொல்லப்பட்டாலும், நிச்சயத்தில் எல்லோரும் அனந்த சதுஷ்டயாத்மக ஸ்வரூபத்தில் (அனந்த தர்சனம், அனந்த ஞானம், அனந்த சுகம், அனந்த வீர்யம் ஆகியவைகளில்) ஒரேமாதிரியானவர்களே!

கேளவி: தேவர்கள் மரணமடைந்த பிறகு அவர்களுடைய உடல்கள் என்னவாகிறது?

பதில்: சரீரம் தானாகவே கலைந்து போகிறது. போகபூமியில் பார்த்தது போல மேகம் கலைவது போலவே கலைந்து போகிறது.

கேள்வி: சுவாத்யாய சம்பந்தமாக அகால் என்று சொல்கிறார்கள், தவளா சாஸ்திரம் 9-வது பகுதியில் இவ்வாறு வருகிறது. இதை கொஞ்சம் விரிவாகப் புரிய வையுங்கள்.

பதில்: இந்த கேள்வியை எழுப்பும் நீங்களே ஒரு வித்துவான், உங்களுக்கே இதன் பதில் தெரியும். இருந்த போதிலும் பலரின் இந்த சந்தேகத்தை போக்க இதை இங்கு எழுப்பியுள்ளீர்கள். விரதிகளுக்கு தபம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அதில் சுவாத்யாயத்தை கூட தபம் என்று சொல்லப்பட்டிருக்கிறது மற்றும் தியானம்(சாமாயிகம்)கூட தபம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தியானம் சுவாத்யாயத்தை விட உயர்ந்த தபமாகும். விரதிகளுக்கு தியானமும் சாமாயிகமும் நியமமாக நிகழ்கிறது, எது சாமாயிகத்தின் மற்றும் தியானத்தின் காலமோ, அந்த காலத்தில் அதை விட்டுவிட்டு சுவாத்யாயம் செய்யும்படியான உபதேசம் இல்லை. நியமசாரத்தில் பிரதிக்கிரமணம், சாமாயிகம், ஆலோசனா முதலியவைகளுக்கு சொல்லியுள்ளபடி இதை எடுத்துக் கொள்ளவேண்டும். யார் அசுபத்தில் தொடர்ந்து இருக்கிறாரோ, அவருக்கு பிரதிக்ரமணம் செய்வது தகுதியானதாகும், ஆனால் பிரதிக்கிரமணம் செய்பவர் சுபோபயோக முனிராஜர்களுக்கு பிரதிக்கிரமணத்தை விஷக்குடம் என்று சொல்லி அதை விடும்படி உபதேசம் செய்யப்படுகிறது. அதேபோல முனிகளுக்கு தியானத்தை விட்டுவிட்டு சுவாத்யாயம் செய்வது தகுதியானதல்ல. ஆனால் சுவாத்யாயத்திற்கு என்று குறிப்பிட்ட காலம் என்று இல்லை என்று சொல்லிக்கொண்டு, தொலைக்காட்சி பெட்டி முன் உட்கார்ந்து கொண்டு விகதைகளை-பிரயோஜனமில்லாத விஷயங்களை பார்க்கலாம் என்று சொல்லுதல் எவ்வளவு தகுதியானது என்பதை அவரவர்கள்தான் நிர்ணயம் செய்ய வேண்டும்.

இவ்வாறு நாம் 20 பாடங்கள் மூலம் மூவுலக அமைப்பு, மற்றும் அந்த இடங்களின் சிறப்புகளை பார்த்தோம், மூவுலகிலும் உள்ள இயற்கை ஜினாலயங்களுக்கு உணர்வு பூர்வமாக யாத்திரை செய்தோம். இந்த எல்லா

ஜினபிரதிமைகளுக்கும், விதேக க்ஷேத்திரங்களில் இப்போதும் எழுந்தருளியுள்ள அரஹந்தர்களுக்கும், 20 தீர்த்தங்கரர்களுக்கும் மற்றும் முனிகளுக்கும் நமஸ்காரம் செய்து இத்துடன் இந்த பாடத்தை முடிக்கலாம். இவைகள் எல்லாம் என்னவோ நமக்கு இப்போது இருக்கும் சொந்த அறிவின் பார்வையில் உலக அமைப்பைப் பற்றி நூல்களின் வாயிலாக தெரிந்து கொண்டோம். "மூன்று புவனங்களின் ஸ்திதியை தெரிந்து கொண்டு நீங்கள் உங்கள் மயமாகவே ஆகவேண்டும்" என்று பண்டிட் தோடர்மல்ஜி கூறியுள்ளதுபோல நாம் ஒவ்வொருவரும் நம் மயமாக ஆவதே உண்மையான நமஸ்காரமாகும். நாம் எல்லோரும் தன் அக்ருத்திம சைதன்ய பிம்பத்தை -யாராலும் ஆக்கப்படாத பார்த்தல் அறிதல் மய உருவத்தை- திரிகாலி த்ருவ பகவான் ஆத்மாவை நோக்கிக்கொண்டே இருப்போம் என்ற பவித்திரமான பாஃவனையுடன் அமைதி பெறுகிறேன்.

சொல்லுங்கள், விதேக க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கின்ற 20-ஆவது தீர்த்தங்கரர் ஸ்ரீஅஜிதவீர்ய பகவானுக்கு ஜெய் !

சாஸ்திரதானம் அளித்தவர்களின் பட்டியல்

1.இரகசிய(குப்த) தானம்.	₹ 10,001
2.இரகசிய(குப்த) தானம்.	₹ 10,001
3.திரு.C.சுதர்சனன், திருமதி.அனந்தமதி, பள்ளிக்கரணை.	₹ 10,001
4.திருமதி.ஜினதத்தை அனந்தராஜ், வங்காரம்	₹ 10,001
5.திரு.L.அஷோக், திருமதி.இராஜலட்சுமி , மதுரவாயில்.	₹5,000
6.திரு.D.ஜீவா, திருமதி.ஜான்சி, சென்னை.	₹ 5000
7.திருமதி.சுரமஞ்சரி ராமதாஸ், ஆரணி	₹ 5000
8.திரு.நாபிராஜ், திருமதி.சுதா, பெங்களூர்.	₹ 4,501
9.திரு.ஜீவேந்திரன், திருமதி.பத்மலதா, இராமாபுரம்.	₹ 3,000
10.திரு.பாபு V.S, திருமதி.மல்லிராஜு, வேதாரண்யம்.	₹ 3,000
11.திருவாளர்கள். பாபு, மருதேவி, புஷ்பராஜ் ஆகியவர்களின் நினைவாக திருமதி. பேபி ஜினதாஸ், நல்லவன்பாளயம்.	₹ 3,000
12.திரு.A.சதீஷ்பாபு, திருமதி.பத்மினி, தாம்பரம்(கிழக்கு).	₹ 2,501
13.செல்வி.கீர்த்தனா அப்பாண்டைராஜன், லண்டன், UK	₹ 2,500
14.திரு.மனோகரன், திருமதி.லதா, சென்னை.	₹ 2,001
15.திரு.K.A.சிம்மசந்திரன், திருமதி.சாந்தி, ஆதம்பாக்கம்	₹ 2,000
16.திரு.C.S.P.ஜெயின், திருமதி.காந்தா, பாண்டிச்சேரி	₹ 2,000
17.திரு.அனந்தவிஜயன், திருமதி.சாந்தி, நங்கநல்லூர்.	₹ 2,000
18.திரு.பாஹுபலி, திருமதி.வாசுகி, சென்னை.	₹ 2,000
19.திரு Y.ரவி, திருமதி.செல்வமணி, சென்னை.	₹ 2,000
20.திரு. செந்தில் ஆதிதாஸ், திருமதி. கம்சலா, U S A	₹ 2,000
21.திரு.T.A.K.பத்மராஜ் நைனார், காஞ்சிபுரம் நினைவாக இராஜேந்திரன், சென்னை	₹ 1,500
22.திரு.ஜிநேந்திரதாஸ்.	₹ 1,500
23.திருமதி.சசிகலா ஜீவதாஸ், நங்கநல்லூர்.	₹ 1,200
24.திரு.துரைராஜ், திருமதி.ஜலனிதேவி, ஆயப்பாக்கம்	₹ 1,008
25.திரு.S.ரமேஷ், திருமதி.சங்கீதா, கொளத்தூர், சென்னை.	₹ 1,001
26.திரு.S.சம்பத், திருமதி.D.ஆர்த்தி, புழல், சென்னை.	₹ 1,001
27.திரு.பானுகுமார், திருமதி மல்லிகா, ஆதம்பாக்கம்.	₹ 1,001
28.திரு.அப்பாசாமி, திருமதி.சாந்தா , உப்புவேலூர்.	₹ 1,000
29.திருமதி.பத்மினி ஜெயசந்திரன், வேளச்சேரி,	₹ 1,000
30.திரு.B.நேமிதாஸ், திருமதி.சித்ரா நேமிதாஸ், நல்லூர்.	₹ 1,000
31.திருமதி.சசிகலா ஜீவதாஸ், சென்னை.	₹ 1,000
32.திரு.N.செல்வராஜ், திருமதி ராணி , கொளத்தூர், சென்னை.	₹ 1,000
33.திரு.S.பிரகாஷ், கொளத்தூர், சென்னை.	₹ 1,000
34.திரு.ஜீவகன், திருமதி வசந்தா, பம்மல்.	₹ 1,000
35.செல்வி.நிவேதினி, பம்மல்.	₹ 1,000

36.திருமதி.வனிதாராணி பானுகுமார், அயப்பாக்கம்.	₹ 1,000
37.திரு.A.D.பூர்ணச்சந்திரன், திருமதி.கௌரி. சென்னை.	₹ 1,000
38.திரு.C.விருஷபதாஸ், திருமதி.நாகசுந்தரி, சென்னை.	₹ 1,000
39.திருமதி.திரிசலா விஜயகுமார், திண்டிவனம்.	₹ 1,000
40.திருமதி.நிர்மலா, செல்வமணி, கீழகட்டளை.	₹ 1,000
41.திருமதி.Dr.மலர்விழி ஜெயவிஜயன், பெரமண்டூர்.	₹ 1,000
42.திரு.ஜினதத்தன்.G, ஆரணி பாளயம்.	₹ 1,000
43.திரு.பாபுலால், திருமதி.மாலா, சென்னை.	₹ 1,000
43.திரு.குமார்லால், திருமதி உஷாராணி, வேலூர்.	₹ 1,000
45.திரு.ராஜேஷ் சாஸ்த்ரி, அகலூர்.	₹ 1,000
46.திரு.அருகதாஸ், திருமதி.சந்திரா, திருவண்ணாமலை.	₹ 1,000
47.குமாரி.S.ஹர்ஷதா, குமாரி.S.பிருத்திவிஸ்ரீ, சென்னை	₹ 800
48.திரு. N.மஹாவீர் ஜெயின், ஆதம்பாக்கம்.	₹ 500
49.திரு. சுகுமாரன், திருவற்றியூர்.	₹ 500